# நற்றிணி சேவியர்

# பிடித்த சிறுகதை

முகநூலில் பிடித்த

ஈழத்துச் சிறுகதைகளைப் பற்றி

எழுதிய குறிப்புகள்

## முதலாம் தொகுதி



# பிடித்த சிறுகதை

## ஆசிரியரின் பிற நூல்கள்

**அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்**

தேசிய கலை இலக்கியப் பேரவை-1993

**நெல்லிமரப் பள்ளிக்கூடம்**

கொடகே நிறுவனம்-2011

**நந்தினிசேவியர் படைப்புகள்**

விடியல் பதிப்பகம்-2014

# பிடித்த சிறுகதை

முகநூலில் பிடித்த
ஈழத்துச் சிறுகதைகளைப்பற்றி
எழுதிய குறிப்புகள்

முதலாம் தொகுதி

நந்தினி சேவியர்

எஸ். கொடகே சகோதரர்கள்
அரச விருதுபெற்ற வெளியீட்டாளர்
675, பீ. டீ எஸ். குலரத்ன மாவத
கொழும்பு 10

**பிடித்த சிறுகதை**

கட்டுரைத் தொகுப்பு

©நந்தினி சேவியர்

முதற்பதிப்பு -2019

**ISBN 978-624-00-0190-8**

அட்டைப்படவடிவமைப்பு

மேமன்கவி

வெளியீடு

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடட்

661,663,675, பி. டி.எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு - 10.

அச்சிட்டோர்

சத்துர அச்சகம்

69, குமாரதாஸ பிளேஸ்,

வெல்லம்பிட்டிய.

Pidiththa Sirukadhai

© Nanthiny Xavier (T.Xavier )

First Edition-July-2019

**ISBN 978-624-00-0190-8**

*Cover Desingned by*
Memonkavi

*Published by*
S.Godage & Brothers(Pvt)Ltd,
661,663,675, P. de.S. Kularatne Mawatha, Colombo 10,

*Printed by*
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya.

22259/6339/300

**இது........**

என் மகன்
டானிரெஜினோல்ட்டுக்கு

# எனக்கு பிடித்த முகநூல் தொடர்

-மேமன்கவி

இணையத்தின் வருகைக்கான நோக்கத்தையும் அதன் பயன்பாட்டைப் பற்றிய ஆய்வு என்பது நீண்டதாக இருக்க, கணனியும், இணையமும் அறிமுகக் காலத்தில் தமிழ்ச் சூழலைச் சார்ந்தவர்கள் ஆங்கிலம் வழியாக அவைகளுடன் தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டார்கள்.

இணையம், சமூக ஊடகங்கள், அவற்றின் வழியான சீரியஸ் எழுத்து என்பன தமிழ் மொழிச் சூழலுக்குப் பரவலாக உள்வாங்கப்பட்டமைக்குக் கணனியிலும், இணையத்திலும் தமிழ்மொழியைக் கையாளுவதற்கான சாத்தியப்பாட்டுக்கு,தமிழ் விசைப்பலகை வகைகள், தமிழ் எழுத்துருக்களின் பரிச்சயம், முதற்கொண்டு இணையத்தில் யூனிகோட் எழுத்துரு முறைமையின் வருகை போன்றவை காரணமாக அமைந்தன. அந்தப் பரிச்சயத்தின் ஆரம்பக் கட்டத்தில் வலைப்பதிவுகள் **(Blogs)**, குழுமங்கள் **(Groups)** வழியாகத் தமிழ்ச் சமூகத்தினர் இணையம் வழியாகத் தம் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். அடுத்த கட்டமாகச் சமூக ஊடகங்கள் தோற்றம், அத்தோடு, கணனிமயப்பட்ட உலகின்

எல்லா மொழிகளைக் கையாளக் கூடிய கைத்தொலைபேசிகள் பரவல் என்பவற்றின் காரணமாக அவற்றைக் கையாளுவதில் ஏற்பட்ட ஜனநாயகப் பண்பானது, எல்லா மொழி சமூகத்தினரினைப் போல் தமிழ் மொழிச் சூழலைச் சார்ந்தவர்களை அவற்றில் அவர்களைத் தொடர்பு ஏற்படுத்தியது.

முன்பு எல்லாம் நாம் நண்பரிடம் அவர்தம் வீட்டு விலாசத்தைக் கேட்போம். அடுத்த காலகட்டத்தில் வீட்டுத் தொலைபேசி எண் கேட்போம். ஆனால் இன்றைய யுகத்தில் உங்கள் முகநூல் ஐடி என்ன? உங்கள் வாட்ஸ் ஆப் எண் என்ன? என்று கேட்பதுதான் இன்றைய நிலையாக இருக்கிறது. இந்த மாற்றமானது தகவல் தொடர்பாடலை துரிதப்படுத்தியதோடு, எல்லோரும் எல்லாவற்றைப் பற்றியும், அதாவது தமக்குச் சம்பந்தம் இல்லாதவற்றைப் பற்றியும் கருத்துச் சொல்லும் அபத்தமும் நிகழ்ந்தது.

இச்சமூக ஊடகங்களின் வருகை ஆரம்பக் காலகட்டத்தில் அவை இளம் சமூகத்தினரின் அரட்டை அரங்குகளாக இருக்க, பிற்காலத்தில் சமூக ஊடகங்கள் மேலும் வளர்ச்சி அடைய, சமூகத்தின் எல்லாத் தரத்தினரின், எல்லா வயதினரின் பங்களிப்பாக ஆக்க இலக்கியங்கள், கருத்தாடல்கள், செய்திகள், கருத்து முரண்பாடு மோதல்கள் பரவலாகப் பரிமாறப்படும் நிலைமை உருவாகியது.

மேலும் தமிழில் எழுதும் எல்லாச் சீரியஸ் எழுத்தாளர்களும் சமூக ஊடகங்களுடன் தங்களைத் தொடர்புபடுத்திக் கொண்டார்கள். அதன் மூலம் அச்சு ஊடகம் வழியாகத் தோற்றம் பெற்ற சிறுசஞ்சிகைச் சூழல் வழியாக முன் வைக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான கருத்துகள், படைப்புகள் போன்று சமூக ஊடகங்களிலும் முன் வைக்கப்பட்டன.

ஈழத்துக் தமிழ்ச் சூழலிலிருந்தும் சமூக ஊடகங்கள் வழியாக ஆக்கப்பூர்வமான கலை இலக்கியக் கருத்துகள் எழுதப்பட்டும், உரையாடப்பட்டும் வருகின்றன. அந்த வரிசையில் ஈழத்து நவீனத் தமிழ் இலக்கியத் துறையின் முக்கிய ஆளுமையான நந்தினி சேவியர் முகநூலில் எழுதிக் கொண்டிருக்கும் ஈழத்துச் சிறுகதையாளர்கள்

பற்றிய குறிப்புகளின் தொடரின் முதல் 200 குறிப்புகளின் தொகுப்பாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

நந்தினி சேவியர் பற்றிச் சொல்வதென்றால், நந்தினி சேவியர் நீண்ட காலமாக ஈழத்து நவீன இலக்கியத் துறையில் பணி செய்து கொண்டிருப்பவர். தீவிர வாசகர். ஈழத்து நவீனத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் மிகுந்த பரிச்சயம் கொண்டவர். தான் கொண்டிருக்கும் கருத்தியல் நிலையிலிருந்து இம்மியளவும் பிசகாது இயங்கி வருபவர். பிடித்த சிறுகதை என்னும் இத்தொடரை எழுதுவதற்கான முழுமையான தகமை கொண்டவர். அவரது வயது, உடல் நலக் குறைவு என்பவற்றைக் கடந்து, இத்தொடருக்காக அவர் செலுத்தும் கடுமையான உழைப்பை அவருடன் சேர்ந்து இத்தொடருக்காக இயங்கிக் கொண்டிருக்கும் நான் ஆழமாக அறிவேன்.

இத்தொடர் மூலம் ,

1. மூத்த ஈழத்துச் சிறுகதையாளர்கள் அவர்களுக்குத் தெரியாத பல மூத்த சிறுகதையாளர்களை பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும்,

2. மூத்த சிறுகதையாளர்களைப் பற்றி, இளைய சிறுகதையாளர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும்,

3. இளைய சிறுகதையாளர்களைப் பற்றி மூத்த சிறுகதையாளர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும்,

4. பல புதிய இளைய சிறுகதையாளர்கள் பற்றி இளைய சிறுகதையாளர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும்,

நந்தினி சேவியர் அக்குறிப்புத் தொடரை எழுதிச் செல்லும் பாங்கு அலாதியானது. இத்தொடரை நான் பத்தி எழுத்து என்றும் சொல்ல மாட்டேன். ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் வரலாற்று குறிப்புகளின் தொடர் என்பேன். பொதுவாக இன்றைய முகநூல் சூழலில் மிக அபூர்வமாக, காத்திரமாக எழுதப்படும் தொடரில் நந்தினி சேவியரின் இத்தொடரும் மிக முக்கியமான ஒரு தொடராகும்.

அவருக்குப் பிடித்த சிறுகதை அவருக்கு ஏன் பிடித்திருக்கிறது? என்ற விளக்கத்தையும் அத்தொடரில் வைத்திருக்க வேண்டும் என்ற தொனியிலும், காலவரிசை இத்தொடரில் பேணப்படவில்லை என்ற தொனியிலும், முக நூலில் இத்தொடரின் தன்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளாத சிலர் முன் வைத்த கருத்துகளுக்கான பதில்தான் இது

அதாவது இத்தொடரானது, நந்தினி சேவியர் என்ற தீவிர வாசகனுக்கு ஞாபகத்திற்கு வரும்-வந்த தகவல்கள் கைவசமுள்ள, தனக்குப் பிடித்த, சிறுகதை எழுதிய ஈழத்துச் சிறுகதையாளர்களைப் பற்றிய அறிமுகக் குறிப்புகள் கொண்ட ஒரு தொடரே தவிர, .இது ஈழத்துச் சிறுகதையாளர்களைப் பற்றிய விமர்சன ஆய்வுத் தொடர் அல்ல என்பதுதான்.

ஒரு தேசத்தைப் பற்றி, ஒரு சமூகத்தைப் பற்றி , ஒரு சமூகப் பிரிவினரைப் பற்றி ஒரு துறையைப் பற்றி வரலாற்றியல் ரீதியாக எழுதப்படும் ஒரு பிரதியில் சார்ப்பு நிலை என்பது இருக்கும், இருக்கவேண்டும், இருந்து வந்துள்ளது. அதுவே ஒரு பிரதியின் அரசியலாக, தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக இருக்கும்.

நடுநிலை நின்று எழுதப்பட்ட பிரதி என்று சொல்லப்பட்டு முன் வைக்கப்படும் பிரதி நிச்சயமாகத் தகவல்களின் குவியலாகத்தான் இருக்கும்.

ஒரு கருத்தியல் நின்று மாறாத் தன்மையுடன் தனக்கான ஓர் அரசியலுடன் இயங்கும் நந்தினி சேவியர் போன்ற ஓர் ஆளுமைகளின் பிரதிகள் நடுநிலை நின்று எழுதப்படுபவை அல்ல. ஏனெனில் நடுநிலை என்பது இல்லாத ஒன்று என்பதே அவரைப் போன்ற ஒரு கருத்தியல் நிலை நின்று இயங்குபவர்களின் கணிப்பு. அவர்களது கணிப்பு சரியானதே.

நந்தினி சேவியரின் பிடித்த சிறுகதை என்ற இத்தொடரில் அவரது கருத்தியலுக்கு மாறானவர்களைப் பற்றி எழுதியதன் அரசியல் என்ன? ஆழ்ந்து நோக்கினால் அவரது கருத்தியலுக்கு மாறானவர்களைப் பற்றி மட்டுமல்ல, அவருடன் முற்றும் முழுதுமாக

முரண்பட்ட, அவரை நிராகரித்த, அவரது இலக்கியப் பங்களிப்பை மறுதலித்த சிறுகதையாளர்களைப் பற்றியும் இத்தொடரில் அவர் எழுதி இருக்கிறார், எழுதி வருகிறார் என்பது இத்தொடரில் கவனிக்கத்தக்க ஓர் அம்சம்.

முன்பு நான் குறிப்பிட்டது போல் நந்தினி சேவியர் நீண்ட காலமாக ஈழத்து நவீன இலக்கியத் துறையில் பணி செய்து கொண்டிருப்பவர். தீவிர வாசகர். ஈழத்து நவீனத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் மிகுந்த பரிச்சயம் கொண்டவர் என்ற வகையில் ஈழத்தில் தமிழில் சிறுகதை எழுதிய அனைவரதும் அனைத்துப் படைப்புகளை வாசித்ததன் காரணமாக, தான் கொண்டிருக்கும் கருத்தியலுக்கு முரணான, எதிரான, தன்மீது தனிப்பட்ட முறையில் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களில் படைப்புகளில், அந்த முரண்பாடுகள் இருக்கத்தக்க, அவர்களது படைப்புகளில் தனக்குப் பிடித்த படைப்புகளைப் பற்றி (சிறுகதைகளைப் பற்றி) இத்தொடரில் எழுதி வருகிறார்.

அவருடனான முரண்பாடும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் படைப்புகளைப் பற்றிய குறிப்புகளில் பகிரங்கமாக அவர்களுடனான முரண்பாடுகள் பற்றியும்,, அவர்கள் கொண்டிருக்கும் அவர் மீதான காழ்ப்புணர்ச்சி பற்றி எல்லாம் பகிரங்கமாக எடுத்துக் காட்டும் வகையிலான குறிப்புகள் எழுதியே அத்தகையவர்களின் படைப்புகளில் தனக்குப் பிடித்த படைப்புகளைப் பற்றிக் குறிப்புகளை எழுதி வருகிறார்.

இதுவே நந்தினி சேவியர் முகநூலில் எழுதிக் கொண்டிருக்கும் பிடித்த சிறுகதை எனும் இத்தொடரின் விசேட அம்சமாகும்.

அந்த வகையில் பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்ட, சிறுகதைத் தொகுப்புகளை வெளியிடாத. ஓரிரு சிறுகதைகளை மட்டும் எழுதிய எல்லோரையும் பற்றியும் அவர் பிடித்த அவர்களது சிறுகதைகளைப் பற்றியும் எழுதிச் செல்கிறார் அத்தோடு இத்தொடர் மூலம் மறந்து போன, அடையாளப்படுத்தப்படாத எத்தனை சிறுகதையாளர்களைப் பற்றி நந்தினி எழுதிய பிறகுதான் பலர் அத்தகையவர்களைப் பற்றிக் குறிப்புகள் எழுதத்

தலைப்பட்டார்கள். இது நந்தினியின் இத்தொடருக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

மொத்தத்தில் நந்தினி சேவியர் முகநூலில் எழுதிவரும் பிடித்த சிறுகதை எனும் இத்தொடர் எதிர்காலத்தில் ஈழத்துத் தமிழ் சிறுகதையின் வரலாற்றை எழுத வரும் ஆய்வு மாணவர்கள் துணை புரியப் போகும் ஒரு பெரும் உசாத்துணை ஆவணமாக அமையும் என்பது உறுதி.

**memonkavi@gmail.com**
**0778681464**

# மனம் திறந்து.......

-நந்தினி சேவியர்

ஒரு பாரிய பணியின் முதற்கட்டம் முடிவடைந்துள்ளது.

**பிடித்த சிறுகதை** எனும் தலைப்பில் இருநூறு படைப்பாளிகளை மூத்த இளைய எழுத்தாளர்களுக்கு அறிமுகம் செய்திருக்கிறேன். முகநூலில் ஈழத்துச் சூழலிலிருந்து முக்கிய ஒரு தொடரை எழுதக் கிடைத்தமை மகிழ்ச்சியை அளிக்கிறது. தலைப்போடு இந்தப் பதிவுகள் பொருந்தவில்லை என்பதை நான் அறிவேன். ஆயினும் ஒரு குறியீட்டை வைத்துக் கொண்டு இதனை இப்போதும் தொடர்கிறேன்.

இலக்கியத்திற்கு மூப்பு, இளமை என வேறுபாடுகள் இல்லை. எனது வரிசையில் இக்கவனத்தை நான் குவிக்கவில்லை. மனதில் வந்த ஒழுங்கைப் பேணினேன்.

எப்படி இதை எழுத ஆரம்பித்தேன் என்பதற்கு என்னிடம் ஆதாரம் எதுவுமில்லை. ஆயினும் முன்னைய ஆய்வாளர்கள் செய்யத் தவறிய ஓர் பணியின் தொடக்கமாக, அறிமுகமாக இதனைக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

வ.கி.மா. பதிப்பகத் திணைக்களத்ததில் கடமையாற்றியபோது **மறுமலர்ச்சி சிறுகதைகள்,**

**ஈழகேசரிக் கதைகள்**, தொகுப்புகளை ஒப்பு நோக்கினேன். பின்னர் வ.மா. பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட **ஈழநாடு சிறுகதைகள்** தொகுதியையும் ஒப்பு நோக்கினேன்.

அதுமாத்திரமல்ல. வட, கிழக்கு மாகாண இலக்கிய நூல் தெரிவுக்குழு நடுவராக இருந்தமையால் ஏராளம் ஆக்க இலக்கிய நூல்களைப் படிக்கக் கிடைத்தது. கொள்வனவுக்காகத் திணைக்களத்துக்கு அனுப்பப் படும் நூல்களை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. **சுதந்திரன் சிறுகதைகள்** அப்படிக் கிடைத்த நூல்களில் ஒன்று. செங்கை ஆழியானுக்கு இவ்விடத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் முக்கிய நூல்களின் தொகுப்பாளர் அவரே. பிரமிப்பு அடையும் வகையில் நான் ஒரு ஆவணக்காரனல்ல. எல்லாமே அனுபவ வெளிப்பாடுகளே.

என் தேடலுக்கு உதவும் நண்பர்களுக்கும், என்னை உற்சாகமூட்டும் நண்பர்களுக்கும், இத்தொடரை எழுதத் தேவையான தகவல்களைப் பெறப் பெரிதும் உதவியமைக்காவும், இந்தப் பாரிய நூலைக்கொடகே நிறுவன வெளியீடாக ஏற்பாடு செய்தமைக்காவும் மேமன்கவிக்கு எனது விசேட நன்றிகள். இதனைத் தம் வெளியீடாக வெளியிட முன் வந்த கொடகே புத்தக நிறுவனத்திற்கும் எனது நன்றிகள்.

இதன் தொடர்ச்சியான அடுத்த நூலில் மீண்டும் சந்திக்கிறேன்.

**T.Xavier,**
**269, N.C.Road,**
**Trincomalee-31000,**
**SriLanka.**
**94771495629**
**nanthinyxavier629@gmail.com**

## உள்ளே....


1. எஸ்.பொ.......................................................025

2. கனக செந்திநாதன்............................................030

3. பித்தன்ஷா...................................................032

4.அ.செ.மு.......................................................034

5. இலங்கையர்கோன்..........................................037

6. வ.அ .இராசரத்தினம்.......................................039

7. கே.வி.நடராஜன்.............................................042

8. அ.ஸ.அப்துஸ் ஸமது......................................044

9. வரதர்...........................................................047

10.அ.ந.கந்தசாமி...............................................050

11.மருதூர் கொத்தன்..........................................053

12.என்.எஸ்.எம்.ராமையா.....................................057

13.மு.தளையசிங்கம்............................................060

14.தாழையடி மு.சபாரத்தினம்.............................064

15.தா.பி.சுப்பிரமணியம்......................................067

16.அன்புமணி...................................................070

17.என்.கே.ரகுநாதன்...........................................073

18.கே.டானியல்.....................................................076

19.சிற்பி.............................................................080

20.சொக்கன்........................................................083

21.சி.வி. வேலுப்பிள்ளை.........................................087

22.நந்தி..............................................................090

23.டொமினிக் ஜீவா................................................093

24.செ.கணேசலிங்கன்...............................................097

25.சில்லையூர் செல்வராசன்.....................................100

26.முல்லைமணி....................................................103

27.ஏ.வி.பி. கோமஸ்...............................................106

28.காவலூர் ராஜதுரை...........................................109

29.நீர்வை பொன்னையன்........................................112

30.யாழ்வாணன்....................................................117

31.நீலாவணன்......................................................120

32.சு.இராஜநாயகன்...............................................123

33.மஹாகவி........................................................126

34.ஏ.இக்பால்.........................................................130

35.இ.நாகராஜன்....................................................134

36.கு.பெரியதம்பி ..................................................137

37.குறமகள்..........................................................139

38.எஸ்.அகஸ்தியர்.................................................142

39.அல்வாயூர் மு.செல்லையர்..............................146
40.அம்பி....................................................................149
41.இராஜ.அரியரத்தினம்..................................152
42.அழகு சுப்பிரமணியம்........................................154
43.க.செ.நடராஜர்...................................................157
44.நவாலியூர் சோ.நடராஜன்................................159
45.சில்வரம்புலி.......................................................162
46.சி.வைத்தியலிங்கம்............................................164
47.சம்பந்தன்...........................................................166
48.புதுமைப்பிரியை................................................168
49.இளங்கீரன்..........................................................171
50.ஃழுத்துறைவன்...................................................174
51.அண்ணல்.............................................................176
52.சு.வே.....................................................................178
53.பெனடிக்ற் பாலன்.............................................180
54.பவானி...................................................................183
55.அங்கையன்..........................................................185
56.செம்பியன் செல்வன்.........................................188
57.செங்கை ஆழியான்............................................191
58.குந்தவை...............................................................194
59.துருவன்...............................................................196

60.செ.கதிர்காமநாதன்..........................................198

61.து.வைத்திலிங்கம்..............................................201

62.நகுலன்..............................................................203

63.செ.யோகநாதன்................................................205

64.நடனம்..............................................................209

65.முத்து சிவஞானம்..............................................211

66.தெளிவத்தை ஜோசப்.......................................213

67.மு.பொன்னம்பலம்............................................217

68.முனியப்பதாசன்...............................................221

69.மு.கனகராஜன்..................................................223

70.ப.ஆப்டீன்.........................................................226

71.நவம்.................................................................229

72.ஜோர்ஜ் சந்திரசேகரன்.....................................232

73.அபுதாலிப் அப்துல் லத்தீப்................................235

74.சிதம்பரபத்தினி..................................................237

75.தையிட்டி அ. இராசதுரை.................................240

76.சண்முகம் சிவலிங்கம்.......................................242

77.கே.எஸ்.சிவகுமாரன்.........................................245

78.தெணியான்.......................................................248

79.துரை.சுப்பிரமணியம்.........................................251

80.க.நவசோதி........................................................253

81.அ.யேசுராசா........................................................255

82.சி.மௌனகுரு.....................................................258

83.மு.சிவலிங்கம்....................................................261

84.பொ.தம்பிராசன்...............................................264

85.பீ.மரியதாஸ்.......................................................266

86.எம்.ஏ. நுஃமான்...............................................268

87.செந்தூரன்..........................................................271

88.உதயணன்..........................................................274

89.சாரல் நாடான்...................................................277

90.க.சட்டநாதன்......................................................280

91.குப்பிழான் ஐ.சண்முகன்...................................282

92.கோபதி...............................................................285

93.ஐ.சாந்தன்..........................................................288

94.நெல்லை க.பேரன்..............................................291

95.பொன்னு.............................................................295

96.நயீமா சித்திக்....................................................297

97. புலோலியூர் க.சதாசிவம்.................................300

98.பேராதனை ஷர்புன்னிஷா............................ 303

99.பொ.கருணாகரமூர்த்தி......................................306

100.கே.ஆர்.டேவிட்...............................................309

101.டானியல் அன்ரனி .........................................312

102. கோவிந்தன்....................................................315

103. திக்குவல்லை கமால்....................................318

104. ஆரையம்பதி ஆ.தங்கராசா..........................321

105. கரவை மு.தயாளன்......................................323

106. மு.பஷீர்.........................................................326

107. அ.முத்துலிங்கம்.............................................329

108. எஸ்.ரஞ்சகுமார்.............................................332

109. பேரா.சி. தில்லைநாதன்................................335

110. எஸ்.எல்.எம். ஹனிபா..................................338

111. சி.பன்னீர்ச்செல்வம்.....................................342

112. உமா வரதராஜன்..........................................344

113. பேரா. அ.சண்முகதாஸ்................................348

114. எம்.ஏ.எம். சுக்ரி..............................................352

115. லெ. முருகபூபதி.............................................354

116. எஸ்.எல். சவுந்தரநாயகம்...........................357

117. யூ.எல். ஆதாம்பாவா...................................360

118. வ.ந.கிரிதரன்.................................................363

119. சுதாராஜ்.........................................................366

120. திமிலை மகாலிங்கம்....................................369

121. கே.எஸ்.சுதாகர்...............................................371

122. எம்.வாமதேவன்.............................................374

123.மருதூர்க்கனி.....................................................376

124.கச்சாயில் இரத்தினம்......................................379

125.பண்டிதர். க. சச்சிதானந்தன்............................381

126.பேராசிரியர்.ம.மு.உவைஸ்...............................384

127.அ.பாலமனோகரன்...........................................387

128.முத்து இராசரத்தினம்.........................................390

129.சி.சுதந்திரராஜா...............................................393

130.த.ஆனந்தமயில்..................................................395

131.மலரன்பன்.........................................................398

132.யூ.எல். தாவூத்....................................................401

133.மு.சடாட்சரன்...................................................403

134.எம். எல்.எம். மன்சூர்......................................406

135.மட்டுவிலான்....................................................409

136.வை. அஹ்மத்...................................................412

137.கோகிலா மகேந்திரன்........................................415

138.எஸ்.முத்துமீரான்.............................................418

139.மல்லிகை சி.குமார்...........................................421

140.எம்.வை. ராஜ்கபூர்...........................................424

141.தாமரைச் செல்வி..............................................427

142.எம்.ஐ.எம்.ரஊப்...............................................430

143.சித்தார்த்த " சே" குவரா...................................433

144.திருக்கோவில் கவியுவன்......................................437
145.ஸ்ரீதரன்......................................................................440
146.தேவமுகுந்தன்.............................................................443
147.அன்புடீன்......................................................................446
148.உடுவில் அரவிந்தன்.....................................................449
149.கெக்கிறாவ சஹானா.....................................................452
150.ஷோபாசக்தி..................................................................455
151.புலோலியூர்.ஆ.இரத்தினவேலோன்..........................458
152.எம்.எஸ்.அமானுல்லா..................................................461
153 சிதம்பர திருச்செந்திநாதன்...........................................465
154.வடகோவை வரதராஜன்..............................................467
155.மாத்தளை பெ.வடிவேலன்............................................470
156.யுவன்.............................................................................473
157.சிவா சுப்பிரமணியம்....................................................475
158.தி. ஞானசேகரன்..........................................................478
159.க.அருள் சுப்பிரமணியம்...............................................482
160.எம்.எச்.எம்.ஷம்ஸ்.......................................................485
161.யாழ்நங்கை...................................................................488
162.கங்குலன்.......................................................................490
163.அம்ரிதா ஏயெம்.............................................................493
164.ராஜாஜி ராஜகோபாலன்.............................................496

165.கவிதா......................................................498

166.ஏ.எஸ். உபைத்துல்லா....................................500

167.அருள் சின்னையா..........................................503

168.வி.கௌரிபாலன்..............................................505

169.தாட்சாயணி....................................................508

170.அ.இரவி..........................................................511

171.நற்பிட்டிமுனை பளீல்.......................................514

172.பிரமிள்............................................................516

173.புலோலியூர் செ.கந்தசாமி...............................520

174.இளைய அப்துல்லாஹ்.....................................522

175.எஸ்.கே.விக்கினேஸ்வரன்..............................525

176.மூதூர் முகைதீன்............................................528

177.திசேரா...........................................................531

178.ஆதிலட்சுமி சிவகுமார்.....................................533

179.ஜவாத் மரைக்கார்...........................................536

180.கலைவாதி கலீல்.............................................538

181.புலோலியூர் க.தம்பையர்.................................541

182.மு.இ.அ.ஜபார்.................................................544

183.குரும்பசிட்டி மு.திருநாவுக்கரசு.......................547

184.மு.நித்தியானந்தன்..........................................550

185.அ.ச.பாய்வர்....................................................553

186.மாத்தளை கார்த்திகேசு....................................556

187.அல் அஸூமத்..................................................558

188.மருதூர் பாரி......................................................561

189.தேவன்..............................................................563

190.எஸ். ஜோன்ராஜன்..........................................566

191.மு.அநாதரட்சகன்..............................................569

192.அன்பு ஜவஹர்ஷா............................................571

193.ஆதவன்.............................................................574

194. என்.எஸ்.வாகீசன்..........................................577

195. ஜின்னாஹ்......................................................580

196. நெலோமி.......................................................582

197. எம்.ஐ.எம்.முஸம்மில்....................................584

198. ராஜஸ்ரீகாந்தன்.............................................586

199. மேமன்கவி......................................................589

200. க. கோபாலபிள்ளை.......................................593

## பிடித்த சிறுகதை 01

“நீங்கள் இலங்கையின் ஜெயகாந்தன்” என்று கூறியவரிடம் ஜெயகாந்தனிடம் போய் கூறுங்கள் “நீங்கள் இந்தியாவின் பொன்னுத்துரை.”என சமத்காரமாகப் பதிலளித்தவர்.

***டானியல் , ஜீவா*** என்பது தனது புனை பெயர்கள் என்று கூறியவர். அக்கூற்றின் உண்மை பொய் நான்அறியாதது. ஆனால் பின் நாட்களில் தங்கள் ஆளுமையை அவர்கள் நிருபித்தமை நான் அறிந்தது.

இவரது பெயரை தங்களின் புனை பெயர் என்று கூறியவர் களையும் நான் அறிவேன். வாய்விட்டு கூறாவிடினும் மருதூர் கொத்தனும் அவரது ***ஈரா*** கதையும் இதற்குச் சான்று.

***எஸ்.பொ***

இயற்பெயர் : சண்முகம் பொன்னுத்துரை பிறப்பு: ஜுன் 4, 1932 - யாழ்ப்பாணம் நல்லூர்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். சிறுகதை, புதினம், நாடகம், கவிதை, விமர்சனம்,

மொழிபெயர்ப்பு, அரசியல் என பல பரிமாணங்களிலும் எழுதியவர்.

40 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

1989 முதல் புலம் பெயர்ந்து அவுஸ்த்திரேலியாவின் சிட்னி நகரில் வாழ்ந்து வந்தார். சென்னையில் *மித்ர* என்ற பதிப்பகத்தை நிறுவி அதன் மூலம் நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் , நல்லூரில் சண்முகம் என்பவருக்குப் பிறந்த இவர் சென்னை கிறித்துவக் கல்லூரியிலும் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி பயின்றார். ஆசிரியராகப் பணியில் சேர்ந்து 1956 இல் மட்டக்களப்புக்கு இடம் பெயர்ந்தார். நைஜீரியாவிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தனது 13வது அகவையில் எழுத ஆரம்பித்தார். 1940 இல் இவரது மூத்த சகோதரர் தம்பையா *ஞானோதயம்* என்ற கையெழுத்து இதழை நடத்திய பொழுது அதில் எழுத ஆரம்பித்தார்.

பொன்னுத்துரை எழுதிய முதலாவது கவிதை வீரகேசரியில் வெளியானது. பொன்னுத்துரையின் முதலாவது சிறுகதை 1948 ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையில் வெளியானது.

தமிழக இதழ்களான *காதல், பிரசண்டவிகடன், ஆனந்தபோதினி* ஆகிய சஞ்சிகைகளிலும் எழுதினார்.

இவர் எழுதிய முதலாவது புதினம் *தீ* ஈழத்து இலக்கியத்தில் ஒரு திருப்புமுனையை தோற்றுவித்ததுடன் பல சர்ச்சைகளையும் உருவாக்கியது.

தமிழகத்தில் *சரஸ்வதி* என்ற இதழை நடத்திய வ. விஜயபாஸ்கரனின் முயற்சியால் இந்நூல் வெளியானது. இதனால், பொன்னுத்துரையும் தமிழ் இலக்கிய உலகில் ஒரு சர்ச்சைக்குரிய மனிதராக இருந்து வந்தார். *புரட்சிப்பித்தன், பழமைதாசன்* போன்ற பல புனை பெயர்களில் இவர் எழுதினார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் கருத்து ரீதியாக முற்போக்கு எழுத்தாளர்களுடன் முரண்பட்டு 1960களில்

அதிலிருந்து விலகி நற்போக்கு அணியைத் தொடக்கினார். அவருடன் ***இளம்பிறை ரஹ்மான், வ. அ. இராசரத்தினம்*** போன்ற சிலரும் வெளியேறினர்.

பொன்னுத்துரையின் சில நாடகங்கள் இலங்கை, இந்தியா, அவுஸ்த்திரேலியா முதலான நாடுகளில் மேடையேறியுள்ளன. தமிழ்நாட்டில் சில தொலைக்காட்சிகளிலும் சில தொடர் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். அவுஸ்த்திரேலியாவில் சிறிது காலம் வெளிவந்த **அக்கினிக்குஞ்சு** என்ற பன்னாட்டு இணைய இதழின் கௌரவ ஆசிரியராக இருந்தார்.

***செம்பென் ஒஸ்மான*** என்ற செனகல் நாட்டு எழுத்தாளர் எழுதிய ***ஹால*** என்ற நாவலை மொழிபெயர்த்துள்ளார். மற்றும் நுகுகி வா தியங்கோ என்ற கென்யா நாட்டு இலக்கிய எழுத்தாளரின் **Weep Not Child** என்ற நாவலை தமிழில் **தேம்பி அழாதே பாப்பா** என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஞானம் இதழில் அதன் ஆசிரியரின் கேள்விகளுக்கு எஸ்.பொ தெரிவிக்கும் நீண்ட பதில்களைக் கொண்ட தொடர் நேர்காணல் பல மாதங்களாக வெளியானது. பின்னர் இத்தொடர் **தீதும் நன்றும் பிறர் தர வாரா** என்ற தலைப்பில் 2007 இல் நூலாக வெளியானது.

இவரது நேர்காணல்கள், கட்டுரைகள் அடங்கிய **இனி ஒரு விதி செய்வோம்** என்ற நூலும் வெளிவந்துள்ளது. 1924 பக்கங்களில் **வரலாற்றில் வாழ்தல்** என்ற தமது சுய வரலாற்று நூலையும் எழுதியுள்ளார். (இருபாகங்கள்) சென்னையில் **மித்ர** பதிப்பகத்தின் மூலம் நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டார்.

இவருக்கு தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இயல் விருது வழங்கப்பட்டது.

***இவரது நூல்கள் :***

வீ(சிறுகதைகள்).ஆண்மை (சிறுகதைத் தொகுதி),தீ (நாவல்), சடங்கு (நாவல்), அப்பையா காவியம், எஸ்.பொ கதைகள்,கீதை நிழலில். அப்பாவும் மகனும், வலை முள்,பூ,

தேடல், முறுவல், இஸ்லாமும் தமிழும். பெருங்காப்பியம் பத்து (தொகுப்பாசிரியர்),மத்தாப்பு, சதுரங்கம், நனவிடை தோய்தல், நீலாவணன் நினைவுகள்,இனி ஒரு விதி செய்வோம்,வரலாற்றில் வாழ்தல் (சுயசரிதை),ஈடு (நாடகம். அ.சந்திரஹாசனுடன் சேர்ந்து எழுதியது), மாயினி, மணிமகுடம், தீதும் நன்றும், காந்தீயக் கதைகள், காந்தி தரிசனம், மகாவம்ச (மொழிபெயர்ப்பு).

எஸ். பொன்னுத்துரை 2014 நவம்பர் 26 அன்று சிட்னி கொன்கோர்ட் மருத்துவமனையில் காலமானார்.

இவர் பற்றிய நூல்கள் சிலவும் வந்துள்ளன.

*அணி*

**இவர் கதைகளில் எனக்குப் பிடித்த கதைகளில் இதுவும் ஒன்று.**

**ஒரு காலம் முற்போக்கு எழுத்தாளராக இருந்து பின்னர் எதிரணிக்கு தாவி நற்போக்கு எழுத்தாளராக மாறிய எஸ்.பொ. வின் கதை இது.**

**1966ல் வெளிவந்த அவரது வீ தொகுப்பில் இக்கதை அடங்கியுள்ளது. இரத்தம் சிவப்புத்தான் என்பது போன்ற ஒரு தலைப்பில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை மலரில் இக்கதையை முன்பு வாசித்திருந்தேன்.**

**“ஏன் வாசலிலேயே நின்று விட்டீர்கள்.?”**

**என ஆரம்பித்து**

**“சரி போய்விட்டு வாருங்கோ..ஐயா.”**

**என்று முடியும் இக்கதையை வீ தொகுப்பில் வாசிக்க முடியும். 1996ல் இத்தொகுதி மித்ர வெளியீடாகவும் வந்துள்ளது.**

**புதியதொரு கதை சொல்லும் முறையில் இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. ஒரு சலூன் தொழிலாளியின்**

**வாய் மொழியாக எழுதப்பட்ட இக்கதை இறுதி கூற்றுகளைத் தவிர்த்து வாசித்தால் மிகச் சிறப்பான கதை என உறுதிப்படுத்துவேன்.**

தன்னுடைய மரணபரியந்தம் மார்க்சியவாதிகளை எதிர்த்துக் கொண்டிருந்த இவர். தான் ஒரு மார்க்சியவாதி என்றே கூறிக் கொண்டிருந்தார்.

இது இவரின்ஒரு முரண்நகை .?

**24 January 2018**

பிடித்த சிறுகதை 02

**மா**காணசபை வடக்குக் கிழக்கென பிரிபடாத கடைசி வருடம். தமிழ்த் தினவிழா எழுத்தாக்கப் போட்டி நடுவர்களில் நானும் ஒருவன். மாகாணப் போட்டி திருகோணமலையில் நடைபெற்றது. கோட்ட மட்டம், வலய மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றவையே மாகாண மட்டப்போட்டிக்கு தேர்வுக்காக வரும். இதில் வெற்றிபெறுவதே அகில இலங்கைப் போட்டிக்கு சேர்த்துக்கொள்ளப்படும். சிரேஸ்ட பிரிவுக்கான சிறுகதைப் போட்டி. எனது பார்வைக்கு வந்த எட்டு மாவட்ட சிறு கதைகளில் ஒன்று இப்படி ஆரம்பித்தது. **"யாழ்ப்பாண மாதா மலடி என்று பெயர் கேளாமல் சத்திரசிகிச்சையோடு பெற்றெடுத்த நொண்டிக் குழந்தை தொண்டமானாறு....."**

நான் துணுக்குற்றேன். மிகப்பிரசித்தி பெற்ற கதை ஒன்று பல படிகளைத் தாண்டி நடுவர்களினால் மாவட்ட முதலிடத்திற்கு வந்து விட்டது. யாரை நோவேன்.? பிறகு எனது ஆட்சேபனை காரணமாக அக்கதை போட்டியிலிருந்து நீக்கப்பட்டது.

**கனக செந்திநாதன்**

5 நவம்பர், 1916இல் குரும்பசிட்டியில் பிறந்தார். இவரது இயற்பெயர் திருச்செவ்வேழ். பண்டிதமணியின் மாணவர். சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், கட்டுரை, இவரது இயங்குதளங்கள். சிறுகதைகள்-25, நாவல்கள்-4 நாடகங்கள்-12 எழுதியுள்ளார். இவரது புனைபெயர் கரவைக் கவி கந்தப்பனார்.

**இவரது நூல்கள்**

வெண்சங்கு (சிறுகதை), ஈழத்து இலக்கிய வளர்ச்சி (கட்டுரை), விதியின் கை (நாவல்), ஒரு பிடி சோறு (நாடகம்). இன்னும் உண்டு.

பெற்ற கௌரவங்கள் 1964ல் கிழக்கு இலங்கை எழுத்தாளர் சங்கம் மட்டக்களப்பில் நடத்திய எழுத்தாளர் மாநாட்டில் **இரசிகமணி** பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இலக்கியச் செல்வர் (1969),

யாழ் இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகர் இவரே.

**ஒருபிடி சோறு**

**யாழ்ப்பாண மாதா மலடி**

**எனத் தொடங்கி,**

**இந்தச் சொற்களைக் கேட்க வேறு மனிதர்களாக யார் இருக்கிறார்கள்**

**என முடியும் இக்கதை ஈழத்து சிறுகதைகள் தொகுப்பில் இடம் பெற்றது. ருஷ்ய மொழியில் இக்கதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. நல்ல கதை. இக்கதையை யாழ் இலக்கிய வட்டம் வெளியிட்ட இவரது வெண் சங்கு தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

முற்போக்கு எழுத்தாளர்களோடு கருத்து முரண்பாடுகள் இருந்த போதும் இறுதிவரை தன் நட்பைப் பேணியவர் இவர்.

16. 11. 1977 இல் காலமானார்.

**25 January 2018**

## பிடித்த சிறுகதை 03

**"வானத்து அமரன் வந்தான் காண் வந்தது போல் சென்றான் காண்,..."**

புதுமைப்பித்தன் எள்ளலோடு குறிப்பிட்டது போல் அவருக்கும் அவரது பித்தனான நமது ***ஷா*** வுக்கும் நேர்ந்ததுவும் அதே.

*J.S.C.* சித்தி எய்தாத நிலையில் தமிழகம் சென்று அங்கே **ஸ்ரார் பிரஸ்சில்** சிற்றூழியராக கடமையாற்றிய போது புதுமைப்பித்தனைக் கண்டு அவரது ஆகர்சத்தால் ***பித்தன்*** என தனக்குப் பெயர் வைத்துக் கொண்ட ***ஷா*** பின்னர் இந்தியாவின் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்து இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் கடமை புரிந்து இலங்கை (மட்டக்களப்பு) திரும்பினார்.

இவரது சொந்தப் பெயர். கலந்தர் லெப்பை மீராஷா என்றும் காதர் முகைதீன் மீரான் ஷா என்றும் கூறுகிறார்கள். நல்ல வாசகர்கள் அவரைப் ***பித்தன் ஷா*** எனவே அறிந்துள்ளனர்.

தினகரன் பத்திரிகையில் இவரெழுதிய

கலைஞனின் தியாகம் சிறுகதை பற்றி **எஸ்.டி.சிவநாயகம்** ***தமிழகத்தில் ஒரு புதுமைப்பித்தன் இறந்துவிட்டார் நமது நாட்டில் ஒரு பித்தன் தோன்றிவிட்டார்.*** என சிலாகித்து எழுதினார்.வறுமை அவரை விட்டு வைக்கவில்லை. 90 களில் கம்பஹா மாவட்டம் ***திகாரிய*** அகதி முகாமில் அவர் வாழ்ந்தார். க.பொ.த சாதாரண தர முன்னைய பாடத்திட்டத்தில் இவரது ***இருட்டறை*** சிறுகதை சேர்க்கப்பட்டிருந்தது.

இவரது சிறுகதைகளை தொகுப்பாக்குவதற்கு எஸ். எச் எம் ஜெமீல் ஆர்வமாக இருந்தும் அது கைகூடவில்லை.

1995 ம் ஆண்டு மல்லிகைப் பந்தல் வெளியீடாக டொமினிக் ஜீவாவும், மேமன்கவியும் ***பித்தன் கதைகள்*** என்ற பெயரில் அவரது கதைகளை நூலுருவாக்கி ஒரு காத்திரமான பணியைச் செய்துள்ளனர். அந்தத் தொகுப்பினைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவருக்கு கிட்டவில்லை.

2015 தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவன் மபாஸ் சனூன் பித்தன் கதைகளின் தொகுப்பை சிங்களத்தில் வெளியிடப்போவதாக அறிவித்திருந்தார் அது வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஓர்மமும், அடிபணியாத்தன்மையும் கொண்ட பித்தன் ஷா பணக்காரர்களை அம்பலப்படுத்தத் தயங்காதவர். எத்தனையோ புரவலர்கள் இருந்தும் அவர் கவனிக்கப்படாமல் போனதுக்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

*பாதிக்குழந்தை*

**1952ல் சுதந்திரனில் வெளியான *பாதிக்குழந்தை* கதையில் வரும் அபலை சுபைதாவையும், இரண்டாம் முறை மக்கத்துக்குச் செல்லும் சுபைதாவை இந்நிலைக்கு ஆளாக்கிய உமறு லெப்பை ஹாஜியாரையும். என்னால் மறக்க முடியவில்லை. பித்தன்ஷா வையும்தான். அவரை வாசியுங்கள் நண்பர்களே.**

**25 January 2018**

## பிடித்த சிறுகதை 04

திருவிளையாடல் படத்தில் ஒரு கேள்வி பதில்.

சேர்ந்தே இருப்பது?

*வறுமையும் புலமையும்*

மறுமலர்ச்சிக்கார எழுத்தாளர்.மறுமலர்ச்சி பெறாது மரணித்துப் போன மாபெரும் துயரம்.

கண்ணீர் பனிக்கிறது.

இவர் மகாஜனக் கல்லூரியில் படிக்கும் காலாத்திலேயே எழுதத்தொடங்கியவர். ***ஈழகேசரி*** ஆசிரியர் குழுவிலும் , பின்னர் ***மறுமலர்ச்சி*** ஆசிரியர் குழுவிலும் இருந்தவர். இவர் தனது ஊரையும், தாயின் பெயரையும் முதலெழுத்தாக கொண்டவர்தான். சிறந்த சிறுகதை எழுத்தாளன். சிறந்த நாவலாசிரியன். சிறந்த ஊடகவியலாளனும் கூட.

சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு போன்ற பல பத்திரிகைகளிலும், திருகேணமலையிலிருந்து முதன் முதல் வெளிவந்த பத்திரிகை ***எரிமலை*** (6 இதழ்கள்) யின் ஆசிரியர் குழுவில் இருந்தவர்.

முழு நேர எழுத்தாளர்.

**வண்டிச்சவாரி, மனிதமாடு** போன்ற பல நல்ல சிறுகதைகளின் சொந்தக்காரர்.

இவரது **புகையில் தெரிந்த முகம்** நீண்டகதை அல்லது குறுநாவல் 1950 ல் நவலட்சுமி புத்தகசாலையாரால் சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ் கலாசாரப் பேரவையால் **மனிதமாடு** சிறுகதைத் தொகுப்பு 1986 ல் வெளியிடப்பட்டது. (இதனால் அ.செ.மு. வுக்கு பொருளாதார ரீதியில் பலன் கிடைக்கவில்லை என்பது ஒரு தனிக்கதை) இதே பெயரில் கலை பண்பாட்டுக்கழகம் இவரது தொகுதியை வெளியிட்டு வைத்ததாக அறியக் கிடைக்கிறது.

புதுமைப்பித்தனுக்கு ஒரு கமலாபோல், பாரதிக்கொரு செல்லமாள் போல் யாருமற்ற பிரமச்சாரியான இவர், ஆஸ்மா, நீரழிவு நோய்களுடன் கொழும்புத்துறை, கரவெட்டி போன்ற முதியோர் இல்லங்களில் வாழ்ந்து, இரண்டு முறை இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டு இறுதியில் திருகோணமலை முன்றாம் கட்டை திருச்சிலுவை முதியோர் இல்லத்தில் மரணித்துப்போனார். எந்தவித அணியுடனும் சேராது, தனித்துவமாக இயங்கியவர்.

***காளிமுத்துவின் பிரஜா உரிமை***

**நவஜீவனம்,விவேகி, ஈழத்து சிறுகதைமணிகள் (தொகுப்பு),மாருதம் என நான்கு முறை இக்கதை பிரசுரமாகி இருக்கிறது. *காளிமுத்துவின் பிரஜா உரிமை எனும் இக்கதை,* கலைஞர்கள் சகல வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர்கள என்பதை எடுத்துக் காட்டும் கதை. கொடுமையைக் கண்டு கொதிப்பவர்கள் அவற்றை அம்பலப்படுத்துபவர்கள் என்பதற்கு இக்கதை நல்லதொரு உதாரணம். சிலர் இக்கதையை வெறும் கற்பனை என கூறக்கூடும். யதார்த்தத்தின் குறியீடு என இதனை நான் உறுதிபடக்**

**கூறுவேன்.**

**தன்னை ஒரு இலங்கைப் பிரஜை என நிரூபிக்க முயலும் ஒருமலையக தொழிலாளியின் கதை இது. இக்கதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இக்கதையை மனிதமாடு தொகுப்பில் வாசியுங்கள் அன்பர்களே.**

திருகோணமலையில் அ.செ.மு வின் இறுதி நிகழ்வில் கனத்த இதயத்தோடு நான் கலந்து கொண்டேன் சு.வில்வரத்தினத்துடன்.

அக்காலத்தில் மலையகத்தில் கடமையாற்றிய யாழ்ப்பாணத் துரைத்தனத்தாரையும், அதற்கு எதிரான யாழ்ப்பாண அ.செ.மு போன்ற மனிதாபிமானம் கொண்டவர்களையும் அறிந்து கொள்ளுங்கள்.

**26 January 2018**

## பிடித்த சிறுகதை 05

அந்தக் காலத்தில் மணியகாரன் என்றால் DRO. மணியகாரன் கந்தோர் என்றால் DRO OFFICE பின்நாட்களில் அப்பதவி AGA ஆகி பின்னர் DS ஆகிவிட்டது. ஆனாலும் பெரும்பாலோர் DRO என்றும் DRO Office என்றுமே பாவிக்கின்றனர்.

என் வரையில் ஈழச் சிறுகதை மூலவர்களில் இவர் ஒருவரே நிர்வாக சேவை அதிகாரியாக என்னால் அறியப்பட்டிருந்தார். பின்னர் பல படைப்பாளிகள் அப்பதவிக்கு வந்தனர். வந்து கொண்டிருக்கின்றனர்.

**இலங்கையர்கோன்**

ஈழத்து சிறுகதை மூலவர்கள் மூவரில் ஒருவர், த.சிவஞானசுந்தரம்.

தனது 46 ஆவது வயதில் 1961 ம் ஆண்டில் அகாலமரணமடைந்த ஏழாலையைச் சேர்ந்த இலங்கையர்கோனின் **வெள்ளிப்பாதசரம்** சிறுகதைத் தொகுதி 62 ம் ஆண்டில் வெளிவந்தது. பின்னர் *மித்ர* வெளியீடாகவும் சமீபத்தில் மீள் பிரசுரம் செய்யப்பட்டது. இலங்கையர்கோன் சிறந்த

நாடக ஆசிரியரும் கூட.

***இவரது நூல்கள்:***

விதானையார் வீட்டில் (நாடகம்), கொழும்பிலே கந்தையா(நாடகம்), லண்டன் கந்தையா(நாடகம்), மாதவி மடந்தை (மேடை நாடகம்),மிஸ்டர் குகதாசன்(நகைச்சுவை நாடகம்), முதற் காதல் (மொழிபெயர்ப்பு நாவல்), வெள்ளிப் பாதசரம் (சிறுகதைகள்).

***வெள்ளிப்பாதசரம்***

**யாழ்ப்பாணத்தின் நீர் வளமற்ற சொற்ப நிலத்தை தம் தளராத முயற்சி ஒன்றினாலே வளப்படுத்தி சீர்செய்யும் விவசாயியான செல்லையனையும், அவனது மனைவியான நல்லம்மாவின் ஊடலையும் கூறும் கதை இது. 1944ஆம் ஆண்டு ஈழகேசரியில் பிரசுரமான கதை.**

**திருமணமாகி மூன்று மாதங்களேயான தம்பதிகள் வடமராட்சியின் பிரசித்தி பெற்ற வல்லிபுரக்கோவில் கடைசித் திருவிழாவுக்கு யாழ்ப்பாண செம்மண் பிரதேசத்திலிருந்து மாட்டு வண்டியில் வல்லை வெளிதாண்டி வருகின்றனர். வந்த இடத்தில் செல்லையன் மனைவிக்கு ஆசையோடு வாங்கிக் கொடுத்த வெள்ளிப் பாதசரத்தை அவள் தொலைத்து விடுகிறாள். இதனால் ஏற்படும் ஊடலே இக்கதை.**

**இவரது வெள்ளிப்பாதசரம் தொகுப்பிலே இக்கதையை வாசிக்கலாம் நண்பரகளே.**

நான் வடமராட்சியைச் சேர்ந்தவன். வல்லிபுரக்கேயில் கொடியேறும்போது **வெள்ளிப்பாதசரம்** கதை என் நினைவில் தவிர்க்க இயலாது நிறையும். அந்த ரசனை அலாதியானது.

**26 January 2018**

**26 January 2018**

## பிடித்த சிறுகதை 06

1995 நத்தார் தினம் அதிகாலை அந்த எழுத்தாளர் ஒரு போத்தலுடன் எனது குடிலுக்கு வந்தார்.

***"இந்த நத்தாரை ஒரு எழுத்தாளனுடன் கொண்டாட விரும்பினேன். அதுதான் உம்மிடம் வந்திருக்கிறேன் "***

நான் குடிப்பதில்லை ,ஆயினும் அன்றைய தினம் மிக மகிழ்ச்சியோடு கடந்தது.

பிறர் ஈன நிலை கண்டு துள்ளும் உள்ளம் அவரது. கருத்து முரண்பாடு இருந்தபோதும் நட்பைப் பேணியவர். முற்போக்கு எழுத்தர்களின் எதிர் நிலைப்பாடு இருந்தபோதும் தனது கதை ஒன்றினாலேயே முற்போக்காளராக இன்றும் கருதப்படுபவர்.

மூத்த படைப்பாளி. கொட்டியாரத்துக்கு மட்டுமல்ல தன் படைப்புகள் மூலம் தமிழுக்கு வளம் சேர்த்தவர், பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர். ***இழந்த காதல்*** எனும் தினகரனில் 1948ல்

எழுதிய கதையின் மூலம் எழுத்துலகில் அறிமுகமாகியவர்.

**அ.செ.மு** திருகோணமலையில் வெளியிட்ட **எரிமலை**யில் முதற்கவிதையை எழுதியவர் இலங்கையர்கோன் போன்றவர்களால் ஆற்றுப்படுத்தப்பட்டவர். **வ.அ.** என எம்மால் அன்போடு அழைக்கப்படும் மூதூரின் முத்து. நிறைந்த வாசகன், நெற்றிக்கண் விமர்சகன்.

***வ.அ .இராசரத்தினம்***

இவருக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் ***இலக்கிய கலாநிதி*** பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

**இவரது நூல்கள்:**

துறைக்காரன் (நாவல்), கொழுகொம்பு (நாவல்), கிரௌஞ்சப் பறவைகள் (நாவல்), ஒரு காவியம் நிறைவு பெறுகிறது ( குறுநாவல் ), ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (சிறுகதைத் தொகுதி), மண்ணில் சமைந்த மனிதர்கள் (நாவல்), ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது (நாவல்), தோணி (சிறுகதைத் தொகுதி), பூவரசம் பூ (மொழிபெயர்ப்புக் கவிதை), கொட்டியாரக் கதைகள் (சிறுகதைகள்), ஐந்திணைக் கதைகள்(சிறுகதைகள்), கட்டுரைத் தொகுப்புளாக இலக்கிய நினைவுகள், பொச்சான்கள்.

தோணி எனும் பெயரில் அரசு வெளியீடாக வந்த இவரது சிறுகதை தொகுதி 1962க்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக்கொண்டது.

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது (நாவல்) தற்போது க.பொ.த உயர்தர தமிழ் பாடத்திற்கு சேர்த்து கொள்ளப்பட்டுள்ளது.

***தோணி***

**1954 ஆம் ஆண்டு ஈழகேசரியில் பிரசுமாகிய கதை.**

**கடலில் சென்று மீன் பிடித்து வாழும் நித்திய வறுமையில் வாழும் மீனவனுக்கு தோணி சொந்தமில்லை. தோணி ஒன்றை சொந்தமாக்க அவன் ஆசைப்படுகிறான். அவனின் துன்பம் தோய்ந்த கதையே இது .**

**கதை நம்பிக்கையோடு இவ்வாறு முடிகிறது.**

**இன்னமும் தோணி எனக்குக் கனவுப் பொருளாகத்தான் இருக்கின்றது. அதனாலென்ன? உயர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பம்தான். எப்போதாவது ஒரு நாளைக்குக் காலம் மாறத்தான் போகிறது. அன்றைக்கு எனக்கு மட்டுமல்ல. என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும். எங்கள் தோணிகள் சப்த சமுத்திரங்களிலும் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும். அந்த மீன்களைச் சந்தையில் பகிரங்கமாக விற்போம். விற்ற பணத்திற்குச் சந்தையில் அரிசி வாங்குவோம். அரிசி வாங்கும் பணம் என்னைப் போன்ற உழைப்பாளியான ஒருவனுக்கு நேரடியாகக் கிடைக்கும். அப்போது உழவனுக்கு நிலமும் சொந்தமாக இருக்கும் அல்லவா?**

**நான் மிக விரும்பிப் படித்த சிறந்த கதைகளில் இதுவும் ஒன்று. இக்கதையை இவரது *தோணி* தொகுப்பில் வாசித்துப்பாருங்கள்.**

**27 January 2018**

பிடித்த சிறுகதை 07

"யா*னைப் பசிக்கு சோளப் பொரி*" என்றொரு பழமொழி உண்டு.

வடக்குக் கிழக்கு மாகணசபையின் கலாசாரத் திணைக்களம் நலிவுற்ற கலைஞருக்கு மாதாந்தம் உதவு தொகை வழங்கத் தீர்மானித்து 30 பது கலைஞர்களைத் தேர்ந்தது. ஆளுக்கு 1000/- பின்னர் இது 2000/- ஆகி இப்போது 3000/- ஆகிவிட்டது.

சோளப்பொரிதான் ஆயினும்பாராட்டப்பட வேண்டிய விடயம். மாகாண சபை வடக்குக் கிழக்காகப் பிரிந்த பின்னரும் மாதாந்தம் இந்த கலைஞரின் முகவரியை வடக்கு கலாசாரத் திணைக்களத்திற்காக 2009 வரை நான் எழுதிக் கொண்டிருந்தேன்,உதவு தொகை விடய எழுதுனர் நான்.2000/-காசோலை அனுப்பும் பணி என்னுடையது.

இவர் வடமராட்சியின் எனது ஊரைச் சேர்ந்தவர். வடமராட்சி வல்வெட்டியில் வாழ்ந்து திருமணத்தின் மூலம் வலிகாமம் மேற்குக்குப் பெயர்ந்தவர்.

1955 ல் எழுதத் தொடங்கி வீரகேசரி,சுதந்திரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் எழுதி வந்தவர்.

எஸ்.பொ வின் உபாசகர்..அதனால் முற்போக்கு எழுத்தாளர் அணியில் சேராதவர்.

***கே.வி.நடராஜன்***

யாழ் இலக்கிய வட்ட ஆரம்பகால உறுப்பினர். யாழ் இலக்கிய வட்டம் இவரது சிறுகதைத் தொகுதியையே முதலாவதாக வெளியிட்டது.

***யாழ்ப்பாணக் கதைகள்*** என்ற அத்தொகுப்பு 1965 ல் வெளிவந்தது. முன்னீடு எஸ்.பொ. நல்ல கதைசொல்லி .நல்ல வாசகர்கள் இன்றும்அத்தொகுப்பை சிலாகிக்கின்றனர். சிறிது காலம் ஈழநாடு பத்திரிகையில் கடமை புரிந்தார். யாழ் மாவட்டதெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கம் வெளியிட்ட ***கற்பகம்*** சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தார். யுத்தம் எல்லோரையும் பாதித்ததுபோல் இவரையும் பாதித்தது. அகதியாக்கியது,

2000 ல் இவரது ஆசான் எஸ்.பொ. வெளியீடாக இவரது ***வேலி*** சிறுகதைத் தொகுதியை கொண்டுவந்தார்.இதே கதைகள் அடங்கிய ***ஊரும் உலகமும்*** தொகுதி யாழ் இலக்கிய வட்ட வெளியீடாக 2001 ல் வந்தது. சமரசவாதியாக இருந்தே அவர் மரணித்துப் போனார்.

**கறை**

**_கறை_ என்னும் இக்கதையை _யாழ்ப்பாணக் கதைகள்_ தொகுப்பில் படிக்கும் காலத்தில் (1966) வாசித்தேன். நீங்களும் வாசியுங்கள் நண்பர்களே.**

***“ அப்புவைக் கேளுங்கோ”***

**கறையில் வரும் இந்தக் குரல் கே.வி.நடராஜன் எஸ்பொ.வின் உபாசகர் என்பதை உறுதிபடக் கூறும்.**

## பிடித்த சிறுகதை 08

1989 ம் ஆண்டாக இருக்கவேண்டும்.ஆண்டை மறந்து விட்டேன். வ.கி. மாகாண இலக்கிய நூல் பரிசுத் தேர்வு. நடுவர்களில் நானும் ஒருவன்.

நாவல் போட்டிக்கு ஒரே ஒரு நாவல் மட்டும் வந்திருந்தது. இப்போதய போட்டி முடிவுகள் போல

***உள்ளதுக்குள் வள்ளீஸ்*** என செயற்பட மனச்சாட்சி இடம் தரவில்லை. நாவல் திருப்தியளிக்கவில்லை. தெரிவுத் தாளில் நான் எழுதினேன்.

***இவர் என் விருப்புக்குரிய எழுத்தாளர்தான் ஆனால், இந்நாவல் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. இவ்வருடம் நாவல் போட்டியை ரத்து செய்தால் மிக மகிழ்வேன்.***

நாவல் போட்டி தவிர்க்கப்பட்டது. இவரது ***தர்மங்களாகும் தவறுகள்*** நாவல் தவறு நேராமல் தப்பித்துக் கொண்டது.

50களில் சிறுகதை ஆசிரியராக வளர்ச்சியடைந்த இவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்.

மூன்று இஸ்லாமிய நூல்களையும், நாலு பாட

நூல்களையும் மூன்று நாவல்களையும் ஒரே ஒருசிறுகதைத் தொகுதியையும் அச்சில் தந்தவர்.

***அ.ஸ.அப்துஸ் ஸமது.***

பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர். பின்னர் கல்விமானிப் பட்டத்தைப் பெற்றவர்.ஆரம்பத்தில் ***அன்பு இறை தாசன்*** என்ற புனைபெயரில் எழுதத் தொடங்கியவர். தமிழக எழுத்தாளர்களின் தாக்கம் இவருள் இருந்தது. முற்போக்கு அணியைச் சார்ந்த இவர் தினகரன்,வீரகேசரியில் நிறைய எழுதினார்

இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம் 1977 ல் வெளியிட்ட. ***எனக்கு வயது பதின்மூன்று*** அவ்வருடத்திற்கான சாகித்திய பரிசைப் பெற்றது.

இஸ்லாமிய சமயவிசயங்களையும், சமுதாய அக்கறையையும், மனித நல முன்னேற்ற அவாவையும் இவர் கதைகளில் காண முடியும்.

இவரது ***தங்கை*** எனும் கதை சி.வி.வேலுப்பிள்ளையால் **Brother&Sister** எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ***அந்தக் கிழவன்*** எனும் இவரது கதை சிறந்த முற்போக்கு கதையாக சிலாகிக்கப்படுகிறது.

பக்கீர் சமூகத்தைப் பற்றிய ***மசக்கை*** எனும் கதையும், குறவர் சமூகத்தைப் பற்றிய ***மஸாக்கா*** கதையும் மறக்க முடியாதவை.

மனவடிவு

> **"அதில்ல புள்ள செங்காமம் வட்ட முழுவதும் பேமிற் காணிதானே, அதெல்லாம் விவசாயக் குடும்பங்கள் குடியேத்த வேண்டுமெண்டு மூண்டு மூண்டு ஏக்கராய் பிரிச்சு கல் போடராங்க. சில சிங்களக் குடும்பங்கள் இப்பவே வந்து புரைகளில் இருந்து கொண்டாங்க. நம்முட பிந்நப்புட்டியும் பெய்த்து. எங்க வாப்பா வெட்டி எனக்கு சீதனமாத் தந்த பூமி இதை இப்படி அடாத்தா எடுத்தாகேக்கப்பாக்க ஆளில்லையா? என்னத்தைப்**

புள்ள கேக்கிற அக்கரப்பத்தில சோல,வாங்காமம், வேலாமரத்துவெளி எண்டு நம்மடஆக்கள்ட காணியெல்லாம் கரும்புக் கெண்டும், குடியேத்தத்துக் கெண்டும் எடுத்தாங்களே என்ன நடந்தது? இப்ப பொத்துவிலுக்கும் வந்திட்டாங்க சிங்களக் காலி..”

என மனவடிவு கதையில் ஒரு பாத்திரம் பேசும்

2001ல் மறைந்த, 75 சிறுகதைளுக்கு மேல் எழுதிய அம்பாறை மாவட்டத்தின் முதல் முஸ்லிம் சிறுகதை எழுத்தாளரான அ.ஸ.அப்துஸ் ஸமது அரச குடியேற்றம் பற்றிய சமகால நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய இந்த மனவடிவு கதையை எழுதியுள்ளார்.

நல்ல கதை. இக் கதையை அவரது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

**27 January 2018**

## பிடித்த சிறுகதை 09

தேனீருடன்,இலக்கியம் - அரசியல் பேசத் தொடங்கிய 67ம் ஆண்டின் பின்னான நாட்கள்.

லக்சுமி பவான், *தாமோதர விலாஸ்*, சற்றுக்காலம் தள்ளி *பரிட்சித்து விலாஸ்* எனது போசன சாலைகள். கே.கே.எஸ் வீதியில் நடப்பேன். அந்த வீதியில் ஒரு அச்சகம். *ஆனந்தா அச்சகம்* அங்கு தான் பெயர் பெற்ற அந்த எழுத்தாளர் முகாமையாளராகவோ, உரிமையாளராகவோ இருந்தார். கால்கள் தயங்க நிதானித்து அச்சகத்தின் உட்புறம் பார்ப்பேன்.

வெள்ளை அரைக்கை சேட், வெள்ளை வேட்டி, தடித்த பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுடன் நெடுத்த ஒரு மனிதர்.

"இவர்தான் அவர்" ஒரு நண்பன் அவரை எனக்குக் காண்பித்திருந்தான். ஒருநாளும் அந்த அச்சகத்துக்குள் நுழைந்ததும் இல்லை. அவரோடு பேசியதுமில்லை. நான் என்ன பெரிய ஆளா.?

யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் இது அன்றாடம் நடந்தது.

இப்போது அவர் இறந்துவிட்டார். அவரோடு இனியும் நான் பேச மாட்டேன்.

ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர். சிறுகதை எழுத்தாளர். நாவலாசிரியர் ஈழத்தின் முதல் புதுக்கவிதைக்காரர். தமிழ் இலக்கியத்தின் முக்கிய பிரசுரகர்த்தா.தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி சங்கத்தின் ஸ்தாபகர்.

*வரதர்(தி.ச.வரதராசன்)*

1940 ல் இருந்து எழுதத் தொடங்கியவர். ஈழகேசரி, மறுமலர்ச்சி, மற்றும் முக்கிய சஞ்சிகைகளில் சர்ச்சைக்குரிய ***கற்பு*** போன்ற கதைகளை எழுதியவர். மல்லிகை சஞ்சிகையிலும் எழுதியவர்

வரதர் வெளியீடாக 35 க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர். அதில் கைலாசபதி, முருகையன், மஹாகவி ஆகியோரின் நூல்களும் அடங்கும்.

ஆனந்தன்,தேன்மொழி,வெள்ளி,புதினம்,அறிவு களஞ்சியம் ஆகிய சஞ்சிகைகளை ஆசிரியராக நடத்தியவர்.

இவரது 12 சிறுகதைகள் கொண்ட ***கயமை மயக்கம்*** தொகுதி 60களில் வரதர் வெளியீடாக வந்தது. இதே தொகுப்பு ***வரதர் கதைகள்*** எனும் பெயரில் 96ல் 2ஆம் பதிப்பாக குமரன் புத்தக இல்லத்தால் தமிழகத்தில் வெளியிடப்பட்டது.

1966 ல் வரதர் வெளியீடாக வந்த இவரது இளமைக் கால நினைவுகளைக் கூறும் 18 கட்டுரைகள் கொண்ட **மலரும் நினைவுகள்** தொகுதியும் மீள் பிரசுரமாக குமரன் புத்தக இல்லத்தால் 2003 ல் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்ப் படைப்பாளிகளுக்கு இலங்கைக் கலைக்கழகத்தால் வழங்கப்படும் ***சாகித்திய ரத்தினம்*** பட்டம் இவருக்கே முதன்முதல் வழங்கப் பட்டது.

***இவரது நாவல்***

*காவோலையில் பசுமை*

தமிழரசுக் கட்சி அனுதாபியான இவர் சுதந்திரன் ஆண்டு மலரில் மட்டும் ஒரே ஒரு கதை எழுதியிருக்கிறார் என்பது சுவாரஸ்யமான விடயம்.

மு.த.வின் கதைகளில் வரும் ***நல்லசிவம்.***

மா.அரங்கநாதன் கதைகளில் வரும் ***முத்துக்கருப்பன்*** போல்

வரதரின் கதைகளில் ***மூர்த்தி மாஸ்டர்*** வருவார்.

அவர் வரதரேதான்.

சுதந்திரனில் அவர் எழுதிய எனக்குப் பிடித்த அவரது சிறுகதைத் தொகுதிகளின் முதற் கதையான **மாதுளம் பழத்திலும்** மூர்த்தி மஸ்டர் வருகிறார்.

*மாதுளம்பழம்*

> ***...சட்டைப் பையிலிருந்து ஐம்பது சதத்தை எடுத்துப் பாக்கியிடம் " மாதுளம் பழம் கூடாது. நீ கடையில் போய் மாம்பழம் வாங்கிச் சாப்பிடு" என்று சொல்லிவிட்டு திரும்பி நடந்தார்.***
>
> ***இப்போது வயிறல்ல அவரது நெஞ்சு கொதித்தது. இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து.***

**இப்படி முடியும் வரதரின் சிறப்பான இக்கதையை அவரது கதைத் தொகுதிகளிலும், சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

**29 January 2018**

பிடித்த சிறுகதை 10

**மா**காண சபை வடக்கு, கிழக்கென பிரிந்த போது விரும்பாமலே லொத்தர் மூலம் வடக்குக்கு நியமிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

வடக்குக் கலாசாரத் திணைக்களம் வடக்கின் கலாசார நிகழ்வுகளை தொகுத்து வெளியிட காலாண்டு இதழொன்றை செய்வதற்கானா முஸ்தீபுகளில் இறங்கியிருந்தது. ஆசிரியர் குழுவில் நானும் ஒருவன். இதழுக்கு பெயர் வைக்கும் பணி என் தலையில்.

**வடந்தை** எனப் பெயர் வைத்தேன். பலருக்கு நெடுநாட்கள் அந்தப் பெயரின் அர்த்தம் தெரியவில்லை. **வடந்தை** என்றால் வாடைக்காற்று. இதழின் மகுட வாசகமாக ஒரு கவிதையின் வரிகளை சிபார்சு செய்தேன்.

அந்த வரிகள்:

**துகளில்லா உலகம் ஒன்று தோன்றும்**

**வகை செய்தல் வேண்டும்.**

வரிகளின் சொந்தக்காரர். முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி மு.போ.எ.சங்க கீதம்

இயற்றிய கவிஞர்.

மகாஜனா மும்மணிகளில் ஒருவர். மறுமலர்ச்சி சஞ்சிகையில் சிறுகதை எதுவுமே எழுதாத மறுமலர்ச்சி சங்க ஆரம்பகால உறுப்பினர்.

*அ.ந.கந்தசாமி (அளவெட்டி நடராசா கந்தசாமி)*

ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் 40 சிறுகதைகள் எழுதியிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சிறந்த கவிஞன்.கவீந்திரன், பண்டிதர் திருமலைராயர், கலையரசன், சிப்பி, புருனே எனும் புனைப் பெயர்களுக்கு உரியவர்.

வில்லூன்றி மயானத்தில் நடந்த கொலை பற்றிய வில்லூன்றி மயானம் கவிதையும், மலையகம் பற்றிய தனது (தோட்டத் தொழிலாளருடனான தொழிற்சங்க) ஊழியத்தால் பெற்ற அனுபத்தால் எழுதிய **தோட்டக்காட்டினிலே** கவிதையும் முக்கியமானவையாகும்.

அ.ந.க வின் நாடகம் **மதமாற்றம்.** இது நூலாகியுள்ளது. அச்சாகிய மற்றைய நூல் **வெற்றியின் இரகசியங்கள். மனக்கண்** நாவல் நூலுருவாகவில்லை. மலையகம் பற்றிய **களனி வெள்ளம்** நாவலும் முற்றுப் பெறவில்லை.

**தேசாபிமானி, சுதந்திரன், டிரிபியூன் (ஆங்கிலம்)** பத்திரிகைகளில் கடமையாற்றிய இவர் பல படைப்புகளைத் தமிழாக்கியுள்ளார். அதில் முக்கியமானது. பிரான்ஸ் எழுத்தளரான எமிலி ஜோலாவின் **நாநா** நாவலாகும்.

இவரது முக்கிய சிறுகதைகளாக **நள்ளிரவு, இரத்த உறவு, ஐந்தாவது சந்தி**,மலையகம் பற்றிய **நாயினும் கடையர்** என நண்பர்கள் குறிப்பிடுகின்றனர்,

பேரா.கைலாசபதி தனது **ஒப்பியல் இலக்கியம்** நூலை சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனம் போன்ற துறைகளில் ஆளுமையான இவருக்கே சமர்ப்பித்திருப்பது பெருமைப்பட

வேண்டிய விடயம்.

*பாதாள மோகினி*

தனது 17ஆவது வயதில் ஈழகேசரியில் முதற்கதையை எழுதியவர்.

...அவன் இப்போது கலைமணம் வீசும் கற்பனைத் தேவ உலகில் வசிக்கவில்லை. பாதாளத்திற்கு போய் வந்ததின் பயனாக அவன் இப்போது பூவுலகவாசியாக மாறிவிட்டான்.

என முடியும் அ.ந.க வின் பாதாள மோகினி கதை 1/4/51 ல் சுதந்திரனில் பிரசுரமாகியது.

உண்மையைச் சொல்லுகிறேன் இந்தக் கதை ஒன்றே தான் நான் வாசித்த அவரது கதை. இக்கதை அது வெளிவந்த 50களின் கதைப் போக்கை அடையாளம் காட்டுகிறது.

ஒரு ஓவியன் அவனது அனுபவம். இதுவே கதை. பிரமாதம் என்று புளகிக்காமலும் மட்டமென்று ஒதுக்காமலும் சுமாரான கதையாக நான் கூறக்கூடிய அ.ந.க வின் கதை இது.

சுதந்திரன் கதைகள் தொகுப்பில் இதனை வாசியுங்கள் நண்பர்களே.

**30 January 2018**

## பிடித்த சிறுகதை 11

திருகோணமலை டச்சுக் கோட்டைக்குள் அன்று இருந்த கைத்தொழில் திணைக்களம் (தொழிற்துறைத் திணைக்களம்) வெளியே நீதிமன்ற வீதிக்கு இடமாற்றம் பெற்ற காலம். 95ம் ஆண்டு கைத்தறி நெசவாளர்களின் நூல் மானியம் சம்மந்தமான விடயம் பற்றி பேச எனக்குப் பிடித்தமான அந்த எழுத்தாளர் நான் கடமையாற்றும திணைக்களத்திற்கு வந்திருந்தார்.

அவரை எமது பணிப்பாளர் பற்குணம் எனக்கு அறிமுகப் படுத்தினார். எனது கையைக் குலுக்கிய அவர் பணிப்பாளரைப் பார்த்துக் கூறினார்.

**“ இவரது புத்தகத்தை நான் படிக்கவில்லை. இவரது ஒரு புத்தகத்திற்கு சுதந்திர இலக்கிய விருது கிடைத்திருக்கிறது. சரிநிகர் பத்திரிகையிலும் இவரது கதைகளைப் பற்றி சிறப்பாக எழுதுகிறார்கள். ஒரு நல்ல எழுத்தாளர் உங்கள் காரியாலயத்தில் கடமையாற்றுவது மகிழ்ச்சியாக இருக்கிறது்”** என்றார்.

பொய்யல்ல, சங்கோசத்தில் நான் சங்கடப்பட்டேன்.பின்னர் என் தொகுப்பை அவர் படித்தாரோ தெரியாது. அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் பின்னரான காலங்களில் எனக்குக் கிட்டவே இல்லை.

***இலக்கியம் மக்களுக்காக அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எழுதப்பட வேண்டும்.*** என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்.

திருகோணமலை வாப்பு மரைக்கார், சம்மாந்துறை சின்னமுத்து உம்மாவுக்கும் மகனாக அனுரதபுரம் மாவட்டம் ***காளாவி***யில் 35 ம் ஆண்டு பிறந்தவர்.

பயிற்றப் பட்ட ஆசிரியர். மருதமுனையை வாழ்விடமாகக் கொண்ட. முற்போக்கு எழுத்தாளர்.

***மருதூர் கொத்தன் (வி.எம்.எம் இஸ்மயில்.)***

1961 ல் தினகரனில் **இருள்** எனும் கதையை எழுதி எழுத்து உலகுக்கு அறிமுகமாகியவர்.

**வேலி, ஒளி, சலவைக்காரி, வெட்டுமுகம், கோடரிகள் கூராகின்றன, ஈரா(சர்ச்சைக்குள்ளான கதை), மரையாம் மொக்கு,** போன்ற நல்ல பல கதைகளின் உரித்துக்காரர். நல்ல ஒரு கவிஞர்.

**தினகரன்,வீரகேசரி, சுதந்திரன்,ஈழநாடு, நவமணி,தாமரை, மல்லிகை, கற்பகம், அஞ்சலி, களம், காலரதம்** ஆகியவற்றில் எழுதியவர். இவரது புனைப்பெயர்கள் **அபூபீனா, நுகதானன்.**

***இவரது நூல்கள்.***

காவியத் தலைவன்(கவிதைத் தொகுதி. அபூபீனா எனும் பெயரில் எழுதியது. 1976), மருதூர்கொத்தன் கதைகள் (12 கதைகள், இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம் 1985), மருதூர்கொத்தன் கதைகள் (40கதைகள் அவரது பிள்ளைகளால் வெளியிடப்பட்டது. 2007). கொத்தனின் நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள் தனித்தனி மூன்று நூல்களாக அவரது மகனால் வெளியிடப்படவிருக்கிறது.

தேசிய இலக்கியம் முனைப்புப் பெற்ற காலத்தில் எழுதத் தொடங்கியவர். கொத்தன், முற்போக்காளராக இருந்தபோதும் நீலாவணன் போன்றோருடனும் நட்பைப் பேணியவர்.

*மரையாம் மொக்கு*

இக்கதை களம் சஞ்சிகையில் 1998 மே இதழில் வெளிவந்தது.

மரையாம் மொக்கு என்பது இவரது பாத்திரம் ஒன்று கூறுவது போல்

முன்னங்கை பருமனான நேரான வரசங் குத்தியை சாணளவு அறுத்து அறுவை வாயின் நடுவைத் தொளச்சி ஒரு பாகம் நெடுப்பமான கதியாக்காலை இறுக்கி அடிச்சு இணைக்கிறது தான் *மரையாம் மொக்கு*.

வாவியில் சில் வலையை வளைத்துக் கட்டி ஒளிந்திருக்கும் மீன்களை வெளிக்கொணர நீரை தாம் தூம் என அடித்துக் கலக்கும் கருவி இது தூரப் பார்வைக்கு றொக்கட் லோஞ்சர் போல இருக்கும்.

மருதூர்கொத்தன் கதைகளின் பாத்திரங்கள் ஏழ்மையான இன மத பேதமற்ற மக்களே காத்தமுத்து இஸ்மாலெப்பை. இன்னும் பலர் இக்கதையில் வருகிறார்கள்.

ஹெலிகப்டர் வக்கா வடிவு நீங்கி கொக்காகி, பருந்தாகி, கழுகாகி, ராட்சதக் கழுகாகி அவர்கள் தலைக்கு மேல் சீறியது. உதயகுமார் இருப்புக் கொள்ளாமல் அண்ணாந்து பார்த்தான்...

சட் சட சலீர் பளீர் சட் சட சலீர் பளீர்

*சட் சட சலீர் பளீர் சட் சட சலீர் பளீர்*

வாவி நீர் புள்ளிகளாய் பொங்கிக் கொதித்தது

**நாணல் பறவைகளும். சில்லித் தாராக்களும் அலறி வான் பரப்பில் அலைய எருமைகள் உழக்கிப்பாய.....**

***மரையாம்மொக்கு கைப்பிடிகள் தரை நீரில் மிதந்தன. வலையுந்தான்,***

**கதை இப்படியாக முடிகிறது.**

**நெஞ்சைத்தொட்ட இக்கதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**

**இக்கதையை இறுதியாக வந்த மருதூர் கொத்தன் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**31 January 2018**

## பிடித்த சிறுகதை 12

1971ன் பின்னான காலம் எமது கட்சி இரண்டாவது தடவையும் துரோகத்தனத்துக்குப் பலியாகியது. செங்கொடிச் சங்கமும் தான்.

ஹற்றன், மல்லிகைப்பூப் பஜார், கீனாக்கொல்லை, சிவனு லட்சுமணன், தொழிலாளர்கள் சினிமா மெட்டில் பாடிய புரட்சிப்பாடல்கள் என மலையகம் பற்றிய சிறிதளவு அறிவு எனக்கு இருந்தது.

மலையகம் எனக்குத் தெரியாத பிரதேசம். புதிய செங்கொடிச்சங்க முழுநேர ஊழியனாக கடமையாற்றுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அது சாத்தியமாகவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கக் குறுநாவல் போட்டி முதற் பரிசுதங்கப் பதக்கத்தைப் பெற பேராதனைக்கு 74 ல் ஒருதடவை சென்றதைத் தவிர இன்றுவரை மலையகத்திற்குப் போகும் சந்தர்ப்பம் எனக்குச் சித்திக்கவில்லை.

தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் 67 ம் ஆண்டு இன்று பிரபலமாக இருக்கும் மலையக எழுத்தாளர் சிலரை சிபார்சு செய்ததன் மூலம் இவரது பெயர் எனக்கு பரிச்சயமாகியது.

1971 டிசம்பர் **மல்லிகை** இவரது அட்டைப்படத்தைத் தாங்கி வெளிவந்தது. இவர் இப்போது நன்கு அறியப்பட்டவர். **A/L** தமிழ் பழையபாடத் திட்டத்தில் இவரும் இவரது இந்தக் கதையும் இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு அறிமுகமாகி. பெருமை பெற்றிருக்கிறது.

**ஒரு கூடைக் கொழுந்து** 1961 ல் தினகரனில் வெளிவந்த இவரது முதற் கதையான இக்கதையை எழுதிமுடிக்க ஒரு வருடம் சென்றதாம்.

பதுளை. நித்தியானந்தன் **வைகறை** வெளியீடாக 1980 ல் கொணர்ந்த இதே பெயரிலான சிறுகதைத் தொகுதி அவ்வாண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

**என்.எஸ்.எம்.ராமையா**

நாராயணன் சுப்பையா மெய்யப்பன் ராமையா பதுளையைச் சேர்ந்தவர். பதுளை நாரங்கலைத் தோட்டத்தில் கணக்குப்பிள்ளையாக இருந்து தோட்ட நிர்வாகத்துடன் (தோட்டத்துரையாகா இருந்த **UNP** முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயவர்த்தனா) முரண்பட்டு கொழும்புக்கு வந்து வீரகேசரியில் விநியோக முகவராகி. பின்னர் கொழும்பில் ஒரு இரும்புக்கடையில் பில் எழுதுபவராக வேலை பார்த்தார். தோட்டமக்களின் அந்தகாரத்தை இலக்கிய ஒளியில் தரிசிக்க முயன்ற இவரது வாழ்க்கையும் சோகமானது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக இருந்த இவர் குறைவாகவே எழுதினார். 63 ல் தினகரனில் வந்த **தீக்குளிப்பு** கதை **'Among the hill '** எனும் பெயரில் செல்வா.கனகநாயகம் அவர்களினால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இரு தடவைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**நிறைவு, வேட்கை, மழை, எங்கோ ஒரு தவறு, முற்றுகை** போன்ற சிறந்த கதைகளின் சொந்தக்காரர் இவர். **தினகரன், வீரகேசரி, சிந்தாமணி,கதம்பம்,அஞ்சலி,சிரித்திரன்** போன்றவற்றில் கதைகள் எழுதினார். இவர் சிந்தாமணியில் எழுதிய

**வேட்கை** கதை, வாசகர் வட்டம் வெளியிட்ட **அக்கரை இலக்கியம்** தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

செ.யோகநாதன் வெளியிட்ட சிறுகதைகள் அடங்கிய தொகுப்புக்கு **ஒரு கூடைக்கொழுந்து** என்று பெயரிட்டுள்ளார்.

இதே பெயரில் 91ம் ஆண்டு எச்.விக்கிரமசிங்கா மேலும் 2 கதைகளைச் சேர்த்து அவர் எழுதிய 14 கதைகளையும் ஒரே தொகுப்பாகக் கொண்டுவந்துள்ளார்.

கொழுந்தெடுக்கும் தனது சவாலை நிறைவேற்றும் லட்சுமியைப் பற்றிக் கூறும் ஒரு கூடைக்கொழுந்து கதை

**ஒரு கூடைக்கொழுந்து**

**"அக்கா எனக்கு ஏது நிறை?"**

**எனத் தொடங்கி**

**"சபதம் நிறைவேறிய பின்பும் அந்த மலையில் நிற்க விரும்பவில்லை. அவள் போன பிறகுதான் "ஐயா" வுக்கு அவள்மீது உண்மையில் காதல் பிறந்தது."**

**என்று முடியும் இக்கதையை அவரது ஒரு கூடைக்கொழுந்து தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஓவியர் கௌசிகனின் அப்பாவான அவர் 3/9/90 ல் காலமாகினார். அவருக்கு அஞ்சலி செய்ய மந்திரிமார்களும், அரசியல்வாதிகளும் கார்களில் வந்திருந்தனர். என்ன பிரயோசனம்.?

உயிருடன் இருந்தபோது..?

ஆயினும் என்ன? இலக்கிய அபிமானிகள் மத்தியில் அவர் இன்னும் **ஒரு கூடைக்கொழுந்து ராமையாவாகவே** வாழ்கிறார்.

**3 February 2018**

பிடித்த சிறுகதை 13

உண்மையைச் சொல்கிறேன். இவரது கொள்கையோடு எப்போதும் எனக்கு உடன்பாடு இருந்ததில்லை. இப்போதும்தான்.

முற்போக்காளரோடு எழுத்துச் சமர் புரிந்தவர். இவரையும், மு.பொ.வையும், சுவியையும் கடைசி வாங்கில் இருந்து சில இலக்கியக் கூட்டங்களில் செவிமடுத்தவன். என்னை யார் என்று அவருக்குத் தெரியும். உண்மையோ பொய்யோ அவர் என்மீது பிரியமாய் இருந்ததாக சுவி பல தடவைகள் கூறியிருக்கிறார். கலைவாதிகளோடும் அவர் இசைந்து போகவில்லை. முற்போக்கோடும், நற்போக்கோடும் இசையவில்லை தனிப்போக்காக இயங்கினார்.

*மு.தளையசிங்கம்*

**தியாகம்** கதையின் மூலம் 1957ஆம் ஆண்டு சுதந்திரனில் அறிமுகமாகியவர் இவர். 20 சிறுகதைகள், 01 நாவல் (கலைச்செல்வி நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற **ஒரு தனி வீடு**, 02 குறுநாவல்கள, 07 கவிதைகள், 20க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இவை அனைத்தையும் **மு.தளையசிங்கம் படைப்புகள்** என்ற பெயரில் மு.பொன்னம்பலத்தைப் பதிப்பாசிரியராக கொண்டு **காலச்சுவடு** வெளியிட்டுள்ளது.

**புதுயுகம் பிறக்கிறது ( 1965. அரசு வெளியீடு 11.கதைகள்) போர்ப்பறை, மெய்யுள், ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, முற்போக்கு இலக்கியம். ஒருதனிவீடு (நாவல்)** போன்ற ஏலவே இலங்கையில் வெளிவந்த நூல்களும், கோவை சமுதாயம் பிரசுராலயம் மறுபிரசுரம் செய்த நூல்களும் இத்தொகுப்பில் அடங்குகின்றன. **மு.தளையசிங்கம் ஓர்அறிமுகம்** எனும் சுந்தர ராமசாமி, மு.பொ.வால் எழுதப்பட்ட நூல் ஒன்று 1985ல் சமுதாயம் பிரசுராலயத்தால் வெளியிடப்பட்டுள்ளது. மு.தவை தமிழகத்தில் பிரபல்யப்படுத்த சு.ரா வும் ஜெயமேகனின் கட்டுரைகளும் உதவி வருகின்றன. இருவருமே முற்போக்குக்கு எதிரானவர்கள். முற்போக்காளரைத் தாக்குவதற்காக மு.த வை இவர்கள் துணைக்கழைத்தமை ஆச்சரியப்படக்கூடிய ஒன்று அல்ல. ஆரம்பத்தில் இடது சாரி சிந்தனையாளராக இருந்த இவர் ஒரு பட்டதாரி ஆசிரியருமாவார்.

இரத்தினபுரியில் இருந்த காலத்தில் ஸ்ரீ நந்தகோபாலகிரியின் சீடனாகி மெய்முதல்வாதியாகினார். இவர் பேசிய தத்துவம் **பிரபஞ்ச யதார்த்தம்.** முற்போக்கு எழுத்தாளர்களின் எதிர்ப்பாளரான இவர் மல்லிகையோடும். ஜீவாவோடும் நட்பைப் பேணியவர். மல்லிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் ஏ.ஜே., ஜீவாவுடன் இவரும் ஒரு நடுவராக கடமையாற்றினார். போட்டியில் எஸ் ஜோன்ராஜனின் கதை முதலாவதாக வந்தது எனது நினைவில் உள்ளது.

**கலைஞனின் தாகம், அண்டை வீடுகள், மெய், உள்ளும் வெளியும், வெள்ளையானை, கோட்டை, தொழுகை** என்பன இவரது குறிப்பிடத்தக்க கதைகளாகும்.

*பெப்ரவரி 4*

**இன்று சுதந்திர தினமாம்?**

1959ல் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த இவரது சிறுகதைத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படாத, எனக்குப் பிடித்த இக்கதை ஞாபகத்திற்கு வந்தது.

இனப்பிரச்சனையை மையக் கருவாக்கி முதன்முதல் ஆக்க இலக்கியம் படைத்தவராக கருதப்படும் இவரின் இந்தக்கதை சற்று வித்தியாசமானது.

1959 பெப்ரவரி 4ல் பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களான தமிழ்,சிங்கள மொழி பேசுபவர்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதாக நனவோடை உத்தியில் இக்கதை எழுதப்பட்டுள்ளது.

கனகரத்தினமா? அப்போ நீங்கள் ஒரு தமிழனா? எனக்கேட்டு கண்ணீர்விடும் தயாவதியின் உளப்பாங்கும்.

சுதந்திரம் இரண்டு இனங்களையும் பகையாக்கி காதல் கோட்டைக்குள்ளும் கைவைக்கும் அளவுக்கு இனத்துவேசம் வளர்ந்து விட்டது. இனி அதற்கு கொள்ளை அடிப்பதும், கொலை செய்வதும் குரூரமான செயலாகத் தெரியாது. என ஆதங்கப்படும் இவரது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தும் கதை இது.

தயாவதி விரும்பிய நீடித்த பரஸ்பர ஒற்றுமைக்கு இரு இனத்தவர்களிடையே இனி இலங்கையில் இடம் உண்டா? உண்டு திகதி மாறினால் - பெப்ரவரி -4க்குப்பின் வேறொன்று வந்தால் அந்த நன்னாளின் நினைவில் என்னை மறந்து விடுதி திரும்பிய நான் கொள்கை ஒன்றைக் கொண்ட புதிய மனிதனாகவே மாறிவிட்டேன்.

என முடியும் மு.தவின் வித்தியாசமான இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

இன்னொரு தகவல். 1973 ல் இறந்த மு.த, தண்ணீர் பிரச்சனையில் தாக்கப்பட்ட சம்பவத்தை கே.டானியல் தனது **பஞ்சமர்** இரண்டாம் பாகத்தின் இறுதிப் பக்கத்தில்

**"ஒரு எழுத்தாளர் தண்ணீர்ப் பிரச்சனையால் புங்குடுதீவில் தாக்கப்பட்டார்"** என குறிப்பிட்டுள்ளார்.

**4 February 2018**

பிடித்த சிறுகதை 14

**தி**னபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் ஆரம்ப எழுத்தாளர்களைச் சிபார்சு செய்யும் மூத்த எழுத்தாளர்கள் பட்டியலில் இவரது பெயர் எனக்குப் பரிச்சயம் ஆகியது. இவரது பெயருடன் இருந்த இவரது ஊரின் பெயர் எனக்கு ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியதுண்டு. வடமராட்சி கிழக்கின் பிரபல்யமான ஊரின் பெயருடன் இவர் ஊரின் பெயர் பொருந்திப் போவதால் ஏற்பட்ட மயக்கம் அது. தினபதியில் இரண்டொரு இளம் படைப்பாளிகளின் கதைகளை இவர் சிபார்சு செய்தது எனக்கு நினைவில் இருக்கிறது. எதிர்பாராமல் 67 இல் இவர் காலமாகிவிட்டார்.

### தாழையடி மு.சபாரத்தினம்

வடமரட்சி கிழக்கில் பிரபல்யமான **தாளையடி** என்ற ஊர் இருக்கிறது. இவரது பெயரின் முன் உள்ள ஊர் திருநெல்வேலியைச் சேர்ந்த **தாழையடி**. இரு ஊருக்கும் மௌவளவும் கொம்பளவுமே வித்தியாசம். உச்சரிப்பில் வித்தியாசமில்லை.

**கல்கி** நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றதன் மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமாகிய

இவர் மறுமலர்ச்சியில் **தெருக்கீதம்**, **ஆலமரம்**, எனும் இரு கதைகளை எழுதியிருக்கிறார். ஆலமரம் தமிழில் வந்த சிறந்த கதைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

வரதரின் ஆனந்தனில் 1954 வந்த ஏகலைவன் குறித்த **குருவின் சதி** இவரை ஒரு தரமான படைப்பாளியாக இனம் காட்டியது. இக்கதை ஈழத்து சிறுகதைகள் தொகுப்பில் இடம் பெற்று உள்ளது. ஈழத்து சிறுகதை எழுத்தாளர்களில் கணிசமாயும்,கவன ஈர்ப்புக்குரியதாயும் எழுதியவர் இவர்.

**புதினம்** சஞ்சிகையில் **சிந்திக்கத் தொடங்கினால், எனக்கும் உனக்கும், தெரிந்தால் போதும், தாய்,** போன்ற கதைகளை எழுதி இருக்கிறார்.

இவரது எனைய சிறுகதைகள் சில **ஊமைநாடகம், ஓடமும் வண்டியும், வண்டிக்காரன், வற்றாத ஊற்று, ஷேட், சைக்கிள் சக்கரம்.**

அ.செமு வுடன் இணைந்து திருகோணமலையில் இருந்து முதன் முதல் வெளிவந்த **எரிமலை** பத்திரிகையை கொணர்ந்தவர் இவர்.

இவர் இறந்தபின்னர் இவரது மனைவி மீனா 1969 ல் இவரது கதைகள் அடங்கிய **புது வாழ்வு** எனும் சிறுகதை தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

**சடையம்மா**

**எனக்குப் பிடித்த இக்கதை கனக செந்திநாதனின் ஒரு பிடி சோறு போல் செல்வச் சந்நிதி கோவில் வர்ணனையுடனேயே தொடங்குகிறது. 1959 டிசம்பரில் இக்கதை சுதந்திரனில் பிரசுரமாகி இருந்தது.**

**லாவகமாக ஆரம்பித்து திடீர் அதிர்ச்சியுடன் முடியும் அந்தக்காலத்துக் கதைகளின் சாயலை இக்கதை கொண்டிருந்தது. இப்படி எழுதுபவர்கள் இப்போதும் இருக்கிறார்கள்.**

செல்வச் சந்நிதி முருகனுடைய கோவில் சரித்திர பிரசித்தி பெற்ற புண்ணிய சேஷ்திரங்களில் ஒன்று.

எனத் தொடங்கி

ஜன்னல் கம்பிகளைப் பிடித்திருந்த அவள் கரங்கள் தளர்ந்தன. கால்கள் தள்ளாடி அசைந்தன. தன் அன்புக் கணவனின் வாழ்வில் ஆத்மதிருப்தி கொண்டவள் போல் இருளில் அவள் சென்று மறைந்தாள்,

என முடியும் சடையம்மா கதையை சுதந்திரன் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**5 February 2018**

## பிடித்த சிறுகதை 15

இந்தக் கதை ஆசிரியர் பற்றி நான் இப்போது எழுதித்தானாக வேண்டும். 3/2/18 ல் இறந்த அவரது நல்லடக்கமும் முடிந்து விட்டது.

**தா.பி.சுப்பிரமணியம்.**

இவரை ஒரு சைவ மதத்தவனாகவே பெயரைக்கொண்டு நான் கணித்திருந்தேன். ஆனால் இவர் ஒரு கத்தோலிக்கர். மலையகத்திலும் இவர் ஆசிரியராக கடமையாற்றி இருக்கிறார். அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்.

89 காலகட்டம். மாகாண சபை நூலகம் பலவந்தமாக நெல்சன் தியேட்டருக்கு மாற்றப் பட்டிருந்தது. தியேட்டரின் முன்புறம் நமது அரட்டைக் குழுவில் இவரும் அங்கமாகி எனக்கும் அறிமுகமாகினார்.

ஒரு நாள் நாம் சந்தித்த போது தூரத்தில் தெரியும் கோணேசர் மலையைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

மலையின் ஒரு புறத்தில் மிகப் பெரிய புத்தர்சிலை நின்று கொண்டிருந்தது. அவர் திடீரென என்னைப்

பார்த்துக் கேட்டார் **"தெய்வம் நின்று கொல்லும்"** என்பார்களே அது இது தானோ.?

சுதந்திரன் பத்திரிகையில் இந்த எழுத்தாளர் **நேர்த்திக் கடன்** எனும் கதையுடன் எழுத்துலகுக்கு அறிமுகமாகினார். அதே கதை அவ்வாண்டு ஈழகேசரியிலும் பிரசுரமாகியது.

அந்தக் காலத்தில் வெளிவந்த சகல சஞ்சிகைகள், பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார்.(ராதா, கலைமகள், தினகரன், வீரகேசரி, விவேகி) சிறுகதை,நாவல், சிறுவர் இலக்கியம், நாடகம், ஓவியம் ஆகியதுறைகளில் ஈடுபாடு காட்டியவர்.சுமார்16 கதைகள் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

**மீண்டும் திருமணம், எண்ணும் எழுத்தும், இதுதான் பயிற்சியா?, இவர்களும் ஆசிரியர்களா?, இன்னும் எத்தனை நாளைக்கு?,திறந்த கல்லறை**, 1973ல் கலைமகளில் எழுதிய **திருத்தப்படும் தீர்மானங்கள்** என்பன இவரது குறிப்பிடத்தக்க கதைகளாகும்.

**இவரது நூல்கள்**

விடாமுயற்சி (சிறுவர் கதைத்தொகுப்பு,1959), சந்தனக்குச்சு (சிறுகதைத்தொகுப்பு, 1965), இதயங்கள் அழுகின்றன (நாவல், வீரகேசரி 1977),கோயிலும் சுனையும் (நாடக நூல் 1977),நடையிலே நாமூன்று நாட்கள் (குறுநாவல்).

சித்தி அமரசிங்கத்தின் ஈழத்து இலக்கியச் சோலை 1974ல் வெளியிட்ட **ஒற்றைப் பனை** சிறுகதைத் தொகுப்பில் இவரது கதை சேர்க்கப்பட்டுள்ளது.

1998 ல் பிரான்ஸ் அனைத்துலக வானொலி நடத்திய நாடக எழுத்துப் போட்டியில் இவருக்கு முதற் பரிசு (50000/-) கிடைத்தது.

இளம் எழுத்தாளர்களுக்கு மிகுந்தஉற்சாகம் அளிப்பதில் முதன்மையானவர். தன்னை எழுத்துலகுக்கு ஆற்றுப்படுத்தியவர் ஆரையூர் அமரன் என எங்கோ ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.

**"மலையகத்திலிருந்த காலத்தில் தனக்கு எழுதுவதற்கான**

உற்சாகத்தை தந்தவர் தா.பி.” என தெணியான் குறிப்பிட்டதை வாசித்திருக்கிறேன்.

அரச விருது, மாகாண விருது, பிரதேச விருது என பல விருதுகள் பெற்றவர்.2003 ம் ஆண்டு சிலுமின சிங்கள நாளேட்டில் பிரபல சிங்கள எழுத்தாளர் கமல் பெரேரா இவரைப் பற்றி சிறப்பான கட்டுரை ஒன்றை எழுதி இருக்கிறார். ஞானம் சஞ்சிகை அட்டைப் பட அதிதியாக இவரைக் கௌரவித்து, கவிஞர் ஞானராசாவின் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

நினைப்பும் நடப்பும்

> இக்கதை சுதந்திரனில் 25.07.1965 அன்று பிரசுரமாகியது.
>
> வார விடுமுறையில் வீடு வந்திருந்த நான் ஒரு நோயாளியைப் பார்ப்பதற்காக ஊரிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்றேன்.
>
> எனத் தொடங்கி எனது மனங்கனிந்த ஆசிகளை சமர்ப்பித்து விட்டு மாடிப்படிகளால் இறங்கினேன்.
>
> என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

இது உள்ளூராட்சி தேர்தல் காலம். எப்போதோ ஒரு காலம் திருகோணமலை நகரசபை உப தலைவராக இவர் இருந்திருக்கிறார்.

அந்த நினைவோடும், பல தமிழ்த் தினப் போட்டிகளில் அவரோடு நடுவராகப் பணியாற்றிய நினைவுகளோடும்.

தா.பி.க்கு அஞ்சலி செலுத்துகிறேன்.

**6 February 2018**

பிடித்த சிறுகதை 16

இவர் மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்தவர். நாடறிந்த எழுத்தாளர். நிர்வாக சேவை அதிகாரி. இவரது சிறுகதைத் தொகுதி ஒன்றின் விமர்சனக்கூட்டத்தில் எனது காட்டமான விமர்சனம் இடம்பெற்றது. அப்போது அவர் மாகாண சபையின் சிரேஸ்ட உதவிச் செயலாளராக இருந்தார். நான் மாகாணசபைப் பதிப்பகத் திணைக்களத்தில் பதிப்பாசிரியர். பற்குணத்தாரின் மனித வள மேம்பட்டு நிலைய மேல் மாடியில் நடந்த அந்த நிகழ்வில் எனது பேச்சு இவ்வாறாக அமைந்தது.

**"ஒரு உண்மையை இங்கே பகிரங்கமாக கூறுகிறேன். அந்தக் காலத்தில் நாம் எழுத்துத் துறைக்கு வந்த புதிது. தேசியப் பத்திரிகைகளில் இவரது நெடுங்கதைகள் முழுப் பக்கத்தில் பிரசுரமாகும். அப்போது நாம் ஒரு முடிவெடுத்தோம் நாம் எழுத்துத் துறையில் முன்னேற வேண்டுமென்றால். பத்திரிகையில் வரும் இவரது கதைகளை வாசிப்பதில்லை. இப்படி நாம் வாசிக்காது விட்ட கதைகளே இதில் அடங்கி உள்ளன. "**

அவர் அதிகாரி, அவரின் கீழ் கடமை புரியும் ஊழியன் நான். எனது விமர்சனத்தை கூற நான் அச்சப்படவில்லை. அன்றும் இன்றும் என் சுபாவம் அதுதான். இதன் பிறகு மட்டக்களப்பில் நடக்கும் இலக்கியக் கூட்டங்களில் பார்வையாளர்களாக இருக்கும் என் நண்பர்கள் இவர் பேசும் போது அவசியம் நந்தினி சேவியரை இங்கே கூப்பிட வேண்டும் என்று பேசிக் கொள்வார்களாம்.

**அன்புமணி இரா.நாகலிங்கம்**

மட்டக்களப்பு மண்ணுக்கு தனது இலக்கிய பணியாலும் அரச துறைப்பணியாலும் பெருமை சேர்த்தவர். 1954 ல் கல்கி இதழில் **கிராம்போன் காதல்** எனும் சிறுகதையுடன் எழுதத் தொடங்கி, **வீரகேசரி, தினகரன்,சிந்தாமணி, சுதந்திரன்** ஆகியவற்றில் தொடர்ந்து எழுதினார். கிட்டத்தட்ட 500 கதைகள் மட்டில் இவர் எழுதியிருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது. ஆரம்பத்திலிருந்து இந்திய ஜனரஞ்சக எழுத்துக்களின் தாக்கத்துக்குட்பட்ட இவர் இறுதிவரை அதிலிருந்து மீளவே இல்லை.

**இவரது நூல்கள்**

> இல்லத்தரசிகள்(சிறுகதைகள்), வரலாற்றுச் சுவடுகள் (சிறுகதைகள்), ஒரு தந்தையின் கதை (நாவல்), ஒரு மகளின் கதை(குறுநாவல்), எட்டுத் தொகை பத்துப் பாட்டு (கட்டுரை), பதின்எண் கீழ்க்கணக்கு (கட்டுரை).

அதோடு வானொலி நாடகங்கள், நாடகங்கள், விமர்சனங்கள், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்.

அன்பு வெளியீடாக பிறர் எழுதிய 6 நூல்களைப் பதிப்பித்துள்ளார். எல்லாவற்றையும் மேவிய இவரது பணி 1970 ல் இருந்து1972 வரை மட்டக்களப்பிலிருந்து **மலர்** சஞ்சிகையைக்கொணர்ந்ததாகும்.

செ.யோகநாதனின் **ஒளி நமக்கு வேண்டும்** முல்லைமணியின் **அரசிகள்அழுவதில்லை** அருள்.சுப்பிரமணியத்தின் **அவர்களுக்கு வயது வந்து விட்டது** (சாகித்திய பரிசு பெற்ற நாவல்) என்பன இவரால் **மலர்** வெளியீடாகக் கொண்டு வரப்பட்ட நூல்களே.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களை இணைக்கும் இலக்கியப்பாலமாகவும். இன்று பிரபலமாக இருக்கும் பல படைப்பாளரை **மலர்** சஞ்சிகை மூலம் வெளிக்கொணர்ந்தவருமான இவர் 2014ல் காலமாகினார்.

ஆரம்பத்தில் நான் எழுதிய இவரது **இல்லத்தரசிகள்** தொகுதியின் காட்டமான விமர்சனத்தின் பின்பும் என்மீது அவர் பாரபட்சம் காட்டவில்லை என்பதை நான் வெளிப்படுத்தியே ஆகவேண்டும். ஆம் அவர் ஒரு நல்ல மனிதர்.

**இதயக் குரல்**

**22/03/64ல் சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமான கதை இது.**

**இவர் எழுதிய ஏனைய கதைகளில் சற்று வித்தியாசமான கதை. டாக்டராக வேண்டும் எனும் விருப்புடைய ஒருவன் தவிர்க்க முடியாது எழுதுவினைஞன் ஆகி திருமண பந்தத்தில் இணைய முயலும் சம்பவங்கள்தான் இதயக் குமுறல்.**

**செல்லத்தம்பி யோசித்தான்.யோசிக்க,யோசிக்க. தன்மேலேயே அவனுக்கு ஆத்திரமாக வந்தது.**

**என ஆரம்பித்து.**

**சீதாவின் பிரார்த்தனை பலித்தது. கடைசிவரை சீதாவின் தியாகத்தை செல்லத்தம்பி அறிந்து கொள்ளவேயில்லை.**

**என்று முடியும் இக் கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**8 February 2018**

பிடித்த சிறுகதை 17

**"கதை ஏதாவது எழுதினால் என்னிடம் காட்டுத் திருத்தித் தருகிறேன்"**

அவர் எங்களின் கட்சியை சேர்ந்தவர்தான். எனக்குபிடித்த எழுத்தாளரும்தான். ஏலவே வாசகர் மத்தியில் நான் அறியப்பட்டிருந்தேன். **தாயகம்** முதலாவது இதழில் அவரது கதையும் எனது கதையும் பிரசுரமாகி இருந்தது.

இந்த நிலையில்தான் அவரது அந்தக் கூற்று. நான் இளம் எழுத்தாளன்தான். ஆயினும் எனக்கு அக் கூற்று மனக் கஷ்டத்தை தந்தது. நான் அவரிடம் எனது கதைகளைக் கொடுத்து செப்பனிடவேண்டிய அவசியம் பின்நாட்களில் எனக்கு ஏற்படவில்லை. இருவரிடமும் ஒரு ஒற்றுமை இருந்தது. அது குறைவாக எழுதுதல்.

இக்கதை பலராலும் சிலாகிக்கப்பட்டது மட்டுமல்ல கல்வி அமைச்சின் பாடப் புத்தகத்தில் சேர்க்கப் பட்டுமுள்ளது.

**என்.கே.ரகுநாதன்**

முற்போக்கு அணியைச் சேர்ந்த இவர் வடமராட்சியின் வராத்துப்பளையைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியர்.

1951 ல் இந்தியாவிலிருந்து வந்த **பொன்னி** இதழில் **முந்திவிட்டாள்** என்னும் கதையுடன் எழுத்துலகுக்கு வந்தவர் **எழிலன் ,வெண்ணிலா ,துன்பச்சுழல், வரையண்ணல்** என்பன இவரது புனைபெயர்கள்.

**ஈழகேசரி,பொன்னி,சுதந்திரன்,தினகரன்,வீரகேசரி,தாயகம்** முதலியவற்றில் எழுதியவர்.

சாதியமைப்புக்கு எதிரான **கந்தன் கருணை** நாடகத்தின் மூலக் கதை இவருடையதே.ஆண்டகைகளின் சதியை அம்பலப் படுத்தும் மகாபாரத ஏகலைவனின் கதையை **போர்வை** எனும் முற்போக்குப் பார்வையிலான கதையாக மறுவாக்கம் செய்துள்ளார். இக்கதை நாடகமாக மேடை கண்டிருக்கிறது.

**இவரது நூல்கள்:**

நிலவிலே பேசுவோம்(சிறுகதைகள், 1962), தசமங்கலம் (சிறுகதைகள், 1996, சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது). ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி (தன் வரலாற்று நாவல், இரண்டு பதிப்புகள், குமரன் பதிப்பகம், 2004, கறுப்புப் பிரதிகள், உயிர்மெய், 2014).

தோழராக இருந்தாலும் ரகுநாதன் வாத்தியார் என எம்மால் அழைக்கப் பட்ட இவர் யாழ்ப்பாணக் கவிராயர்பசுபதியின் மைத்துனர். இவரது சகோதரியைத் தான் அவர் மணம் முடித்திருந்தார்.

சாதியமைப்பு மிகத் தலை விரித்தாடிய அக்காலத்தில் (இப்போதும்தான்) முற்போக்குச் சிந்தனையுடன் புரட்சிகரமான கலப்புத் திருமணத்தை துணிச்சலோடு செய்தவர்.

ரகுநாதன் வாத்தியாரின் இக்கதையும் **நெருப்பு** கதையும் பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இன்னொரு கதையான **குடையும்** ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

நோய் வாய்ப்பட்டுள்ள நிலையில் கனடாவில் சமீபத்தில் காலமாகினார்.

**வெளியே நல்ல நிலவு (நிலவிலே பேசுவோம்)**

19/08/1951 ல் சுதந்திரனில் எழிலன் எனும் புனைப் பெயரில் இக்கதை எழுதப்பட்டது. சில முற்போக்கு விரோதிகளால் இக்கதையில் வரும் கனவான் பேராசிரியர் கைலாசபதி என இட்டுக்கட்டப்பட்ட கதை வெளிவந்த ஆண்டு குறித்தும் , கைலாசபதியின் மாணவப் பருவம் குறித்த செய்தியாலும் பொய்யாக்கப் பட்டது.

இவரது சிறுகதைத் தொகுப்பின் தலைப்பு அ.ந.கந்தசாமியால் நிலவிலே பேசுவோம் என மாற்றப்பட்டு, 1962ல் இவரது தொகுதிக்குச் சூட்டப்பட்டது.

மாலையிலே மது ஒழிப்புக் கூட்டம் நடை பெற்றது

என ஆரம்பித்து

அந்தக்காட்சி அவருக்குப் படிப்பினை

என முடியும் இக்கதை இப்போது பலருக்குத் தெரிந்த கதை. இதனை பாடப் புத்தகத்திலும், அவரது சிறுகதை தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.

**9 February 2018**

பிடித்த சிறுகதை 18

எமது கட்சியின் மூத்த உறுப்பினர். மா.ஓ வாதி. தீ.ஓ.வெகுஜன இயக்கப் போராளி.பேச்சாளன், எழுத்தாளன். இன்னும் பலதை இவர்பற்றி என்னால் எழுத முடியும்.முக்கிய செய்தி அவர் எனது உறவினர்.

ஓரே கொள்கை ஓரே கட்சியினராக இருந்தாலும் விமர்சனம் சுயவிமர்சனம் செய்வதில் நான் பின்வாங்குவதில்லை.

வீகேசரி வெளியிட்ட இவருடைய நாவல் வெளியீட்டு விழா யாழ்/ றிம்மர் மண்டபத்தில் நடைபெற இருந்தது. அந் நிகழ்வில் நானும் ஒரு பேச்சாளன்.

அழைப்பிதழ் கொடுப்பதற்காக அவரது மோட்டார் சைக்கிளில் பின் சீற்றில் உட்கார்ந்து சென்று கனக செந்திநாதன் உட்பட பலருக்கு அழைப்பைக் கொடுத்தேன். மாலை விமர்சனக் கூட்டத்தில் என் விமர்சனம் சூடாக இருந்தது.நான் இப்படியாக பேச்சை ஆரம்பித்தேன்.

**"இவர் யார் ? இவரது கொள்கை என்ன?வீரகேசரி**

**நிறுவனம் யாது? அவர்களது கொள்கை என்ன? அவர்கள் இந்நாவலை வெளியிட்டுள்ளார்கள். அப்படியாயின் அவர்கள் இவரது கொள்கைக்கு மாறி இருக்க வேண்டும்.அல்லது அவர்களின் கொள்கைக்கு இவர் மாறி இருக்கவேண்டும். வீரகேசரி நிறுவனம் மாறவில்லை, மாறாது என்பது எமக்குத் தெரியும் அப்படியாயின்...........?"**

எனது விமர்சனம் இப்படி அமைந்தமைக்கு காரணம் நாம் ஒரே அணியைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான்.

**கே.டானியல்**

ஆனைக்கோட்டையில் பிறந்து, தல்லாலையில் வாழ்ந்து. தஞ்சாவூரில் மரணித்த டானியல் இன்று தமிழின் முதன்மையான நாவலாசிரியராக போற்றப்படுகிறார். பல்வேறு விமர்சனங்கள் இவர் மீது வைக்கப்படுகின்றன.

தமிழகத்தில் இவர் தலித்திலக்கியப் பிதாமகராகக் கொண்டாடப் படுகிறார். அமரர் ஜீவானந்தத்தின் ஆகர்சத்தால் இடது சாரியாக மாறியவர். ஆறாம் ஆண்டு மட்டுமே கற்ற இவர் சலவை, சோடா வியாபாரம், மீன் வியாபாரம் போன்ற பல தொழில்களைச் செய்து இறுதியில் கராஜ் ஒன்றின் சொந்தக்காரர் ஆனவர். சாதி ஒழிப்பு போராட்டக் காலத்தில் இக்கராஜ்சின் பங்களிப்பு பரகசியமானது. **புரட்சிதாசன்** இவரது புனைப் பெயர். மூத்தமகன் பெயரும் புரட்சிதாசனே.

**இவரது நூல்கள்:**

டானியல் கதைகள்(சிறுகதைகள்), உலகங்கள் வெல்லப்படுகின்றன(சாகித்திய பரிசுச் சிறுகதைத் தொகுதி), பஞ்சமர் (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது 1ம்பாகம். பிறகு 2ம்பாகமும் இணைந்து வந்தது),போராளிகள் காத்திருக்கின்றனர்,கோவிந்தன், அடிமைகள,தண்ணீர் (சாகித்தியபரிசு), கானல், பஞ்சகோணங்கள் (வ.கி மாகாண சிறந்த நாவல் விருது), நாவல்களும் டானியல் குறுநாவல்கள், என்கதை, டானியல் கடிதங்கள், அடிமை

விலங்கறுப்போம் (ஆரம்பகாலக் கட்டுரை) அச்சில் வெளிவந்துள்ளன. சா நிழல் எனும் நாவலும் சொக்கட்டான் எனும் நாவலும் வெளி வரவிருக்கின்றன. இவரது நாவல்கள் தனித்தனியாக தமிழகத்தில் மீள்பிரசுரமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவரது ஆறு நாவல்கள் அடங்கிய முழுத்தொகுப்பொன்றை அடையாளம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. சுதந்திரன் சிறுகதைப் போட்டியில் **அமரகாவியம்** எனும் முதற் பரிசு பெற்ற கதையின் மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமாகியவர். ஈழகேசரிப் பண்ணையில் வளர்ந்தவர்

தினகரன்,வீரகேசரி, தாமரை,சரஸ்வதி,சிரித்திரன் போன்ற வற்றில் எழுதியவர்.சனாதனிகளால் இழிசினர் வழக்கில் எழுதுபவர் என தூற்றப்பட்டவர்.

இவரது முதல் நாவல் **நெடுந்தூரம்.** சில்லையூரால் டானியலுக்கும் நாவலுக்கும் நெடுந்தூரம் எனும் சினேகித கிண்டலை முறியடித்து நாவலாசிரியராக பரிணமித்தவர். இவரது சிறுகதைகள் ஆங்கில,ருஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இவரது **கானல்** நாவல் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.பத்தாம் ஆண்டு தமிழ் பாடப்புத்தகத்தில் வெளியிடப்பட்ட என் பற்றிய **நந்தினி சேவியர் சிறுகதைகள்** என்ற கவிஞர் இ. முருகையன் கட்டுரை வந்த அதே பக்கத்தில் இவரின் **தக்காளிப் பழங்கள்** சிறுகதையே முன்னர் இடம் பெற்றிருந்தது.

2011 ல் வெளிவந்த **நெல்லிமரப்பள்ளிக்கூடம்** தொகுதிக்கு அவ்வாண்டு வெளிவந்த **கொடகே விருது டானியல்** பெயரிலேயே எனக்கு வழங்கப்பட்டது.

நாங்கள் இவரை எமக்குள் **அப்பு** என்றே இரகசியமாக அழைத்துக் கொள்வோம். கிராமிய மக்களின் மனம் கவர்ந்த பேச்சாளன் அப்பு. அவர்களின் மொழியில் அழகாக பேசும் வல்லமை அவருக்கு இருந்தது. அப்புவின் உதவியினால்தான் புதுவை இரத்தினதுரையின் முதல் நூலான **வானம் சிவக்கிறது**

கவிதைத் தொகுதி வெளிவந்தது.

கருத்து முரண்பாடுகள் இருந்தபோதும் முற்போக்குக்கு எதிர் அணியில் இருந்தவர்களும் இவரது நண்பர்களே.

இறுதிவரை தோழர் சண்ணின் அணியில் தளம்பாது இருந்த இவர் பற்றி நிறைய எழுதமுடியும். ஆயினும் நீளம் கருதி சி.பற்குணம் அவர்களின் கூற்றுடன் இப்பத்தியை முடிக்கிறேன்.

டானியலை சாதி சமூக விரோதிகள் யாரேனும் அடிக்கலாம் அதை அவர் அமைதியாக வாங்கிக் கொள்வார்.ஆனால் அடுத்தநாள் அடித்த அவனுக்கு அடித்த அந்தக் கை இருக்காது. அதுதான் டானியல்.

அதல பாதாளம்

**கொடும்பாவி, வள்ளி, தண்ணீர், உறவும் நிழலும், வீராங்கனைகளில் ஒருத்தி, போன்ற பல கதைகள் இருக்க. 22/03/1955 சுதந்திரனில் வெளிவந்த இக்கதை எனக்குப் பிடித்ததற்கான காரணம் இவரது ஆரம்பத்தை நான் அறிந்து கொண்டமையே.**

**இப்படி இருந்தவர் எப்படி மாறிய வளர்ச்சி**

**எத்தனைவிதமான உணர்வுகள்**

**என அதலபாதாளம் கதை தொடங்கி**

**வெளிப்பிரதேசத்தில் அகப்பட்ட முயலைப் போல பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான்.**

**என முடியும் (இவரின் தொகுப்புகள் எதிலும் வெளிவராத) இக்கதையின் மூலம் ஆரம்ப கால டானியலை சுதந்திரன் கதைகள் தொகுப்புமூலம் அறியுங்கள் நண்பர்களே.**

பிடித்த சிறுகதை 19

எழுதிய கதை ஒன்றிற்காக புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்கு அழைக்கப் பட்டு தொழில் நுட்பக் கல்லூரியில் அச்சத்துடன் என்னை மாணவர்களும் விரிவுரையாளர்களும் நோக்கப்பட்டுகொண்டிருந்த நேரம்.

69/70 கழக ஆண்டு. அக்காலத்தில் இவர் தமிழக சஞ்சிகை ஒன்றில் எழுதிய " இலங்கைக் கடிதம் " ஒன்றினால் நிலைமை மாறி கல்லூரியில் நான் பரவலாக பாராட்டப் பட்டேன்.

ஈழநாடு நாவல் போட்டியில் நான் இரண்டாம் பரிசு பெற்ற விபரம்தான் அது.

**சிற்பி சி. சிவசரவணபவன்**

இந்தப் பெயரில் தமிழ் நாடு பொள்ளாச்சியிலும் ஒரு கவிஞர் திறனாய்வாளர் இருந்தார். அவர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

இவர் காரைநகரில் பிறந்து கந்தரோடையில் வாழ்ந்தவர். 1952 ல் **மலர்ந்த காதல்** என்னும் கதையை சுதந்திரனில் எழுதி இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியவர். 1955 ல் உதயம்

சிறுகதை போட்டியில் முதற் பரிசு பெற்றவர். சிறுகதை, நாவலாசிரியராக விளங்கிய இவர் ஒரு இதழாசிரியரும் கூட.

1958-1966 வரை இலங்கையில் வெளிவந்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பல படைப்பாளிகளை உருவாக்கிய கலைச்செல்வி சஞ்சிகையின் ஆசிரியர் இவர்.

**கலைச்செல்வி** நடத்திய நாவல் போட்டியில் **மு.தளையசிங்கம்** எழுதிய **ஒருதனிவீடு** நாவல் முதற் பரிசு பெற்றது இரண்டாம் பரிசு பெற்றவர் செ.யோகநாதன்.

1958 ல் தொகுப்பாசிரியராக இருந்து ஈழத்தின் பன்னிரண்டு எழுத்தாளர்களின் கதைகளை **ஈழத்துச் சிறுகதைகள்** என்ற பெயரில் வெளியிட்டவர் இவர்.

**இவரது நூல்கள்**

நிலவும் நினைவும்(சிறுகதைகள்), சத்திய தரிசனம் (சிறுகதைகள் ), நினைவுகள் மடிவதில்லை (சிறுகதைகள்- இலங்கை இலக்கியப் பேரவை விருது பெற்றது, 2008), உனக்காக கண்ணே (நாவல்).

2011இல் எழுத்தாளர் ஊக்குவிப்புமையம் தமிழியல் விருதை இவருக்கு வழங்கியது.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் உயர் கல்விகற்றவர். மலையகத்தில் ஆசிரியராக இருந்து யாழ் / வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர்.

**தினகரன் ,வீரகேசரி,தினபதி,சிந்தாமணி,சுதந்திரன் கலைக்கண்,முரசொலி, ஈழநாதம், ஈழமுரசு** போன்ற இலங்கை இதழ்களிலும். **கலைமகள், மஞ்சரி, தீபம்** போன்ற தமிழக ஏடுகளிலும் எழுதியவர்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரிசு பெற்ற விபரம் இவர் **யாழ்வாசி** எனும் பெயரில் தீபத்தில் எழுதிய இலங்கைக் கடிதத்திலாகும்.

2015 ம் ஆண்டு தனது 82 ஆவது வயதில் காலமான இவரை முற்போக்கான சிந்தனையும் நடத்தையும் உள்ளவர் என நினைவில் கொள்கிறார்கள்.

இவரோடு நெருங்கிப் பழகாத போதும் எனது நிலைப்படும் இதுவேதான்,

பிறந்தமண், நிறைவு, அப்பன் அருள், மதிப்பு, நிபந்தனை, நிலவும் நினைப்பும், சத்திய தரிசனம் போன்ற நல்ல சிறுகதைகளின் ஆசிரியர் இவர்.

ஒரு பாத்திரம் பேசுகிறதோ'

1981 ல் வீரகேசரியில் பிரசுரமான கதை இது.

பிரச்சினை ஒன்றினால் மனிதத் தன்மையை இழந்து நாயினும் கடையனாக அலைந்து தற்கொலை முடிவு வரை சென்ற ஒருவர் தனது கதை ஒன்றை படித்து மனிதமாணிக்கமாக மாறியதை அறிந்து மகிழும் ஒரு எழுத்தாளரைப் பற்றிய கதை.

அழகு அரும்பவிழ்க்கும் அற்புதமான் காலைப்பொழுது

என ஆரம்பித்து

சுந்தரமூர்த்தி சக்திவேல் ஆகிக் கொண்டிருக்கிறார்.

என முடியும் இக்கதையை இவரது நினைவுகள் மடிவதில்லை தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**19 February 2018**

,

## பிடித்த சிறுகதை 20

1976ம் ஆண்டு நல்லூர் சாதனா பாடசாலையில் சங்கிலி அரசன் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் **மக்கள் இலக்கிய** மாநாடொன்றை முழுநாள் நிகழ்வாக நல்லை அமிழ்தன் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

கதையரங்கு, கவியரங்கு, உரையரங்கு, நாடக கலை நிகழ்வுகள் என்பன சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

போடுபுள்ளடி (ஐயா மேடைக்கு வருகிறார்). போன்ற நாடகங்கள் அன்று மேடையேறின. கவியரங்குக்குத் தலைமை சில்லையூர். உரையரங்குக்குத் தலைமை **பேரா.க.கைலாசபதி. நான் ஏன் எழுதுகிறேன்?** என்ற தலைப்பில் (இத்தலைப்பை வழங்கியவர் செ.கணேசலிங்கன்). **என்.கே.ரகுநாதன் செ.யோகநாதன். நல்லைஅமிழ்தன்** நான் உட்பட சிலர் பேசினோம். எங்களில் ஒருவராக இவர். அழகாகப் பேசிய இவரை நான் முன்னர் அறிந்திருந்தாலும் அன்று தான் நேரில் கண்டு கொண்டேன்.

தலைமை தாங்கிய கைலாசபதி அவர்கள் இவரை சிறப்பாகவும்,பெருமையாகவும் குறிப்பிட்டு அறிமுகப் படுத்தினார். என் மதிப்பில் இவர் ஒருபடி மேலும்

உயர்ந்தார்.

**சொக்கன்- கந்தசாமி சொக்கலிங்கம்**

ஆவரங்காலில் பிறந்து நல்லூர் நாயன் மார்கட்டில் வாழ்ந்து அங்கேயே 2004 இல் மரணித்தவர். சாதாரண தமிழாசிரியராய் இருந்து. வித்துவான், இளமாணி முதுமாணி பட்டங்களோடு கௌரவ கலாநிதிப் பட்டமும் பெற்ற ஒரு கல்வியியலாளர். சிறுகதை, நாவல், நாடகம், பாடநூல்கள் என பல நூல்களை எழுதிய ஒரு சாதனையாளர்.

**ஆராவமுதன், அடியவன், கன்றுக்குட்டி** போன்ற இருபதுக்கு மேற்பட்ட புனைபெயர்களில் இவர் எழுதியிருக்கிறார். 1944 ல் **தியாகம்** எனும் வீரகேசரியில் எழுதிய கதை ஒன்றுடன் எழுத்துலகுக்கு வந்தவர். 1946 ம் ஆண்டு மலையகத்தில் இருந்து வெளிவந்த **மின்ஒளி** நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது **கடைசி ஆசை** எனும் கதை முதற் பரிசு பெற்றது.

**சுதந்திரன்,மறுமலர்ச்சி, கலைச்செல்வி மல்லிகை** என பல வெளியீடுகளில் எழுதியிருக்கிறார். இவரது எழுத்துப்பணி ஒரு நீண்டகால வரலாற்றுக்குரியது.

**ஈழகேசரி காலம், மறுமலர்ச்சிக் காலம், முற்போக்குக் காலம், இன எழுச்சிக் காலம்** என வகைப் படுத்தும் காலங்களில் எல்லாம் இவர் எழுதி இருக்கிறார்.

இவரது சிறுகதைகளில் **குப்பையிலே மாணிக்கம்,வேதாந்தி, மாணிக்கம், குட்டைநாய் ,தீர்ப்பு, தபாற்கார சாமியார். குரு, கடல்** என்பன குறிப்பிடத்தக்கன. 200 க்கு மேற்பட்ட கதைகளை இவர் எழுதியிருப்பதாக ஒரு குறிப்புக் கூறுகிறது.

ஈழத்தில் பிரபலமாக இருந்த, இப்போது இருக்கின்ற பல எழுத்தாளர்களுக்கு மார்க்சிய ஞான குருவாக விளங்கிய த. இராஜகோபால் (கனடாவில் வாழும் ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களே தன்னை நெறிப்படுத்தியதாக இவர் பல இடங்களில் கூறியிருக்கிறார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் அங்கத்தவராக இருந்திருக்கிறார், மரபு தெரிந்தவராக இருந்தும் " **மரபு தேங்கிய**

குட்டையல்ல " எனக் கூறி மரபு எதிர்ப்புக் கட்டுரைகளை தினகரனில் எழுதியவர். மரபுக்கு எதிரான கவிதைச் சமர் நிகழ்வில் (மரபுக்கு சாதகமாக முருகையன், மரபுக்கு எதிராக சில்லையூர் ) தலைமை தாங்கியவர். சிறந்த பேச்சாளன்.

**இவரது அச்சில் வந்த நூல்கள்**

கடல்(1972ல் சா. மண்டலப் பரிசு பெற்றது), சீதா, செல்லும் வழி இருட்டு, சலதி, ஞானக்கவிஞன், நாடகம், மாணவர் நூல்கள் என இன்னும் சிலது உண்டு. கவிதைகள்-04, சிறுகதை-01, நாவல்கள்.04

ஒரு முக்கிய செய்தி.

புகழ் பெற்ற திரைப்பட இயக்குனர் **சத்தியஜித் ரோய்** அவர்களின் **பக்திக் சந்த்** சிறுவர் நாவலை ஆங்கிலம் வழி தமிழில் (1986) தந்தவர் இவர்.

**குட்டை நாய்**

**இந்தக் கதை 1955 ல் ஈழகேசரியில் பிரசுரமாகியது. இதனை நான் ஈழகேசரி கதைகள் தொகுதியை பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட காலத்தில் பதிப்பகத் திணைக்களத்தில் கடமையாற்றிய போது போட்டோ பிரதியாக இக்கதையை வாசித்தேன்.**

**எனக்குப் பிடித்த இவரின் கதைகளில் இதுவும் ஒன்று.**

**நான் குறிப்பிட்ட இந்தக் கதையின்(குட்டை நாய்) தொடக்கமும் முடிவும் என் நினைவில் இல்லை ஆயினும் கீழ்வரும் ஒரு முக்கிய குறிப்பை உங்களுக்குத் தருகிறேன்**

**"ஆனந்தமும் ஒளியும் போட்டியிட்டு ஆக்கிரமிக்கும் சுவர்க்க உலகத்தில் ஒரு ஆண் நாயையும், அதன் காதலியையும் சந்திக்கச் செய்து பெண் நாயின் வாயால் மனிதர்களின் இரக்கத்தன்மையையும், ஆண் நாயின் வாயால் அவர்களின் இராக்கதத் தன்மையையும்**

காணும்படி படைத்த அந்தச் சிறுகதை இருக்கிறதே, அது ஈழநாட்டின் முதல்தரமானதொன்று என்பதை யாரும் மறுக்க முடியாது." கரவைக்கவி கந்தப்பனார்.(கனக செந்திநாதன்.) ஈழகேசரி 21/08/1955.

இந்த பாராட்டுரையை அதுவும் 55ம் ஆண்டில் பெற்றுக்கொண்ட இக்கதை பற்றிக் கூற வேறு என்ன இருக்கிறது. இக்கதையை வாசியுங்கள் நண்பர்களே.

**13 February 2018**

பிடித்த சிறுகதை 21

இவர் ஆங்கிலத்தில் எழுதியமையால் அதிகமாக எம்மால் அறியப்படாமல் இருந்தவர். இவரது ஒரு நாவலின் பெயருடன் நானும் பொருந்திப்போனேன். சிறுகதைகள் எழுதியதை விட நாவலிலும் ,கவிதையிலும் கூடுதல் ஈடுபாடு காட்டியவர்.மலையக மக்களின் அவல வாழ்வை தமிழுக்கு அப்பால் அறியச்செய்தவர்.

மொழிபெயர்ப்பின் மூலம் இக்கதையை நான் படித்தேன்.

துரைவி வெளியிட்ட மலையக சிறுகதைகள் அடங்கிய இரண்டாம் தொகுதிக்கு இந்தப் பெயரே வைக்கப்பட்டுள்ளது.

**சி.வி. வேலுப்பிள்ளை**

**கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை.**

1914 இல் பூண்டுலோயா மடகும்புறவில் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை மலையகத்திலும் (நுவரெலியா ) பின்னர் கொழும்பு நாலந்தாவிலும் கற்றார்.

முப்பதுகளிலேயே எழுத்துலகில் பிரவேசித்தவர். இலங்கையின் முதல் பாரளுமன்றத்திற்கு 1948 இல் தலவாக்கொல்லை பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

1954 ல் வெளிவந்த இவரது **IN CEYLONS TEA GARDENS** என்னும் கவிதை நூல் **சக்தி பாலையா** அவர்களினால் **தேயிலைத் தோட்டத்திலே** என தமிழாக்கப்பட்டுள்ளது. இந் நூல் ரஷ்சிய மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளது.

**கல்கி** இவரை இக்கவிதை நூலுக்காக இலங்கையின் **தாகூர்** என பாராட்டி எழுதி இருந்தது.

**வீடற்றவன், எல்லைப்புறம் பார்வதி** என்பன இவர் எழுதிய (ஆங்கில) நாவல்களாகும். **வீடற்றவன்** தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**பத்மாஜினி(1931) வழிப்போக்கன் (1948)**என்பன மலையகம் சாராத ஆங்கில நாவல்களாகும். இவர் தமிழில் எழுதிய ஒரே நாவல் **இனிப்படமாட்டேன்.**

ஆசிரியராக பாராளுமன்ற உறுப்பினராக, தொழிற்சங்கவாதியாக இருந்து 1984 ல் மறைந்த இவரது படத்தை 1979 மே.**மல்லிகை** அட்டைப் படமாக்கி கௌரவித்துள்ளது. 1950 களில் **கதை** என்று ஓரிரு இதழ்கள் வெளிவந்த சஞ்சிகை இவரால் வெளியிடப்பட்டதாக ஒரு குறிப்புக் கூறுகிறது.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட நாவல் இருக்கிறதே. அது **வீடற்றவன்.** இந்தத் தலைப்புடன் நான் பொருந்திப் போவதற்கான காரணம் நானும் ஒரு **வீடற்றவன்.**

**உழைக்கப் பிறந்தவர்கள்**

**இக்கதை Born to Labour Goldern Earnigs என்ற தலைப்பில் 1959 ல் எழுதப்பட்டது.**

**இதனை உழைக்கப் பிறந்தவர்கள் என்று தமிழில் மொழி பெயர்த்தவர் பி.ஏ.செபஸ்தியன். துரைவி வெளியிட்ட மலையக சிறுகதைகள் அடங்கிய இரண்டாம்**

தொகுதிக்கு இந்தப் பெயரே வைக்கப்பட்டுள்ளது.

தேயிலை தோட்டங்களில் மச்சான், மாமன் உறவு மிகவும் நெருங்கியதொன்றாகும்

எனத் தொடங்கி.

நேரம் நடுச்சாமம் கழிந்துவிட்டது. விருந்தினர் ஒவ்வொருவராக வீடுநோக்கிச் செல்கின்றனர்.

என்று முடியும் இந்த மொழிபெயர்ப்புக் கதையை துரைவி வெளியிட்ட இதே தலைப்பிலான தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**13 February 2018**

பிடித்த சிறுகதை 22

சமீபத்தில் மறைந்த தர்மசேன பத்திராசா அவர்களினைப் பற்றிய பதிவுகளின் போது அவர் இயக்கிய ஒரே ஒரு தமிழ்ப் படமான பொன்மணியும் அதில் சிறப்பாக நடித்த இவரும் என் நினைவுகளில் அடிக்கடி வந்துகொண்டே இருப்பது தவிர்க்க இயலாதது.

பொன்மணி படத்தில் நடிப்பதற்கு இல்லை குடிப்பதற்கு (குடிப்பதாக நடிப்பதற்கு) ஒரு வாய்ப்பு வந்து நான் விரும்பாமையால் தவறிப்போனது. அது ஒன்றும் பெரிய பாத்திரமல்ல. பொன்மணி பார்த்தவர்களுக்குத் தெரியும்.

அப்படத்தில் ஒரு மதுபானசாலையில் சண்டியர்கள் குடித்தபடி கொலைத் திட்டமிடும் காட்சி. அதில் குடிப்பவர்களில் ஒருவராக நடிப்பதற்கு என்னைக் கேட்டார்கள். அப்படத்தில் சண்டியர் தலைவராக பேரா.மௌனகுரு நடித்திருந்தார். இது நண்பர்களான இளங்கோவனுக்கும் காவலூரருக்கும் மட்டுமே தெரியும்.

**நந்தி-செல்லத்துரை சிவஞானசுந்தரம்.**

இணுவிலைச் சேர்ந்தவர். வைத்திய கலாநிதி, மருத்துவ பீட விரிவுரையாளராக இருந்து, பிடாதிபதியாகி, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவவியலில் பேராசிரியராக விளங்கியவர்.

உலக சுகாதார நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பல நாடுகளுக்கு மதிப்புரையாற்றச் சென்றவர். படைப்பாற்றல் கொண்ட இவர் வானொலி,மேடை,சினிமா நடிகரும் கூட.

இவர் முதல்எழுதிய **சஞ்சலம் சந்தோசம்** குறுங்கதை வீரகேசரியில்1947ல் பிரசுரமானது.இலங்கையின் சகல பத்திரிகை சஞ்சிகைகளிலும் இவர் எழுதி இருக்கிறார்.

**நந்தி** எனும் புனைபெயரை ராஜாஜியே இவருக்கு வைத்தவர். **வி.செ.சி.,பென்சிலின், மகன்,ஜெயஹிந்த், சாஸ்த்திரி** இவரது எனைய புனை பெயர்கள்.

இவர் முற்போக்கு எழுத்தாளர் சங்க மூத்த உறுப்பினராகும்.

இவரது சிறப்பான சிறுகதைகளாக சிங்கள மருத்துவச்சி, ஊர்நம்புமா?, பதுங்குழி,கொடுமைக்கு அப்பால் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**இவரது நூல்கள்:**

நாவல்கள்.- மலைக்கொழுந்து. (மலையக நாவல்1965. சாகித்திய விருது). தங்கச்சியம்மா, நம்பிக்கைகள்( 1992 சாகித்திய விருது,இந் நாவல்1979ல் தினகரனில் தொடராகப் பிரசுரமாகியது.)

சிறுகதைகள் தொகுப்புகள்- ஊர்நம்புமா?, கண்களுக்கு அப்பால். நந்தியின் கதைகள் (லில்லி தெய்வசிகாமணி பரிசுபெற்றது.), தரிசனம்.

நாடகம்-குரங்குகள்.இதைவிட சிறுவர் நூல்கள் - 02,ஆத்மீகம்- 03

மருத்துவம் - 04, என பல புத்தகங்களை எழுதி

இருக்கிறார்.

மீண்டும் கேள்விகள் உருவாகின்றன

நாய்க்குட்டி காணாமல் போனதால் மனத்துயர் அடையும் ஒரு குடும்பஸ்த்தர்........ அவரது தேடல்கள் மகன் காணாமல் போய், ஆமி பிடித்துக் கொண்டு போனதாக அறிய நேர்ந்த ஒரு தந்தையின் துயரங்கள். இவை பற்றிக் கூறும் கதையே இது.

1999 மல்லிகை ஜனவரி இதழில் இக்கதை வெளியாகியது.

வழக்கமாக காலையில் என்னை தூக்கத்திலிருந்து எழுப்புவது லக்ஸன்தான்.....

என ஆரம்பித்து

என்னுள் இருந்த அதை விழித்துப்பேச வைத்தது லக்ஸன் தானே.

என முடியும் இக்கதையை இவரது தரிசனம் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

நிறைய மருத்துவ கட்டுரைகளும், ஆக்க இலக்கிய படைப்புகளும் வழங்கியவருமான பொன்மணி படத்தில் கதாநாயகியின் பரிதாபத்துக்குரிய தந்தையாக சிறப்பாக நடித்தவருமான நந்தி இறந்த தினம்.

04/06/2005.

**15 February 2018**

பிடித்த சிறுகதை 23

அரசியல் முரண்பாடு. ஆயினும் தேர்தல் பிரசார மேடைகளில் இவரது ஆக்கிரோசமான பேச்சுகளை செவிமடுத்திருக்கிறேன். நாம் தேர்தல் முறைக்கு எதிரானவர்கள். பரந்த வாசிப்பின் மூலம் இவரது பெயர்ப் பரிச்சயம் முன்னரே எங்களுக்கு இருந்தது. இவரை நாம் அணுகவில்லை. இவரைப் பொறுத்தவரை அன்று நாங்கள் **புதுச் சிவப்புக்கூட்டம்.**

இவர் சாகித்திய மண்டல உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதற்காக ஆசிரியர் **டி.ஏ.நைல்ஸ்** ஒழுங்கு படுத்திய பாராட்டுக் கூட்டத்தில் வதிரி கலா நிலைய முன்றலில் நானும் பேசினேன்.

யாழ்ப்பணத்தில் இருந்தாலும் எட்டியே இருந்தோம். பின்னாட்களில் இவரது கதைகளில் அநேகமானவை யாழ் நகரையும் அங்கு வாழும் விளிம்பு நிலை மக்களையும் பிரதிபலிப்பதாகவே அமைந்தன.

அந்தக்கால யாழ்ப்பாண நகர சுற்றுச் சூழலை இலக்கிய மாக்கியவர் இவர். **ஞானம் , முற்றவெளி, பாதுகை, சாலையின் திருப்பம்** என்பன பதச்சோறுகளில் சில.

**டொமினிக் ஜீவா.**

சுதந்திரனில் அறிமுகமாகி இலங்கையின் தேசியப்பத்திரிகைகளில் எல்லாம் எழுதி தமிழக சரஸ்வதி, தாமரை போன்றவற்றிலும் எழுதியவர். இவ்விரு சஞ்சிகைகளும் இவரது அட்டைப்படத்தை தாங்கி வெளிவந்திருக்கின்றன.

1960 வெளிவந்த **தண்ணீரும் கண்ணீரும்** என்னும் இவரது சிறுகதைத் தொகுப்பே முதல் முதல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூலாகும்.

கல்வியறிவு குறைந்த சாதாரண தொழிலாளியான இவர் தன் விடாமுயற்சியால் ஒரு இலக்கிய வாதியாக உயர்ந்தார்.

இவரது புனைப் பெயர் **புரட்சிமோகன்**

ஜீவானந்தம் தலைமறைவாக இலங்கையில் இருந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கொள்கைவாதியாகி தன் பெயருடன் ஜீவாவை இணைத்துக்கொண்டவர்.

**இவரது நூல்கள்**

சிறுகதை நூல்கள்: தண்ணீரும் கண்ணீரும (60),பாதுகை (62),சாலையின் திருப்பம் (67), வாழ்வின் தரிசனங்கள் (2010), டொமினிக் ஜீவா சிறுகதைகள்.

இவர் தன்னைப்பற்றிய ஒரு சுயவரலாற்று நூலையும் எழுதி இருக்கிறார். அதன் பெயர் எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் இந்த நூல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஏ.ஜே. இவரது **ஞானம்** சிறுகதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவரது சிலகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாகி உள்ளது. ருஷ்சிய மொழியிலும் இவரது கதை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இளைய தலை முறை இவரை **மல்லிகை ஜீவா** எனவே அறிந்து வைத்திருக்கிறது. காரணம் 66ம் ஆண்டு ஆரம்பித்து 48

ஆண்டுகளாக மல்லிகை சஞ்சிகையை யாழ்ப்பாணத்திலிருந்தும் பின்னர் கொழும்பிலிருந்தும் நடத்தி வந்தார்.

பல எழுத்தளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தார். அட்டைப் படங்களாக பலரைக் கௌரவப்படுத்தினார்.

**மல்லிகைப்பந்தல்** வெளியீடாகப் பல நூல்களைக் கொணர்ந்தார்.

இவரை பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன .

**NCBH** நிறுவனம் இவரது நூல்களை மீள் பிரசுரம் செய்துள்ளது.

சோவியத் யூனியன் மற்றும், முப்பெரும் நகரங்களுக்கு இலக்கியப்பயணம் மேற்கொண்டவர்.

இன நல் இணக்கத்திற்காக உழைத்தவர். தமிழ் சிங்கள எழுத்தாளர்களின் இலக்கியப் பாலமாக விளங்கியவர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினர். மாற்றுக் கருத்தாளர்களுடனும் நட்பாக இருந்தவர்.

இப்போது மல்லிகை தொடர்ந்து வெளிவராமை அவரது உடல் நிலையும் அவர் தவிர அந்தச்சஞ்சிகையை அர்ப்பணிப்போடு செய்ய வேறொருவரால் முடியாது என்பதும் பிரதான காரணமாகக் கொள்ளவேண்டும்.

கனடா இலக்கியத் தோட்டம் இரண்டாண்டுகளுக்கு முன் அவருக்கு **இயல்** விருது வழங்கி கௌரவித்துள்ளது.

**கொச்சிக்கடையும் கொட்டாஞ்சேனையும்..**

**08/05/ 1955 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**“மாத்தயா ....” டாக்டர் ராஜநாயகம் திரும்பிப் பார்த்தார்.**

**எனத் தொடங்கி**

**கொழும்பு கொழும்பு எப்படியெப்படி எல்லாமே கற்பனை பண்ணி சாகிறீர்களே இதுதான் கொழும்பிலிருக்கும்**

**கொச்சிக்கடையும் கொட்டாஞ்சேனையும்.**

**என்று முடியும் இக்கதையை அவரது டொமினிக்ஜீவா கதைகளில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவ்வளவு இவரைபற்றி எழுதுகிறேன் என்பதற்காக ஜீவா மீது மதிப்பும் அதே நேரம் கோபமும் எனக்கு இருக்கிறது என்பதையும் இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும்.

மல்லிகையில் 72ஆம் ஆண்டு வெளிவந்த கதைகளில் தேறக் கூடியதென முருகையன் அவர்களினால் ஆண்டு மலரில் பாராட்டப்பட்ட (எனது சிறுகதைத் தொகுதிக்கு பெயராக இருக்கின்ற) **அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்** கதை, ஒரு நிர்ப்பந்தம் காரணமாகவே நவம்பர் 72 இதழில் பிரசுரிக்கப்பட்டது.

ஆயினும் **செங்கைய ஆழியான்** தொகுத்த **மல்லிகை சிறுகதைகள்** தொகுப்பில் (இரண்டு தொகுப்புகள்) அந்த என் கதை சேர்க்கப்படவில்லை.

ஏன்.?

எதிரணியினன் என்ற கோபமா.?

சத்தியமாகச் சொல்கிறேன் என்னை ஜீவாவுக்கு இன்றுவரை அடையாளம் தெரியாது. நான் அவரை சந்தித்ததும் மிகக் குறைவு. ஆயினும் 2007 ஒக்டோபர் மாத மல்லிகை அட்டையில் எனது படத்தை அவர் வெளியிட்டார்.

அதற்கு நான் நன்றி சொல்லித்தானாக வேண்டும் அல்லவா?

**16 February 2018**

பிடித்த சிறுகதை 24

இவர் ஒரு அசுர எழுத்தாளர். 07சிறுகதைத் தொகுதிகள். 40 க்கு மேற்பட்ட நாவல்கள். 15 கட்டுரைத் தொகுதிகள் என பல நூல்களைத் தந்தவர்.

குமரன் அச்சகம், குமரன் பதிப்பகம் ஆகியவற்றின் ஸ்தாபகர். இடதுசாரி, மா.ஓ. வாதி. தனது நூல்கள் மாத்திரமல்ல பிற எழுத்தாளர்களின் நூல்களையும் பதிப்பிக்க உதவியவர்.

இவர் கட்சியின் உறுப்பினராக இருந்தவரல்ல. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து 73ல் விலக்கப்பட்ட நால்வரில் இவரும் ஒருவர். மற்றையவர்கள் டானியல், ரகுநாதன்,சில்லையூர்.

பிரச்சார எழுத்தாளர் என்று கலைவாதிகளால் விமர்சிக்கப் பட்டவர்.

பின் நாட்களில் இவர்எழுதிய நாவல்களுக்காக எம்மால் விமர்சிக்கப்பட்டவர்.

**செ.கணேசலிங்கன்**

உரும்பிராயைச் சேர்ந்தவர். நெடுங்காலம்

கொழும்புவாசி.இப்போது தமிழகவாசி.எழுதுவினைஞராக இருந்தவர். திருகோணமலை, மட்டக்களப்பில் கடமையாற்றியவர். போரா.கைலாசபதியின் நண்பர். மறைந்த நெறியாளர் பாலு மகேந்திராவின் ஆலோசகர். அவரது **கோகிலா** கன்னடப் படத்திற்கு பொருளாதார உதவி செய்தவர் என்று எங்கேயோ வாசித்த ஞாபகம்.

**சுதந்திரன், தினகரன், சரஸ்வதி, தாமரை** போன்றவற்றில் நிறைய எழுதி இருக்கிறார்.அக்கால எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் ஒரு பத்தியை சுதந்திரனில் எழுதினார்.

இவரது முதல் நாவல் **நீண்டபயணம்** 1965 ல் வெளிவந்த இந்நாவல் 7 நாட்களில் எழுதப்பட்டது. அந்த ஆண்டின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. சென்ற ஆண்டுவரை A/L தமிழ்ப் பாடத்துக்குரிய புத்தகமாக இந் நாவல் இருந்தது.

1970ல் **குமரன்** எனும் அரசியல் சஞ்சிகையை தொடங்கி சிலவருடங்கள் நடத்தியவர்.

எனது நண்பர்கள் பலர் குமரனில் கவிதைகள் எழுதினார்கள். நான் குமரனில் எதுவும் எழுதவில்லை. ஏன்?

அவரது அக்காலக் கருத்துகளோடு எனக்கு உடன்பட முடியாதிருந்தது. அதுவே காரணம்.

**இவரது நூல்கள்**

சிறுகதைத் தொகுதிகள்: நல்லவன், ஒரே இனம், சங்கமம், கொடுமைகள் தாமே அழிவதில்லை, சிறுவர் சிந்தனைக் கதைகள் இவற்றில் முன்னர் வந்த கதைகள் அடங்கிய செ.க கதைகள் (2003) நல்லவன் (2004) தொகுப்புகளும் வந்துள்ளன.

15 கட்டுரைத் தொகுப்புகளும் வெளியிட்டுள்ளார்.

வெளிவந்த 40 நாவல்களில் குறிப்பாக விமர்சனத்துக்கு உள்ளாகிய, போர்க்கோலம், மண்ணும் மக்களையும் தவிர சடங்கு, செவ்வானம், தரையும்தாரகையும்,

அயலவர்கள்,வதையின்கதை என்பனவும் தமிழக அரசின் பரிசு பெற்ற மரணத்தின் நிழலும் அடங்கும்.

மானம், நரபலி,சங்கமம், காணிக்கை, விளம்பரம் காவிகள் என்பன இவர் எழுதிய கதைகளில் எனக்குப் பிடித்த சில கதைகளாகும்.

விளம்பரம் காவிகள்

இனபேதங்களற்ற வளரிளம் பருவ தொழிலாளச் சிறார்களின் ஐக்கியத்தை அழகாகக் கூறும் இக்கதையை 66ல் ஒரே இனம் தொகுப்பில் வாசித்தேன்.

நான் வாசித்த முதல் இலங்கை எழுத்தாளரின் சிறுகதைத் தொகுப்பு இதுதான். இத்தொகுப்புக்கு முன்னுரை எழுதியவர், சிதம்பர ரகுநாதன்.

“ பண்டா ” என்று அழைத்தான் பொன்னையா......

எனத் தொடங்கி

அந்தச் சிரிப்பின் கலகலப்பிலே வளர்ந்து வரும் சமுதாயத்தின் ஒற்றுமையும் உறுதியும் எதிரொலித்தன.

என்று முடியும்

இக்கதையை ஒரே இனம் தொகுப்பிலும், 2004ல் வெளிவந்த 23 கதைகள் அடங்கிய நல்லவன் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.

**17 February 2018**

## பிடித்த சிறுகதை 25

இவரின் கவியரங்குகளின் பரம ரசிகனாக இருந்த நான் இவரின் பல கவியரங்குகளில் கவிதை பாடுபவன் ஆனேன். நான் இவரோடு முதன் முதல் பேசக்கிடைத்ததும், இவர் தலைமையில் பேசுவதற்குக் கிடைத்ததும் இன்னும் நினைவில் பசுமையாக இருக்கிறது.

யாழ் நூலக மேல்மாடியில் அம்பலத்தாடிகளின் **கந்தன்கருணை** நாடக நூல் வெளியீடு. இவர் தலைமை. நானும் புதுவையும் விமர்சன உரை.

அதன் பிறகு கவியரங்குகளிலேயே எமது சந்திப்புகள்.

எங்களுக்கு டானியல் **அப்பு.** பசுபதி, ரகுநாதன், தங்கவடிவேல் ஆகியோர் **மாஸ்ரர்.** இவர் எங்களுக்கு **வாத்தி.**

இவர் கவிஞராகவே பலர் அறிந்திருக்கின்றனர். இவரின் ஆரம்ப இலக்கியப் பிரவேசம் **சுதந்திரன்** சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றதின் மூலம் 1950 ல் நிகழ்ந்தது.

சில கதைகளே இவர் எழுதியிருந்தாலும் அவை காத்திரமானதென கணிக்கப்பட்டவை.

காலக்கிரமத்தில் கவிதையே இவரது இயங்கு தளமாயிற்று.

**சில்லையூர் செல்வராசன்**

**தான்தோன்றிக்கவிராயர்** என்றே இவர் பரவலாக அறியப்பட்டிருந்தார். பத்திரிகைகளில் வெளிவரும் இவரது கவிதைகளுக்கு தாடியுடன் கீறப்பட்ட ஒரு படம் தான்தோன்றிக் கவிராயராக பிரசுரிக்கப்பட்ட வரலாறு இருந்தது.

அ.ந.கந்தசாமியின் ஆத்மார்த்த சீடனான இவர் பத்திரிகைத் தொழிலை தேர்ந்து சுதந்திரன் ஆசிரியர் குழுவிலும், வீரகேசரியிலும் பணியாற்றினார்.

பேராசிரியர்கள் கைலாசபதி சிவத்தம்பியின் நெருக்கமான நண்பர். காவலூர், டானியல், என்.கே.ரகுநாதன், கே.தங்கவடிவேல் ஆகியோரின் சகபாடி.

சிறுகதை, கவிதை, விமர்சனம், நாடகம், சினிமா, நடிப்பு என்று பல்வகை ஆளுமை நிறைந்த இவரை **பல்கலைவேந்தன்** என்று இவர் பிறந்த சில்லாலை மண் பாராட்டிக் கௌரவித்துள்ளது. Ball Point Pen என்பதை குமிழ் முனைப் பேனா என தமிழாக்கிய பளிங்குச் சொல்பாவலர் இவர்தான்.

இலத்தீன், ஆங்கில, சிங்கள மொழியறிவுள்ள இவர் **கோமாளிகள்** திரைப்படத்தில் தனது மனைவி கமலினியுடன் நடித்திருந்தார்.

**மௌனா, சேகரன், சுசீலா, நீலவேணி, புத்தகப்பிரியன், அரசியல் மாணவன்** என்ற பெயரில் எழுதியவரும் இவர்தான்.

தனது மதுரக் குரலாலும் அழகிய தமிழ் உச்சரிப்பாலும் எமக்கு வாத்ஸல்ய வாழ்த்துக்களை கூறிய இந்த இலங்கை வானொலிக் கலைஞனின் மறைவு நேயர்களான, இலக்கிய ஆர்வலர்களான எமக்குப் பெரும் இழப்புத்தான்.

கூத்துக்கள்,மேடைநாடகங்களில் இவரது நடிப்புப் பங்களிப்பு நிறைய இருந்திருக்கிறது.

இவர் சிங்களம், ஆங்கிலம் போன்ற பிறமொழித் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இவரது வெளிவந்த நூல்கள்:

ஈழத்து நாவல் வளர்ச்சி, தணியாத தாகம்- திரைப்படச் சுவடி, ஞானசவுந்தரி (கூத்துப் பிரதித்தொகுப்பு), ஊரடங்கப்பாடல்கள் (கவிதை), ரோமியோ ரூ ஜுலியற், தலைவர்கள் வாழ்க மாதோ (கவிதை), சில்லையூர் செல்வராசன் கவிதைகள்.

கதவு திறந்தது

இக்கதை 21/12/1950ல் சுதந்திரனில் பிரசுரமானது.

கதவு திறந்தது

என ஆரம்பித்து

வெளி உலகுக்கும் வேதனைச் சிறைக்கும் வித்தியாசம் கிடையாது என்ற எண்ணத்தால்.

என்று முடியும் இக் கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**18 February 2018**

பிடித்த சிறுகதை 26

முதலிலேயே சொல்லி விடுகிறேன்.

இவரது கருத்துகளுடன் எனக்கு உடன்பாடு இருந்ததில்லை. முற்போக்கு இலக்கியவாதிகளின் எதிரணியைச் சேர்ந்தவர். கல்வித் திமிர் பிடித்தவர். ஆயினும் வன்னிமண் வாசனையை உலகறியச் செய்தவர் என்ற பெருமதிப்பு எப்போதும் இவர் மீது எனக்கு இருக்கிறது. மூத்த எழுத்தாளர்.

**முல்லைமணி-வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்.**

3/5/1933 ல் முல்லைத்தீவு முள்ளியவளையில் பிறந்தவர். 13/12/2016 ல் வவுனியாவில் மரித்தவர்.

**B.A(Hons)** பட்டத்தையும் பெற்றவர். **SLEAS.** கல்வி நிர்வாக சேவைப் பட்டம் பெற்று கல்விப் பணிப்பாளராக உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர் 15 க்கு மேற்பட்ட நூல்களை தமிழுக்குத் தந்தவர்.

நாடகமாக நடிக்கப்பட்டு 5 பதிப்புகள் கண்ட **பண்டாரவன்னியன்** நாடகமும் இதற்குள் சேரும்.

**ஏனையவை:**

அரசிகள் அழுவதில்லை(சிறுகதைத்தொகுதி 1977.தேசிய சாகித்திய விருது), மல்லிகைவனம் (நாவல்), வன்னியின்கதை, கொக்கிளாய் மாமி, வன்னியர் திலகம் நாவல்-1998 தேசிய சாகித்திய விருது, வ.கி மாகாண இலக்கிய விருது), கமுகஞ் சோலை (நாவல்- 2000. வ.கி. மாகாண இலக்கிய விருது), மழைக்கோலம் (நாவல் 2003.), கொண்டுவந்த சீதனம் (சிறுகதை 2005), முல்லைமணி கவிதைகள்(2008), மற்றும் பாமாலைகளும் கட்டுரைத் தொகுப்புகளுமாகும்.

அரச விருதுகளும் மாகாண விருதுகளும் பெற்ற இவர்.

**சாகித்திய ரத்தினா** 2016 விருதை, இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் பெற்றுக்கொண்டார். 2005 ல் யாழ் பல்கலைக்கழகம் இவருக்கு கெளரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது.

**ஜீவா,டானியல்** போன்றோருக்கு இப்பட்டம் வழங்குவதற்கு கடுமையான எதிர்ப்புக் காட்டிய கலாநிதிகளில் இவரும் ஒருவர் என்பது நம்பகமான தகவல்.

இவர் எப்படியானவராகவும் இருக்கலாம் அதுபற்றிய விடயங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு அவரது வன்னிமண்ணைப் பிரதிபலித்த கதைகளுக்காக அவரை வாசிப்போம்.

ஆச்சியின் பயணம்,பொட்டு,ஒரு தோட்ட நிலம், வாரிசு என்பனவும் எனக்குப் பிடித்த இவரது கதைகளில் சில.

**ஒரு பாலத்தின் கதை**

**கனகராயன் ஆற்றுக்குக் குறுக்கே போடப்பட்ட பாலம் வெள்ளத்தால் சேதமடைந்ததை அடுத்து சிலிப்பர்கட்டைகளை அடுக்கி தற்காலிக பாலம் அமைக்கப் படுகிறது. ஏன் இன்னும் நிரந்தரப் பாலம் அமைக்கப்படவில்லை என்பதை ஒரு நிருபர் ஆராயும் கதையே இது.**

இக்கதை வெளிவந்த இதழோ, ஆண்டோ இவரது கதை வந்த கொண்டுவந்தசீதனம் தொகுப்பில் இல்லை.

"கட கடா கட கடா"

என ஆரம்பித்து

அவன் சொல்வதிலும் நியாயம் இருப்பது போல்தென்பட்டது.

என்று முடியும் இக்கதையை முல்லைமணியின் கொண்டுவந்தசீதனம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**19 February 2018**

## பிடித்த சிறுகதை 27

இவரது பெயரை தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் முதன் முதல் அறிந்து கொண்டேன். O/L எடுத்து முடிவினை எதிர்பார்த்திருந்த காலம்.

ஒரு எழுத்தாளரையும் அறிமுகம் இல்லை. தான் தோன்றியாக கதைகள் எழுதும் **தவ்வல்** நான் (இப்போதும் தான்) கால் நடையாக பருத்தித்துறை சென்று, பச்சை நிற மாபிள் பதித்த இலங்கை வங்கியின் எதிர்ப்புறம் சடைத்துக்கிளை பரப்பி நின்ற வாகை மரத்தின் கீழ் இருந்த ஒரு வாசக சாலையில் தினபதியை தினமும் வாசிப்பேன். (சிறுகதைகளை மட்டும்) எனது கதை இப்படிப் பிரசுரமாகாதா? என்ற ஏக்கம் மீதுறும்.

சிபார்சு செய்து அனுப்பினால் அல்லவா பிரசுரமாவதற்கு.? யாருமற்றிருந்தேன். இவர் சிபார்சு செய்த கதைகள் அடிக்கடி பிரசுரமாகும்.

அக்கதைகளை எழுதியவர்கள் இப்போது மிகப் பிரபலமான எழுத்தாளர்களாக இருக்கிறார்கள்.

**ஏ.வி.பி. கோமஸ்.**

**ஜெயம்** என்பது இவரது புனைப்பெயர்.

1932 ல் கொழும்பில் பிறந்து அங்கேயே கல்விகற்று. பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியாகி, ஆசிரியராகி, அதிபராகி ஓய்வு பெற்றவர்.

200 க்கு மேற்பட்ட சிறுகதைகள் 400 க்கு மேற்பட்ட கவிதைகள் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுதியவர். இவர் ஒரு விளையாட்டு வீரரும், நடிகரும் கூட.

பல்கலைக்கழக காலத்தில் பேரா. சு.வித்தியானந்தன் நெறியாள்கை செய்த **துரோகிகள்** நாடகத்தில். பேராசிரியர்கள்.கைலாசபதி, சிவத்தம்பியோடு நடித்தவர் என்று ஒரு குறிப்புக் கூறுகிறது.

மல்லிகை இவரது அட்டையை தன் இதழொன்றில் பதித்துக் கௌரவித்துள்ளது.

மாத்தளையில் நெடுங்காலம் வாழ்ந்து அதனையே தனது நிரந்தர வதிவிடமாக்கி அங்கேயே மரணமடைந்தார்

யாழ்/ தொழில் நுட்பக் கல்லூரியில் இவரது சகோதரர் ஒருவர் எனக்குக் கணக்கியல் ஆசிரியராக இருந்தார். அவரிடம் இவரைப் பற்றி நான் விசாரிப்பதுண்டு.

அவரை நாங்கள் **கோமஸ் மாஸ்ரர்** என்று தான் அழைப்போம். **கோமஸ்** என்பது அவர்களின் குடும்பப் பெயர்.

**இவரது அச்சில் வெளிவந்த நூல்கள்:**

அங்கமெல்லாம் நெறைஞ்ச மச்சான்,(தமிழ் மன்றம் - 1988. நாட்டார் பாடல் இடையிட்ட குறுநாவல். 1965 ல் சுதந்திரனில் தொடராக வெளிவந்தது.), வாழ்க்கையே ஒரு புதிர் ( தமிழ் மன்றம்.1993. சிறுகதைகள் 12), எழுத்தார்வம் உள்ளவர்க்கு (1999.கட்டுரைகள்.)

மலையக இலக்கியத்தின் பலமான தளத்துக்கு வளம் சேர்த்தவர் என இவர் விதந்துரைக்கப்படுகிறார். **சுதந்திரன், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி** யில் நிறைய எழுதினார்.

இனநல்லுறவைப் பேணிவந்தவர். இவரது இரண்டு நூல்களை அல்ஹாஜ். எஸ்.எம். ஹனிபா கல்ஹின்னை தமிழ் சங்கத்தினால் வெளியிட்டுள்ளார். இவரது 3 கதைகள் ஆங்கிலத்தில் மொழிமாற்றப் பட்டுள்ளது.

**வாழ்க்கையே ஒரு புதிர்**

**மலையக குடும்பம் ஒன்றையும் அவர்கள் எதிர் கொள்ளும்**

**அன்றாட குடும்பவாழ்க்கையையும்**

**கூறும் இக்கதை 12/05/ 1963 ல் வீரகேசரியில் பிரசுரமானது.**

**மல்லாந்து படுத்திருந்த மங்கையைப் போல காட்சியளித்தன மலைகள்**

**என ஆரம்பித்து**

**ஆமாம் இவர்களது வாழ்க்கையே ஒரு புதிராகத்தான் இருக்கிறது.**

**என முடியும்இக்கதையை இதே தலைப்பில் வெளிவந்த இவரது சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**20 February 2018**

பிடித்த சிறுகதை 28

**ச**மீபத்தில் சில முக்கிய ஆளுமைகள் பற்றிய நினைவுகள் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து கொண்டிருந்தன. இலங்கையில் வெளிவந்த ஒரு வித்தியாசமான திரைப் படமும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களும் தான் அது.

**"தமிழ் படம் உருப்படும் என்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டத் "**

என்று அவரிடமே கூறினேன். ஏன்.? என்று ஆச்சரியமாகப் பார்த்த அவரைப்பார்த்து சிரிக்காமல் கூறினேன்.

**" டாக்டர் வேதநாயகம் ஒரு படத்தைத் தயாரித்தார். அப் படத்தின் கதாநயகனும் அவர்தான். வி.பி.கணேசன் தான் தயாரித்த இரண்டு படங்களிலும் தானே கதாநாயகனாக நடித்தார். நீங்கள் ஒரு படம் தயாரிப்பதாக அறிந்தேன். அதில் நீங்கள் கதாநாயகனாக நடிப்பீர்களோ என்ற ஐயம் எனக்கு இருந்தது. நல்ல வேளை அந்த விபத்து நேரவில்லை. இனித் தமிழ்ப்படம் உருப்படும்."**

**காவலூர் ராஜதுரை.**

தங்கள் ஊரை தமது இலக்கியத்தின் மூலம் பிரபல்யப் படுத்தியவர்களில் முக்கியமானவர் இவர்.

1931 ல் கரம்பனில் பிறந்த இவர் 2014 ல் அவுஸ்திரேலியா சிட்னியில் காலமாகினார்.

சிறுகதை,நாவல்,நாடகம்,விமர்சனம்,விளம்பரம்,சினிமா என பல்துறை ஆளுமை கொண்டவர். ஆங்கிலப் புலமையாளர்.

50களில் தினகரனின் ஆஸ்த்தான எழுத்தாளராக இருந்தவர்.

**சுதந்திரன், வீரகேசரி, மித்திரன்** போன்று பத்திரிகைகளில் எழுதியவர். இலங்கை வானொலியில் **கலைக்கோலம்** நிகழ்ச்சியைத் தயாரித்தளித்தவர்.

நான் முன்னர் குறிப்பிட்ட சம்பவம். **பொன்மணி** திரைப்படம் பற்றியதே.

**இவரது வெளிந்த நூல்கள்**

குழந்தை ஒரு தெய்வம் (சிறுகதைகள்,-1961,) வீடு யாருக்கு(புதினம்,-1972. நாடகமாக நடிக்கப்பட்டது), ஒரு வகை உறவு(சிறுகதைகள், 1976).

**பொன்மணி எங்கே போனாள்**? மித்திரனில் தொடராக வந்த நாவல். இவரது திரைக்கதை வசனம் தயாரிப்பில் தர்மசேன பத்திராசாவின் நெறியாள்கையில் **பொன்மணி** திரைப்படமாக வந்தது. இரட்டையர்களாக கருதப்பட்ட சில்லையூர் - காவலூரின் 70ம் ஆண்டுகள் விளம்பரத்தால் சிறப்படைந்த காலங்கள். முற்போக்கு எழுத்தாளர் சங்க செயற்பாடுகளில் முன்னின்று உழைத்த மூத்த உறுப்பினர் இவர். (சங்கத்தின் பல கூட்டங்கள் கொழும்பிலுள்ள இவரது இல்லத்திலேயே நடந்ததாம்).

மலையக மக்களின் வாழ்வைக் கூறும் காலங்கள் தொடர் நாடகம் இவருடையதே. அ.ந.கந்தசாமியின் **மதமாற்றம்** நாடகத்தை தயாரித்து மேடையேற்றியவர் இவர்.

வானொலியில் இருந்து விலகிய பின் யுனிசெப் நிறுவன விளம்பர பகுதியில் கடமையாற்றி பின்னர் சொந்தமாக **வசீகரா** எனும் விளம்பர நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார்.

காவலூரரின் மகன் நவீனன் ராசதுரை தந்தையாரின் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். **( A Prophet Unhonoured)** . மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி.

**தேவ கிருபையை முன்னிட்டு வாழும்.....**

**1961 ல் சரஸ்வதி வெளியீடாக வந்த குழந்தை ஒரு தெய்வம் எனும் சிறுகதைத் தொகுப்பின் பத்துக் கதைகளில் ஒன்றான இக்கதை 1958 ல் வெளிவந்தது. ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு**

**தர்மயுக்த என்னும் சிங்கள பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.**

**இக் கதை கல்விப் பாடத்திட்டத்தில் 10ம் ஆண்டு தமிழ் நூலில் சேர்க்கப்பட்டு இருந்தது.**

**அந்தோக் கிழவியின் ஏக்கத்தை, பரிதாபத்தை, அவள் வாழ்வை, மரணத்தைக் கூறும் கதை இது.**

**கிழவி செத்தது விசேஷமில்லை, சாகுமுன் நடந்த சிறு சம்பவம் தான் விசேஷம்.**

**என ஆரம்பித்து.**

**பறை உரத்து முழங்குகிறது. சவம் புறப்படுகிறது.**

**என்று முடியும் இக்கதையை இவரது குழந்தை ஒரு தெய்வம் தொகுப்பிலும், 1995-2000ம் ஆண்டுக்குரிய 10ம் ஆண்டு தமிழ் பாடப் புத்தகத்திலும் வாசியுங்கள் நண்பர்களே.**

**23 February 2018**

## பிடித்த சிறுகதை 29

ஒரு வேடிக்கை. இவருக்கு தன்னைத் தவிர வேறு யாருமே முற்போககாளர் இல்லை என்ற மமதை இருக்கிறது. இவரது இலக்கிய ஆரம்ப சகபாடிகளை வசை பாடுவதை அவர்களைப் பற்றி தூற்றி எழுதுவதை இவர் பின்நாட்களில் செய்து வந்தார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தம்மோடு இருந்தவர்களையும் இவர் விட்டு வைக்கவில்லை.

இவர் ஒன்றும் அப்பழுக்கற்றவர் இல்லை.

என்னை விட்டு விடுங்கள். இவர் என்னை முற்போக்கு எழுத்தாளராக ஏற்றுக் கொள்ள வில்லை அது பற்றிப் பரவாயில்லை. ஆனால் மு.பொ. எ. சங்கத்தில் தொடர்ந்து இவரோடு பயணித்த சிலரையே இவர் அடையாளப் படுத்தாது புறக்கணித்தது மிகக் கண்டிக்கக் கூடிய ஒரு செயலாகும்.

மார்க்சிய லெனினிய மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொள்பவர்கள், வரலாற்றை ஒரு போதும் மறைக்கவோ, திரிபு படுத்தவோ மாட்டார்கள்.

அப்படி திரிபு படுத்துபவர்கள் மார்க்சிய போர்வை போர்த்தவர்கள் என்பதை நான் கண்டிப்பாக கூறுவேன்.

இவர் முற்போக்கு இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இவரை நான் எனது துரோணாச்சாரியார்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டவன். பிறரை விமர்சிக்கும் இவர் சுயவிமர்சனம் செய்யவேண்டும். இது எனது பேரவா.

**நீர்வை பொன்னையன்**

நீர்வேலியில் 1930ல் பிறந்த இவர் மட்டக்களப்பில் ஆங்கில ஆசிரியராக இருந்து. பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் இளமாணிபட்டம் பெற்றவர். அரச வேலை கிடைக்காத இவர் தொழிற்சங்க முழுநேர ஊழியரானார்.

இவரது முதற்கதை **புயல்** 60 ம் ஆண்டு ஈழநாட்டில் பிரசுரமானது. அதன் பிறகு, **தேசாபிமானி, தினகரன், வீரகேசரி, கலைமதி, தாமரை, தமிழன், வசந்தம்** ஆகியவற்றில் நிறைய எழுதினார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட கதைகளை இவர் எழுதியிருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது. கட்சி பிளவடைந்த போது சீனச் சார்பு எடுத்தவர். முற்போக்கு எ.சங்க உறுப்பினராக ரஸ்ய சார்பினருடன் செயற்பட்டவர்.

இலங்கையின் சீன ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றியவர். சிறிமா ஆட்சிகால 70களில் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றியவர்.

யுத்தம் உக்கிரம் கொண்ட காலமான 90 களில் திருமதி கைலாசபதியுடன் இணைந்து ஒரு தன்னார்வ நிறுவனத்தில் கடமையாற்றினார்

2000 ஆண்டு விபவி கலாசார மையத்தில் தமிழ் பிரிவில் இணைப்பாளராக இருந்து விபவி செய்தி மடலை வெளிக்கொணர்ந்தார்.

இவற்றை எல்லாம் ஒரு சுயவிமர்சனத்தோடு இவர் திரும்பிப் பார்க்க வேண்டும். இன்னொரு விதத்தில் இவர் நிராகரிக்கப்படுகிறார் என்பதை நாம் ஒப்புக் கொண்டாகத்தான் வேண்டும்.

**இவரது நூல்கள்**

மேடும் பள்ளமும் (1ம் பதிப்பு, 1961,மக்கள் பிரசுராலயம்) 2ம்பதிப்பு, 2003, மீரா பதிப்பகம், 1961 ல் சாகித்திய தேர்வில் இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்காமல் தவிர்க்கப்பட்டது), உதயம், (1970, இதுவும் JVP. சார்பானது என சாகித்திய இறுதிச் சுற்றுக்கு வந்தும் தவிர்க்கப்பட்டது. இந்நூலின் அறிமுக நிகழ்வு யாழ்/கே.கே.எஸ். வீதியிலுள்ள கில்னர் கல்லூரி மேல் மாடியில் நடந்தது. நீர்வை நிகழ்வுக்கு வரவில்லை. நான் பார்வையாளனாகக் கலந்து கொண்டேன். 70ன் பிற்கூறு).

பாதை-1997,வேட்கை(2000,சகோதர சிங்கள ஓவியர் ஒருவரால் வரையப்பட்ட மூவர்கதைகள் அட்டைப் படம் பாவிக்கப்பட்ட தொகுப்பு), ஜென்மம் (சிறுகதைகள்), உலகத்து நாட்டார் கதைகள் 2001, மூவர் கதைகள் 1971 (நீர்வை, யோகநாதன், கதிர்காமநாதன்), நீர்வை பொன்னையன் சிறுகதைகள்(2007, 23 கதைகள்), முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்(2002), நாம் ஏன் எழுதுகிறோம் (2004), நினைவுகள் அழிவதில்லை (2012, தனது மன வக்கிரத்தைக் கொட்டிய நூல்), நீர்வை பொன்னையன் இலக்கியத் தடம்(Dr. M.K. முருகானந்தன, 2008), முற்போக்கு இலக்கியப் பேரவை சார்பாக தனது நூல்களை மாத்திரமல்ல முற்போக்கு சிறுகதைகள் போல ஏனையவர்களின் நூல்களையும் வெளியிட்டு வருகிறார்.

எனக்கும் இவருக்கும் எதுவித தனிப்பட்ட கோபமும் இல்லை. ஒருவிதத்தில் 1961ல் இவரது **மேடும் பள்ளமும்** இறுதித் தேர்வுக்கு வந்து நிராகரிக்கப்பட்டது போல் 1994 ல் இறுதிச் சுற்றுக்கு வந்த எனது **அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்** தேர்வுக்குழுவில் இருந்த நண்பர்களின் அசமந்தப் போக்கால் நிராகரிக்கப்பட்டது.

நீர்வை தன்னை நிராகரித்த அந்த தேர்வுக்குழு நண்பர்களோடு இன்றும் கோபமாக இருக்கிறார். நானோ உரத்த தொனியில்

என்னை நிராகரித்த நண்பரோடும், மௌனம் காத்த நண்பரோடும் இன்றும் நட்பைப் பேணுகிறேன்.

யார் நிராகரித்தால் என்ன? 2014 ல் **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** தொகுப்புக்கு சாகித்தியப் பரிசை நான் பெற்றேன்.

அதே போல் நிராகரித்த அந்த நிறுவனம் சென்ற ஆண்டின் **சாகித்திய ரத்தினா** விருதை இவருக்கு வழங்கியிருக்கிறதே இதைவிட பெரிய தகுதி என்ன வேண்டும்?

முற்போக்கு இலக்கிய முன்னோடியே, என் போன்றவர்களின் துரோணாச்சாரியே. மீளவும் நான் கூறுகிறேன் தோழர் மா.ஓ. வின் மாணவர்கள் நாம் விமர்சனம், சுயவிமர்சனம் எனும் ஆயுதத்தைப் பயன் படுத்துவோம் உற்சாகமாக.

1969 ம் ஆண்டு ஆட்சி. அவ்வாண்டு மேதினமும், வெசாக் பூரணை தினமும் ஒரே நாளிலேயே வந்தது. அரசு அத்தினத்தை புனித நாளாக பிரகடனப் படுத்தி மே தின ஊர்வலத்திற்கும் கூட்டங்களுக்கும் தடைவிதித்திருந்தது.

அது எங்களின் புனித தினம் சிக்காக்கோ நகரத்தில் எட்டுமணி நேர வேலைக்காக ரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து பெற்ற தினம்.திரிபு வாதிகளும் மாற்றுக் கட்சிகளும் ஏப்ரல் 30 ம் திகதியே மே தினத்தை நடத்தினர்.

நமது புரட்சிகரக் கட்சி அந்த தடைகளை மீறி மே.1 ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊர்வலத்தையும் கூட்டத்தையும் ரத்தம் சிந்தி நடத்தியது.

அந்த தந்திரோபாய நிகழ்வை சுமார் 10 ஆண்டுகளின் பின் 1979 ல் சற்று கற்பனை கலந்து வீரகேசரியில் இவர் எழுதிய கதைதான் இது.

**மே தினம்**

**ரத்தச் சுவட்டில் ஒரு அடி.......**

"அமரத்துவ மேதினம் நீடூழி வாழ்க"

என ஆரம்பித்து

"தொழிலாளி வர்க்கம் நீடூழி வாழ்க" நாங்களிருக்கும் பாதுகாப்பறை அதிர்கின்றது.

என்று முடியும் இக்கதையை இவரது பாதை தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**24 February 2018**

பிடித்த சிறுகதை 30

இவரைப் பற்றி நான் எழுதித்தானாக வேண்டும். என்னை அறிமுகம் செய்தது சுதந்திரன். **பாரம்** என்ற கதையை **நந்தினி** என்ற பெயரில் எழுதியிருந்தேன்.

இதே கதையை ஒரு மாதத்திற்கு முன் தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்திற்கு அல்வை தே. சேவியர் என்ற பெயரில் அனுப்பியிருந்தேன். அந்தக் கதையை சிபார்சு செய்தவர் இவர்தான். உண்மையில் இவருக்கு என்னைத் தெரியாது.

இப்போது கனடாவில் வசிக்கும் என் நண்பர் தர்மகுலசிங்கம் அக்கதையை வாங்கி சிபார்சு செய்து தந்தார். மாதம் ஒன்று கடந்தும் தினபதி அக்கதையைப் பிரசுரிக்காத காரணத்தால் சுதந்திரனுக்கு அதனை அனுப்பி வைத்தேன்.

சுதந்திரன் என்னை அறிமுகப்படுத்தி இரு வாரங்கள் கழித்து தினபதியும் அக்கதையைப் பிரசுரித்தது. முகமறியா என்னை அன்று சிபார்சு செய்த அந்த எழுத்தாளரை நான் மறக்காது இருப்பது என் நன்றிக்கு உரிய ஒன்று.

60 ம் ஆண்டுகளில் இடதுசாரி சிந்தனை வசப்பட்ட பல எழுத்தாளர்கள் உருவாகி விளிம்பு நிலை மக்களின் பிரச்சனைகளை எழுதினார்கள். இவர் ஒரு இடது சாரியல்லர்.

ஆயினும் யாழ் மாநகர சுகாதாரத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தப் போராட்டத்தையும், கர்ப்பிணியான தன் மனைவியின் சுகவீனச் செலவுக்காக கருங்காலியாக மாறிய மரியானை தாக்கும் சக தொழிலாளர்களின் பின்னரானஇரத்தம் வழங்க முனையும் மனிதாபிமானத்தையும் அழகாக சொல்லும் கதை இது. இவரும் ஒரு மாநகரசபை ஊழியர். அந்த மக்களோடு ஒன்றித்து வாழ்ந்தவர்.

**யாழ்வாணன்-நா.சண்முகநாதன்**

1933 ல் அனுராதபுரத்தில் பிறந்த இவர் திருமணம் செய்ததன் மூலம் வடமாராட்சி வாசியாகியவர். வதிரி அரசடி பாடசாலை அருகில் வாழ்ந்தவர். யாழ். மாநகர சபை நகர மண்டப காப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். யாழ் இலக்கிய வட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் மிக முக்கியமானவர். இலக்கிய வட்ட இணைச்செயலாளராக இருந்தவர்.

**அமரத்துவம், சங்கமம், மொட்டை, முள்** போன்ற பல நல்ல சிறுகதைகள் இவருடையவை. **சுதந்திரன்** முதற்கொண்டு தேசிய பத்திரிகைகள் சகலதிலும் எழுதியவர்.

**ஈன்ற பொழுதில்சான்றோன் என.....**

ஒலிபரப்பாளர் **யாழ் சுதாகர்.** கணணியில் தமிழ் எழுத்துருவை உருவாக்கிய **சுரதா யாழ்வாணன்,** மற்றும் **சுரேஸ், கண்ணதாசன், யாழினி** ஆகியோரின் அப்பா இவர் என்பதுவும் மேலதிக தகவல்.

**இவரது நூல்கள்**

அண்ணா அஞ்சலி, அமரத்துவம்(1969, 12 கதைகள்), மலர்ந்த வாழ்வு (2005, சிறுகதைகள்).

இவர் 1996 ல் சென்னையில் காலமாகினார்.

அக்காலத்தில் யாழ் இலக்கிய வட்டத்தின் முகவரி.

யாழ்வாணன்,செயலாளர்.யாழ் இலக்கிய வட்டம். மாநகரசபை. யாழ்ப்பாணம்.

சங்கமம்

பட்டணத்தின் ஜடத்துவம் மாறி உயிர்த்துவம்

தலைகாட்டும் அந்த உதய வேளையில்.........

என ஆரம்பித்து

அவர்கள் தங்கள் வேலைநிறுத்த இயக்கத்துக்கு எதிரன முறையில் நடந்து கொள்கிறார்கள் என்ற ஆத்திர உணர்ச்சிக்கு இடம் கொடாது மௌனமாக நடந்து சென்றார்கள்.

என்று முடியும் இக்கதையை இவரது அமரத்துவம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**26 February 2018**

ஒரு கவிஞனாக நான் இவரை அறிந்து வைத்திருந்தேன். சு.வி. இவரது கவிதை ஒன்றை தனக்குரிய மெட்டில் பாடுவார். பின்னர் கண்ணன் நேசம் இசையில் வேறு ஒரு மெட்டில் அக்கவிதையை சத்தியமூர்த்தி பாட மெல்லிசையாக கேட்டுள்ளேன். இவரது கவிதைகளாலான ஒரு கவிதா நிகழ்வை மூன்று நான்கு தடவைகள் திருகோணமலையில் 2003ம் ஆண்டு சு.வி. அரங்க நிகழ்வாக்கினார்.

**நீலாவணன்**

கேசகப்பிள்ளை சின்னத்துரை - ( நடராசா)

பெரிய நீலாவணையில் 1931. ல் பிறந்த இவர் தனது 44 ஆவது வயதில் 1975 ல் காலமாகினார். ஆசிரியராக கடமையாற்றியவர். கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்க ஸ்தாபகர். சுதந்திரன் பண்ணையில் வளர்ந்தவர். 52ல் சுதந்திரனில் **பட்டமரம்**, பிராயச்சித்தம், ஆகிய கதைகளை எழுதினார். மூன்றாவது கதையாக **மூன்றாவது காதலன்** என்ற கதையை எழுதிய போது அதைப்

பிரசுரிக்காது, **“தொடர்ந்து கவிதைகளே எழுதுங்கள்”** என்ற எஸ்.டி. சிவநாயகத்தின் விருப்பத்திற்கமைய கவிஞராகவே மாறியவர். கடும் கோபக்காரரான இவர் கொடுமை கண்டு பொறுக்காதவர். முற்போக்குக்கு எதிர்ப்பானவர் என இவர் பற்றிய கூற்றை **நு.்மான், கொத்தன்** போன்றவர்கள் மறுதலித்துள்ளனர்.

**டானியல்,ஜீவா, இளங்கீரன்**போன்றவர்கள் இவர் வீட்டுக்கு வந்து போய் உள்ளனர். **எஸ்.பொ** வுடன் இருந்த நட்பை கருத்து முரண்பாடு காரணமாக துண்டித்தவர். இலங்கையர்கோனுடன் நட்பாக இருந்தவர். குறுங்கதை, உருவகக் கதை. பா நாடகம் நகைச்சுவை உரைச்சித்திரங்கள் எழுதியவர். **அம்மாச்சி ஆறுமுகம்,கொழுவுதுறட்டி,வேதாந்தன், எழில்காந்தன், இராமபாணம், சின்னான்கவிராயர்** என்பன இவரது புனை பெயர்கள்.

நான் சு.வி பாடுவதாகக் குறிப்பிட்ட பாடல்

**“ ஓ. வண்டிக்காரா......”**

சு.வி யின் நண்பர்கள் இதனை நிச்சயம் கேட்டிருப்பர்.

மகன் தந்தைக்காற்றும் உதவியை **எழில்வேந்தன்** நீலாவணனுக்கு ஆற்றுகிறார். பெருமிதம் கொள்கிறேன். இவரது மரணத்தின் பின் இவரது நண்பர்களின் முயற்சியாலும் மகன் எழில் வேந்தனது ஆர்வத்தினாலும் பின்வரும் நூல்கள் வெளிவந்துள்ளன.

**அவை**

வழி (கவிதைகள், 1976),வேளாண்மை(காவியம்,1982, வ.அ. முயற்சி), ஒத்திகை(கவிதைகள்,2001), ஒட்டுறவு (சிறுகதைகள், குறும்புக்கதைகள், உருவகக் கதைகள்) 2003), நீலாவணன் பா நாடகங்கள் (2005, அரச சாகித்திய விருது,மாகாண சி.நூல் விருது 2005), நீலாவணன் காவியங்கள், 2010,கி.மாகாண இலக்கி நூல் பரிசு 2010), இவர் பற்றி பேரா.மௌனகுரு, எஸ்.பொ. எழுதி இரு நூல்கள் வெளிவந்துள்ளன.அவை கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்(3/94),நீலாவணன் - எஸ்.பொ.நினைவுகள்(9/94),

கிழக்கு இலங்கையின் புகழ் பெற்ற பல படைப்பாளிகள் நீலாவணனின் நட்பு வட்டத்தவர்களே. கொத்தன், எஸ்பொ, நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சடாட்சரன், பஸீல் ஏ. காரியப்பர் முதல், பின்வந்த அன்புடீன், முல்லை வீரக்குட்டி, வீ.ஆனந்தன் இப்படிப் பலர் நீலாவணன் என்னும் பெயரை உச்சரிப்பதில் பலர் தடுமாறுவதை நான் அவதானித்துள்ளேன். நீலவாணன், நீலாவாணன் இப்படிப் பலமாதிரி.

ஒட்டுறவு

23./01/ 83ல் வீரகேசரியில் இக்கதை அவர் இறந்து 8 வருடங்களின் பின் பிரசுரமாகியது. அது யூலைக் கலவர காலத்துக்கு முந்தியது. நான் அப்போது கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.அப்போதே இக்கதையை வாசித்தேன்.

இந்தக்கதை பற்றி இவரது பள்ளித்தோழரான (ஒரேவகுப்பல்ல)மருதூர் கொத்தன் பின்வருமாறு கூறுகிறார்.

"ஈழத்தில் வெளிவந்த மிகச் சிறந்த முப்பது சிறுகதைகளில் ஒன்றாக அமையக் கூடியது."

நான் ரெண்டு மாதத்துக்கு முந்தியே சொல்லிப் போட்டன்........

என ஆரம்பித்து

அரியம் அவள் போகவேண்டிவள்தான் என்பதை இன்னும் சில நாட்களில் கௌரியும் தெரிந்து கொள்வாள். அதுவரை?

என்று முடியும் இக்கதையை இவரது ஒட்டுறவு தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

**2 March 2018**

பிடித்த சிறுகதை 32

இவரது பெயர் எனக்கு அறிமுகமானது 1970 ல். ஈழநாடு தனது 10 ம் ஆண்டு நிறைவை ஒட்டி அகில இலங்கை ரீதியாக நடாத்திய நாவல் போட்டியில் இவரோடு சேர்ந்த பல ஆளுமைகளோடு சிறுவனான நானும் போட்டியில் கலந்து கொண்டேன். முதற் பரிசை பகிர்ந்து கொண்ட இருவரில் இவர் ஒருவர். இரண்டாம் பரிசை பெற்ற இருவரில் நானும் ஒருவன். அந்த தருணங்களில் இவரை நான் தேட முயன்றேன்.

திருநெல்வேலியில் நடந்த டானியலின் **உலகங்கள் வெல்லப்படுகின்றன** சிறுகதைத் தொகுதி அறிமுக மேடைக்கு கனக. செந்திநாதன் அவர்களை ஒரு குழந்தைபோல் அரவணைத்து கைத்தாங்கலாக அழைத்து வந்த போதுதான் இவரை நேரில் கண்டேன்.

ஆஜானுபாகுவான , வெள்ளை நாஷனல் வேட்டி அணிந்த, கண்ணியம் நிறைந்த தோற்றம். .

**சு.இராஜநாயகன்.B.A.**

என்ன B.A என அடையாளப் படுத்துகிறேன் என

வித்தியாசமாக நினையாதீர்கள்.

**கலைச்செல்வி** சஞ்சிகை முதல் இதழில் நிர்வாக ஆசிரியரான இவரை இவ்வாறே குறிப்பிட்டுள்ளனர்.

திருநெல்வேலியில் 1926 ல் பிறந்த இவர் 1947ல் ஆசிரியராகி 1981ல் ஓய்வு பெற்றவர். படிக்கிற காலத்திலேயே **ஈழகேசரி** யில் எழுதத் தொடங்கி **மறுமலர்ச்சி** சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றதன் மூலம் கவனிப்பைப் பெற்றவர்.

சமசமாஜ வாலிபர் சங்க தலைவராக இடது சாரியாக இருந்த இவர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணையவில்லை.

யாழ். இலக்கிய வட்ட தலைவராக ஒரு வருட காலம் இருந்திருக்கிறார். இந்து சாதனம் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

நாவல்கள்,சிறுகதைகள்,கட்டுரைகள் என கவனம் செலுத்தினாலும் மிகக் குறைவாகவே எழுதினவர்.

இவரது **ஈழநாடு** பரிசு பெற்ற **பிரயாணி** நாவல் இன்னமும் பிரசுரமாகவில்லை. எனது இரண்டாம் பரிசு பெற்ற நாவல் போல அதுவும் தேடி எடுக்க முடியாத பிரதியாகி விட்டதோ என வருத்தமுறுகிறேன். இதில் திறமையுள்ளவர்கள் இரண்டு நாவல்களையும் தேடி எடுத்து பிரசுரிக்க உதவ வேண்டும்.

**நாகதோஷம், அவன்,உலகக்கண்கள், ஓநாய்கள் கவனம்** என்பன இவரது நல்ல சிறுகதைகளில் சில.

**சிற்பி** அவர்கள் தொகுத்த ஈழத்துச் சிறுகதைகள் தொகுப்பில் இவரது **அவன்** சிறுகதை இடம்பெற்றுள்ளது.

**சொந்த மண்** என்ற பெயரில் இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பொன்றை இவரது மகனான **தினக்குரல்** வாரமலர் ஆசிரியர் **பாரதி இராஜநாயகன்** 2005 ல் மீரா பதிப்பகத்தினூடு கொணர்ந்துள்ளார்.

(நூலகம் இணையத்தில் இந்நூல் பதிவேற்றப் படவில்லை.)

**மல்லிகை** இதழ் ஒக்டோபர் 73. இவரது அட்டைப் படத்துடன்

வெளிவந்திருந்தது. 1998ல் இவர் காலமாகினார்.

கிட்டத்ததட்ட 50 ஆண்டுகள் கடந்து விட்டது. நான் பிறப்பதற்கு முன்னரே இலக்கியத்தில் சாதனை ஈட்டி பரிசு பெற்ற இவர் போன்றவர்களுடன் நானும் போட்டியிட்டு பரிசு பெற்றேன் என்பது மகிழ்ச்சியைத் தந்த போதும் சற்றுக் கூச்சம். என் துரோணாச்சாரியர்களை நான் மறக்கவோ, மறுதலிக்கவோ மாட்டேன். அவர்கள் மேதைகள். இராஜநாயகனும் தான்.

விழிப்பு

**1946 ம் ஆண்டு மறுமலர்ச்சி சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்று இவரை பலரின் கவனத்தை ஈர்க்கச் செய்த கதை.**

**மறுமலர்ச்சியின் 6 ஆவது இதழில் ( புரட்டாதி .46) பிரசுரமான கதை**

**“கலை உண்டு நானுண்டு ” என்றிருக்கும் நடராஜன்**

**என ஆரம்பித்து.**

**சோமுவின் முகத்திலே ஒரு குறுநகை படர்ந்தது.**

**என்று முடியும் பரிசு பெற்ற இக்கதையை மறுமலர்ச்சி இதழ்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**3 March 2018**

## பிடித்த சிறுகதை 33

கவிஞர்கள் சிறுகதை எழுத்தாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இவர் போல் பின்நாட்களில் பெரும் கவிஞர்களாக விளங்கியவர்கள் இருவர் பற்றி இத்தொடரில் நான் எழுதி இருக்கிறேன். சில்லையூர்,நீலாவணன் ஆகியவர்களே அவர்கள்.

இவர் ஒரே ஒரு சிறுகதை மட்டுமே எழுதியிருப்பதாக ஒரு குறிப்பில் நான் வாசித்தேன். மேலும் அவர் சில சிறுகதைகளை எழுதியிருக்க கூடும்.

அவரது கவிதைகளின் வெளிப்பாடு ஏதோ ஒரு விதத்தில் அவரை ஒரு கதை சொல்லியாக என்னை நம்ப வைத்திருப்பதை நான் சொல்லித்தானாக வேண்டும்.

துரைச்சாமி உருத்திரமூர்த்தி

**மஹாகவி**

மேலே இருக்கும் பெயரை விட **மஹாகவி** என்னும் பெயரே மிகப் பிரபலமானது.

**பண்டிதர்,மாபாடி,காப்பியாற்றுக் காப்பியனார், மகாலட்சுமி, பாணன்,வாணன்** என்பதும் இவரது புனை பெயர்கள்.

இவரது தாயார் அம்பலவாணர் என்றும் இவரை அழைத்துள்ளார். 1927ல் அளவெட்டியில பிறந்தவர். தனது 44 வயதில் 1971 ல் காலமானவர்.அரச எழுதுவினைஞர் சேவையில் இணைந்து நிர்வாகசேவை அதிகாரியாகியவர்.

கொழும்பு, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றியவர்.

**சுதந்திரன்,தினகரன்,வீரகேசரி, மறுமலர்ச்சி** போன்ற வற்றில் எழுதியவர்.இவரது கவிதைகளை தட்டச்சுச் செய்து புத்தக ரூபத்தில் தான் கொடுத்ததாக இவரின் நண்பரான கவிஞர் இ.முருகையன் ஒரு கட்டுரையில் எழுதியிருந்ததை நான் வாசித்திருக்கிறேன்.

**சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்**

என்ற பாடல் வரிகள் இளம் சந்ததியினர் அறிந்த ஒன்று.

**தேரும் திங்களும்** நான் விரும்பும் கவிதை. **குறும்பா** இவர் பெயரை நிலைத்திருக்கச் செய்யும் தொகுப்புகளில் ஒன்று. இவரது வெளிவந்த தொகுப்புகளை பட்டியலிட இப்பந்தி காணாது. அவரை இருட்டடிப்பு செய்கிறேன் என்ற பழி வராதிருக்க ஒரு சில தரவுகள்.

**இவரது நூல்கள்**

வள்ளி,கல்லழகி, தகனம் (முருகையனோடு இணைந்து) குறும்பா,ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம், கண்மணியாள் காதை (கலட்டி), வீடும் வெளியும்,கோடை (3பதிப்பு), புதியதொரு வீடு, மஹாகவி கவிதைகள், மஹாகவியின் ஆறு காவியங்கள் (கல்லழகி,சடங்கு, கந்தப்பசபதம்,ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம், கண்மணியாள் காதை, தகனம்), மஹாகவியின் 3 நாடகங்கள், பொருள் நூறு.

தமிழ் கவிதை வரலாற்றைப் பேசுவோர் மூன்று கவிஞர்களை முக்கியப்படுத்துவர். **மஹாகவி, நீலாவணன், முருகையனே** அவர்கள். மின்னல் மழையைப் பாடாது இன்னல் உழைப்பை பாடுங்கள் என எம்மை வழிப்படுத்தியவர் இவர்

இவரது பிள்ளைகள் **பாண்டியன், சேரன், சோழன், ஔவை, இனியாள்.**

தகப்பனின் பெயரை தப்பாது காக்கும் இவர்களில். சேரனுடனும் ஔவையுடனும் எனக்கு சிறிய பழக்கமுண்டு, நெருங்கிய வகையில் அல்ல. மஹாகவிக்காகவும் அல்ல, மஹாகவியை நான் கண்டதுமில்லை. உண்மை.

இக்கதை மறுமலர்ச்சி சஞ்சிகையில் பிரசுரமானது. **மறுமலர்ச்சிச் சிறுகதைகள்** தொகுப்பு வ.கி.மா. பதிப்பகத் திணைக்களத்தில் அச்சாகியபோது 1997 டிசம்பரில் இக்கதையை நான் வாசித்தேன். அப்போது நான் அங்கு உற்பத்தி அலுவலராக இருந்தேன்.

செங்கை ஆழியான் தொகுத்த மற்றைய தொகுப்புகளான **ஈழகேசரி, ஈழநாடு சிறுகதைகள்** தொகுப்புகளின் வெளியீட்டிலும் நான் கணிசமான பங்கு வகித்திருந்தும் அதனை நான் ஆவணப் படுத்தவில்லை. அப்படி ஒரு விருப்பும் எனக்கு இருக்கவில்லை. சம்பந்தப்பட்ட ஏனையவர்களும் அதனைச் செய்யவில்லை.

முகநூல் குறிப்பொன்றில் ஏலவே இதனை நான் தெரிவித்திருந்தேன்.

**தூக்கணாங்குருவிக்கூடு**

**இக்கதை மறுமலர்ச்சி சஞ்சிகையில் பிரசுரமானது. மறுமலர்ச்சிச் சிறுகதைகள் தொகுப்பிலும் இடம் பெற்ற கதை.**

**சூரியன் உதித்து சுமார் ஐந்து நாளிகைப் பொழுதாகவும்,கண் விழித்து மறுபக்கம் திரும்பிப் படுத்தேன்.**

**என ஆரம்பித்து.**

**ஆனால் தூக்கணாங் குருவிகள் மட்டும், சுகமாக ஒன்றின் இறகை ஒன்று சொண்டினால் கோதிக் கொண்டிருக்கும்.**

**என்று முடியும் மஹாகவியின் ஒரே கதை எனக் கூறப்படும் இக்கதையை மறுமலர்ச்சி தொகுப்பில் அல்லது மறுமலர்ச்சி சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

மஹாகவி அவர்களுக்கு ஒரு அஞ்சலிக் கூட்டத்தை 1971 ஓகஸ்டில் ஆதவனின் தகப்பனார் கவிஞர். கதிரேசர்பிள்ளை ஒழுங்கு படுத்தியிருந்தார். பேச்சாளர் பட்டியலில் எனது பெயரும் இருந்தது. கூட்டத்திற்கு நான் போகவில்லை.

ஏன்?

உண்மையைச் சொல்கிறேன் பொருளாதார காரணத்தைத் தவிர பிறிதொரு காரணமும் இருக்கவில்லை.

**4 March 2018**

# பிடித்த சிறுகதை 34

**2**000 ஆண்டு செப்டம்பர் மாதம் **சரிநிகர்** பத்திரிகையும், **காலச்சுவடு** சஞ்சிகையும் இணைந்து சென்னையில் நடத்திய இலக்கிய மாநாடு **தமிழ் இனி. 2000. கடந்த நூற்றாண்டில் ஈழத்து மார்க்சிய இலக்கியம்** என்னும் தலைப்பில் நான் கட்டுரை சமர்ப்பிக்க இருந்தேன்.

நாட்டாரியல் சமபந்தமான கட்டுரை சமர்பிக்க இவர் இருந்தார். விமானத்தில் ஏறுவதற்கு முன் ஒரு இடத்தில் மாநாட்டுக்குப் போக இருப்பவர்கள் சந்தித்துக் கொண்டோம்.

இலங்கையின் பல கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் ஒரு சேர கண்டுகொள்ளும் சந்தர்ப்பம் எமக்கு ஏற்பட்டிருந்தது. அப்போதுதான் முதன் முதலாக இவரைக் கண்டு கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் சாகித்திய விழாவில் புகழ் பெற்ற முட்டை எறிவுப் போராட்டத்தில் கலந்து கொண்ட முற்போக்கு எழுத்தாளர் இவர்.

பின் நாட்களில் **பேரா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா** போன்றவர்கள் அந்தச் சம்பவத்திற்கு

வருத்தம் தெரிவித்த போதும் மரணம் வரை அதனை நியாயப் படுத்தி வந்தவர்.

**ஏ.இக்பால்.**

1938ல் அக்கரைப்பற்றில் பிறந்த இவர் திருமணத்தின் மூலம் களுத்துறை மாவட்டம். தர்கா நகர் வாசியாகியவர். அ.ஸ.அப்துஸ் ஸமதுவின் மாணவர்.

ஆசிரியராகி, ஆசிரியர் கலாசாலை வருகைதரு விரிவுரையாளராகி, கல்வியியற் கல்லூரி போதனாசிரியராகி ஓய்வு பெற்றவர்.

1959 ல் தினகரனில் (புதன் வசந்தம் ),படத்திற்கு கதை எழுதும் போட்டியில் **மறைந்த அன்னம்** என்னும் கதைக்காக முதற் பரிசு பெற்று சிறுகதை உலகுக்கு வந்தவர். இக்கதை 58 மே. தமிழ் - சிங்கள கலவரத்தை பகைப்புலமாகக் கொண்டது.

1962 ல் இளங்கீரனின் **மரகதம்** சஞ்சிகையில் **சந்தர்ப்பம்** என்ற இவரது கதை வெளிவந்தது.

**தேனருவி, சிந்தாமணி, அமுதம்** போன்றவற்றிலும் இக்பால் கதைகள் எழுதியுள்ளார்.

இவர் பின்நாட்களில் **எக்ஸில், முஸ்லீம் முரசு, பிறை ,நடை, தீபம்** ஆகியவற்றில் கவிதை,கட்டுரைகள் எழுதினார்.

**அமரர் அஸீஸ்** பற்றிய ஒரு புத்தகத்தின் முன்னுரைக்கு இவர் இன்னும் இருவருடன் சேர்ந்து எழுதிய விமர்சனப் புத்தகம் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய நிகழ்வும் கைகலப்பு ஏற்பட்ட சம்பவமும் ஒரு வரலாறு.

இவரது புனைபெயர்கள்: **லப்கி,அபுஜாவித, கீர்த்தி, கலா.**

மத்திய, மாகாண இலக்கியத்திற்கான விருதுகளும் இவருக்குக் கிடைத்துள்ளது.

**இவரது வெளிவந்த நூல்கள்**

முஸ்லீம் கலைச்சுடர் மணிகள் (வரலாறு),மௌலானா

ரூமியின் சிந்தனைகள் (கவிதை), மறுமலர்ச்சித் தந்தை (சாகித்தியப் பரிசு),பாக்கீர் மாக்கார், நம்ப முடியாத உண்மைகள், கல்வி ஊற்றுக்கண்களில் ஒன்று, இலக்கிய ஊற்று, மாயத் தோற்றம்(சிறுகதைகள்),பிரசுரம் பெறாத கவிதைகள், ஏ. இக்பால் கவிதைகள், வித்து, மெய்மை, புதுமை. முற்போக்கு இலக்கியவாதி **முகமத் சமீம்**,ஆய்வுகளும், திறனாய்வுகளும்,

இவரைப் பற்றி சில மாணவர்கள் பட்டப்படிப்புக்கான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

**ஏ.இக்பால் ஐம்பது வருட இலக்கிய ஆவணம்** என்ற நூலும் வெளிவந்திருக்கிறது. இவர் மட்டக்களப்புத் தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்க ஸ்தாபகர்களில் ஒருவர். இஸ்லாமிய இலக்கிய மன்றம், தர்காநகர் படிப்பு வட்டம் ஆகியவற்றின் செயலாளராகவும் இருந்தவர்.

வானொலி தொலைக்காட்சி நிகழ்வுகளில் இவரது பங்களிப்பு நிறையவே இருந்திருக்கிறது. இவர் எனது ஆசிரியர் என்று சொல்லிக் கொள்வதில் திக்குவல்லைக் கமால் பெருமைப்படுகிறார்.இவர் பத்திரிகை சஞ்சிகைகளில் குறைவாகவே கதைகள் எழுதினார். பெரும்பாலும் கவிதையே இவரது இயங்குதளம்.

**அகந்தை**

**மாயத்தோற்றம் என்னும் இவரது ஒரே ஒரு சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்ற 9 பிரசுரமாகாத கதைகளில் இதுவும் ஒன்று.**

**ஆதம்லெவ்வை என்கின்றவர் யாரு.?**

**எனத் தொடங்கி**

**அன்றோடு சண்டை ஒழிந்திருக்கும்.**

**என்று முடியும் இக்கதையை இவரது மாயத்தோற்றம்**

**தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**"என்ன நீங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்திற்கு கூழ் முட்டை எறிந்தீர்களாமே."** என ஒருவர் இவரைக் கேட்டபோது

**"எவன் சொன்னவன்.....? எந்தக் கடையில் கூழ் முட்டை விக்கிறாங்கள்...? நாங்கள் காசு குடுத்து நல்ல முட்டைதான் வாங்கி எறிந்தோம் "** என சீரியசாகக் கூறிய இக்பால் 2017 ல் மௌத்தாகினார்.

**5 March 2018**

பிடித்த சிறுகதை 35

**எ**ன் ஆரம்ப கால வாசிப்பில் எனக்கு அறிமுகமானவர் இவர். நான் எழுதப்போகும் தலைப்புக்கு இவரது இந்தக் கதை பொருத்தமோ நான் அறியேன். ஐவர் எழுதி வீரகேசரியில் 61 ல் பிரசுரமான ஒரு குறுநாவலின் முதல் அங்கம் இவருடையது. **கனக செந்திநாதன்** பதிப்பாசிரியராக இருந்து. குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்காக வியாபாரிமூலை கலாபவன அச்சகத்தில் அச்சிட்டு 1962 பொங்கல் தினம் வெளியிட்ட குறுநாவல் நூல் இது.

ஐந்து வர்ணங்கள் கொண்ட இக்குறுநாவலை தொடக்கி வைத்தவர் இவர். தொடர்ந்து **கனக செந்திநாதன், சு.வே, குறமகள், எஸ்.பொ.** என எழுதி முடித்திருந்தனர்.

**மதுரகவி. இ.நாகராஜன்.**

யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதியைச் சேர்ந்தவர் இவர். யாழ்ப்பாணம் பலாலிவீதி முகவரியில் வாழ்ந்தவர். ஆரம்பத்தில் மலையகத்தில் ஆசிரியராக இருந்தவர். ஈழகேசரியில் கடமையாற்றியவர். ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் **தமிழன்** பத்திரிகையிலும் இவர் கடமையாற்றி இருக்கிறார். தினபதி தினமொரு

சிறுகதைத் திட்டத்தில் **டானியல் அன்ரனி, பரமலிங்கம்** ஆகியோரின் கதைகளை சிபார்சு செய்ததன் மூலமும் இவரது பெயர் எனக்கு அறிமுகமானது.

குழந்தைக் கவிதைகள், கவிதைகள், கவிதை நாடகம், காவியம், சிறுகதை, நாவல் என பன்முக ஆளுமை கொண்டவர்.

எமது ஊரில் நடந்த பல கவியரங்குகளில் இவர் பங்குபற்றி இருக்கிறார். தமிழகத்தில் அண்ணாத்துரை காலாத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டிய கவிதைப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த இருவரது கவிதைகள் பாராட்டுப் பரிசுகளைப் பெற்றுக்கொண்டன.

ஒருவர் **இ.நாகராஜன்**, மற்றவர், **கவிஞர் அம்பி.**

**இவரது நூல்கள்**

சிலம்பு சிரித்தது(கவிதை நாடகம், கலைக்கழக பரிசு பெற்றது), நிறை நிலா (சிறுகதைத்தொகுப்பு, ராதா ரமணன் வெளியீடு, 1965,மித்ர வெளியீடு,2001), குயில் வாழ்ந்த கூடு (காவியம், 1972), வாழ்க்கை ஒரு வசந்தம் (நாவல்), மத்தாப்பு (வர்ணம்-1).

**மத்தாப்பு (வர்ணம்-1)**

**நாள் முழுதும் உழைத்துக் களைத்து நெஞ்சு நொந்த சூரியன், இரத்தம் கக்கிய வண்ணம் சரிந்தான்.**

**எனத் தொடங்கி**

**அவள் சிரிப்பு என்ன விளைவைக் கொண்டு வரப் போகின்றதோ யார் கண்டார்கள்.....?**

**என கனக செந்திநாதனுக்கு வழிவிட்டு நாகராஜன் விலகிக் கொண்ட இக்கதையை மத்தாப்பு தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஆளுமை மீதுறப்பெற்ற மதுரகவியை, அவரை பெரிதாக யாரும் இப்போது கண்டு கொள்வதில்லை. அவர் வறுமையின் பிடியில் தன் மரணகாலத்தில் கஸ்டப்பட்ட போதும் வசதி நிறைந்த அவரது எழுத்து சகபாடிகள்கூட அப்போதும் கண்டு கொள்ளவில்லை.

என்னே எழுத்துலகம்.?

**20 March 2018**

## பிடித்த சிறுகதை 36

மிகக் குறைவாக எழுதினாலும் காத்திரமான கதைகளைத் தந்த படைப்பாளி இவர். இவரை யாரும் கண்டுகொள்ளாமல் விட்டபோதும் **செங்கைஆழியான்** தொகுத்த **மறுமலர்ச்சி சிறுகதைகள்** தொகுப்பு எனக்கு இவரை அறிமுகப்படுத்தியது. 1997 டிசம்பரில் வெளிவந்த அத்தொகுப்பு மேலும் சிலரை நான் அடையாளம் காண உதவிற்று. அத்தொகுப்பின் உருவாக்கத்தில் பங்குகொண்டமையால் இந்த அனுபவம் எனக்கு சித்தித்தது.

### கு.பெரியதம்பி (குமரப்பர் பெரியதம்பி)

வடமராட்சியின் புற்றளை புலோலி தெற்கைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர். சிறந்த சங்கீதஞானம் உள்ளவர். கவிஞரும் கூட. மறுமலர்ச்சி சஞ்சிகையில் அதிகமான (6) கதைகள் எழுதியவர் என்று இவர் கவனப் படுத்தப்பட்டுள்ளார். **அம்மான் மகள், குழந்தை எப்படியிருக்கிறது?, காதலோ காதல், எட்டாப்பழம், மனமாற்றம், வீண்வதந்தி** என்பனவே அக்கதைகள். வரதர் வெளியிட்ட ஆண்டுமலர் ஒன்றில் பொங்கல் வாழ்த்து

என்றொரு கதையையும் இவர் எழுதியுள்ளார்.

**புலோலியூர் சொல்லும் கதைகள்** என்னும் தொகுப்பில் **புலோலியூர் கு.பெரியதம்பி, க.சதாசிவம், கந்தசாமி, தம்பையா, இரத்தினவேலோன்** எனும் ஐவரை (ஒருவிதத்தில் புனைகதை இலக்கிய உறவுகளை) பாராட்டத்தக்க வகையில் இரத்தினவேலோன் ஆவணப்படுத்தியுள்ளார். இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கருதப்படும் 1948 மாசியில் வெளிவந்த மறுமர்ச்சியின் 18 வது இதழில் ஹிந்துஸ்தான் தோடி ராகத்திலும், ஆதி தாளத்திலும் அமைந்த **ஈழத்தாய்** எனும் இவர் எழுதிய தேசியகீதம் என கருதக்கூடிய இவரது பாடல் வெளிவந்திருக்கிறது.

**அம்மான் மகள்**

**மறுமலர்ச்சி சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்று, மறுமலர்ச்சி இதழ் 7 ல் (1946/10) பிரசுரமாகி எழுத்துலகுக்கு இவரை அறிமுகமாக்கிய கதை இது.**

**நான் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன்.....**

**எனத் தொடங்கி**

**அவன் கண்களுக்கு இப்போது ஒரு தனி அழகுடன் பிரகாசித்தாள்**

**என்று முடியும் பரிசு பெற்ற இக்கதையை மறுமலர்ச்சி இதழ்கள் தொகுப்பில் அல்லது மறுமலர்ச்சி சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

யார் கவனியாது விடினும் வல்லது வாழும் என்பதற்கு கு.பெரியதம்பியின் கதைகளும் ஒரு நல்ல உதாரணம்.

**21 March 2018**

## பிடித்த சிறுகதை 37

இதுவரை முப்பத்தாறு சிறுகதைகளையும் எழுத்தாளர்களையும் பற்றி எழுதியிருக்கிறேன். ஆயினும் ஒரு பெண் எழுத்தாளினியும் உன் கவனிப்பைப் பெறவில்லையா என நீங்கள் யோசிக்கக் கூடும்.

ஒரு சுவாரஸ்யமான விடயத்தை - ஒரு விதத்தில் ஏமாற்றுத்தனமான விடயத்தை இங்கே பதிவிடுகிறேன். எனது சொந்தப் பெயரில் கதைகள் எழுதி அவை பிரசுரமாகாத காரணத்தினால், **நந்தினி** எனும் பெயரில் **பாரம்** எனும் கதையை சுதந்திரன் பத்திரிகைக்கு ஒரு கடிதத்துடன் அனுப்பி வைத்தேன்.

**"அல்வாயைச் சேர்ந்த செல்வி.நந்தினி எழுத்தார்வமுள்ளவர். ஈழத்தில் பெண் எழுத்தாளினிகள் அதிகளவில் இல்லையே என்னும் ஆதங்கம் இவருக்கு உள்ளது. இவரது முதற்கதையை பிரசுரிப்பதில் நாம் பெருமைப் படுகிறோம். "**

என்ற குறிப்புடன் அக்கதை 67. ல் பிரசுரமாகி

இருந்தது.

இந்த நிலமை பெண் எழுத்தாளினிகள் அதிக அளவில் ஈடுபடாத் தன்மை இன்னும் நீடிக்கவே செய்கிறது.

முன்னர் நான் ஒரு முறை குறிப்பிட்டது போல் எனது ஆரம்ப வாசிப்பனுபவத்தில் **மத்தாப்பு** குறு நாவல் மூலம் (**வர்ணம் - 4** ன் மூலம்) எனக்குஅறிமுகமாகிய முதல் ஈழத்துப் பெண் ஆளுமை இவர்தான்.

**குறமகள் - வள்ளிநாயகி இராமலிங்கம்.**

1933 ல் காங்கேசன்துறையில் பிறந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியை.(27 வருடங்கள்) ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்.(8 வருடங்கள்)வெளிவாரிப் பட்டதாரி. நாடக டிப்ளோமா பெற்றவர்.

முற்போக்கு சிந்தனையாளர். சிறந்தபேச்சாற்றல் வாய்க்கப் பெற்றவர். பெண்ணியவாதி. நடிப்பாற்றல் மிக்கவர். கவிதாயினி, கட்டுரையாளர்.

2016 ல் கனடாவில் காலமாகினார்.

**ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், கலைச்செல்வி, ஆனந்த விகடன்** போன்றவற்றில் எழுதியவர். **மத்தாப்பு** போல் 1975 ல் மாணிக்கம் இதழில் 10 பேருடன் இணைந்து **கடல் தாரகை** எனும் குறுநாவலை எழுதினார்.

**டொமினிக்ஜீவா, டானியல்,எஸ்.பொ. கனக செந்திநாதன்** போன்ற எதிர் எதிர் அணியினருடன் நட்பாக இருந்தவர். அது பற்றி ஒரு பேட்டியில் **“ஒரு முற்போக்கான எழுத்தோட்டம் என்னிடமும் சக எழுத்தாளரிடையேயும் காணப்பட்டது. ”** என்று குறிப்பிட்டுள்ளார். இவரது பிரதேசத்தில் உள்ள மாவிட்டபுர ஆலயப் பிரவேசம் குறித்த பிரச்சனையில் ஒடுக்கப் பட்ட மக்கள் சார்பான நிலைப்பாட்டை எடுத்தவர். டானியல் கலந்து கொண்ட கூட்டங்களில் பேச்சாளியாக கலந்துகொண்டவர்.

வாழ்வைத்தேடு, ஆளுமைகள் அழிகின்றன, ஒரு படம் பூரணத்துவம் பெறுகின்றது, கொள்கைத்தடாகத்தில் என்பன, இவரது சிறப்பான கதைகளில் சில.

**இவரது நூல்கள்**

குறமகள் கதைகள்(2000), உள்ளக்கமலமடி(2001, மித்ர), இராமபாணம்(கட்டுரைகள்), ஈழத்து றோஜா, குருமோகன் பாலர் பாடல்கள், மாலை சூட்டும் நாள், கூதிர்காலக் குலாவல்கள்.

**போலிக்கௌரவம்**

**ஈழகேசரி 1/5/55, 8/5/55 இரு இதழ்களில் வெளிவந்து இவரை தமிழ்சிறுகதை உலகுக்கு அறிமுகமாக்கிய கதை இது.**

**இவரது முதல் கதையும் இதுவே.**

**பூம் .......பூம்........பூம்...**

**எனத் தொடங்கி**

**கௌரவம் உடைய தலைவர்களைப் பார்க்க**

**இது ஒரு அரிய சந்தர்ப்பம் அல்லவா.**

**என்று முடியும் போலிக்கௌரவம் எனும் இக்கதையை ஈழகேசரி சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இத்தொகுப்பு **நூலகம். Com**. தரவிறக்கி வாசிக்கலாம். நூல் **எண். 17075.**

இழப்புகள் சகஜமாகிப்போன கடந்த காலத்தில் மகளை போர்க்களத்தில் காவு கொடுத்த வீரத்தாய்களில் குறமகளும் ஒருவர் என்பது இப்பதிவுக்கு சம்பந்தப்படாவிட்டாலும் ஏனோ என்னால் இதை எழுதாமல் தவிர்க்க முடியவில்லை.

**23 March 2018**

பிடித்த சிறுகதை 38

ஈழநாடு 10 ஆம் ஆண்டு நிறவை ஒட்டிய நாவல் போட்டியில் முதற்பரிசினை **சு.இராஜநாயகன். (பிரயாணி) செங்கை ஆழியான் ( போராடப் பிறந்தவர்கள்) (நூல்வடிவில் இரவின் முடிவு)** பகிர்ந்து கொண்டனர்.

இரண்டாம் பரிசினை இவரது **எரிகோளம்** (நூல்வடிவில் **எரி நெருப்பில் இடை பாதை இல்லை).** எனது **மேகங்கள்** நாவல் என்பன பகிர்ந்து கொண்டன.

இவரோடு அப்பரிசைப் பகிர்ந்து கொண்டமை மகிழ்வைத் தந்த போதும் ஒருவித தயக்கம் எனக்கு இருந்தது.

அப்போதே இவர் நாடறிந்த மூத்த முற்போக்கு எழுத்தாளர். நானோ 19 வயது வளரிளம் பருவத்தவன்.இவர் போன்றவர்களின் எழுத்து உபாசகன்.மலையும், மடுவும்.நான் வாசித்த இவரது முதல் நூல் **இருளினுள்ளே (1968)** குறுநாவல் தொகுதி. இதுவே இவரது அச்சில் வந்த முதல் தொகுதி.

**எஸ்.அகஸ்தியர்.**

ஆனைக்கோட்டையில் 1926 ல் பிறந்த இவர் கீரிமலை வலித்தூண்டலில் திருமண பந்தத்தால் வசிப்பிடம் பெற்றவர்.

பொலிஸ் சேவையிலும் பின்னர் இராணுவ உணவுக் களஞ்சியத்தில் காப்பாளராகவும் கடமையாற்றியவர். தொழில் நிமித்தம் கண்டியில் 17 வருடங்கள் வாழ்ந்துள்ளார்.

1995. ல் இவரது இறப்பு பிரன்ஸில் நிகழ்ந்தது.

360 சிறுகதைகள், 40 குட்டிக்கதைகள், 09 நாவல்கள, 10 குறு நாவல்கள். பல உணர்வூற்றுச் சித்திரங்களை இவர் எழுதியிருக்கிறார்.

1947ல் சுதந்திரனில் **பிரேத பரிசோதனை, பங்காளிச் செய்தி** ஆகிய கதைகளை எழுதியதன் மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமாகியவர். முற்போக்கு எழுத்தாளர் சங்க மூத்த உறுப்பினர். ரஸ்ய சார்பு கொள்கை உடையவர். இவரது எழுத்துக்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்கானவை.

யாழ்ப்பாணப் பேச்சு மொழியை தன் படைப்புகளில் திறமையாகப் பயன்படுத்தியவர்.

**வட்டி, கடல்சிரித்தது, மகாகனம் பொருந்திய, மேய்ப்பர்கள்** போன்ற நல்ல சிறுகதைகளின் சொந்தக்காரர்.

இலங்கை வானொலியில் அதிக சிறுகதைகள் எழுதியுள்ளார். **சுதந்திரன், தினகரன்,வீரகேசரி, செய்தி, ஈழநாடு, மல்லிகை, தாமரை, பரீஸ் ஈழநாடு, ஈழமுரசு, தமிழன்** போன்றவற்றில் இவர் எழுயுள்ளார். இவரது இலங்கையில் வெளிவந்த நூல்கள் NCBH நிறுவனத்தால் மீள் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன.

1970ல் தாமரை இதழ் இவரது அட்டைப் படத்தைத் தாங்கி வெளிவந்தது.

**ஆலடியம்மன், காலன், தீட்சண்யன், எஸ்.ஏ. அருளம்பலனார், லெனினிஸ்ட், கலைதாசன், புதுமைப்பபிரியன்** என்பன இவரது புனைப்பெயர்கள்.

மல்லிகை சஞ்சிகையும் இவரை 1982 பெப்ரவரி இதழில் அட்டைப்படமாக்கி கௌரவித்துள்ளது.

**இவரது அச்சில் வந்த நூல்பட்டியலில் இருந்து சில -**

இருளினுள்ளே(குறுநாவல்கள்), திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள்(நாவல்), மண்ணில் தெரியுதொரு தோற்றம் (நாவல்), எரிமலை (நாவல்), எரிநெருப்பில் இடை பாதை இல்லை(எரிகோளம் நாவல்), நரகத்திலிருந்து (குறுநாவல்), பூந்தான் யோசப் வாழ்க்கை வரலாறு, மேய்ப்பர்கள்(சாகித்திய விருது சிறுகதை),லெனின் பாதச்சுவடு, அகஸ்தியர் பதிவுகள், நீ (உணர்வூற்று உருவகம்), ஒரு குப்பி விளக்கு எரிகிறது, அகஸ்தியர் கதைகள், எவளுக்கும் தாயாக.

**கடல் சிரித்தது**

**18/1/1959ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**மூன்று நாட்களுக்கு முன் அந்தக் கடற்கரையில் முத்து பிணமாகக் கிடந்தான்**

**எனத் தொடங்கி**

**சிறிது நேரத்தில் தனது அலைக் கரங்களால் கடல் தாய் அவனைத் தாலாட்டி மீளா நித்திரைக்கு ஆளாக்கினாள்.**

**என்று முடியும் கடல் சிரித்தது கதையை சுதந்திரன் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் இங்கு சில விமர்சகர்கள் அவரைக் குறிப்பிடவில்லை. இவரைக் குறிப்பிடவில்லை, அவரை இருட்டடிப்பு செய்துவிட்டனர் என்று காரசாரமாக வாக்குவாதபட்டார்கள்.

அந்த விமர்சகர்களை அவன், இவன் என்று நாகரீகக் குறைவாக திட்டினார்கள்.

ஐயா பெரியவர்காள், சற்று கவனம் கொள்வீர்காள்.

நீங்கள் திட்டித் தீர்த்த அந்த விமர்சகர்கள் தமது அணிசேர்ந்த அகஸ்தியரை பெரிதாக கண்டு கொள்ளவில்லையே.

அது பற்றி அகஸ்தியரும் 95 வரை அலட்டிக்கொள்ளவில்லை. அவர்களோடு பகைத்துக்கொள்ளவும் இல்லை.

யாரும் தம்மைப் பாராட்டவேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதுபவர்களுக்கு இது ஒரு அடி.

**24 March 2018**

பிடித்த சிறுகதை 39

இவரை எனக்குத் தெரியும். இவரிடம் நான் படித்தவனல்ல. காவி நஷனலுடன் இலங்கையில் முதன் முதல் ஸ்ரீலங்கா வித்தியாசாலை எனும் பெயருடன் அல்வாயில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின்- இதனை ஆரம்பித்ததில் முருகேசு வாத்தியாருடன் இணைந்து பணியாற்றியவர் தலைமையாசிரியராக இருந்தவர். பல கவியரங்கங்களில் தலைமை தாங்கிக் கவிபாடிய கவிஞர். நானும் எனது நண்பர்கள் இருவரும் இணைந்து இவரது மரணத்தின் 31ம் நாள் ஒரு நினைவு மலரை வெளியிட்டோம். அந்த நண்பர்களும் (வயது 15,16. நிறைந்தவர்கள்.) அவரிடம் கற்றவர்கள் அல்ல.

பிறகு எப்படி? அவர் மீது இருந்த அபிமானம் ஒன்றே.

**அல்வாயூர் மு.செல்லையா**

**முருக வரோதயன், அபூதன், அனுசுயா** என்பன இவரது புனைபெயர்கள்.

**சூரனால்** ஆரம்பிக்கப்பட்ட தேவரையாளி இந்துப் பாடசாலையின் முதல் தலைமையாசிரியராக இருந்தவர்.

பெயர் பெற்ற கவிஞர்கள் சிறுகதை எழுதியிருக்கிறார்கள் என்பதை நம்மில் பலர் அறியமாட்டார்கள். எனது வரவிருக்கும் பதிவுகளில் அவர்களை நான் ஆவணப் படுத்துவேன்.

நமது செல்லையா **ஈழகேசரி** பண்ணையில் வளர்ந்தவர்.கவிதைகள் மட்டுமல்ல ஆலயப் பதிகங்கள். கட்டுரைகள் நிறைய எழுதியவர்.

இவரது பணிகுறித்த ஒரு முழுமையான நூல் ஆர்வமுள்ள இளைஞர்கள் சிலரால் நூலாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதற்கான தேடுதலில் ஈடுபட்டிருக்கும் சு.குணேஸ்வரன் ஈழகேசரியில் வெளிவந்த நாற்பது கட்டுரைகளில் பத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை தாம் அடையாளம் கண்டுள்ளதாகக் கூறுகிறார். சிலர் அவரது கூற்றை மறுதலிப்பதாகவும் கூறினார்.

நான் கூறினேன். **“சிலர் சிறுகதை,கவிதை என்ற பெயரில் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். செல்லையா வாத்தியார் கட்டுரை என்ற பெயரில் கதை எழுதியிருக்கிறார். நாம் வாசகர்கள், அதைத் தீர்மானிக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. வடையைச் சுடுங்கள். மசால்வடையா.? மெதுவடையா.? என்பதை சாப்பிடும் நாங்கள் சொல்கிறோம்.”** என்றேன்.

வாத்தியாரின் முழுத்தொகுப்பு வெளிவந்து விட்டது.

1952 ல் செல்லையா வாத்தியாரின் **வளர்பிறை** தொகுதி வெளிவந்தது.

**கவிதை வானில் ஒரு வளர்பிறை** எனும் அந்தநூல் பற்றிய, ஒரு நூலை **கனக செந்திநாதன்** எழுதி வெளியிட்டார்.

இது எங்கள் கவிஞருக்குக் கிடைத்த அங்கீகாரம்.

**வளர்பிறை** யில்தான் **தோட்டிகளின் துயரக் குரல்** கவிதை இருக்கிறது.

இலங்கை வானொலி நிலையம் நடத்திய கவிதைப் போட்டியில் இவரது **புதிய வண்டுவிடுதூது** தங்கப்பதக்கம் பரிசு பெற்றது.

அதில்தான் ஏழ்மைபற்றிய **“நெய்திடு நூலினும் தைத்திடு நூலதி நீளம் ”** எனும் வரி வருகிறது.

**காதல் காற்சட்டை**

**யாழ்ப்பாணம் ஒட்டியுள்ள ஒரு பகுதி புறநகர் என்று சொல்லலாம்.**

**என ஆரம்பித்து**

**பார்வதி அதைக்கையில் வைத்தபடி நெடுநேரம் பதுமைபோல் நின்றாள்.**

**என்று முடியும் காதல் காற்சட்டை எனும் இந்தக் கதையை ஈழநாடு சிறுகதைகள் 1ம் பாகத்தில் வாசியுங்கள் நண்பர்களே.**

வெளிவந்த இருக்கும் செல்லையா வாத்தியார் பற்றிய தொகுப்பு, இன்னும் அவர் குறித்துப் பல தகவல்களைத் தரும்.

**30 March 2018**

## பிடித்த சிறுகதை 40

எனது இந்தத் தொடரில் இடம் பெற்ற, இடம் பெறப் போகின்ற எழுத்தாளர்கள் பலர் எனது கொள்கையின் எதிரணியினரே.

நான் ஓர் இடதுசாரிச் சிந்தனையாளன், எனது வாசிப்பு அனுபவத்தில் காய்தல் உவத்தலின்றி என்னை கவர்ந்தவற்றை பதிவு செய்வதுதான் என் பணி. என் போன்றவர்களை கணக்கிலெடுக்காத மேதாவி விமர்சகர்களையும், எழுத்தாளர்களையும் நான் எனது ஐம்பது வருடத்திற்கு மேற்பட்ட எழுத்துலக வாழ்வில் எதிர் கொண்டுள்ளேன். பரவாயில்லை எனது வாசிப்பு அனுவத்தைக் கொச்சைப்படுத்த எந்தக் கொம்பனுக்கும் அதிகாரமில்லை என்பதை கொஞ்சம் தூக்கலாகவும், அதே நேரம் பணிவாகவும் இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

இவர் ஒரு கவிஞராகவே பரவலாக அறியப்பட்டவர். செல்வநாயகம் உபாசகர்.

தமிழரசுக் கட்சிக்காரர். பல மேடைகளில் கவிபாடும் ஒருவராக இவரை நான் கண்டிருக்கிறேன்.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டிய **பூம்புகாரில் ஒரு நாள்** கவிதைப்போட்டியில் பரிசு பெற்ற இலங்கையர் இருவரில் ஒருவர். மற்றவர் **இ.நாகராஜன்.**

**இலட்சிய சோடி** எனும் தினகரனில் எழுதிய கதையின் மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமாகியவர்.

**அம்பி --இராமலிங்கம் அம்பிகைபாகன்**

நாவற்குழியில் வசதியற்ற குடும்பமென்றில் 17/2/1929 பிறந்த **இ.அம்பிகைபாகன்.** தனது விடாமுயற்சியால் கல்வி கற்று தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆசிரியரானார். பிறகு ஓட்டமாவடி முஸ்லீம் ம. மகாவித்தியாலயத்திலும், மட்டக்களப்பிலும் ஆசிரியராக இருந்து, பின்னர் இலங்கை பாடவிதான அபிவிருத்தி நிலையத்திலும் கடமையாற்றினார்.

பணி நிமித்தம் பப்புவா நியூகினிக்கு 1981 ல் சென்ற இவர் 1992ல் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து அங்கு வாழ்கிறார்.

**இவரது நூல்கள் சில**

அம்பி பாடல்கள் (சிறுவர் கவிதைகள்), கொஞ்சும் தமிழ் (சிறுவர்கவிதைகள் சாகித்தியப்பரிசு), அந்தச் சிரிப்பு, வேதாளம் சொன்ன கதை (கவிதை நாடகம்), கிறீனின் அடிச்சுவடு(Dr. கிறீன் பற்றிய இவரது முயற்சியினால் அவருக்கு முத்திரை வெளியிடப்பட்டது), அம்பி கவிதைகள், இன்னும் பல நூல்கள்.

**வேதாளம் சொன்ன கதை** அமரர். லடீஸ் வீரமணியினால் வில்லுப்பாட்டாகவும், அமரர் சுஹைர் ஹமீட்டின் நெறியாள்கையில் மேடை நாடகமாகவும் அரங்கேற்றப்பட்டது.

**யாழ்ப்பாடி இளைய பத்மநாதனின்** அண்ணாவியத்தில் அவுஸ்த்திரேலியாவில் அரங்கு கண்டது.

**நழுவிய பழம்**

**16/9/56. ல் ஈழகேசரியில் பிரசுரமான கதை இது.**

**இவ் இதழில் 11 கதைகள் இவர் எழுதியிருப்பதாக ஒரு குறிப்புக் கூறுகிறது.**

**கிளைகள் எறிந்து விழுதுவிட்டுப் பரந்து நின்ற அந்த ஆலமர நிழலில் இராமு நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தான்.**

**எனத் தொடங்கி,**

**மரத்திலிருந்த பறவையினம் தம் பிடியினின்றும் நழுவிய பழங்களையிட்டுக் கவலைப்படாமல் தவறாத பழங்களைத் தேடிப் புசித்து கும்மாளமிட்டன.**

**என்று முடியும் நழுவிய பழம் எனும் இக்கதையை ஈழகேசரி சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

விருத்தாப்பிய வயதில் அவுஸ்திரேலியாவில் வாழும் அவரை வாழ்த்துவோமாக.

**31 March 2018**

## பிடித்த சிறுகதை 41

எனது இரண்டாவது நாவலான **கடற்கரையில் தென்னைமரங்களும் நிற்கின்றன**வை தினபதி காரியாலயத்தில்(எம்.டி.குணசேன) ஒப்படைத்த வருடம் 1974. சிந்தாமணி ஆசிரியரான இவரை அங்கு கடமையாற்றிய **ஈழவாணன்** மூலம் சந்தித்து உரையாடினேன்.

தினபதி அரசியல் காரணங்களால் நிறுத்தப்பட்ட போது இவரும் பதவி இழந்து, பிரதியே இல்லாமல் எனது நாவலும் இல்லாது போய் விட்டதென்பது ஒரு துர்ப்பாக்கியம்.

**இராஜ.அரியரத்தினம்**

15/1/16 ல் பிறந்த இவர். ஆங்கிலத்தில் ஆரம்பத்தில் கட்டுரைகள் எழுதத் தொடங்கியவர். பின்னர் தமிழில் எழுதத் தொடங்கினார்.

ஈழகேசரி ஆசிரியராக அது நிறுத்தப்பட்ட 58ல் இருந்தவர். ஈழநாடு பத்திரிகையில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகவும் **சிந்தாமணி** யின் ஆசிரியராகவும் இருந்தவர். ஈழகேசரி காலத்தில் பலரை இவர் எழுத்துலகுக்கு அறிமுகமாக்கினார். அதில்

**தங்கப்பூச்சி** எனும் புதினத் தொடரை 50 களில் எழுதினார். தோமஸ்மான் என்னும் ஜேர்மன் எழுத்தாளரின் புதினம் ஒன்றை **மனவிகாரம்** என மொழிபெயர்த்து **சோனாசலம்** என்ற புனைபெயரில் ஈழகேசரியில் வெளியிட்டுள்ளார்.

**அழகு சுப்பிரமணியம்** ஆங்கிலத்தில் எழுதிய சிறுகதையை **சேதுப் பாட்டி** என தமிழில் மொழிபெயர்த்து 1949 லேயே அவரை ஈழகேசரியின் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியவர். குறைவான சிறுகதைகளே எழுதினாலும் இவரது நிறைவான கதைகள் அவை. **அரியம், அரியரத்தினம், சோனாசலம்** என்ற பெயர்களிலும், **சோனாசலக்கவிராயர்** என்ற பெயரில் கவிதைகளும் எழுதியுள்ளார்.

**வயலுக்குப் போட்டார்**

**18/2/45 ல் ஈழகேசரியில் பிரசுரமான இவரது முதற்கதை இது. சிற்பி தொகுத்த சிறுதைத் தொகுப்பில் வெள்ளம் என்ற பெயரில் இக்கதை பிரசுரமாகியுள்ளது. இவரது மற்றைய கதை வாழ்வின் சாயை**

**மின்னல் மின்னி இடி இடித்தது....**

**எனத் தொடங்கி**

**சுப்பர் போகின்ற போக்கிலே குடிசை "பொலு பொலு" என்று இடிந்து மண்ணோடு மண்ணாகி விடுமா.?**

**என்று முடியும் வயலுக்குப் போட்டார் கதையை ஈழகேசரிச் சிறுகதைகள் தொகுதியிலும்,வெள்ளம் என்ற பெயரில் சிற்பி தொகுத்த ஈழத்து சிறுகதைகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது மரணம் 28/05/98 ல் நிகழ்ந்தது. நமது மண்ணில் மரணிக்காத பல ஆளுமைகளின் பட்டியலில் இந்தியாவில் மறைந்த இவரது பெயரும் தவிர்க்க முடியாது பதிவாகி விட்டது.

**2 April 2018**

பிடித்த சிறுகதை 42

இவர் ஒரு உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர். ஆங்கிலத்தில் தமது படைப்புகளை வெளியிட்டவர். யாழ்ப்பாணத்தில் 15/3 /1915 ல் நீதிபதி ஒருவரின் மகனாகப் பிறந்து லண்டனில் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். அங்கேயே நெடுங்காலம் வாழ்ந்தவர். இலங்கை உயர் நீதிமன்ற வழக்குரைஞராக இருந்தவர்.

சட்டத்துறையை விட இலக்கியத்துறையை நேசித்தவர். ஆங்கிலத்தில் எழுதிய இவரை ஈழகேசரியின் மூலம் தமிழுக்கு அறிமுகப் படுத்தியவர் இராஜ அரியரத்தினம்.

அழகு சுப்பிரமணியம்

இவர் இந்தியாவில் இருந்த காலத்தில் இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க இணைச் செயலாளராகவும் இருந்துள்ளார். அதனால் இவரை ஒரு இந்தியராகவே கருதியிருந்தனர். **Indian Writing** எனும் இதழின் இணையாசிரியராக இவர் லண்டனில் இருந்த காலத்தில் இருந்துள்ளார்.

**இவரது Lovely Day (வனப்புமிக்க நாள்)** எனும் கதை **இந்தியாவில் வெளிவந்த மிகச் சிறந்த இந்தியச் சிறுகதைகள்** என்னும் ஆங்கிலத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

**உலக இலக்கியத்தின் உன்னத சிறுகதைகள்** எனும் ஹைடல் பேர்க் நகரில் வெளியிடப்பட்ட தொகுப்பில் இவரது **The Mathamatician** (கணிதவியலாளன்) கதை சேர்க்கப்பட்டுள்ளது.

இவரது முதல் ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பு **The Big Girl** (பெரியபிள்ளை) 1964 ல் வெளிவந்தது.

**Clossing Times & Other Stories** தொகுப்பு இவர் உடுப்பிட்டியில் மரணமான 15/2/1973 க்கு பின்னர் திருமதி செல்லக்கண்டு அழகு சுப்பிரமணியத்தினால் வெளியிடப்பட்டது.

திருமதியின் வேண்டுகோளுக்கிணங்க அமரர் ராஜ. ஶ்ரீகாந்தன் அவரது படைப்புகளை தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். **நீதிபதியின்மகன்** என்ற பெயரில் 1999 ஜுனில் கணிதவியலாளன், விமானத்தாக்குதல், வனப்புமிக்க நாள், அப்புக்காத்து, மலேயா ஓய்வூதியக்காரர், தொலுக்கு முதலி, ரெனிஸ், நீதிபதியின் மகன்,முள்ளுக்கரண்டி, கூலிக்குமாரடிப்போர், கல்விமான், மூடும் நேரம் எனும் 12 கதைகள் நூல்வடிவம் பெற்றுள்ளன.

ராஜ. ஶ்ரீரீகாந்தன் இவரின் **Mr.Moon** எனும் ஒரே ஒரு நாவலை தமிழாக்கி மல்லிகையில் வெளிரச் செய்தார். படைத்தவரும் படைப்பை மொழிபெயர்த்தவரும் காலமாகிவிட்ட சூழலில் அந்த முயற்சி தடைப்பட்டுள்ளது.

அழகு சுப்பிரமணியத்தின் அட்டைப்படம் மல்லிகையில் 1971 மார்ச்சில் பிரசுரமாகி இருக்கிறது. ஏ.ஜே, டொமினிக் ஜீவா இருவரும் இவருடன் நீண்ட தொடர்பாளர்களாக இருந்தனர். ஆர்வலர்கள் கவனம் கொள்ளவேண்டிய தருணங்கள் இவை.

**சேதுப் பாட்டி**

**17/7/49ல் இக்கதை தமிழில் இராஜ அரியரத்தினத்தால் மொழிபெயர்க்கப்பட்டு**

ஈழகேசரியில் பிரசுரமானது.

யாழ்ப்பாணத்தில் மழை ஒழுங்காகப் பெய்வதில்லை.

என ஆரம்பித்து

பாட்டியுடன் பாரிகசித்துப் பேசுவது நின்றது போலவே கிழவியின் தோசைச் சாப்பாடும் நின்று விட்டது.

என்று முடியும் இக்கதையை ஈழகேசரிச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

ஏனைய 12 கதைகள் ராஜ. ஸ்ரீகாந்தன் மொழி பெயர்த்த நீதிபதியின் மகன் தொகுப்பில் வாசிக்கலாம்.

ஜேர்மன்,பிரெஞ்சு, ரஷ்ய மொழிகளில் இவர் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பிரபல ஆங்கில நாவலாசிரியரும்,விமர்சகருமான **பால்ரர்**நம் அழகு சுப்பிரமணியத்தின் படைப்புகள் பற்றிக் கூறிய கூற்றை முத்தாய்ப்பாக இங்கே பதிவிடுகிறேன, பெரிமிதத்தோடு.

**“எமது கருத்துப்படி அழகு சுப்பிரமணியம் ஒர் அற்புதமான எழுத்தாளராவார். இவரை போன்ற மிகச்சிறந்த எழுத்தாளர் மூலமே மேற்குலகில் நாங்கள் கீழைத்தேசங்களைத் தரிசிக்கிறோம்.இவரது படைப்புகள் பெரும்பாலும் இலங்கைப் பின்னணியிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இதே போன்று இவரது கதைகள் ஆங்கில வாழ்க்கைப் பகைப்புலத்தில் ஆங்கிலேயர்களுக்கே சவால் விடக்கூடிய முறையில் இவர் சில கதைகள் எழுதியிருக்கிறார்.”**

இத்தருணத்தில் எனது மனத்தில் நம் மற்றொரு ஆளுமை சீ.வி.வேலுப்பிள்ளையின் நினைவு துளிர்ப்பதை மறுதலிக்க முடியவில்லை.

**2 April 2018**

பிடித்த சிறுகதை 43

**நா**ன் இனி எழுதப்போகும் இரு மரபுக் கவிஞர்களும் ஒரே பெயரை உடையவர்கள். ஊர்ப் பெயர்கள் மட்டுமே அவர்களை வேறுபடுத்திக் காட்டிற்று. தொழில் நிமித்தமும் ஒரே இடத்தில் கடமையாற்றியமையும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். இளம் தலை முறைக்கு எனக்கேற்பட்ட பெயர் மயக்கம் ஏற்படா வண்ணம் இப் பதிவைச் செய்ய விளைகிறேன்.

**க.செ.நடராஜா நாவற்குழியூர் நடராஜன்.**

30/6/1919 ல் நாவற்குழியில் பிறந்த இவர். 17/2/1994 ல் கனடாவில் காலமாகினார். தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் ஒரு கலாநிதியும் கூட. கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராக இருந்த இவர் 50 பதுகளில் இலங்கை வானொலியில் சேர்ந்து 53 ல் தமிழ்ச்சேவைப் பணிப்பாளரானார். கவிஞராக அறியப்பட்ட இவர் 1943 ல் **மோகினி** எனும் கதையுடன் ஈழகேசரி மூலம் அறிமுகமாகினார். தொடர்ந்து ஈழகேசரியில் **கைகள்,மாயாவி, மாமி,** என்னும் கதைகளை எழுதினார். **மாமி** கதை

**ஈழகேசரிச் சிறுகதைகள்** தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. **சாயை** என்னும் ஒரே ஒரு கதையை மறுமலர்ச்சி யில் எழுதியிருக்கிறார். இவரது பாடல்கள் சில மெல்லிசையாகி உள்ளன. மறுமலர்ச்சி இதழில். நாங்கள், பெரிதும் சிறிதும்,சுழற்சி, கேட்டியோ பாரதி, சிறை, எனக்கு அது முடியாது, தெரியாதா?, பச்சைபச்சையாய், என் மனைவிக்கு, என்முன் இருந்த தெய்வம். ஆகிய கவிதைகளை எழுதியுள்ளார்.

**இவரது நூல்கள்**

வையாபாடால், கவிக்கற்பரசி, சிலம்பொலி, ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி(இரு பதிப்புகள், சாகித்தியப் பரிசு). உள்ளதான ஓவியம் (600 பாடல்கள் அடங்கிய காவியம்).

இவர் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவராகவும் இருந்துள்ளார்.

**சாயை**

**வரதருடன் இணைந்து மறுமலர்ச்சி சங்கத்தை நிறுவி மறுமலர்ச்சி இதழின் வெளியீட்டாளராக இருந்து அவ்விதழில் இவர் எழுதிய கதை இது.**
**சிறிய கதைதான் ஆயினும்.....முதல் கோணம்.**
**இரண்டாம் கோணம்.ஹிருதய பாகம் என இக்கதை மூன்று பகுதிகளாக விரிகிறது. அக்காலத்து பரிசோதனைக் கதை முயற்சியாக இதனை நான் பார்க்கிறேன்.**
**அதோ பார்த்தாயா சோமு.காற்றிலே புடவைத் தலைப்பு படபடக்க........**
**என ஆரம்பித்து**
**ம்....டேய்...டேய் வாடா இங்காலே**
**என்று முடியும் சாயை கதையை மறுமலர்ச்சி இதழ் தொகுப்பில் அல்லது மறுமலர்ச்சிச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**
பெயர்களில் வரும் எழுத்துகளும் மயக்கம் தருவன. நடராஜன், நடராசன். **3 April 2018**

## பிடித்த சிறுகதை 44

**பெ**யர் மயக்கத்தை ஏற்படுத்தும் இரு கவிஞர்கள் பற்றியும், அவர்களில் ஒருவர் பற்றியும் பி.சி. 43ல் எழுதியிருந்தேன். இறுதி நேரத்தில் எனக்கு ஏற்பட்ட ஒரு மயக்கம் காரணமாக பெரிய தகவல் பிழை ஒன்றை எழுதுவதில் இருந்து நான் தப்பித்துக்கொண்டேன்.

நான் எழுதப்போகும் கதைக்கு உரிய இவரே பிரபல மொழி பெயர்ப்பாளர் **சரோஜினிதேவி அருணாசலம்** அவர்களின் தந்தையாராவர்.

**நாவாழியூர்.சோ. நடராஜன்**

1934ல் முதற் கதை **மாலினி அல்லது மலைக்கோட்டை,** மற்றது **அபயன்**

நவாலியூர் சத்தியநாதன் என்னும் இவர் மேற்படி புனை பெயரிலேயே கதைகள் எழுதியுள்ளார்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் இவர். பண்டிதர் சோ.இளமுருகனாரின் தம்பி.

அரச கரும மொழிகள் திணைக்களம், கலைச்சொல் ஆக்க குழு, இலங்கை வானொலி ஆகியவற்றில்

கடமையாற்றியவர்.

மறுமலர்ச்சி இதழில் **எங்கே காணலாம், மோட்டு விக்கிரகம், கழுதை** என்ற மூன்று கவிதைகளை எழுதியுள்ளார்.

எமது ஆரம்பக் கல்விக் காலத்தில் **நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்** என்ற (3பாகம்) **Dr. ஜி.ஸி. மென்டிஸ்** எழுதிய சரித்திரப் புத்தகம் ஒன்றைப் படித்தோம். கொழும்பு அப்போதிக்கரிஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்ட அப் புத்தகங்களை தமிழாக்கியவர் இவரென அப்போது எமக்குத் தெரியாது.

அனேக நூல்களை இவர் மொழிபெயர்த்துள்ளார். ரவீந்திரநாத் தாகூரின் **கீதாஞ்சலி**, மகாகாவி காளிதாசரின் **மேகதூதம்** , **எச்.எம்.பல்யூசி** எழுதிய **பஹுவுல்லா**(சுருக்கமான வாழ்க்கை வரலாறு),**தம்மபதம்** என்பன அவற்றில் சில. கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்ட **வடமொழி இலக்கிய வரலாறு செம்மொழிக்காலம்** 2003 ல் சென்னை ராஜராஜன் பதிப்பகம் வெளியிட்ட **சித்தார்த்தா** என்பனவும் இவரது நூல்களே. இன்னும் இருக்கலாம்.

இறுதிகாலத்தில் பௌத்த மதத்தைத் தழுவி துறவி யானவர்.

**யாப்பனே தர்மரத்ன தேரர்** என இவர் அழைக்கப்பட்டதாக ஒரு தகவல்.

**கற்சிலை**

**29/6/41 ல் ஈழகேசரியில் இக்கதை பிரசுரமானது.**

**பலராலும் சிறந்த சிறுகதையாக சிலாகிக்கப்படும் இக் கதை. 1942ல் சென்னை அலயன்ஸ் பதிப்பகம் வெளியிட்ட 50 சிறுகதைகள் அடங்கிய கதைக்கோவை.- 2ல் சேர்க்கப்பட்டுள்ளது. 2013 ல் இத்தொகுப்பு 3ஆம் பதிப்பைக் கண்டுள்ளது**

**கல்லிற் கோதிய அந்த உருவம் முடிந்து தன்னெதிரே நின்றதைக்கண்ட கணேசாச்சாரி**

**புன்முறுவல் செய்தான்.**

**எனத் தொடங்கி**

**அச்சிலை கல்லோடு கல்லாய் வெடித்து சுக்கு நூறாய் உடைந்து அச் சிற்பச்சாலை எங்கும் சிதறியது.**

**என்று முடியும் இக்கதையை கதைக்கோவை 2 ல் அல்லது ஈழகேசரிச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது பிறப்பு இறப்பு திகதிகள் எனக்குக் கிடைக்கவில்லை. தெரிந்தவர்கள் பதிவிட்டால் நன்மையாக இருக்கும் அல்லவா...?

**4 April 2018**

பிடித்த சிறுகதை 45

**நா**மறிந்த புலவரிலே என சில புலவர்களை பாரதியின் மூலமும் இந்திய இலங்கைப் புலவர்கள் சிலரை பாடசாலை நூல்கள் மூலமும் அறிந்திருந்தேன். ஆனால் நான் நேரில் கண்ட ஒரே ஒரு புலவர் இவர்தான்.

இவரிடம் நான் ஒரு மூன்று மாதங்கள் எண்கணிதம் கேட்டுப் படித்தேன். கவனியுங்கள் தமிழ் அல்ல.

**சில்வரம்புலி - சைவப்புலவர்.சி. வல்லிபுரம்.**

வதிரியைச˙ேசர்ந்தவர். ஆரம்பத்தில் வதிரி மிசன் பாடசாலையிலும் பின்னர் தேவரையாளி இந்துப் பாடசாலையிலும் கற்று பொருளாதார காரணங்களினால் குருநாகல் மாலிகதேவா கல்லூரியில் சிங்களத்தில் படிப்பை தொடர்ந்தவர்.

தான் படித்த தேவரையாளி இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியராகி அங்கிருந்தே ஓய்வு பெற்றவர். பாடசாலையில் தமிழ் இலக்கியத்தை சுவைபட கற்பித்த இவர, மற்றைய நேரங்களில் சிங்களத்தையும்,கணிதத்தையும்

தனிப்படக்கற்பித்தார். இவரிடம் சிங்களம் கற்ற பலரை நான் அறிவேன். கலகலப்பான சுபாவம் கொண்டவர். மரபாளர். இவரின் கவியரங்கு மிக ஜனரஞ்சகமானது. வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஊஞ்சல் பதிகம் இவருடையது. தெய்வங்களின் மீது தனிப்பாடல்கள் சிலவற்றை இயற்றியுள்ளார். சிறந்த கலாரசிகர்.

இந்துக் கலாசார அமைச்சின் ஆலோசனைச்சபையிலும் இவர் அங்கம் வகித்துள்ளார். கவிஞர் அல்வாயூர் செல்லையாவும் இவரும் சமகாலத்தவர். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தேர்வில் சாதி ரீதியாக புறக்கணிக்கப்பட்ட போதும் சலியாத போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்றவர்கள்.

**தெளிவு**

**ஈழகேசரி 28/9/47, 5/10/47 இரு இதழ்களில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்ட இவரின் ஒரே ஒரு கதை இது.**

**கோவிற் பூசையை பகல் இரண்டு மணி வரையில் முடித்து பஞ்சாட்சரஐயர் வீட்டுக்குத் திரும்பி வந்தார்.**

**என ஆரம்பித்து.**

**அதே பையன்தான் இந்த உமாபதி என்பதில் ஐயருக்கு ஐயமே உண்டாகவில்லை.**

**என்று முடியும் தெளிவு என்னும் இக்கதையை ஈழகேசரிச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

நான் விஞ்ஞான மாணவன் ஆயினும் புறக்கணிப்புக்குள்ளாகி இருந்த என்னை (இப்போதும் தான்) ஒரு அரச உத்தியோகத்திற்கு தகுதியான திறமைச் சித்தியை எண்கணிதத்தில் பெறவைத்த அந்த ஆசானை ஓய்வூதியக்காரனாகிய நான் என்றும் நினைவுகூருகிறேன்.

**5 April 2018**

## பிடித்த சிறுகதை 46

ஈழத்தின் சிறுகதை மூலவர்களில் இவரும் ஒருவர். ஏலவே நான் எழுதிய பதிவில் ஆவணப் படுத்தப்பட்ட மூலவர்களில் ஒருவரான இலங்கையர்கோனின் உறவினர் இவர்.

மற்ற மூலவர்கள் இருவர் **மறுமலர்ச்சி**யில் எழுதிய போதும் இவர் அதில் எழுதவில்லை என்பது ஒரு முக்கிய தகவல்.

ஈழகேசரியில் 12 கதைகள், கலைமகளில் 10 கதைகள். கிராம ஊழியனில் **கங்கா கீதம்** என்னும் சிறுகதை என இவர் சமூக சரித்திரக்கதைகள் உட்பட மொத்தம் 25 கதைகளின் சொந்தக்காரர்.

**சி.வைத்தியலிங்கம்**

ஆங்கில, சமஸ்கிருத புலமை மிக்கவர். கலைமகள், கிராமஊழியன், ஆனந்தவிகடன், ஈழகேசரியில் எழுதியவர்.

சென்னை அலயன்ஸ் பதிப்பகம் 40 களில் வெளியிட்ட 40 கதைகள் அடங்கிய **கதைக் கோவை 1.ல்** இவரது **மூன்றாம் பிறை** சிறுகதை சேர்க்கப்பட்டுள்ளது. அதில்

இடம்பெற்ற **இலங்கையர்கோன், சம்பந்தன்** ஆகியோரின் கதைகள் மூலமே இவர்கள் ஈழத்தின் சிறுகதை மூலவர்களாக அடையாளப்படுத்தப் பட்டனர்.

இவர் 1939 ல் **ஏன் சிரித்தார்?** எனும் கதையினை கலைமகளில் எழுதியதன் மூலம் எழுத்துலகில் அறிமுகமாகியவர்.

சிற்பி வெளியிட்ட ஈழத்துச் சிறுகதைகள் தொகுப்பில் இவரது பாற்கஞ்சி இடம்பெற்றுள்ளது. இது இலங்கை வந்த கல்கியினால் பெறப்பட்டு ஆனந்தவிகடனில் பிரசுரிக்கப்பட்ட கதை.

**ரவீந்திரன்** என்னும் புனைபெயரில் சிறுகதைகளும், மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார்.

**இவரது சிறுகதைத் தொகுப்பு**

கங்காகீதம்(17சிறுகதைகள்,அன்னம் வெளியீடு,1990, தொகுப்பாளர்: சோ.சிவபாதசுந்தரம்.

**நெடுவழி**

**5/7/42 ல் ஈழகேசரியில் பிரசுரமான கதை இது.**

**உலகம் அவளுக்கில்லை..**

**என ஆரம்பித்து.**

**முன்னே குரூர உலகம்....வழியோ நெடுவழி**

**என்று முடியும் ஒரு சகோதர சிங்கள அபலைப் பெண்ணின் இக்கதையை ஈழகேசரிச்சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவர் ரவீந்திரன் எனும் புனை பெயரில் மொழிபெயர்த்த ரவீந்திர நாத் தாகூரின் **அறுந்த தளைகள்** நாவல் 39ல் ஈழகேசரியில் தொடராக வெளிவந்துள்ளது.

**6 April 2018**

**சு**மார் இருபதுக்கு மேற்பட்ட கதைகளை தந்து சிறுகதை மூலவராக கருதப்படும் இவர் **சிறுகதைகள் அமர இலக்கியமாகா** என்று கூறி காவியத்தின் பக்கம் சென்றவர்.

1938 ல் எழுத்துலகில் புகுந்த இவரது முதற்கதை **தாராபாய்** 1939ல் கலைமகளில் பிரசுரமானது. **கிராம ஊழியன், ஈழகேசரி** ஆகியவற்றிலும் இவர் கதைகள் எழுதினார்.

**சம்பந்தன் (க.திருஞானசம்பந்தன்)**

இவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். பண்டிதமணியின் மாணவர். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர். சென்னை அலயன்ஸ் பதிப்பகம் 1940 ல் வெளியிட்ட **கதைக் கோவை 1** ல் இவரது கலைமகளில் வந்த **விதி** சிறுகதை சேர்க்கப்பட்டுள்ளது. **சிற்பி** சரணபவன் வெளியிட்ட **ஈழத்துச் சிறுகதைகள்** தொகுப்பில் **மனிதன்** கதை சேர்க்கப்பட்டுள்ளது. **செ.யோகநாதன்-சுந்தரலட்சுமி** தமிழகத்தில் வெளியிட்ட **ஒரு கூடைக்கொழுந்து** எனும் தொகுப்பில் இவரது **துறவு, விதி** கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**மறுமலர்ச்சிக்கதைகள்** தொகுப்பில் **இரண்டு ஊர்வலங்கள்**, **அவள்** என்னும் கதைகளும், **ஈழகேசரிச் சிறுகதைகள்** தொகுப்பில் **கலாஷேத்திரம்** கதையும் சேர்க்கப்பட்டுள்ளன. 1967 ல் **விவேகி** இதழ் வெளியிட்ட **சம்பந்தன் மலரில்** இவரது ஐந்து கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஈழகேசரியில் **பாசம்** எனும் ஒரு தொடர் நாவலை இவர் எழுதியிருக்கிறார். புத்திலக்கியப் படைப்புக்கு உதாரணமாக இவரது படைப்புகளை அடையாளம் காண்போரும் உண்டு. **தர்மவதிகள்** நூலை சிலர் அடையாளப்படுத்தியுமுள்ளனர். இவரது காவிய நூல் **சாகுந்தல காவியம்.** 1998ல் செம்பியன் செல்வனும், செங்கை ஆழியானும் தொகுத்து வெளியிட்ட **சம்பந்தன் கதைகள்** தொகுப்பில் இவரின் 15 கதைகள் அடங்கியுள்ளன. இவரது மேலும் சில கதைகளின் பெயர்கள் **மகாலட்சுமி,மதம், தூமகேது, சபலம்,பிரயாணி, மனித வாழ்க்கை,**என்பன. இன்னும் உண்டு.

**இரண்டு ஊர்வலங்கள்**

> **1946பங்குனியில் வெளிவந்த மறுமலர்ச்சி சஞ்சிகையின் முதலாவது இதழில் இவர் எழுதிய இக்கதை பிரசுரமாகியிருந்தது.**
>
> **மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த சமயத்திலும் விதி அவளுடைய படுக்கையை அந்த அரசமரத்தடியிலிருந்து மாற்றி வைக்க விரும்பவில்லை.**
>
> **எனத் தொடங்கி**
>
> **ஒரு வேளை நவயுகத்தை சிருஷ்டிக்க எண்ணிய விதியின் ஆரம்ப ஊர்வலங்களாகவும் இவை இருக்கலாம் அல்லவா.?**
>
> **என்று முடியும் இக்கதையை மறுமலர்ச்சிச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

பிடித்த சிறுகதை 48

**வை**திகமான குடும்பத்தில் பிறந்து,கட்டுப் பெட்டித்தனமான கொள்கைகளை தூக்கி எறிந்து எழுத்துலகிலும், யதார்த்த வாழ்விலும் உதாரணங்காட்டத் தகுந்த ஒருவராக வாழும் ஆளுமை இவர்.

50களின் முற்பகுதியில் தனது மாணவப் பருவத்தில் எழுத்துலகப் பிரவேசம் செய்தவர்.

**புதுமைப்பிரியை**

முன்னர் **பத்மா பஞ்சாதீஸ்வரக் குருக்கள்.** திருமணத்தின்பின் **பத்மா சோமகாந்தன்.**

15/3/ 34 ல் வண்ணார் பண்ணையில் பிறந்தவர். வடமராட்சியின் கரணவாய் இவரது புகுந்த ஊர். ஆசிரியையாக இருந்து அதிபராகி ஓய்வு பெற்றவர்.

1954 ல் **சுதந்திரன்** நடத்திய சிறுகதைப் போட்டியில் **இரத்தபாசம்** எனும் முதல் பரிசு பெற்ற கதையுடன் எழுத்துலகுக்கு அறிமுகமானவர். இப்போட்டியில் இரண்டாம் பரிசு **கே.டானியல்.** மூன்றாம் பரிசு **டொமினிக் ஜீவா.**

**பெண்ணின்குரல், சொல், அகவிழி,** சங்கத்தமிழ், பிரவாகினி ஆகியவற்றின் ஆசிரியையாக இருந்தவர். நூலாக வந்த **ஈழத்து மாண்புறு மகளிர்** எனும் தலைப்பில் பல பெண் ஆளுமைகள் பற்றி தொடராக எழுதியவர்.

**வீரகேசரி, ஈழகேசரி, தினபதி, தினக்குரல், உதயன்,புதுமை இலக்கியம், கலைச்செல்வி, மல்லிகை, ஞானம், இலங்கை விகடன்** ஆகியவற்றிலும், தமிழக **தாமரை, கல்கி, கலைக்கதிர்** ஆகியவற்றிலும் இவர் எழுதியிருக்கிறார்.

**இவரது நூல்கள்:**

கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள், புதிய வார்ப்புகள் (லில்லி தேவசிகாமணி பரிசு), கருப்பலகைக் காப்பியம், பாராமுகம், இற்றைத் திங்கள், நெஞ்சுக்கு நீதி.

தன் கணவரோடு இணைந்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். இன்றும் கொழும்பிலிருந்தபடி இலக்கிய சமூக நடவடிக்கைகளில் இயங்கி வருகிறார்.

புத்தன் பரம்பரை

**1956 ல் நடந்த இனக்கலவரத்தையும், காலிமுகத் திடலில் நடந்த தமிழரின் சத்தியாக்கிரகத்தை இனத் துவேசத்தோடு குழப்பிய மேத்தானந்தா, சுபசிங்கா ஆகியோரையும் பற்றிய கதை இது. ஆண்களே எழுதத் தயங்கிய இச்சம்பவத்தை சுதந்திரன் பத்திரிகையில் 1956 லேயே துணிச்சலோடு எழுதியவர் இவர்.**

**கோவில் மணி "டாண்..டாண்" என்று ஓசை எழுப்பியது.**

**எனத் தொடங்கி**

**இரு உள்ளங்களும் கூட தாம் புத்தனுடைய பரம்பரைதானா என எண்ண நாணிக் கொண்டன.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள்**

தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

கொடகே நிறுவனம் நல்ல தமிழ் நூல்களை வெளியிடவும், நல்ல நூல்களுக்கு பரிசளிக்கவும் நடுவர் குழுவில் அங்கம் வகிக்கும் இவரது பங்களிப்பு சிறப்புக் காரணங்களில் ஒன்றென உறுதிபடக்கூறலாம்.

அவர் ஆரோக்கியமாக நெடுநாட்கள் வாழ்வாராக.

**9 April 2018**

## பிடித்த சிறுகதை 49

இவர் எமது கட்சியில் இருந்தவர். எமது கட்சிப் பத்திரிகையான **தொழிலாளி** யின் ஆசிரியராக இருந்தவர். 60 களின் பின்கூற்றில் எங்கள் ஊரில் இவர் பேசிய ஒரு கூட்டத்திற்கு நான் தலைமை தாங்கி இருக்கிறேன்.

இலங்கையில் ஒரு முழுநேர எழுத்தாளராக இருந்தவர் என இவரையே அடையாளப் படுத்த முடியும்.

1948 ல் எழுத்துலகில் புகுந்த இவர் 20 க்கு மேற்பட்ட நாவல்களை எழுதியிருக்கிறார்.

இவரை ஒரு நாவலாசிரியராகவே பலர் அறிந்து வைத்திருக்கின்றனர்.

ஒரு காலம் நானும் அப்படியேதான் நினைத்திருந்தேன். இல்லை, இவர் பல சிறுகதைகளை வானொலிக்கு எழுதியிருக்கிறார். ஆரம்பகாலத்தில் இவர் பத்திரிகைகளில் எழுதியிருக்கக்கூடும். S.M.ஹனிபா 92 ல் கல்ஹின்னை தமிழ்ச் சங்கத்தின் மூலம் வெளியிட்ட **நிறைவைத்தேடி** எனும் இவரது 10

சிறுகதைகள்' அடங்கிய தொகுப்பில் உள்ள ஒரு கதை இது.

**இளங்கீரன்**

இவரது இயற் பெயர் சுபைர். 4/1/ 27 ல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். 1948 ல் எழுதத் தொடங்கியவர். **மலேசிய தினமணி** இதழின் ஆசிரியராக இருந்தவர்.

ஜனரஞ்சக பாணியில் **ஒரே அணைப்பு, பைத்தியக்காரி, பட்டினித் தோட்டம், நீதிபதி, புயல் அடங்குமா?, இங்கிருந்து எங்கே?** போன்ற நாவல்களை எழுதினார்.

இடதுசாரிச்சிந்தனை வசப்பட்டகாலத்தில் அதே பாணியில் முற்போக்கு கருத்துகளோடு **தென்றலும் புயலும், நீதியே நீ கேள், அவளுக்கொரு வேலை வேண்டும்** போன்ற இப்போது நூலாகியுள்ள நாவல்களை எழுதினார்.

வறுமையும், முதுமையும் அவரை **சுபைர் இளங்கீரனாக்கியது.**

71 ஏப்ரல் கிளர்ச்சியின் பின்னான நாட்களில் தவிர்க்க முடியாது **ஜனவேகம்** பத்திரிகை ஆசிரியரானார். வானொலி எழுத்தாளரானார். **நாடகம் ,சிறுகதை, உரைச்சித்திரங்களை** நிறைய எழுதினார்.

1962 ல் இவர் வெளியிட்ட **மரகதம்** சஞ்சிகை தேசிய இலக்கியத்திற்கான கட்டுரைகளை பிரசுரித்திருந்தது. பேரா.கைலாசபதியின் மறைவை ஒட்டி இவர் வெளியிட்ட நூலும்,முற்போக்கு இலக்கியம் குறித்த நூலும், முற்போக்கு எழுத்தாளர்சங்கம் குறித்த நூலும் முக்கியமானவை.

மு.போ.எ.சங்க ஆரம்பகால உறுப்பினர் இவர். இவர் எழுதிய. பாரதியார் நாடகம் கொழும்பில் 81,83 ல் இருதடவைகள் மேடைகண்டது.

12/9/96 ல் கொழும்பில் இவர் காலமானார்.

1992ல் இவருக்கு முஸ்லீம் கலாசார அமைச்சு வழங்கிய **இலக்கிய வேந்தர்** பட்டமும், இந்துக் கலாசார அமைச்சு வழங்கிய. **இலக்கிய செம்மல்** பட்டமும் கிடைத்தது.

**தலைப்பிறை**

**70களின் பிற்கூற்றில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான கதை இது.**

**நாலைந்து நாட்களாக வானம் பிளந்து கொட்டிக் கொண்டிருந்தது...**

**என ஆரம்பித்து**

**போய்க்கொண்டே இருக்கும் லொறியை வெறித்துப் பார்த்தபடி நின்றார் ஆதாம் தண்டேல்.**

**என்று முடியும் தலைப்பிறை எனும் இக்கதையை நிறைவைத் தேடி தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே. நூலகம். Com ல் இந்நூலை தரவிறக்கி வாசிக்கலாம்.**

இளங்கீரனாக தினகரனில் இவர் எழுதிய **நீதியே நீ கேள்** பின்னர் 90 களில் சுபைர் இளங்கீரன் எழுதியதாக மீள் பிரசுரமானது.

இந்நூல் அப்போது சாகித்தியமண்டல பரிசுக்கு இறுதிச் சுற்றுக்கு வந்தும் நிராகரிக்கப்பட்டமையால் புகழ்பெற்ற முட்டை எறிவு போராட்டம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தது என்பது ஒரு தகவல்.

**13 April 2018**

பிடித்த சிறுகதை 50

1943 ல் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தை ஏற்படுத்த உழைத்தவர்களில் இவர் முக்கியமானவர்.

யாழ். இந்துக்கல்லூரியின் ஆசிரியராக இருந்தவர். மறுமலர்ச்சி இதழ் யாருக்குச் சொந்தம் என்னும் பிரச்சனையில் கோடேறி வழக்காடி தேல்வி கண்டவர்.

பின்னாளில் பிரபல எழுத்தாளர்களாக முகிழ்ந்த **செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம்** ஆகியோரை உருவாக்கிய ஆசான்.

இவர் பல புனைபெயர்களில் எழுதியமையால் அடையாளம் காணப்படாது போய்விட்டார்.

**ஈழத்துறைவன்**

**வை.ஏரம்பமூர்த்தி** இவரது பெயர். இந்துக் கல்லூரி ஆசிரியர். இலக்கிய அபிமானி. முதல் இலக்கிய சங்கம் என்று கருதப்படும் மறுமலர்ச்சிச் சங்க ஸ்தாபகர்களில் ஒருவர்.

இவரது இந்தப் புனைபெயர் என் ஆரம்பகால வாசிப்பு அனுபவத்தில் கவர்ந்த ஒன்று. விடாக்கண்டன் எனும் பெயருக்குப் பொருத்தமானவர்.

புதுமைப்பித்தர்கள் சங்கம் என ஆரம்பிக்கப்பட பிரேரிக்கப்பட்ட சங்கத்தை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆக்கியவர்களில் இவர் முக்கியமானவர்.

இவர் ஒரு ஓவியரும் கூட.

சுமை

**28/05/ 65 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**கிறேவல் ஒழுங்கையில் அசைபோட்டுச் செல்லும் ஒற்றை மாட்டு வண்டியின் சக்கரத்தைப் போல....**

**என ஆரம்பித்து**

**அது கனத்த மாதிரியான ஒரு பிரமை.**

**என்று முடியும் சுமை கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஏரம்பமூர்த்தி மாஸ்ரர் ஒரு நாடக எழுத்தாளரும் கூட, இவர் எழுதிய நாடகப்பிரதி ஒன்று அக் காலத்தில் ஆனந்த விகடன் நாடகப் போட்டியில் சான்றிதழ் பெற்றுள்ளது.

**14 April 2018**

பிடித்த சிறுகதை 51

இவர் கிண்ணியாவின் முதல் கவிஞர் என்று கருதப்படுகிறார். கவிதைகளோடு நின்றுவிடாமல் கதைகளும் எழுதி இருக்கிறார். ஐந்து கதைகள் எழுதி இருப்பதாகத் தெரிகிறது.

**அண்ணல்**

8/10/1930 ல் கிண்ணியாவில் பிறந்த இவரின் இயற் பெயர் M.S.M.ஸாலி. ஆசிரியராக கடமையாற்றியவர். சிறந்த மரபுக் கவிஞர். **காதற் கவிதைக்கோர் அண்ணல்** என சிலாகிக்கப் பட்டவர். கிண்ணியா முற்போக்கு வாலிபர் மன்றம் இவரது கவிதைகள் அடங்கிய **அண்ணல் கவிதைகள்** எனும் ஒரு தொகுதியை 64 ல் தங்களது இலக்கிய விழாவில் வெளியிட்டு வைத்தது. மர்ஹூம் அப்துல் மஜீது (A.L.A.மஜீது முன்னாள் மூதூர் பாராளுமன்ற உறுப்பினரும் உதவி அமைச்சரும்) இம் மன்றத்தின் தலைவராக இருந்து நூல் வெளிவர உதவினார். 53 வருடங்களின் பின்னர் சென்ற ஆண்டு இத் தொகுப்பு மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

வ.அ, எஸ்.பொ, எம். ஏ. ரஹ்மான், மஹாகவி ஆகியோரின் நண்பர் இவர். இவரது கவிதைத்தொகுதிக்கு முன்னீடு வழங்கியவர் மஹாகவி. அரசு வெளியீடாக வந்த முதல் தனிப்பாடற் தொகுதி அண்ணல் கவிதைகள்.

மனிதன்

இளங்கீரனின் மரகதம் இதழில் 1961 ல் பிரசுரமான கதை இது.

இக்கதையை அப்போதே வாசித்திருந்தேன்.

யூ.எல். தாவூத் தொகுத்து ஸபீனா பதிப்பகம் 64ல் வெளியிட்ட முஸ்லிம் கதைமலரில் இக்கதையும் இடம் பெற்றிருந்தது.

74 ல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் யாழ்பிறை யிலும் இக்கதை மறு பிரசுரமாகி இருந்தது.

இப்பதிவுக்காக இக்கதையைத்தேடி நான் மிகுந்த சிரமப்பட்டேன். நண்பர் ஜவாத் மரைக்கார் பெருந்தன்மையோடு எனக்கு உதவினார். அவருக்கு நன்றி.

நிழல் திசை மாறும் நேரம்

என ஆரம்பித்து

அவரது விழிகளிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது.

என்று முடியும் மனிதன் எனும் இக்கதையை முஸ்லீம் கதைமலரில் வாசியுங்கள் நண்பர்களே.

1974ல் 44 வயதில் மௌத்தாகிப் போன அண்ணல் எனும் படைப்பாளியை, கிண்ணியா எனும் ஊரை இலக்கிய உலகில் பேச வைத்தவரை கிண்ணியா மறக்கவில்லை அதற்கு உதாரணம்:

அண்ணல் வீதி, அண்ணல் நகர் .

**15 April 2018**

## பிடித்த சிறுகதை 52

இவரைப்பற்றி ஏலவே நான் எழுதியிருக்க வேண்டும். எழுதிவிட்டேன் என்கின்ற நினைப்பு.

**மத்தாப்பு** குறுநாவல் படைப்பாளிகள் ஐவரில் ஒருவர். 3 ஆவது **வர்ணம்** இவருடையது. **ஈழகேசரி** பண்ணையில் உருவானவர். அதில் 2 கதைகள் எழுதியவர். **மறுமலர்ச்சி** யிலும் எழுதியிருக்கிறார்.

கடுமையான சுகவீனமுற்று கொழும்பில் இருந்த போது இவருக்கு ஆளுனர் விருது வழங்கவேண்டும் என்ற முயற்சியில் வெற்றி பெற்றோம்.

உருவகக் கதை முதல்வர் இவர். அதற்காக ராஜாஜியால் பாராட்டப்பட்டவர்.

1943ல் பிரசுரமான **கிடைக்காத பலன்** என்னும் ஈழகேசரிக் கதையுடன் இலக்கிய உலகுக்கு வந்தவர்.

**சு.வே.**

சு.வேலுப்பிள்ளை இவரது பெயர். 24/5/21ல் நாவற்குழியில் பிறந்தவர். பயிற்றப்பட்ட தமிழ்

ஆசிரியர். டிக்கோயா, மானிப்பாய், சுன்னாகம் பாடசாலைகளில் 46முதல் 81ம் ஆண்டுவரை மாணவர்களை கவரும் வகையில் கற்பித்தவர். பாடநூல்கள் பலவற்றை எழுதியவர்.

வானொலி தொடர் நாடகங்களை எழுதியவர். கலைக்கழக பரிசினை நாடகத்திற்காக இரு முறை பெற்றவர்.

**இவரது நூல்கள்**

மண்வாசனை(சிறுகதை, 1972, சாகித்திய விருது) பால்காவடி(சிறுகதை), சிறுவர் கதை இலக்கியம். மாணற் கோவில் (உருவகக் கதை).

இவர் 22/6/2007 ல் கொழும்பில் காலமாகினார்.

பால்காவடி

**12/1/1947 ல் ஈழகேசரியில் பிரசுரமான கதை இது.**

**அன்று திருக்கார்த்திகை...**

**என ஆரம்பித்து**

**அதனோடு ஓர் ஆணுருவம் எலும்பும் தோலுமாகப் பின் தொடர்ந்தது.**

**என்று முடியும் இக்கதையை பால்காவடி தொகுப்பில் அல்லது ஈழகேசரிக் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**சு.வே** அவர்கள் பாட நூல்களை எழுதுவதில் கூடுதல் நாட்டம் கொண்டமையால் இலக்கிய படைப்புகளில் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. அதனால் அவரை அதிகம் பேர் அறியவில்லை என்னும் அபிப்பிராயம் சிலரிடம் இருக்கிறது.

**18 April 2018**

## பிடித்த சிறுகதை 53

இதுவரை 52 பிடித்த சிறுகதைகளை பதிவிட்டுள்ளேன். கதைக்குரியவர்கள் நமது முதலாம் தலைமுறையினர். என் நினைவில் வந்தவர்களை பதிந்துள்ளேன். விடுபடல்கள் நிச்சயம் இருக்கும். தொடரில் நினைவு வரும்போது அவர்களின் கதைகள் இடம் பெறச்செய்வேன்.

இனி இரண்டாம் தலை முறையினரை தொடங்குகிறேன்.

இவர் ஒரு மா.ஓ. வாதி. சீனச் சார்புக்காரர். மலையக மக்களின் பிரச்சனையைக் கூறும் ஒரு நாவலால் பெரிதாக அறியப்பட்டவர்.

யாழ்ப்பாண எழுத்தாளர்கள் மலையக மக்களை அன்னியமாகப் பார்க்கிறார்கள் என்ற கூற்றை தகர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

**யோ.பெனடிக்ற் பாலன்**

1939 ல் நல்லூர் தல்லாலையில் பிறந்தவர் இவர். சிறுகதை,நாவல், கவிதை, நாடகம் என்னும் பல்துறைப் படைப்புக்கள் மூலம் ஈழத்து

இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்.

ஆசிரியராக மலையகத்தில் பல காலம் கடமையாற்றியதோடு அரச அறிவியலில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்றவர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பத்திராதிபராக கடமையாற்றி பின் கல்வி முதுமாணி பட்டம் பெற்று பிரதிக்கல்விப் பணிப்பாளராகி ஓய்வு பெற்றவர்.

**தினகரன்,வீரகேசரி,தாமரை,வசந்தம், குமரன், தாயகம்** ஆகியவற்றில் எழுதியவர்.

இவரது முதல் நூல் **குட்டி** எனும் குறுநாவல். இது 1963ல் வெளிவந்தது. மு.எ.கூட்டுறவுப் பதிப்பக வெளியீடு. ஆரம்பத்தில் லா.ச.ராவின் பாதிப்பு இவரிடமிருந்தது. பின்னர் அதிலிருந்து விடுபட்டார்.

ஆஜானுபாகுவான சரீரமும், ஆக்ரோசமான சாரீரமும் வாய்க்கப் பெற்றவர். மேடை ஏறினால் அனல்பறக்கும் விமர்சகர்.

ஓரே அமைப்பில் இருந்த போதும் இவரோடு நான் பழகவில்லை. இவரது வாசகன் நான்.

1968 டிசம்பர் 31 ம் திகதி யாழ். மலேயாகபே மேல் மாடியில் நடந்த பாரிநிலையம் வெளியிட்ட இவரின் நான் முன்னர் குறிப்பிட்ட மலையக நாவல் **சொந்தக்காரன்** அறிமுக விழாவில் முதன்முதலாக இவரைக்கண்டேன். செ.கணேசலிங்கனின் **தரையும் தாரகையும்** அன்று அறிமுகம் செய்யப்பட்டது. செ.க. நிகழ்வுக்கு வரவில்லை.

**இவரது ஏனைய நூல்கள**

பலஸ்தீனம் என்னை அழைக்கிறது (குறுநாவல்), தனிச்சொத்து (குட்டிக் கதைகள்), தலைவிதியை பறி கொடுத்தோர் சிறுகதைகள் விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (சிறுகதைகள், 1995, சாகித்திய பரிசு), கல்வி உளவியல் அடிப்படைகள்.

முற்போக்கு இலக்கியத்தின் **அசல்**கள் பல உண்டு அதில் முக்கியமான அசல் என இவரை நாம் சுட்டலாம்.

**இங்கெவர் வாழவோ.**

**1969 ல் மலையக மக்கள் சம்பந்தமாக இவரால் எழுதப்பட்ட கதைதான் இது.**

**காம்பராவின் உள்ளோரத்தில்....**

**எனத் தொடங்கி**

**பொத்தி இறுகிய கை முடிச்சுகளுக்கு எதிரிகள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்**

**என்று முடியும் இங்கெவர் வாழவோ கதையை துரைவி வெளியிட்ட உழைக்கப்பிறந்தவர்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

புகழ்பெற்ற யாழ் முட்டைஎறிவு நிகழ்வில் முன்னணி வகித்தவர்களில் இவரும் ஒருவர். திரிபுவாதிகளுக்கு சிம்ம சொப்பனம்.

1997 ல் இவர் கொழும்பில் காலமாகினார்.

என் வரையில் எழுத்துத் துறை துரோணாச்சாரியார்களில் இவரும் ஒருவர்.

**19 April 2018**

**விரும்பியோ** விரும்பாமலோ எழுதப்படும் வரலாறுகளில் சிலர் விடுபட்டுப் போகின்றனர். அப்படி விடுபட்டுப்போன ஆளுமைகளில் இவரும் ஒருவர்.

**சிட்டியும், சோ.சிவபாதசுந்தரமும்** இணைந்து எழுதிய **தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்.** நூலிலும் பேரா.சிவத்தம்பி எழுதிய தமிழில் **சிறுகதை தோற்றமும் வளர்ச்சியும்** நூலிலும் இவரது பெயர் இடம்பெறவில்லை. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முதன் முதல் பெண்ணியவாதத்தை முன் வைத்த நவீன படைப்பாளி இவர்.

**பவானி**

**பவானி ஆழ்வாப்பிள்ளை** என அறியப்படும் இவர் அளவெட்டியைச் சேர்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி. 1958/59 ல் இவரது **அர்ப்பணம்** பல்கலைக்கழக **இளங்கதிர்** சஞ்சிகையில் மதிப்பிற்குரியது நூற்பரிசு பெற்ற கதை என்னும் வாசகத்துடன் பிரசுரமாகி இருக்கிறது.

**கலைச்செல்வி, சுதந்திரன், ஈழநாடு, தேனருவி, வீரகேசரி, மரகதம், தினகரன், சங்கம், திருகோணமலை எழுத்தாளர் சங்க ஆண்டுமலர், செந்தாமரை, உன்னைப்பற்றி ஆகிய இதழ்களில் கதைகள் எழுதியுள்ளார்.**

இவரது **கலைச்செல்வி**யில் வந்த **மன்னிப்பாரா?** என்னும் கதை சர்ச்சைக்குள்ளாகி சாதகபாதகமாக சிலர் அதே பெயரில் கலைச்செல்வியில் கதைகள் எழுதிய சம்பவமும் நடந்துள்ளது. இவரது சிறுகதைத் தொகுதி **கடவுளரும் மனிதரும்** தொகுப்பில் இவர் 59- 65 க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதிய கதைகள் அடங்கியுள்ளன. தொகுதியின் தலைப்பில் இவர் கதை எழுதவில்லை. 32 வருடங்களின் பின் 1994 ல் செல்வி திருச்சந்திரன் அங்கம் வகிக்கும் **பெண்கள் ஆய்வுவட்டம்** இதே பெயரில் மேலும் சிலகதைகளைச் சேர்த்து 20 கதைகளுடன் இவரது அனுமதியுடன் இத் தொகுதியை மீள் பிரசுரம் செய்துள்ளது. இதனை நூலகம் இணையத்தில் தரவிறக்கமுடியும். இவர் இப்போது பிரித்தானியாவில் வாழ்கிறார்.

**விருப்பும் வெறுப்பும்**

**12/08/1962. ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**இன்னும் எத்தனை நாள் இப்படியே இருந்துவிட உத்தேசம்,சாரு.?**

**எனத் தொடங்கி**

**தன்கண்களில் நிறைந்த நீர் சிந்தாது இமைகளை பட பட வென்றுவெட்டித் தவிர்க்க முயன்றான்.**

**என்று முடியும் கடவுளரும் மனிதரும் தொகுப்பில் இல்லாத விருப்பும் வெறுப்பும் எனும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

யார் குறிப்பிட மறந்தாலும் **வல்லது வாழும்** என்பதற்கு பவானி ஆழ்வாப்பிள்ளையின் கதைகள் மற்றொரு உதாரணம்.

**20 April 2018**

ஆண்டு நினைவில் இல்லை. 66/67 ஆக இருக்கலாம்.

அக்காலத்தில இவர் எழுதிய கதை ஒன்றிற்காக வல்வெட்டித்துறையில் வீரகேசரி பத்திரிகையும் அதனை விநியோகம் செய்த வாகனமும் எரியூட்டப்பட்டமையும் நினவில் இருக்கிறது.

மிகக் குறைந்த வயதில் வாகன விபத்தில் உயிரிழந்தவர். நான் குறிப்பிட்ட இரண்டாம் தலைமுறை எழுத்தாளர்களில் பலர் பல்கலைக் கழகத்தில் தமிழ் மூலம் பட்டப்படிப்பை மேற் கொண்டவர்கள். அதனால் போலும் தங்கள் புனைபெயர்களை வித்தியாசமாக தேர்ந்து கொண்டனர்.

இவர்களில் எனது கொள்கை உடன்பாடுள்ள முற்போக்கு எழுத்தாளர்களை சற்று பின் வைத்து புனைபெயர் எழுத்தாளர்களின் கதைகளை முதலில் தர விளைகிறேன்.

**அங்கையன்**

1942ல் மண்டைதீவில் பிறந்த இவர் அவ்வூரின்

முதல் பட்டதாரி. அ.கயிலாசநாதன் இவரது இயற்பெயர்.

**கலைச்செல்வி** இதழில் நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதியதன்மூலம் இலக்கிய உலகில் அறிமுகமானவர். பல்கலைக்கழக நாவல் போட்டியில் நெய்தல் நில வாழ்க்கையைச் சித்தரிக்கும்இவரது **கடற்காற்று** முதற் பரிசு பெற்றது. இந்நாவல் இரண்டு பதிப்புக் கண்டது.

5/4/ 1976 ல் இவரது அகால மரணத்தின் பின் மத்திய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளராக இருந்த திருமதி இராஜலட்சுமி கயிலாசநாதனின் முயற்சியால் சில நூல்கள் அச்சில் வந்துள்ளன.

**அவை:**

செந்தணல் (நாவல்), சிட்டுக்குருவிகளும் வானம்பாடிகளும், (நாவல் வ.கி மா. சிறந்தநூல் பரிசு),அங்கையன் கதைகள், (சிறுகதைகள, வ.கி.மா. சிறந்த நூல் பரிசு),வைகறை நிலவு (கவிதைகள்).

நூலாகாத இவரது நாவல்கள்: சொர்க்கமும் நரகமும் (மித்திரன் தொடர் நாவல்), கேட்டிருப்பாய் காற்றே (வீரகேசரி தொடர் நாவல்).

அங்கையன் சிறந்த கவிஞர் கூட.

xU f hy k;gl b nj hl bf sp ;vyy hk;, yqi; f thnd hy p nkyy yp rahf. xypj **சிட்டிபாபுவின் வீணை** இசையுடன் **எஸ்.கே.பரராஜசிங்கம்** பாடிய **மணிக்குரல் ஒலித்ததே** பாடல் இவருடையதே. கிட்டத்தட்ட 9 மெல்லிசைப் பாடல்களை இவர் எழுதியிருக்கிறார். அவை நூலாகி உள்ளன. பட்டதாரியாக வெளியேறியபின் பிரிட்டிஸ் ஸ்தானிகராலயத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தபின், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சிலகாலம் கடமையாற்றினார். வானொலி மஞ்சரியின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

**கலங்காத கண்கள்**

**09/12/1962 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**அந்தக் காட்சியைக் கண்டதும் அப்துல் காதர் திகைத்தே போனார்.**

**என ஆரம்பித்து**

**அப்துல் காதருடைய கண்களிலிருந்து மென்மேலும் நீர் சுரந்து கொண்டிருந்தமை எதையோ ஒன்றை உண்மையெனக் கூறியது.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பபில் வாசியுங்கள் நண்பர்களே.**

அங்கையன் இளவயதில்(33 ) மரணித்துவிட்டார்.

ஆனால் மணிக்குரல் ஒலித்ததே பாடல் அவரது பெயரை நெடுங்காலம் ஒலிக்கச் செய்யும் என்பது என் அசைக்கமுடியாத நம்பிக்கை.

**20 April 2018**

## பிடித்த சிறுகதை 56

67ல் யாழ் இலக்கிய நண்பர் கழகம். தாம் நடத்திய சிறுகதைப்போட்டி பரிசளிப்பு நிகழ்வை ஏழாலை மகாவித்தியாலயத்தில் ஒழுங்கு படுத்தியிருந்தது. அதற்கான அழைப்பிதழ் கிடைத்து ஏழாலைக்கு நான் போயிருந்தேன். தணியாத இலக்கியதாகம். யாரோடும் அறிமுகமும் இல்லை. நிகழ்வில் **கனக செந்திநாதன், தங்கம்மா அப்பாக்குட்டி, ஏ.ரி.பொன்னுத்துரை**யோடு இவர்.முக்கிய பேச்சாளர்கள்.

இவரது பேச்சின் இலக்கு முற்போக்கு எழுத்தாளர்களை சாடுவதாகவே அமைந்திருந்தது.

ஏலவே இவரைப் பற்றி நானறிந்திருந்தேன். இவரது சிறுகதைகளையும் வாசித்திருந்தேன்.

**செம்பியன் செல்வன்**

1/1/1943 ல் திருநெல்வேலியில் பிறந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி. யாழ் இந்துக்கல்லூரியில் படித்தவர் வை.ஏரம்பமூர்த்தி, கம்யூனிஸ்ட் கார்த்திகேசனிடம் கற்றவர்.

இவரது இயற் பெயர் **ஆ.இராஜகோபால்.**

பல்கலைக்கழக மாணவர்களின் படைப்புகளைத் தாங்கிவந்த இரண்டாவது தொகுப்பான **விண்ணும் மண்ணும்** தொகுப்பாளர். சிறுகதையாளர்,குறுங்கதையாளர், நாவலாசிரியர், இதழாசிரியர் எனும் பன்முகபரிமாணம்கொண்டவர்.

**இவரது நூல்கள்:**

அமைதியின் இறகுகள் (சிறுகதை), ஈழத்துச் சிறுகதை மணிகள்(கட்டுரை), குறுங்கதைகள் 100, நெருப்பு மல்லிகை (நாவல்), விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (நாவல்), நாணலின்கீதை (தத்துவம்),கானகத்தின் கானம்(நாவல்), சர்ப்பவியூகம்(சிறுகதை,சாகித்தியப் பரிசு),மூன்று முழு நிலவுகள்(நாடகம்).

நாடகத்திற்காக கலைக்கழக பரிசை 4 தடவைகள் பெற்றுள்ளார்.

செங்கை ஆழியானுடன் இணைந்து **விவேகி** சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். **அமிர்தகங்கை** சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தார்.

செங்கை ஆழியானின் **வாடைக்காற்று** நாவல் திரைப்படமானபோது அதன் திரைக்கதை வசனம் இவர் எழுதியதே. ஆசிரியராக கோட்டக்கல்வி அதிகாரியாகி பின்நாட்களில் கடும் நோய்வாய்ப்பட்டு கொழும்பில் 2005 ல் காலமாகினார்.

இவர் நோய்பிடியில் இருந்து இறுதியாக எழுதிய கதை புலரி சஞ்சிகையில் வந்ததாக நண்பர் ஒருவர் தகவல் தந்தார்.

**பூவும் கனியும்**

**1969 ல் ஈழநாடு 10 ம் ஆண்டை ஒட்டி நடாத்திய சிறுகதைப்போட்டியில் முதல் பரிசு பெற்ற இரு கதைகளில் இதுவும் ஒன்று.**

**அப்போதே இக்கதை பிரசுரமாகி அவர்கள் வெளியிட்ட போட்டிக்கதை தொகுப்பான கங்குமட்டை**

**யிலும் இடம் பெற்றது.**

**மயிலுக்கிழவருக்கு ஆத்திரம் குமிறிக் குமிறிக் கொண்டு வருகிறது.**

**என ஆரம்பித்து**

**அவர் பசிதான் எப்போதோ அடங்கிவிட்டதே.**

**என்று முடியும் பூவும் கனியும் கதையை கங்கு மட்டை தொகுப்பில் அல்லது சர்ப்பவியூகம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இரட்டையர்கள் என அறியப்பட்ட செம்பியன் செல்வனும், செங்கை ஆழியானும் ஈழநாடு சிறுகதைப்போட்டியில் முதற்பரிசைப் பகிர்ந்து கொண்டவர்கள். **பூவும் கனியும்** சிறுகதைக்காக இவர். **கங்கு மட்டை** க்காக அவர். **ஈழநாடு சிறுகதைகளை** தொகுத்துத் தந்தவர் **செங்கை ஆழியான்.** ஆனால் தொகுப்பில் நிச்சயம் இடம் பெற்றிருக்க வேண்டிய முதல் பரிசுபெற்ற **பூவும் கனியும்** இடம்பெறவில்லை. வேறொரு சாதாரண கதையயையே தொகுப்பாளர் சேர்த்திருந்தார். இது ஏன்...?

யாரும் வக்காலத்து வாங்கமுடியாத பெரிய தவறு இது். தொகுப்பாளரை மீறி செயற்பட என்னால் முடியவில்லை மனவருத்தப் பட்டதைத் தவிர.

ஈழநாடு போட்டியில் எனது **வேட்டை** கதை பாரட்டுச் சான்றிதழ் பெற்றது என்பது மேலதிக தகவல்.

**20 April 2018**

இவர் குறித்து காட்டமான விமர்சனம் எனக்கு இருந்தாலும், ஏதோ வகையில் இவர் எழுத்துகளில் நான் ஈர்ப்புடையவனாகவே இருந்தேன், இருக்கிறேன், சில விடுபடல்கள் இருந்த போதிலும் (என்னையும் சேர்த்து).

**சுதந்திரன் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள், மறுமலர்ச்சிச் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள், ஈழநாடு சிறுகதைகள்** ஆகியவற்றை தொகுத்ததில் இவரது பணி போற்றுதற்குரியது.

இவரிடம் ஏதோ ஒரு மமதை, அல்லது சுயநலம் இருந்திருப்பதை யார் அவதானித்திருந்தார்களோ தெரியாது. நான் அவதானித்திருந்தேன்.

**செங்கை ஆழியான்**

1941ல் வண்ணார்பண்ணையில் பிறந்த இவரது இயற்பெயர் கந்தையா குணராசா. 60களில் எழுத்துலகுக்கு வந்தவர். இவரது வேறு புனைபெயர்கள். **நீலவண்ணன், விஷ்ணு,**

பேரதனைப் பல்கலைக்கழக பட்டதாரி. அப்போது வெளியிட்ட **கதைப்பூங்கா** (1962.) தொகுப்பினை க.நவசோதியுடன் இணைந்து

தொகுத்தவர்.

ஆசிரியர்,நிர்வாகசேவை அதிகாரி, (காரியதிகாரி). யாழ். பல்கலைக்கழக பதிவாளர். என பல பதவிகளை வகித்தவர்.

இவரது படைப்புகளை பதிவிட இப்பத்தி போதாது ஆயினும் சிலவற்றை தருகிறேன்.

நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள். 40 வரையிலான நாவல்கள். கல்விசார் நூல்கள், ஆய்வு நூல்களைப் படைத்தவர். பல விருதுகளைப் பெற்றவர்.

**இவரது நூல்கள்:**

இதயமே அமைதிகொள், யாழ்ப்பாணத்து இராத்திரிகள், இரவுநேரப் பயணிகள்,- சிறுகதைத்தொகுதிகள்.

காட்டாறு, வாடைக்காற்று, மரணங்கள் மலிந்தபூமி, ருத்திரதாண்டவம் என்பன இவரது நாவல்களில் சில.

கொத்தியின் காதல், ஆச்சி பயணம் போகிறாள் இவரது நகைச்சுவை நாவல்கள்

ஈழத்தவர் வரலாறு, யாழ்ப்பாணத்து அரசபரம்பரை எனும் ஆய்வு நூல்களையும், நந்திக்கடல், குவேனி, போன்ற வரலாற்று நாவல்களையும் எழுதியுள்ளார்.

யாழ் இலக்கியவட்டத் தலைவராக இருந்தவர். இலங்கை இலக்கியப் பேரவை ஸ்தாபகர்.

**மல்லிகை, சிரித்திரன்** உட்பட இலங்கையின் சகல பத்திரிகைகளில் மாத்திரமல்ல **தாமரை, சுபமங்களா, ஆனந்தவிகடன்,** குமுதம் ஆகியவற்றிலும் எழுதியவர்.

**விவேகி** இணை ஆசிரியர்களில் ஒருவர்.

2016 ல் இவர் காலமாகினார்.

**கங்கு மட்டை**

**ஈழநாடு 10 ம் ஆண்டு நிறைவை ஒட்டி நடத்திய**

**சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதைகளில் இதுவும் ஒன்று.**

**போட்டிச் சிறுகதைகள் சில நூலாக்கப்பட்ட 69களில் நூலுக்கு கங்கு மட்டை என்ற பெயரே சூட்டப்பட்டது.**

**சோளகக் காற்றின் வேகமான வீச்சால் பனைமரங்கள் சரசரத்து ஆடின.**

**எனத் தொடங்கி**

**கங்குமட்டைகள் விழுந்து கொண்டிருந்தன.**

**என்று முடியும் கங்குமட்டை கதையை இதே பெயரில் வந்த தொகுதியில் அல்லது யாழ்ப்பாணத்து இராத்திரிகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது ஈழநாடு நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற **போராடப் பிறந்தவர்கள்** நாவல் பின்னர் **இரவின் முடிவு** எனும் பெயரில் நூலாகியுள்ளது என்பது பிரத்தியேகமான தகவல்.

**21 April 2018**

பிடித்த சிறுகதை 58

ஈழத்தின் மிகமுக்கியமான பெண் இலக்கிய ஆளுமை. இடது சாரிகளின் மீது கடும் விமர்சனம் உள்ளவர். மல்லிகையிலும் எழுதியிருக்கிறார். 2008ல் வடமாகாண ஆளுனர் விருதுக்கான தெரிவுக் கடிதத்தை கையளிக்க அவரது தொண்டமனாறு வீட்டில் முதன் முதல் நேரில் சந்தித்தேன். அவரின் பின், எழுத்துலகுக்கு வந்த நான் இன்னமும் இடது சாரியத்தில் நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறேன். இவர் அதற்கு எதிர் நிலைப்பாடுடையவராக இருக்கிறார். அது அவரவரது தனிப்பட்ட காரணம் அதில் தலையிட பிறர்க்கு உரிமை இல்லை.

**குந்தவை-**

இரா.சடாட்சரதேவி இயற்பெயர்.

தொண்டமனாறைச் சேர்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரி. 1963 ல் ஆனந்தவிகடன் முத்திரைக் கதையாக வந்த **சிறுமைகண்டு பொங்குவாய்** எனும் கதையுடன் எழுத்துலகுக்கு அறிமுகமானவர். இவர் ஆசிரியராக புத்தளத்திலும், யாழ்ப்பாணத்திலும் கடமையாற்றி,

90ம் ஆண்டு யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலிருந்து சுயவிருப்பின் பேரில் ஒய்வு பெற்றார்.

**இவரது நூல்கள்**

யோகம் இருக்கிறது (மித்ர வெளியீடு 2002), ஆறாத காயங்கள்( 2016).

**கணையாழி, உயிர் எழுத்து, கனவு,அலை,சரிநிகர்,சக்தி, மூன்றாவது மனிதன், மல்லிகை, மகுடம், ஜீவநதி** ஆகிய சஞ்சிகைகளில் எழுதியவர். தேசியப் பத்திரிகைகளிலும் இவர் எழுதினார். சுதந்திரனிலும் இவர் எழுதியிருக்கிறார். இவரது முக்கிய கதைகளான **யோகம் இருக்கிறது, பெயர்வு** ஆகியன **கணையாழி** சஞ்சிகையில் வெளிவந்தவை. **பெயர்வு** கதை ஏ.ஜே.யால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எண்ணிக்கையில் குறைவாக எழுதினாலும் இவரது இரு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

**நாடும் நம் மக்களும்**

**சகாலப் பிரச்சனையை வைத்து மல்லிகை 40 ஆவது ஆண்டுமலரில் இவர் எழுதிய கதை இது.**

**சற்றுக் கண் அயர்ந்திருக்க வேண்டும்...**

**எனத் தொடங்கி**

**சோற்றில் வைத்த கையோடு,இவனையே பார்த்துக் கொண்டிருக்கத் தோன்றியது.**

**என்று முடியும் இக்கதையை மல்லிகை 40 ஆவது ஆண்டு மலரில் அல்லது ஆறாத காயங்கள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

அன்றிலிருந்து இன்றுவரை தன்னம்பிக்கையும் தளரா மனநிலையுடன் சாவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் இவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள நிறைய விடயங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமான ஒன்று **வைராக்கியம்.**

**22 April 2018**

## பிடித்த சிறுகதை 59

JVP. கிளர்ச்சியின் பின்னான காலம். அரிசிக்குத் தட்டுப்பாடு. 3 Kg. அரிசிக்கு மேல் கொண்டு செல்லத் தடை. பஸ்சில் சோதனை செய்து. அரிசியைப் பறிமுதல் செய்து வழக்குப் பதிவுசெய்யும் நடைமுறை இருந்தது. அரிசியை மாவாக்கி எவ்வளவு கிலோவும் கொண்டு வரலாம். அதற்கு பணம் வேண்டுமே.

இலக்கிய அரசியல்காரன் நான். என்னுடன் தொழில் நுட்பக்கல்லூரியில் கற்ற ஒரு கவிஞன் நிலாவெளியில் இருந்தான். அதோடு நிலவெளி 8 ஆம் கட்டையில் இருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கல்குவாறியில் எனது பாடசாலை சக மாணவன் ஒருவன் கூலியாக இருந்தான். திருகோணமலைக்கு அவர்களிருவரையும் நம்பி நான் மா கொள்வனவுக்காக பத்து கிலோவுக்குரிய பணத்துடன் வந்து சேர்ந்தேன்.

வாகனத்தில் வந்து கல்குவாறிக்குள் நுழைந்த ஒருவரை என் நண்பன் சுட்டிக்காட்டி இவர்தான் நிலாவெளி உதவி அரசாங்க அதிபர். கதைகளும் எழுதுபவர் என்றார்.

இந்த மனிதரை எனது வாசிப்பின் மூலம் நான் அறிந்திருந்தேன். வீரகேசரியில் வந்த ஒரு சிறுகதையையும், சுருட்டுக்கொட்டிலையும், வால்சுருட்டுக்கட்டும் சிறுவனையும் இன்றுவரை என்னால் மறக்க முடியவில்லை.

அந்தக் கதையின் தலைப்பை நான் மறந்துவிட்டேன்.

**துருவன்**

22/11/1943 ல் பிறந்த இவரது இயற் பெயர் கனகரத்தினம் பரராஜசிங்கம். செங்குந்தா இந்துக் கல்லூரி பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரி.

**கலைச்செல்வி** இதழில் எழுதி இலக்கிய உலகுக்கு வந்தவர்.குறைவாக எழுதினாலும் நிறைவான கதைகளின் **சொந்தக்காரர். வியாபாரம், பூ, விழாம்பழம்** என்பன ஈழத்தின் தரமான கதைகள்.

மிக இளவயதில் 7/4/89 ல் இவர் காலமாகினார்.

இவரது மனைவி **செல்வராணி பரராஜசிங்கம்** 2009ல் இவரது கதைகளைத் தொகுத்து பூ என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

**வாய்க்கால்**

**12/4/1966 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**வெண்மணல் முற்றத்தில்...**

**என ஆரம்பித்து**

**இனி? வாழ்வு வேறு.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

மா வாங்கப்போன சம்பவத்தையும், பின்னான நான் பட்ட அவஸ்த்தைகளையும், இல்லாமல் போன கல்குவாறியைப் பற்றியும் கதை ஒன்றை எழுத முடியும். எழுத விருப்பமாகவும் உள்ளேன். இப்படி இப்படி எத்தனையோ அனுபங்கள் பார்ப்போம்.

**22 April 2018**

## பிடித்த சிறுகதை 60

ஒருபோதும் நேரில் காணாத நெருங்கிப் பழகி இருக்காத ஒரு எழுத்தாளரின் மரணச் செய்தி கேட்டு கண்ணீர்விட்டு அழுதது இவருக்காகத்தான். எனது மானசீக குரு இவர்தான்.முற்போக்கு இலக்கியத்தின் அசல்களில் முக்கியமானவர். வடமராட்சியின் இலக்கிய ஆளுமைகளில் விதந்துரைக்கத்தக்கவர். ஒரு மா.ஓ வாதி.

**செ.கதிர்காமநாதன்.**

8/3/1942 ல் கரவெட்டியில் பிறந்த இவர் விக்கினேஸ்வராக் கல்லூரியில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி பட்டதாரியானவர். பாடப்புத்தகங்களில் இடம் பெற்ற,பிறமொழிகளில் பெயர்ப்புச் செய்யப்பட்ட **ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்** கதை. A/L பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வெறும் சோற்றுக்கே வந்தது ஆகியவற்றின் சொந்தக்காரர். பதிமூன்று வருட இலக்கிய வாழ்வில் இவரது சாதனை மகத்தானது. சிறுகதை,மொழி பெயர்ப்பு, கட்டுரை, அறிமுகம்,விமர்சனம் என்பன இவரது ஈடுபாடுள்ள

துறைகள்.

1959 ல் இவர் எழுதத் தொடங்கினார். கலைச்செல்வியிலும் **எல்லாம் உனக்காக** என்னும் கதையை அவ்வாண்டில் எழுதினார்.மொத்தம் 17 சிறுகதைகள் எழுதியுள்ளார்.

**தமிழின்பம், கற்பகம்,வசந்தம், அஞ்சலி, வீரகேசரி, மித்திரன், தினகரன். தாமரை, கார்க்கி** ஆகியவற்றிலும் பல்கலைக்கழக **இளங்கதிர். கதைப்பூங்கா** ஆகியவற்றிலும் இக்கதைகள் பிரசுரமாகி இருக்கின்றன.

இவர் 14 க்கு மேற்பட்ட பிறமொழிப்படைப்புகளை சிறப்பாக தமிழுக்கு கொண்டு வந்துள்ளார். 1942 ல் நிகழ்ந்த வங்காளப்பெரும் பஞ்சத்தின் பின்னணியில் **கிருஷன் சந்தர்** எழுதிய உருது மொழி நாவலை **I CANNOT DIE** என்ற ஆங்கில மூலத்திலிருந்து தமிழுக்கு தந்தமை இதற்கு நல்ல உதாரணம். அதுதான் **நான் சாகமாட்டேன்.** பட்டம் பெற்றபின் 1966 ல் வீரகேசரி - மித்திரனில் உதவி ஆசிரியரானார். அக்காலத்தில் மித்திரனில் தொடராக எழுதிய நாவல் **கோடை நதி .**

**இவரது நூல்கள்:**

கொட்டும்பனி (சிறுகதைகள்-1968 சாகித்தியப் பரிசு), மூவர் கதைகள் (1971. நீர்வை,செ.யோகநாதனுடன் இணைந்து), நான் சாகமாட்டேன் (72.இறப்புக்குப்பின்), செ.கதிர்காமநாதன் படைப்புகள்.(2015).

1971 ல் நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து வவுனியா கமநலத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராக பணி செய்து கொண்டிருந்தபோது 1/9/72 ல் இவர் காலமாகினார்.

ஒரு உண்மையான படைப்பாளி இனம், மொழி, மதம், தேசம் என்ற எல்லைகளைக் கடந்தவன். அதற்கு உதாரணம் இவரது மொழிபெயர்ப்புகளும் இந்தக் கதையும். மரணிப்பதற்கு சில நாட்களுக்குமுன் வீரகேசரியில் இவர் எழுதிய கதை இது. நான் சாகமாட்டேன் தொகுதியிலும், செ.கதிர்காமநாதன் படைப்புகள்

தொகுதியிலும் இக்கதை மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அன்றைய நாளில் சர்வதேச ரீதியில் மனிதகுலம் அனைத்தையும் அதன் வாழ்வையும் இக்கதை பகிர்ந்து கொள்ளத்துடிக்கிறது. இன்றைய காலகட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மீது தாக்குவதை மனிதகுல நேசமுள்ளவர்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் அல்லவா? அதற்கு அமைய ஈழத்தில் வெளிநாட்டுப் பிரச்சினையை அலசும் முதல் தமிழ்க்கதையாக இது இருக்கக் கூடும். இது 1970 ஓகஸ்ட்,செப்ரெம்பரில் வீரகேசரியில் வெளிவந்த இக்கதை பற்றிய இவரின் கூற்று.

**வியட்நாம் உனது தேவதைகளின் தேவவாக்கு.**

**சைக்கோன் நெடுஞ்சாலைகளிலே ........**

**என ஆரம்பித்து**

**நாங்கள் மனிதர்கள் கொரியாவின் விடுதலை வீரர்கள் ஏகாதிபத்தியவாதிகள் ஒருபோதும் எங்களை வென்றுவிடமுடியாது**

**என்று முடியும் இக்கதையை நான் சாகமாட்டேன் தொகுதியில் அல்லது செ.கதிர்காமநாதன் படைப்புகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

மறைந்த தோழர் கனடா சிவம் என்னிடம் ஒப்படைத்த ஒரு பணி. எனக்கு ஏற்பட்ட இழப்பினால் தடைப்பட்டிருந்தது. அந்த வேதனையை கரவெட்டி கலாசாரப் பேரவையும், கனடா தேடகமும் இணைந்து தணித்துள்ளன. அவர்களுக்கு நன்றி.

இனி.....கோடை நதியை தேடவேண்டும்.

**23 April 2018**

பிடித்த சிறுகதை 61

தமது சொந்தப் பெயர்களைவிட்டு புனைபெயர்களால் அறியப்பட்டவர்களிடையே அமைதியாக தன் சொந்தப் பெயரால் அறியப்பட்டவர் இவர்.

**து.வைத்திலிங்கம்.**

1939 ல் நாயன்மார்கட்டில் பிறந்த இவர் யாழ்/இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். வை.ஏரம்பமூர்த்தி, கார்த்திகேசனிடம் கற்றவர். செம்பியன் செல்வன், செங்கை ஆழியானின் சகமாணவன். சுதந்திரனில் எழுத ஆரம்பித்து யாழ் ஈழநாடு, சஞ்சீவியிலும் தேசிய பத்திரிகைகளிலும் எழுதியவர். நாவல், குறுநாவல் என பல படைப்புகளையும் தந்து தனது படைப்புகளுக்காக பரிசுகளும் பெற்றவர். ஒரு நேர்மையான நிர்வாக சேவை அதிகாரி.

**இவரது நூல்கள்**

மண்ணின் கனவுகள்(சிறுகதைகள்), பூம்பனிமலர்கள் (நாவல்), ஒரு திட்டம் மூடப்படுகிறது (நாவல்).

இவர் 2008ம் ஆண்டு கொக்குவிலில் காலமாகினார்.

2009 ல் வெளிவந்த **ஒருவருக்காக அல்ல** எனும் இவரின் சிறுகதைத் தொகுப்பு அவ்வாண்டுக்கான சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான இலங்கை இலக்கியப் பேரவை விருதைப் பெற்றது.

கிணறு, எங்கே போகிறோம்?,தீர்ப்பு என்பன இவரின் குறிப்பிடத்தக்க கதைகள். யாழ் / இலக்கியவட்ட உறுப்பினரான இவர் அதன் தலைவராகவும் இருந்துள்ளார்.

**எழுச்சியின் குரல்**

**24/10/1965 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது. சுதந்திரனில் இப்படி ஒரு முற்போக்கான கதையை எழுதும் மனப்பக்குவம் இவருக்கு இருந்து இருக்கிறது.**

**கோவிலுக்குள் ஒரு பகுதியினரை அனுமதிக்காமல் தடுக்கும் ஆண்டகைகளுக்கெதிராக கிளரும் இளம் சந்ததியைப் பற்றிக் கூறும் கதை இது.**

**சர்வ அலங்காரங்களுடன் அம்பிகை காடசி தந்தாள்....**

**எனத் தொடங்கி**

**“என்னுடன் வா நூழைந்துதான் பார்ப்போம். சுடுறவன் சுடட்டும் வா” அவன் கால்கள் என்னை நோக்கி முன்னேறுகின்றன.**

**என்று முடியும் எழுச்சியின் குரல் எனும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

பாரதிசொன்ன சிறுமை கண்டு பொங்கும் குணம் ஒரு எழுத்தாளனுக்கு அவசியம். அதனை வைத்திலிங்கத்தின் இக்கதை உணர்த்தி நிற்கிறது.

**23 April 2018**

பிடித்த சிறுகதை 62

என் சமகால இலக்கியவாதிகளுக்கு மத்தியில் இவரது பெயர் நன்கு பரிச்சயமானது. இவரது புனைபெயரில் தமிழகத்தில் ஒரு பிரபலமான எழுத்தாளர் இருந்தார். இவர் இப்புனைபெயரைத் தவிர்த்திருக்கலாம் என்று நாங்கள் பேசிக் கொள்வோம்,

**நகுலன்**

**நா.க.தங்கரத்தினம்** இவரது இயற் பெயர்.

அராலியில் பிறந்த இவர் **அராலியூரான்** எனும் பெயரிலும் கதைஎழுதியுள்ளார். மேற்குறித்த கதை இந்தப் புனைபெயரிலேயே எழுதப்பட்டது. தமிழ் ஆசிரியரான இவர் ஒரு சைவப்புலவரும் கூட. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் ஒரு நாடகக்காரர். பல நாடகங்களை, வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். 1971ல் இவர் சொந்தப் பெயரில் எழுதிய **மனச்சாட்சி** எனும் நாடகம் **அஞ்சலி**யில் பிரசுரமாகி இருக்கிறது. **சுதந்திரன், ஈழநாடு**, மற்றும் இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் இவரது கதைகள் நிறையவே பிரசுரமாகி இருக்கின்றன.

**இவரது நூல்கள்:**

கன்னிப்பெண் (சிறுகதைகள், 1965, நகுலன் வெளியீடு, கலையகம்.சித்தங்கேணி) இப்படி எத்தனை நாட்கள்? (சிறுகதைகள் 1968. சிவச்செல்வி வெளியீடு. கலையகம் சித்தங்கேணி)

தமிழ்ச்சட்டம்பியார்

**04/10/ 1966 ல் சுதந்திரனில் வெளியான கதையிது. இதோடு மானம் கெட்டுப்போச்சு எனும் கதையும் இவரைச் சிறுகதைப் படைப்பாளியாக இனங்காட்டியவை.**

**"தங்கம்மா.. தங்கம்மா இஞ்சை ஒருக்கா ஓடியா."**

**என ஆரம்பித்து**

**"அதுக்கினி என்ன செய்யிறது?"**

**என்று முடியும்**

**இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தமிழ் அபிமானியும், சைவப் புலவருமான இவர் பேச்சு மொழியை தன் சிறுகதைகளில் அழகாக கையாண்டவர். இவர் இறுதி நாட்களில் சித்தங்கேணியில் வாழ்ந்து அங்கேயே அமரரானவர்.

**நவாலியூர் சோமசுந்தரப்புலவர்** கற்பித்த வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் என்னும் பெருமிதம் இவருக்கிருந்தது. பழையமாணவர் சங்கத் தலைவராகவும் இவர் இருந்துள்ளார்.இச் சங்கம் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை 1994இல் இவர் தலைவராக இருந்த காலத்தில் கொண்டாடியது.1968 ல் அரசாங்க பொது எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையை இக்கல்லூரி மண்டபத்தில்தான் நான் எழுதினேன்.

ஒரு முக்கிய குறிப்பு. அதில் நான் சித்தியடையவில்லை.

**24 April 2018**

பிடித்த சிறுகதை 63

**“தோழர் சேவியருக்கு வணக்கம். உங்களது சிறுகதையை தோழர் ஒருவர் அனுப்பினார். சூழ்லாம்பு என்னும் அக் கதையை தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்துக்கு அனுப்பிவிட்டேன். தொடர்ந்து எழுதுங்கள்.நான் கீழே குறிப்பிடும் எழுத்தாளர்களின் படைப்புகளை வாசியுங்கள். கே.டானியல் என்.கே.ரகுநாதன், நீர்வை பொன்னையன் செ.கணேசலிங்கன்.”**

அழகான மணிமணியான உறுப்பெழுத்தில் அக்கடிதம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முகவரியில் இருந்து வந்திருந்தது. இவர் அங்கு 1967ல் ஆசிரியராக இருந்தார். **அல்வாய் தே.சேவியர்** என்ற பெயரில் அனுப்பப்பட்ட **சூழ்லாம்பு** தினபதியில் பிரசுரமாகவில்லை. எழுதியவர் **நந்தினி** என்ற பெயரில் (நான் அனுப்பிய) அக்கதை சுதந்திரனில் பின்னர் பிரசுரமாகியது.

ஆனாலும் என்னை மதித்து நான் விரும்பும் எழுத்தாளர் ஒருவர் எனக்கு கடிதம் எழுதியது ஒரு

முக்கியமான செய்தி.

**செ.யோகநாதன்**

1/10/41 ல் கொழும்புத்துறையில் பிறந்த இவர். யாழ்/ சென். யோண்ஸ் கல்லூரியிலிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானவர். 1961ல் **கலைச்செல்வி**யில் எழுதிய **மனக்கோலம்** என்னும் கதையுடன் இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியவர்.

கலைச்செல்வி நடத்திய நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றவர். முதற் பரிசு **மு.த. புதியதொரு வீட்டிற்காக.**

இவர்பற்றி எழுத ஆரம்பித்த போது முகநூலில் நண்பன் **வீ.ரி.இளங்கோவன்** எழுதிய ஒரு விரிவான பதிவைப் பார்க்கக் கிடைத்தது. அரைத்தமாவை அரைக்காது சில தகவல்களை தருகிறேன்.

**இவரது நூல்கள்**

> யோகநாதன் கதைகள்(1964), ஒளி நமக்கு வேண்டும் (குறுநாவல்கள், மலர் பதிப்பகம் 1973,சாகித்தியப்பரிசு), காவியத்தின் மறுபக்கம்(குறுநாவல்,மு.எ.கூட்டுறவுப் பதிப்பகம்,1976,சாகித்தியப் பரிசு), இரவல் தாய் நாடு(கணையாழி குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது), நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே (1993 இலக்கிய சித்தனைப்பரிசு),

சிறுகதை, குறுநாவல், சிறுவர் இலக்கியம், நாவல் என கிட்டத்தட்ட 90 புத்தகங்கள் வெளியிட்டுள்ளார்.

பேராதனை தமிழ்ச் சங்கம் 1961ல் நடத்திய சிறுகதைப் போட்டியில் **சோளகம்** கதைக்காக முதல் பரிசு தங்கப்பதக்கம் பெற்ற இவரது பரிசு பெறும் பயணம் இலங்கை இந்திய பரிசுகளை இலக்கியத்திற்குப் பெறும் வகையில் தொடர்ந்தது.

**வெள்ளிப்பாதசரம், ஒரு கூடைக்கொழுந்து** என இரண்டு ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகள் கொண்ட தொகுப்பையும் வெளிக் கொணர்ந்துள்ளார். (முக்கிய செய்தி அத் தொகுதிகளில்

என் கதை சேர்க்கப்படவில்லை)

நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த பிறகு வாகரை,பூநகரி உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றினார்.

1980 ல் இந்தியா சென்று 16 வருடங்களின் பின் நாடு திரும்பி எம்.டி. குணசேனா நிறுவனத்தின் தமிழ் வெளியீட்டுப் பிரிவில் இணைந்துகொண்டார்.

இவரது எழுத்துகள் வெளிவராத இலங்கை, இந்திய பத்திரிகைகள் இல்லை என ஒரு நண்பர் கூறினார்.

தனது அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்தவர் என்ற குற்றச்சாட்டு இவர் மீது வைக்கப்படுகிறது. அதில் உண்மை இருப்பதையும் நானறிவேன். அதனால் அவரோடு நெருங்காது தூரவே இருந்துவிட்டேன்

எனினும் அவரது இலக்கியப் பங்களிப்பு விதந்துரைக்கத் தக்கது என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள், மறுதலிக்க மாட்டார்கள், தனிப்பட்ட காரணங்களைத் தவிர்த்து.

**தோழமையென்றொரு சொல்**

**“தம்பி உன்ரை காசு இந்தா..”**

**எனத் தொடங்கி**

**“நாங்களெல்லாம் ஒண்டெண்டு இவருக்கு இனியெண்டான்ன தெரியட்டும்..”**

**என்று முடியும் தமிழில் சிறந்த கதைகள் என உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட கதைகளில் ஒன்றான இக் கதையை யோகநாதன் கதைகள் தொகுதியில் அல்லது ஒளி நமக்கு வேண்டும் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

1964 ல் பேராதனை புதுமை பிரசுரத்தினர் வெளியிட்ட. இவரது சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்ற சிறுகதை இது. இத் தொகுப்புக்குப் பதிப்புரை எழுதிய திரு. அ.ஜெயரத்தினம் (இப்போது

ஓய்வு பெற்ற நிர்வாக சேவை அதிகாரி) இரண்டு முக்கிய செய்திகளைத் தந்துள்ளார்.

இக்கதை, தொகுதிக்கென எழுதிச் சேர்க்கப்பட்ட கதை. நூலுக்கான அட்டைப்படத்தை வரைந்தவர் அக் காலத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஓவிய ஆசிரியராக இருந்த அ.மார்க் அவர்கள்.

28/1/2008ல் காலமான யோகநாதனின் முழு நூல் பட்டியலையும், அவரது முக்கியமான நூல்களையும் நூலகம் வலையமைப்பில் தரவிறக்கி வாசிக்கலாம். இவரது வேறும் சிலகதைகள் பிறமொழிகளில் வெளிவந்துள்ளன.

**24 April 2018**

## பிடித்த சிறுகதை 64

மறுமலர்ச்சி சிறுகதைகள் தொகுப்பை ஒப்பு நோக்கும் போதும், ஈழகேசரி கதைகள் தொகுப்பை ஒப்பு நோக்கும்போதும் நேர்த்தியான கதை சொல்லியாக இவரை அறிந்து கொண்டேன்.

எனது இத்தொடர் எழுத ஆரம்பித்த போது இவர் பற்றித் தேட முயன்று தோற்றுப்போன நிலையில் இன்று காலையில் ஒரு மரண அறிவித்தல் மூலம் இவரை அறிந்து கொள்ளக் கிடைத்தது.

**நடனம்**

11/8/ 1930 ல் யாழ். நீர்வேலியில் பிறந்த இவரது இயற் பெயர்.**தி.நடனசபாபதிசர்மா.** ஓய்வு பெற்ற அரச ஊழியரான இவர் வண்ணார்பண்ணையில் வாழ்ந்து பின்னர் பிரான்ஸ் சென்று 21/04/ 2018 ல் அங்கேயே காலமாகினார்.

இவர் ஐந்து கதைகள் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அவற்றில் மூன்று கதைகளை நான் அறிந்துள்ளேன். **சிதைந்த வாழ்வு (ஈழகேசரி 1946). வாழ்வு (மறுமலர்ச்சி-1946). நினைவுத் திரை(ஈழகேசரி 1947).**

சிறுகதை பற்றிய புரிதலோடு எழுதிய பலர் எழுதுவதை நிறுத்திக் கொள்கின்றனர். அந்த வரிசையில் நடனம் முக்கியமானவர். கதை சொல்வதில் ஈழத்தின் சிறுகதை மூலவர்களுக்கு சமதையானவர்.

**வாழ்வு**

**மறுமலர்ச்சி சஞ்சிகையின் 8ஆவது (கார்த்திகை-1946.) இதழில் பிரசுரமான கதை இது.**

**பொழுது புலரும் சமயம். தெருவிலே யாரோ பேசிக்கொண்டு போனார்கள்.**

**என ஆரம்பித்து**

**என்ன உலகம் இது?**

**என்று முடியும் வாழ்வு எனும் இக்கதையை மறுமலர்ச்சிச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது இறுதிக்கிரிகைகள் பிரான்ஸில் நடைபெற்றன.

அவருக்கு தமிழ்ச் சிறுகதை அபிமானிகள் சார்பில் எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

**25 April 2018**

## பிடித்த சிறுகதை 65

அன்பில் இறைவனுள்ளான்

அருளுடைய வாழ்விலுள்ளான்.

இன்பத்தொடு சிலபேர்

இருக்கப் பலபேர்கள்

துன்பத் துயராழும் புல்லுலகில் இறையில்லை.

இன்பப் பொது உடமை உலகத்து இறைவனுள்ளான்.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வெளியிட்ட **இந்து தர்மம்** 1962 -1963. இதழில் வெளிவந்த **இறையுறையும் இடம் எதுவோ?** எனும் கவிதையின் இறுதி வரிகள் இவை.

வித்தியாசமான தொனிப் பொருளில் இக்கவிதையை எழுதிய இவரை நான் தேடினேன்.

1974 ல் யாழ்ப்பாண அச்சகத்தில் பயிலுனனாக இருந்த காலத்தில் அங்கு வந்த இவரை ஒரு தடவை சந்தித்திருக்கிறேன்.

**முத்து சிவஞானம்**

வசாவிளானைச் சேர்ந்த இவர் பேராதனைப்

பல்கலைக் கழகப் பட்டதாரி. இவரது முதல்கதை **இறுதி மூச்சு**, 1962 ல் **செங்கை ஆழியானும், க. நவசோதி**யும் தொகுத்த **கதைப்பூங்கா** வில் இடம் பெற்றது. தினகரன், சுதந்திரன் பத்திரிகைகளில் சிறுகதை, கவிதைகள் எழுதியுள்ளார்.

**உரிமைக்கு உயிர்** எனும் கதை **சுதந்திரன்** சிறுகதைப் போட்டியில் 2ம் பரிசு பெற்றது. ஆண்டு தெரியவில்லை.

பட்டதாரியானதும் ஆசிரியராக பலாலியில் கடமையாற்றினார். நாடக ஆர்வலாரான இவரால் சிறந்த நாடகவியலாளர்களான சிலர் இவரைப் புகழ்ந்து எழுதியதை நான் அவதானித்துள்ளேன்.

அவர் விடுமுறையில் யாழ் வந்த போதே அவரைச் சந்தித்தேன். அப்போது மலையக கல்லூரி ஒன்றில் அதிபராக இருந்தார்.

இடதுசாரிக் கருத்தியலோடு என்னோடு உரையாடினார்.

ஓய்வு பெறும்போது கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப்பிரிவுப் பணிப்பாளராகவும், ஆலோசகராகவும் இருந்தார்.

**சாம்பல் மேடு**

**21/1/1963 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**செல்லம் துடித்துப் பதைத்து எழுந்தாள்..**

**எனத் தொடங்கி**

**அவள் குடில் இருந்த இடத்திற்குப் பதில்.......**

**சாம்பல்மேடு....**

**என்று முடியும் சாம்பல் மேடு கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரின் படைப்புகள் நூலுருவாகாமையே இவரை இளம் தலைமுறை அறியாதிருக்கக் காரணம். எண்ணிக்கையில் குறைவான படைப்புகளே அவை.

**25 April 2018**

பிடித்த சிறுகதை 66

இருதய சத்திர சிகிச்சை முடிந்து நான் கொழும்பு இரத்மலானையில் தங்கியிருந்தேன்.

என் உடல் நலம் விசாரித்து தொலைபேசியில் தொடர்பு கொண்ட இவர்.

**"உங்களை பேட்டி எடுப்பது போல் தொலைபேசி உரையாடல் பாணியில் ஒரு கட்டுரை எழுதப் போகிறேன்"** என்றார்.

அவருக்கும் எனக்கும் ஏலவே தொடர்பிருந்தது. அவர் மீது நான் மிக விருப்பமான வாசகன்.

வாகிமா பிரிவதற்கு முன்னரான ஆண்டில் நடைபெற்ற இலக்கிய விழாவுக்கு பிரதம அதிதியாக எனது பலத்த சிபார்சுடன் இவரை அழைத்திருந்தேன். **கலைவாதி கலீல்** ஆளுனர் விருது பெறுவதற்காக இவருடன் விழாவுக்கு வந்திருந்தார்.

அதன் பின்னரே சத்திரசிச்சை நடந்தது.

சில மாதங்களின் பின் ஏதேச்சையாக இவருடன் தொலைபேசியில் கதைக்கக் கிடைத்தது.

கதையோடு கதையாக என்னைப் பற்றிய கட்டுரை பற்றி விசாரித்தேன்.

**"உங்கள் இலக்கியப் பங்களிப்பு இதுவரை பெரிதாக ஒன்றுமில்லை. அதனால் அந்தக் கட்டுரை எழுதுவதைத் தவிர்த்து விட்டேன்"** என்றார்.

மூத்த எழுத்தாளர். தமிழ் இனி 2000 மாநாட்டில் என்னோடு கட்டுரை சமர்ப்பித்தவர். அவரின் கூற்றை மௌனமாக ஏற்றுக் கொண்டேன்.

மிகமிக சத்தியமான உண்மை இது.

**தெளிவத்தை ஜோசப்**

மலையகத்தின் முன்னோடி எழுத்தாளர். ஈழத்துச் சிறுகதைதுறைக்கு வளமூட்டிய முக்கிய ஆளுமை.

16/2/34 ல் பதுளை ஊவாக் கட்டவளையில் பிறந்தவர். தெளிவத்தைத் தோட்டத்தில் ஆசிரியராக இருந்தமையால் தனது பெயரோடு தெளிவத்தையை இணைத்துக்கொண்டவர்.

தமிழக **உமா** பத்திரிகையில் இவரது முதல் கதை **வாழைப்பழத்தோல்** வெளிவந்தது. தமிழ்வாணனின் **கல்கண்டு கே.வி.எஸ் மோகனின்** கதம்பத்திலும் (இலங்கை) இவர் எழுதியுள்ளார்.

1963 ல் வீரகேசரி நடத்திய மலையக சிறுகதைப்போட்டியில் **பாட்டி சொன்ன கதை** க்காக முதற்பரிசு பெற்றார். அதே ஆண்டு **மலைமுரசு** சிறுகதைப்போட்டியில் **நாமிருக்கும் நாடே** எனும் கதைக்காக முதற் பரிசு பெற்றார். 1964 ல் வீரகேசரி சிறுகதைப் போட்டியில் இவரின் **பழம் விழுந்தது** கதைக்கு முதற் பரிசு கிடைத்தது.

**இவரது நூல்கள்:**

காலங்கள் சாவதில்லை(நாவல் 1974), நாமிருக்கும் நாடே(சிறுகதை, 1979,சா.விருது,வைகறை),

பாலாயி (3 குறுநாவல்கள். 97), குடை நிழல். (நாவல் 2 பதிப்பு-2010.இ.பேரவை விருது), மீன்கள் (சிறுகதைகள் 2013, ஜெயமோகன் வெளியீடு), தெளிவத்தை ஜோசப் கதைகள் (2015, பாக்கியா பதிப்பகம் சா. பரிசு). நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் (நாவல் 2016).

## இவர் தொகுத்த நூல்கள்

மலையகச் சிறுகதைகள்(துரைவி), உழைக்கப் பிறந்தவர்கள் (துரைவி ), மலையக சிறுகதை வரலாற்றை இவர் விரிவாக எழுதியுள்ளார்.

இவர் பெற்ற விருதுகள்:சம்பந்தன் விருது(2000), கலாபூஷண விருது, கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது(2011). சாகித்தியரத்னா விருது(2014), விஷ்ணுபுரம் விருது(2013),

கிட்டத்தட்ட 66 கதைகளை இலங்கையின் சகல பத்திரிகைகளிலும். (சரிநிகர், மூன்றாவது மனிதன் உட்பட) எழுதி இருக்கிறார்.

மல்லிகை 73ம் ஆண்டு ஏப்ரல் இதழில் இவரது அட்டைப்படம் வெளிவந்தது.

**பொய்மை**

**16/8/64.ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**பணப் படையலின் முன் அமர்ந்திருந்தார் துரை.**

**என ஆரம்பித்து**

**ஒவ்வொருவராகக் கூட்டத்தை குறைத்தனர்.**

**என்று முடியும் பொய்மை கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

பெருமைக்காக அல்ல இவரோடு ஒப்பிடும்போது நான் மிக மிக சாதாரணன்.

இவர் மீதான இவர் படைப்புகள் மீதான பிரியம் எப்போதும் எனக்கு உண்டு. ஆயினும் அன்றைய தொலைபேசி உரையாடலுக்கு

பின்னரான சம்பவங்களை உங்களுக்கு தற்பெருமையற்றுத் தருகிறேன். என்னை மன்னியுங்கள்.

மல்லிகை அட்டைப்படம்(ஒக்டோபர்-2007), ஞானம் அட்டைப்பட அதிதி (நவ.2009), நெல்லிமரப் பள்ளிக்கூடம் (கொடகே சாகித்திய பரிசு 2012, சாகித்திய பரிசு 2012, வட மாகாண சிறந்த நூல் விருது-2012). முதலமைச்சர் விருது (2011), கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது(2015), நந்தினி சேவியர் படைப்புகள் (கோவை விடியல் பதிப்பகம், கிழக்கு மாகாண சிறந்த நூல் விருது).

இந்தப் பரிசுகள் நான் 2000 ம் ஆண்டுகளுக்கு முன்னர் செய்த இலக்கிய முயற்சிகளுக்கானவை.

ஒருவர் எனது பங்களிப்பு பெரிதாக இல்லை என்கிறார். இவர்கள் பரிசளிக்கிறார்கள்.

ஒன்றும் புரியவில்லை........

உங்களுக்கே விட்டு விடுகிறேன்.

மீண்டும் கூறுகிறேன் இது தற்புகழ்ச்சி அல்ல.

**25 April 2018**

## பிடித்த சிறுகதை 67

**மீ**ண்டும் வேதாளம் கதை சொல்ல ஆரம்பித்தது.உலகில் ஒரே ஒரு முக்கிய எழுத்தாளன் இருந்தான்.அவன் முன்னோக்கி நடந்தான்.அவன் நீண்ட நடை நடந்தான் நடந்தான், நடந்தான், நடந்தான், ஆயினும் என்ன? இவன் இன்னும் ஆரம்பித்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். இவன் முற்போக்காளனா?, பிற்போக்காளனா?, திரிபுவாதியா?, இடைத்தரிப்பாளனா? என்று கேட்க, இவன் யாருமல்ல சாட்சாத் ஈழத்து தமிழ் மார்க்சிஸ்ட் எழுத்தாளன் என்று விக்கிரமாதித்தன் சரியாகவே பதில் கூற.......

ஒரு **முற்போக்காளன்** என்று தனது நூலொன்றின் பின் அட்டையில் இக்கருத்தை நக்கலாக எழுதியவர் தான் இவர். இவரது இறுதி வரிகளை இப்படியும் பொருத்தம் கருதி மாற்றி வாசிக்கலாம்.

**"இவன் வேறு யாருமல்ல இடதுசாரிகளுக்கு எதிர்க் கருத்துள்ள சாட்சாத் ஈழத்து தமிழ்**

ஆன்மீக எழுத்தாளன்."

**மு.பொன்னம்பலம்.**

1939 ல் புங்குடுதீவில் பிறந்த இவர் **தீவான்** என்னும் பெயரிலும் எழுதியிருக்கிறார். மு.தளையசிங்கத்தின் சகோதரர்.

பிரபஞ்ச யதார்த்தவாதி. மு.த.போலவே ஶ்ரீநந்த கோபாலகிரியின் சீடர்களில் ஒருவர். மு.த வின் மறைவுக்குப் பின் அவரது முழுப் படைப்புகளையும் ஓரே நூலாக கொண்டு வந்தவர்.

கவிதை,சிறுகதை, நாவல், சிறுவர்கவிதைகள், விமர்சனம், மொழிபெயர்ப்பு ஆகிய பல்துறைகளிலும் தன்னை வெளிக்காட்டி வருபவர். **திசை** பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்.

**இவரது வெளிவந்த நூல்கள்**

அது (கவிதைகள் 1968), யதார்த்தமும் ஆத்மார்த்தமும் (விமர்சனங்கள் 1991). கடலும் கரையும் (சிறுகதைகள், 1996), காலிலீலை (கவிதைகள் 1997), நோயில் இருத்தல்(நாவல் 1999), திறனாய்வு சார்ந்த பார்வைகள் (விமர்சனம்), ஊஞ்சல் ஆடுவோம்(சிறுவர் கவிதைகள் 2001), பொறியில் அகப்பட்ட தேசம் (கவிதை 2001), சூத்திரர் வருகை (கவிதைகள் 2003), விசாரம்(கட்டுரைகள் 2004), A Country Entrapped (Poetry 2007). நீர்க்கோலம் (சிறுவர் ஆக்கங்கள் 2008), முடிந்து போன தசையாடல் பற்றிய கதை (சிறுகதைகள் 2009), சங்கிலியன் தரை (நாவல் 2017). இத்தோடு 2009 ல்வெளிவந்து சாகித்திய பரிசு பெற்ற கவிதையில் துடிக்கும் காலம் எனும் கவிதை நூலையும், இடதுசாரி விமர்சகரான குமாரி ஜெயவர்த்தனாவின் இவரால் மொழி பெயர்க்கப்பட்ட நூலான ஓயாத கிளர்ச்சி அலைகள் 2015 ல் சாகித்தியப் பரிசு பெற்ற தமிழ் நூலையும் குறிப்பிடலாம்.

தீவிர தமிழ் தேசியவாதியான இவரது பிற்கால நடவடிக்கைகள். இவரோடு இணக்கமாக இருந்தவர்களாலேயே விமர்சிக்கப்பட்டுள்ளன.

“இவர் தன் கவிதைத் தொகுதிக்காக சாகித்திய பரிசு பெற்ற செயலை, கருத்து முதல்வாத, ஆன்மீகவாதியான அவர் பொருளுக்கு முன்னால் ஆடிப்போன பரிதாப நிலமை” என குறிக்கப்பட்டமையை நான் அறிவேன்.

இவருடனான பழக்கம் 1966 ல் இருந்து எனக்கு இருக்கிறது. 1996 ல் திருகோணமலை நகரமண்டபத்தில் நடந்த கடலும் கரையும் அறிமுக நிகழ்வுக்கு நான் பதில் தலைவராகக் கடமையாற்ற ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. (தலைமை பொறுப்பேற்ற செல்வின் இரேனியஸ் வேறு ஒரு நிகழ்வுக்குச் செல்ல வேண்டி இருந்ததால்' அந்தப் பொறுப்பை எனக்கு வழங்கினார்).

2002 ல் வ.கி.மா. ஆளுனர் விருதுக்காக சண்முகம் சிவலிங்கம், பஸீல் ஏ.காரியப்பருடன். மு.பொ வின் பெயரையும் சிபார்சு செய்து வவுனியாவில் நடந்த விழாவில் வழங்கச் செய்தோம்.

ஓட்டமாவடி அரபாத்தின் ஒரு சிறுகதைத் தொகுதிக்கு மு.பொ. அணிந்துரை எழுதியிருந்தார். அதில் பல எழுத்தாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அதில் என் பெயரில்லை. (இப்போதும் அது தொடர்கிறது) நூல் வெளிவந்த சில நாட்களின் பின் என்னைச் 'சந்தித்த மு.பொ, “குஞ்சு..... நான் ...பிழைவிட்டிட்டன் உன்ரை பேரை நான் குறிப்பிட்டிருக்க வேணும்... உண்மையிலை நான் பிழை விட்டிட்டன் ராசா.” என்று வருத்தப்பட்டார்.

இப்படி சகசமாகப் பேசும் உறவு அவருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இருந்தது, இருக்கிறது.

**மஹாநாம தேரர் மான்மியம்**

> **2005 ல் எரிமலையில் எழுதப்பட்ட கதை இது.**
>
> **சாது...சாது....**
>
> **புத்தர் நிற்கிறார் பிட்சா பாத்திரத்தோடு**
>
> **என தொடங்கி**

**சாது,சாது, சாது......**

**மஹாநாம தேரரின் ஆசி வழங்கல் அங்கே நிகழ்ந்தது**

**என்று முடியும் மஹாநாம தேரர் மான்மியமம் என்ற இக்கதையை மு.பொ.வின் முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை எனும் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவருக்கும் எனக்கும் தனிப்பட்ட கோபம் எதுவுமில்லை. இவர் கர்ணகடூரமாக விமர்சிக்கும் மார்க்சிய அணியினன் நான் இவரின் கருத்தோடு உடன்படும் தேவை எனக்கில்லை.

இவர்கள் அணியைச் சேர்ந்த காலம் சென்றகவிஞர் சு.வில்வரத்தினம் 2006 வரை என்னோடு கடமையாற்றினார்.

என் பிள்ளைகளுக்கு அவர் **வில்லுக்குஞ்சு மாமா.** இதைவிட வேறு எதுவும் எழுதத் தேவையில்லை என நினைக்கிறேன்.

**26 April 2018**

பிடித்த சிறுகதை 68

இந்தத் தொடரில் பிடித்த கதைகள் எழுதியவர்களில் ஒரு சிலரைத் தவிர அனேகமானவர்கள் உயிரோடு இல்லை. அதிலும் இளவயதில் மரணித்த ஆளுமைகள் தொகை அதிகம். அவர்களில் ஒருவர்தான் இவர்.

ஈழத்துச் சிறுகதை உலகின் ஈடுஇணையற்ற படைப்பாளி என இவரை செங்கை ஆழியான் போற்றியிருக்கிறார்.

முனியப்பதாசன்

1944. ல் வண்ணார்பண்ணையில் பிறந்த இவரது இயற்பெயர் தா.சண்முகநாதன். 1964 ல் **கலைச்செல்வி** நடத்திய சிறுகதைப் போட்டியில் **வெறியும் பலியும்** என்ற கதைக்காக முதற்பரிசு பெற்று இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியவர்.

**அம்மா, நிமிடப்பூக்கள், துறவி, பிரவாகம், சந்திரிகை, மேவுவீர் தீக்கொண்டு தோழரே** என இலங்கையின் **வீரகேசரி, ஈழநாடு, சுதந்திரன்**, மற்றும் **ஆனந்த விகடனில்** கதைகள் எழுதியவர். 20 கதைகள் மட்டில் எழுதியுள்ளார்.

சமுதாயத்தைவிட்டு விலகி சித்தன்போக்கு சிவன் போக்கென வாழ்ந்தவர். அதிருப்தி மன நிலையால் இவர் தனிப்பட்டு இருந்துள்ளார்.

இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு ஒன்றை மல்லிகைப் பந்தலில் 2001 ஓகஸ்ட்டில் **முனியப்பதாசன் கதைகள்** என்ற பெயரில் செங்கை ஆழியான் வெளியிட்டுள்ளார்.

**ஆத்மீகத்தேர்தல்**

**15/3/64 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**இவர் ஒரு ஆன்மீகவாதி.**

**இவரது புனைபெயரே இதற்குச் சான்று. இவரது கருத்தோடு உடன்படாவிட்டாலும் கதை சொல்லும் நேர்த்திக்காக இக்கதை என்னைக் கவர்ந்தது.**

**பொழுது இன்னும் புலரவில்லை...**

**என ஆரம்பித்து**

**பாம்பைப் பார்த்தார். அது விம்மிச் சுருண்டு கிடந்தது.**

**என்று முடியும் இக்கதையை முனியப்பதாசன் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தான் இறப்பதற்கு முன் தனது படைப்புகளனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தி அதைப் பார்த்து இடி இடி எனச்சிரித்த இவரைப் பற்றி அறிந்தவர்கள் குறைவு . அதில் நானும் ஒருவன்.

**27 April 2018**

## பிடித்த சிறுகதை 69

**"குதிரை திருடுவது தீமையானது எனக் கூறுவது எனது வேலை அல்ல.**

**அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். குதிரை திருடுபவர்கள் எப்படியானவர்கள் எனக் காட்டுவதே எனது பணியாகும்"**

**-அன்டன் செக்வாவ்**

தனது சிறுகதைத் தொகுதியின் முதல் முன்னீடாக இவ்வாக்கியங்களை இவர் சேர்த்திருந்தார். இவர் வரலாறு பெரிதாக எனக்குத் தெரியாது. உதிரியாக அறிந்தவற்றை இங்கே தருகிறேன்.

ஈழநாடு போட்டியில் 20 கதைகள் பாராட்டுப் பெற்றிருந்தன. முதன் முதல் நான் **நந்தினி சேவியர்** என அறியப்பட்ட **வேட்டை** கதையும் அந்த இருபதில் ஒன்று. போட்டிக் கதைகள் சிலவற்றை 71ல் **கங்கு மட்டை** என்ற பெயரில் ஈழநாடு நிறுவனம் நூலாக்கிய போது இவரது இந்தக் கதையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. என்னை புறக்கணிக்கத் தொடங்கியதின் ஆரம்ப நிகழ்வு இதுவே. அதன் பிறகு....பல...பல.

**மு.கனகராஜன்**

இவர் பற்றிய சரிதம் பெரிதாக எனக்குத் தெரியாது. இவர் ஒரு சோவியத் சார்பாளர் என அறிந்துள்ளேன். சோவியத் ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றினார் எனவும் கேள்விப்பட்டேன். முற்போக்காளரான இவர் பக்திப்பழமாக காட்சியளித்ததையும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். 98 களில் தினகரன் வாரமஞ்சரிப் பொறுப்பாளராகவும் இருந்துள்ளார். கடைசி காலங்களில் **புளட்** அமைப்பிலும் இருந்துள்ளார்.

**சுதந்திரன்,கலைச்செல்வி, விவேகி, அஞ்சலி, தேசபக்தன், மல்லிகை** ஆகியவற்றில் இவர் எழுத்துக்கள் பிரசுரமாகி இருக்கின்றன.

இவரது சிறுகதைத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு கதைகள் பற்றியும் **எஸ்.பொ.** முதல் **இளங்கீரன், சு.வே.** வரை தனித்தனியே சிலாகித்து எழுதியுள்ளமை விசேசித்தவிதமான ஒன்று.

நாடக, கவிதைத் துறையிலும் இவர் பங்களிப்பு நிறைய இருந்துள்ளது.

இவரது நூல்கள்:

முட்கள்(புதுக்கவிதைத் தொகுதி, 1975), கமுனுவின் காதலி (நாடகம்,1979), பகவானின் பாதங்களில் (சிறுகதைத் தொகுதி, 1980).

**சுண்டுவிரல் மெட்டி**

**இக்கதை ஈழநாடு 10 ம் ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் பாராட்டுச் சான்றிதழ் பெற்று 3/9/ 69 ல் அப்பத்திரிகையில் பிரசுரமானது.**

**வசந்தத்தின் எக்காளம் தடாகத்தின் பூரிப்பில் தெரிகிறது.....**

**என ஆரம்பித்து**

**அம்மாவின் பாதங்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன.**

**என்று முடியும் இக்கதையை கங்குமட்டை தொகுதியில் அல்லது இவரின் பகவானின் பாதங்களில் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

எழுத்துலக ஆரம்ப காலம், ஈழநாடு போட்டியில் பரிசு பெற்ற கதைகளை ஆர்வத்தோடு வாசித்தேன் அவற்றோடு எனது கதையை ஒப்பீடு செய்தேன். இப்படிப் பலமுறை வாசித்த கதைகளில் இதுவும் ஒன்று. இதனால ் மு.கனகராஜன் என்ற பெயரும் ஆழமாக என் மனதில் பதிந்து விட்டது.

**27 April 2018**

பிடித்த சிறுகதை 70

**2**015. ஒக்டோபர் மாதம்.

இவர் கடுமையான நோய்க்காளாகி கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரது **கொங்காணி** சிறுகதைத் தொகுதியைய **கொடகே நிறுவனம்** வெளியிட்டிருந்தது. ICUவில் அனுமதிக்கப்பட்டிருந்த இவருக்கு சாகித்திய இறுதிச்சுற்றுக்கு தனது சிறுகதைத் தொகுதி தெரிவு செய்யப்பட்டிருந்தமை தெரியும். நோயாளியான இவருக்கு அம்முறை சாகித்திய விருது கிடைத்திருக்கிறது என்ற செய்தியை தெரிவிக்க நண்பர்கள் விருப்புடையோராக இருந்தும் அது சாத்தியப்படவில்லை. அவரது தொகுதி தெரிவாகவில்லை என்ற செய்தி அறியாமலே 9/10/2015 ல் அவர் மௌத்தாகிப் போனார். ஆயினும் அவரது தொகுதிக்கு அவ்வாண்டுக்கான **கொடகே விருது** கிடைத்தது. அவரது மகள் அதனைப் பெற்றுக் கொண்டார்.

**ப.ஆப்டீன்**

11/11/1937 ல் நாவலப்பிட்டி தோட்டமொன்றில்

பிறந்தவர். முழுப்பெயர், பஹார்டீன் ஆப்டீன். கம்பளை சாகிராவிலும் நாவலப்பிட்டி சென்.மேரிஸிலும் ஆங்கில மொழியில் கல்விகற்றவர். இவரது தாய் மொழி மலாய்.

ஆங்கில ஆசிரியராக ஹொரப்பொத்தானையிலும், மல்வானை யதாமா கல்லூரியிலும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.பேராசிரியர் நந்தியின் தொடர்பால் எழுதத் தொடங்கியவர். **நந்தியின் மலைக்கொழுந்து** நாவலில் இவரும், கே.பொன்னுத்துரையும் வருகிறார்கள். முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினராக இருந்தவர். ஜீவா வோடும் மல்லிகையோடும் நெருக்கமாக இருந்தவர்.

1962 ல் **உரிமையா? உனக்கா?** எனும் **தமிழின்பம்** கதையோடு இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியவர்.

சாந்தமும் சகிப்பும் (1968. YMMA சிறந்த சிறுகதைப் பரிசு.) அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் (பண்பாட்டலுவல்கள் அமைச்சு.1975. சிறந்த சிறுகதைப்பரிசு) .நீந்தத் துடிக்கும் மீன்கள் (முஸ்லீம் சமய விவகார அமைச்சு.1980சிறந்த சிறுகதைப் பரிசு)பெற்றவர்.

**இவரது நூல்கள்:**

இரவின் ராகங்கள்(சிறுகதைகள்,இரு பதிப்பு,1987, மல்லிகைப் பந்தல், 1990, NCBH, இலங்கை இலக்கியப் பேரவை விருது),கருக்கொண்ட மேகங்கள் (நாவல் 1999, இன ஐக்கியத்தைப் பேசுவது, ஹொரவப்பொத்தான பிரதேச பின்னணி, இலங்கை இலக்கியப் பேரவை விருது), நாம் பயணித்த புகைவண்டி (சிறுகதைகள்-2003, மல்லிகைப் பந்தல்), கொங்காணி(சிறுகதைகள், 2014,கொடகே), பேராசிரியர் நந்தியும் மலையகமும் (சேமமடு,2008, கே.பொன்னுத்துரையுடன் இணைந்து தொகுத்தது).

மல்லிகையின் அட்டைப் படமாக இவரது படம் செப்.2005 ல் பிரசுரமானது. அப்படக் கட்டுரையை நந்தி அவர்கள் எழுதியிருந்தார். அவரது இறுதியான எழுத்து அதுவாகும்.

சிறுகதை,நாவல், குறுநாவல் துறைகளில் கவனம் செலுத்திய இவரது சிறுகதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **இந்த நூற்றாண்டின் ஈழத்துச்சிறுகதைகள் வெள்ளிப்பாதசரம்** தொகுப்பிலும் இவரது கதை இடம்பெற்றுள்ளது. மற்றைய மலையக எழுத்தாளர்களிடம் இல்லாத இவரது சிறப்பு மலையக சொற்களை தனது படைப்புகளில் பயன் படுத்துவதே என சில விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சில உதாரணங்கள்: **றோதை முனி, கம்பளி நியூஸ், கொங்காணி,** இவரது **மலை ஊற்றுகள்** குறுநாவல் 97 ல் தினகரனில் வெளிவந்துள்ளது.

**வட்டத்திற்கு வெளியே**

> **1990 ஏப். மல்லிகையில் பிரசுரமான சிறுகதை இது. திருகோணமலையை பகைப்புலமாக வைத்து எழுதப்பட்ட கதை. இவர் ஹொரவப்பொத்தானையில் ஆசிரியராக இருந்த காலத்தைய அனுபவத்தை இக்கதையாக தந்திருக்கிறார்.**
>
> **திருமலைப் பிரதேசம் இருட் போர்வைக்குள்...**
>
> **என ஆரம்பித்து**
>
> **கிழக்கு மாகாணம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது.**
>
> **என்று முடியும் துரைவியின் தெளிவத்தை ஜோசப் தொகுத்த உழைக்கப் பிறந்தவர்கள் தொகுதியில் இக்கதையை வாசியுங்கள் நண்பர்களே.**

இலங்கையில் வாழும் மலாய் இன மக்களைப் பற்றிய நாவலொன்றை எழுதுவதற்கான தயாரிப்பில் ஈடுபட்டிருந்த இவரது இறப்பினால் அந்த நாவல் எழுதப்படாது போய் விட்டது. அந்தப் பணி தொடர இனி யாருளர்?.

**30 April 2018**

பிடித்த சிறுகதை 71

**ந**ம்மவர் ஒருவர் 50களின் பிற்கூற்றில் **கல்கி** நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றிருக்கிறார் என்ற விசயம் முக்கியமான ஒன்று. இவர் தமிழரசுக் கட்சியின் அபிமானியாக இருந்து சுதந்திரனில் நிறைய எழுதியவர்.

உண்மையிலேயே ஒரு சராசரியான தமிழுணர்வுக் கதைகள் அவை. துப்பறியும் நாவல் கூட எழுதியிருக்கிறார். ஆயினும் என்ன அவரும் ஒரு முக்கியமான எழுத்தாளர்தான்.

**நவம்**

மட்டக்களப்பு ஆரையம்பதியில் 1928 ம் ஆண்டு பிறந்த இவரது இயற் பெயர். **சீனித்தம்பி ஆறுமுகம்.**

தமிழ் ஆசிரியர். நவம் மாஸ்ரர் என அறியப்பட்டவர். **நந்தாவதி** எனும் சிறுகதைக்காக கல்கி போட்டியில் முதற் பரிசு பெற்றவர். 56/57 காலகட்ட இன வன்முறையை ஒரு புத்த பிக்குவின் பார்வையில் கூறும் வகையில் இக்கதையை எழுதியிருந்தார். நாடக எழுத்தாளர், நடிகர், பேச்சாளர் பின்நாட்களில்

இவரோடு தமிழுணர்வாளராக இருந்த **கவிஞர் சுபத்திரன், பேரா.சி. மௌனகுரு** ஆகியோர் மார்க்சியவாதிகளாகினர்.

இவர் தமிழகத்திற்கு அதே தமிழ் உணர்வுடன் புலம் பெயர்ந்தார். அங்கு சினிமா உலகத்தினரின் தொடர்பு இவரை இலக்கியத்திலிருந்து ஒதுங்கவைத்தது.

**வீரகேசரி, சுதந்திரன்,சிந்தாமணி, தினகரனில்** இவர் எழுதியிருக்கிறார். இவரது ஏனைய புனைபெயர்கள். **பைரவன், எமன், ஸ்டாம்ப்.**

**வெளிந்த நூல்கள்**

நந்தாவதி (சிறுகதைத் தொகுப்பு), அழகு சுடும் (நாவல்), நிழல் மனிதன் (நாவல், நீலவேணி எனும் பெயரில் எழுதப்பட்டது, மித்ர வெளியீடு).

**பலாத்காரம்**

**16/09/1962 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**அந்தக்காலத்திலேயே அரச பயங்கரவாதத்தை அம்பலப் படுத்திய கதை.**

**"கிரீச்....."**

**என ஆரம்பித்து**

**அதற்குள் கண்கள் நிலை குற்றி விடுகின்றன.**

**என்று முடியும் பலாத்காரம் எனும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

பிள்ளைகள் வெளிநாடுகளில் தம்மோடு வந்து வசியுங்கள் என்று கோரியபோதும், தனது சொந்தமண்ணுக்குத் திரும்பவேண்டும் என்ற விருப்போடு திரும்பிய இவர் 12/04/ 17 ல் ஆரையம்பதியில் காலமாகினார்.

நவத்தை நினைவுகூர்தல் எனும் தொனிப்பொருளில்

மட்டக்களப்பு நூலக கேட்போர் கூடத்தில் கா அமைப்பினர் 6/5/18 ல் ஒரு நிகழ்வை ஒழுங்குபடுத்தியுள்ளனர். அவர் சம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய நூலொன்றும் அன்று வெளியிடப்பட இருக்கிறது. அதே தினம் அவர் பிள்ளைகள் அவரை நினைவுகூரும் இவ்வாறான நிகழ்வை வெளிநாடொன்றில் நடத்த இருப்பதான தகவலும் கிடைத்துளது.

**2 May 2018**

பிடித்த சிறுகதை 72

**கு**ட்டிப் பிசாசுகளின் சாம்ராஜ்ஜியத்தில் இளவரசன் புதுமைப்பித்தன், சிற்றரசன் ஓ.ஹென்றி, சக்கரவர்த்தி மோப்பசான். என தன் சிறுகதைத் தொகுதிக்கான என்னுரையை ஆரம்பித்தவர்.

என் குட்டிப் பிசாசுகள் உங்கள் இடது காதில் வந்து சுவாரஸ்யமாக கதை சொல்ல வல்லன. என்று தன் கதைகளை குட்டிப் பிசாசுகள் என குறிப்பிட்டவர்.

**ஜோர்ஜ் சந்திரசேகரன்**

1940 ல் கொழும்பில் பிறந்த இவரது பெயரை ஒரு காலம் வானொலி நேயர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர், நாடகத் தயாரிப்பாளர்,நடிகர் என்று வானொலியில் பல்துறையாளனாக விளங்கியவர். அதற்கும் வெளியே நாவல்,சிறுகதை, ஓவியம், கவிதை, மேடை நாடகம் ( மொழிபெயர்ப்பு நாடகங்கள்) எனத் தடம் பதித்தவர்.

60 களில் **ரெயின்போ** அச்சகத்தில்

(ஆட்டுப்பட்டித்தெரு) ஒப்பு நோக்காளராக இருந்துள்ளார். 1962 ம் ஆண்டு கல்முனை எழுத்தாளர் சங்கம் நடத்திய இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் **குண்டுமாமா** என்னும் சிறுகதைக்காக 2ம்பரிசு பெற்றவர்.

தினகரன், வீரகேசரி, செய்தி ஆகியவற்றிலும் இவரது கதைகள் பிரசுரமாகி உள்ளன. சுமார் 30 கதைகள் எழுதியிருந்த போதும் கிடைத்தவை 12 கதைகளே. **பொம்மலாட்டம்** என்றொரு நாவலும் எழுதியிருக்கிறார்.

அந்தக்காலத்தில் இவரது சிறுகதைகள் பரிசோதனை முயற்சிகளாக இருந்திருக்கின்றன. தலைப்புகள் கூட சிறிதும் பெரிதுமானவை. **மேரி, நகரம்** என்பதோடு **குரங்குகள் மனிதனைக் கண்டதும் பற்களைக் காட்டி சிரிப்பது போல் பாசாங்கு செய்வது ஏன்?** என்பது இவரது சில கதைகளின் தலைப்பு.

1968 ல் வானொலியில் இணைந்து தொலைக்காட்சியில் தொடர்ந்து 1996 ல் ஓய்வு பெற்றார்.

**இவரது நூல்கள் :**

ஜோர்ஜ் சந்திரசேகரனின் கதைகள் (அமோரா வெளியீட்டகம் 1994. சாகித்தியப் பரிசு),அபத்த நாடகம் (மொழிபெயர்ப்பு 1999. நத்தையும் ஆமையும், சொர்க்கமும் நரகமும் இரு நாடகங்கள்), ஒரு சருகுக்குள்ளே கசியும் ஈரங்கள் (அனுபவ கட்டுரைகள்), வானொலியும் நானும் (கட்டுரை).

பத்துச்சதம்

**1960 ல் திரைக்கலை யில் பிரசுரமான கதை இது. இவரது கதைகள் பெரும்பாலும் கொழும்பைப் பின்னணியாகக் கொண்டவை.**

**மழை பெய்து ஓய்ந்தது**

**எனத் தொடங்கி**

**பத்துச் சதம்?**

**காணவேயில்லை**

**என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

6/6/2008 ல் கொழும்பில் காலமான இவர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் வாசகர். 60களில் எழுத்துத் துறையில் பிரவேசித்த போதும் அக்கால கொள்கை வாதப் பிரதாபங்களில் தன்னை இணைத்துக் கொள்ளாமல் தனக்கென ஒரு தனித்துவத்தோடு பயணித்தவர்.

பேரா.சிவத்தம்பியை தன் ஆசானாகக் கருதியவர். சிறுகதைத் தொகுதிக்கு யோ.பெனடிக்ற் பாலனிடம் அணிந்துரை வாங்கியவர். சில்லையூரரின் நெருங்கிய நண்பர்

இவர் கோவூரராக நடித்த ஒரு நாடகம் பற்றியும் இவரது நடிப்புப் பற்றியும் எனது நண்பர்கள் சிலாகித்தமை இன்னும் நினைவிலுள்ளது.

ஒருவிதத்தில் மட்டக்களப்பு இவரது தொப்புள் கொடி உறவுடையது. அது இப்போதும் தொடர்கிறது.

**3 May 2018**

இவரைப் பற்றி கூடுதலான தகவல் தெரிந்தவர்கள் முகநூலில் இருக்கிறார்கள். அவர்கள் எனது இந்தப் பதிவுக்கு உரிய பின்னூட்டங்களை எழுதவேண்டும் என்பது எனது விருப்பு.

**அபுதாலிப் அப்துல் லத்தீப்**

**இன்ஷான் ஏ.ஏ.லத்தீப்** என இலக்கிய உலகில் பிரசித்தமாக அறியப்பட்ட இவர். மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஸாகிராவில் எஸ்.எஸ்.சி. வரை படித்து மாத்தளை ஸாகிராவில் சிலகாலம் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். இடது சாரிச் சிந்தனையாளரான இவர் பின்னர் இலங்கை சோவியத் தகவல் பிரிவில் பத்திரிகை அதிகாரியாகி மரணிக்கும் வரை கடமையாற்றினார்.

கட்சி அரசியல் ஏடான **இன்ஸான்** இதழின் ஆசிரியராகி அதன் மூலம் கலை,இலக்கியம், முஸ்லிம் வரலாறு, சமூகவியல் போன்ற துறைகளில் 66களில் தடம் பதித்தார்.

இன்று பிரபலமாக இருக்கும் பல எழுத்தாளர்கள்

**இன்ஸான்** பண்ணையில் வளர்ந்தோரே. மிக குறைவான சிறுகதைகளே இவர் எழுதியுள்ளார்.

**மையத்து**

**1961 ல் இவரால் எழுதப்பட்ட முக்கிய கதை இது.**

**அவளுக்கென்று ஒரு பெயரும் தனித்துவமும் இருக்கத்தான் செய்தது...**

**என ஆரம்பித்து,**

**ஆலிம்ஸா நீர் மல்கிய கண்களைக் கைக்குட்டையால் துடைத்த வண்ணம் சிங்களத்தியை நோக்கி நடந்தார்.**

**என்று முடியும் மையத்து கதையை உழைக்கப் பிறந்தவர்கள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

சமாதானம், சகவாழ்வுக்கான சோவியத் அரசின் விருது பெற்ற இவரைப் பற்றிய மேலதிக தகவல்களைத் தந்து இப்பதிவுக்கு உதவுமாறு அன்புடன் நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**5 May 2018**

## பிடித்த சிறுகதை 74

எழுதுவதில் மட்டுமல்ல வாழ்வதிலும் சாதனை நாட்டிய பெண் ஆளுமை இவர். வடமராட்சியின் சாதி ஆணவத்தை தன் திருமணத்தால் முறியடித்தவர்.

**சிதம்பரபத்தினி**

பத்தினியம்மா திலகநாயகம் போல் என அறியப்பட்ட இவர் 9/5/44. ல் வடமராட்சியின் கரவெட்டியில் பிறந்தவர். கலைப்பட்டதாரி, பாலபண்டிதர், புலவர். நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி எய்தி பல பாகங்களிலும் கடமையாற்றியவர். இறுதியாக யாழ்/ மேலதிக அரசாங்க அதிபாராகி ஓய்வுபெற்றவர்.

சிறந்த சங்கீத ஞானம் கைவரப்பெற்றவர். அதன் காரணமாக சிறந்த பாடகரான சங்கீத பூசணம் திலகநாயகம் போல் அவர்களை எதிர்ப்பின் மத்தியில் திருமணம் செய்தவர்.

பத்துக்கு மேற்பட்ட நூல்களை இவர் எழுதி உள்ளார்.

அவற்றில் சில

> நிஜத்தின் நிழல்(சிறுகதை, யாழ்/இலக்கியவட்டம் 2000),இசைத்தமிழில் தொன்மையும் திண்மையும் (கட்டுரை. கணவரோடு இணைந்து. 2010. விபுலானந்தர் தமிழியல் விருது), இசையின் இமயம் L.திலகநாயகம் போல்(2010),சிறுவர் குரல் அமுதம்(கவிதை,2012), தேன்வதை(கவிதை),நானாக நான்(சிறுகதைகள் 2012).

சிறுகதை,கவிதை, சிறுவர் இலக்கியம்,நாடகம், கட்டுரை என கவனம் செலுத்திய இவரது படைப்புகள் பல அழிவுண்டு போய்விட்டன.

ஈழத்தின் சகல பத்திரிகைகளிலும் இவர் எழுதி இருக்கிறார். குறிப்பாக தினகரன், சுதந்திரன், ஈழநாடு, கலைச்செல்வி.,நங்கை.

இவரது கதைகளில் நின்ற கருப்பொருள்,காதல், பெண்ணியம், குடும்பம்.

இவரது ஏனைய புனைபெயர்கள் சித்தி, பிரக்ஞா. குமுதினி

**அண்ணா**

> **1963ம் ஆண்டு இலங்கை எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை இது. 1963. ஓகஸ்ட் 25 ம் திகதி மட்டக்களப்பில் நடந்த முத்தமிழ் விழாவில் அதற்குரிய பரிசைப் பெற்றுக்கொண்டார். இவரோடு பரிசு பெற்றவர் செம்பியன் செல்வன். இருவரும் அக்கால பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பிரிவு எழுத்தாளர்கள் குழு மாணவர்கள்.**
>
> **நான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்றுகொண்டிருந்த காலம்....**
>
> **என ஆரம்பித்து.**
>
> **“அண்ணா அண்ணா அண்ணா”**

**ஏககாலத்தில் பல திசைகளிலிருந்தும் இந்த வார்த்தை என்னைச் சுற்றி ரீங்காரமிட்ட வண்ணம் இருக்கிறது.**

**என்று முடியும்**

**இக்கதையை போட்டிக்கதை (1963) தொகுப்பிலும், இவரது நிஜத்தின் நிழல் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

2/11/2013 ல் இவர் ஆனைக்கோட்டையில் காலமாகினார். பெயருக்காக இலக்கிய அங்கீகாரத்துக்காக அலையும் பலர் மத்தியில் இவரது நிதானம் என்னைக் கவர்ந்த ஒன்று.

**5 May 2018**

இப்பதிவு என் மனதிற்கு ஒரு விதத்தில் தெம்பூட்டுகிறது. நோய்,வயோதிபம் வாட்டிய போதிலும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரைப் பற்றிய பதிவு இது.

**தையிட்டி அ. இராசதுரை**

11/5/38ல் காங்கேசன்துறை தையிட்டியில் பிறந்த இவரது ஆரம்பக்கல்வி மலேசியாவில் தொடங்கியது. தகப்பனார் மலேசிய ரயில்வேயில் பணியாற்றியவர். ஊர் திரும்பியதும் நடேஸ்வராக் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார்.

அதனால்தான் போலும் இவரது கதைகளில் ரயில்களும் தண்டவாளங்களும் வருகின்றன.

இவரது ஒரு கதையின் தலைப்பு **கோச்சி வரும் கவனம்.** இவரது முதல் கதை **முப்பதாவது முட்டாள்.** இக்கதை தமிழன் பத்திரிகையில் பிரசுரமானது.

சுதந்திரன், ஈழநாடு, வீரகேசரி, சஞ்சீவி என பல பத்திரிகைகளில் 50 க்கு மேற்பட்ட கதைகளை எழுதியுள்ளார். வசந்த காலம், ஒளிமயமான, மான்

பாய்ந்தவெளி, அடித்த கை, என்பன இவரது சிறப்பான கதைகள்.

இவரது 21 சிறுகதைகள் அடங்கிய **அகதி அரிசி** எனும் சிறுகதைத் தொகுதி யாழ் இலக்கியவட்ட வெளியீடாக 2005ல் வந்துள்ளது.

**கொந்தல்**

> **3/12/71 ல் ஈழநாடு வார இதழில்பிரசுரமானது இக்கதை. அந்த நிறுவனம் நடத்திய 10ம் ஆண்டு சிறுகதைப் போட்டியில் நாங்கள் 20 பேர் பாராட்டுச் சான்றிதழ் பெற்றிருந்தோம். அதில் ஒருவர் இவர். சரியாக நினைவில்லை அக்கதையாக இது இருக்கலாம்.**
>
> **தம்முடைய இறைப்பு முறைக்காக ...**
>
> **என ஆரம்பித்து**
>
> **இராசையா தமது நினைவில் மேகத்தில் முட்டும் ஒரு மனிதனாகிக் கொண்டிருந்தார்.**
>
> **என்று முடியும் கொந்தல் கதையை இவரது அகதி அரிசி தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஓர்மம், அஞ்சாமை கொண்ட இவர் இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியிலும் தன் சொந்த இடத்தை விட்டு நகராது வாழ்ந்தவர் (மனைவியோடு). துணிச்சல்காரர்.

இவரது நேர்காணல் ஒன்று சிலவாரங்களுக்கு முன்னர் **உதயன் சூரியகாந்தி**யில் பிரசுரமானதாக நண்பர்கள் கூறி அறிந்துள்ளேன். நான் அதனை வாசிக்கவில்லை. வாசித்திருப்பின் இப்பதிவின் தன்மை மாறியிருக்கும்.

ஒருவிதத்தில் **உதயன்** திருகோணமலைக்கு வராததும் நன்மையே.

**5 May 2018**

## பிடித்த சிறுகதை 76

இவர் ஒரு மா.ஓ வாதியாக இருந்தவர். புதிய ஜனநாயகப் புரட்சியை அவாவியவர். மா.ஓ. மறைந்தபோது அவருக்கு அஞ்சலிக் கூட்டங்களை வீ.ஆனந்தனுடன் இணைந்து பல இடங்களில் நடத்தியவர். பின்னர் ஒருகாலத்தில் தமிழ் தேசியவாதியானவர். அதன் பிறகு பின்நவீனத்துவ சிந்தனையை ஏற்றுக் கொண்டவர்.

**"எனது பின்நவீனத்துவ சிந்தனையானது மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என்று உணரப்பட்ட சூழலில், தமிழ் தேசியம் நீர்த்துப்போனது என நினைக்கின்ற சூழலில் உருவானது "** என பேட்டி கொடுத்தவர். இவரை **இருப்பியல்வாதி** எனவும் சிலர் அடையாளப் படுத்துகின்றனர்.

மார்க்ஸின் 200 வது பிறந்த நாளை கடந்த 6ம்திகதி உலகம் பூராவும் நினைவு கூர்ந்த மக்கள் மார்க்சியம் காலாவதியாகவில்லை என நிரூபித்துள்ளனர்.

இவரும் இறுதியில் இப்படி ஒரு கருத்தை

தெரிவித்திருக்கிறார்.

**"உலகம் மீண்டும் மார்க்ஸியத்தை விட்ட இடத்திலிருந்து தொடரவிருக்கிறது."**

**சண்முகம் சிவலிங்கம்**

சசி, என்று இலக்கிய அபிமானிகளாலும்,**ஸ்டீபன் மாஸ்ரர்** என்று சக ஆசிரியர்களாலும்,மாணவர்களாலும் அழைக்கப்பட்ட இவர்.

19/12/36 ல் பிறந்தவர். தனது 10 வயதில் கத்தோலிக்க மதத்தைத் தழுவியர்.

இவர் கவிஞராக அறியப்பட்டாலும் முதலில், சிறுகதைகளையே எழுதினார். **ஆட்டுக்குட்டி** எனும் கதையை 1948 லேயே தனது 14 வயதில் எழுதி இருக்கிறார். சுமார் 30கதைகள் மட்டில் இவர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

**இவரது நூல்கள்:**

> நீர் வளையங்கள்(கவிதை, 1988, தமிழியல்), சிதைந்து போன தேசமும் தூர்ந்து போன மனக்குகையும்(கவிதை,2010, காலச்சுவடு), காண்டவனம்(சிறுகதைகள்,2014, Ipmcg Inc).

"60 களின் பின் அரைவாசியில் தான் சசி கவிதை எழுதத் தொடங்கினார்." என நுஃமான் ஒரு இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் கேரளப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி. ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சிறுகதை, கவிதையோடு விமர்சனம், நாடகம், நாடக எழுத்து, நெறியாள்கை, நடிப்புத் துறைகளில் ஈடுபட்டவர். யுத்தம் இவரையும் பாதித்தது. இந்திய ராணுவத்துடனான மோதலில் இவரது மகனை இவர் இழந்தார். இவரது பலகதைகள் யுத்த சூழலைப் பிரதிபலிப்பன.

இவர் பற்றிய நினைவு வெளி ஓராண்டு நினைவு மலர் 2013ல் வெளியிடப் பட்டுள்ளது. இவரது நினவுதினம். 20/4.

**திசை மாற்றம்**

**1975ல் எழுதப்பட்டது இக்கதை. 1975ல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டைக் கேள்விக்கு உட்படுத்திய இவரது கவிதைக்கு பின்னான சம்பவங்களை விபரிக்கும் கதை இது.**

**மஜூம்தார் முக்கியமான ஒரு அலுவலுக்காக**

**பேராசிரியர் வைகுந்தனிடம் வந்திருந்தான்.**

**என ஆரம்பித்து**

**மஜூம்தார் விறைத்துப் போய் நின்றான்.**

**என்று முடியும் இக்கதையை காண்டாவனம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தனது ஓய்வூதிய அலுவலுக்காக 96 ம் ஆண்டில் ஒருநாள் மாகாண கல்வி அமைச்சுக்கு வந்திருந்த இவர் நண்பர் திருவேணிசங்கமத்துடன் என்னைச் சந்திக்க எனது வீட்டுக்கு வந்திருந்தார். ஆனால் அந்த நேரம் அவரைச் சந்திக்க நான் வீட்டில் இருக்கவில்லை.

பின்னர் ஆளுனர் விருது பெறுவதற்காக 2005 ல் வவுனியாவில் நடந்த இலக்கிய விழாவுக்கு பஸீல்காரியப்பருடன் வந்திருந்த போதும் விழா அலுவல் காரணமாக அவரோடு பேசக் கிடைக்கவில்லை.

2012 ல் **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** தொகுப்பை பாண்டிருப்பில் இவரிடம் கொடுக்கச் சென்ற போதும் சந்திக்கக் கிடைக்கவில்லை. பின்னர் உமா வரதராஜன் மூலம் அவருக்கு அதனைக் கிடைக்கச் செய்தேன்.

கவிதை பற்றிப் பேசுவோர் எப்படி சண்முகம் சிவலிங்கத்தை விட்டுவிட்டுப் பேச முடியாதோ, அதே போல் சிறுகதை பற்றிப் பேசுவோரும் சண்முகம் சிவலிங்கத்தை விட்டுப் பேச முடியாது. இது தவிர்க்க முடியாத உண்மை.

**6 May 2018**

## பிடித்த சிறுகதை 77

எனது முதற் சிறுகதைத் தொகுதிக்கான சுதந்திர இலக்கிய விருதை 1995 ல் பேரா.கார்லோ பொன்சேகா அவர்கள் வழங்கினார். எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதிக்கான கொடகே விருதை 2012 ல் இவரே எனக்கு வழங்கினார். அவ்வாண்டின் வாழ்நாள் சாதனையாளர் கொடகே விருது இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**கே.எஸ்.சிவகுமாரன்**

1/10/ 1936 ல் மட்டக்களப்பு புளியந்தீவில் பிறந்த இவர் நெடுங்காலம் கொழும்பை வாழ்விடமாகக் கொண்டவர்.இவரது தொப்புள் கொடி உறவு திருகோணமலை. 1960 களில் தன்னை ஒரு சிறுகதையாளராக அடையாளப்படுத்தியவர். இதழியலாளர், புதுக்கவிதைக்காரர்,

விமர்சகர், பத்தி எழுத்தாளர்,(தமிழ், ஆங்கிலம்) ஒலிபரப்பாளர் என பல்துறையாளர். சினிமா சம்பந்தமான கட்டுரைகள், ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள். ஈழத்தில் நாவல்களில் சில. ஆய்வு நூல்கள் என 20 நூல்களுக்குமேல் எழுதியுள்ளார். பல விருதுகளும் பெற்றுள்ளார்.

2004 ல் வ.கி.மா. யாழ்ப்பாண இலக்கிய விழாவில் இவருக்கு ஆளுனர் விருது வழங்கப்பட்டது. இவர் பற்றிய குறிப்பை நானே எழுதியிருந்தேன்.

நிகழ்வுக்கு வந்த இவரை அனுசரிக்கும் பணி என்னிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. மத்திய கிழக்கிலும், மாலை தீவிலும் இவர் ஆங்கில ஆசிரியரக இருந்துள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழக இளமாணிப்பட்டம் பெற்றவர்.

இன்றும் சலிக்காது தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருக்கும் இவரது பவள விழாவை முன்னிட்டு **ஜீவநதி** சிற்றிதழ் ஒரு மலரை வெளியிட்டுள்ளது.

**இவரது சிறுகதைத் தொகுப்புகள்**

சிவகுமாரன் கதைகள்(1983, ஜீவா பதிப்பகம்) இருமை (1998, தே.க.இ.பேரவை).

இவரது முதல் கதை **இனம் இனத்துடன்** 1957 ல் தினகரனில் பிரசுரமானது.

**வீரகேசரி, சுதந்திரன், கதம்பம்** ஆகியவற்றிலும் இவரது கதைகள் பிரசுரமாகி இருக்கின்றன.

**அவர்கள் உலகம்**

**1960 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது. கண்டிச் சூழலை மையமாக வைத்து இக்கதை எழுதப்பட்டுள்ளது.**

**மணி ஏழு**

**என ஆரம்பித்து**

**சுந்தர மூர்த்திக்குத் தெரியும் அவர்கள் உலகம், ஒரு தனியுலகம் என்று**

**இப்படி முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பிலும், இவரது இரு சிறுகதைத் தொகுப்புகளிலும் வாசிக்கலாம் நண்பர்களே.**

இவரது கலைக்கோலம் வானொலி விமர்சனத்தின் மூலமே **ஸ்பாட்டகஸ்** திரைப்படத்தையும், ஸ்பாட்டகஸையும் பதின்ம வயதில் (12) நான் அறிந்து கொண்டேன்.

அடிக்கடி தொடர்பில் இருந்த இவருடனான முகநூல் தொடர்பு சிலகாலம் தடைப்பட்டுள்ளது. தொடர வேண்டும். பார்ப்போம்.

**7 May 2018**

**த**னது வடமராட்சி சம்பந்தமான **தண்ணீர்** நாவலை எழுதி முடிக்கக் கூடியவர்கள் என வடமராட்சியின் இரு எழுத்தாளர்களை **டானியல்** அடையாளம் காட்டினார். அதில் ஒருவர் கே.தங்கவடிவேல் மற்றவர் இவர்.

இவரைத் தன் கொள்கைக்கு வாலாயப் படாதவர் என்றும் டானியல் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் என்ன நோய்ப்பிடியிலிருந்து மீண்டெழுந்த **டானியல் தண்ணீர்** நாவலை எழுதி முடித்திருந்தார்.

**தெணியான்**

6/1/1942 ல் பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் பிறந்த இவர். பயிற்றப்பட்ட ஆசிரியர். மலையகத்திலும், யாழ்ப்பாணத்திலும் பணியாற்றி அதிபராகி ஓய்வு பெற்றவர். இவரது இயற் பெயர் கந்தையா நடேசன்.

1964 ல் விவேகியில் **பிணைப்பு** எனும் கதையை எழுதியதன் மூலம் இலக்கிய பிரவேசம் செய்தவர்.

சிறந்த பேச்சாளன். நாவல்கள், கட்டுரைகள், சிறுகதைகள் என நிறைய எழுதியவர்.

இதுவரை நூற்று இருபது கதைகளுக்கு மேல் எழுதியிருக்கிறார்.

**இவரது சிறுகதை நூல்கள்**

சொத்து(1964, என்சிபிஎச்), மாத்து வேட்டி(1990, மல்லிகைப் பந்தல்), இன்னொரு புதிய கோணம (2007,பூமகள் வெளியீடு), ஒடுக்கப்பட்டவர்கள்(2010, பூபாலசிங்கம்), தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள்(2012, ஜீவநதி).விடிவை நோக்கி முதற் கொண்டு காலி பெயவே நிறுவன 5 இலட்சம் பரிசு பெற்ற ஏதனம் எனும் நாவல் வரை பத்துக்கு மேற்பட்ட நாவல்களையும், குறுநாவல்களையும் எழுதியுள்ளார்.

யாழ் இலக்கிய நண்பர் கழக சிறு கதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றதோடு. தனது நூல்களுக்காக சாகித்திய, மாகாண, இலக்கியப் பேரவை, கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை,கொடகே விருதுகளைப் பெற்றவர்.

பேரா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, டானியல் ஆகியோரின் அன்புக்குப் பாத்திரமானவர்.

வகிமா ஆளுனர் விருது. சாகித்திய ரத்னா விருது பெற்றவர்.

**உவர்ப்பு**

**1986 மார்ச் மாத மல்லிகையில் பிரசுரமான இக்கதை கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கம் வெளியிட்ட, வடமராட்சியின் படைப்புகள் அடங்கிய உயிர்ப்புகள் தொகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது.**

**“இவளுக்கென்னாச்சு…”**

**என ஆரம்பித்து**

**இந்த அகால வேளையிலும் இருளைக் கிழித்துக் கொண்டு ஒரு காகத்தின் ஒலி கேட்கிறது.**

**என்று முடியும்**

**இக்கதையை உயிர்ப்புகள் தொகுப்பில் அல்லது மாத்து வேட்டி தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே**

நான் ஒரு வாசகன். எனது வாசிப்பு அனுபவத்தில் பலரோடு நான் முரண்படுகிறேன். சிலர் போல் முகத்துக்கு நேரே ஒன்றும் தனிப்பட பிறிதொன்றும் பேசுகிற பழக்கம் என்னிடமில்லை.

ஒடுக்கப்பட்டவர்களை இவர் பிரதிபலிப்பதாக சிலர் சிலாகிக்கிறார்கள். ஆனால் இவரது எழுத்துகளின் குறைபாடுகளை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது தெரிந்தும் நம்மவர் என போற்றுபவர்களை என்னவென்பது.?

வடமராட்சியைச் சேர்ந்த எனது கதை மேற்படி **உயிர்ப்புகள்** தொகுதியில் இடம் பெறவில்லை. - அந்த நாட்களில் வடமராட்சியிலேயே நான் இருந்தேன்.- தொகுப்பாளர்களில் இவரும் ஒருவர். ஏன் இவர்கள் என்னைப் புறக்கணித்தார்கள்?

**"இவர்களது கதைகளைவிட உனது கதைகள் தரமானவை. அதனாலேயே உன்னைத் தவிர்த்துக் கொண்டார்கள்"** என சிலர் அந்த 86 களிலேயே என்னிடம் கூறினார்கள்.

அதுவல்லக் காரணம் என்பது எனக்குத் தெரியும். இவர்களைவிட ஒருவிதத்தில் நான் கல்வி,சமூக ரீதியில் தாழ்ந்தவன் தான்.

வேறு எதைக்கூற...? போங்கடா நீங்களும் உங்கள் இலக்கியமும்.

• **7 May 2018**

**எ**னது சிறுகதைத் தொகுதி இதுவரை வெளிவராதது பெரியதொரு மனத்தாக்கல்தான். எப்படியும் எனது **"இறுதிப் பயணத்திற்கு முன் வெளியிட வேண்டும் என்ற மன நெருடல் உண்டு"** என்று ஆதங்கப்பட்ட இவரது விருப்பு நிறைவேறாமலே இவரின் இறுதிப் பயணம் நிகழ்ந்து விட்டது.

**துரை.சுப்பிரமணியம்**

1940 ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் யாழ்/ பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர். ஒரு எழுதுவினைஞர். 1961 ல்எழுதத் தொடங்கினார். இவரது பல கதைகள் தினகரனிலேயே வெளிவந்தன.

**தேசாபிமானி,வீரகேசரி,சுதந்திரன்,ஈழநாடு, தேனருவி, ஈழமுரசு,** மல்லிகை ஆகியவற்றிலும் பலகதைகள் எழுதினார். சிறுகதைக்கான பரிசுகளும் பெற்றுள்ளார்.

இவரது சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளிவராமையே இளந்தலைமுறை இவர் பற்றி அறியாதிருப்பதற்குக் காரணம்.

மூத்த எழுத்தாளரான இவரது முக்கிய கதைகள் ஒரு துறவியின் போக்கு, மூலதனம், வள்ளம், இரண்டு ஏக்கர் நிலம் என்பன.

மூலதனம்

26/8/1962 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.

எண்ணெயின் உறவை

என ஆரம்பித்து

அன்னம்மாவின் மூலதனம் அழிஞ்சு கிடக்கிறது.

என்று முடியும் மூலதனம் எனும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

நாச்சிக்குடா கடலில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்திலிருந்து அகால மரணமடைந்த இவரது தங்கையின் கணவர் நண்பர் சசி.கிருஸ்ணமூர்த்தி உயிரோடு இருந்திருந்தால், துரை. சுப்பிரமணியம் கதைகள் எனும் பாரிய தொகுப்பு ஒன்று இதுவரையில் நிச்சயம் வெளிவந்திருக்கும்.

என்ன செய்ய...?

**8 May 2018**

பிடித்த சிறுகதை 80

இலங்கை சுவடிகள் திணைக்களத்தில் இவரைப் போன்றவர்கள் இருந்திருந்தால் என்னைப்போல் எழுத்துக்களை தொலைத்தவர்களுக்குப பலருக்கு பேருதவியாக இருந்திருக்கும் என்று அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

**க.நவசோதி**

இவரது புனைபெயர். ஆவிகன் . கணபதிப்பிள்ளை நவசோதியான இவர், 2/4/41 ல் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரி. 60 களில் அங்கு உருவாகிய எழுத்தாளர் குழுவில் முக்கியமான ஒருவர். 1962ல் வெளிவந்த பல்கலை வெளியீடான சிறுகதைகளின் தொகுப்பு **கதைப்பூங்கா** வின் இணைத் தொகுப்பாளர்களில் ஒருவர். மற்றவர் செங்கை ஆழியான்.

விரிவுரையாளர், மொழிபெயர்ப்பாளர், சுவடிகள் திணைக்கள நெறியாளர், நூலகர், ஒலிபரப்பாளர் என பல பதவிகளை வகித்தவர்.

சிறுகதை,கவிதை, நாடகம், ஆய்வு, சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு

உழைத்தவர்.

ஈழத்தில் தமிழில் முதல் வெளிவந்த சிறுவர் நாவலெனக் கூறப்படும் ஓடிப்போனவன் 1968ல் இவரால் எழுதி வெளியிடப்பட்டது. இந்நூல் 2003 ல் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

**வெண்ணிலா**, **தமிழோசை** இவர் வெளியிட்ட சஞ்சிகைகள். **சிந்து** எனும் சஞ்சிகையை லண்டனில் இருந்த போது வெளியிட்டார்.

**அன்பின் அணைப்பில்**

**24/6/1962 ல் சுதந்திரனில் பிரசுரமான மலையக சூழலைச் சித்தரிக்கும் சிறுகதை இது.**

**எங்கும் வெள்ளை வெளேரென பனித்திரை**

**எனத் தொடங்கி**

**அன்பின் அணைப்பில் துன்பம் ஏது**

**என முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

4/1/1990ல் லண்டனில் காலமாகிய இவரது பெயர், **ஓடிப்போனவன்** சிறுவர் நாவல் மூலமும் **கதைப்பூங்கா** தொகுதியின் மூலமும் இலக்கிய உலகில் பேசப்படும் ஒன்றாகவே தொடர்ந்து இருக்கும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். அதோடு தமது படைப்புகளை என்போல் தொலைத்தவர்களுடைய மனதிலும் தான்.

**8 May 2018**

இவருக்கும் எனக்கும் இடையிலான நட்புக்கு வயது கிட்டத்தட்ட 46 வருடங்கள். இந்த நட்பு சிலருக்கு ஆச்சரியத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தமை உண்மை. என் துயரங்களில் கைகொடுக்கும் ஒருவராக இவர் இன்று வரை இருக்கிறார். எமது நட்பு அரசியல் இலக்கிய நிலைப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு போலித்தனமற்றது. உண்மைக்கும், நேர்மைக்கும் மிக நெருக்கமானது.

**அ.யேசுராசா**

30/12/46ல் குருநகரில் பிறந்த இவர் தனது கல்வியை சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் தொடங்கி உயர்கல்வியை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் கற்று அஞ்சலதிபர் தந்தியாளர் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு, பேராதனை, தபாலகங்களில் கடமையாற்றி, இறுதியில் சுண்டிக்குழியில் கடமையாற்றி ஓய்வு பெற்றார். கவிஞர், சிறுகதையாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், பதிப்பாளர் என இவரைப் பல்துறையாளராக அடையாளம்

காணலாம்.

கொழும்பு இலக்கிய நண்பர்கள் கழக அமைப்பின் முக்கிய உறுப்பினராக இருந்தவர். வாசிப்பு, எழுத்தோடு நில்லாது நவீன திரைப்பட ஆர்வலராகவும் தன்னை தகவமைத்துக்கொண்டவர்.

தான் எழுதிய 11 கதைகளில் 10 கதைகளைத் தொகுத்து **தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்** என்ற பெயரில் 1974ல் நூலாக வெளியிட்டார். அவ்வாண்டுக்கான சாகித்திய மண்டல விருதை அந்நூல் பெற்றுக் கொண்டது. அத்தொகுப்பு 1989ல் பூரணி வெளியீடாக மீள் பதிப்புக் கண்டுள்ளது.

1975 ல் இருந்து 90 வரை **அலை** எனும் காத்திரமான. இதழை வெளியிட்டு பங்களிப்புச் செய்தார் (35 இதழ்கள்). **கவிதை** எனும் இதழை 94/95ல் கொணர்ந்தார். **திசை** இதழிலும் கடமையாற்றினார். **தெரிதல்** இதழை 2003ல் கொண்டு வந்தார். 1979-81ல் யாழ் திரைப்பட வட்டத்தை உருவாக்கியதில் இவரது பங்கும் உள்ளது.

**இவரது நூல்கள்:**

அறியப்படாதவர்கள் நினைவாக (கவிதைகள்,1984, கிரியா),காலம் எழுதிய வரிகள் (51கவிஞர்கள் எழுதிய கவிதைகள் 1994), தூவானம் (பத்திகள்,2001),பனிமழை (மொழிபெயர்ப்புக் கவிதைகள்,2002. வாகிமா சிறந்த நூல் பரிசு), பதிவுகள்(2003) குறிப்பேட்டிலிருந்து(2007), திரையும் அரங்கும் கலை வெளியில் ஒரு பயணம்(2013), நினைவுக் குறிப்புகள்(2016), இவர் சிலரோடு இணைந்து தொகுத்த நூல்கள்,பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்(இருபதிப்பு), மரணத்துள வாழ்வோம் ,தேடலும் படைப்புலகமும் (ஓவியர் மார்க் பற்றியது).

அலை வெளியீடாகவும் சில நூல்களை கொணர்ந்துள்ளார்.

இப்போதும் யாழ் பொது நூலக வாசகர் வட்டம் சார்பில் சிறந்த படங்களை இலவசமாக திரையிடுவது நூல்களை அறிமுகம் செய்வது போன்ற ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து வருகிறார்

2015 ல் யாழ் சர்வதேச திரைப்பட விழாவில் திரைத்துறை சம்பந்தமான இவரது பணியைப் பாராட்டி ”வாழ்நாள் சாதனையாளர்” விருது வழங்கப்பட்டுள்ளது.

**வெக்கங் கெட்டவர்கள்**

> **கார்த்திகை 73ல் எழுதப்பட்ட கதை இது.**
>
> **யேம்ஸ் கடைக்குக் கிட்ட வருகையில் பூவரச மரத்தடியில் நண்பர்கள் நிற்பதை யேசுதாசன் கண்டான்.**
>
> **என ஆரம்பித்து**
>
> **சோழகத்தின் வீச்சில், பாலக்கட்டின் மேலால் எழும்பியடித்த அலைத் தண்ணீர் ரோட்டை நனைத்து வழிந்தது.**
>
> **என்று முடியும் இக்கதையை யேசுராசாவின் சிறுகதைத் தொகுதியில் முதற்கதையாக வாசியுங்கள் நண்பர்களே.**

தன் கொள்கையில் பிடிவாதமான யேசு (எங்களுக்கு **சூரி**) தன் கருத்துகளை ஆதாரபூர்வமாக முன் வைப்பவர். நான் ஒரு மா.ஓ வாதி என அவர் அறிவார். என்னை எனது கொள்கையை அறிந்தே நட்பைப் பேணுகிறார். எனக்கும் அவரது கொள்கை என்ன என்பது தெரியும். என்னைத் தன் அலையில் எழுத வைத்தவர், **புதிசு** வில் என் கதையை வெளிவரச் செய்தவர்.

ஏ.ஜே.யின் நண்பர். பத்மநாபஐயரின் நண்பர். கனடாவிலிருந்து வரும் **ழகரம்** சஞ்சிகை இவரது படத்தை அட்டையில் பதித்ததுடன், இவரது நேர்காணலையும் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

எல்லாவற்றையும் மீறி ஜனாதிபதி அறிவித்த **கலாகீர்த்தி** விருதை இவர் மறுதலித்த அந்த நேர்மை இருக்கிறதே அது என்றும் பேசப்படும்.

**8 May 2018**

பிடித்த சிறுகதை 82

**சு**ருக்கமாகச் சொல்லப் போனால் இவர் எங்கள் அணியைச் சேர்ந்தவர் என்பதே இவருடனான எனது அறிமுகம். சுபத்திரனின் தோழர். ஆரம்பகால தமிழரசுக்கட்சி அனுதாபி. இரத்தத்தால் பொட்டுவைத்து பின்னர் இடது சாரியானவர். இவரை நான் முதன் முதல் கண்டேன் யாழ் நகரமண்டபத்தில். **வடக்கில் இருந்தொரு மனிதன் வந்தான்** எனும் கவிதையுடன். நெருக்கமான உறவு. பழகாது எட்டவே இருந்தேன். இவர் ஒரு காய்த்த விருட்சம்.

**சி.மௌனகுரு**

இன்றும் இளமைத் துடிப்போடு இயங்கிக் கொண்டிருக்கும் பேராசிரியரைப் பற்றி நான் எழுதுவது **ஊசி விற்கும் செயலென** கருதுகிறேன். கவிஞர், சிறுகதை, குறுநாவல் எழுத்தாளர்,

நடிகர், நெறியாளர், நாடக எழுத்தாளர், ஆய்வு நூலாளர், ஆசிரியர், விரிவுரையாளர், நுண்கலைத்துறைத் தலைவர், கலாநிதி, பேராசிரியர்.

பேரா. வித்தியானந்தன், பேரா. கைலாசபதி, பேரா. சிவத்தம்பி ஆகியோரின் பண்ணையில் வளர்ந்தவர். **இராவணேசன்,சங்காரம்** என்பன இவர் பெயர் சொல்லும் அளிக்கைகள்.

இவர் பற்றியும், இவரது நூல்கள் பற்றியும் எழுதுவதற்கு இப் பத்தி போதாது. ஆயினும் இரண்டு தகவலைத் தருகிறேன்.

**மௌனம்**(இவரது மணிவிழா மலர்) மகுடம் சஞ்சிகை வெளியிட்ட மௌனகுரு சிறப்பிதழ்கள் இரண்டு.

இனி இப்பத்தியோடு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு வருகிறேன்.

9/6/43 ல் மட்டக்களப்பில் பிறந்த இவர் கவிதைத் துறையின் மூலம் அறியப்பட்டவர். புகழ் பெற்ற கவியரங்கக் கவிஞர்.( ஆயிரம் கவியரங்கு கண்டவரென சிலர் கூறுகிறார்கள்)

பேராதனைப் பல்கலை வெளியீடாக வந்த செம்பியன் செல்வன் தொகுத்து 63 ல் வெளிவந்த **விண்ணும் மண்ணும்** தொகுப்பில் இவரது **ஓட்டம்** எனும் கதை பிரசுரமாகி இருந்தது.

சிறுகதைத் துறையில் அவர் அக்கறை குறைவாகவே இருந்தது. நாடகமே அவர் பிரதான இயங்குதளம்.நாடக ஆய்வு கூட அமைப்பாளர். இன்று பல இளந்தலைமுறை உருவாக்கத்தின் முக்கிய கர்த்தா. **காண்டவ தகனம்** அளிக்கை அவரது பரிசோதனை முயற்சியில் ஒன்று.

**உலகங்கள் மூன்று**

**1984ல் விருட்சத்தில் பிரசுரமான கதை இது.**

**பின்னேரம் இரண்டு மணி..**

**என ஆரம்பித்து.**

**நான் வாசிக்க ஆரம்பிக்கிறேன். மனைவி எழுதிக்கொண்டிருக்கிறாள்.**

**என்று முடியும் உலகங்கள் மூன்று கதையை மௌனம் மணிவிழா மலரில் வாசியுங்கள் நண்பர்களே.**

அவரது வாய்மொழி மூலம் நான் அறிந்து கொண்ட ஒரு விடயம்.

தன்னை நோக்கி எறியப்படும் கற்களை தாங்கும் கவச குண்டலங்கள் மனைவி சித்திரலேகாவும், மகன் சித்தார்த்தனுமே.

அத்தோடு அஸ்த்திரங்களைத் தாங்கிய அவரது மாணவர்களும், விருப்புக்குரிய தோழர்களும் உள்ளார்கள் என்பது எனது அபிப்பிராயம்.

**9 May 2018**

## பிடித்த சிறுகதை 83

மரபுத்தளை யெனும் விலங்குகளை உடைத்து எழும் தார்மீகக் கோபம் கொண்டவை இவரது படைப்புகள்.

**மு.சிவலிங்கம்**

26/8/46 ல் தலைவாக்கலையில் பிறந்த இவர் இப்போது வத்தளையில் வாழ்கிறார்.

அரச பாடசாலை ஆசிரியராக, வீரகேசரி பத்திரிகையாளராக, மொழிபெயரப்பாளராக அரசியல்வாதியாக இருந்தவர். சிறுகதை, நாவல்,மொழிபெயர்ப்பு இவரது நாட்டமுள்ள துறைகள்.

இவர் எனக்கு மிகப் பரிச்சயமானது கோமல் சுவாமிநாதனின் நடத்திய **சுபமங்களா** இதழின் மூலமாகவே. முன்னரே பத்திரிகைகளில் இவரது கதைகள் என் பார்வையில் பட்டிருந்தாலும் **சுபமங்களா** இலங்கைச் சிறப்பிதழில் வந்த இவரது கதையான **என்ன பெத்த ஆத்தா** கதை இவரை எனக்கு நெருக்கமானவராக்கியது.

அவ்விதழில் எனது **தொலைந்து போனவர்கள்** கதையும் மீள்பிரசுரமாகி இருந்தது.

அவரோடு நான் தொடர்பற்றிருந்தேன்.

சில வருடங்களுக்கு முன் திருகோணமலையில் ஆசிரியராக கடமையாற்றிய அவரது மகன் முறையான ஒருவர் மூலமே (மு.சிவானந்தன்)தொலைபேசி உரையாடல்களை தொடரக் கிடைத்தது.

அதுவும் அடிக்கடி இல்லை. இடைக்கிடை.

**இவரது வெளிவந்த நூல்கள்:**

மலைகளின் மக்கள்(சிறுகதைகள், 1992, சா.ப) ஒப்பாரிக் கோச்சி சிறுகதைகள்,2010,சாகித்தியப்பரிசு), ஒரு விதை நெல்(சிறுகதைகள்,2004),வெந்து தணிந்தது காலம் (சிறுகதைகள் 2013, சாகித்தியப்பரிசு, கொடகே விருது), தேயிலை தேசம்(2003. மொழிபெயர்ப்புக்கான சாகித்திய பரிசு),பஞ்சம் பிழைக்க வந்த சீமை (நாவல், 2015, கொடகே விருது, தஞ்சைப் பல்கலைக்கழக கரிகால் சோழன் விருது, காலி பெயாவே அமைப்பின் ரூபா ஐந்து லட்சம், பரிசு), சிறுவர் பண்ணைகள் (சிறுகதைகள்,2017).

**ஒப்பாரிக் கோச்சி**

**8/7/2008 வீரகேசரியில் பிரசுரமான கதை இது. அவ்வாண்டுக்கான தகவம் சான்றிதழையும், கனக செந்திநாதன் கதா விருது சான்றிதழையும் பெற்றுக்கொண்ட சிறப்பு இக்கதைக்கு உண்டு.**

**இன்னும் அந்த உச்சிமலை கற்பாறையில் அமர்ந்து கொண்டு,**

**என ஆரம்பித்துராமானுஜம் கப்பல் ஊளையிட்டுக் கொண்டு அசைவதை சிலையாக நின்று பார்த்து கொண்டிருந்தான் சுந்தரம்.**

**என்று முடியும்**

**ஒப்பாரிக் கோச்சி கதையை இதே தலைப்பிலான இவரது சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இன்னொரு முக்கிய விடயம்.

இத்தொகுப்பை முற்போக்கு எழுத்துக்களின் அசல்களின் ஒருவரான யோ.பெனடிக்ற் பாலனுக்கே இவர் சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

இதன் மூலம் பிரதேசவாதத்துக்கு அப்பாற்பட்ட தோழமையின் நேசிப்பை இவர் நிரூபித்திருக்கிறார்.

**9 May 2018**

இத்தொடரை எழுதும் பயணத்தில் எனக்கு ஏற்படும் சங்கடத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளத்தான் வேண்டும். சிலவேளை சில எழுத்தாளர்களின் சிறுகதைகள் நினைவில் இருக்கின்றன. ஆனால் அந்தக் கதைகளை மீள்வாசிப்புச் செய்வதற்கு அக்கதைகள் கிடைக்காமல் போய் விடுகின்றன. சிலவேளை சிலரின் சிறுகதைகள் கிடைத்திருக்கிறன. ஆனால் அவற்றை எழுதிய எழுத்தாளர்களை பற்றிய விபரங்கள் கிடைக்காமல் போய் விடுகிறது. இதற்கான காரணம் அவர்கள் குறைவாக எழுதியதும், அவை தொகுப்பாக வராமையுமே.

இப்போது நான் பதிவிட இருப்பது என்னால் அறியப்படாது இருக்கும் ஒரு ஆளுமையின் கதை பற்றியதே.

**பொ.தம்பிராசன்**

60 களில் ஈழத்துச் சிறுகதைத் துறையில் பிரவேசித்த இவரின் கதைகள் தரமானவை என சிலாகிக்கப்படுகின்றன.

**ஓடிவிட்டான், பறை, மீண்டும் காலை வரும் ஆகிய கதைகளை நான் வாசித்திருக்கிறேன்.**

**மீண்டும் காலை வரும் கதை, ஒரு லொறிக் கிளீனர்** கூறுவது போல் நனவோடை உத்தியில் எழுதப்பட்டது.

செங்கை ஆழியான் வெளியிட்ட **முற்போக்குக் காலகட்ட சிறுகதைகள்** என்ற தொகுப்பில் 38ல் ஒன்றாக இக்கதை சேர்க்கப்பட்டுள்ளது.

மு.பொ. எழுதிய திறனாய்வு சார்ந்த சில பார்வைகள் கட்டுரைத் தொகுப்பில் வட இலங்கை தமிழச் சிறுகதை கட்டுரையில் இவரின் **பறை** கதை 60 களில் வந்த சிறந்த சிறுகதைகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**காலி ரோட்**

**12/3/55 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**அன்று ஞாயிற்றுக்கிழமை....**

**என ஆரம்பித்து**

**மறுபுறம் இருந்து வந்த ஒரு இரண்டு தட்டு**

**பஸ் அவனைச் சிதறடித்துவிட்டது.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

உரும்பிராயைச் சேர்ந்த இந்த பொ.தம்பிராசன் எனும் எழுத்தாளரைப் பற்றிய விபரங்கள் யாருக்காவது தெரிந்திருந்தால் பதிவிடுங்கள். அவர் பற்றி அறியும் ஆர்வமிக்கவனாகவே நான் இருக்கிறேன். உங்களுக்கும் அவ்வார்வம் இருக்கும் நிச்சயமாக.

**10 May 2018**

1968 இலக்கிய அரசியல் ஊட்டம் பெற்றகாலம். இவரது பெயர் அறிமுகமானது. மார்க்சிய விமர்சகராக இவரை அடையாளம் கண்டேன்.

பல்கலைக்கழகத்தில் பிரபஞ்ச யதார்த்தம் பற்றி பேச முனைந்தவர்களின் முற்போக்கு எதிர்ப்பை முறியடிக்கும் தேவையுடன் முனைப்போடு செயல் பட்டவர்களில் இவர் முக்கியமானவர். எம்மை உற்சாகப்படுத்தும் மார்க்சிய ரீதியிலான இவரது கட்டுரைகளை இளங்கதிரில் வாசித்தோம். இன்றுவரை இவரைக் கண்டதில்லை.

**பீ.மரியதாஸ்**

20/8/1941ல் பொகவந்தலாவையில் பிறந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழக பொதுக்கலைத் தேர்வு பட்டதாரி.

**இமையவன் (இ.ஜீவகாருண்யம்)** தொகுத்த பல்கலை வெளியீடான **யுகம்** தொகுப்பில் இவரது **முரண்பாடு** எனும் கதை 1968 ல் பிரசுரமாகியது. அப்போது அவர் பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவர்.பட்டதாரியாக வெளியேறியதும்

கட்சி வேலை செய்ததோடு செங்கொடிச் சங்க வேலைகளிலும் கவனம் செலுத்தினார். அதன் பின் ஆசிரியராகி, அதிபராகி, உதவிக் கல்விப்பணிப்பாளராகி 98 ல் ஓய்வு பெற்றார். இவரை நான் நெடுநாட்களாகத் தேடிக்கொண்டிருந்தேன். மார்க்சிய தீவிரவாதிகள் பின் நாட்களில் பின் வாங்கியது போல் இவர் பின் வாங்கவில்லை என்பதை **புதிய மலையகம்** நவ. 2002 ல் மறுபிரசுரம் செய்த **வினாக்குறியா? வியப்புக்குறியா?** என்ற கட்டுரை ஒன்றின் மூலம் உறுதிசெய்து கொண்டேன்.

புரவலர் புத்தகப்பூங்கா வெளியீடாக வந்த **இராகலை தயானி** யின் **அக்கினிபோல் வெளியே வா** கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழாவுக்கு இவரே 23/10/2016 ல் தலைமை தாங்கினார். அவ் விழாவுக்குச் சென்ற நண்பர் மேமன்கவி இவர் உற்சாகமாக இருப்பதாக என்னிடம் கூறியிருந்தார்.

**புதிய காற்று**

**1971 நவம்பர் அஞ்சலியில் இக்கதை பிரசுரமானது.**

**சாதாரணமக்களின் உள்ளம் எழுதப்படாத பேப்பரைப் போன்றது......**

**என ஆரம்பித்து**

**மௌனமாக நின்று ஒளியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**என்று முடியும் இக்கதையை நவ. 71 அஞ்சலி இதழில் தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

ஒரு தகவலுக்காக பேராதனையிலுள்ள இவரை தொடர்பு கொண்டபோது, தான் ஒரு ஏழு கதைகளே எழுதியிருப்பதாகக் கூறினார். சோர்வில்லா, தளம்பலில்லா மெல்லிய அவரது குரலில் உற்சாகத்தைத் தவிர வேறு எதையும் என்னால் காண முடியவில்லை. ஏனெனில் நானும் அவரைப்போல உழைக்கும் ஒரு சாதாரண மனிதனின் மகன்தானே.

**10 May 2018**

இவருக்கும் எனக்கும் சொல்லி கொள்ளும் அளவான பழக்கமில்லை. இவர்மீது எனக்குப் பிரியமுண்டு.

இதே நேரம் என் பற்றிய அவரது கருத்து எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. ஸ்தாபன ரீதியான அரசியலை பேசிய எனது **அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்** தொகுப்பை வானொலியில் விமர்சனம் செய்தபோது என்னை தமிழ் தேசியம் பேசுபவர்கள் வரிசையில் சேர்த்தார். தான் **புத்தரின் படுகொலை** எழுதியதை மறந்து.

**எம்.ஏ. நுஃமான்**

10/8/44 ல் கல்முனையில் பிறந்த இவர் கவிஞர், சிறுகதையாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் என அறியப்படுகிறார். சண்முகம் சிவலிங்கத்தோடு இணைந்து மஹாகவியை வெளிப்படுத்தியவர். இருவரும் இணைந்தே **கவிஞன்** இதழைக் கொணர்ந்தனர்.

ஆசிரியர், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்,

கலாநிதி, பேராசிரியர் தற்போது ஒய்வு பெற்றுள்ளார்.

பேரா.கைலாசபதியின் விருப்புக்குரியவர். அவருக்கு சார்பாக வெங்கட்சாமிநாதனுக்கு எதிர்வினையாற்றியவர். எம்போல் இறுக்கமான மார்க்சிய விமர்சகராக இல்லாது நெகிழ்ச்சியான விமர்சகராக இருப்பவர். சுந்தர ராமசாமியின் நண்பர். காலச்சுவடு குடும்பத்தின் இலங்கைப் பிரதிநிதி. இவர் 60களில் இருந்து கதைகள் எழுதி வந்தார். பத்துக் கதைகள் மட்டில் எழுதினார். பின்னர் கதைகள் எழுதாது விட்டுவிட்டார்.

**வானவில் (முஸ்லிம் கதைமலர் 1964), இரு உலகங்கள் (மல்லிகை, ஜனவரி 1979), பன்காரி** என்பன இவரின் சிறப்பான கதைகள். சிறுகதை என்ற வடிவத்தை உள்வாங்கி புதிய எடுத்துரைப்பு முறையில் எழுதியவர் இவர். இவர் பற்றி எழுத நிறைய உண்டு. அதனைத் தவிர்த்து இவரது நூல்களுக்கு வருகிறேன்.

**இவரது நூல்கள்**

> அழியா நிழல்கள் (கவிதைகள்), தாத்தாமாரும் பேரர்களும் (கவிதைகள்), மழை நாட்கள் வரும் (கவிதைகள்), இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம்(சி.மௌனகுரு, சித்திரலேகாவுடன் ஆகியோருடன் இணைந்து), பலஸ்த்தீன கவிதைகள் (மொழிபெயர்ப்பு), பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் (தொகுப்பாளர்களில் ஒருவர்), மரணத்துள் வாழ்வோம்(தொகுப்பாளர்களில் ஒருவர்),

(இங்கு இவரெழுதிய பாட உதவி நூல்களையும், விமர்சன நூல்களையும், ஆங்கிலத்தில் வந்த நூல்களையும் பதிவிடவில்லை மன்னிக்கவும்).

விருதுகளுக்கு அலையாதவர். வகிமா ஆளுனர் விருதை நிராகரித்தவர். **விளக்கு** விருதை தவிர்க்க இயலாமல் ஏற்றுக் கொண்டவர். அது தவறல்ல.

**சதுப்பு நிலம்**

**இக்கதை கணையாழி கதைகள் தொகுதியிலும், அன்று தேர்ந்த கதைகள் என்ற மாலன் தொகுத்த. ஓரியண்ட் லங்மன்ஸ் சிறுகதைத் தொகுதியிலும் சேர்க்கப்பட்டுள்ளது.**

**அவளை இதற்கு முன் வேறு எங்கேயும்**

**கண்டதாக அவனுக்கு நினைவில்லை.**

**என ஆரம்பித்து**

**"சே, எப்பவும் இப்படித்தான், நானொரு மடையன்" என்று அவன் வாய் முணுமுணுத்தது.**

**என்று முடியும் சதுப்பு நிலங்கள் கதையை நான் குறிப்பிட்ட தொகுப்பு நூல்களில் வாசியுங்கள் நண்பர்களே.**

உரத்த தொனியில் எனது தொகுப்பை இவர் ஆட்சேபித்த போதிலும் அதற்குரிய அங்கீகாரம் எனக்குக் கிடைக்கவே செய்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சிந்தனைப்போக்கு. ஆயினும் ஒட்டுமொத்தத் தீர்மானம் ஒன்று உண்டல்லவா? போதும்.

தோழர் மா.ஓ. மறைவு குறித்து இவர் எழுதிய அஞ்சலிக் கவிதை.மறைந்த தோழர் சண்முகம் முத்துலிங்கம் நடித்த பேரா.மௌனகுரு நெறியாள்கை செய்த **அதிமானுடன்** அளிக்கைக்குரிய இவரது கவிதை. இரண்டும், நு.்மான் எனும் ஆளுமையை எனக்கு மிக நெருக்கமாக்கியவை.

**புத்தரின் சடலம் அஸ்த்தியானது தம்மபதமும் சாம்பரானது.**

என்ற இவரின் **புத்தரின் படுகொலை** எனும் கவிதையின் இறுதி முத்தாய்ப்பு நிச்சயம் திரும்பப் பெறமுடியாதவை.

நு.ஃமான் என் விருப்புக்குரிய படைப்பாளி. அவரின் வாசகன் நான்.

**1 May 2018**

இவரது பெயரை தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்த வகையில் நான் அறிந்துகொண்டேன். இன்று பிரபலமாயிருக்கும் எழுத்தாளர்கள் சிலர் இவரிடம் கல்வி கற்றவர்களே.

**செந்தூரன்**

**எஸ்.திருச்செந்தூரன்** எனும் இவர் 1936 ல் கலஹாவில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை அங்கேயே கற்று பின்னர் யாழ். இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்று பட்டதாரியாக நாடு திரும்பினார்.

1959 ல் ஹற்றன் புனித ஜோன் பொஸ்க்கோவில் ஆசிரியராக இணைந்து கொண்டார். எஸ்.கே. பராஜசிங்கம் இவரது சக ஆசிரியராக இருந்தவர். மாத்தளை பாக்கியா வித்தியாலயத்திலும் படிப்பித்தார்.

1983 வரை சுமார் கால் நூற்றாண்டு காலம் ஆசிரியத் தொழிலில் இணைந்து அதிபராக விளங்கி ஹற்றன் ஹைலன்ஸ் , பண்டாரவளை தமிழ் மகாவித்தியாலயத்தில் பல மாணவர்களை

ஆற்றலாளராக உருவாக்கிய இவர் இனக்கலவரம் காரணமாக தமிழகத்திற்கு புலம் பெயர்ந்தார்.

சிறுகதை, கவிதை, நாடகம் இவரது ஈடுபாடுள்ள துறை.

துணிச்சல் மிகுந்தவர், யாருக்கும் அடிபணியாதவர், இதனால் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்.

நான்கு கதைகள் மட்டில் எழுதியுள்ளார். **உரிமை எங்கே? சாமிக்கடன்** ஆகிய கதைகள் சிறப்பானவை.

அக்காலத்திலேயே இனத்துவேசத்தை சாடும் வகையில் **வீரகேசரி** குன்றின் குரலில் இவர் எழுதிய **போதிமரத்துப் புத்தன்** கவிதை இன்றும் பேசப்படுகிறது.

வீரகேசரி நடத்திய மலையக சிறுகதைப்போட்டிகளில் இரண்டாம் பரிசு பெற்றவர்கள் இவரது மாணவர்களே.

மலையக இளைஞர் முன்னணி ஹற்றன், கண்டியில் நடத்திய நாடக விழாவுக்கு இவரே முக்கிய காரணர். அவ்விழாவில் மலையக மரபுக்கலை வடிவங்களை மேடையிட்டார்.

சாரல்நாடான்,மு.சிவலிங்கம், பீ.மரியதாஸ் எம்.வாமதேவன், மாத்தளை சோமு, மலரன்பன், வடிவேலன், விக்கிரமசிங்கா என்போர் இவரின் மாணவர்களே.

இரா. சிவலிங்கத்துடன் இணைந்து மலையகம் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டவர்.

**உரிமை எங்கே?**

**1960 ல் கல்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை இது.**

**காலை மூன்று மணி....**

**என ஆரம்பித்து.**

**“உரிமை எங்கே? உரிமை எங்கே? ” என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல மலைநாடு**

**முழுதுமே கேட்பது போலிருந்தது.**

**என்று முடியும் இக்கதையை தமிழ் எழுத்தாளர் மன்றம் 1963 ல் வெளியிட்ட ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தமிழகத்தில் வசித்த காலத்தில் தாயகம் திரும்பியோர் நலனுக்கான பணிகளை இவர் **மக்கள் மறுவாழ்வு மன்றம், ஜலண்ட்டிரஸ்ற்** போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களோடு இணைந்து முன்னெடுத்தார்.

2002 ல் இவர் காலமாகினார்.

மிக குறைவாக எழுதினாலும் காத்திரமான படைப்புகளைத் தந்த இவர் பெயரில் சென்ற ஆண்டு மலைநாட்டு எழுத்தாளர் மன்றமும் கனடா **தாய்வீடு** எனும் பத்திரிகையும் இணைந்து கவிதை,சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தி ஹற்றனில் 2017 ல் பரிசளிப்பு வைபத்தை நடத்தியிருப்பது ஒரு மகத்தான செயல். அவர்களை நான் மனமார வாழ்த்துகிறேன்.

**11 May 2018**

இவரது புனைபெயரில் இப்போது சிலர் (சொந்தப் பெயரில்) எழுதுவதால் பெயர் மயக்கம் இளம் தலைமுறையினர் மத்தியில் மட்டுமல்ல வளர்ந்தவர்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது. இவர் ஒரு மூத்த எழுத்தாளர்.

**உதயணன்**

இவர் 25.5.1932 ல் பிறந்தவர். இவரது இயற்பெயர். **ஆர்.சிவலிங்கம்.**

**இளம்பூரணன்** என்பதும் இவரது புனைப்பெயரே. உடுவிலில் பிறந்தவர். காங்கேசன்துறை மெ.மி. பாடசாலை. பரமேஸ்வராக் கல்லூரி, அநுராதபுரம் தமிழ் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர்.

55/57ஆம் ஆண்டுவரை நாவலப்பிட்டி கதிரேசன் பாடசாலையிலும, கதிரேசன் கல்லூரியிலும் ஆங்கில உதவி ஆசிரியராக இருந்தவர்.

57ல் அரச எழுதுவினைஞராகி கொழும்பு சமூகசேவைத் திணைக்களம், புத்தளம் கச்சேரி, யாழ் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு மாவட்ட

நீதிமன்றம் ஆகியவற்றில் கடமையாற்றி 1979 ல் ஓய்வு பெற்றவர்.

ஈராக்கில் சில வருடங்கள் கடமையாற்றி நாடு திரும்பிய இவர் 83 கலவரத்தின் பின் குடும்பத்தோடு பின்லாந்து நாட்டிற்குப் புலம்பெயர்ந்து அங்கேயே நெடு நாட்கள் வாழ்ந்தார். பின்லாந்து மொழியான பின்னிய மொழியை குடும்பத்தோடு கற்றார்.

தற்போது கனடா நாட்டில் வாழ்கிறார்.

இவரது முதற் படைப்பு கவிதை. அச்சேறிய முதற்கதை தியாகி இது வீரகேசரியில் பிரசுரமானது.

கலைச்செல்வி, தினகரன் குமுதம்,அல்லி,தமிழோசை போன்றவற்றில் இவர் பல கதைகள் எழுதியுள்ளார்.

இவர் சுதந்திரன் பண்ணையைச் சேர்ந்தவர். அதில் அதிகமான கதை எழுதியவர் இவரே.

தெருவிளக்கு,கீழ்சாதி புராணம், என்ன உலகமடா இது, ஒருநாள் இன்பம் உட்பட 17 கதைகளை எழுதியிருக்கிறார்.

கவிஞர், சிறுகதையாளர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என பல்துறையாளர்.

**இவரது நூல்கள் :**

கலேவலா(பின்லாந்தின் தேசிய காவியம், எழுதியவர் அலஸ்கோ பார்பொலா, பின்னிஸ் மொழியிலிருந்து தமிழ் செய்யுளாக,1994ல், 1999ல் தமிழ் உரை நடையாக). பொன்னான மலரல்லவோ (நாவல், 1995, வீரகேசரி பிரசுரம்), அந்தரங்க கீதம்(நாவல், 1996,வீரகேசரி பிரசுரம்), உங்களின் தீர்ப்பு,பிரிந்தவர் பேசினால்(சிறுகதைகள், இரு தொகுப்புகள் 2010 மணிமேகலை பிரசுரம்), பின்லாந்தின் பசுமை நினைவுகள்(கட்டுரை, 2015,கனடா தாய்வீடு பதிப்பகம்).

**தேடிவந்த கண்கள்**

**1960ல் கல்கி நடத்திய ஈழத்துச் சிறுகதைப்**

**போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை இது.**

**இலங்கையிலே மிக அகலமான வீதிகளில் காலி வீதி இரண்டாம் இடம் வகிக்கிறதாம்.....**

**என ஆரம்பித்து**

**அதன்மேல் அவள் என்னுடன் பேசவில்லை, பேசவில்லை - பேசவே இல்லை.**

**என்று முடியும் கல்கியின் மூன்றாம் பரிசு பெற்ற இக்கதையை 63ல் வெளிவந்த தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவர் பற்றிய பதிவு கால தாமதமாகியமைக்கு தகவல்கள் கிட்டாமையே பிரதான காரணம், பிறிதொன்றுமல்ல.

**12 May 2018**

## பிடித்த சிறுகதை 89

இவரை நான் முதன் முதல் சந்தித்தது 2000 ஆம் ஆண்டு செப்ரம்பர். 29 ல். சென்னையில் நடந்த **தமிழ்.இனி 2000** மாநாட்டில் கட்டுரை படிக்க இவரும் வந்திருந்தார்.

தெளிவத்தை ஜோசப் என்னை இவருக்கு அறிமுகப்படுத்திய போது ஆள் ஒரு காட்டமானவர் என்றே அறிமுகப்படுத்தினார். (அப்படியேதான் இன்னும் இருக்கிறேன்). பின்னர் இவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை.

சாரல் வெளியீட்டகத்தின் மூலம் இவர் தொகுத்து 2007க்கான சாகித்தியப் பரிசு பெற்ற குறிஞ்சித் தென்னவன் கவிதைச்சரங்கள் தொகுதிக்குரிய பரிசை இவர் பெற்றுக் கொண்டமை குறித்த விவாதங்களில் இவர் பக்கம் ஆயிரம் காரணங்கள் இருந்த போதிலும், ஒரு சிறிய தொகையாகிலும் அக்குடும்பத்திற்கு இவர் கொடுக்கவில்லையே என்ற கோபம் இப்போதும் எனக்கு உண்டு.

**சாரல் நாடான்**

9/5/1944 ல் நுவரெலியா மாவட்டம் சாமிமலை

சிங்காரவத்தைத்தோட்டத்தில் பிறந்த இவரது இயற்பெயர்.கருப்பையா நல்லையா.

கண்டி அசோகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்த இவர். ரீமேக்கராகவே பலவருடங்கள் ஒரு தேயிலைத் தொழிற்சாலையில் கடமையாற்றினார்.

இளவயதிலேயே இலக்கிய ஈடுபாடுடையவராகவும், ஆய்வுக் கட்டுரையாளராகவும் விளங்கினார்.

1962 ல் வீரகேசரி மலையக எழுத்தாளருக்கென நடத்திய சிறுகதைப்போட்டியில் **கால ஓட்டம்** எனும் கதைக்காக இரண்டாம் பரிசு பெற்றார்.

மலைமுரசு,சுதந்திரன்,தினகரன் பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

சிறுகதைத் துறையைவிட ஆய்வுத் துறையிலும், பதிப்புத் துறையிலும் (சாரல் வெளியீட்டகம்) இவரது பணி சிறப்பானது.

**இவரது நூல்கள் :**

மலைக்கொழுந்தி(NCBH,.94),மலையகத் தமிழர்(90), மலையக வாய்மொழி இலக்கியம்(93.தேசிய கலை இலக்கியப் பேரவை), சி.வி.சில சிந்தனைகள்(86), தேசபக்தன் கோ.நடேசையர்(1988 சாகித்தியப் பரிசு), பத்திரிகையாளர் கோ. நடேசையர் (1999.சாகித்தியப் பரிசு), இன்னொரு நூற்றாண்டுக்காய்(99), மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும் (2000, சாரல் வெளியீட்டகம்), பிணைந்தின்னும் சாத்திரங்கள்(2002 சாரல்), மலையக தமிழர் வரலாறு(2004,சாரல்),பேரேட்டில் சில பக்கங்கள் (2005, இளைஞர் தளபதி இரா.சிவலிங்கம்(2010. சாரல்).

சு.முரளீதரனின் **வரவும் வாழ்வும், மலையக நாட்டார் சிந்தனை** நூலை 2002 ல் சாரல்வெளியீட்டகத்தின் மூலம் கொணர்ந்துள்ளார்.

இன்னும் இருக்கலாம் எனக்கு தெரிந்தவற்றைப் பதிவிட்டுள்ளேன்.

தெரிந்தவர்கள் உதவுங்கள்.

இவர் 31/7/ 2014 ல் (73 வயது) கண்டி மருத்துவமனையில் காலமாகினார்.

**திருப்தி**

**அவனால் எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியவில்லை.**

**என தொடங்கி**

**அவளுக்கும் திருப்திதான் புதிய வாழ்க்கைக்குத் தன்னை தயார் செய்து கொண்டதால்.**

**என்று முடியும் திருப்தி எனும் இக்கதையை**

**சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

12 வீடுகள் கொண்ட ஒரு வீட்டுத்திட்டம் பூண்டுலோயாவில் 9/4/2017 ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. **சாரல்நாடான் புரம்** என்பது அதற்குப் பெயர்.

மலையகத்தின் பெயர் சொல்லத்தக்க படைப்பாளிகளின் பெயரில் இன்னும் சில வீட்டுத்திட்டங்கள் உருவாகியிருக்கின்றன.

இந்த நல்ல விடயத்திற்கு மனம் உவந்து உதவுகிற கௌரவ அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கும் நுவரெலியா மாவட்ட கௌரவ. பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்பூ சந்தி திலகருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் நன்றி.

இதைத் தவிர பெரிதாக என்னதான் என்னால் கூறமுடியும்?

**13 May 2018**

## பிடித்த சிறுகதை 90

இவர் எனக்குப் பிடித்த சிறுகதை எழுத்தாளர். **தூண்டி** சஞ்சிகை நேர்காணலில் இவர் என்னை தனக்குப்பிடித்த எழுத்தாளர்களில் ஒருவராக குறிப்பிட்டுள்ளார். இவர் பிரமிளின் உறவினர். எழுத்தாளர் **சானா** வின் உறவினர் என்பது இப்பதிவுக்கு சம்பந்தமில்லாத தகவல்.

### க.சட்டநாதன்

22/4/1940 ல் வேலணையில் பிறந்த இவர் சென்னை விவேகானந்தாக் கல்லூரியின் Bsc. பட்டதாரி. வீரகேசரியில் கடமையாற்றியவர். அக்காலத்தில் செ.கதிர்காமநாதனும் அங்கு கடமையாற்றினார். 72 - 74 ல் வெளிவந்த **பூரணி** இதழின் இணையாசிரியராக இருந்தவர். அரச ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.

**நாணயம்** எனும் இவரது முதற் கதை வீரகேசரியில் பிரசுரமானது. **மல்லிகை, அஞ்சலி, பூரணி, அலை,நங்கை, திசை, வெளிச்சம், நங்கூரம், ஜீவநதி,மகுடம்** ஆகியவற்றில் இவர் கதைகள் பிரசுரமாகி இருக்கின்றன. இதுவரை ஐந்து சிறுகதைத் தொகுதிகளை இவர் வெளியிட்டுள்ளார்.

**இவரது நூல்கள்**

மாற்றம்(1984), உலா(1992, யாழ் இலக்கியப் பேரவை, வ.கி.மா சிறந்த நூல், சுதந்திர இலக்கிய அமைப்பு, சாகித்திய மண்டல விருதுகள் பெற்றது), சட்டநாதன் கதைகள்(1995, தே.க இ.பேரவை), நீளும் பாலை (குறுநாவலும்),புதியவர்கள(2006,பொன்னி வெளியீடு), முக்கூடல் (2010, மீரா, சாகித்திய விருது, வ.மா சிறந்த நூல் விருது, தமிழியல் விருது).

இவரின் பவளவிழாவை முன்னிட்டு **ஜீவநதி** 2015 ஐப்பசி இதழை சிறப்பு மலராக வெளியிட்டுள்ளது. ஏலவே மல்லிகையும் இவரை அட்டையில் பொறித்துள்ளது.

மனதை நெருடும் உணர்வுகளை லாவகமாக நோகாமல் எடுத்துரைக்கும் வல்லமை கொண்ட எழுத்துகள் இவரது எழுத்துகள்.

**உறவுகள்**

**மல்லிகை சித்திரை. 76 ல் பிரசுரமான கதை இது.**

**கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவிலை அடுத்து**

**என ஆரம்பித்து**

**அந்த நிம்மதியே அவளுக்கு இப்போதைக்குப் போதுமானது, அவள் நிம்மதியாகப் பெருமூச்செறிந்தாள்.**

**என்று முடியும் உறவுகள் கதையை இவரது மாற்றம் தொகுப்பிலும் சட்டநாதன் கதைகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

ஏ.ஜே, சி.சிவசேகரம். நா.சுப்பிரமணியம், வெங்கட் சாமிநாதன் போன்றவர்கள் இவரைப் புகழ்ந்தாலும் இப்போது எனக்கு ஒரு ஆதங்கமுண்டு. அவர்கள் போற்றிய கதைகளில் இருந்த அந்தச் சட்டநாதன் என்னும் ஆளுமையை ஒரு வாசகனான என்னால் இப்போதைய அவரது கதைகளில் காண முடியவில்லையே. ஏன்...?

**14 May 2018**

இவரது திருமணத்திற்கு நான் இவரது பிறந்த ஊருக்குச் சென்றிருந்தேன். இவரது மனைவி வடமராட்சி,கரணவாய் தெற்கைச் சேர்ந்தவர். ஆசிரியையாக இருந்தவர்.

**குப்பிழான் ஐ.சண்முகன்**

1/8/46 ல் பிறந்த சண்முகன் பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரி. ஆரம்பத்தில் எழுதுவினைஞர் சேவையில் சேரந்தார்.

கொழும்பு மற்றும் வெவ்வேறு பிரதேசங்களிலும், யாழ்ப்பாணத்திலும் கடமையாற்றினார்.பின்னர் ஆசிரியராகி இப்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இசை, சினிமா, ஓவியம், கவிதை, பத்தி எழுத்துக்கள் இவர் ஈடுபாடு காட்டி வரும் ஏனைய துறைகள்.

**வீரகேசரி, மல்லிகை, ஈழநாடு, சிரித்திரன், அஞ்சலி, இளம்பிறை, கற்பகம், மங்கை** ஆகியன இவரது எழுத்துகளுக்கு களம் கொடுத்திருக்கின்றன. கொழும்பு இலக்கிய நண்பர் கழகத்தோடு இயங்கிய இவர் ஆரம்ப **அலை** சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவராகவும் இருந்துள்ளார்.

அழகியல் உபாசகரான இவர் தன்கதைகளை அதற்கு தக்கவிதத்தில் படைப்பவர். ஒரு கடும் விமர்சராக இவரை நான் அடையாளம் காணவில்லை.

2012 ல் **உயில்** அமைப்பினர் நடத்திய எனது **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வில் காத்திரமான ஒரு பேச்சை நிகழ்த்தினார். என் கதைகளில் அழகியல் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

மெல்லுணர்வுகளை வாசகன்மீது திணிக்காமல் லாவகமாகச் சொல்லும் வல்லமை இவருக்கு வாலாயப்பட்டிருக்கிறது.

**இவரது வெளிவந்த நூல்கள்**

கோடுகளும் கோலங்களும் (சிறுகதைகள், அலை வெளியீடு, 1976, சாகித்தியப்பரிசு), சாதாரணங்களும் அசாதாரணங்களும் (சிறுகதைகள், நர்மதா, 1983), அறிமுகங்கள் விமர்சனங்கள், குறிப்புகள் பத்தி எழுத்துக்கள். நிகரி. 2003), உதிரிகளும் (சிறுகதைகள்), புதிய தரிசனம், 2006), பிரபஞ்ச சுருதி (கவிதைகள்), சித்தம் அழகியர், 2014), ஒரு பாதையின் கதை (சிறுகதைகள், காலச்சுவடு, 2014), ஒரு தோட்டத்தின் கதை, சிறுகதைகள்,2018).

**இலுப்பை மரமும் இளஞ்சந்ததியும்**

**1974ல் பிரசுரமான கதை இது. ஒரு சுய அனுபவ வெளிப்பாடு.**

**பசுமையான இளம்பருவ நிகழ்வை அசை போட்டுப் பார்க்கும் எத்தனம்.**

**நினைவுகளுக்குள் தோய்த்தெடுக்கும் படைப்புத் திறனின் வெற்றி.**

**காலை வெளுத்தபின் ஏழு மணிபோல் எழுந்திருந்தான்.**

**என தொடங்கி**

**"அம்மா, ஞானக் குஞ்சியம்மா வீட்டை போட்டு வாறேன்."**

**என்று முடியும் இக்கதையை இவரின் கோடுகளும் கோலங்களும் தொகுதியிலும், சாதாரணங்களும் அசாதாரணங்களும்; தொகுதியிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

எம் எழுத்துக்காக நாம் முரண்பட்டுக் கொண்டதில்லை இதுவரை. எம் இருவரது கொள்கைகளும் வெவ்வேறானவை. ஆயினும் எமது நட்பு இன்னமும் அதனையும் மீறி போலித்தன மற்றதாகவே விளங்குகிறது. உண்மை.

**15 May 2018**

பிடித்த சிறுகதை 92

**ஒ**ரு காலம் நான் வானொலி நாடக ரசிகன். **இலங்கையர்கோன்** முதல் **பாலாம்பிகை நடராசா** வரை சானாவின் தயாரிப்பில் ஒலிபரப்பாகிய நாடகங்களை கேட்டு ரசித்தவன். அப்படி அறிமுகமாகிய பெயர்களில் இவரது பெயரும் ஒன்று.

அப்போது என் வயது 11, 12 கள். இவர் பெயர் நினைவிருக்கும் என் வயதொத்தவர்களுக்கு.

**கோபதி**

1924ல் பிறந்த ப.தெய்வேந்திரன் எனும் இயற் பெயர் கொண்ட இவர் ஒரு ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்.

50ல் எழுதுவினைஞர் சேவையில் இணைந்த இவர். காவல்துறை திணைக்களத்திலும், பிரதம மந்திரி (டி.எஸ். சேனநாயக்கா காலத்திலிருந்து) செயலகத்திலும் பல வருடங்கள் கடமையாற்றினார். அங்கு இருந்த காலத்தில் இவருக்கு பிரதம லிகிதராய் இருந்த நடராசா, (பாலாம்பிகை நடராசாவின் கணவர்) பாலாம்பிகை எழுதிய நாடகப் பிரதிகளை அழகாக எழுதும்படி கொடுத்தமையால்

அந்த அருட்டுணர்வில் வானொலி நாடக எழுத்தாளரானவர்.

இவரது முதற்கதை **அவசரம்** 15/7/ 1962 ல் தினகரனில் பிரசுரமானது. (பேராசிரியர். க.கைலாசபதி ஆசிரியராக இருந்த காலகட்டமாக இருக்கலாம்)

**சுதந்திரன், வீரகேசரி, சிந்தாமணி, சஞ்சீவி** ஆகியவற்றிலும் இவர் கதைகள் எழுதினார்.

இவர் ஒரு கவிஞரும் கூட. இவரது கவியாக்கம் **கச்சேரி காவியம்**

**கொள்ளிக்கடன், மனமாற்றம், உறுதி, இரும்புக்கரம்** என்பன இவரது சிறந்த கதைகளில் சில.

2008 ல் யாழ் இலக்கிய வட்டத்தினால் இவரது 13 கதைகள் கொண்ட **கோபதி கதைகள்** வெளியிடப் பட்டுள்ளது.

இறுதியாக யாழ் கச்சேரியில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

**கொள்ளிக் கடன்**

**5/1/64ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**அன்று செவ்வாய்க்கிழமை. அர்ச். அந்தோனியாருக்குரிய திருநாள்.**

**என ஆரம்பித்து**

**நொண்டிக் கிழவியின் வாய் "கொள்ளிக்கடன்" என்று முணுமுணுத்தது.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் கதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

திருகோணமலை உப்பு வெளிப் பிரதேசத்தில் ஒரு வீதிக்கு **லவ் லேன்** என்று பெயர். பிரசித்தி பெற்ற இவ்வீதி முகவரிகளில் இடம் பெறும் பெயராக இப்போதும் விளங்குகிறது.

திருகோணமலை மின்சார சபை தலைமைக் காரியாலயம் இவ்வீதியிலேயே அமைந்திருக்கிறது.

நான் கடமையாற்றிய, மறுமலர்ச்சி சிறுகதைகள், ஈழகேசரிக் கதைகள், அச்சிட்ட பதிப்பகத் திணைக்களம் இவ்வீதியில்தான் இருக்கிறது.

**கோபதி** அவர்கள் **லவ் லேன்** என்ற பெயரில் 10/10/98ல் சஞ்சீவி இதழில் ஒரு கதை எழுதி இருக்கிறார். அக்கதை **கோபதி கதைகள்** தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

அது திருகோணமலை **லவ் லேன்** சம்பந்தமான கதை அல்ல.

**16 May 2018**

இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதும் ஆற்றல் பெற்றவர். இவரது நூல்களின் தொகை 27 க்கு மேல் அவற்றைப் பதிவிட இப்பதிவு போதாது. இந்தப் பதிவிற்கு வேண்டிய நூல்களின் பட்டியலை மட்டும் தருகிறேன். இவரும், நீங்களும் என்னை மன்னிக்க வேண்டும்.

**ஐ.சாந்தன்.**

மானிப்பாய், சுதுமலையில் 17/3/1947 ல் பிறந்த ஐயாத்துரை சாந்தன் யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். மொறட்டுவ பல்கலைக்கழக குடிசார் பொறியியலாளர். ஆங்கில இலக்கியத்தில முதுமாணிப் பட்டம் பெற்றவர். சூழல் முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணி, பொறியியல் விரிவுரையாளர். ஆங்கில ஆசிரியர்.

இவரது முதற் கதை **பார்வை.** கலைச்செல்வி புரட்டாதி 1966 இதழில் பிரசுரமாகி இருந்தது. இதே தலைப்பில் தனது சிறுகதைத் தொகுதியை யாழ் இலக்கிய நண்பர் கழகத்தினூடாக 1976 ல் வெளியிட்டார்.

**இவரது நூல்கள்**

கடுகு (1975), ஒரே ஒரு ஊரிலே (1975, சாகித்தியப் பரிசு), முளைகள் (1982,NCBH), கிருஸ்ணன் தூது(1982 இ.தேடல்), காலங்கள்(1994), எழுதப்படாத அத்தியாயம் (2003, மல்லிகைப் பந்தல்), யாழ் இனிது (1988,கோரி).

**நாவல்கள் :**

ஒட்டுமா(1978,வரதர் வெளியீடு), ஆரைகள்(1985, ரஜனி இரு நெடுங்கதைகள்), Raills Run(2015,ஆங்கில நாவல், பெயாவே விருது, கொடகே விருது பெற்றது).

இவரது பயணக் கட்டுரைகளும் நூலாகி உள்ளன.

இத்துடன் ஊசி விற்கும் பணியை நிறுத்தி பிறிதொரு விசயத்திற்கு வருகிறேன்.

மல்லிகை இவரது அட்டைப் படத்தை செப். 2004 ல் வெளியிட்டுள்ளது.

இவரது ஆங்கிலச் சிறுகதைகளை கொடகெ நூலாக்கியுள்ளது.

இவர் பெற்ற விருதுகள்

சாகித்திய ஸ்ரீ விருது, 2016 (**Intercontinental Cultural Association**)> கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது(2017), பிரேம்சாந்த் விருது(இந்தியா).

இதைவிட தகவல்கள் இன்னும் இருக்கக் கூடும் உதவுங்கள்.

**அந்நியமான உண்மைகள்**

**1975 ஜனவரி மல்லிகை இதழில் பிரசுரமான கதை இது. முற்போக்கு அணியிலிருந்து இப்படி ஒரு கதையா? என அக்காலத்தில் சர்ச்சையை ஏற்படுத்திய கதை.**

**"இங்கையிருந்து யாழ்ப்பாணத்துக்குப் போற முதல் பஸ் எத்தினைமணிக்கு காலமையிலை..."**

**என ஆரம்பித்து**

**"இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களே அரபுப் பிரதேசங்களை விட்டு வெளியேறுங்கள்."**

**என்று முடியும் இக்கதையை சாந்தனின் காலங்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது **எழுதப்பட்ட அத்தியாயங்கள்** தொகுப்பு பற்றிய குறிப்பு ஒன்றை **சுட்டும் விழி** இதழ் ஒன்றில் எழுதியிருந்தேன். பிறிதொரு சமயம் இவரது நூலொன்றிற்கு வழங்கப்பட்ட சான்றிதழை அனுப்பிவைக்கும்படி உத்தியோகபூர்வமாக தொலைபேசியில் உரையாடும் போது இவ்விடயம் குறித்து பேசிக்கொண்டோம். இது நடந்து சில வருடங்கள். அதன்பிறகு நாம் பேசிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

சமீபத்தில் இவரது நீண்ட பேட்டி ஒன்றை மகுடம் இதழில் வாசிக்கக் கிடைத்தது. அவ்வளவே.

**16 May 2018**

## பிடித்த சிறுகதை 94

இவரைப் பற்றி எழுதும் போது நான் திணறிப் போகிறேன். முள்ளிவாய்க்கால் அவலம் நினைவு கூரப்படும் இந்நாட்களில் 1991ல் இவருக்கும் இவரது குடும்பத்திற்கும் நேர்ந்த அவலம் இருக்கிறதே.

அது ....?

**நெல்லை க.பேரன்**

18.12.1946 அன்று நெல்லியடியில் பிறந்தவர் கந்தசாமி பேரம்பலம்

16.7.1991ல் எறிகணைத் தாக்குதலால் காலமானார்.

நெல்லியடி. ம. ம.வித்தியாலயத்தில் கல்வி கற்று, அஞ்சல் திணைக்களத்தில் வேலை பெற்று கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இவர் கடமையாற்றியவர்.

வீரகேசரி, ஈழநாடு பத்திரிகைகளின் நிருபராக இருந்தவர். சகல பத்திரிகைகளிலும் சலிக்காது எழுதிக் கொண்டிருந்தவர். கொழும்பு இலக்கிய நண்பர் கழகத்துடன் இணைந்து இயங்கியவர். இலக்கிய நிகழ்வுகளை பத்திரிகை எழுத்துகள் மூலம் ஆவணப்படுத்தியவர்.மல்லிகையுடன் மிக

நெருக்கமானவர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க கவியரங்குகளில் கவிதை பாடியவர். சகலரோடும் நட்பைப் பேணியவர். காட்டமான விமர்சனங்களை சகஜமாக எடுத்துக் கொண்டவர்.

**“கு.பா.ரா வையும், ல.சா.ராவையும், மௌனியையும், புதுமைப்பித்தனையும் போல எழுதுவதை விட என்னைப் போல் எழுதவேண்டும் என்பதே என் ஆசை ”** என்றவர்.

சிறிதுகாலம் குவைத்தில் கடமையாற்றினார்.

**வீரகேசரி,தினகரன்,சிந்தாமணி, ஈழமுரசு,மல்லிகை, தாமரை, செவ்வந்தி** என அக்கால வெளியீடுகளில் எழுதியவர்.

**இவரது நூல்கள்**

ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்(சிறுகதை,1975), வளைவுகளும் நேர்கோடுகளும்(நாவல், வீரகேசரி பிரசுரம் (1978), விமானங்கள் மீண்டும் வரும் (கனக.செந்திநாதன் பரிசு பெற்ற குறுநாவல், ஷர்மிளா,1985), சத்தியங்கள்(சிறுகதை.ஷர்மிளா. 1987), பேரன் கவிதைகள் (ஷர்மிளா,1989),சந்திப்பு (நேர் காணல்கள்,1986).

இவரோடு நான் சீண்டிப் பார்ப்பதுண்டு. ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள், ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார், ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது, ஒரு தொழிலாளி சைக்கிள் வாங்குகிறான், ஒரு நாணயம் காப்பாற்றப்படுகிறது, ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம். இதையிட்டு ஒரு தடவை எங்கள் முன்னோடி செ.கதிர்காமநாதனிடமிருந்தா பெற்றீர்? என்று ஒரு கேட்டேன். கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான் தாக்கம்தானே இது என்று கேட்டேன். அவர் சிரித்துச் சமாளித்தார்.

அவர் நிருபராக இருந்த காரணத்தால் அவரது கதைகளில் கட்டுரைப் பாங்கான எடுத்துரைப்பு முறை இருப்பதை நான் பல தடவைகளில் சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

இதற்கொரு சுவாரஸ்யமான தகவலைத் தருகிறேன். கிண்டலல்ல, கொச்சைத்தனமல்ல. **ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறான்** ”வெளியீட்டு விழா. 1975. நெல்லியடி. ம.ம.வித்தியாலயம். பேச்சாளர்களோடு சிறப்பு விருந்தினராக கல்வி அதிகாரி இராசலிங்கம் ( பின்னர் உடுப்பிட்டித் தொகுதி எம்.பி.யாக இருந்தவர்.) கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் அவர் சிறப்புரை ஆற்றினார்.அவரது பேச்சின் தொடக்கம் இப்படியாக இருந்தது.

திரு. பேரனின் இத்தொகுப்பில் 12.சிறப்பான கட்டுரைகள் அடங்கி உள்ளன.கட்டுரைகள் என்ற பதத்தை தனது பேச்சில் பல தடவைகள் அவர் பாவித்தார். அதிலிருந்து அவர் விலகவே இல்லை. இதனை பேரனிடம் விழா முடிந்ததும் கூறினேன்.

**“நான் என்ன மச்சான் செய்யிறது...”** என்று அவர் சிரித்தார்.

**ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம்**

**செவ்வந்தி. செப். 76. இதழில் வெளிவந்த கதை இது.**

**சி.ரி.பிமைக் பழுதுபட்ட படியால்......**

**என ஆரம்பித்து**

**மறுபடியும் ஆழமான சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறேன்.**

**என்று முடியும் இக்கதையை அவரது சத்தியங்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

செ.கதிர்காமநாதன் வழியில் பல ஆளுமைகள் வடமராட்சியின் கரவெட்டி பிரதேசத்தில் தோன்றி இருந்தார்கள். அவர்களில் புலம் பெயர் படைப்பாளிகள் இருப்பதையும் அவர்கள் காத்திரமான படைப்பாளிகளாக விளங்குகிறார்கள் என்பதையும் நல்ல வாசகர்கள் அறிவார்கள்.

அதே வேளை இயற்கையான மரணத்தைச் சந்திக்காத. குடும்பத்தோடு, இள வயதில் அகால மரணமுற்ற நண்பன் நெல்லைக் க.பேரனை முள்ளிவாய்க்கால் அவல சாவடைந்தோருடன் இணைத்து கண்ணீரோடு இன்று நினைவு கூர்கிறேன்.

நண்பா உன் அவலச்சா நடந்த நேரம் புலம் பெயர்ந்து யாழ் வந்து, மனைவி கைக் குழந்தையோடு உடுப்பிட்டியில் ஒரு பதுங்கு குழியில் வியர்த்திருந்தேன்.

உன்னையும் உன் குடும்பத்தையும் காவு கொண்ட எறிகணை எம்மைக் கடந்தே நெல்லியடி சென்றது. அது வெடித்த ஒலியை நான் உணர்ந்தேன்.அது உங்களைக் காவுகொண்ட எறிகணை என்பதை அச் சமயம் நான் உணரவில்லை நண்பா.

**17 May 2018**

## பிடித்த சிறுகதை 95

**சி**ல எழுத்தாளர்களை அவரிடம் கற்று இப்போது பிரபலமாக இருக்கும் சிலர் மூலமே அறிந்து கொள்ளுகிறோம். பிரபல வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் **B.H.** அப்துல் ஹமீட், இவரிடம் தெமட்டக்கொட தமிழ் மகா வித்தியாலயத்தில் தான் தமிழ் கற்றதாக நன்றியோடு குறிப்பிட்டதை வாசித்துள்ளேன்.

**பொன்னு**

1932 ல் மட்டக்களப்பு நாவற்குடாவில் பிறந்த ஆ.பொன்னுத்துரை என்னும் இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். நெடுங்காலம் கொழும்பு பாடசாலைகளில் படிப்பித்தவர். அதில் ஒன்று தெமட்டக்கொட தமிழ் மகாவித்தியாலயம். இவரது முதற் சிறுகதை **பணமும் குணமும்** 1952ல் தினகரனில் பிரசுரமானது.

அதன் பின் சுதந்திரன், வீரகேசரி ஆகியவற்றில் எண்ணிக்கையில் அதிகமான கதைகளை அவர் எழுதினார்.

மட்டக்களப்பில் 57-58ல் காலகட்டத்தில் வ.ச.சேகரனோடும் இன்னொருவருடனும் இணைந்து

**ஈழச்சுடர்** எனும் கையெழுத்துச் சஞ்சிகையை நடத்தினார்.

இவரது கதைகளில் அனேகமானவை குழந்தைகளை மையமாகக் கொண்டவை. மட்டக்களப்பின் பிறிதொரு ஆளுமை **தங்கன்** இவரது தம்பியாராவார்.

**நம் குழந்தை, நீயும் கல்யாணம் செய்.** என்பனவும் எனக்குப் பிடித்த இந்தச் சிறுகதையும் பொன்னுவின் குறிப்பிடத்தக்க சிறுகதைகளாகும்.

**மறக்குமா இறக்கும் வரை?**

**10/7/60 சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**"உண்ட வாழ்நாளெல்லாம் நீ இப்படியே இருந்து என்னடியம்மா செய்யப் போறா.?"**

**எனத் தொடங்கி**

**" உன் கண்களாக நான் என்றுமிருப்பேன் " என்றார்.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

**பொன்னு** எனும் படைப்பாளியை அறிந்து கொள்ளவும் அவரது கதைகளைப் படிக்கவும் இளைய தலைமுறைக்கு வாய்ப்பு இல்லாமல் அவரது படைப்புகள் முழுமையாக சிதைந்து போய்விட்ட சோகத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ளத்தான் முடிகிறது.

அவர் இறந்து போனார். இருந்திருந்தால் அவர் அதை சிதைய விட்டிருக்க மாட்டார். உண்மை.

**17 May 2018**

பிடித்த சிறுகதை 96

**தி**னபதி தினமொரு சிறுகதைத்திட்டம் வாரத்தில் ஆறு நாட்கள் ஆறு கதைகள். எனது சிபார்சு செய்யப்பட்டு அனுப்பிய கதைகள் மூன்று மட்டும். அது பிரசுரமாகிறதா என்று பார்க்க பருத்தித்துறை வாசகசாலைக்குச் செல்வேன். ஒரு வாகை மரத்தின் கீழ் அது அமைந்திருந்தது. எனது ஊரிலிருந்து மூன்று மைல் நடந்தே வருவேன். ஏமாற்றம். என்கதை பிரசுரமாகி இருக்காது.

ஆனால், ஒரு பெண் எழுத்தாளரின் கதைகள் மாதத்தில் ஐந்து தடவைகளுக்கு மேல் பிரசுரமாகும்.

அவரின் பெயர் எனக்கு மனப்பாடம். உண்மையைச் சொல்லுகிறேன். அவர்மீது நான் பொறாமை கொண்டிருந்தேன். அவர்தான் இவர்.

**நயீமா சித்திக்**

நயீமா ஏ.பஷீர் என்றே அவரை அப்போது அறிந்திருந்தேன். பதுளை ஹப்புத்தளையில் 1948ல் பிறந்த இவர் காத்தான்குடி மத்திய கல்லூரியின் பழைய மாணவி. பேராதனைப் பல்லைக்கழக பொதுக்கலைமாணி பட்டதாரி. கல்வி டிப்ளோமா

பெற்றவர். புகழ்பெற்ற ஆசிரியை. கல்வி சம்பந்தமான நூல்களும் எழுதியவர்.

படிக்கிற காலத்திலேயே தினகரனில் எழுதி எழுத்துலகுக்கு வந்தவர்.நான்கு நாவல்கள், 750 சிறுகதைகள், கவிதைகளின் சொந்தக்காரி.

**இவரது நூல்கள் :**

வாழ்க்கைப் பயணம் (நாவல், 1975, வீரகேசரி பிரசுரம்), வாழ்க்கைச் சுவடுகள் (சிறுகதை, 1989,தமிழ் மன்றம், கல்ஹின்னை), வாழ்க்கை வண்ணங்கள் (சிறுகதை,2004, உடத்தலவின்னை சிந்தனை வட்டம்),வாழ்க்கை வளைவுகள்(சிறுகதை, 2005, மணிமேகலை).

பாடப்புத்தகங்களைத் தவிர்த்துள்ளேன்.

தினபதி,சிந்தாமணி,கலைமலர்,தினகரன்,சுதந்திரன் தீபம் போன்றவற்றில் இவர் எழுதியுள்ளார்.

சமுதாய யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட இஸ்லாமிய குடும்ப விமர்சனமாக இவரது கதைகள் விளங்குகின்றன.

இவரது கதைகள் சில உபாலி லீலாரட்னவினால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு கொடகே வெளியீடாக ஒரு நூலாக வெளிவந்துள்ளது.

இவர் பெற்ற விருதுகள்: இலக்கியத் தாரகை(1991,முஸ்லிம் கலாசார அமைச்சு). சிறுகதைச் செம்மணி( 2004.உடத்தலவின்ன சிந்தனை வட்டம்), கலாபூஷணம் (2005), மூத்த எழுத்தாளர் கௌரவம்(2003 சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் கொடகே).

மல்லிகை 2006 ஜுலை இதழ் இவரின் அட்டைப்படத்தோடு வெளிவந்தது. ஞானம் இதழும் இவரை அட்டைப்பட அதிதியாக்கி கௌரவப்படுத்தியுள்ளது. இவ்விரு சஞ்சிகைக் கட்டுரைகளையும், ஜீவநதி பெண்கள் மலரில் வந்த இவர் பற்றிய கட்டுரையையும் கே.பொன்னுத்துரை அவர்களே எழுதியுள்ளார்.

**காலம் பல கடந்தாலும் ....**

**17/6/79 சிந்தாமணியில் பிரசுரமான கதை இது.**

**ஆத்திரம் பொங்க வீட்டுக்குள் நுழைந்தான் மஹ்ரூப்**

**எனத் தொடங்கி**

**அவர்களது உரிமைக் குரலுக்கும்,நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கும் கரீம் முதலாளி என்ன பதிலைச் சொல்லப்போகின்றாரோ.?**

**என்று முடியும் இக்கதையை இவரின் வாழ்க்கைச் சுவடுகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

கிட்டதட்ட 50 வருடங்களுக்கு முன் எழுத்தின் மூலம் அறிமுகமான ஒரு ஆளுமையைப் பற்றி எழுதக் கிடைத்தமை மனதுக்கு மகிழ்வைத்தருகிறது.

ஓய்வு பெற்றுள்ள அவர் சுகநலத்தோடு வாழ எனது வாழ்த்துகள். அவர் மீதிருந்த பொறாமையை நான் எப்போதோ களைந்துவிட்டேன். நம்புங்கள்.

**17 May 2018**

பிடித்த சிறுகதை 97

தங்கள் ஊரின் பெயரை தமது பெயரோடு இணைத்துக் கொண்ட பல எழுத்தாளர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள். ஆனால் மூத்த எழுத்தாளர் முதல் புதிய தலைமுறைவரை பிறந்த ஊரை தம் பெயருடன் இணைத்துக் கொண்டவர்கள் தோன்றியிருப்பது இந்த ஊரில்தான்.

அம்பாறை மாவட்டத்தில் மருதமுனைக்கு இப் பெருமை இருக்கிறது. சற்றுக் குழப்பமிருந்தாலும் சாய்ந்தமருதுவும் இதற்குள் வந்து விடுகிறது.

அங்கு மருதூர்.வடபகுதி வடமராட்சியில் புலோலியூர். கு.பெரியதம்பியின் பின் அடுத்தவராக வருபவர் இவர். இதே போல் இன்னும் சிலர் வருவர்.

**புலோலியூர் க.சதாசிவம்**

கந்தையா சதாசிவம் 20/3/42 ல் பிறந்தவர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து கொழும்பு மருத்துவக்கல்லூரிக்குத் தெரிவாகி உதவி மருத்துவ அதிகாரி ஆனவர். இவரது சேவை மலையகத்திற்கே கிடைத்தது. நாவலப்பிட்டியிலும்,

இறுதியாக மருத்துவ நலவியல் சிகிச்சை நிலையத்திலும் கடமையாற்றினார்.

மலையக மக்களின் துன்ப, துயரங்களை தன் படைப்புகளின் மூலம் வெளியிட இவ்வனுபவங்கள் இவருக்குக் கைகொடுத்தன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர். வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையகப் பிரதேச நாவலான **மூட்டத்தினுள்ளே** நாவலுக்காக 83ல் பரிசு பெறவும், மலையக மக்களைப் பிரதிபலிக்கும் சிறுகதைகள் அடங்கிய **ஒரு நாட் பேர்** தொகுப்பை 95ல் வெளியிடவும் முடிந்திருக்கிறதென்றால். அம்மக்களோடான அவரது உறவை நாம் புரித்து கொள்ள முடியும்.

**ஒருநாட்போர்** என்ற பிறிதொரு கதையும் **ஒருநாட்பேர்** தொகுப்பில் அடங்கியுள்ளது.

இலங்கையின் சகல பத்திரிகைகளிலும் இவர் எழுதியிருக்கிறார். **ஞானம்** சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

இவர் நினைவாக **ஞானம்** சஞ்சிகை சிறுகதைப் போட்டிகளை நடத்தியுள்ளது.

இவர் பத்திரிகைகளில் மருத்துவக் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

**இவரது நூல்கள்**

யுகப்பிரவேசம்(சிறுகதைகள்,1973), ஒரு அடிமையின் விலங்கு அறுகிறது(சிறுகதைகள்,1982), ஒருநாட்பேர் (மலையக சிறுகதைகள்,1995), புதிய பரிமாணம் (சிறுகதைகள், 1998. இலக்கியப்பேரவை விருது). அக்கா ஏன் அழுகிறாய்? (சிறுகதைகள், 2003, மணிமேகலை). நாணயம்(நாவல், 1980 சாகித்திய விருது), மூட்டத்தினுள்ளே (மலையக நாவல், 1983, வீரகேசரி பிரசுரம, சாகித்திய விருது).

புது வாழ்வு

**1961 ல் இலக்கிய ரசிகர் குழு அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்**

**பரிசுபெற்ற இவரது முதற்கதை இது. அப்போது இவரின் வயது 19.**

**"பெரியவர் "**

**" யாழ்ப்பாண ஆஸ்பத்திரி மோனை "**

**என ஆரம்பித்து**

**அணில் கோந்திய நல்லரக மாம்பழத்தைத் தன் மருண்ட விழிகளாற் பார்த்தபடி நிற்கிறாள்.**

**என்று முடியும் இக்கதையை இவரது யுகப்பிரவேசம் தொகுதியில் அல்லது அக்கா ஏன் அழுகிறாய்? தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

பயண வழியில் 14/9/2004 ல் காலமாகிய இவரிடம் நான் கண்ட மிகச் சிறப்பு ஒன்று, தான் எடுத்திருக்கும் கதைக்கருவுக்கு ஏற்றவகையில் அந்தந்த பிரதேசங்களையும், அவர்களின் பேச்சு மொழியையும் அச்சொட்டாக கையாளுவது. அவரது நூல்களை வாசிப்போர் எனது இக் கூற்றை வழிமொழிவாரென நம்புகிறேன்.

**18 May 2018**

பிடித்த சிறுகதை 98

ஐந்து தசாப்தங்களாக எழுதிவரும் ஒரு மூத்த முஸ்லீம் பெண் எழுத்தாளர் இவர். இவர் புனைபெயர் எனக்கு நன்கு பரியச்சையமானது. இவரது கணவரும் ஒரு அறியப்பட்ட இலக்கிய வாதி. இருவருமே கலாபூஷண விருது பெற்றவர்கள்.

**பேராதனை ஷர்புன்னிஷா**

13.4.33ல் ஹற்றனில் பிறந்த இவரது தகப்பன் திருகோணமலையைச் சேர்ந்தவர். அவர் பொலிஸ் சேவையில் இருந்தமையால் அடிக்கடி இடமாற்றப்பட்டு பல இடங்களுக்குச் சென்றமையால் இவரது படிப்பு தடைப்பட்டு விட்டது. இவரது இன்னொரு புனைபெயர். **பேசா மடந்தை.**

1948ஆம் ஆண்டு முதல் நூற்றுக்கணக்கான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகளை **தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, இந்திய இதழ்களான இஸ்லாமிய தாரகை, மணிவிளக்கு, ஷாஜஹான், மணிச்சுடர்** போன்றவற்றில் எழுதினார். இவரது இலக்கியப் படைப்புகளில் நாட்டாரியல்

என்ற இலக்கியம் முக்கிய இடத்தைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிராமப்புறப் பெண்கள் மார்க்கக் கல்வி கற்பதையும் உயர் கல்விகற்பதையும் மறுத்து நின்ற காலத்தில், அவர்களின் கல்வி, சமூகசேவை, அவர்களின் அரசியலை முன்நிறுத்தி பல தொடர் கட்டுரைகளை இவர் எழுதி பலரின் விமர்சனங்களுக்கு ஆளாகினார்.

இவரும், இவரது கணவர் எஸ்.எம்.ஏ.ஹசனும் முற்போக்கு எழுத்தாளர்சங்க மேடைகளில் பேசியிருக்கிறார்கள். இவர் அக்கரைப்பற்றில் நடந்த ஒரு கூட்டத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வியில் மட்டுமல்ல சகல துறைகளிலும் முன்னேற வேண்டும் என்று ஆக்கிரோசமாகப் பேசியபோது அதனைப் பிடிக்காத சிலர் தக்காளிப் பழங்களால் தாக்கியதை நினைவு கூர்கிறார். அதன்பின் எத்தனை முன்னேற்றகரமான மாற்றங்கள்.

அதற்கான முதல் வழியைத் திறந்தவர்களில் தானும் ஒருவர் எனவும் ஆறுதலடைகிறார். இவர் நாட்டார் இலக்கியங்களை ஏட்டு இலக்கியங்களாக்கும் நோக்குடன் நாட்டார் பாடல்களைத் தழுவி எழுதிய **கிராமிய மணம்** எனும் நூல் 10/11/96 ல் வெளிவந்துள்ளது.

இவர் முன்னைநாள் உடுநுவர தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளருமாவார்.

**மனதின் சுமை**

**1/8/93 ல் வீரகேசரியில் பிரசுரமான கதை இது.**

**கண்டி மாநகரின் மத்தியில் அமைந்துள்ள அந்த வங்கிக் கட்டடத்துக்கு முன்னால் மக்கள் குழுமி நிற்கின்றனர்...**

**என ஆரம்பித்து**

**மீண்டும் அந்த மாம்பழப் பார்சலை எனது கூடைக்குள் போட்டுக் கொண்டேன்.**

**என்று முடியும் இக்கதையை அந்தனி ஜீவா தொகுத்த மலையக பெண் எழுத்தாளர்களின் சிறுகதைத்**

**தொகுதியான குறிஞ்சி மலர்கள் தொகுப்பில் முதற் கதையாக வாசியுங்கள் நண்பர்களே.**

85 வயதிலும் தளரா மனத்துடன் இலக்கிய ஆர்வத்துடன் வாழும், மூத்த பெண் படைப்பாளி இவர், ஆயினும் இவர் கவனிப்பு பெறாதவராக இருப்பது மனதை நெருடுகிறது. அது நிவர்த்திக்கப்பட வேண்டும். நிவர்த்திக்கப்படும் என்றே நம்புகிறேன்.

இந்த நோன்பு காலத் தொடக்கத்தில் இவரைப் பற்றி எழுதக் கிடைத்தமை மகிழ்ச்சி.

இவருக்கும் இவரது கணவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

**19 May 2018**

பெப்ரவரி மாதத்தின் நடுப்பகுதி ஒரு தொலைபேசி அழைப்பு.

**“நான் மார்ச் மாதம் இலங்கை வருகிறேன். உங்களைச் சந்திக்க வர இருக்கிறேன். முகவரி தாருங்கள்.”**

எனது நிலை, எனது வீட்டு நிலை அவர் அறியாதது. ஒரு அகதியாக உருவாகி இருக்கும் நான் முகவரியைக் கொடுத்தேன்.

ஏலவே முகமறியாத, எழுத்தில் மிக அறிமுமாகிய புலம்பெயர் எழுத்தர் அவர். குறிப்பிட்டது போல் எனக்கென்றிருந்த குடிலுக்கு வந்தார். கிட்டத்தட்ட ஐந்து மணித்தியாலங்கள் சோக வரலாற்றை வாசித்தோம். தேநீரைப் பருகியபடி.

**பொ.கருணாகரமூர்த்தி**

8/5/54ல் புத்தூரில் பிறந்த பொன்னையா கருணாகரமூர்த்தி ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவர்.

இறுக்கமான ஆசாரங்களைக் கொண்டதும்,

விவசாயத் தொழிலை ஆதாரமாகக் கொண்டதுமான செம்மண் பிரதேசம் புத்தூர். மழவராயர் பரம்பரை வாழ்ந்த, வாழுகிற ஊர். புதுவை இரத்தினதுரையின் ஊரும் இதே. காலம் இவர்களைப் புலம் பெயர வைத்தது.

இவர் 1980 ல் புலம் பெயர்ந்து ஜேர்மனிக்குச் சென்றார். எத்தனையோ அனுபவங்கள்.சலிக்காத முயற்சிகள். வாடகைக்கார் சாரத்தியத்தோடு, M.R.C.Tயின் இலத்திரனியல் கற்கை நெறி பட்டைய சான்றிதழ் பெற்றுள்ளார்.

ஓய்வின் பின்னரான காலத்தை **Counselling** செய்பவராக கழிக்கிறார்.

மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளுடன் பெர்லின் நகரில் இவரது வாழ்வு.

1985ல் கணையாழியில் வெளிவந்த **ஒரு அகதி உருவாகும் நேரம்** எனும் குறுநாவல் மூலம் இவரது பெயர் எமக்கெல்லாம் அறிமுகமானது.

**காருண்யன், புதுவைநிலவன், அழகு முருகேசு** என்பன இவர் கவிதைக்குப் பயன்படுத்தும் பெயர்கள் சில.

**இவரது நூல்கள் :**

கிழக்கு நோக்கிச் சில மேகங்கள்(சிறுகதை, 1996), அவர்களுக்கு என்றொரு குடில் (சிறுகதை, 1999),கூடு கலைதல் (சிறுகதை, 2005), பதுங்கு குழி (சிறுகதை, 2010, கனடா இலக்கியத் தோட்ட சிறந்த நூல் பரிசு பெற்றது), ஒரு அகதி உருவாகும் நேரம் (மூன்று குறுநாவல்கள்,1996), பெர்லின் இரவுகள்(நினைவோடை, 2005), பெர்லின் நினைவுகள் (2014), அனந்தியின் டயறி(2014).

**கூடு கலைதல்**

**2005ல் வெளியிடப்பட்ட இவரது சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்ற சிறுகதை இது.**

**அலுவலகம் விட்டு அறைக்குத் திரும்பும் வழியில்...**

**என ஆரம்பித்து**

**அங்கப் பிரதட்சம் பண்ணி விட்டு எழுந்துவரும் அடியாரின் திருக்கோலத்தில் புன்னகையோடு நின்றிருந்தார் சிவானந்தன் மாஸ்டர்.**

**என்று முடியும் இக்கதையை இதே பெயரில் வெளிவந்த கூடு கலைதல் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இன்னும் எனக்குப் பிடித்த புலம் பெயர் எழுத்தாளர்களின் கதைகள் உள்ளன. அவற்றைப் பதிவிட தேடுகிறேன் .

இங்குள்ளவர்களின் கதைகளைத் தேடுவதே சிரமமாக உள்ள நிலையில் உதவும் வல்லமையுள்ளவர்களை அணுகியுள்ளேன்.

வெல்லுவோம்.

**19 May 2018**

**சி**லரோடு இலக்கியத்தை பற்றி பேசுவது உடன்பாடில்லை. ஏனெனில் அது பிரயோசனமற்றது. வாழ்க்கையில் பேச்சுக்கும் எழுத்துக்கும் முரண்பாடு இருக்கக் கூடாது என்பதில் நான் கறாரானவன். முற்போக்கு என்று கூறிக் கொள்வதால் ஒருவன் முற்போக்காளனாக மாறி விடுவதில்லை.

அப்படியனவர்கள் யாராக இருந்தாலும் உறவினராக இருந்தாலும் எனது விமர்சனத்துக்கு உட்பட்டவரே. அப்படிப்பட்டவர்களில் இவரும் ஒருவர். இவர் நூற்றுக்கு மேற்பட்ட கதைகளை தயாரித்தாலும் தேறிய கதைகள் சிலவற்றில் இதுவும் ஒன்று.

**கே.ஆர்.டேவிட்**

7/7/45 ல் மட்டுவிலில் பிறந்த இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்தவர். ஆசிரிய நியமனம் பெற்று மூதூர், பூண்டுலோயா போன்ற பாடசாலைகளில் கற்பித்து சேவை மூப்பு அடிப்படையில் உதவிக் கல்விப் பணிப்பாளராகி சாவகச்சேரி வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து ஓய்வு பெற்றவர்.

இவரது முதற் கதை **புகலிடம்** 1966 ல் சுதந்திரனில் பிரசுரமானது. அதன் பின் இவரது கதைகள் இலங்கையின் சகல பத்திரிகைகளிலும் பிரசுரமானது.

**சுடலை ஓவியன், எழுதப்படாத வரலாறு** என்பன இவரது நல்ல சிறுகதைகளில் சில. எழுதப்படாத வரலாறு கதை தரம் 8 . தமிழ்ப்பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**இவரது நூல்கள்**

வரலாறு அவளைத் தோற்றுவிட்டது (மலையக நாவல்,1976, வீரகேசரி பிரசுரம்), ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை (குறுநாவல், 1987, யாழ்.மீரா வெளியீடு), பாலைவனப் பயணிகள் (குறுநாவல் 1989. யாழ்.மீரா), வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை (குறுநாவல் 1989, யாழ்.மீரா), ஒரு பிடி மண் (சிறுகதைகள், 1994, யாழ்.மீரா), மண்ணின் முனகல் (சிறுகதைகள், 2012, கு.வி. அச்சகம், கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது), பாடுகள் (சிறுகதைகள், ,2012, கு.வி. அச்சகம், தமிழியல் நூல் விருது), நீரில் கிழித்த கோடுகள் (சிறுகதைகள், 2015, ஜீவநதி, கொடகே விருது, வவுனியா உதயணன் விருது).

இவர் பெற்ற கௌரவங்கள்- தகவம் காலாண்டு சிறுகதைகள் பரிசுகள், தகவம் கௌரவிப்பு(2010),கனக செந்திநாதன் விருது, தமிழியல் கௌரவிப்பு, கலாபூஷணம் விருது, யாழ்/கம்பன் கழக கௌரவம், மல்லிகை அட்டைப்படம். ஞானம் அட்டைப்பட அதிதி.

**சூடுகள்**

**13/2/83 ல் வீரகேசரியில் பிரசுரமான கதை.**

**சிலுவையில் அறையுண்டு கிடக்கும் யேசுவைப் போல....**

**எனத் தொடங்கி**

**அந்தக் குறிகள்? நிரந்தரமானவைகளா?**

**என்று முடியும் இக்கதையை இவரது பாடுகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

எவ்வளவோ எழுதியும் தான் இன்னும் நல்ல வாசகர்களின் கவனிப்பை பெரிதளவில் பெற முடியவில்லையே இதற்கான காரணம் என்ன? என்பதை இவர் சுயவிமர்சனம் செய்யவேண்டும்.

கதைத் தயாரிப்பு, வார்த்தைகளுக்கு அலையும் எத்தனம். சலிப்பூட்டும் எழுத்து நடை என்பனவற்றை இவர் தவிர்த்துக் கொண்டால் இவரால் இதுவரை எழுதப்பட்டவற்றை விட நல்ல படைப்புகளைத் தரமுடியும்.

**20 May 2018**

இவரோடு நான் நெருக்கமானது 70 களின் பின்னரே. அது பின்னர் இரட்டையர்கள் எனப் பேசும் அளவுக்கு வளர்ந்தது. அது ஒரு குடும்ப நட்பாக விரிவுகண்டது.

**டானியல் அன்ரனி**

13/7/47 ல் நாவாந்துறையில் பிறந்த இவர் யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்.

சிறந்த உதைபந்தாட்ட வீரர். விளையாட்டு, இலக்கியம் இரண்டிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர்.

70 களில் செம்மலர்கள் இலக்கிய வட்டம் என்ற அமைப்பை உருவாக்கி **அணு** என்று ஒரு இதழைக் கொணர்ந்தனர். அதில் இவரது பங்களிப்பு நிறைய இருந்தது.

அக்காலத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையில் மாணவர்களாக இருந்த இன்று பிரபலமாக இருக்கும் பலர். (**திக்குவல்லை கமால், அன்புஜவகர்ஷா, ஜவாத்மரைக்கார், மூதூர் முகைதீன், கலைவாதி கலீல்.**இன்னும் சிலர்) சனி, ஞாயிறு தினங்களில் யாழ் நூலக கேட்போர் கூடத்தில்

நடக்கும் இலக்கிய நிகழ்வுகளில் சந்திப்போம். பேசுவோம்.

**அணு** இதழ்கள் மூன்று மட்டுமே வெளிவந்து நின்று போயிற்று.

ஆரம்பத்தில் அன்ரனி ராதா,சிந்தாமணி, சுந்தரி ஆகியவற்றிலேயே எழுதினார். பின்னர் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு **வீரகேசரி, மல்லிகை, மாற்று,கணையாழி,தாயகம்** ஆகியவற்றில் எழுதத் தொடங்கினார்.

வாசிப்பு அவரது தெவிட்டாத பணி. சிறந்த விமர்சகர், சிறந்த பேச்சாளர், இவரது தொழில் நாவாந்துறை உபதபாலதிபர். அது அவருக்கு திருப்தியளிக்கும் தொழிலாக இருக்கவில்லை. அதனைக் கைவிட்டு பத்திரிகை ஒப்பு நோக்கும் பணியில் இணைந்தார்.

**சமர்** என்றொரு இதழைத் தொடங்கி 8 இதழ் வரை நடத்தினார். **பேரா.கைலாசபதி, முருகையன்,கே.எஸ்.சிவகுமாரன், க.சண்முகலிங்கம், சாந்தன்** எனப் பலர் அதில் எழுதினர். (நான் மட்டும் அதில் எழுதவில்லை. அவரும் கேட்கவில்லை. நானும் எழுதவில்லை).

இடது சாரியான இவர் அதற்குச் சாதகமான கட்டுரைகளை வெளியிட்டார். சீன எழுத்தாளர் **லூசுனின் போர்கால இலக்கியம்** எனும் கேதாரநாதன் மொழிபெயர்த்த கட்டுரை சமரிலேயே பிரசுரமானது. பின்னர் அது தமிழகத்தில் மறு பிரசுரமானது. சமர்,இலக்கியச் சமர் புரிந்த ஓர் ஏடு.

இவரது சிறுகதைத் தொகுப்பு ஒன்பது கதைகளுடன் 1987 ல் **வலை** எனும் பெயருடன், கைலாசநாதனின் அட்டை ஓவியத்துடன் வெளிவந்தது. அதே பெயருடன் கரைவலைத் தொழிலே இல்லாத நாவாந்துறையைப் பேசும் கதைகள் அடங்கிய பத்துக் கதைகள் கொண்டதாக கரைவலை அட்டைப்படத்துடன் கூடிய **வலை** தொகுப்பு 2005 ல் அவரது இறப்பின் பின் வெளியிடப்பட்டுள்ளது.

இவரது முதற் பதிப்பின் காணிக்கை பின்வருமாறானது.

**"உலகெங்கிலும்**

அடக்குமுறைக்கும்
ஒடுக்குமுறைக்கும்
எதிராகப் போராடி
மானுட விடுதலைக்காக
மடிந்த போராளிகளுக்கு..”

**வெறும் மனிதன் ஒருவனின் மரணம்**

இந்தக் கதையை நான் கைப்பிரதியிலேயே வாசித்திருக்கிறேன். 1981 மார்ச் மல்லிகையில் பிரசுரமான இக்கதை 25/3/2012ல் சுடரொளியில் மீள் பிரசுரமாகி இருக்கிறது.

கீழே சலசலத்து ஓடும் வெள்ளம்..

என ஆரம்பித்து

அழுகையும் ஒப்பாரியுமாய் பிரேதப் பெட்டி தலைக்கு மேல் உயர்ந்து நகர்ந்தது.

என்று முடியும் இக்கதையை வலை மற்றும் மல்லிகை சிறுகதைகள் தொகுதிகளில் வாசியுங்கள் நண்பர்களே.

மிக நெருக்கமான நமது நட்பின் பின்னணியில் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவை இந்தப் பதிவுக்கு அவசியமற்றவை.

17/8/1993ல் காலமான இவர் பற்றிய மல்லிகை அட்டைப்படக்கட்டுரையை எழுதிய இவரதும் எனதும் நண்பரான சசி.கிருஷ்ணமூர்த்தியும் அகால மரணமடைந்ததும் சோக நிகழ்வே.

இவரது **வெற்றுக்காகிதங்கள்** கதை கராமத் அவர்களினால் சிங்களத்தில் மொழிபெயர்கப்பட்டுள்ளமை மேலதிக தகவல்.

**20 May 2018**

என்னை விட இவரைப்பற்றி அறிந்த பலர் புலம் பெயர் நாடுகளில் இருக்கிறார்கள். எனக்கு இவர் புனை பெயரிலேயே அறிமுகமானார்.

1985ல் சுந்தர ராமசாமியை ஆசிரியராகக் கொண்டு **புதுயுகம் பிறக்கிறது** என்றொரு சஞ்சிகை வெளிவந்திருந்தது. (ஒரே ஒரு இதழ் மட்டும்) அதில் சி.மோகன் எழுதிய நாவல் பற்றிய கட்டுரை ஒன்று வெளி வந்திருந்தது. இவர் எழுதிய அந்த நாவலை சிலாகித்து எழுதப்பட்டிருந்த கட்டுரையே அது.

நம்மவரது எழுத்தை தமிழகம் திரும்பிப் பார்க்க வைத்த நாவல் அது. இயக்கம் ஒன்றின் உட்பூசலை அம்பலத்துக்குக் கொண்டு வந்த முக்கிய நாவல். இன்றும் கூட அது பேசப்படுகிறது. நாவலின் பெயர். **புதியதோர் உலகம் .**

**கோவிந்தன்**

திருகோணமலை பாலையூற்றில் 2/5/48ல் பிறந்த சூசைப்பிள்ளை நோபேட் திருகோணமலை சென்.யோசப் கல்லூரி,தி/இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். கொழும்புப் பல்கலைக்கழக

கலைப் பட்டதாரி. கொழும்பு நில அளவைத் திணைக்களம், திருகோணமலை மாவட்டக் கல்விக் கந்தோர் ஆகியவற்றில் எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர்.

இன்று புலம் பெயர்ந்து வாழும் அக்கால இடது சாரி தோழர்களோடு இணைந்து 80 களில் **சங்கப்பலகை** என்ற ஒரு இலக்கிய அமைப்பை நடத்தியவர். மலையக **தீர்த்தக்கரை** சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தவர்.

இவரது புனை பெயர்கள்: **கோவிந்தன், கேசவன்,டொமினிக், ஜீவன், பிரான்சிஸ் சேவியர்.**

1982 ல் Plot. அமைப்பில் இணைந்து பின்னர் அவர்களில் அதிருப்தியுற்று **தீப்பொறி** அமைப்பில் இணைந்தார்.

மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாகி தலைமறைவாக இருந்த காலத்திலேயே **புதியதோர் உலகம்** நாவலை **கோவிந்தன்** என்ற பெயரில் எழுதினார்.

உட்கட்சி நிலைப்பாட்டை அம்பலப் படுத்தும் இந்த நாவல் Plot இயக்கத்தின் எதிரிகளுக்குத் தேவையாக இருந்தது. சிறுகதைத் துறையில் அவர் பின்னர் அக்கறை காட்டவில்லை. **தீர்த்தக்கரை** சஞ்சிகையில் மூன்று கதைகள் மட்டும் எழுதியதோடு சரி.

இவரது தலைமறைவு வாழ்க்கை 1986ல் இயக்கங்கள் தடைசெய்யப்பட்ட போது மேலும் தொடர்ந்தது. 1991/ 5/17 ம் திகதி இவர் புலிகளால் கைது செய்யப்பட்டார். **புத்தொளி நா.சிவபாதம்** ஆகியோருடன் இவர் தடுப்பு முகாமில் இருந்ததாக ஒரு பதிவை நான் பார்த்தேன்.

விடுதலை கிடைத்தால் அரசியலிலிருந்து ஒதுங்கி பழைய வேலையைப் பெற்று குடும்பதோடு வாழப்போகிறேன் என்று கூறினார் என்ற தகவலையும் நான் அறிந்துள்ளேன்.

அது பொய்யாக்கப்பட்டு விட்டது. அவர் இல்லாமலே போய்விட்டார்.

**இவரது நூல்கள் :**

புதியதோர் உலகம் (நாவல், முதற்பதிப்பு, 1985, இரண்டாம் பதிப்பு,விடியல்,1997), இவருடையவை மூன்று கதைகள் கொண்ட தீர்த்தக்கரைக் கதைகள் தொகுப்பு,

எதிரொலி

**80ல் மலையகத்திலிருந்து வெளிவந்த தீர்த்தக்கரை ஜூன்-ஓகஸ்ட் முதலாவது இதழில் பிரசுரமான கதை இது.**

**70ல் ஓகஸ்ட் மாதம் நடந்த இனக்கலவரத்தை, அதன் கொடூரத்தையும், கோழைத்தனங்களையும் மீறி மக்கள் மத்தியில் மனிதத்துவத்தை இனங்காணும் வகையில் இக்கதையை அவர் பிரான்சிஸ் சேவியர் எனும் பெயரில் எழுதியிருந்தார்.**

**அந்த உருவங்கள் திரும்பத் திரும்ப தோன்றி மறைந்தன...**

**என ஆரம்பித்து**

**ஒரே மயக்கம், ஒரே மயக்கம். அதனாலென்ன பரவாயில்லை.**

**என்று முடியும் இக்கதையை தீர்த்தக்கரைக் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தனது ஒரே ஒரு நாவல் மூலம் நம்மை மட்டுமல்ல தமிழ் எழுத்தாளர்கள் அனைவரையும் நிமிர வைத்த அந்த ஆளுமையைப் பற்றி விரிவாக எழுத முடியவில்லை என்ற ஆதங்கம் எனக்கு மீந்துளது.

அவரோடு உடன் பயணித்த அன்பு உள்ளங்களே அவர் பற்றி எழுதுங்கள்.

மறுக்க வேண்டாம்.

**20 May 2018**

**7**0களின் ஆரம்பம். வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பலர் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு தெரிவாகி வந்திருந்தார்கள். அவர்களில் இவரும் ஒருவர்.

இலங்கையின் முதல் புதுக்கவிதைத் தொகுப்பு எனச் சொல்லக்கூடிய **எலிக்கூடு** 73 ல் இவரால் வெளியிடப்பட்டது.

கண்டோம், கதைத்தோம். நெருக்கமான பழக்கமில்லை. அவரது சுபாவமும் அப்படி எனது சுபாவமும் அப்படியே.

**திக்குவல்லை கமால்**

மாத்தறை மாவட்டம் திக்குவல்லையில் 3/3/50ல் பிறந்த இவரது பெயர்,முஹம்மத் ஜெமால்தீன் முஸ்தபா கமால். கல்வி கற்கும் காலத்திலேயே எழுத்துத் துறைக்கு வந்தவர். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், மொழிபெயர்ப்பு இவரது நாட்டமுள்ள துறைகள்.

பயிற்றப்பட்ட ஆசிரியர். உதவிக் கல்விப பணிப்பாளராக வட பகுதியிலும் கடமையாற்றி ஓய்வு

பெற்றுள்ளவர். மணிவிழாக் கண்டவர்.

சிரித்திரன், இன்ஸான், வீரகேசரி, தினபதி, ராதா, தினகரன், மல்லிகையில் எழுதியவர். மல்லிகையின் எழுத்தாளர் என்றே பரவலாக அறியப்பட்டவர். முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர்.

தானும் தன்பாடும் என வாழ்பவர். உரத்துப்பேசத் தெரியாதவர். அமைதிச் சுபாவம்.

**இவரது நூல்கள் :**

கவிதைகள்- எலிக்கூடு(1973), பூக்களின் சோகம் (2009), புல்லாங்குழல் (2013),

சிறுகதைகள்-கோடையும் வரம்புகளை உடைக்கும் (1984),குருட்டு வெளிச்சம்(1993), விடுதலை (1996), விடை பிழைத்த கணக்கு (1996), புதிய பாதை (1997), வரண்டு போன மேகங்கள் (1999), நோன்புக்கஞ்சி (2007), முட்டைக் கோப்பி, 2010).

நாவல்கள்-ஒளிபரவுகிறது(1995,சாகித்தியப் பரிசு),நச்சு மரங்களும் நறுமலர்களும் (1998), பாதை தெரியாத பயணம்(2000), உதயக் கதிர்கள் (2006), வீடு (2015), சிறுவர் இலக்கியம்- பிறந்தநாள் (2003), உதய புரம் (2005, சாகித்தியப் பரிசு), வானொலி நாடகம்- நிராசை (2006). பிற: மல்லிகை ஜீவா - மனப்பதிவுகள்(2004)

இவர் பல சிங்கள இலக்கிய நூல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதற்காக கொடகே சாகித்திய விருதுகளும் பெற்றுள்ளார். (நூல் விபரம் தரப்படவில்லை)

இவர் பெற்ற கௌரவங்கள்:இலக்கிய வித்தகர், கலாபூஷணம்.

**பயணத்தின் ஆரம்பம்**

**15/2/98ல் தினக்குரலில் வெளியான கதை இது. இவர் ஏராளம் கதைகள் எழுதியிருக்கிறார். தென்னிலங்கை பேச்சுத் தமிழை நமக்கு அறிமுகப்படுத்திய வகையில்**

**இவரது பல கதைகளின் ரசிகன் நான். அதில் ஒரு கதை இது.**

**ஸமீனா சவுதிக்குப் போகிறாள்.**

**என ஆரம்பித்து**

**அது பொஸ்ஸின் வீடல்ல் ஒரு உல்லாசப் பயண ஹோட்டல் என்பது இனித்தான் ஸமீனாவுக்குத் தெரியவரும்.**

**என்று முடியும் இக்கதையை இவரின் முட்டைக்கோப்பி சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

மறைந்த முற்போக்கு கவிஞர் ஏ. இக்பாலின் மாணவர் தான் என்பதில் பெருமைப்படுபவர் இவர். எனது இப்பதிவுகளுக்கு உத்வேகம் தந்தவை. மல்லிகையில் இவர் எழுதிய **வாழும் நினைவுகள்** தொடர் என்பதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

**21 May 2018**

# பிடித்த சிறுகதை 104

**2**001 ம் ஆண்டின் ஒரு அதிகாலைப் பொழுது. இவரது மகன் நானிருந்த பதிப்பகத் திணைகள விடுதிக்கு வந்திருந்தார்.

**"அப்பாவின் சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட வேலை நடக்கிறது. நீங்கள் ஒரு குறிப்புரை தரவேணும்"** என்பது அவரது வேண்டுகோள்.

அப்போதெல்லாம் அவருக்கு நான் ஒரு பிரியமான எழுத்தாளன்.

**"உங்கள் அப்பாவின் கதைகளை நான் உதிரியாகவே படித்திருக்கிறேன். தொகுதியைப் படிக்காது அது பற்றி எப்படி எழுதுவது.? தயவு செய்து மன்னிக்கவும்."** என்றேன்.

அதன்பின் வெறுப்பான பல நிகழ்வுகள்.

## ஆரையம்பதி ஆ.தங்கராசா

ஆரையம்பதியில் 1941ல் பிறந்த ஆ.தங்கராசா மலையகத்தில் ஆசிரியராக இருந்து, அதைவிடுத்து பல் வேறு தொழில்கள் செய்து. இறுதியில் C.T.B யில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

இவரது முதற் கதை **கண்டதும் காதல்தானா?** 1962 ல் தேசியமுரசு பத்திரிகையில் பிரசுரமானது. தொடர்ந்து **திராவிடநாடு, தென்றல், மன்றம், சுதந்திரன்: வீரகேசரி, சிந்தாமணி, கலைச்செல்வி, ஈழநாடு சுடர், அறப்போர்,கல்கி, விவேகி, வானொலி** ஆகியவற்றில் நூற்றுக்கணக்கான கதைகளை எழுதினார்.

இவரது 18 கதைகள் அடங்கிய **யுகமொன்று உடைகிறது** தொகுப்பு **மூன்றாவது மனிதன்** வெளியீடாக 2001ல் வெளிவந்துள்ளது.

வானொலிச் சிறுகதைப் போட்டியில் இவர் பரிசு பெற்றுள்ளார்.

இவர் பெற்ற விருதுகள் :கலாபூஷணம், கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, தமிழியல் விருது.

**கள்ளத்தோணி**

> **2/1/66 சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**
>
> **எல்லோரும் அக்குடும்பத்தை அனுதாபத்துடன்தான் கதைத்தார்கள்.**
>
> **எனத் தொடங்கி**
>
> **கடைசியில் நஞ்சுதான் அவருக்குக் கைகொடுத்து உதவியது.**
>
> **என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

எனது இத்தொடரில் பெரும்பாலும் மரபு வழிக் கதை சொல்லிகளையே பதிவிட்டு வருகிறேன். இதனால் என்னை சிலர் கூறுவது போல் பின்நவீனத்துவம் தெரியாதவன் எனக் கருதவேண்டாம். அத்தகைய எழுத்துகளை கொண்ட எனக்குப் பிடித்த கதைகளையும் கண்டிப்பாகப் பதிவிடுவேன்.

**21 May 2018**

எனக்கும் இவருக்குமான தோழமைக்கு வயது கிட்டத்தட்ட ஐம்பது வருடங்கள். அது பவித்திரமானதும் சுயநலங்களுக்கு அப்பாற்பட்டதும் ஆகும். மறைந்த தோழர் சிவம் எம் இருவருக்கும் இணைப்புப் பாலமாக இருந்தார். அரசியல் சித்தாந்தம் எம்மைப் பிணைத்தது. எவ்வளவோ நெருக்குவாரங்களை எதிர்கொண்டோம்.

ஊரோடு நான். புலம் பெயர்ந்து அவர். நெடும் பிரிவு. திடீரென அவரே தொடர்பேற்படுத்தி என்னோடு கதைத்தார்.

என்போல் அவரது புகுந்த ஊர் திருகோணமலை. இலக்கியத்தில் கை கொடுக்கும் மனைவி பிள்ளைகள். தனது கொள்கையில் விட்டுக் கொடுக்காத இறுக்கம். சிறுமை கண்டு பொங்கும் பாரதியின் உள்ளம். துன்பத்தில் சாதல் காண்போர்க்கு உதவுதல்,

கல்விப் பணி,கவிதை, கதை, நாவல்,மரபை உடைத்து புதுமரபை பேணும் ஆர்வம்.

இதுவே இவருக்குத் தொழில். லண்டனில் வாழ்வு.

**கரவை மு.தயாளன்**

21/9/52 இவரது பிறந்த திகதி. பிறந்த ஊர் வடமராட்சியின் கரவெட்டி மேற்கு. இயற்பெயர் **முருகேசு நற்குணதயாளன்.**

படிப்பு.உடுப்பிட்டி அ.மி. ஆண்கள் பாடசாலை,நெல்லியடி மத்.மகாவித்தியாலயம். சிவப்பு சிந்தனையால் அப்பாவின் எதிர்ப்பு.பாடசாலை நாட்களிலேயே எழுத்தார்வம். கையெழுத்து சஞ்சிகைகள் நடத்துதல். புனைபெயர் **கரவைக்கவி. ஈழநாடு** பத்திரிகையில் இப்பெயரில் எழுதிய கவிதைகள் இப்போது இல்லை.

முதற்கதை , **கண்ணீரில் எழுத்து** இரண்டாம் கதை , **என்னை எவராவது கற்பழியுங்கள் .** இவையும் இப்போது இல்லை.

தொழில்: கொழும்பு சைவ மங்கையர் கழக ஆசிரியர். பின்னர் புலம்பெயர்வு. வெவ்வேறு நாடுகள். இப்போது நான் ஏலவே குறிப்பிட்டது போல். இதுவே இவருக்குத் தொழில் லண்டன் வாழ்வு. தன் கருத்துகளால் என்னைச் சீண்டிப் பார்க்கும் கறார்தனம்.

என்னிடமும் என் கொள்கையில் விட்டுக் கொடுக்காத அந்த கறார் உண்டு. நமது நட்பு இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. அது குடும்ப உறவு. சமீபத்தில் இவரது சிறுகதைகள் **வீரகேசரி, தினக்குரல்**, தினகரனில் தொடர்ச்சியாகப் பிரசுரமானதை வாசகர்கள் அறிவர்.

**இவரது நூல்கள் :**

கடல் கடந்து போனவர்கள் (நாவல்), மண்ணில் தெரியுது வானம்(கட்டுரைகள்), சில மனிதர்களும் சில நியாயங்களும் (நாவல்,2016, லண்டன் தமிழர் தகவலில் தொடராக வெளிவந்தது), எனது பேனாவில் இருந்து(2016,ஆறு சிறுகதைகள், ஒன்பது கவிதைகள், எட்டு கட்டுரைகள், இரண்டு நாடகங்கள், இரண்டு ஆங்கிலச் சிறுகதைகள், பத்து ஆங்கிலக் கவிதைகள் கொண்ட தொகுப்பு), புளியமரம் (12 சிறுகதைகள்), தயாளனின் குறும்பாக்கள் இரு தொகுப்புகளும் ஜூலை மாதம் லண்டனிலும் ஒக்டோபர்

மாதம் மட்டக்களப்பு, திருகோணமலை, கரவெட்டி, கொழும்பிலும் வெளியிடப்பட இருக்கிறது).

முகநூல் நண்பர்களுக்கு இவரது குறும்பாக்களும், கவிதைகளும் இவரது பெயரும் தெரியும்.

**புளியமரம்**

**2017 ஜுலை தினக்குரலில் பிரசுரமான கதை இது. என் இளமைக் காலத்தை நினைவூட்டிய ஒரு ஆவணம்.**

**கொடிகாமத்தை விட்டு பஸ் புறப்பட்டு விட்டது.**

**என ஆரம்பித்து**

**புளியமரம் இறந்தாலும் புளியடி வாழ்கிறது.**

**என்று முடியும் இக்கதையை வெளிவர இருக்கும் இதே பெயரிலான.**

**புளியமரம் சிறுகதைத் தொகுதியில் வாசிக்கத் தயாராகுங்கள் நண்பர்களே.**

இந்நூலும் இவரது குறும்பாக்களும் **மகுடம்** பதிப்பக வெளியீடுகளாகும். இலங்கையின் வெளியீட்டு விழாக்களையும் **மகுடமே** ஒழுங்கு செய்கிறது.

வடமராட்சி, கரவெட்டியின் மேலுமோர் புலம் பெயர் ஆளுமை இவர்.

**" நான் எழுதும் கதைகள் ஒரு சிறு பொறியின் வெளிப்பாடே"** என்று கூறும் ஆங்கில,தமிழ் படைப்பாற்றல் வாய்ந்த இவரது எழுத்துப்பணி தொடர வாசகன் எனது பிரியமான வாழ்த்துக்கள்.

**22 May 2018**

# பிடித்த சிறுகதை 106

இவரது பெயரிலுள்ள கேரள எழுத்தாளர் எனக்கு மிக மிகப் பிடித்தாமானவர். அவர் முற்போக்கு எழுத்தின் அசல் என சுந்தர ராமசாமியால் சிலாகிக்கப் பட்டவர்.

இந்தப் பெயர் பலருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியதுண்டு. அவர் கேரள வைக்கம் எனும் ஊரைச் சேர்ந்தவர். இவரது வாப்பா கேரளத்தைச் சேர்ந்தவர். உம்மா மினுவாங்கொடை கல்லொளுவையைச் சேர்ந்தவர். இவருக்கு மலையாள மொழியும் தெரியும்.

2004 ம் ஆண்டு வ.கி.மா. கல்வி அமைச்சில் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய மினுவாங்கொடையை வாழ்விடமாக கொண்ட கொடிகாமத்தைச் சேர்ந்த நண்பர் இராசையா மூலம் தனது 2003 ல் வெளிவந்த தலைமுறை இடைவெளி தொகுதியை,

**எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த நேசங்களுடன்.** எனக் கையொப்பமிட்டு அனுப்பியிருந்தார்.

இவர் கதை பற்றிய இப்பதிவை எழுதும்போது அமரர் இராசையாவின் நினைவைத் தவிர்க்க

முடியவில்லை.

**மு.பஷீர்**

23/3/40 இவர் பிறந்ததேதி. கொழும்பு மோதரவில் இவர் பிறந்தார். இவரது இயற்பெயர் அப்துல் கபூர். நீர்கொழும்பு பெரியமுல்ல இவரது மனைவியின் ஊர்.

நீர்கொழும்பு இவரது இலக்கிய முயற்சிகளுக்கு உற்சாகம் கொடுத்த பிரதேசம்.முருகபூபதி, ரத்தினவன்ச தேரர் இவரது இலக்கிய நண்பர்கள்.

மல்லிகை நீர்கொழும்பு சிறப்பிதழ் வெளியிட இவர் உழைத்தார்.

ஜீவனோபாயத்திற்காக பீடித்தொழிலும் செய்தார். வைக்கம் முகம்மது பஷீர் போலவே இவரும் எளிமையானவர். கலாபூஷண விருது பெற்றவர்.

எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது. பாத்துமாவுடைய ஆடு, இளம் பருவத்துத் தோழி போல இல்லாவிட்டாலும். எம்மை பிரதிபலிக்கும் பல கதைகளை அவர் தந்திருக்கிறார்.

**இவரது நூல்கள்**

மீறல்கள் (1996,மல்லிகைப் பந்தல்), தலைமுறை இடைவெளி, (2003,முகுந்தன்), நிஜங்களின் வலி (2005, மல்லிகைப்பந்தல்), இது நித்தியம் (2013.கொடகே).

**விசுவாசம்**

**99ல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடதப்பட்ட தேசிய ரீதியிலான சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்று மல்லிகை ஆண்டு மலர் ஜனவரி- 2000 ல் பிரசுரமான கதை இது.**

**அடுக்குமாடி கட்டிடங்கள் கம்பீரமாய் உயர்ந்து**

**விண்ணைத்தொட்டன.**

**எனத் தொடங்கி**

**தள்ளாடிக்கொண்டே கிழவர் வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்.**

**என்று முடியும் விசுவாசம் கதையை இவரது தலைமுறை இடைவெளி தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

கல்லொளுவை மினுவாங்கொடையில் வாழும் இவரது கதைகள் பற்றிய நாவலாசிரியர் இளங்கீரனின் கூற்று. **"மு.பஷீர் ஒரு சிறந்த படைப்பாளி என்பதை அவரது சிறுகதைகள் நமக்கு இனங்காட்டுகின்றன."**

எம்.எச். எம்.ஷம்ஸ் அவர்களின் கூற்று. **"அறுபதுகளில் இலக்கியப் பாதம் ஊன்றிய இவர், கலைத்துறையின் எல்லா முனைகளையும் தொட்டவர்."**

இது போதும்.

**22 May 2018**

**Dear Nanthiny Xavier vanakam.**

**I met Arul and he gave me a copy of your book.**

நெல்லிமரப் பள்ளிக்கூடம் மிக்க நன்றி. எளிமையான கதை சொல்லல். நீண்ட வர்ணனைகள் இல்லாதது பெரும் ஆறுதல். இயல்பாகவே உங்களுக்கு கதை சொல்லும் ஆற்றல் வாய்த்திருக்கிறது வாழ்த்துக்கள்.

ஆகச் சிறிய கதை மனிதம்தான் எனக்குப் பிடித்தது. அந்த சிறுவனின் இறுதி வார்த்தைகள் இன்னும் காதுக்குள் ஒலிக்கின்றன. ஒற்றைத் தென்னையும் நல்ல கதை. நெல்லிமரப் பள்ளிக்கூடம் கதையில் கதாநாயகனின் பெயர் கடைசிவரை சொல்லப்படவில்லை. மற்றைய பாத்திரங்கள் எல்லாமே பெயருடன் உலவின. நல்ல உத்தியுடன் புனையப்பட்ட கதை. என்னை நினைத்து நூலை அனுப்பியதற்கு மறுபடியும் நன்றி. அன்புடன். ............

எனது மின் அஞ்சலுக்கு மேற்படி குறுஞ்செய்தி இவரிடமிருந்து வந்திருந்தது. தோழர் அருள் மூலம் ஒரு முறை எனது நூலை அவரிடம் சேர்ப்பித்திருந்தேன். உண்மையில் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

என் ஆரம்ப கால ஆதர்ச எழுத்தாளரிடமிருந்து வாழ்த்துச் செய்தி. என்னை ஒரு நல்ல எழுத்தாளனென்று அங்கீகரிக்காதவர்கள் இன்னும் இருக்கும் சூழலில் இப்படியுமா.....?

**அ.முத்துலிங்கம்**

கொக்குவிலில் 10/1/ 1937 பிறந்த அப்பாத்துரை முத்துலிங்கம் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவன். கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி. இவர் ஒரு பட்டயக்கணக்காளரும் கூட.

இலங்கையில் மட்டுமல்ல உலகம் பூராவும் கடமையாற்றியவர். 20 வருடங்கள் உலகவங்கியிலும், ஐக்கிய நாடுகள் அவையின் **OPS** பிரிவிலும் கடமையாற்றி தற்போது கனடாவில் குடும்பத்தோடு வாழ்கிறார்.

இவரது முதற்கதை **ஊர்வலம்** 58 ல் தினகரனில் கைலாசபதி அவர்களால் பிரசுரிக்கப்பட்டதாக **அக்கா** தொகுப்பின் **என் கதைகள்** என்னும் உரையில் இவர் குறிப்பிடுகிறார். இல்லை இவர் எழுதிய முதற்கதை **புதுமணமும் புதுவாழ்வும்** 57 ல் சுதந்திரனில் பிரசுரமானதாக செங்கை ஆழியான் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிறார். 1964க்கு பின் எழுத்துத் துறையில் ஒதுங்கியிருந்த இவர், 95ல் இருந்து மீண்டும் எழுந்து அசுரவேகத்தில் எழுதிவருகிறார். சிறுகதை, நாவல், நேர்காணல், சினிமா, நாடக விமர்சனம் என இவர் எழுதாத பக்கங்களே இல்லை.

இவரது நூல்களைப் பட்டியலிட எனது இந்தப் பக்கம் போதாது. தமிழக காலச்சுவடு, உயிர்மை, தீராநதி என்பன இவரது எழுத்துக்குக் களம் கொடுப்பவர்கள்.

இதுவரை பதினைந்துக்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகளும் இரண்டு நாவல்களும், ஒன்பது கட்டுரைத் தொகுப்புகளும் வெளியிட்டுள்ளார்.

ஜெயமோகன், ராமகிருஸ்ணன் போன்றோர் இவரது எழுத்துக்களை சிலாகிக்கின்றனர்.

கனடா இலக்கியத் தோட்ட அமைப்பாளர்களில் இவர் முக்கியமானவர். இயல் விருது வழங்கலில் இவரது பங்களிப்பு நிறைய உண்டு.மன்னிக்கவேண்டும். இவர் பற்றி முழு விபரம் அறிய விக்கிபீடியாவுக்கு செல்லுமாறு நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதில் இவரது நூல் விபரமும், இவர் பெற்ற பரிசு விபரமும் அடங்கி இருக்கிறது.

பக்குவம்

**61ம் ஆண்டு தினகரனில் வந்த கதை இது. 65ல் இக்கதையை நான் வாசித்திருப்பேன்.**

**“கந்தர்மடம் செல்லம்மா”**

**“அஞ்சு”**

**என ஆரம்பித்து**

**இன்னும் முடியவில்லை.**

**என்று நிறைவடையும் பக்குவம் எனும் இக்கதையை 1964 ல் வெளிவந்த இவரது முதற் தொகுப்பான அக்கா வில் வாசியுங்கள். இவரது முழுக்கதைகளும் அடங்கிய தொகுப்பிலும் வாசிக்கலாம் நண்பர்களே.**

மிகவும் பிரியமுடன் இவரது எழுத்துகளை வாசிக்கும் எனக்கு இவர் தற்போது எழுதும் எழுத்துகளில் சிறுகதை, கட்டுரை என்பதை பிரித்தறிய முடியாது இருக்கிறது.

இது எனது குறைபாடோ...?

**23 May 2018**

பிடித்த சிறுகதை 108

**எ**ன்னை **எடி** என அழைக்கும் ஒரு அன்பு உள்ளம். காரணம் நந்தினி நான். இவரும் என்போல் பெண் பெயரில் அறிமுகமான ஒருவரே.

நான் முந்தைய பதிவுகளில் குறிப்பிட்டது போல். வடமராட்சியின் மற்றுமோர் ஆளுமை. அதிலும் புலம் பெயர் ஆளுமை.

**எஸ்.ரஞ்சகுமார்**

19/12/59 ல் கரவெட்டி மேற்கில் பிறந்த இவர் கூடுதலாக தென்னிலங்கை வாழ்வை மேற்கொண்டவர். பல புனைபெயர்களில் இவர் எழுதியிருக்கிறார். **ஜனனி** என்பது அதில் ஒன்று. **அலை** யின் மூலமே இவர் அறிமுகமாகினார்.

பின்னர் **புதுசு, திசை, சரிநிகர், வீரகேசரி** ஆகியவற்றில் கவிதை, கதை, கட்டுரைகளை எழுதினார்.

நவீன அச்சுக்கலைத் தொழில் நுட்பத்தில் துறை போந்தவர். இவரது சேவையை பதிப்பகத் திணைக்களத்திற்காக பெற்றுக்கொண்டோம்.

85 களுக்குப் பின்னான காலத்தில் வெளிவந்த நூல்களின் பின்னணியில் இவரது உழைப்பு

நிறையவே இருந்தது.

**இவரது நூல்**

ஏழு கதைகளே மோகவாசல் தொகுப்பில் அடங்கி யுள்ளது. அது மூன்று பதிப்புகள் கண்டது. 1. யதார்த்தா -1989, 2. தேசிய கலை இலக்கியப் பேரவை - 1995, 3. கொழும்பு மீரா - 2006.

சுருக்கும் ஊஞ்சலும, கபரக் கொய்யாக்கள், காலம் உனக்கொரு பாட்டெழுதும், கோசலை. அரசி, கோளறு பதிகம், மோகவாசல் ஆகிய 7 கதைகள் இத்தொகுப்பில் அடங்கி உள்ளன.

இன்னும் இரண்டொரு கதைகளை புனைபெயரில் எழுதியிருந்தார். அவரது எழுத்து நடையிலிருந்து அதைக் கண்டு கொண்டேன். ஆனால் அவர் உறுதிப்படுத்தாமல் என்னால் அதைச் சொல்ல முடியவில்லை.

**நவகண்டம்** என்று ஒருகதை 2010 ல் அவுஸ்த்திரேலியாவில் நடத்தப்பட்ட சர்வதேச சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது அதை நான் வாசித்துள்ளேன்.

திசை நடத்திய ஒரு போட்டியிலும் இவர் பரிசு பெற்றுள்ளார். திசையில் **ஆட்கொல்லி** என்னும் இவரது குறுநாவல் 89ல் தொடராகப் பிரசுரமாகியது.

ரஞ்சகுமார் இப்போது சிட்னியில் வாழ்கிறார். இலங்கையில் இருக்கும்போதே இடைக்கிடை சந்திப்போம். இப்போது முகநூலில் இடைக்கிடை மோதிக்கொள்கிறோம். அவ்வளவே.

சினிமா, நாடக, இசை என இவரது கவனம் நெடும் பயணம் கொண்டது. 87ஆக இருக்கலாம் கொழும்பில் சந்தித்த ஒரு தருணம், சுந்தர ராமசாமியின் முன்னுரையுடன் கூடிய **மாதவன் கதைகள்** என்ற நூலை எனக்கு இவர் அன்பளிப்பாகத் தந்தார். அது என்னிடம் இவர் நினைவாக இருந்தது. 90 திருகோணமலை இடம்பெயர்வின் போது அது தவறிப்போய் விட்டது. எவ்வளவோ இழந்தேன் அதில் இதுவும்.

மீந்தது உடுத்தியிருந்த உடுப்பே..

**காலம் உனக்கொரு பாட்டெழுதும்**

**அலை 1986-12 இதழில் பிரசுரமான கதை இது.**

**வெகு நாட்களுக்குப் பிறகு இன்று குளியல்....**

**என ஆரம்பித்து**

**எல்லையற்ற அந்தகாரம் இவனைச் சூழ்ந்தது.**

**என்று முடியும் இக்கதையை மோகவாசல் சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவ்விடத்தில் உங்களுக்கும் தெரிந்த ஒரு விடயத்தைக் குறிப்பிடுகிறேன்.

**பேரா.சிவத்தம்பி** அவர்கள் ரஞ்சகுமாரை கண்டு பிடிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னரே அவரை நாம் வாசிக்கத் தொடங்கிவிட்டோம். அவரது ஆளுமையைத் தெரிந்துகொண்டு விட்டோம் என்பதே அது.

**23 May 2018**

இவர் பற்றி நான் அறியத் தொடங்கியது **டானியல்** எழுதிய **பஞ்சமர்** நாவலின் முன்னுரையின் மூலமே. படிப்படியாக இவரது ஆளுமை பற்றி நான் அறிந்த போது இவர் ஆக்க இலக்கியத் துறையை விட்டு விலகியிருந்தார். ஆயினும் இவரது துறைசார் பணிகள் மூலம் எம் போன்றவர்கள் மத்தியில் அழியாத் தடம் பதித்தவராக வாழ்கிறார்.

**பேரா.சி.தில்லைநாதன்**

2/5/ 37. ல் சுன்னாகத்தில் பிறந்த சின்னத்தம்பி தில்லைநாதன், பேராதனைப் பல்கலைக்கழக இளமாணிபட்டம் பெற்றவர். பின்னர் முதுமாணிப் பட்டம் பெற்றவர். **தினகரன், ஒப்சேவர்** பத்திரிகைகளின் ஆசிரியர் பீடத்தில் இருந்தவர். வித்தியோதயா பல்கலைக்கழகத்தில் இணைந்து, பின்னர் 1965ல் பேராதனைப் பல்கலைக்கழக நிரந்தர தமிழ் விரிவுரையாளராகி, தமிழ்த்துறைத் தலைவராகி, படிப்படியாக பேராசிரியராகி இப்போது ஓய்வு பெற்றுள்ளார்.

சிந்தனையாளர், கவிதை, சிறுகதை, ஆக்க இலக்கிய கர்த்தா, ஆய்வறிவாளன் என பல்வகையில் இவர்

போற்றப் படுகிறார். துறைசார் பணிகள் மூலம் எம் போன்றவர்கள் மத்தியில் அழியாத் தடம் பதித்தவராக வாழ்கிறார்.

நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் சில ஆய்வு நூல்கள் நாடகங்கள் கவிதைகள், எழுதிய இவர் நாடகங்களையும் மேடையேற்றி உள்ளார்.

மணிவிழா கண்டு, பவழ விழா கடந்து வாழும் இவரது ஆக்க இலக்கியப் பணி தடைப்பட்டது. வருத்தமே. ஆயினும் என்ன? இவரது ஆய்வுகள் இவர் பெயர் சொல்லுகின்றனவே.

மனப்புண்

**பேராதனைப் பல்கலைக்கழகம் 1958ல் நடத்திய இரண்டாவது சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு தங்கப் பதக்கம் வென்று மு.தளயசிங்கம் ஆசிரியராக இருந்த இளங்கதிர் 59- 60 ல் பிரசுரமான கதை இது.**

**இரண்டாம்- பரிசு எப்படி இருக்கிறது உலகம்? சுசீலா சின்னத்துரை-**

**மூன்றாம் பரிசு அழைப்பிதழ் பேரா.அ.சண்முகதாஸ்.**

**1957ல் பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய முதலாவது சிறுகதைப் போட்டியில் இவரது வாழ்க்கைச் சுழலில் கதை இரண்டாம் இடம் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றது. பவானி ஆழ்வாப்பிள்ளையின் அர்ப்பணம் மூன்றாம் இடம் மதிப்பிற்குரிய நூல் பரிசு பெற்றது.**

**அங்கயற்கண்ணி என தமிழ் சங்க தலைவர் அறிமுகப் படுத்தியதற்கு ஏற்ப...**

**எனத் தொடங்கி**

**என் மனம் ஒரு பூரணத்துவ நிலை அடைந்தது.**

**என்று முடியும் இக்கதையை இளங்கதிர் 59-60ல் வாசியுங்கள் நண்பர்களே.**

இவருக்கு இலங்கை கலாசார அமைச்சு **இலக்கியச் செம்மல்** பட்டத்தை 93ல் வழங்கியது.

ஜனாதிபதி வழங்கும் **கலாகீர்த்தி** விருது 94ல் கிடைத்தது.

இந்த விருத்தாப்பிய வயதிலும் தளராது முற்போக்குச் சிந்தனையுடன் வாழும் இவரது நீண்ட ஆயுளுக்கு வாழத்துவோம்.

**24 May 2018**

இவரிடம் யாராவது புத்தகம் இரவல் கேட்டால். **“சாய் நான் மௌத்தாப் போனபிறகு என்ரை மனிசீட்டை வந்து வாங்கிட்டுப்போ.”** என்று சிரிக்காமல், சீரியஸாக கூறுவார். அவ்வளவு புத்தகப்பிரியர்.

சிலகாலத்துக்கு முன் எனக்கொரு மூக்குக் கண்ணாடி பிறேமை அன்பளிப்புச் செய்திருந்தார். இப்போது அது இல்லை புதிய கண்ணாடி போட்டிருக்கிறேன்.

இவருக்கும் எனக்குமுள்ள பாரிய வேறுபாடு இலக்கிய ஆளுமைகளை தேடித்தேடி சந்திப்பதும் உறவைப் பேணுதலும்.

15 வதிலேயே பித்தனோடும், எஸ். பொ. FXC. யோடும் உறவு. தமிழக எழுத்தாளர்கள் **சி.சு. செல்லப்பா** முதல் இன்று எழுதும் **ஜெயமோகன்,** மற்றும் **ஆப்தீன்** வரை நல்லுறவு. இந்தப் பழக்கம் என்னிடமில்லை.

**S.L.M. ஹனிபா**

ஹனிபா மாமா என்று ஆண், பெண் படைப்பாளிகளால்

அன்போடு இப்போது அழைக்கப்படும் ஓட்டமாவடியில் வாழும் ஹனீபா மீராவோடையில் 1946 ல்பிறந்தவர்.

தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் **எஸ்.பொ** வின் சிபார்சுடன் அறிமுகமாகியவர்.

**இன்ஸான்,இளம்பிறை, சுதந்திரன், சுடர், வீரகேசரி, சிந்தாமணி, பூரணி, கணையாழி, சரிநிகர்** ஆகியவற்றில் கதைகள் எழுதியவர்.

“50க்கு மேற்பட்ட வருடங்கள் எழுத்துத் துறையில் இருந்தாலும் 50 கதைகள் கூட எழுதவில்லை. எழுத்தாளனாக இருப்பதை விட வாசகனாக இருப்பதில் திருப்தி அடைகிறேன்” என்று கூறுபவர்.

எஸ் பொ. உபாசகர். அதனால் இவரது நட்புப் பட்டியலிலும் வாசகப் பட்டியலிலும் முற்போக்கர் யாரும் இல்லை.

**டானியல்** முதல் **நந்தினி சேவியர்** வரை அவர்களின் கதைகள் பற்றி கருத்தாடுவதைத் தவிர்த்து வருபவர்.

அவருக்கு இந்திய எழுத்தாளர்களே கொடுமுடிகள். அவர்களைக் கண்டால் காதலாகி, கசிந்து கண்ணீர் மல்குவார். அப்படி ஒரு சுபாவம்.

இவர் மாகாணசபை உறுப்பினராக இருந்த காலத்தில் 89ல் முதன் முதலாக இவரைக் காணக்கிடைத்தது.

25/-இலங்கை விலையிலான **அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்** தொகுதியை 93 டிசம்பரில் இவருக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தேன்.

1994 ல் அலஸ்தோட்டம் ஓசானிக் கோட்டலில் நடந்த மூன்று நாள் இலக்கிய அமர்வுக்கு வந்திருந்த போது 100/- தந்து அந்த கடனை மன்னிப்போடு தீர்த்துக் கொண்டார். இரண்டாவது தொகுதியை ஓட்டமாவடியில் வைத்து இவரிடம் 2011 ல் கையளித்தேன்.

நுஃமானுக்கும் இன்னொரு பிரதியை பணம் தந்து

பெற்றுக்கொண்டார். ஆப்தீனின் பக்கத்தில் எனது கதை ஒன்றைப் பற்றி எழுதுவதாக கூறினார் அது சாத்தியப்படவில்லை. இருவருமே நூல் பற்றி எழுதவில்லை. அது பற்றி நான் அக்கறைப்படாது இருந்து விட்டேன். ஆயினும் ஹனிபாவின் மீது நான் ஆழ்ந்த நட்புடையவன். அவரது திறமையை மதித்து 2004 வடக்குக் - கிழக்கு மாகாண ஆளுனர் விருதுக்கு அவரின் பெயரை சிபார்சு செய்தேன். வரமறுத்த அவரை வலுக்கட்டாயமாக அழைத்து விருது பெறச் செய்தேன். இவர் பற்றிய குறிப்பையும் வழமைபோல் நானே எழுதினேன்.( இது ஒன்றும் தற்புகழ்ச்சி அல்ல வரலாறு)

சிறந்த விளையாட்டு வீரரான இவர் விவசாயப் போதனாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். தொழில் நிமித்தம் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றவர். அரசியலில் அறம் பிழைத்தல் கண்டு தூர விலகியவர்.

**இவரது நூல்கள்:**

மக்கத்துச் சால்வை (15சிறுகதைகள், 1992, கோவை லில்லி தேவசிகாமணி விருது,இலங்கை சாகித்திய விருது.). அவளும் ஒரு பாற்கடல் (25 சிறுகதைகள,2006, காலச்சுவடு).

2011 ல் தகவம் நிறுவனம் இவரை மூத்த எழுத்தாளராக விழா எடுத்து கௌரவித்துள்ளது.

முற்போக்கு முரண்பாடானவாராக இருந்த போதிலும் **மல்லிகை** இவரை அட்டைப்படமாக்கி உள்ளது.

இவரது 11ம் ஆண்டு தமிழ்பாடப் புத்தகத்திலிருந்த **மக்கத்துச் சால்வை** கதையை பி.சி.110 ஆக நான் எழுதுவேன் என நினைத்திருப்பீர்கள். ஆனால் இது வேறு.

**கடுகு**

**1988 ல் பிரசுரமானது இக்கதை. தனக்குப் பிடித்த நான்கு கதைகளில் ஒன்றாக இக்கதையை இவர்**

**குறிப்பிட்டுள்ளார்.**

**மற்றைய கதைகள். மக்கத்துச் சால்வை. மருத்துவம். மருமக்கள் தாயம்.**

**வாப்பா உங்களுக்கு கதெ தெரியுமா..?**

**எனத் தொடங்கி**

**என்ன செய்யே எனக்கிட்ட துவக்கிருந்தா நானும்**

**"?"**

**என்று முடியும் கடுகு எனும் இக்கதையை இவரது இரண்டு தொகுதிகளிலும் வாசிக்கலாம் நண்பர்களே.**

இறுதியாக ஒரு வார்த்தை

"போடா நீ என்னை ஒரு இலக்கியகாரனாக நினையாதிருக்கலாம். ஆனால் எனக்கென்று ஒரு இலக்கிய ரசிகர் குழு இருக்கிறது. அவர்கள் என்னோடு சேர்த்து உன்னையும் ஒரு இலக்கியகாரனாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்......சரியா?."

**24 May 2018**

இவரது பெயர் அறிமுகமானது தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில். இவரது பெயரை தமிழக அரசின் அரசியல்வாதி ஒருவர் அடிக்கடி நினைவூட்டிக்கொண்டிருக்கிறார். மலையக மக்களின் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலான தாங்கொணாத வேதனை நிறைந்த வாழ்வை கலாரீதியாக சித்தரிப்பவை இவரது படைப்புகள்.

**சி.பன்னீர்ச்செல்வம்**

18/10/48 ல் புதுகோட்டை மாவட்டத்தில் பிறந்த இவர் 25 ஆண்டுகள் கண்டியில் வாழ்ந்தவர். 1973 ல் சிறிமா- சாஸ்த்திரி ஒப்பந்தப் பிரகாரம் இந்தியா திரும்பி இப்போது மதுரை மாவட்டத்தில் வாழ்கிறார்.

இவர் தன் ஆரம்பக் கல்வியை கண்டி உடுஸ்பத்துவ முஸ்லீம் வித்தியாலயத்தில் கற்றார்.

வீரகேசரி சிறுகதைப் போட்டியில் **தாயின் மடியில்** எனும் கதைக்கு பரிசு பெற்றவர்.

இலங்கை இந்தியப் பத்திரிகைகள் அனைத்திலும்

எழுதிய இவர் இன்னும் சலிக்காது எழுதுகிறார்.

75க்கு மேற்பட்ட சிறுகதைகள், 2 குறுநாவல்கள், பல கவிதைகள், 1 காவியம்1 நாவல் என்பன இவரது இதுவரையான வெளிப்பாடுகள்.

**கலைமகள்** நடத்திய கி.வ.ஜ. நூற்றாண்டு நாவல் போட்டியில் இவரது **விரல்கள்** நாவல் பரிசு பெற்றது.இலங்கையில் இருந்த காலத்தில்(68) நாடகப்போட்டியிலும் பரிசு பெற்றிருக்கிறார். **இலவுகாத்த கிளி,ஜென்மபூமி, காலைப்பூக்கள், இவர்கள் பிரசவிக்கிறார்கள், தாயின் மடியில்** என்பன இவரது சிறப்பான கதைகள்.

**இவரது நூல்கள் :**

**திறந்த வெளிச் சிறைச்சாலைகள். (சிறுகதைகள்). விரல்கள் (நாவல்,அகரம், வெளியீடு), தேயிலைப்பூக்கள் (காவியம், அகரம் வெளியீடு).**

**காலைப் பூக்கள்**

**2/7/66 சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**சந்திரனை வரவேற்பதற்காக இயற்கை கன்னி......**

**என ஆரம்பித்து**

**என் கையிலிருந்த இளந்தளிர்கள் ஒவ்வொன்றாக கீழே உதிர்ந்தன.**

**என்று முடியும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தமிழகம் திரும்பினாலும் தான் வாழ்ந்த மலையகத்தையே படைப்புக் களமாக்கி எழுதிவரும் இவர், இந்தியாவில் **முதுமாணிப் பட்டம்** பெற்றவராகவும் இருக்கிறார்.

**25 May 2018**

## பிடித்த சிறுகதை 112

1988 ல் நான் ஒரு கொழும்பு தனியார் நிறுவனத்தில் வேலை. இவரது சிறுகதைத் தொகுதி வெளிவந்திருந்த நேரம். யாரிடம் தொலைபேசி இலக்கம் பெற்றாரோ அறியேன் என்னுடன் பேசினார். வெளியீட்டு நிகழ்வுக்கு வந்திருந்த அ.யேசுராசா தனக்குப் பிடித்த எழுத்தாளர்களில் என்னையும் ஒருவராகக் குறிப்பிட்டதாகக் கதையோடு கதையாகப் பேசினார்.

நீண்ட இடைவெளி....

2011ல் பாண்டிருப்புச் சென்று **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** தொகுப்பை இவரிடம் கொடுத்தேன் அன்போடு பெற்றுக் கொண்டார்.

சசியின் பிரதியையும் இவரிடமே கொடுத்தேன். சசி கதவைத் திறக்காமல் கதவுக்கு மேலால் அதைப் பெற்றுக் கொண்டதாகக் பிறிதொரு சமயம் என்னிடம் கூறினார்.

எனது **தவனம்** கதை நல்ல கதையென இவர் எங்கோ ஒரு இடத்தில் பதிவிட்டிருந்ததை நான் பார்த்தேன்.

**உமா வரதராஜன்**

19/11/56 ல் பாண்டிருப்பில் பிறந்தவர். உடையப்பா மாணிக்கம் வரதராஜன். இலக்கிய வாசகர்களுக்கு அறிந்த பெயர் உமாவரதராஜன்.

பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி. தொடர்ந்து மட்டக்களப்பு சிவானந்தா, வெஸ்லி உயர்தரப் பாடசாலை, கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் கல்வி.

அப்பாவின் வாசிப்பு ஆர்வம் தொற்றிக்கொள்ள இலக்கிய நாட்டம். **சசி, நு.ஃமான், மருதூர்கொத்தன்** போன்ற ஆளுமைகளோடு தொடர்பு. கல்முனை எழுத்தாளர் சங்கத்தோடு இணைந்திருந்தார்.

25 வருடங்களுக்கு மேலாக **சிங்கர்** நிறுவனத்தில் உயர் அதிகாரியாக வேலை. இப்போது ஓய்வு.

தொலைக்காட்சி நிகழ்வுகளைத் தயாரித்து வழங்குதல் பத்திரிகை வார இதழ்களில் இலக்கியப் பக்கங்களை செய்தல் என இடையறாது இயங்குகிறார்.

1972 ல் மீலாத்கீரனுடன் இணைந்து **காலரதம்** எனும் சஞ்சிகையைக் கொண்டு வந்தார். இரண்டு இதழ்களே வெளிவந்த அதில் இரண்டு கதைகளை எழுதினார்.

**அந்தப் பார்வை அப்படித்தானிருந்தது, ஏணிகள் சரிவதில்லை** என்பதே அந்தக் கதைகள். இவை அவரது தொகுதியில் இடம் பெறாத கதைகள்.

இவர் இலக்கிய விமர்சகர், திரைப்பட விமர்சகர், கவிஞர், நாவலாசிரியர் என அறியப்பட்டவர்.

**மீண்டும் மனோகரி** என்றொரு கவிதை. **ஒரு மரங்கொத்திப் பறவைபோல் மீண்டும் மனோகரி** என்று அந்தக் கவிதை தொடங்கும். அக் கவிதை எனக்குப் பிடித்தமானது.

இவரது கதைகள் ஒவ்வொன்றும் நான் பெயர் சொல்லாவிட்டாலும் இவர் பெயர் சொல்லும். அன்ரனி பால்ராஜ் இவரது புனைபெயர்.

**சுஜாத்தா, சுந்தரராமசாமி, பேரா.சிவத்தம்பி, நு.்மான், யேசுராசா, ரமீஸ் அப்துல்லா,ஜெயமோகன்.**போன்றவர்களோடு, இன்னும் பலர் இவரது கதைகளைப் போற்றுகின்றனர்.

**இந்தியா** டுடே இலக்கிய ஆண்டு மலரில் 94-95ல் வெளிவந்த **அரசனின் வருகை** கதை இவருக்கு பெரும் புகழ் சேர்த்தது.

**இவரது நூல்கள்**

உள்மன யாத்திரை(13சிறுகதைகள்,1988,அன்னம்), மூன்றாம் சிலுவை(நாவல்,2009), உமாவரதராஜன் கதைகள் (16 கதைகள் 2011. காலச்சுவடு).

உள்மன யாத்திரை தொகுப்புக்கான வ.கி.மா நூல் விருது 2008 இவருக்குக் கிடைத்தது.

அதே வருடம் இவர் விரும்பாத போதும், **தமிழ்மணி** எனும் பட்டமும் இவருக்குக் கிடைத்தது.

சில வருடங்களுக்கு முன் **வியூகம்** என்றொரு சஞ்சிகையை இவர் வெளியிட்டார். **களம்** சஞ்சிகையிலும் இவரது பங்களிப்பு இருந்தது.

2010 டிசம்பர் **மல்லிகை** இதழ் இவரது அட்டைப்படத்தைத் தாங்கி வெளிவந்திருந்தது. அட்டைப்படக் கட்டுரையை ஒரு வித்தியாசமான வகையில் **மேமன்கவி** எழுதியிருந்தார்.

**வெருட்டி**

**30/7/96 மூன்றாவது மனிதன் இதழில் பிரசுரமானது இக்கதை.**

**இக்கதையில் வரும் வெருட்டி எனக்கு நன்கு பரிச்சயமானவர். அதுவும் இக்கதை பிடித்தமானதற்கு ஒரு காரணம்.**

**மிகுதியைக் காண வெண்திரைகள் இல்லாமற் போன அரங்குகளில் கரிபடிந்த சுவர்கள் மட்டும் மிஞ்சியிருந்தன....**

**என ஆரம்பித்து**

**அறிவிப்பு பலகையைக் கதவில் அவர்கள் மாட்டி விட்டு வெளியே காவலிருந்தார்கள்.**

**என்று முடியும் இக்கதையை உமாவரதராஜன் கதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

அரசியல் கருத்துகள் இலக்கிய கருத்துகளில் நாம் இருவரும் எதிர்எதிர் அணியினர். ஆனாலும் நமது நட்பு தொடர்கிறது.

என் எழுத்துகள் பசி,பட்டினி, வறுமையை அனுபவித்தவனது எழுத்துகள். நான் ஒரு வறிய தொழிலாளியின் மகன். இதை அவர் அறிவார். அவரது அனுபவங்கள் அவருக்குரியது. அதனை நான் ரசிக்கிறேன் அவ்வளவே.

நெடுங்காலத்திற்குப் பின்னர்தான் பேரா. சிவத்தம்பி உமாவையும் கண்டுபிடித்தார். அது தவிர்க்க முடியாதது.

**25 May 2018**

## பிடித்த சிறுகதை 113

அழகான குரல், பேச்சாற்றல் மட்டுமல்ல நாடகப் பாடல்களை சுவையோடு பாடும் ஆற்றல். நல்ல ஒரு விமர்சகர். பேராசிரியர்.

**தாயகம்** முதலாவது இதழின் வெளியீட்டு விழா மலையகத்தில் நடந்தது. ஹற்றன் அல்லது கண்டி நினைவில்லை. 74 ன் நடுக்கூற்று. தாயகத்தில் வெளிவந்த எனது **ஒரு பகற் பொழுது** கதையை புதுமைப்பித்தனின் **ஒரு நாள் கழிந்தது** கதையோடு அவர் ஒப்பிட்டுப் பேசினார், **"புதுமைப்பித்தனின் கதையோடு நந்தினி யின் கதையை நான் ஒப்பிடுவது தவறு. அவர் சிறுகதை மன்னன். ஆனால் அவரது கதையில் நம்பிக்கை வரட்சி இருந்தது. நந்தினியின் கதையில் அது இல்லை."**

இப்படி அவர் பேசியிருந்தார்.

அவரை முன் சந்தித்த அனுபவமில்லை. அவர் பல்கலைக் கழக விரிவுரையாளராக அப்போது இருந்தார்.

**பேரா. அ.சண்முகதாஸ்**

2/1/40 ல் திருகோணமலையில் பிறந்த அ.சண்முகதாஸ் **அசாத** என்ற புனை பெயரில் கவிதைகளும் எழுதியுள்ளார்.

பகிடிவதை சம்பந்தமாக இப்புனைபெயரில் இவர் எழுதிய கவிதை **பச்சைப் புதிது** இவரது கதை பிரசுரமான இளங்கதிரில் வெளிவந்திருக்கிறது. **தாசன்** என்பதும் இவரது இன்னொரு புனைபெயர்.

தனது ஆரம்பக் கல்வியை தி/புனித சவேரியார் கல்லூரியில் 45ல் கற்ற இவர் பின்னர் வந்தாறு மூலை மகா வித்தியாலயத்திலும், மட்/சிவாநந்தா வித்தியாலயத்திலும் கற்று, பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகினார். 63ல் இவர் தமிழ் சிறப்புப் பட்டதாரியாகினார். ஸ்கொட்லான்ட் எடின்பரோ பல்கலைக் கழகத்தில் கற்று. இலங்கைப் பேச்சுத் தமிழில் வினை வடிவங்கள் என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

1963 ல் பல்கலைக்கழக தற்காலிக விரிவுரையாளராகி படிப்படியாக மேற்பதவிக்கு வந்தவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இவர் விரிவுரையாளராக இருந்துள்ளார். 75 ல் யாழ் வளாகத்தில் இணைந்த இவர் 82ல் மொழித்துறைத் தலைவரானார். யாழ் பல்கலைக்கழகத் தலைவராக சில காலம் கடமையாற்றினார். யப்பான் மற்றும் நைஜீரியா நாட்டில் தொழில்சார் ஆய்வுகளை மேற்கொண்டவர்.

பேராசிரியராக 2008 ல் ஓய்வு பெற்றார். இன்று வாழ்நாள் பேராசிரியர். வருகைதரு விரிவுரையாளர்.

பல ஆய்வு நூல்களின் சொந்தக்காரர்.

இவரும் இவரது மனைவியும் சேர்ந்து பல ஆய்வு முயற்சிகளை, நூல் வெளியீடுகளைச் செய்கின்றனர். (கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்) **வாராவொல்லை** பதிப்பகம் இவர்களுடையதே. இத்திமரத்தாள் மற்றும் டானியலின் **தண்ணீர்** நாவல் இப்பதிப்பக வெளியீடுகளே.

63 ம் ஆண்டு சிறந்த பெறுபேற்றுக்கான ஆறுமுகநாவலர் விருது. 87 ம் ஆண்டு ஆய்வு நூலுக்கான கனகரத்தினம் விருது.யுனஸ்கோ விருது. பல்கலைக்கழக சேவைக்கான வெள்ளிவிழா விருது (இருமுறை) . வ.கிமா ஆளுனர் விருது. சாகித்தியரத்னா விருது பெற்றவர்.

தமிழாராச்சி மாநாடு மற்றும் தமிழ் ஆய்வு சம்பந்தமான உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகளில் இன்றுவரை பங்குபற்றுபவர். மணி விழாக் கண்டவர். மணிவிழா நூலின் பெயர் **சண்முக தரிசனம்** இன்னும் இன்னும் பல சிறப்புகளுக்குரியவர்.

ஆக்க இலக்கியத்தில் தோல்வி கண்டவர்களே ஆய்வு இலக்கியத் துறைக்குப் போனார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மீது முன்னர் சிலரால் வைக்கப்பட்டிருந்தது. அது மீள் பரிசீலனைக்குரியது என்பதை இந்தப் பதிவுத் தொடரை எழுதத் தொடங்கியதின் மூலம் நான் உணர்ந்து கொண்டேன்.

ஒருவர் பேரா.சி தில்லைநாதன், மற்றவர் பேரா.சண்முகதாஸ்.

1962 ம் ஆண்டு பல்கலை வெளியீடாக வந்த செங்கைஆழியான், க.நவசோதி தொகுத்த **கதைப்பூங்கா** தொகுப்பில் நான் பதிவிட்ட பல எழுத்தாளர்களின் கதைளோடு இவர் எழுதிய **ஏமாற்றம்** எனும் கதை இடம் பெற்றிருந்தது. சுவாரசியமான விடயம் தரமான கதையாக இருந்தும் இடமின்மை காரணமாக தொகுப்பில் இடம் பெறாத கதைகளில் பேரா.மௌனகுருவின் **அமைதிக்குப் பின்னே** கதையும் ஒன்று.

**அழைப்பிதழ்**

**பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் நடத்திய இரண்டாவது சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்று, மு.த. ஆசிரியராக இருந்து வெளியிட்ட இளங்கதிர் 1959 - 1960 ல் பிரசுரமான கதை இது. முதற்பரிசு. பேரா.தில்லைநாதன்**

**விரிவுரை முடிந்தவுடன் ஒரு கையில் புத்தகங்களுடனும்..**

**என ஆரம்பித்து**

**ஒரு புன்னகையுடனும் அதனை ஏற்றுக்கொண்டான்.**

**என்று முடியும் அழைப்பிதழ் கதையை இளங்கதிர் 59-60 இதழில் வாசியுங்கள் நண்பர்களே.**

முதற்பரிசு பெற்றவரும், மூன்றாம் பரிசுபெற்றவரும் இன்று பேராசிரியர்கள். பிரசுரிக்கப்படாமல் விடுபட்டவரும் பேராசிரியர்.

ஆக்க இலக்கியத் துறையில் இருந்து இவர்கள் விலகியது துன்பந்தான். ஆனால் அவர்களின் மகத்தான பணிகள் இன்பம் தருபவை. இல்லையா.?

**26 May 2018**

இவரும் ஒரு பட்டதாரி. ஒரு காலம் கவிதை சிறுகதைகளில் ஆர்வமுள்ளவராக இருந்தார். பின்னர் மார்க்க துறையில் ஆர்வமுள்ளவராக மாறி தனது கலாநிதிப் பட்டத்தை இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் சூபித் தத்துவத்திற்காகப் பெற்றுக் கொண்டார்.

**எம்.ஏ.எம். சுக்ரி**

24/ 6/ 40ல் மாத்தறையில் பிறந்தவர். கொழும்பு சாஹிராவின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி. எடின்பரோ பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தற்போது பேருவளை ஜாமிய்யா நளீமியா பணிப்பாளர்.

ஆக்க இலக்கியத் துறையில் இருந்தபோது நல்ல படைப்புகளைத் தந்தவர். குறைந்த அளவேயானாலும் நிறைவான படைப்புகள் அவை.

1964 ல் **யூ.எல் தாவூத் ஸபீனா** பதிப்பகத்தால் வெளியிட்ட முஸ்லீம் சிறுகதை மலரில் இவரது **தலாக்** எனும் கதை சேர்க்கப்பட்டுள்ளது.

பேரா.கைலாசபதி, பேரா. சிவத்தம்பி ஆகியோருடன் நெருக்கமான தொடர்பில் இருந்தவர். ஆக்க இலக்கியத்தை விட்டு விலகினாலும் இஸ்லாமிய ஆய்வு, இஸ்லாமிய மதச்சிந்தனை பற்றிய எழுத்துகளில் தனது கவனத்தைச் செலுத்தினார்.

**நூல்கள்**

காலத்தின் அறை கூவலும் முஸ்லிம்களின் பணியும் (1969), நளீம் ஹாஜியார் வாழ்வும் பணியும்(1993).

போன்ற பதினொரு நூல்களை எழுதி வெளியிட்டார். இன்றும் சோர்வில்லாமல் சிந்திப்பதும் எழுதுவதுமாக வாழ்கிறார்.

**வாரிசு**

**இது இவரது முதற்கதை. பல்கலை வெளியீடாக வந்த கலைப்பூங்கா தொகுப்பில் (1962) பிரசுரமான கதை இது.**

**“ஐயா புண்ணியம் உண்டாகும்....**

**ஏதும் தாங்க...”**

**எனத் தொடங்கி**

**அந்தக் கலைக்கு அவள் தான் வாரிசு.**

**என்று முடியும் வாரிசு கதையை கலைப்பூங்கா தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

சுக்ரி அவர்களின் பெயர் என் வாசிப்பின் ஆரம்பகாலத்தில் அறிமுகமானது. அவர் பணிப்பளராக இருப்பதும் நானறிந்ததே.

ஆனால் அவரைப் பார்த்ததும் இல்லை. பேசியதுமில்லை. எனது நண்பர்கள் அவரைச் சந்திப்பதாகவும், பேசுவதாகவும் இன்று குறிப்பிட்டார்கள்.

மகிழ்ச்சியான செய்திகள் அவை.

**26 May 2018**

இவரை எனக்கு மல்லிகை எழுத்தாளராக தெரியும். மல்லிகை எழுத்தாளர்களோடு நாம் எட்டியே பழகினோம். இவரது கதைகளில் வரும் நீர்கொழும்பு பேச்சு வழக்கு எனக்கு புதிதாக இருந்தகாலம் ஒன்றிருந்தது. எண்பதாம் ஆண்டளவில் நான் அந்தத் தமிழை பேசவேண்டியும் கிரகிக்க வேண்டியும் ஏற்பட்டது. நான் ஒரு இறால் கொம்பனியில் வேலையாக இருந்தேன். இவரது கதைகளை வாசித்ததால் அது எனக்கு இலகுவாக இருந்தது. நானும் அத்தமிழில் ஐந்தாறு வருடம் **"என்னடா செல்லிய"** என்று பேசினேன்.

**லெ. முருகபூபதி**

13/7/51 ல் நீர்கொழும்பில் பிறந்த லெட்சுமணன் முருகபூபதி. இவர் சிதம்பர ராகுநாதனின் உறவினர். இவரது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயத்தில் (அப்போது வேறு பெயர் ) ஆரம்பித்து யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து நீர்கொழும்பு அல்கிலாஸில் நிறைவு பெற்றது.

இவரது முதற்கதை **கனவுகள் ஆயிரம்** மல்லிகையில் 72 ல் பிரசுரமாகியது. அதனைத் தொடர்ந்து இவர் மல்லிகை எழுத்தாளராகவே பரவலாக அறியப்படத் தொடங்கினார்.

இவரது முதற் சிறுகதைத் தொகுதி **சுமையின் பங்காளிகள்** 75 ல் வெளிவந்து அவ்வாண்டுக்கான சாகித்திய விருதையும் பெற்றுக்கொண்டது.

1978 ல் வீரகேசரி பத்திரிகையில் ஒப்பு நோக்குனராக இணைந்து ஆசிரியர் குழுவில் ஒருவராக உயர்வுபெற்றார். வீரகேசரியில் **ரசஞானி** என்ற பெயரில் இவர் எழுதிய குறிப்புகள் மிகக் காத்திரமானவை.

சிறுகதை, நாவல், கட்டுரை, பயண இலக்கியம், பேட்டி இவரது இயங்கு தளம். முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினராக இருந்தவர்.

1985 ல் உலக மாணவர் விழாவில் கலந்து கொள்ள சோவியத் யூனியன் சென்றவர். 1987 ல் புலம் பெயர்ந்து அவுஸ்த்திரேலியா மெல்பேர்னில் வாழ்கிறார்.

பல விருதுகள் பெற்ற இவர் புலம்பெயர் நாட்டின் சிறந்த பிரஜை விருதையும் பெற்றுள்ளார். இன்னும் சோர்விலாது எழுத்துப் பணியைத் தொடர்கிறார்.

**இவரது வெளிவந்த ஏனைய நூல்கள் :**

சமாந்தரங்கள்(சிறுகதைகள்,1988), சமாதானப் பூங்காவில் (சோவியத் பயணக் கட்டுரை, 1989), நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (கட்டுரை1995), வெளிச்சம் (சிறுகதைகள்-1998), சந்திப்பு(நேர்காணல், 1998), எங்கள் தேசம் (சிறுகதைகள், 2000), கடிதங்கள் (2001), மல்லிகை ஜீவா நினைவுகள் (2001), கங்கை மகள் (சிறுகதைகள், 2005), பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்,1997), இலக்கிய மடல்(2001), பறவைகள் (நாவல் 2001 சாகித்திய விருது), அம்பி வாழ்வும் பணியும் (2003), நினைவுக் கோலங்கள்(2006), ராஜஸ்ரீகாந்தன் நினைவுகள்(2005), எம்மவர் ( நாவல் 2003).

**சமாந்தரங்கள்**

**1997 ல் மல்லிகையில் பிரசுரமான கதை இது.**

**முன்பெல்லாம் தீபாவளி என்றால் எங்கள் வீடு அமர்க்களப்படும்...**

**எனத் தொடங்கி**

**நான் எழுந்து கட்டிலில் ஏறிப்படுக்கிறேன்.**

**என்று முடியும் இக்கதையை இதே பெயரிலான இவரது சிறுகதைத் தொகுதியில் அல்லது மல்லிகைச் சிறுகதைகள் முதலாம் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

2011ல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் பங்கு பற்ற வந்த சமயம் இணைப்பாளர்களில் ஒருவரான இவர் தற்செயலாக எனது வீட்டிற்கு வந்த சமயம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். நான் நாகரிகமாக அதனை மறுத்ததோடு எனது உடன்பாடின்மையையும் நேரடியாக அவரிடம் தெரிவித்தேன், யுத்த அனர்த்தத்தால் பாதிப்புற்ற மாணவர்களின் கல்விக்காக அமைப்பொன்றை இன்றைய காலகட்டத்தில் இவர் நிறுவி அதன் மூலம் மாணவர்களுக்கான நிதி உதவியை பிரதிபலன் பாராது புலம் பெயர் நலன் விரும்பிகளோடு இணைந்து முன்னெடுக்கும் நண்பனே உன்னை நான் வாழ்த்துகிறேன்.

**26 May 2018**

இந்த நோன்பு மாதத்தில் தமிழரான ஒருவரால் எழுதப்பட்ட முஸ்லிம் குடும்பம் பற்றிய கதை ஒன்று பற்றி எழுத விளைகிறேன்.

இவர் பெயர் பெற்ற ஒரு கவிஞரும் கூட. வன்னிப் பிரதேசத்தில் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலக்கிய விழாவில் இவரது புனைபெயரில் ஒரு அரங்கு நிச்சயம் இடம் பெறும். அந்த அளவுக்கு வன்னிக்கு பெருமை சேர்த்தவர் இவர்.

**எஸ்.எல். சவுந்தரநாயகம்**

1928. செட்டிகுளத்தைச் சேர்ந்த இலுப்பைக் குளத்தில் பிறந்த இவர் பாரம்பரிய சுதேச வைத்தியர். 1953 ல் எழுத்துத் துறைக்கு வந்தவர்.

**வன்னியூர்க் கவிராயர்** இவரது பிரபலமான புனைபெயர். **சவுந்தரன், வன்னியூர் நாயகம், மனோகரி, எஸ்.எல். எஸ்.** எனும் பெயர்களில் வீரகேசரி, சுதந்திரன், ஈழநாடு,கலைச்செல்வி, விவேகியில் கவிதைகளும்,கதைகளுமென நிறைய எழுதினார்.

57- 67 காலகட்டம் இவரின் எழுத்துகளின் காலம் எனச் சொல்லலாம். முற்போக்கு சிந்தனை உடையவராய் இருந்தாலும் இறக்கும் வரை எந்த அணியோடும் இணையாதவர்.

**இவரது நூல்கள்**

73 ல் மல்வம், உடுவில் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் இவரது ஈழத்து காவிய தீபகம் எனும் 15 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பை வெளியிட்டுள்ளது. அதில் அழுங்குப்பிடி நான் எழுதப் போகும் தியாகச் சுடர்கள் என்னும் இருகதைகளைத் தவிர ஏனையவை ஏடுகளில் பிரசுரமானவை. இத்தொகுப்பின் அட்டைப்படத்தை நண்பர் கலைவாதி கலீல் வரைந்திருக்கிறார்.

இவரது இன்னொரு நூல் : அமுதகங்கை- கவிதைகளும், சிறுகதைகளும் (வன்னியூர்க் கவிராயர் - 2004. வவுனியா கலை இலக்கிய நண்பர் வட்டம்).

**தியாகச் சுடர்கள்**

2004 டிசம்பர் 26. சுனாமி வந்து எம்மை அவலத்தில் ஆழ்த்திய நாள். அதற்கு பல வருடங்களுக்கு முன் 1957.டிசம்பர்.26. வன்னி மன்னார் மாவட்டத்தில் வீசிய கொடும் புயலில் சிக்கிய கொண்டச்சி எனும் முஸ்லிம் கிராமத்து குடும்பத்தின் அவலத்தைக் கூறும் கதை. எங்கும் பிரசுரமாகாது அவரது தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. 58 ல் எழுதப்பட்டிருக்கலாம்.

ஹிஜ்ரி - ஆயிரத்து முன்னூற்று எழுபது.

ஜமாத்துல் ஆகிர் நாலாம் பிறையன்று.....

என தொடங்கி

இலக்கிய வானில் என்றென்றும் இலங்கிக் கொண்டிருக்கும்.

என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

முத்தாய்ப்பாக தன் தொகுப்பின் முற்பக்கத்தில் **மனிதன்** எனும் புனை பெயரில் **கே.டானியல்** பற்றி இவர் எழுதிய கவிதையில் வரும் முதல் வரிகள்.

**ஓடி மலைக்குகைக்குட் பதுங்கும் என்னை**

**உப்பரிகைமீது உயர்த்தி வைத்தாய்.**

**வாடிக்கையாய் மரப்பட்டை தரித்தோனை**

**வண்ணவுடைகள் அணியவைத்தாய்.**

நான் பதிவிட்ட இக்கதை புரிந்துணர்வை ஏற்படுத்துமாக இருந்தால் மகிழ்வேன்.

**27 May 2018**

2005 .ல் ஒருநாள் இவருடன் தொலைபேசியில் முதல் முதலாக தொடர்பு கொண்டேன். ஆளுனர் விருது வழங்கல் கையேட்டை தயாரிக்கும் பணியில் ஒரு சந்தேக நிவர்த்திக்காக பின்னர் 2012 ல் முதலமைச்சர் விருது தெரிவு நடுவராக அவரை அழைப்பதற்காக தொடர்பு கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் ஓய்வு பெற்றிருந்தாலும் அந்தத் தெரிவுக்கு நான் இணைப்பாளராக இருந்தேன். மிகச் சிரமத்துடன் எனது அழைப்பை மதித்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அவர் வந்திருந்தார்.

## யூ.எல். ஆதம்பாவா

15/6/1939 ல் கல்முனை, சாய்ந்தமருதுவில் பிறந்த உதுமாலெப்பை ஆதம்பாவா ஒரு ஒய்வு பெற்ற முதலாம் தர ஆசிரியர். 38 வருடங்கள் ஆசிரியப் பணியாற்றியவர்.

மணிக்குரலில் 63ல் மலையருவி எனும் கவிதையை எழுதி இலக்கிய உலகில் புகுந்தவர்.

இதுவரை 45க்கு மேற்பட்ட சிறுகதைகள், 48

உருவகக் கதைகள், 58 கவிதைகள் எழுதியிருக்கிறார்.

தினகரனிலேயே இவர் கூடுதலான கதைகளை எழுதினார். சிந்தாமணி, சூடாமணி, போன்ற பத்திரிகைகளும் இவர் கதைகளைப் பிரசுரித்தன.

70களில் தோன்றிய முற்போக்கு அலையில் ஈர்க்கப்பட்டு தீவிரமான கதைகளை எழுதியவர்களில் இவரும் ஒருவர். 70/80 காலகட்டக் கதைகளை தன் சிறுகதைத் தொகுதிகளில் சேர்ப்பதை இவர் தவிர்த்துக் கொண்டார்.

இவரது வெளிவந்த நூல்கள்

> நாங்கள் மனித இனம் (12-உருவகக் கதைகள்,1991), காணிக்கை,(12-சிறுகதைகள், இஸ்லாமிய வெளி பணியகம், 1997),பகலில் ஒரு சூரியனின் அஸ்த்தமனம் (மர்ஹூம் அஷ்ரப் இரங்கல் கவிதை, 2003), சாணையோடு வந்தது (9 சிறுகதைகள், மு.தொ.கல்லூரி 2007).

இவர் பெற்ற விருதுகள்: கலாபூஷணம் (1999).ஆளுனர் விருது (2005. வ.கி.மா).

நினைவுகளும் நிகழ்வுகளும்

> 5/6/1983 தினகரனில் பிரசுரமான கதை இது. மரபுவழிக் கதை சொல்லியான இவர் மருதூர்க் கொத்தன் அவர்களாலும் சிலாகிக்கப்பட்டவர்.
>
> அந்தக் கபுரைச் சுற்றிலும் பெருந்திரளான மக்கள் மொய்த்து நின்றனர்.
>
> என ஆரம்பித்து
>
> சோகத்தின் வலிய கரங்களால் நசுக்கப்பட்டுத் தள்ளாடியவனாக அடிவைத்துக் கொண்டிருந்தான்.
>
> என்று முடியும் இக்கதையை இவரது காணிக்கை தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

“சமகாலத்தில் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி அபாரமானது. இச் சூழ்நிலையில் சாதாரண வாசகனின் தேவையைப் பூர்த்தி செய்வதில் யூ.எல். இன் கதைகளுக்கு தக்கதோர் இடமுண்டு”

என்று பேரா.றமீஸ் அப்துல்லா ஒரு இடத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

அவரது அக்கருத்துடன் நானும் நூறு வீதம் உடன்படுகிறேன்.

**27 May 2018**

## பிடித்த சிறுகதை 118

இவர் ஒரு புலம் பெயர் எழுத்தாளர். முகநூலில் சில சமயங்களில் கருத்தாடுவோம். சினிமா, சினிமா பாடல்கள், இளவயதில் நான் வாசித்த புத்தகங்களின் நினைவூட்டல் என எம் தொடர்பு தொடர்கிறது. ஒருகாலம் நானும் இவர் போல் MGR ரசிகன். இன்னொரு பிரியம் இவரது அ.ந.கந்தசாமி பற்றிய தேடல். அவரின் உறவினர் இவர்.

**வ.ந.கிரிதரன்**

வண்ணார்பண்ணையில் பிறந்த நவரத்தினம் கிரிதரன் சிறுவயதில் வவுனியாவில் வாழ்ந்தவர். அதன் பிரியத்தினால் "வ"வை தன் முதலெழுத்தாகச் சேர்த்துக் கொண்டவர்.

வவுனியா மகாவித்தியாலயம், யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். மொரட்டுவ பல்கலைக்கழக கட்டடக் கலைப்பட்டதாரி. இலங்கையில் அரச துறையில் பணியாற்றி 83 ல் புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்பவர்.

இவர் பற்றிய விபரங்களை பதிவிடுவது நான் முன்னர் கூறியிருப்பது போல் ஊசி விற்கும் செயல். எனவே அடக்கி வாசிக்கிறேன்.

10 வயதிலேயே சிறுவர் பகுதியில் எழுதத் தொடங்கியவர். 17 வயதில் சிரித்திரன் சஞ்சிகை நடத்திய அ.ந.கந்தசாமி நினைவு சிறுகதைப் போட்டியில் **சலனங்கள்** எனும் கதையை எழுதிக் கவனிப்பைப் பெற்றவர்.

இலங்கை இந்திய பத்திரிகைளில் கதை, சிறுகதை ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். இணைய இதழ்களிலும் எழுதுபவர்.

2000ம் ஆண்டிலிருந்து **பதிவுகள்** என்ற இணைய இதழை சிறப்பாக நடத்தி வருபவர்.

தனது அனுபவங்களை ஆவணமாக்கும் ஒரு பெரிய பணியே இவரது எழுத்துக்கள்.

இவரது சிறுகதைகள் லதா. ராமகிருஷ்ணனாலும், கவிதைகள் டாக்டர் ர.தாரணியாலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.(நூல்களும் தான்)

இவரும் ஆங்கிலத்தில் எழுதுகிறார். இவரது படைப்புகளை மேற்படிப்புக்காக பலமாணவர்கள் ஆய்வு செய்து கட்டுரை சமர்ப்பித்துள்ளனர்.

**இவரது வெளிவந்த நூல்கள்:**

மண்ணின் குரல் (சிறுநாவல் 1986, மங்கை, கனடா),எழுக அதிமானுடா(கவிதை,1993, மங்கை. கனடா),அமரிக்கா (குறுநாவல்,சிறுகதைகள், 1996, தமிழக ஸ்நேகா, மங்கை, கனடா), நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (ஆய்வுக்கட்டுரை 1996. ஸ்நேகா,மங்கை), மண்ணின் குரல் (4 நாவல்கள் 1998, குமரன் பதிப்பகம்), குடிவரவாளன் (நாவல், 2016, ஓவியா).

**சுண்டெலிகள்**

**13/5/94 ல் தாயகம் இதழில் பிரசுரமான கதை இது.**

**கரப்பான் தொல்லை தாங்க முடியவில்லை....**

**எனத் தொடங்கி**

**அரைத்தூக்கத்திலும் அதன் சிறு அசைவுகள் கேட்கத்தான் செய்கின்றன.**

**என்று முடியும் இக்கதையை இவரின் அமெரிக்கா தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

நண்பர் கிரிதரன் பற்றி அறிய வேண்டின் பதிவுகள் இணையத்திலும் விக்கிபீடியாவிலும் அறியலாம்.

**28 May 2018**

இவருடன் எனது தொடர்பு 90 களின் பிற் பகுதியிலேயே ஏற்பட்டது.அப்போது இவர் புத்தளத்தில் இருந்தார்.

சிரித்திரன் வெளியீடாக வந்த இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியின் அறிமுக நிகழ்வை அல்வாயில் நடத்தினோம். நானே தலைமை தாங்கினேன். ஏற்பாடு திக்கவயல். இவர் வராமலே அந் நிகழ்வு நடந்தது. 1984 என நினைக்கிறேன்.

**சுதாராஜ்**

நல்லூரில் பிறந்த சிவசாமி இராஜசிங்கம், யாழ் இந்துக்கல்லூரி மாணவன். மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி.

மத்திய கிழக்கு முதல், பத்துக்கு மேற்பட்ட வெளி நாடுகளில் கடமையாற்றியவர். இவரது முதற் கதை **இனிவருமோ உறக்கம் ஒளி** சஞ்சிகையில் 1972ஆம் ஆண்டு பிரசுரமானது. இலங்கையின் தேசிய பத்திரிகைகளை விட சிரித்திரனிலும், மல்லிகையிலும் கூடுதலாக எழுதினார்.

புத்தளத்தில் இருந்த காலத்தில் **சாகித்திய புத்தக இல்லம்** என்றொரு புத்தக் கடையை நடத்தினார்.

அப்போது சிரித்திரன் சுந்தர் பேரில் சிறுகதைப் போட்டிகள் வைத்து தேனுகா பதிப்பகம் சார்பில் பரிசுகள் வழங்கினார்.

அக் காலத்தில் **குந்தவையும்** புத்தளத்தில் ஆசிரியையாக இருந்தார்.

சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் இவரது இயங்கு தளம். மல்லிகை இவரது அட்டைப்படத்தை ஜுன் 2000 ல் தாங்கி வந்துள்ளது.

மீள் பதிப்புகள் கண்ட பல நூல்களின் ஆசிரியர் இவர்.

**இவரது நூல்கள்:.**

பலாத்காரம் (சிறுகதைகள், 1977, சாகித்திய விருது), இளமைக் கோலங்கள் (நாவல், 1991, வீரகேசரி 2004, மணிமேகலை), கொடுத்தல்(சிறுகதைகள், 1983, சிரித்திரன், சாகித்தியப் பரிசு, 2004, மணிமேகலை, ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள்(சிறுகதைகள், 1989, மல்.பந்/இ.இல.பேரவைபரிசு.2003. மணிமேகலை), தெரியாத பக்கங்கள் (சிறுகதைகள். 1997. மல்.பந்/ விபவி பரிசு, 2004, மணிமேகலை), சுதராஜின் சிறுகதைகள் (2000, தேனுகா), காற்றோடு பேசுதல் (சிறுகதைகள்-2000, எம்.டி.குணசேன, 2005, மணிமேகலை, உயிர்க்கசிவு (60 சிறுகதைகள், 2010, NCBH, 2010, சாகித்திய பரிசு).

சிறுவர் இலக்கியம்- காட்டில் வாழ்ந்த கரடி, நாட்டுக்கு வந்த கதை(2000, தேனுகா, 2004, மணிமேகலை),பறக்கும் குடை(2001, தேனுகா), கோழி அம்மாவும் மயில் குஞ்சுகளும் (2002, தேனுகா), குட்டிப்பூனையும் கெட்டிக்கார, சுட்டிப் பையனும் (2003, UNHCR பிரசுரம்), மனித தரிசனங்கள் (2005 மணிமேகலை), பவறமுத (2000 மல்லிகை), நொபொனனி பத்த (2000),

இவருக்கு இந்து கலாசார அமைச்சு **இலக்கிய வித்தகர்** பட்டம் வழங்கியுள்ளது.

**அடைக்கலம்**

**ஆனந்தவிகடன் வைரவிழா போட்டியில் பரிசு பெற்று, அவ்விதழில் 1991 ல் பிரசுரமானதோடு மௌனத்தின் அலறல் என்ற பெயரில் அவர்கள் வெளியிட்ட போட்டிக் கதைகள் தொகுப்பில் இடம்பெற்ற கதை இது.**

**நான் மனைவியைத் தேடி வீட்டுக்குள் சென்றபோது...**

**என ஆரம்பித்து**

**"பைபை"**

**"கீ.கீ.."**

**என்று முடியும் இக்கதையை உயிர்க்கசிவு தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

மணிரத்தினத்தின் **கன்னத்தில் முத்தமிட்டால்** படத்திற்கு ஆதர்சமாய் இருந்தது **அடைக்கலம்** கதை என ஒரு சர்ச்சை அப்போது இருந்தது. அது உண்மைதான் என்பதை இக்கதையை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

**28 May 2018**

பிடித்த சிறுகதை 120

**வா**சிப்பு ஆர்வம் துளிர்விடத் தொடங்கிய காலம். மித்திரன் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. அப்போது அது நாளேடு. அதில் இவரின் தொடர்கதை ஒன்று வெளிவந்தது. அதன் பெயர் நினைவிலில்லை எழுதிய இவரின் பெயர் ஆழமாக மனதில் பதிந்து விட்டது.

ஊரோடு சேர்த்து தம் புனைபெயரை அமைத்துக் கொண்ட சகோதரர்கள் மூவர்.60 களின் பெயர் பெற்ற கவிஞர்கள்.

**திமிலை மகாலிங்கம்**

29/4/38 அன்று மட்டக்களப்பு திமிலைத் தீவில்பிறந்த இவரது இயற்பெயர் **சின்னையா தங்கவேல். திமிலைத் துமிலன், திமிலைக் கண்ணனின் சகோதரர்.**

நாடகம், கவிதை, நாவல், சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் கவனிப்பைப் பெற்றவர்.

வீரகேசரியிலும், மித்திரனிலும் தொடர் கதைகள் எழுதிய ஜனரஞ்சகப் படைப்பாளி. சுதந்திரனிலும் தேசியப் பத்திரிகைகளிலும் சிறுகதைகளும்,

கவிதைககளும், சிறுவர்க்கான படைப்புகளும் எழுதியவர். இவர் கிராம சேவகராக கடமையாற்றியவர். பல இளம் படைப்பாளிகளை உருவாக்கியவர்.

**இவரது நூல்கள்**

சிறுவர்இலக்கியம்: கனியமுது சிறுவர் பாடல், புள்ளிப்புள்ளி மானே, சிறுவருக்கு விபுலாநந்தர், சிறுவருக்கு நாவலர், குருவிக் குஞ்சுகள், குழந்தையின் குரல், நம் நாட்டுப் பழமொழிகள், பாதை மாறுகிறது(நாவல்), அவனுக்குத்தான் தெரியும்(நாவல்), மோதல் (சிறுகதை), நூலாக்கம் பெறாத மித்திரன், தினக்கதிரில் எழுதிய தொடர்கதைகளும் ஏராளமான கவிதைகளும், நாடகப் பிரதிகளும் உள்ளன.

இவர் பெற்ற விருதுகள்: தமிழ் மணி (இந்து.கலா.அமைச்சு), கலாபூஷணம் (அரச கலா. திணைக்களம்), இலக்கியச் சுடர் (மட். கலாசார பேரவை).

தீர்த்தக்கரை

**28/10/ 62. சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**அந்த நீல நிறப் பாவாடைக்கு அறுபது புள்ளிகள்**

**எனத் தொடங்கி**

**கடகடத்த ஓட்டை பஸ் நெஞ்சுத் துணிச்சலுடன் நகர ஆரம்பிக்கிறது.**

**என்று முடியும் தீர்த்தக்கரை கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தமது ஊரை தம் எழுத்துகளால் பிரபலப்படுத்திய படைப்பாளிகள் பலர். அவர்களில் 13/2/2010 ல் காலமாகிய இவரும் முக்கியமான ஒருவர்.

**28 May 2018**

இவரது கதைகளை நான் படித்திருக்கிறேன். 2016 ல் ஒருநாள் என்னோடு தொடர்பு கொண்டு முகவரியைக் கேட்டு தனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியை எனக்கு அனுப்பி வைத்து (12/4/2016) கதைகள் பற்றிய எனது அபிப்பிராயத்தையும் கேட்டு வைத்தார்.

எனது விரிவான வாசக அபிப்பிராயத்தை அவருக்கு எழுத குறிப்புகளும் எடுத்து வைத்திருந்தேன்.

இந்தச் சமயத்தில் என் காலில் முறிவேற்பட்டு மருத்துவ மனையென்றும், சத்திரசிகிச்சை என்றும் காலம் கடந்து போய்விட்டது.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் .ஊன்றுகோலும் கையுமாக சிரமத்துடன் நாட்கள் கடந்து போகின்றன. இவரது கதைகள் பற்றி எழுதிய குறிப்பு தவறிவிட்டது. ஆயினும் இக்கதை மட்டும் நினைவில் உள்ளது.

**கே.எஸ்.சுதாகர்**

அவுஸ்த்திரேலியா மெல்பேர்ணில் வாழும், வீமன்காமம் தெல்லிப்பளையில் பிறந்த சுதாகர் செல்லத்துரை. வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பழைய மாணவன். பேராதனைப் பல்கலைக்கழக

பொறியியல் பட்டதாரி.

83 ல் **இனி ஒரு விதி செய்வோம்** என்ற கதையை ஈழநாடு பத்திரிகையில் எழுதியதன் மூலம் இலக்கியத் துறைக்கு வந்த இவர்.**வீரகேசரி, சிந்தாமணி, முரசொலி, தினக்குரல்** பத்திரிகைககளில் **செ.சுதா, சுருதி,கதிரொளியான்** போன்ற பெயர்களில் கதைகள் எழுதினார்.

புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியா போனபின் அந்தந்த நாட்டுதமிழ் இதழ்களிலும்,இணைய இதழ்களிலும், தமிழக இதழ்களிலும் தொடர்ச்சியாக எழுதுகிறார். 20 க்கு மேற்பட்ட போட்டிகளில் இவரது கதைகள் பரிசு பெற்றிருக்கின்றன.

**காக்கைச் சிறகினிலே** இதழ் இவ்வாண்டு நடத்திய **கி.பி.அரவிந்தன் நினைவு உலக குறுநாவல் போட்டி**யில் இவரது **மெல்பேர்ண் வெதர்** குறுநாவல் சிறப்புப் பரிசைப் பெற்றுள்ளது. அக்கினிக்குஞ்சு இணையத்தில் அக்குறுநாவல் பிரசுரமாகி இருக்கிறது. இவரது வலைப்பக்கம் **சுருதி**

**இவரது நூல்கள்**

எங்கே போகிறோம்(சிறுகதை, 2007, அவு. தமிழ் இலக்கிய சங்கம், குமரன்), சென்றிடுவீர் எட்டுத்திக்கும்(பரிசு பெற்ற சிறுகதைகள், 12, 2014,மித்ர).

**இரண்டு சம்பவங்கள்**

**ஞானம் சஞ்சிகை 2013 ல் வைத்த செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டியில் சிறப்பு சான்றிதழ் பெற்று ஞானத்தில் அவ்வாண்டு பிரசுரமான கதை இது. முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய 83 கலவர பேராதனைப் பல்கலைக்கழக அனுபவம்.**

**மே மாதம் 1983....**

**என ஆரம்பித்து**

**சில விரிவுரையாளர்களும் வரவில்லை.**

**(இது முதற்சம்பவத்தின் முடிவு)**

**என்று முடியும் இக்கதையை இவரின் சென்றிடுவீர் எட்டுத் திக்கும் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

முகமறியா நண்பர் சுதாகருக்கு தவிர்க்க முடியாத காரணத்தினாலேயே வாசக அபிப்பிராயத்தை நான் அனுப்பவில்லை என்பது தெரியும். ஏனெனில் மற்றவர்கள் நிலையைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு எழுத்தாளர் அவர்.

**29 May 2018**

இவரது பெயர் சுதந்திரன் மூலமும் வீரகேசரி மூலமுமே எனக்கு அறிமுகமாகியது. இவரது பெயர் சிலவருடங்களாக இலக்கிய உலகில் அல்லாது அரச சேவையின் மூலம் பரவலாக அறியப்படுகிறது.

**எம்.வாமதேவன்**

நுவரெலியா கொட்டகலையில் 45 ல்பிறந்த இவர், பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் பட்டதாரி. முதலில் திட்டமிடல் அமைச்சில் கடைமையாற்றிய இவர். திட்டமிடல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராகி, பின்னர் பணிப்பாளராகி திட்டமிடல் அமைச்சின் செயலாளராக கடமையாற்றி, 30 வருடங்களின் பின் ஓய்வு பெற்றவர்.

கணிப்பிற்குரிய பத்துக்கு மேற்பட்ட கதைகளை இவர் எழுதி இருக்கிறார்.

**மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்** வீரகேசரி யுடன் இணைந்து நடத்திய இரண்டாவது சிறுகதைப் போட்டியில் இவரது முடிவு கதை இரண்டாம் இடம் பெற்றது. முதலாம் இடம் தெளிவத்தை ஜோசப்பிற்கு. இவர் மறைந்த மலயக ஆளுமை

இரா.சிவலிங்கம் அவர்களின் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இவரது நூல்கள்**

தமிழ்நாட்டிற்கு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்(ஆங்கிலம்), மலையகம் சமுக அபிவிருத்தியை நோக்கி (2015,சாகித்திய இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட நூல்)

**கங்காணியார்**

**இக்கதை சுதந்திரனில் பிரசுரமாகி இருக்கிறது ஆண்டு தெரியவில்லை. இவரது ஆரம்ப கால கதைகளில் ஒன்று.**

**உச்சிப் பொழுது.**

**என ஆரம்பித்து**

**அவர் காட்டிய ஆர்வத்திலும்,வேகத்திலும், விறுவிறுப்பிலும் நிழலாடியது.**

**என்று முடியும் கங்காணியார் எனும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

நூல் வெளியிடக்கூடிய சந்தர்ப்பம் வாய்த்துள்ள இந்நேரத்தில் தனது சிறுகதைத் தொகுதியை வெளியிடுவது பற்றி இவர் சிந்திக்க வேண்டும்.

**29 May 2018**

## பிடித்த சிறுகதை 123

இவரை ஒரு தீவிர முற்போக்கு கவிஞராகவே நான் அறிந்திருந்தேன். நெடுநாட் கழித்தே இவர் ஒரு சிறுகதையாளர் என்று அறிந்து கொண்டேன்.

இவரது கவிதைகளை விட இவர் கொண்டுவரும் **சறங்கள்** தரமானவை என்று சிலர் நக்கலாக சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன்.

**மருதூர்க்கனி**

1/10/42ல் மருதமுனையில் பிறந்த உதுமா லெப்பை முகம்மது ஹனிபா. (U.L.M. ஹனிபா) 18 வயதில் ஆசிரியரானவர். பயிற்றப்பட்ட ஆசிரியராக தன் சேவையைத் தொடர்ந்தவர்.

**காலரதம், அஞ்சலி, தினகரன், வீரகேசரி, தாமரையில்** இவர் கதைகள் எழுதினார். காவித்துவ ஆற்றலுடன் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையை கூறிய கதைகள் அவை.

இவரது சிறுகதைத் தொகுதிக்கு முன்னீடு வழங்கியவர்கள் பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, செ.யோகநாதன். இவரது **மண்பூனைகளும் எலி பிடிக்கும்** எனும் 1971 ல்

தாமரையில் பிரசுரமான கதை 11 ம் ஆண்டு தமிழும் இலக்கியமும் பாடப்புத்தகத்தில் சேர்க்கப்படுள்ளது. முற்போக்கு எழுத்தாளளர் சங்க உறுப்பினர்.

**இவரது நூல்கள் :**

மண் பூனைகளும் எலி பிடிக்கும் (15 சிறுகதைகள், 2002), அந்த மழை நாட்களுக்காக (கவிதைகள், 2002).
பிரசுரம்பெற வேண்டிய மூன்று நூல்கள் என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். சந்தனப் பாட்டகமும் கிலாபத்துக் கப்பலும். மருதூர்கனி கவிதைகள்.

கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக தென்கிழக்கில் வாழும் அடித்தட்டு மக்களான கடல் தொழிலாளர், கைத்தறி நெசவாளர்கள், கூலித் தொழிலளர்களின் வாழ்வை அவர்களின் துன்ப துயரங்களை அவர்கள் எதிர்கொண்ட மீறல்களை அவர்கள் மொழியில் கூறியவை இவரது கதைகள்.

இவருக்குக் கிடைத்த விருதுகள்:

சோழன் மகள் (அகில இலங்கைச் சிறந்த நாடகத்திற்கான விருது), இலங்காதிலகம் விருது (1998. ஜனாதிபதி சந்திரிகா), கலாபூசஷணம் விருது(2002).

பசி

**1965ல் மலையகத்திலிருந்து வெளிவந்த செய்தி பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்று அப்பத்திரிகையில் பிரசுரமான இவரது முதற்கதை இது.**

**அரசாங்க உத்தியோகம் பார்ப்பவராக இருந்திருந்தால்..**

**என ஆரம்பித்து**

**அதற்கு பதில் சொல்லக்கூடிய திராணி அப்போது ஆதம் காக்காவுக்கு இருக்கவில்லை.**

**என்று முடியும் இக்கதையை அவரது சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

23/9/2004 ல் மௌனத்தாகிப்போன, 1963ல் நினைவு கவிதையுடன் இலக்கிய உலகுக்கு அறிமுகமான கனி அவர்களை நான் ஒரு தடவை கூடச் சந்தித்ததில்லை.

சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்த நேரத்தில் அவர் எங்கள் அணியில் இல்லை. அதனால் சந்திக்க விரும்பவில்லை.

**29 May 2018**

பிடித்த சிறுகதை 124

**6**0களில் இவரது பெயரை கேட்டிருக்காத வானொலி நாடக நேயர்கள் இருந்திருக்க முடியாது.தன் பெயரோடு ஊரின் பெயரையும் இணைத்து சொந்தப் பெயராக்கிக் கொண்டவர். மூன்று தலைமுறையாக இலக்கிய உலகில் பேசப்படும் ஒரு குடும்பத்தின் தலைமைப் படைப்பாளி.

**கச்சாயில் இரத்தினம்**

கொடிகாமம் கச்சாயில் பிறந்த இரத்தினம் தன் பெயரோடு ஊர் பெயரையும் இணைத்துக் கொண்டவர். 150 க்கு மேற்பட்ட சிறுகதைகள், பல தொடர் நாவல்கள் (இலங்கை இந்திய பத்திரிகைகளில் எழுதியவை) 110 வானொலி நாடகங்களை எழுதியவர். பல நாடகங்களை மேடையேற்றியவர். வாத்தியக் கலைஞர் (ஆர்மோனியம், புல்லாங்குழல், மௌத் ஓர்கன்). இசை அமைப்பாளர். மேடைநாடக திரைச்சீலை வரைஞர்,பட்டங்கள் பிரமாண்டமாக கட்டிப் பறக்க விடுபவர். 53 கலவரத்தை பகைப்புலமாக் கொண்டு **அலைகள்** என்ற நாவலை தினகரனில் எழுதியவர். ஈழத்தின் ஆரம்ப சரித்திர

நாவல் என்று கூறத்தக்க **வன்னியின் செல்வி** தொடர் நாவலை **விவேகி** யில் எழுதியவர். **அன்பு எங்கே? - விவேகி. விடிவு நோக்கி - தினகரன்** ஆகிய தொடர் நாவல்களின் சொந்தக்காரர். வானொலியிலும் பல தொடர் நாடகங்களை எழுதியுள்ளார். சமூகத்தொண்டன் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது **இலவுகாத்த கிளி** முதற் பரிசு பெற்றது. மலையகத்தில் ஆசிரியராய் இருந்த இவர் பின்னர் பிரபல்யமான வழக்கம்பரை சுழிபுரம் **துரையப்பா அன்சன்** யில் பிரதம கணக்காளராக கடமையாற்றினார்.

**இவரது நூல்கள்:**

பாட்டாளி மக்கள் வாழ்க்கையிலே (சிறுகதை, 1969), வன்னியின் செல்வி(நாவல், 1963).

**நாகசஞ்சீவி**

**11/9/60 ல் சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**நடுநிசி எங்கும் அமைதி சூழ்ந்த நேரம்..**

**எனத் தொடங்கி**

**அவர் அன்றே தனது மகள் அமுதாவையும் அழைத்துக்கொண்டு இராமேஸ்வரத்தை நோக்கிப் பயணமானார்.**

**என்று முடியும் நாகசஞ்சீவி கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

தான் வாழ்ந்த காலத்தில் எந்த அரசியல் இயக்கத்தோடும் இணையாதிருந்தவர், கச்சாயில் இரத்தினம். இப்பதிவுக்கு பின்வரும் தகவல்கள் தேவையற்றவை ஆயினும் அதனைப் பதிவிடுகிறேன்.

இவரது மகள் மலரன்னை. இவரின் பேரன். மலரன்னையின் மகன் **போருலா, புயல்பறவைகள்** நாவல்கள் தந்த **கப்டன் மலரவன்.**

**30 May 2018**

பிடித்த சிறுகதை 125

சென்ற வாரம் காவி உடையுடன் இலங்கை திரும்பிய மறவன் புலவார் இவரை நினைவூட்டினார். முகநூலில் காரசாரமாக விமர்சிக்கப்படும் அவரது பெயரும், இவரது பெயரும் ஊர், பெயர் ஒன்றினாலேயே வித்தியாசப்படுகின்றன.

என்னப்பா டானியல்? ஜீவா?. என்.கே ரகுநாதன் இவர்கள் சாதிப்பிரச்சனை எழுதுவதற்கு முன்னர் 39 ம் ஆண்டே நம்மவர் அது பற்றி எழுதிவிட்டார். என்று செங்கை ஆழியானால் சிறப்பித்துக் கூறப்பட்ட ஒருவர்.

அக்கால தமிழரசுக் கட்சி மேடைகளில் பாடப்பட்ட **சாகும் போதும் தமிழ் படித்து சாக வேண்டும் என்றன் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்** எனும் பாடல் இவருடையதே.

**பண்டிதர். க. சச்சிதானந்தன்**

19/10/21இல் மாவிட்டபுரத்தில் பிறந்த க.சச்சிதானந்தன் அவர்களின் தகப்பனார் பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்தவர். (கணபதிப்பிள்ளை) தாய் மாவிட்டபுரத்தைச்

சேர்ந்தவர்.(தெய்வானைப்பிள்ளை) இதனால் இவரை **மாவிட்டபுரம் சச்சிதானந்தன்** என்றும் **பருத்தித்துறை சச்சிதானந்தன்** என்றும் அழைத்தனர்.

இவரது ஆரம்பக் கல்வி தாய் தந்தையரின் ஊர்களில் தொடங்கி ஹாட்லிக்கல்லூரியில் தொடர்ந்து பரமேஸ்வராக்கல்லூரியில் முடிவுற்றது. மதுரை பண்டிதர் பட்டம், லண்டன் தமிழ் சிறப்புப் பட்டம், லண்டன் உளவியல் முதுமாணிப் பட்டம் பெற்றவர்.

நீர்கொழும்பு புனிதமேரி கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாடநூற்சபையில் இருந்தவர். 1967 முதல் 1981 வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராக இருந்தவர்.

இவரது புனைபெயர்கள்:ஆனந்தன், பண்டிதர்,சச்சி.

**இன்னொரு முத்தம்,அவிந்த தீபம், அமரகவியின் மறுபுறம், எங்கெழில் என் ஞாயிறு, பிள்ளையார் தீர்த்த பிசகு,அன்பில் மரணம் உண்டா? பனைகள் வரைந்த மடல்,நல்லானின் கதை, ஹரிஜனங்களின் கண்ணீர், தண்ணீர்த்தாகம்** போன்ற கதைகளை எழுதியுள்ளார். இவற்றில் பல கதைகள் ஈழகேசரியில் பிரசுரமானவை.

இசை நாடகங்கள்-5.,குறுங்காவியங்கள்-2,நெடுங்காவியங்கள்-4 (ஆனந்தத்தேன் சாகித்தியப்பரிசு. யாழ் காவியம் சம்பந்தர் விருது.,பெற்றவை.), தமிழர் யாழியல் -ஆய்வுநூல். மஞ்சு காசினியம்-இலக்கண நூல். இவர் எழுதியவை. அன்னபூரணி என்றொரு தொடர் நாவலை ஈழகேசரியில் எழுதியவர்.

சுவாமி விபுலாநந்தருக்கு ஆராய்ச்சித் துணைவராயும் இருந்துள்ளார். யாழ்பல்கலைக்கழகம் இவருக்கு **கலாநிதி** பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. சம்பந்தன் விருது.வ.கிமா. ஆளுனர் விருது. இலக்கியப்பேரவை விருது. சாகித்திய ரத்னா விருது. கலாகீர்த்தி விருது. என்பன இவர் பெற்ற விருதுகள்.

**தண்ணீர்த் தாகம்**

**12/2/ 39 ல் ஈழகேசரியில் பிரசுரமான இவருடைய முதல் கதை இது. இக்கதையே சாதி எதிர்ப்புக் கதையாகப் போற்றப்பட்டது.**

**பங்குனி மாதம் வெயில் மிகவும் காய்தலாக அடித்துக் கொண்டிருந்தது.....**

**எனத் தொடங்கி**

**விடாய் அடங்கியதோடு அவன் கண் திறக்கவேயில்லை.**

**என்று முடியும் ஆனந்தன் என்ற புனைபெயரில் இவர் எழுதிய தண்ணீர்த் தாகம் எனும் இக்கதையை ஈழகேசரிக் கதைகள் தொகுப்பில் முதற் கதையாக வாசியுங்கள் நண்பர்களே.**

இவரை நான் ஆரம்பத்தில் எழுதி இருக்கவேண்டும்.

21/3/2008 ல் காலமாகிய இவர் பற்றி எழுத நினைவூட்டிய இவரது நாமத்தை உடைய அந்த காவி வேட்டிக்காரருக்கு நான் நன்றி சொல்ல மாட்டேன்.

ஏனெனில் இவர் என் பதிவுக்கு உரியவரே.

**30 May 2018**

## பிடித்த சிறுகதை 126

இவரைப் பற்றி எழுத முன்னர் ஒரு விடயத்தை நான் சொல்லியாக வேண்டும். தன் மொழிபெயர்ப்பு ஒன்றின் மூலம் மூல ஆசிரியர் மீது வெறுப்பை ஏற்படுத்தியவர்.

செந்தமிழ் நடையில் அதை மொழியாக்கம் செய்திருந்தார். ஆயினும் பல பதிப்புகள் கண்ட அந்தச்சிங்கள நாவல் பிறர் எவராலும் தமிழாக்கப் படாமல் இவர் மொழிபெயர்த்த அந்த வடிவத்திலேயே இன்றும் அச்சாகி வருகிறது.

**பேராசிரியர்.ம.மு. உவைஸ்**

பாணந்துறை காலிவீதி கொறக்கானவில் 15/1/22 ல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை இவரது தகப்பனாரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் பேரா. சிவத்தம்பியின் தகப்பனார் கார்த்திகேசு மற்றும் யாழ்ப்பாணத்தின் இரு ஆசிரியர்கள் கந்தையா, செல்லையாவிடம் கற்றார். பின்னர் சிங்களம், பாளி, ஆங்கிலத்தை வெவ்வேறு பாடசாலைகளில் கற்றார்.

1946ல் இலங்கைப் பல்கலைகழகத்தில் இணைந்த போது சுவாமி விபுலானந்தரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழைச் சிறப்பு பாடமாக கற்றார். பேரா. க.கணபதிப்பிள்ளை

அவர்களின் கீழ் இவர் முதுமாணி பட்டத்திற்காகச் சமர்பித்த கட்டுரை. **தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு. Muslim Contribution to Tamil Literature** என இது ஆங்கிலத்தில் நூலாகியுள்ளது.

இவர் வித்தியோதயா பல்கலைக் கழகத்தில் 60களில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்துள்ளார். அரச கரும மொழிகள் திணைக்களத்திலும் கடமையாற்றி இருக்கிறார்.

**இஸ்லாமும் இன்பத்தமிழும்**, முதல் 16 நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் பதிப்பித்த நூல்களில் **ஆசாரக்கோவை, புலவராற்றுப்படை** என்பனவும் அடங்குகிறது.

**குத்பு நாயகம், இராசநாயகம்** ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளார். தமிழாராய்ச்சி மாநாடு,இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாடுகளுக்குத் தலைமைதாங்கி உள்ளார்.

மொழிபெயர்ப்பு முயற்சிகளில் சிங்களத்திலிருந்து தமிழுக்கு. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட மார்ட்டின் விக்கிரமசிங்காவின் நாவல் **கம்பரெலிய** வை **கிராமப் பிறழ்வு** என்று செந்தமிழில் தந்தார். தமிழில் இருந்து சிங்களத்திற்கு. **நபிகள் நாயகம், தித்திக்கும் திருமறை** (இரு) நூல்கள். தேவராஜன் என்பவரின் **வணிக எண் கணிதம்** எனும் நூலையும் சிங்களத்தில் மொழிபெயர்த்தார்.

**இன்னுமா சீதனம்.?**

**1948 ல் இவரால் எழுதப்பட்ட சிறுகதை இது. வேறு கதைகள் இவர் எழுதி இருக்கலாம் என் தேடலில் இக்கதை மட்டுமே கிடைத்தது..**

**இக்கதையும் யூரீ எனும் சிங்கள இளைஞன் பற்றியதே.**

**ஊர்மனை ஒரு சிறிய கிராமம். வயல்கள் நிறைந்த**

**கிராமம்....**

**என ஆரம்பித்து.**

**கல்வி அறிவுள்ள யூஸ்ரீ ஏன் சீதனப் பேய்க்கு அடிமையானான் என்பது இன்னும் மர்மமாகவே இருந்து வருகின்றது.**

**என்று முடியும் இக்கதையை 64 ல் வெளிவந்த யு.எல்.தாவுத் தொகுத்த முஸ்லிம் கதை மலர்கள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

படிப்பறிவு குறைந்த இங்குள்ள பாமர மக்கள் அறியுமாறு கட்டுரைகளும், நூல்களும் எழுதிய ம.மு.உவைஸ் அவர்கள் 5/3/96ல் மறைந்தமை தமிழ் மற்றும் இஸ்லாமிய இலக்கிய ஆர்வலர்களுக்கு பேரிழப்பே.

கவிஞர் அல்லாமா இக்பாலுக்குப் பிறகு அல்லாமா பட்டம் கிடைத்தது இவர் ஒருவருக்கே.

**31 May 2018**

சென்ற ஆண்டு அகவை 75ல் தனது பவள விழாவை கண்ட வன்னி மண்ணின் புதல்வர் இவர். தனது ஒரு நாவல் மூலம் வாசகர்கள் மனதில் நிலைத்திருப்பவர்.

33 வருடங்களுக்கு மேலாக டென்மார்க்கில் வாழ்பவர்.

**அ.பாலமனோகரன்**

7/7/42ல் முல்லைத்தீவு தண்ணீரூற்றில் பிறந்த அண்ணாமலை பாலமனோகரன். வட்/ யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவன். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில சிறப்பு பயிற்சி பெற்று 1967ல் மூதூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியரானார். அப்போது வ.அ. வுடன் தொடர்பு ஏற்பட்டு இலக்கிய உலகில் கால் பதித்தார்.

முள்ளியவளை வித்தியாநந்தாக் கல்லூரியில் பணியாற்றும் காலத்தில்தான் இவருடைய புகழ்பெற்ற நாவலான **நிலக்கிளி** வெளிவந்து 73

ம் வருடத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்று, **நிலக்கிளி பாலமனோகரன்** எனும் பெயர் பெறக் காரணமாக இருந்தது. இவரது புனைபெயர் **இளவழகன்**

மண்ணின் பிரதிபலிப்பாக தன் படைப்புகள் அமைவதற்கு வ.அ.வின் வழிகாட்டலே உதவியதாக இவர் நன்றியோடு குறிப்பிடுகிறார்.

**இவரது வெளிவந்த ஏனைய நூல்கள்**

கனவுகள் கலைந்த போது(நாவல் வீரகேசரி), குமாரபுரம் (நாவல், வீரகேசரி), தாய் வழித்தாகம் (நாவல் வீரகேசரி), தீபதோரணம்(11 சிறுகதைகள், 77க்கான சாகித்தியபரிசு), நந்தாவதி (நாவல், தமிழக வெளியீடு, பின்னர் வட்டம் பூ என்ற பெயரில் அப்பால் தமிழ் இணையதில் தொடராக வந்தது),

நாவல் மரம், (ஆங்கிலத்தில் இவர் எழுதிய 10 கதைகள், டேனிஷ் மொழியில் இருவரால் மொழிபெயர்க்கப்பட்டது), டேனிஸ்-தமிழ் அகராதி, நிலக்கிளி 1973 முதற்பதிப்பு வீரகேசரி, 2002 இரண்டாம் பதிப்பு மல்லிகைப் பந்தல், 2008 வட்டம்பூவுடன் இணைத்து மித்ர வெளியீடு), சமீபத்தில் சாமிநாதன் விமலால் சிங்களத்தில மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஆங்கிலத்திலும் இவர் எழுதுகிறார். இவரது இயங்கு துறைகள்: நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு.

2003 மார்ச் மல்லிகையில் வெளிவந்த இவரது அட்டைப்படக் கட்டுரையை வன்னி மண்ணின் மற்றுமோர் மூத்த படைப்பாளி முல்லைமணி எழுதியிருந்தார்.

**பனைகளின் நடுவே**

**1968ல் சிந்தாமணியில் பிரசுரமான கதை இது.**

**இதே வருடம் இப்பத்திரிகை இவரது மலர்கள் நடப்பதில்லை எனும் முதற் கதையைப் பிரசுரமாக்கி இவரை அறிமுகப்படுத்தி இருந்தது.**

**அடர்ந்த காட்டிடையே பிறந்து**

**என ஆரம்பித்து**

**சின்னப்பனுடைய விழிகளின் கடையோரங்களில் கண்ணீர் கசிந்தது.**

**என்று முடியும் இக்கதையை இவரது தீபதோரணங்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

என் வரையில் நாவல் துறையில் இவரடைந்த வெற்றியை சிறுகதைத் துறையில் இவரால் பெறமுடியவில்லை என்றே கூறுவேன்.

அதிலும் **நிலக்கிளி** நாவல் ஒன்றைத் தவிர.

**31 May 2018**

இவர் ஒரு அச்சகத் தொழிலாளி. கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இவரை நன்கறிவர். 76 ல் யாழ்ப்பாணத்தில் இவரது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் விமர்சன உரை நிகழ்த்திய பேச்சாளர்களில் நானும் ஒருவன். எளிமையானவர்.

**முத்து இராசரத்தினம்**

யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் சிறுவயதிலேயே அச்சகத் தொழிலில் புகுந்தவர். 67 ல் கொழும்பு பாமன்கடை ராஜா அச்சகத்தில் வேலை செய்யும் போது அவர்களினால் இவரது கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது.

**வசந்தம்** சஞ்சிகையிலும் இவர் கவிதை வெளிவந்தது.

71 ல் மூன்று இதழ்களே வெளிவந்த இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவையினரின் **கற்பகம்** இதழின் வெளியீட்டாளராகவும், ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் இருந்தவர். இவரது

சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை பேரா.க.கைலாசபதி. பின் அட்டைக்குறிப்பு அமரர் நெல்லை க.பேரன்.

இவரது சிறுகதை நூலை வெளியிட உற்சாகம் கொடுத்தவர் எழுத்தாளர் சு.இராஜநாயகன்.

**இவரது நூல்கள்**

என்று வரும்?(1967, கவிதைகள், ராஜா அச்சகம் பாமன்கடை), சிலந்தி வயல் ( 1976, சிறுகதைகள், பீஷ்மன் பதிப்பகம்).

**சிலந்தி வயல்**

**11/3/71ல் வெளிவந்த இக்கதையோடு இன்னும் மூன்று கதைகள் 73ல் கொழும்பு கலை இலக்கிய நண்பர்களால் விமர்சிக்கப்பட்டது.**

**சிலந்தி வயல், தனக்கு ஏற்பட்ட பாதிப்பினால் ஆழமாக சமுதாயத்தைச் சிந்தித்து வைத்திருக்கிறாள், வழி ஏதாவது ஏற்படவேண்டும், சந்தனக்கட்டை என்பனவே அக்கதைகள்.**

**இவரது சிறுகதைத் தொகுதியின் பெயரும் சிலந்தி வயலே.**

**சாய்வு வெய்யில் சுட்டது..**

**என ஆரம்பித்து**

**மணியம் தெருமுழுக்க பரிபூரணத்தைத் தேடி அலைகின்றான்.**

**என்று முடியும் இக்கதையை சிலந்தி வயல் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

79 ல் ஊரைவிட்டு விலகிவிட்டேன். யாரையும் சந்திக்காத நாட்டுச் சூழ்நிலை. தன் அனுபவங்களை வெறும் சோடனைகளற்று

கதைகளாக தந்த இவரை நான் பிறகு சந்திக்கவில்லை.

இன்றைய அவர் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியாத நிலை. நூல் விமர்சனத்தை **சாய்வு வெய்யில் சுட்டது** என்ற அவரது கதையின் முதல் வாக்கியத்துடன் ஆரம்பித்தது மட்டும் பசுமையாக நினைவில் உள்ளது.

**1 June 2018**

அவ்வப்போது உதிரியாக சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்த இவர், தனது நாவல் மூலம் எங்களை எல்லாம் திரும்பிப் பார்க்க வைத்தார். இளங்கீரன், செ.கணேசாலிங்கன் வரிசையில் வயதில் குறைந்தவரான இவரின்பெயரும் தவிர்க்க முடியாதபடி சேர்த்துக்கொள்ளப்பட்டது. இவருக்கு உந்து சக்தியாக இருந்தவர். செ.கணேசலிங்கன்.

**சி.சுதந்திரராஜா**

யாழ்ப்பாணம் தாவடியைச் சேர்ந்த இவர். தனது **மழைக்குறி** நாவலின் மூலம் அறியப்பட்டவர். தபாலதிபர் தந்தியாளர் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பில் நீண்ட காலம் கடமையாற்றியவர். மூன்று மொழிகளிலும் பேசும் ஆற்றல் பெற்றவர். ஸ்தாபன மயப்படாவிட்டாலும் இடதுசாரிச் சிந்தனையாளர். சுதந்திரனில் அறிமுகமாகி இலக்கிய உலகுக்கு வந்தவர். ஒதுங்கிப் போகும் சுபாவம். இலக்கியக் கூட்டங்களில் பெரிதாகப் பங்கு பற்றாதவர்.

**மல்லிகை, தினகரன்,சமர், தொண்டன், கிருதயுகம், ஈழநாடு, நவமணி, தாயகம், வலம்புரி,**

**கணையாழி** ஆகியவற்றில் 75 க்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியவர். மல்லிகையிலேயே இவரது கதைகள் கூடுதலாகாப் பிரசுரமாகியிருக்கின்றன. இவரது 60 கதைகள் நூலாகி இருக்கின்றன. இரண்டு நாவல்களும் எழுதியுள்ளார்.

**வெளிவந்த நூல் விபரங்கள்:**

மழைக்குறி (நாவல், முதற்பதிப்பு 1974, இரண்டாம் பதிப்பு 2004, மணிமேலை), சிறுகதை (46 கதைகள்,2001, மேனகா), சிறுகதை (அதே பெயரில் 14 மல்லிகைக் கதைகள், 2004 சாந்தி), அடிவாரம் ( நாவல், 2004, மணி மேகலை).

**பூபாளமும் புதுச் சிலிர்ப்பும்**

**1980 நவம்பர். சமர் சஞ்சிகையில் பிரசுரமான கதை இது. அக்கால கொழும்பு விளிம்பு நிலை சிங்களத் தொழிலாளி ஒருவன் தமிழனென சந்தேகப்பட்டு சித்திரவதை செய்யப் படுவதைக் கூறும் கதை.**

**83க்குப் பிறகான நிகழ்வுகளுக்கான கட்டியம் இக்கதை.**

**சிரில் சீலிங் பலகைகளிலான அந்த நாற் சதுர அடைப்புள்ளே வெறுஞ்சாக்குக் கட்டிலில் கிடந்தான்...**

**எனத் தொடங்கி**

**இப்போதுதான் அவன் நுழைந்ததையே உணர்ந்தான்.**

**என்று முடியும் இக்கதையை இவரது 46 கதைகள் உள்ள தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

நான் இவருடன் பரிச்சயம் இல்லாதவன். இவரது நூல்களைப்பற்றிய விமர்சனக் குறிப்புகள் எழுதிய நண்பர்களுக்கு இவரைப் பற்றி இன்னும் கூடுதலாகத் தெரியக்கூடும். அவர்கள் உதவ வேண்டும். இவரது நூல்களில் முன்னுரை, என்னுரை எதுவுமே இல்லை. ஒரே பெயரில் இரண்டு சிறுகதைத் தொகுதிகள் ஏன்....?

**1 June 2018**

இவர் என் அயலூர்க்காரர். பொலிகண்டி என்பது சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சி அனுதாபிகள் நிறைந்த ஊர். **மக்கள் படிப்பகம்** என்று ஒரு வாசகசாலை இருக்கிற ஊர். எனக்குத் தெரிய கிளிநொச்சியைச் சேர்ந்த கணேசபிள்ளை என்பவரும் இவருமே 74ல் வட பிரதேச JVP. ஆதரவாளர்கள். சந்திப்பது குறைவு. சந்தித்தால் அரசியல் கருத்து முரண்பாட்டோடேயே பேச்சு முறியும். காரசாரமான விமர்சகர்.

**த.ஆனந்தமயில்**

8/11/17 கரவெட்டியில் பிறந்த தம்பிப்பிள்ளை ஆனந்தமயில் நெல்லியடி.ம.மா. வித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வரா வல்வை சிதம்பராவின் பழைய மாணவர். பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணி பட்டதாரி. அரச எழுதுவினைஞர்.

கொழும்பு, மட்டக்களப்பு, அனுராதபுரம். நுவரெலியா, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களிலும், பரு.வலயம், கரவெட்டி கோட்ட கல்விக்

காரியாலயங்களிலும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். பொலிகண்டியில் வாழ்ந்தவர். 95 ல் ஏற்பட்ட விபத்தினால் நடமாட முடியாதிருந்தாலும், சோர்வடையாது தனது அன்றாடக் கடமைகளைச் செய்தவர். மிகக் குறைவாக எழுதினாலும் காத்திரமான கதைகளுக்குச் சொந்தக்காரர்.

மல்லிகை, அலையில் இவர் கதைகள் பிரசுரமாகி இருக்கின்றன. நடந்து விட்ட அனர்த்தங்கள் இவரது படைப்புகளை இல்லாது செய்து விட்டன. அதில் சிவனொளிபாதமலை யாத்திரை பற்றிய **சோகம் நிரம்பிய யாத்திரை** எனும் கதையும் அடங்கும். **வீச்சு வலைக்காரனும் மாதுளம் பிஞ்சுகளும்** எனும் கவிதைத் தொகுப்பு இன்னும் பிரசுரமாகவில்லை. **அம்மாவரை அவன்** என்ற குறுநாவலையும் எழுதியுள்ளார். அது **நினைவிலிருந்து சொற்களுக்கு** என்னும் இவரது நினைவு மலரில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவரது சிறுகதைத் தொகுப்புக்கு **இ.முருகையன்** அவர்கள் சிறப்பான அணிந்துரை எழுதியிருக்கிறார். **ஒற்றைக்கால் கோழி, முருகைக்கற் பூக்கள், திருவிழா, வாழும்வெளி** போன்ற 12 சிறுகதைகள் கொண்ட அத்தொகுப்பை அவரது வாரிசுகள் தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

பலரது கவனத்தையும் பாராட்டையும் பெற்ற அத்தொகுதி அவர் வாழும்போதே வெளிவந்து 2008 ல் வட மாகாண சிறந்த நூல் விருதைப் பெற்றது.

**இவரது நூல்கள்**

ஒரு எழுதுவினைஞனின் டயறி(சிறுகதைகள்,2008), நினைவிலிருந்து சொற்களுக்கு(நினைவு மலர் 2012).

**ஒற்றைக்கால் கோழி**

**மல்லிகை-1981. இதழ் 155இல் இக்கதை பிரசுரமானது. மிகுந்த எள்ளல் தொனியுடன் இக்கதை எழுதப்பட்டிருந்தது. இவரின் ஏனைய கதைகளை விட வித்தியாசமானது.**

**எழுத்தாளர் தம்பி வீட்டுவாசலில் ஏறியபோது**

**அவரின் சுபாவம் விசர் கொண்டது.**

**என ஆரம்பித்து**

**அவற்றிற்கு உருவம் கொடுப்பதில் தான் ஒற்றைக்கால் கோழியாய்ச் சங்கடப்பட்டுக் கொண்டார்.**

**என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியிலும், மல்லிகைச் சிறுகதைகள் 2 வது தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

11/2/2012 ல் காலமாகிய இவரை பெரும் விமர்சகர்கள் கண்டு கொள்ளவில்லை என்பது உண்மை.

ஆனால், நல்ல வாசகர்கள் இவரை அறிந்து வைத்துள்ளனர் என்பதும் நிச்சயமான உண்மை.

**2 June 2018**

1967ஆம் ஆண்டு நவம்பரில் தினமொரு சிறுகதை திட்டத்தில் என். எஸ். எம். ராமையாவின் சிபார்சுடன் இவரது முதலாவது சிறுகதை பிரசுரமாகி இருந்தது. கதையும் பிடித்து இவரது பெயரும் அப்போதே எனக்குப் பிடித்துப் போய் விட்டது. மலையக இலக்கியவாதிகளில் முக்கியமானவர். இவர் ஒரு இடதுசாரிச் சிந்தனையாளர்.

**மலரன்பன்**

**மாத்தளை மலரன்பன்** என அறியப்படும் இவரது இயற்பெயர் ஆறுமுகம். நோர்த் மாத்தளைத் தோட்டத்தில் பிறந்த இவர் மாத்தளை கிறிஸ்தவ பாடசாலையில் கற்றவர். பின்னர் ஆசிரியராகி அதன் பிறகு தனியார் துறையில் உயர் பதவி வகித்தவர்.

**செய்தி, வீரகேசரி, அஞ்சலி, சிரித்திரன், கொழுந்து, சிந்தாமணி**யில் எழுதியவர். வானொலியில் பல மெல்லிசைப் பாடல்களை எழுதியவர். அவை இறுவட்டுகளாக வெளிவத்துள்ளன. மகாவலியே மாநதியே இவரது மெல்லிசைப்பாடல் தொகுதி.

இவர் எழுதிய சிறுகதைகளுக்காக பல பரிசுகள் பெற்றுள்ளார். அவை :வீரகேசரி மலையக சிறுகதைப் போட்டி(3 முறை பரிசு), செய்தி சிறுகதைப் போட்டி (1ம் இடம் சடங்கு), அரச கலா. திணைக்கள மாத்தளை சிறுகதை போட்டி(1ம் இடம் அக்கினிக்குஞ்சு), மலையக இளை.முன்னணி, குறுநாவல் போட்டி (முதலாம் இடம் **சில தனிமரங்களும் ஒரு பெரு நெருப்பும்)**

**இவரது வெளிவந்த நூல்கள் :**

கோடிச்சேலை (சிறுகதை, சுஜாத்தா பதிப்பகம், 1989, சாகித்தியப் பரிசு), தோட்டக் காட்டினிலே (மூவர் கதைகள்,3 கதைகள் இவரது), மலை இலக்கியம் (சிறுகதைகள். மத்.மாகா.சபை. தொகுப்பாசிரியர்), பிள்ளையார் சுழி (12 கதைகள் கொடகே, 2008, இக்கதைகள் சிங்களத்தில் நூலாகி உள்ளது). இவர் சிங்கள மொழிபெயர்ப்புகளும் செய்கிறார், (இவரின் மனைவி சிங்களவர்.) சாந்தி ஆறுமுகம் என்ற பெயரில் ஜி.பி.சேனநாயக்காவின் **பலிகெனிம** கதையை மொழிபெயர்த்தார். இவரது மொழிபெயர்ப்பு நூலொன்று 2015 கொடகே பரிசைப் பெற்றுக்கொண்டது.

சிறு சந்தோசம் முதன் முறை அவரைச் சந்தித்தேன். அவருக்கான விருது மேடையில் என்னால் வழங்கப்பட்டது.

பார்வதி

**இதுவே இவரது முதல்கதை.தினபதியில் வெளிவந்தது.**

**இப்படியாகத்தானேஅந்தப் பத்துத் தலை இராவணனாகப் பட்டவன்.........**

**எனத்தொடங்கி**

**அத்துடன் அன்றைய இராமாயண வாசிப்பை முடிக்கிறார் மேட்டு லயத்து அண்ணாவிக் கங்காணி.**

**என்று முடியும்**

**இக்கதையை இவரின் கோடிச்சேலை தொகுப்பிலும் மூவர் கதைகைள் அடங்கிய. தோட்டக்காட்டினிலே தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

1967ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தினபதியில் பிரசுரமான 27 கதைகளையும் ரகுராமன் என்ற பெயரில் மதிப்பீடு செய்த எஸ்.பொ. மலரன்பனின் முதற்கதையான பார்வதி கதையையே சிறந்த கதையெனத் தெரிவு செய்தார்.

**2 June 2018**

"**பூ**னைக்கு மணிகட்டிப் பார்த்தால் என்ன? என்ற மனவுந்தல் எனக்கு ஏற்பட்டது, அதன் விளைவு உங்கள் கரங்களில் இருக்கும் **முஸ்லிம் கதைமலர்**" இப்படியாக தான் தொகுத்த 14 முஸ்லிம் எழுத்தாளர்களின் நூலுக்கு தொகுப்புரை எழுதியவர். 3/7/1990 ல் ஏறாவூரில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒருவர்.

**யூ. எல். தாவூத்**

4/4/ 36 ல் ஏறவூரில் பிறந்த **உமறு லெப்பை தாவுத்.** அன்னை மடியில் வளர்ந்தவர். வாப்பா இல்லாது வறுமையை அனுபவித்தவர். 1945 ல் S.S.C சித்தியடைந்து ஆசிரியராகி ஏறாவூர், மூதூர், கொழும்பில் கடமையாற்றியவர். 1969. பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரி ஆனார். ஏறாவூரின் முதல் பட்டதாரி இவர். 1980 ல் கல்வி டிப்ளோமா சித்தி பெற்று தான் கற்ற பாடசாலைக்கு அதிபரானார். காணாமல் ஆக்கப்படும் வரை பல்வேறு பாடசாலைகளில் அதிபராக இருந்து இறுதியாக, அலிகார் தேசிய பாடசாலையில்

அதிபராக இருந்தார்.

கதை, கட்டுரைகளும், மதசம்பந்தமான எழுத்துகளும் இவரது பணியாக இருந்தது. இலங்கை வானொலியில் பல இஸ்லாமியக் கட்டுரைகள் படித்தார். இருளிலிருந்து என்ற கதை இவர் தொகுத்த முஸ்லிம் கதை மலர்கள் தொகுப்புக்காக எழுதிய கதை. இவர் வேறு கதைகள் எழுதியிருக்கலாம் என் தேடலில் கிடைக்கவில்லை.

**இவரது நூல்கள்**

மறுவிலாதெழுந்த முழுமதி மாநபி.(மொழிபெயர்ப்பு நூல்), 1964 ல் ஸபீனா பதிப்பகத்தினூடாக 14 எழுத்தாளர்களின் கதைகளைத் தொகுத்து முஸ்லிம் கதை மலர்கள் என்ற நூலை வெளியிட்டார். பல புகழ் பெற்ற ஆளுமைகளை சிறுகதை எழுத்தாளர்களாக அடையாளம் காட்டிய தொகுப்பு அது. அதில் இடம்பெற்ற எழுத்தாளர்கள், பித்தன், அ.ஸ.அப்துஸ் ஸமது, ம.மு.உவைஸ், அண்ணல், யுவன், மருதூர்க்கொத்தன், ஏ.இக்பால், எம்.ஏ.நு:மான், எம்.எம் மக்கீன். செய்னுல்ˇ ஹுஸைன், எம்.ஏ.எம்.சுக்ரி, மருதமுனை மஜீத், அபூஷானாஸ், யூ.எல் தாவுத்.

**இருளிலிருந்து...**

**மாலைக் கதிரவனின் மஞ்சள் வெய்யில்..**

**என ஆரம்பித்து**

**என் இதயம் காற்றைப் போல இலேசாக இருக்கிறது.**

**என்று முடியும் இக்கதையை முஸ்லிம் கதை மலர்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

குறைவாக எழுதினாலும் நல்ல ஒரு தொகுப்பை தந்ததின் மூலம் என் போன்ற வாசகர்களுக்கு இவரின் பெயரை இத்தொகுப்பு என்றும் நினைக்க வைக்கும்.

**2 June 2018**

இவரை முதன்முதல் நான் சந்தித்த போது இவரது அலட்சிய சுபாவம் எனக்கு அதிருப்தி அளித்தது. பின்னர் அது அவரது தனித்துவம் என்பதை அறிந்து கொண்டேன்.

**நீலாவணன், சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ.நுஃமான்** வட்டத்தைச் சேர்ந்தவர். கல்முனை தமிழ் இலக்கிய கழக செயலாளராக இருந்தவர், நீலாவாணன் பண்ணையில் வளர்ந்தவர். நாடறிந்த கவிஞர். பின்னொரு சமயம் 2013 ல் கி.மா. கவிதை நூல் நடுவரான இவரிடம் புத்தகங்கள் ஒப்படைக்க பெரிய நீலாவணை சென்றபோது மைமலான ஒரு மாலைப்பொழுதில் இவரைச் சந்தித்தேன். அன்போடு வரவேற்று உபசரித்தார். கலாசார உத்தியோகத்தர் அன்பழகனுடன் அங்கு சென்றிருந்தேன்.

**மு.சடாட்சரன்**

6/5/40இல் கல்முனையில் பிறந்த முருகேசு சடாட்சரன். ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். 64 ல் ஆசிரியர் நியமனம் பெற்று இரத்தினபுரி பறக்கடுவையில் பெற்ற

அனுபவத்தின் வெளிப்பாடே இவரது இந்த முதற்கதை.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை அதிபராகி இறுதியில் உதவிக்கல்விப் பணிப்பாளராகி ஓய்வு பெற்றவர்.

இவரது முதற் கவிதை **பாரதி யார்?** 1959. சுதந்திரனில் பிரசுரமாகியது. அதன் பிறகு தொடர்ச்சியாக இலங்கை இதழ்கள் அனைத்திலும், தமிழக **கலைமகள், கணையாழி** ஆகியவற்றிலும் கவிதைகள் எழுதினார். இவரது கவிதைத் தொகுதிக்கு பெயராக உள்ள **பாதை புதிது** 1965 **கலைமகள்** சஞ்சிகையில் பிரசுரமானது. இவரது சிறுகதைகள் **வீரகேசரி, தினகரன் மல்லிகையில்** வெளிவந்து இருக்கின்றன. சுமார் 15க்கு மேற்பட்ட கதைகளை இவர் எழுதியுள்ளார்.

**இவரது நூல்கள்:**

> மேட்டு நிலம் (11-சிறுகதைகள், 2009, புரவலர் புத்தக பூங்கா, கிழக்கு மாகாண சிறந்த நூல் விருது), பாதை புதிது (70 கவிதைகள் 2012, கொடகே விருது, அரச சாகித்திய விருது).

இவருக்குக் கிடைத்த கௌரவங்கள் இலக்கிய வித்தகர். கலாபூஷணம். முதலமைச்சர் விருது.

பிடிப்பு

> **1967 இல் நீலாவணனை ஆசிரியராகக் கொண்டு கல்முனையிலிருந்து வெளிவந்த பாடும் மீன் சஞ்சிகையில் பிரசுரமான இவரது முதற் சிறுகதை இது. (பாடும்மீன் 2 இதழ்களே வெளிவந்தது.)**
>
> **ஆதவன் மேற்கு மஞ்சத்தில் போய் தஞ்சம் புகுந்தான் என்றால்..**
>
> **என ஆரம்பித்து**
>
> **மலையில் உள்ள வீடுகளில் மின்விளக்குகள் ஒளியைச் சொரிகின்றன.**

**என்று முடியும் இவரது மலையகம் சம்பந்தமான இக்கதையை மேட்டு நிலம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

மலையகத்தைப் பிரதிபலிக்கும் கதைகளை எழுதிய பிற பிரதேசத்து எழுத்தாளர்களில் இவரும் இக்கதையின் மூலம் மேலும் ஒருவராக சேர்ந்திருக்கிறார் என்பது முக்கிய செய்தி.

**3 June 2018**

## பிடித்த சிறுகதை 134

அப்போதெல்லாம் எம் மத்தியில் பரவலாக அறியப்பட்ட பெயர் இவருடையதாகத்தான் இருந்தது. குறைவாக எழுதினாலும் நிறைவான கதைகளைத் தந்தவர். யார் இவர்? என்ற தேடலை எம்முள் விதைத்தவர்.

சுந்தர ராமசாமி, பிரமிளால் பாராட்டப்பட்டவர். எனது இத்தொடரின் ஆரம்பத்திலேயே இவர் பற்றி எழுத குறிப்புகள் எடுத்து வைத்திருந்தேன். சில தகவல்கள் கிடைக்காமையே இத் தாமதத்திற்குக் காரணம். நண்பர் ஜவாத் எனக்கான தடைகளைத் தகர்த்தார்.

**எம்.எல்.எம்.மன்சூர்**

1950ல் கண்டி மாவட்டம் உடுநுவர பூவெலிக் கடையில் பிறந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி. மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் பாராளுமன்ற சமகால உரைபெயர்ப்பாளராக சில காலம் இருந்தவர். இப்போதும் அந்தப் பணியையே வெளியே மேற் கொள்கிறார்.

அரச கருத்தரங்குகளிலும் வெளிநாட்டுக் கருத்தரங்குகளிலும் இவரது சேவை பெற்றுக்

கொள்ளப்படுகிறது. மக்கள் வங்கி தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றிய போது **பொருளியல் நோக்கு** சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார்.

**கிரீஷ் கர்னாட்டின் துக்ளக்** நாடகத்தையும், **விஜய் டெண்டுல்கரின் அமைதி கோர்ட் தொடங்குகிறது** நாடகத்தையும் ஆங்கிலம் வழி தமிழில் பாலேந்திராவின் அவைக் காற்றுக் கலைக்கழகத்திற்காக மொழி பெயர்த்தார். துக்ளக் மட்டும் மேடையேறியது, மற்றையது நாட்டு நிலைமைகளால் மேடை காணவில்லை. எம்.ஏ.நு:.மான் தொகுத்த சிங்கள எழுத்தாளர்களின் **நம் அயலவர்கள்** நூலின் கதைகளில் 12 கதைகள் இவரால் மொழி பெயர்க்கப்பட்டவை.

சகோதர சிங்கள எழுத்தாளர் அஷ்லி ரத்னவிபூஷணவுடன் இணையாசிரியராய் இருந்து சினிமா சம்பந்தமான ஒரு நூலை ஆங்கிலத்தில் **The Early Sri Lankan Cinema and its Association with the South Indian Film Industry** எனும் பெயரில் இலங்கை -இந்திய நட்புறவு அமைப்பின் அனுசரணையில் 2013 ல் வெளியிட்டுள்ளார்.

அதோடு விமல் திசநாயக்கா, அஷ்லி ரத்னவிபூசண இணைந்து ஆங்கிலத்தில் எழுதிய **Profiling Sri Lankan Cinema.** என்னும் நூலை **இலங்கைச் சினிமா, ஓர் அறிமுகம்** என்ற பெயரில் தமிழாக்கியுள்ளார்.

தன் கதைகளை நூலாக்க சற்றேனும் விருப்பில்லாதவராக இருக்கும் இவர், தான் எழுதிய கதைகளை (20 வரையில்) சேகரிக்கவும் இல்லை.

அ.யேசுராசா எழுதிய ஒரு கட்டுரையில் (படிகள் 34) இவரது ஆறு கதைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

அவை: **முக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள்(80ல் வீரகேசரி, தகவம் ப.கதைகள்-2), சிறு தீப்பொறி மூண்டு பெரு நெருப்பாக எரியும்(74, ஓகஸ்ட, மல்லிகை), ஏப்ரல் எட்டு ஒன்பது பத்து (1981 ஐப், கார்,அலை), சலனங்கள் (74- ஜன,**

**மல்லிகை), நினைவுக்கோடுகள் (72-ஓகஸ்ட் மல்லிகை), ஓ..சகோதரத்துவமே(5/11/78,வீரகேசரி,இஸ்.தமி. இல.கழகம், பிறைப்பூக்கள்).**

ஒரு உண்மையைச் சொல்கிறேன். இவ் ஆறு கதைகளில் முதலில் இருக்கும் நான்கு கதைகளையே நான் வாசித்திருக்கிறேன்.

பொய் சொல்ல மாட்டேன்.

**ஏப்ரல் எட்டு ஒன்பது பத்து**

> **1981 (ஐப்-கார) அலை இதழில் பிரசுரமான கதை இது. சுந்தரராமசாமி, பிரமிளின் கவனத்தைக் கவர்வதற்கு நெடு நாட்களுக்கு முன்னரே எம்மைக் கவர்ந்த கதை.**
>
> **ஏப்ரல் 8.வெள்ளி. இன்று பெரிய வெள்ளிக்கிழமை**
>
> **என்று ஆரம்பித்து**
>
> **உடைகளைக் களையாமல் சப்பாத்துடன் அப்படியே கட்டிலில் சரிந்தேன். கண்களை மூடிக்கொண்டேன்.**
>
> **என்று முடியும் இக்கதையை அலை தொகுப்பிலும்,. ஆப்தீனின் பக்கம் இணையத்திலும் வாசியுங்கள் நண்பர்களே.**

பூவெலிக்கடை மன்சூர் என்ற பெயரிலும் ஆரம்ப காலத்தில் கதை எழுதிய இவரது படைப்புகள் இன்ஸான்.தினகரனிலும் வெளிவந்துள்ளது என்பது நான் அறிந்த தகவல்.

இவர் கதை எழுதுவதை எப்போதோ நிறுத்தி விட்டார்.

கண்டி மாவில்மடவில் வசிக்கும் எம்.எல்.எம். மன்சூர் அவர்களிடம் மற்றவர்கள் சொல்லுவது போல் **சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிடுங்கள்** என்று நான் சொல்ல மாட்டேன். ஏனெனில் அது அவரின் சொந்த விருப்பம்.

**4 June 2018**

இவரது புனைபெயர் எனக்கு மிகவும் பிடித்தமானது. ஆரம்பத்தில் அந்தப் பெயரை நான் பயன் படுத்த விரும்பினேன். அப்போதே அவர் அந்தப் பெயரில் பிரபலமாகி விட்டார். பின்னர் பிறிதொரு பெயரில் எழுதி இப்போது சொந்தப் பெயருக்கு வந்துவிட்டார்.

**“முற்போக்கு நற்போக்கு என எந்த அணியிலும் என்னைப் பிணித்துக் கொண்டவன் அல்ல நான். எழுத்தைத் தவமாகக் கொண்டவனுமல்ல..”** என தன்னைப் பற்றிக் கூறுகிறார்.

2011ல் திருகோணமலையில் இவரது சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு. நான் விமர்சனம். ஏற்புரையில் அவர் குறிப்பிட்டார்.

**“இன்று நந்தினி சேவியரின் விமர்சனம் என்றபோது நான் பயந்து போயிருந்தேன். அவர் கடுமையான விமர்சகர். நல்ல வேளை என்னை அவர் இன்று அப்படிக் கடுமையாக விமர்சிக்க வில்லை.”**

**மட்டுவிலான்**

சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் ஒரு பரந்த பிரதேசம். வடக்கு,.கிழக்கு, தெற்கு, மேற்கு என கிராமங்களைக் கொண்டது நான் மட்டுவில் வடக்கில் பிறந்தவன். இவர் இன்னொரு பிரதேசத்தில் பிறந்தவர்.

**மட்டுவிலான்** என்ற பெயரில் நான் விருப்புக் கொண்டதன் காரணம் இதுவே.

1945 ல் பிறந்த வே.தில்லைநாதன். ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர்.

இலங்கைப் பல்கலைக்கழக இளமாணிப் பட்டமும், முதுமாணிப் பட்டமும் பெற்றவர். இங்கிலாந்துப் பல்கலைக் கழகம் ஒன்றில் **Diploma in Education in English. Language Teaching.** என்ற பட்டமும் பெற்றவர். பாடசாலை, கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழக வளாகம் ஆகியவற்றில் ஆசிரியராக/ விரிவுரையாளராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். திருமண பந்தத்தால் திருகோணமலை வாசி ஆனவர். 80 பதுகளில் ஆங்கில சேவைக் கால ஆலோசகராக திருகோணமலை யில் இருந்துள்ளார்.

காலத்திற்குக் காலம் புனைபெயர்களை மாற்றிக் கொள்ளும் இவர் 60களில் எழுத்துலகுக்கு வந்தவர். சிறுகதை, குறுநாவவல், நாவல், குறுங்கதைகள், கிண்டல் கதைகள் இவரது இயங்கு தளம். ஆங்கிலத்திலும் எழுதுவார். இடைக்கிடை அஞ்ஞாதவாசமும் செய்வார். சுதந்திரன், சிந்தாமணி, வீரகேசரி, சுடர் ,சுடரொளி இவரது படைப்புகளுக்கு களம் கொடுத்தவை. மட்டுவிலான் (அறுபதுகளில்) லீலாமணாளன் (எழுபதுகளில்) இவரது புனை பெயர்கள். இப்போது சொந்தப் பெயரில்.

**இவரது நூல்கள்**

இதயத் தந்திகள் மீட்டப்படுகின்றன(1978, நாவல் வீரகேசரி பிரசுரம், இன்னொரு நாவலுடன் இணைந்து சாகித்தியப் பரிசு, வி.தில்லைநாதன்). இடரும் உறவும் (2011,

சிறுகதைகள், குறுங்கதைகள, வே.தில்லைநாதன்).

**இதுதான் முதலிரவு**

**ஆனந்த விகடனில் 1995ல் பிரசுரமான கதை இது. பிரசுரிக்கப் போகிறோம் என்று கடிதம் அனுப்பி 6 மாதங்களின் பின் பிரசுரமானது.**

**திடீரென்று இருள் சூழ்ந்தது....**

**எனத் தொடங்கி**

**இன்றைக்குத்தான் உண்மையில் அவர்களுக்குச் சாந்தி முகூர்த்தம் நிகழ்ந்துள்ளது.**

**என்று முடியும் இக்கதையை இடரும் உறவும் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

நவீன இலக்கியம் பெரிதாக வளர்ந்துள்ள இந்த நேரத்தில் ஆங்கிலப் புலமை நிறைந்த இவர் ஏன் அடுத்த கட்டத்திற்கு நகரவில்லை என்ற கேள்வி எனக்குள் எழுகிறது.

உண்மையில் ஏமாற்றம். உங்களிடமும் அக்கேள்வி நிச்சயம் எழவே செய்யும். இல்லையா?

**5 June 2018**

பிடித்த சிறுகதை 136

**கி**ளாலிப் பயணகாலம்.

90 கலவரத்தில் இடம் பெயர்ந்து வடமராட்சியின் கற்கோவளம் வராத்துப்பளை புகலிடம். மகன் அங்கேயே பிறந்திருந்தான். மகனையும் மனைவியையும் திருகோணமலை அழைத்துவர சென்ற சமயம் கிளாலிப் பாதை தடைப்பட்டு, பாஸ் கிடைக்காமல் **Jaffna Lagoon Declared a Prohibited Zone** என அரசாங்கம் அறிவித்தல் விடுத்த பத்திரிகைச் செய்தி வந்த நேரம்.

யாழ் அரச. அதிபரூடாக நான் கடமையாற்றிய காரியாலயத்திற்கு, தகவல் அறிவித்துவிட்டு யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டு விட்டேன். (பின்னர் முற்போக்கு எழுத்தாளரென தன்னைக் கூறிக் கொள்ளும், மூத்த எழுத்தாளரென விரைவில் கௌரவிக்கப்பட இருக்கிற வம்பு ஒருவனின் சதியால் **V.O.P.** அனுப்பப்பட்டு அப்போது அவன் போலித் தகைமையோடு உதவிப் பணிப்பாளராக இருந்தான்.(வீதிகளில் அலைந்த செய்தி இப்பதிவுக்கு அப்பாற்பட்டது) கற்கோவளத்திலுள்ள ஒரு வாசகசாலையே எனது போக்கிடம்.

மாலை உதயன் பேப்பர் மட்டும் அங்கே வரும்.

27/12/1992 உதயன் பேப்பரின் தலைப்புச் செய்தி. இச்சாரப்பட அமைந்திருந்தது.

**“நேற்று மட்டக்களப்பு மியான்குளத்தில் கண்ணி வெடித் தாக்குதல். அரச அதிபர் அந்தோனிமுத்து, மேலதிக அரச அதிபர் உட்பட அறுவர் மரணம் சிலர் காயம் ”**

அப்போது அந்த மேலதிக அரச அதிபர் நான் விரும்புகிற எழுத்தாளரான இவர்தான் என்பது எனக்குத் தெரியாது.

**வை. அஹ்மத்**

29/4/45 ல் வாழைச்சேனையில் பிறந்த யாசின் பாவா **அஹ்**மத். 1964 ல் ஆசிரியராகி பயிற்றப்பட்ட ஆசிரியரானவர். பேராதனை பல்கலையின்கலைமாணி பட்டத்தையும்,பட்டப்பின் படிப்பாக யாழ்/ பல்கலையில் கல்வி டிப்ளோமாவும் பெற்றவர். அதிபர் பதவி, மூதூர் கோட்டக் கல்வி அதிகாரி, வாழைச்சேனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளை வகித்து இறுதியாக மட்டக்களப்பு மேலதிக அரச அதிபராகியவர்.

இவரது முதற்கதை **அடித்த கரங்கள்** இளம்பிறையில் பிரசுரமானது. சிறுகதை,குறு நாவல், நாவல்,நாடகம் , ஆய்வு, சமூகவியல் செயற்பாடு இவரது இயங்கு தளம்.

1976 ல் இவர் எழுதி வெளியிட்ட **புதிய தலைமுறைகள்** வீரகேசரி பிரசுர நாவல் சாகித்தியப் பரிசு பெற்றது.

கிராமத்துப் பெண், மறுபடியும் அவள், முடிவுகள் நிச்சயமல்ல என்ற நூல் வடிவில் வராத நாவல்களையும் எழுதியுள்ளார்.

**இளம்பிறை, இன்ஸான், மணிவிளக்கு, வீரகேசரி, தினகரன், கலங்கரை, வானொலி மஞ்சரி, கலைஞானம், மல்லிகை** என்பன இவர் எழுதிய பத்திரிகைகள், சஞ்சிகைகளாகும். இவர் எழுதியவை இவை என ஒரு தகவல் கூறுகிறது.

26-சிறுகதைகள்,30-கவிதைகள்,12-உருவகக்கதைகள், 07-நாவல்கள்(குறுநாவல்கள் உட்பட)

**இவரது வெளிவந்த நூல்கள்**

வாழைச்சேனை ஒரு வரலாற்றுக் குறிப்பு(1992), மொழியும் வழியும் (1992). முக்காடு (26 சிறுகதைகள்.31/12/1999- உயிர்ப்பைத்தேடும் வேர்கள்), தரிசனம், நிலவின் நிழலில் (2-குறுநாவல்கள் 31/12/1999. உயிர்ப்பைத் தேடும் வேர்கள்), புரட்சிகரமான திட்டம் (2013), புரட்சிக் குழந்தை (71 JVP கால பின்னணி கொண்ட குறுநாவல், 2016. மின் நூல், சிம் பப்பிளிக்கேசன்).

**மதியம் தப்புகிறது**

**1976 ல் வீரகேசரியில் பிரசுரமான கதை இது.**

**வாப்பாவுக்கு நீஞ்சத்தெரியும்...**

**என ஆரம்பித்து**

**அவன் அவட காக்கட மகன்.**

**என்று முடியும் இக்கதையை முக்காடு தொகுதியிலும் ஆப்தீன் பக்கம் வலைப்பதிவிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

அநீதியை எதிர்த்துப் போராடி வெற்றி பெறவேண்டும். ஆதிக்க உணர்வை ஒழிக்க வேண்டும். வறுமையை ஒழிக்க வேண்டும். அறிவை மலரச் செய்ய வேண்டும். இவற்றிற்கெல்லாம் எழுத்துப் பயன்படுமானால் அந்தப் பங்களிப்பு எனக்குத் திருப்தியை ஏற்படுத்தும் என்பது இவரது கூற்று.

இதை விட இவரைப் பற்றி பெரிதாக வேறு என்னத்தைத் தான் நான் கூற?

**5 June 2018**

# பிடித்த சிறுகதை 137

உளவியல் சார்ந்த எழுத்துகளைப் படிக்கிற விருப்பு. அப்போது அப்துர் ரஹீம் என்பவரது புத்தகங்கள் என்னைக் கவர்ந்தன. பின்னர் ஆக்க இலக்கியத் துறையின் பக்கம் என் கவனம் திரும்பி மார்க்சிய நூல்களால் ஆகர்சிக்கப்பட்டேன்.

70களின் ஆரம்பத்தில் இவரது பெயர் அறிமுகமாகியது. வாசிப்பு ஆர்வத்தினால் இவரையும் வாசிக்கத் தலைப்பட்டேன். பெரிதாக இவர் படைப்புகள் என்னை ஈர்க்கவில்லை. ஆயினும் இவரை நான் வாசிக்கவே செய்தேன்.

இவரது கணவர் வடமராட்சி நெல்லியடியைச் சேர்ந்தவர். அகதியாக ஓடத் தொடங்கிய 80களில் தன் கணவரின் சைக்கிளில் இவர் பயணித்ததை இன்னொரு அகதியான நான் பல தடவைகளில் கண்டிருக்கிறேன். அப்போது இவர் ஒரு தடித்த பிறேம் உள்ள கண்ணாடி அணிந்திருந்தார். (இப்போது இல்லை) இவரோடு அறிமுகமும் இல்லை. அவல நிலமையில் இலக்கியமா பேசமுடியும்?

வலிகாமப் பிரதேசத்தில் இந்திய ஆமி காலத்திலும் அகதிக் கோலத்திலேயே இவரைக் கண்டிருக்கிறேன்.

**கோகிலா மகேந்திரன்**

17/11/50 ல் தெல்லிப்பளை விழிசிட்டியில் பிறந்த கோகிலாதேவி சிவசுப்பிரமணியம். (திருமணத்தின் பின் கோகிலாதேவி மகேந்திரராசா.) தெல்லிப்பளை மகாஜனாவினது மாணவி. பேராதனை பல்கலை மருத்துவ பீடத்திற்கு தெரிவானவர். ஆனால், அதைத் தொடராமல் இடை நிறுத்திக் கொண்டவர். 74 ல் ஆசிரியராகி, அதிபராகி பின்னர் உதவிக் கல்விப் பபணிப்பாளராகி ஓய்வு பெற்றவர். யாழ் பல்கலைக்கழக நாடக டிப்ளோமா பெற்றவர்.

**இவரது நூல்கள்**

கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு எனும் நூலை 89ல் எழுதியுள்ளார். 20 க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவரது ஆக்க, இலக்கிய நூல்களின் பட்டியலை கீழே தருகிறேன்.

மனித சொரூபங்கள்(சிறுகதை,82), முரண்பாடுகளின் அறுவடை(சிறுகதை,83), பிரசவங்கள்(சிறுகதை,86, சாகித்திய பரிசு), அறிமுகவிழா (சிறுகதைகள், 84, இரத்தினவேலோனுடன் இணைந்து), வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்(சிறுகதை-97, சாகித்திய பரிசு, வகிமா பரிசு), துயிலும் ஒருநாள் கலையும் (நாவல்86), தூவானம் கவனம் (நாவல், 89), முகங்களும் மூடிகளும்(சிறுகதை 2005), குயில்கள்( நாடகங்கள்).இன்னும் உண்டு.

சிறுகதைப் போட்டிகள், நாடகப் போட்டிகள் பலவற்றில் பரிசு பெற்றவர். சிறந்த நடிப்புக்கான பரிசும் பெற்றவர். மணிவிழாக் கண்ட இவர் கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவர்.

**ஒலி**

**செம்பியன் செல்வன் ஆசிரியராக இருந்த அமிர்த**

**கங்கை புரட்டாதி- 86 இதழில் பிசுரமான கதை இது.**

**பல்வேறு ஒலிகள் (ஷெல், துப்பாக்கி, ஸ்பீக்கர்) யாழ்ப்பாணத்தைக் கலக்கிக் கொண்டிருந்த காலத்தை பிரதி பலித்த மனோதத்துவ ரீதியிலான கதை.**

**மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்**

**எனத் தொடங்கி**

**முன்னர் ஒருமுறை கூறியது இப்போது அவர் மனதில் படமாய் விரிகிறது.......**

**என்று முடியும் இக்கதையை வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவர் போன்ற எழுத்தாளர்களின் சேவை நமக்கு வேண்டும். நாம் கடந்த காலச் சம்பவங்களால் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளோம். எமக்கு உளவளப் பயிற்சி தேவை.அதிலிருந்து விடுபடுதல் இலகுவான ஒன்றல்ல.

வவுனியாவில் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டோர் இல்லத்தில் பராமரிப்பாளனாக இருந்த எனக்கு அந்த அனுபவம் சிறிதளவு உண்டு. எனது இலக்கிய நண்பர்களுக்கும் அது தெரியும்.

**5 June 2018**

## பிடித்த சிறுகதை 138

80ல் நான் ஒரு தனியார் நிறுவனத்தின் மட்டக்களப்புக் கிளையில் வேலை செய்து கொண்டிருந்தேன்.தினசரி காலையில் புறப்பட்டு அக்கரைப்பற்று வரையும் கொள்வனவுக்காக தனியார் வாகனம் ஒன்றில் (அவ்வாகனம் குத்தகைக்கு ஒழுங்கு செய்யப்பட்டது) சென்று வருவேன். இப்போது இருக்கும் நிந்தவூர் அல்ல அது. பிரதான வீதியில்,பரந்த வயல் வெளியின் நடுவே ஒரு படமாளிகை. பெயர் இப்போது நினைவில்லை.

அதனைக் கடந்து செல்லும் போது, நிந்தவூரான், நிந்தன் என்ற பரிச்சயமான பெயர்கள் என் நினைவில் வரும். அந்தப் பெயர்களுக்கு உரியவர் இவர்தான் என அப்போது எனக்குத் தெரியாது. இவரது சொந்தப் பெயர் முன்னரே வானொலி நிகழ்ச்சியின் மூலம் எனக்கு அறிமுகமாகியிருந்தது. நேரில் சந்தித்ததில்லை.

தனது **கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம்** நூலுக்கு வ.கி.மா

பரிசுவாங்க வந்த போதே இவரை நேரில் சந்தித்தேன்.

**எஸ்.முத்துமீரான்**

3/5/41 ல் நிந்தவூரில் பிறந்த சின்னத்தம்பி முத்துமீரான். ஆசிரியராக இருந்து, அதிபராகி இப்போது சட்டத்தரணியாக தொழில் செய்கிறார். சிறுகதை,உருவகக் கதை, கவிதை, நாடகம், நாட்டாரியல் ஆய்வு, இவர் பங்களிக்கும் துறைகள். இவர் பல ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். முத்து, லத்தீபா முத்துமீரான் எனும் பெயரிலும் எழுதுபவர் இவரே.

அவற்றை விடுத்து இவரது ஆக்க இலக்கிய நூல்களைக் கீழே தருகிறேன்.

**இவரது நூல்கள்**

உருவகக்கதைகள்(1982), இயற்கை(2000, அர.மொழி.தி பரிசு பெற்ற உருவகக் கதைகள்), முத்து மீரான் கவிதைகள்(2003), கருவாட்டு கஸ்யா( கவிதைகள்), முத்துமீரான் சிறுகதைகள் (1991), மானிடம் உயிர் வாழ்கிறது (சிறுகதைகள, 2005), கக்க கனிய (சிறுகதைகள் 2007), என்னடா கொலமும் கோத்திரமும் (சிறுகதைகள், 2013, கி.மாகாண விருது), இந்திய தி.க.சி, தோப்பில் முஹம்மது மீரான் போன்றவர்கள் நமது முத்துமீரான் கதைகளைச் சிலாகிக்கின்றனர்.

**ஒரு கிராமம் அழுகிறது**

**மல்லிகை 36 ஆவது ஆண்டுமலர் ஜனவரி 2001 ல் பிரசுரமான கதை இது.**

**இரவு, விடியச் சாமத்தோடு ஜீவமரணப் போராட்டமிட்டுக் கொண்டிருக்கும் போது,..**

**என ஆரம்பித்து**

**அவன் கார்தான் எப்போது தான் ஓயப்போகிறதோ.....?**

**என்று முடியும் இக்கதையை இவரது மானிடம் உயிர்**

**வாழ்கிறது தொகுதியிலும், மல்லிகை சிறுகதைகள் 2 தொகுதியிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

தடாகம் கலை இலக்கிய வட்டத்தினர் வெளிவந்த நூல்களுக்கு பரிசு அளிக்கும் நோக்கில் முத்துமீரான் விருது வழங்கலுக்கான 2018 முடிவுகளை சமீபத்தில்' வெளியிட்டுள்ளனர்.

முத்துமீரானுக்கும்,விருது பெறும் கப்டன் மலரவன் பற்றிய **மறையாத சூரியன்** நாவலுக்காகப் பரிசு பெற்ற கச்சாயில் இரத்தினத்தின் மகள் மலரன்னைக்கும் எனது வாழ்த்துக்கள்.

**"ஆடுகளை ஏமாற்றும்**
**இடையனே**
**உன் தத்திரத்தை அல்லா அறிவான்.**
**நாங்கள் பிரதேசவாதம்**
**பேசும் பேயர்களுமல்ல**
**புரியாத புழுக்கைகளும் அல்ல."**

- எஸ்.முத்துமீரான்.

**6 June 2018**

பிடித்த சிறுகதை 139

தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் அறிமுகமான பெயர் இவரது. சௌமியமூர்த்தி தொண்டமான் அன்று கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் சோ.சந்திரசேகரன் வீடமைப்பு பிரதி இருந்த காலத்தில் ஒரு வீடோ வழங்காமை குறித்து எள்ளலோடும், கோபத்தோடும் இவர் எழுதிய கவிதையின் கடைசி வரிகள் இவை.

கவிதையின் தலைப்பு :**மாடும் வீடும்**

**இக்குடிகள்**
**இன்று நம்புவது**
**மாட்டையும்**
**வீட்டையும்தான்.**
**மாடும் வீடும்**
**வெறும்**
**காகித வார்ப்பென்றால்**
**பின் எல்லாமே**
**வனவாசம்தான்.**

**மல்லிகை சி.குமார்**

தலவாக்கலை மிடில்டன் என அழைக்கப்படும் பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தில் 1/4/49 ல் பிறந்த சின்னையா குமார். மல்லிகை சி.குமார் என அறியப்பட்டவர். கால்நடை வைத்திய நிலையத்தில் மருந்தாளராக இருந்து ஓய்வு பெற்றவர்.

எழுத்தில் பெரிய பெயர் பெற்ற இவர் ஒரு சிறிய லயக காம்பராவிலேயே இன்னும் வாழ்கிறார். சமீபத்தில் இவரது மனைவியையும் இழந்துவிட்டார். மிகத் துக்ககரமான நிலமை் கலைஞர்கள் கவனிக்கப்படாத துர்ப்பாக்கியம்.

50க்கு மேற்பட்ட கதைகள் அதே அளவு கவிதைகள் எழுதியவர். நாடகமும், ஓவியமும் இவரது துறைகளே. மலையகத்தின் அனேகமான விளம்பரப் பலகைகள் இவரால் எழுதப்பட்டவையே.

**வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, கொந்தளிப்பு, இந்துமதி, வானொலி மஞ்சரி, ,விழிப்பு, குன்றின் குரல், கொழுந்து, பிரலயம், ஐக்கியம், மல்லிகை** ஆகியவற்றில் எழுதியவர்.

**இவரது வெளிவந்த நூல்கள்:**

மாடும் வீடும் (கவிதைகள், 1995, கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம்), மனுஷியம் (13 சிறுகதைகள், 2001. சாரல் வெளியீடு).

இந்துக் கலாசார அமைச்சு 93ல் இவருக்கு **தமிழ்மணி** பட்டம் வழங்கியுள்ளது.

**அந்த 420**

**1982 சிந்தாமணியில் பிரசுரமான கதை இது. மலையக இளைஞர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான போட்டிப் பரீட்சையில் மலையகம் சாராதவர்களை அனுமதிப்பதை எதிர்க்கும் இளைய தலைமுறையின் ஆவேசத்தை இக்கதை பிரதி பலிக்கிறது.**

**அந்த இளைஞர்கள்,யுவதிகள் கைகளை உயர்த்திக் கோஷமிட்டவாறு....**

**என ஆரம்பித்து**

**வண்டி எங்களைக் கடந்து வேகமாக ஊர்வலத்தை நோக்கி ஓடுகிறது.**

**என்று முடியும் இக்கதையை மனுஷியம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

பதிப்பிக்கிறோம் என்று வாங்கிச் சென்ற சிலரால் தொலைக்கப்பட்ட இவரது சிறுகதைகள் தேடி எடுக்கப்பட்டு அடுத்த சிறுகதைத் தொகுப்பொன்று விரைவில் வெளிவர இருப்பதான செய்தி இப்பதிவுக்கான தேடலில் எனக்கு கிடைத்தது.

யானைப்பசிக்கு சோளப்பொரி என்பதான இன்னொரு செய்தியும் கிட்டியுள்ளது. அது இப்பதிவுக்கு தேவையற்றது.

**6 June 2018**

பிடித்த சிறுகதை 140

**கா**ணாமல் ஆக்கப்படுவோர் பற்றி கேள்விப் படுகிறோம். தாங்களே தங்களைக் காணாமலாக்கி கொள்வோரும் இருக்கிறார்கள். அவர்களில் இவரும் ஒருவர். திருகோணமலை பாராளுமன்றத் தொகுதியின் EROS இயக்கத்தின் உறுப்பினராக வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் எடுக்காதவர்.

நான் வேலையிலிருந்து வஞ்சகர்களால் நீக்கம் செய்யப்பட்ட காலத்தில் எனக்கு ஆறுதலாக இருந்தவர். மார்க்சிய நேசர்.

**எம்.வை. ராஜ்கபூர்**

1956ம் ஆண்டு திருகோணமலை அன்பு வழிபுரத்தில் பிறந்த மு.ராஜ்கபூர். திருகோணமலை இந்துக் கல்லூரி பழைய மாணவன். ஒரு பட்டதாரி. ஆசிரியராக இருந்தவர். திருகோணமலை முன்னோடிகள் குழுவினருடன் தொடர்பாயிருந்தவர். சங்கப்பலகை உறுப்பினர். அவர்கள் வெளியிட்ட சங்கப்பலகை சஞ்சிகையின் வெளியிட்டாளர்களில் ஒருவர். கோவிந்தன் என்கின்ற நோபேட்டும் சங்கப்பலகையின் முக்கிய உறுப்பினராக இருந்தவர்.

நான் முன்னரே ராஜ்கபூரை அறிவேன். கோணைத்தென்றல் சஞ்சிகையில் வந்த கதைகளை **நிவேதனம்** என்ற பெயரில் நூலாக்கியபோது அவர் புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி. ஆசிரியர். அத்தோடு நாம் மிக நெருக்கமாகினோம்.

எனக்கு பிடித்த இவரது கதையும் அதில் இருந்தது. 1995 ல் வ.கி.மா வெளியிட்ட **பரிசுக்கதைகள்** தொகுப்பில் வலுக்கட்டாயமாக இவரது **மீன்கறி மணத்தது** கதையை இடம்பெறச் செய்தேன்.

இவரது கதைகள் ஆர்ப்பாட்டமில்லாது எளிமையாகச் சொல்லப்பபடுவை. மனிதநேயம் மிக்கவை. சொற்சிக்கனம் கொண்டவை. கோணைத் தென்றல், வீரகேசரி ,தினகரனில் பிரசுரமானவை. மிகக் குறைவாக ஆனால் தரமாக கதைகளைத் தந்த இவர் ஒரு தொகுதியை வெளியிட ஆர்வமில்லாதவராக இருந்தார். பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணம். மீண்டும் மனம் சோராது முருங்கை மரத்தில் மறுபடியும், மறுபடியும் ஏறி 1996 நவம்பரில் நான் கொண்டு வந்த இவரது தொகுதிதான் **வானொலிப் பெட்டியும் மற்றும் சில கதைகளும்** வ.கி.மா வெளியிட்ட இவரது தொகுதிக்கு பெயர் வைத்ததும் என்னுரை எழுதியதும் நான்தான். ஒரு அசண்டையீனம். 100 பிரதிகள் அவருக்குக் கையளித்தோம். அன்றே அது அவரால் இலவசமாக விநியோகிக்கப்பட்டு விட்டது.

இந்த நூலில் உள்ள 13 கதைகள்: வானொலிப் பெட்டி, போய்ஸ் ஜோய்ஸ், அவன் தேவன், எவருக்கும் பைத்தியமில்லை, வெள்ளக்காடு, வானம் பார்த்தபூமி, எங்கே போகிறோம்?, நாட்டாண்மை அம்மா, நனவோடை, ஒரு மனிதனின் மன டயறி, ஆரிடம் போய் சொல்லி அழுவாய், இதய தாகம், இந்தியா.

2000ம் ஆண்டில் பேரா. யோகராசா என்னிடம் கூறினார்.

**“யாரப்பா அந்த ராஜ்கபூர்.? காலம் கடந்து அவரது தொகுதியை வாசிக்கக் கிடைத்தது. தரமான கதைகள் அவை.”**

வ.அ. தன் **இலக்கிய நினைவுகள்** நூலில் ராஜ்கபூரின்

தூண்டுதலால் அந்நூலை எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சேனைப் பயிர் செய்கை பற்றியும், குச்சவெளிப் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றியும் கூறும் **புலவு** என்ற நாவலை அவர் 97ல் எழுதியிருந்தார். அவரது இயக்கத் தோழர் ஒருவரால் அச்சகமொன்றில் எனது முன்னுரையுடன் கொடுக்கப்பட்ட அந்நாவல் சில அத்தியாயங்கள் அச்சிடப்பட்டமை எனக்குத் தெரியும். பின்னர் அது இடை நிறுத்தப்பட்டது. அச்சிடப்பட்ட படிகளுக்கும், மூலப்பிரதிக்கும் என்ன நடந்தது என்பது எனக்கோ, ராஜ்கபூருக்கோ தெரியாது. இயக்க நண்பரும் புலம் பெயர்ந்துவிட்டார். இவரும் தனது ஆசிரியர் தொழிலைத் துறந்து ஒதுங்கிவிட்டார்.

**ஒரு மனிதனின் மனடயறி**

**1987 ஐப்பசி-கார்த்திகை கோணைத்தென்றல் றோனியோ சஞ்சிகையில் பிரசுரமான கதை இது.**

**ஜூலை மாதம் இருபத்தொன்பதாம் திகதி. ஞாயிற்றுக்கிழமை. ராஜீவ்-ஜேயார் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக**

**எனத் தொடங்கி**

**உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.**

**என்று முடியும் இக்கதையை நிவேதனம் தொகுப்பிலும் இவரது சிறுகதைத் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

தாய், சகோதரனின் பராமரிப்பில் அஞ்ஞாத வாசம் இயற்றும் இவரை கனடாவில் கண்டதாக சில நாட்களுக்கு முன் ஒரு நண்பர் இட்ட பதிவு எனக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் தந்தாலும் அது தவறான தகவலென ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. நடமாட முடியாத நிலையிலுள்ள நான் அவரைக் காண ஆவலாகவே உள்ளேன். அவர் என்னைச் சந்திக்க விரும்புவாரா?

**7 June 2018**

# பிடித்த சிறுகதை 141

**2**8/2/95 மூன்றாவது சுதந்திர இலக்கிய விழா, கொழும்பு ஜோன் டீ.சில்வா அரங்கசாலையில் நடைபெற்றது. 93ல் வெளிவந்த நூல்களில் சிறுகதைத் தொகுதிக்கான பரிசை எனது **அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்** நூலும் கவிதைத் தொகுதிக்கான பரிசை சேரனின் **எரிந்து கொண்டிருக்கும் நேரம்** நூலும் பெற்றிருந்தன. நாவலுக்கான பரிசை **தாகம்** எனும் இவர் எழுதிய நூலும் பெற்றிருந்தது.

ஏலவே இவரைப் பற்றி அறிந்திருந்த நான், விழாவில் இவரைச் சந்திக்கலாம் என்று நினைத்திருந்தேன். பரிசைப் பெறுவதற்கு சேரனும் வரவில்லை. நாட்டு நிலமை காரணமாக. வன்னியில் இருந்த இவரும் வரவில்லை. இவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் இன்றுவரை எனக்கு ஏற்படவும் இல்லை. ஆச்சரியம்.

**தாமரைச் செல்வி**

4/8/1953ல் பரந்தன் குமாரபுரத்தில் பிறந்த ரதிதேவி. திருமணத்தின் மூலம் ரதிதேவி கந்தசாமி ஆகியவர். இவரது கணவரும் ஒரு எழுத்தாளரே.

ஆரம்பக் கல்வியை பரந்தனிலும் உயர் கல்வியை யாழ்/இந்து மகளிர் கல்லூரியிலும் பெற்றவர். வானொலியில் இசையும் கதையும் எழுதத்தொடங்கி அதிலிருந்து விடுபட்டு நாவல், சிறுகதை எழுத்தாளராக மாறியவர்.

இவரது முதற்சிறுகதை **ஒரு கோபுரம் சரிகிறது** 74ல் வீரகேசரியில் பிரசுரமானது. கவிதைகளும் எழுதுவார். இவர் ஒரு ஓவியரும் கூட. இதுவரை 200 சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ளார். 6 நாவல்கள் (குறுநாவல் உட்பட) எழுதியுள்ளார். இவரது இருபது சிறுகதைகள் போட்டிகளில் பரிசு பெற்றிருக்கின்றன. **இன்னொரு பக்கம்** என்னும் சிறுகதை 11ம்ஆண்டுப் பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

37 சிறுகதைகள் மூன்று சிறுகதைத் தொகுதிகளாகி உள்ளன. இதுவரை ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார்.

**இவரது நூல்கள்**

சுமைகள்(நாவல் 1977.வீரகேசரி), விண்ணில் அல்ல விடிவெள்ளி( நாவல், 1992, சுப்ரம்,யாழ் இ.பேரவை பாராட்டு), தாகம் (நாவல், 1993, சுப்ரம், சு.இ.அமைப்புப் பரிசு.) வேள்வித் தீ (குறுநாவல், 1994,முரசொலி முதற்பரிசு, வ.கி.மா பரிசு). ஒரு மழைக்கால இரவு (சிறுகதை, 1998, சுப்ரம், தேக.பே,வ.கிமா.பரிசு), அழுவதற்கு நேரமில்லை (சிறுகதைகள், 2002, சுப்ரம்), வீதியெல்லாம் தோரணம் (நாவல், 2003, மீரா.வ.கி.மா.பரிசு), பச்சைவயல்கனவு (நாவல், 2004, மீரா. அரச சாகித்தியவிருது), வன்னியாச்சி (சிறுகதை, 2005, மீரா ), வன்னியாச்சி (36 சிறுகதைகள், மீள் பதிப்பு, காலச்சுவடு).

**ஒரு யுத்தத்தின் ஆரம்பம்**

**9/11/83 ஆனந்த விகடனில் பிரசுரமானது இக்கதை.**

**வன்னி மண் பல யுத்தங்களைக் கண்டது. இறுதி யுத்தம் எனச் சொல்லப்படும் யுத்தமே வன்னியில் தான்**

நிகழ்ந்தது. அப்படியான யுத்தங்களின் பரிச்சயமே ஏற்படாத 83 யில் காலகட்டத்தில் தன்னார்வ நிறுவன திருகுதாள அதிகாரி ஒருவருக்கு எதிராக தொடங்கப்பட இருக்கிற சிவில் யுத்தத்தின் ஆரம்பத்தைக் கூறும் கதை இது. புதிதாக காலச்சுவடு வெளியிட்ட வன்னியாச்சி (இரண்டாம் பதிப்பில்) இக்கதை ஐந்தாவதாக பிரசுரமாகி உள்ளது.

ஹால் என்றுமில்லாமல், விறாந்தை என்றுமில்லாமல்

எனத் தொடங்கி

சந்தோசத்துடன் அந்த மண்சாலையில் அவன் நடக்கிறான்.

என்று முடியும் இக்கதையை இவரின் ஒரு மழைக்கால இரவில் தொகுப்பில் முதற் கதையாக வாசியுங்கள் நண்பர்களே.

வன்னியை, வன்னி மண்ணை, வன்னியின் வாழ்வுக் கோலங்களை ஆவணப்படுத்தியவர்.

மணிவிழாக் கண்ட பெண் ஆளுமையான இவர் யுத்த காலத்தில் இலங்கையை விட்டு புலம் பெயராதவர். இப்போது அவுஸ்த்திரேலிய வாசி காலம் எவ்வளவு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆச்சரியம் தான்.

**8 June 2018**

பற்குணத்தாரின் மனிதவள மேம்பாட்டு நிலைய நூல் நிலையத்தில் வைத்து இவரை ஜபார் எனக்கு அறிமுகப்படுத்தினார். இவரது சிறுகதைத் தொகுதியின் அட்டைப்படத்தை வரைந்தது ஜபார்தான்.

மல்லிகை, முனைப்பு,வீரகேசரி, வியூகம்,புதிசு, கீற்று மூலம் இவரை நான் அறிந்து வைத்திருந்தேன். மரபை உடைத்து புதுமை படைக்கும் ஒருவராக அவர் என்னில் பதிந்திருந்தார்.

பகடற்ற ஒரு மனிதன். வித்தியாசமான சிந்தனையாளன். உள்ளத்திலும், உடலிலும் ஒவ்வாமையை தேக்கி வைத்திருந்தவர். முதற் சந்திப்பிலேயே அவரை அடையாளம் கண்டு கொண்டேன்.

**எம்.ஐ.எம்.ரஊப்**

1958 ல் மருதமுனையில் பிறந்த ரஊப் இஸ்மயில்.(மருதுார் கொத்தனின் மகன்) மருதமுனை சம்ஸ்,அல்மனார் மத்திய கல்லூரி, கல்முனை ஸாகிறாவின் பழைய மாணவன்.

கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரி.

1982 ல் பதுளை வங்கி ஒன்றில் ,48 மாதங்களும் 15 நாட்களும் கடமையாற்றி அப்பதவியை ராஜினாமா செய்து. பிறகு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகி, பின்னர் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் சமூகசேவை அதிகாரியாக இருந்தவர்.

சட்டம் படித்து சித்தி எய்தி சட்டத்தரணியாகத் தொழில் பார்த்தவர்.

இவரது புனை பெயர்கள்: கமால்ஜான்,மருதூரான்,சாகித்தியன்.

இவரது முதற்கதை **மஞ்சள் சோறு** 80.ஜன. மல்லிகையில் பிரசுரமானது. மல்லிகை, வீரகேசரி, கீற்று, வியூகம், களம், புதிசு ஆகியவற்றில் சுமார் 15 கதைகள் எழுதியுள்ளார். மூன்றாவது மனிதன், பெருவெளி ஆகியவற்றில் கட்டுரைகள் எழுதியுள்ளார். முனைப்பு சஞ்சிகையுடன் மிக நெருக்கமாக இருந்தவர்.

> இவரது 12 சிறுகதைகள் கொண்ட **கனவும் மனிதன்** தொகுப்பு நு:.மானின் முன்னுரையுடன் 92ல் வெளிவந்து பலரது கவனத்தை ஈர்த்தது.
>
> அதில் மஞ்சள் சோறு (மல்லிகை. 80), வாழ்வைப் புரிந்து கொள்ள முந்தி (வீரகேசரி, 80), இன்னும் வட்டத்துள் (வீரகேசரி-81),நீளுகின்ற இருப்பு (வீரகேசரி-80), தனக்குள்ளே ஒரு தரிசனம் (வீரகேசரி-80), நொண்டிக் கனவுகள்(வீரகேசரி-81), இவனுக்குத்தானே அபத்தமாய் (புதிசு, 81) முன்னிரவுகளும் ஒரு பின்னிரவும் (வீரகேசரி 82), வெறுமையும் நிறைவும்(வீரகேசரி, 83), இடையில் வெளிகள் (முனைப்பு,88), ஆகாசத்திலிருந்து பூமிக்கு (கீற்று, 82), 48 மாதங்களும் 15 நாட்களும் (வியூகம் 88),
>
> தொகுதி வந்ததின் பின்: சூரியன் சிரிக்கிறான் (வியூகம் 94), மழையும் இருள் (களம,98), கடலது அலையது.

70களில் தோன்றிய மரபை மீறி புது வகை எழுத்தை அறிமுகம் செய்தவர்களில் ரஊப் முக்கியமானவர்.அவர்

ஒரு ஒத்தோடி அல்லர். அனுபவத்தைக் கலையாக்கும் வல்லவர். தன் பாலியல் பலவீனங்களைக் கூட மறைக்காதவர். தனக்கானவற்றைத் தானே தேடிக்கொண்டவர். மரணத்தையும்.

இவரது மு.பொன்னம்பலம் பற்றிய இறுதிக் கட்டுரை எனக்கு பல கேள்விகளை எழுப்பிய ஒன்று.

48 மாதங்களும் 15 நாட்களும்.

1988 ஜுன் வியூகம் இதழில் பிரசுரமான கதை இது.

பதுலுஓயா தனியார் வங்கி ஒன்றில்கடமையாற்றும் ஒருவன்,

லீவுப்பிரச்சனையால் உயரதிகாரியுடன் முரண்பட்டு வேலையை ராஜினாமா செய்து விட்டு வீடு திரும்பும் கதை.

அனுபவம் சார்ந்த உண்மையொன்றின் கலைத்துவ வெளிப்பாடு.

அவனுக்கும் இந்த நகரத்திற்கும் தொடர்பு ஏற்பட்டு 45..

என ஆரம்பித்து

மனதுள் அடிக்கடி வேண்டிக் கொண்டான்.

என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

ரஊப் 2010 ல் மௌத்தாகிப் போனது வாசகர்களான எமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு.

**8 June 2018**

பிடித்த சிறுகதை 143

இவரைப் பற்றி எழுதுவதற்கு முன் சில விடயங்களை மீள நினைத்துப் பார்க்க வேண்டி உள்ளது. (2006ன் நினைவுகள்) நான் ஒரு ஆய்வறிவாளன் அல்லேன். ஒரு கலாநிதியோ, அல்லது பேராசிரியரோ அல்லேன். வாசிப்பு அறிவு மட்டுமேயுள்ள மிகச் சாதாரணன். என்னுடன் பேசும் இளைய தலைமுறை, நான் என் அனுபவத்தில் உணர்ந்தவற்றை ஒரு அறிமுகக் குறிப்புகளாக எழுதுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்காக சில குறிப்புகளை, தகவல்களை தெரியப்படுத்தவும், அதைத் தொடர்ந்து அவர்கள் தமது தேவைகளை தேடவும் வேண்டி தாவீது கிறிஸ்ரோ எனும் பெயரில் தினகரன், வீரகேசரி, தினக்குரலில் அறிமுகக் குறிப்புகளாக சில கட்டுரைகளை எழுதினேன்.

இப்படி எழுதப்பட்ட கட்டுரைதான் **ஈழத்தின் இலக்கியத்தில் பரிசோதனை முயற்சிகள்.** 2006 ஒக்.29. தினக்குரலில் அக்கட்டுரை பிரசுரமாகி இருந்தது.

அதனை வசந்தனின் பக்கம் என்ற இணையத்தளத்தில் மீள் பதிவிட்டிருந்தார்கள். மேதைகளுக்கு அந்தக் கட்டுரை பிடிக்கவில்லை. **Anonymous** என்பவர் இதுவரை தான் வாசித்த கட்டுரைகளில் மோசமான கட்டுரை இது என்றும், இன்ன இன்னவற்றைப் பற்றி விளக்கமில்லை என்றும் பின்னூட்டமிட்டிருந்தார்.

எனது கொள்ளளவு அவ்வளவுதான் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. நான் தவறவிட்டவற்றை திருத்தி ஒரு சிறப்பான கட்டுரையை அந்த மேதாவி எழுதியிருக்கலாம். ஆனால் அவர் எழுதியதாகத் தெரியவில்லை.

அதே கட்டுரையில் நான் எழுதப் போகும் பி.சி.க்கு உரியவரையும் பற்றி நல்ல மாதிரியே எழுதியிருந்தேன். ஆனால் அவருடைய புனை பெயரை பிழையாக எழுதிவிட்டேன். எனது பிழையை விட பின்னர் அவரது கதைகளைப் பிரசுரித்தவர்களும் பிழைவிட்டிருப்பதை நான் கண்டு கொண்டேன்.

அக்காலத்தில் நான் பேசப்போகும் நிகழ்வுகளில் இவரது பெயரை சிலாகிக்கும் ஒருவனாக நானும் அம்பாறை மாவட்டத்தில் உமாவரதராஜனும் மட்டுமே இருந்தோம்.

**சித்தார்த்த "சே" குவரா**

இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர்.திருகோணமலை இந்துக் கல்லூரியின் பழைய மாணவன். இயற் பெயர்.க. ரமணிதரன். பேராதனை பல்கலைக் கழகத்தில் கற்று பின்னர் அமெரிக்க துலேன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்பின் படிப்பை தொடர்ந்தவர். அமெரிக்க வாசி.

**கோணைத்தென்றல்** சஞ்சிகையில் எழுதியவர். 400 கவிதைகள், 4 நாடகங்கள், 25 கதைகள் எழுதியவர் என ஒரு குறிப்பு கூறுகிறது. **நிவேதனம்** தொகுப்பில் வந்த **நாமெல்லாம் மானிடராய்** கதை. **ரிஷிப்ரப்ஞன்** என்ற பெயரில் அச்சாகி இருந்தது. நான் எழுதிய கட்டுரையில் தவறுதலாக **ரிசிப்பிரப்ஞன்** என்று எழுதிவிட்டேன்.

இரண்டுமே தவறு என அவர் எனது கட்டுரைக்கான பின்னூட்டத்தில் சுட்டிக்காட்டி இருந்தார். நான் தவறு விட்டது உண்மைதான். தவறை நியாயப் படுத்தாமல் அவர் **பெயரிலி** எனும் பிறிதொரு நாமத்தில் வசந்தன் பக்கத்தில் எழுதிய பின்னூட்டத்தைத் தருகிறேன்.

அது ரிஷி ப்ரப்ஞ்ஷன் அண்ணே. அப்போது திசை சிறுகதை, வீரகேசரி குறுநாவல், நோர்வே சுவடு நாடகம்,பிரான்ஸ் தனிநாயகம் அடிகள் நினைவுக் கதை, கனடா உலகத் தமிழர் இயக்கம் நாடகம் இவற்றுக்கு அப்போது(87 92 ) இந்தப் பெயரிலேயே எழுத்து. அதுக்கு முன்னால் ரிஷிமித்ரகுமார் அதுக்குப் பிறகு தமிழ் நெற்றில் அனு ரிஷி .

**- 09.November.2006. 10.00.-**

**கண்ணில் தெரியுது வானம்** தொகுப்பில் இப்போதைய புனைபெயரில் நாலு கதைகள், நாலு கவிதைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவ்விதழில் **யமுனா ராஜேந்திரன்** அவரது கதைகள் பற்றிய சிறப்பான ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார்.

**காகங்கள், சிகைசிரைப்பு, தோற்பை, அறைச்சி, எனது சாத்தியங்கள்.(கவிதை), என் குரு(கவிதை), ஒரு அறையும் இரண்டுபேரும் மட்டும்தான்.(கவிதை), காளான் தேசம் (கவிதை)** என்பனவே அவை.

இவரது **கமிகாஷே** எனும் கதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு புது டெல்லி **The Little Magazine** இதழில் பிரசுரமாகி இருக்கிறது.

**சிகை சிரைப்பு**

> **1991 டிசம்பரில் பத்மநாப ஐயர் வெளியிட்ட கண்ணில் தெரியுது வானம் தொகுப்பில் இவரது புனைபெயரில் வெளிவந்த ஆறு கதைகளில் இதுவும் ஒன்று.**
>
> **முதலில் நானும் பில்போல் கானருமே மாலை 5.30 இற்கு போவதாக இருந்தது...**
>
> **எனத் தொடங்கி**

கத்தரிக்கோலோட்டும் எல்லா முடிவெட்டும் பொருத்தமானதே என்று மட்டும்தான் பட்டது.

என்று முடியும் இக்கதையை கண்ணில் தெரியுது வானம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

50 வருடங்களுக்கு மேற்பட்ட வாசிப்பனுவமுள்ள நான் இவரை மாத்திரமல்ல. இன்று எழுத வந்துள்ள அனைவரையும் வாசிக்கிறேன். ஆய்வாளன் அல்லேன். என்னிடமுள்ளது சாதாரண வாசகனின் அபிப்பிராயங்கள். மேதைகளே மேதைகளிடம் உங்கள் அறிவுப் பசிக்கான தீனிகளை தேடுங்கள். என்னிடம் எதிர்பார்க்காதீர்கள்.

சித்தார்த்த “சே” குவரா வின் சிறுகதைகள் வந்த அந்தத் தொகுப்பில்தான் மோசமான கட்டுரை எழுதியவரென உம்மால் கிண்டலடிக்கப்பட்ட எனது **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** கதையும் வெளிவந்தது. அக்கதை இன்றுவரை நான்கு தடவைகள் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

அக்கதைத் தலைப்பிலான தொகுதி சாகித்திய விருது, கொடகே விருது, வட மாகாண விருது பெற்றதென்பது ஒரு பழைய சங்கதி என்பதை பணிவோடு தெரியப்படுத்துகிறேன்.

என்னதான் இருந்தாலும் இவரின் பிரிய வாசகன் நானெனச் சொல்ல ஒருபோதும் நான் தயங்க மாட்டேன். நானும் ஓர்மம் உள்ளவன்தான். உங்களைத் திருப்திப் படுத்த ஒருபோதும் எதையும் நான் எழுதமாட்டேன்.

**9 June 2018**

94ல் சரிநிகர் மூலம் இவரது பெயர் ( புனை பெயர்)எனக்கு அறிமுகமானது. மூன்றாவது சுதந்திர இலக்கிய விழாவில் 28/2/95 அன்று இவரைச் சந்தித்தேன். புதிய எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியின் பரிசைப்பெற இவர் வந்திருந்தார். மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் துறை மாணவர் இவர். இவரை எப்போதாவது ஒருமுறை சந்திக்கக் கிடைக்கும். தொழில் நிமித்தம் 2012 களில் இவரது ஊருக்குச் சென்று வந்துள்ளேன். அப்போதே அவர் ஆலையடிவேம்பு வாசி ஆகிவிட்டார்.

**திருக்கோவில் கவியுவன்**

24/1/71ல் பிறந்த யுவேந்திரா. கம்யூனிஸ்ட் இராசையா என்னும் தமிழ் உணர்வுக் கவிஞரின் மகன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்பவர். திருக்கோவில் மெ.மி..த.க. பாடசாலை, தம்பிலுவில். ம.ம.வித்தியாலயம், கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். பொறியியல் பட்டதாரி. நிர்வாகசேவைப் பரீட்சையில் சித்தி எய்தி வயது கூடிய காரணத்தால்

பதவி பெற முடியாமல் போனவர். தனது கல்விக்கு சற்றும் பொருத்தமில்லாத அரச தொழிலை மேற்கொள்பவர். சிறந்த விளையாட்டு வீரர். தனியாக பௌதிகவியல் பாடத்தைக் கற்பித்து பலரை பல்லைக் கழகங்களுக்கு அனுப்பிக் கொண்டிருப்பவர்.

கவிதையுடன் இலக்கிய வெளிக்கு வந்த இவர் **விடையைத் தொலைத்த விடுகதை** எனும் நவரச கதையின் மூலம் வீரகேசரியில் அறிமுகமானவர். 94- 96 இவரின் கதைகளின் காலம் எனலாம். சரிநிகர், வீரகேசரியில் அக் காலத்தில் எழுதியவற்றில் 10கதைகள் இவரது 26வயதில் தொகுப்பாகி உள்ளது. விமர்சகர்கள், சக எழுத்தாளர்களிடையே அதிர்வை ஏற்படுத்திய கதைகள் அவை. கிழக்கின் அவலங்களை, நெருக்குவாரங்களை இலங்கையின் சகல பாகங்களுக்கும் எடுத்துச் சென்ற கதைகள் இவருடையவை. தன் அனுபவத்தையும், பிறரின் அனுபவத்தையும் உள்வாங்கி யாருடைய எடுத்துரைப்பு முறையையும் பின்பற்றாது சுயமாக எழுதியவர்.

யாரும் இவரை கண்டு கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. கண்டும் காணாது சென்றவர்களின் தொகை அதிகம். இவரது சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர் பேரா.சிவத்தம்பி அவர்கள். சூதனர்களின் குறுக்கீட்டால் பிரசுரமானது அவர் எழுதிய பிறிதொரு முன்னுரை.

இவரிடம் உள்ள பெரிய குறைபாடு வாசிப்பதற்கு நேரம் ஒதுக்காமை. 95லும் அந்த நிலைதான் இப்பேதும் அந்த நிலைதான். அப்போது படிப்பு..படிப்பு இப்போது படிப்பிப்பு....படிப்பிப்பு,

**இவரது நூல்**

**வாழ்தல் என்பது** (சிறுகதை, 1996).

சமீபத்தில் புலம்பெயர் 41வது மாநாட்டை ஒட்டி வந்த குவார்னிக்கா மலரில் இவரது நேர்காணல் வந்துள்ளது.

மகுடம் இதழில் **மணல் வெளித்துயரம்** என்ற கதையை எழுதியுள்ளார். இணையத்தில் கவிதைகளும் எழுதுகிறார்.

**உடைத்துப் போட்ட தெரு விளக்கு**

**இக்கதை சரிநிகர் ஜுன் 94 இதழில் பிரசுரமானது. யுத்த கால திருக்கோவில் கிராமத்தில் நிகழும் கதை இது.**

**“அந்தக் கோவில இருந்த லைற்ற ஆரோ உடைச்சுப் போட்டினம்.”**

**எனத் தொடங்கி**

**பாவம் அது ஒத்தையாய் தடவிக் குடுக்க ஆளில்லாமல்.**

**என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

இல்லை, இல்லை இப்போது நான் நிறைய வாசிக்கிறேன் என்கிறார் கவியுவன்.

அதற்கு நான் சொன்ன பதில். நல்லது.

**9 June 2018**

இவரது கதை அலையில் வந்த போது மிகுந்த கவனம் பெற்றது. மல்லிகை, கணையாழி யில் இவர் கதைகள் பிரசுரமான போது தான் மேலும் கவனத்தைப் பெற்றார். தமிழுக்கு மேலும் ஒரு நல்ல எழுத்தாளர் கிடைத்துவிட்டார் என்று நாம் பெருமிதம் கொண்டோம்.

**ஸ்ரீதரன்**

இவர் இந்தியாவில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி. அங்கேயே விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். இப்போது அமெரிக்காவில் பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார்.

1973 மே மாதம் பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் வெளியிட்ட **தரிசனங்கள்** தொகுப்பில் இவரது **மூலஸ்தானம்** கதை வெளிவந்தது. ஒடுக்கப்பட்ட மக்களை ஆலயத்துள் அனுமதிக்க மறுத்த நிலையில் ஐயர் ஒருவர் அதனை எதிர்ப்பதைக் கூறும் அக்கதை பேரா..கைலாசபதி அவர்களைக் கவர்ந்ததாக ஒரு பதிவில் வாசித்தேன்.

அலையில் வந்த கதை **ராமசாமி காவியம்** ஒரு மலையகத் தொழிலாளியின் மூலம் மலையக மக்களின் இருண்ட வாழ்நிலையைக் கூறும் கதை அது.

ராமசாமி,கந்தசாமிக் குருக்கள், பேரிஸ் அப்புஹாமி,கரீம், எசக்கி,செவுத்தி, மணி போன்ற வாழ்வில் ஒதுக்கப்பட்ட உதிரிமாந்தர்கள் பற்றி அனுதாபத்துடன் கூறும் கதைகள் இவருடையவை.

மூலஸ்தானம்,ராமசாமி காவியம், நிர்வாணம்,திசை யில் வெளிவந்த சொர்க்கம் குறுநாவல், இராமாயண கலகம், அம்பலத்துடன் ஆறு நாட்கள், கமலம் (நாவல்) உட்பட இந்த 40 வருட எழுத்து வாழ்வில் இவர் படைத்தது 15 ஆக்கங்களே. (இலங்கையில் இருந்தபோது 8 சிறுகதைகள்,அமெரிக்கவில் இருந்து 6 கதைகள். நாவல். 1) இவை.

**இவரது நூல்**

2013 ல் தமிழியல் அனுசரணையுடன் காலச்சுவடு வெளியீடாக **ஶ்ரீதரன் கதைகள்** என்ற பெயரில் நூலாக வெளிவந்து தமிழக SRM நிறுவன விபுலாநந்தர் படைப்பிலக்கிய விருதையும், கனடா இலக்கியத்தோட்ட (இயல்)விருதையும் பெற்றுள்ளது.

**அம்பலத்துடன் ஆறு நாட்கள்**

> **2001ல் பத்மநாப ஐயர் வெளியிட்ட கண்ணில் தெரியுது வானம் தொகுப்பில் பிரசுரமான கதை இது. வேறு எங்காவது பிரசுரமானதோ தெரியாது.**
>
> **இக்கதையோடு இராமாயண கலகம் என்ற பிறிதொரு கதையும் இவரது கதைகள் பற்றிய மு.நித்தியானந்தனின் கட்டுரையும் அத்தொகுப்பில் இடம் பெற்றிருந்தன.**
>
> **சிவம் அந்தச் சிறைச்சாலை அறைக்குள்,**
>
> **எனத் தொடங்கி**

**"நானே நான் நானே நான்" என்று சொல்லிப் பார்த்துக்கொண்டான்.**

**என்று முடியும் இக்கதையை கண்ணில் தெரியுது வானம் தொகுப்பிலும், ஸ்ரீதரன் கதைகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

யதார்த்த வகை எழுத்தைக் கட்டுடைத்து புதிய வகையில் கதைகளை எழுத ஆரம்பமான தொடக்கம் இவரிலிருந்தும் உருப்பெற்றவை என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மை.

**10 June 2018**

## பிடித்த சிறுகதை 146

**அத்தி பூத்தாற் போல்** என்ற கூற்றுக்கு இவரது சிறுகதை எழுத்தை உதாரணம் காட்டலாம். 93ல் இருந்து 2018 மே. வரை இவர் எழுதிய கதைகளின் வருகை அதை நினைவூட்டும். இவரை நான் எழுத்தின் மூலமே அறிவேன். அவரது நிலையும் அதுவாகவே இருக்கும்.

எனது இரண்டாவது சிறுகதைத்தொகுதி வெளிவந்த நேரம் முகநூலில் ஒரு பின்னூட்டம் இட்டிருந்தார். இறுதியாக இவர் அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

**“இவரது கதைகளில் கலைத்துவம் நிறைந்து காணப்படுகின்றது.தொகுதியைப் படித்து முடித்த பின்னர் நல்லதொரு தொகுதியைப் படித்த நிறைவு ஏற்படுகிறது.” (Oct. 2011)**

2013ல் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடந்த வடமாகாண இலக்கிய விழாவில் தனது சிறுகதைத் தொகுதிக்கான பரிசைப் பெற வந்த சமயத்தில் இவரை நேரில் சந்தித்தேன்.

மற்றும்படி அலைபேசி, அல்லது முகநூல்......

இன்று வரை.

**தேவமுகுந்தன்**

1972 ல் கொழும்புத்துறையில் பிறந்த தேவராசா முகுந்தன். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், புனித. பத்திராசியார் கல்லூரியின் பழைய மாணவர். இளமாணி, பட்டப்பின் டிப்ளோமா, முதுமாணி, கலாநிதி பட்டம் பெற்றவர். இலங்கை திறந்த பல்கலைக் கழகம், மலேசிய புத்ரா பல்கலைக்கழகங்களில் கற்றவர். இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் செயற் திட்ட அதிகாரியாகப் பணியாற்றிய இவர். இப்போது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக இருக்கிறார்.

20 வதில் காலமாகிய சகோதரன் நிர்மலன் பெயரில் ஆரம்பத்தில் இவர் கதைகள் எழுதினார். இவரது முதற்கதை **மரநாய்கள்** 29/1/93 ஈழநாதத்தில் பிரசுரமாகியது. பின்னர் **கலைமுகம்,காலம்,யுகமாயினி,தினக்குரல்,ஞானம்,ஜீவநதி** அகியவற்றில் எழுதி வருகிறார்.

**இவரது நூல்**

கண்ணீரினூடே தெரியும் வீதி, வழிகாட்டிகள், இடைவெளி, சிவா, இரட்டைக்கோபுரம், சின்ன மாமா, ஒரு சுதந்திரநாள், இவன், கூட்டத்தில் ஒருவன், மரநாய்கள் என்பன காலச்சுவடு வெளியிட்ட இவரது **கண்ணீரினூடே தெரியும் வீதி** தொகுப்பின் கதைகள். தொகுதிக்கான பின்னுரை பேரா.எம்.ஏ.நு:.மான். இத்தொகுதி பற்றி வெங்கட் சாமிநாதன் நல்ல விமர்சனமொன்றை எழுதியிருந்தார். அதனை **திண்ணை** இணைய இதழில் வாசித்தேன். இத் தொகுப்புக்கு வடமாகாண சிறந்த நூல் விருது, அரச. சாகித்திய விருது கிடைத்தது. 24 வருடமாக கொழும்பு வாழ்க்கை.

**போராட்டங்கள்**

**சமீபத்தில் மே. 2018 ஞானம் இதழில் மேதினச் சிறுகதை எனக் குறிப்பிட்டு பிரசுரமான கதை இது.**

**இவரது கதைகள் எனக்குப் பிடித்தமானவையாக**

**இருந்த போதிலும் இறுதியாக பிரசுரமான இக்கதை இங்கு பதியப்படுகிறது.**

**செனற் ஹவுஸின் முதலாவது மாடியிலுள்ள....**

**எனஆரம்பித்து.**

**பதில்களை கணணியில் தட்டச்சு செய்ய ஆயத்தமானாள்.**

**என்று முடியும் போராட்டங்கள் கதையை ஞானம் மே இதழில் (2018) வாசியுங்கள் நண்பர்களே.**

குறைவாக எழுதினாலும் நிறைவாக எழுதவேண்டும் என்பது எனது கோட்பாடு அப்படித் தெரியும் வீதியின் ஊடாகவே அவரும் பயணிக்கிறார்.

**10 June 2018**

1974ஆம் ஆண்டு திருகோணமலையில் புதிய ஜனநாயகத்தை வலியுறுத்தி சில அமைப்புகள் சேர்ந்து இந்துக் கல்லூரியில் நடத்திய மாநாடு. நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்தோம். அம்பாறை மாவட்டத்திலிருந்து இவரும் நண்பர்களும் வந்திருந்தனர். அம்மாவட்டத்தின் தீவிர இடதுசாரி எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். பின்னர் இவர்கள் வேறு ஒரு அரசியலுக்குள் தங்களை இணைத்துக் கொண்டார்கள். எங்களின் பழைய தோழர் இவர்.

சண்முகம் சிவலிங்கம் எழுதியது போல்..

**"ஏன் பழைய தோழர் என்கிறேன்.? எல்லாமே, பொய்யாய், கனவாய் பழங்கதையாய் மெல்லப் போயிற்றே அதனால்."**

**அன்புடீன்**

ஆசுகவி அன்புடீன் என அறியப்படும் இவரது இயற்பெயர் கலந்தர் லெவ்வை. இன்னொரு பெயர் கலந்தர் முகையதீன்.

இவர் அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பாலமுனையில் 1950ல் பிறந்தவர். அஞ்சல்

திணைகளத்தில் கடமையாற்றி 2011 ல் ஓய்வு பெற்றவர். இவரை கவிஞராகவே பலர் அறிந்து வைத்திருக்கின்றனர்.

அரச கலாபூஷண விருது முதற் கொண்டு கிழக்கு மாகாண முதல் அமைச்சர் விருதுவரை பெற்றவர். மல்லிகை இவரை அட்டைப்படமாக்கி உள்ளது. ஞானம் இதழும் அட்டைப்பட அதிதி ஆக்கவுள்ளது.

விரைவில் இவரது 50 வருட எழுத்து சேவையை கௌரவிக்கும் பொன்விழா நிகழ்வொன்று அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவிருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் இவர் பெற்ற விருதுகளையும் சான்றிதழ்களையும் பதிவிட இப்பத்தியில் இடம் போதாது.

**இவரது வெளிவந்த நூல்கள்:**

முகங்கள்(கவிதை,1986), ஐந்து தூண்கள்(2000, கவிதைகள்), சாமரையில் மொழி கலந்து(2002,கவிதைகள்), மரணமல்ல ஜனனம் (2011கவிதைகள்), தொப்புள் கொடியும் தலைப்பாகையும் (2016, கவிதைகள், கொடகே விருது, சாகித்திய விருது பெற்றது), நெருப்பு வாசல் (சிறுகதைத் தொகுதி, 2011, பெருவெளி பதிப்பகம்).

இவற்றில் வீரகேசரி,ஜனவேகம், தினகரன்,கீற்று, எருக்கலம்பிட்டி ம.வி. ஆண்டுமலர், செய்தி,வெற்றிமணி ஆகியவற்றில் பிரசுரமான உருவக,உணர்வூற்று உருவக கதைகள் உட்பட 14 படைப்புகள் உள்ளன.

**சலனம்,சபலம், சபதம்**

**83/3/14 தினகரனில் பிரசுரமான கதை. நனவோடை உத்தியில் எழுதப்பட்டது.**

**இக்கதையின் பாத்திரங்களும் சம்பவங்களும் நிஜமானவை எனக்கூறும் ஆசிரியர, முருகையா எனும் பாத்திரம் இப்போது முஸ்லிம் பெயரோடு உலாவுவதாக கூறுகிறார். அது இன்னொரு கதைக்கான கரு.**

விடிந்து விட்டது என்பதை வெளிப்படுத்துவதற்காகவா? என ஆரம்பித்து

சப்பாத்துக்காகத்தான் பாடசாலை என்பது இப்போதாவது புரிகிறதல்லவா...?

என்று முடியும் இக்கதையை நெருப்புவாசல் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

சசி எழுதுகிறார்......

“அன்புடீன் மாமூலான கதைகளிலிருந்து சற்று வித்தியாசமான முறையில் சிறுகதைகளை சுதந்திரமாக எழுதவேண்டும் என்ற தேவையை உணர்ந்திருக்கிறார்.”

இந்தக் கூற்றை அன்புடீன் மெய்ப்பிக்க வேண்டும். அது அவரின் விருப்பம்.

**11 June 2018**

60களில் இலங்கையில் பல்கலைக்கழகம் பல நல்ல படைப்பாளிகளைக் கொண்டதாக இருந்தது. பின்னர் வரும் ஆண்டுகளில் இருந்த தேக்கத்தை 90களில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மாற்றினார்கள்.

கவிதைத் தொகுதிகள் தந்த இடைவெளி நிரப்புதலில் சிறுகதைப் படைப்பாளிகளும் சேர்ந்து கொண்டனர். பத்திரிகை, சஞ்சிகைகள் வாயிலாக அவர்கள் பணி தொடர்ந்தது.

**மண்ணின் மலர்கள்** என்ற பல்கலைக்கழக மாணவர்களின் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு 2001 மல்லிகைப் பந்தலூடக வெளிவந்தது. அதில் இவரது **விடிவு** கதை சேர்க்கப்பட்டிருந்தது. இவர் ஒரு சிறந்த கவிஞரும் கூட. தொழில் நிமித்தம் 2000 ன் பிற்கூற்றில் திருகோணமலையில் இருந்த காலத்தில் இவர் என்னோடு நெருக்கமாக இருந்தவர்.

எனது **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** தொகுப்பை ஒப்பு நோக்கித் தந்தவர் இவரே.

**உடுவில் அரவிந்தன்**

1972ல் உடுவிலில் பிறந்த அப்புத்துரை அரவிந்தன். யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன். யாழ் பல்கலைக்கழக BSMS. களனி பல்கலைக்கழக Msc. பட்டம் பெற்றவர். மாணவப் பருவத்திலேயே சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர்.

இவரது முதற் சிறுகதை **தியாக தீபம்** . 2017 வரை 48 கதைகள் எழுதியிருப்பதாக ஒரு குறிப்புக்கு கூறுகிறது.

**சஞ்சீவி** பத்திரிகையில் நிறைய எழுதியிருக்கிறார். அவற்றில் 14 கதைகள் **உணர்வுகள்** என்ற பெயரில் 99ல் தொகுப்பாகி உள்ளன. இதுவே இவரது முதல் சிறுகதைத் தொகுதி.

சமீப காலமாக வீரகேசரி, கலைமுகம், புதுவிதி, தமிழர்தளம், ஜீவநதி, உதயன்,தீராநதி, தளவாசல் ஆகியவற்றில் சற்று வித்தியாசமான கதைகளை எழுதி வருகிறார்.

**இவரது நூல்**

**பாழ்வெளி** (2017)

இவரது **விடிவு** (மண்ணின் மலர்கள்) கதை ஞானம் அனுசரணையில் நடந்த செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டியில் வேறு ஒருவரால் பெயர் மாற்றி எழுதப்பட்டு மூன்றாம் பரிசு பெற்ற கூத்தும் நடந்து, பரிசு வாபஸ் வாங்கப்பட்டது.

1998-2006. காலகட்டத்தில் எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளராகவும் கடமையாற்றினார். இதன் மூலம் மூத்த எழுத்தாளர்களுடன் பழக இவருக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இவரது எழுத்துப் பணியைப் பாராட்டி இவ்வாண்டின் ஆரம்பத்தில் சுன்னாகத்தில் ஒரு நிகழ்வு நடந்துள்ளது.

**விமோசனம்**

**28/3/98 சஞ்சீவியில் பிரசுரமான கதை இது.**

**ஒரு கல்யாணப் புறோக்கரையும், கல்யாணமாகாத அவரது மூன்று பெண்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் இடையூறையும் இக்கதையில் நீங்கள் தரிசிக்கலாம்.**

**முன்விறாந்தையில் படுத்திருந்த**

**என ஆரம்பித்து**

**சுகுணா விறைத்துப் போய் நின்றாள்.**

**என்று முடியும் இக்கதையை இவர் வரைந்த அட்டைப்படத்துடன் வெளிவந்த உணர்வுகள் சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

அரவிந்தனின் சமீப கதைகளை வாசிந்தவர்களுக்கு இவரது ஆரம்பகால எழுத்து எத்தகையது என்பதை நினைவூட்ட, எனக்கும் தான் இக்கதை உதவக்கூடும்.

எனது குடும்ப நண்பரும், என் நலனில் அக்கறை உள்ளவருமான உடுப்பிட்டி பி.சபை ஆயுள்வேத வைத்தியரான அரவிந்தனுக்கு என் வாசக வாழ்த்துக்கள்.

**11 June 2018**

சிறுபத்திரிகை வாயிலாக, குறிப்பாக மல்லிகையின் மூலம் இவரது பெயர் அறிமுகமானது. வடமத்திய மாகாணத்திலிருந்து ஆண் எழுத்தாளர்கள் எனக்குப் பரிச்சயமானவர்களாக இருந்த போதிலும், யாழ் அதிலும் புங்குடுதீவு புகையிலை வியாபாரிகள் உபயோகிக்கும் ஒரு முக்கிய நகரமாக இவரது ஊரின் பெயர் பேசப்படும் காலத்தில் இவரது பெயர் கவிதைகளின் மூலமும் சிறுகதை, கட்டுரைகள் மூலமும் தெரிய வந்தது.

ஜெயகாந்தனின் பரம ரசிகையான இவர் நேரில் அவரைச் சந்தித்தும் உள்ளார்.

**கெக்கிறாவ ஸஹானா**

1968ல் கெக்கிறாவயில் பிறந்த இவரது இயற் பெயர் ஏ.எஸ்.ஜஹனாறா. கம்பளை ஸாகிறாவில் தனது கல்வியைப் பெற்று 90 களில் ஆசிரியையானவர்.

ஆசிரியர் கற்கைநெறியை மேற்கொண்டவர். தமிழ், ஆங்கில, விஞ்ஞானப் பாடங்களை திறமையாகக் கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்தவராகத் திகழ்ந்தவர்.

2014 ல் ஆசிரியப் பதவியிலிருந்து சுய விருப்பின்

பேரில் ஓய்வு பெற்றுள்ளார். மல்லிகை,படிகள், ப்ரவாகம், ஜீவநதி போன்ற சிறு சஞ்சிகைகளில் இவர் படைப்புகள் வெளிவந்துள்ளன. சிறுகதை, கவிதை,நாவல், குறுநாவல், சுயசரிதையென 10 நூல்கள் இவர் வெளியிட்டுள்ளார்.

**இவரது நூல்கள்**

ஒரு தேவதைக் கனவு(1997, சிறுகதை, மல்லிகைப் பந்தல்), இன்றைய வண்ணாத்துப் பூச்சிகள்(கவிதை,2004), ஒரு கூடும் இரு முட்டைகளும்(2009,குறுநாவல்), இருட்தேர் (2011,கவிதைகள்), மானசஞ்சாரம்(2012, சுயசரிதை), முடிவில் தொடங்கும் கதைகள்(2012),

அன்னையின்மகன் (2014, நாவல்), ஊமையின் பாஷை(2014, சிறுகதைகள்), புதிய தரிசனம் (2017,கட்டுரைகள்).

**கோடரிக்காம்புகள்**

ப்ரவாகம் செப் 2001 ல் பிரசுரமான கதை இது.

பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் ஒருவரின் துர்நடத்தை பற்றியும், அவருக்கு நடக்கும் எதிர் நடடிக்கை பற்றியும் விபரிக்கும் ஒரு வித்தியாசமான கதை.

வரவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டுவிட்டு திரும்பினேன்.

எனத் தொடங்கி

அவள் சுண்டி வீசிய அந்தக் கேள்வி நீண்ட மலைப்பாம்பென எங்கள் முன்னால் விழுந்து கிடந்தது.

என்று முடியும் இக்கதையை இவரின் முடிவில் தொடங்கும் கதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.

தனது அனுபவத்தில் யாரோடும் முரண்படாமல் எழுத்துப் பணியை இவர் செய்து வருகிறார்.

ஆயினும் தனக்கான ஒரு இலட்சிய நோக்கு இவரிடம் உள்ளது. அதில் உறுதியுடன் அவர் செயல்படுகிறார்.

அது போதும்.

**11 June 2018**

## பிடித்த சிறுகதை 150

ஒரு பிரபலமான எழுத்தாளரைப் பற்றிய பதிவு இது. முன்னைநாள் என்ற அடைமொழியை அந்நாளில் இவருக்கே பாவித்தார்கள்.(முன்னாள் என்றும் கூட)புலம் பெயர்ந்தவர். தனது நாவலொன்றின் மூலம் பிரபலமானவர்.

இப்போது நடிகராகவும் அறியப்படுகிறார். என்னைவிட இவரைப்பற்றி உங்களுக்குக் கூடத் தெரியும். எனவே நிறுத்திக் கொள்ளுகிறேன்.

**ஷோபாசக்தி**

18/11/1967 ல் அல்லைப்பிட்டியில் பிறந்த யேசுதாசன் அன்ரனிதாசன் இந்தப் பெயராலேயே அறியப்பட்டவர். முன்னைநாள் என்ற பதத்துடன் பிரான்சில் வாழ்பவர்.

ஆரம்பத்தில் ஈழமுரசு, செய்திக் கதிரில் எழுதியவர். **விடுதலைக் காளி** எனும் வீதி நாடகத்தில் நடித்தவர்.

இவருடைய **கொரில்லா** நாவல், கோவிந்தனின் **புதியதோர் உலகம்** போல பலரைக் கவர்ந்தது.

**இவரது நூல்கள்**

கொரில்லா (நாவல், 2001,ஆங்கிலத்தில் 2008), "ம்" (நாவல் 2004. ஆங்கிலத்தில் 2010. மலையாளத்திலும் வந்துள்ளது), **BOX** (நாவல், 2015,விகடன் விருது), தேசத் துரோகி,(சிறுகதை,2003). **MGR** கொலை வழக்கு(சிறுகதை, 2009, விகடன் விருது), கண்டி வீரன்(சிறுகதை, 2014.கனடா இல.தோட்ட விருது), வேலைக்காரிகளின் புத்தகம் (கட்டுரை, 2007, விக.விருது),முப்பது நிறச்சொல் (கட்டுரை.2014).

இன்னும் நேர்காணல்கள் எதிர்வினைகள், நாடகங்கள், அரசியல் குறித்தவையும் உண்டு.

செங்கடல் தமிழ் படத்தின் திரைக்கதை வசனத்தில் இணைந்துள்ளார். கான் திரைப்பட விழாவில் தங்கப்பனை விருது பெற்ற **தீபன்** படத்தில் இவர் நடித்தார் என்று நான் எழுதத் தேவையில்லை, அது உலகம் அறிந்த செய்தி.

இப்போது.....

**AN IBC TAMIL PRODUCTION FRIDAY AND FRIDAY - A film by SATHAPRANAVAN**.

இவருடைய **கொரில்லா,** ம், நாவல்கள் தந்த திருப்தியை BOX நாவல் எனக்குத் தரவில்லை.

**தேசத்துரோகி**

**இக்கதை 2001 ல் இவரும் சுகனும் தொகுத்த கறுப்பு எனும் தொகுப்பில் பிரசுரமானது.**

**இன்று பல்வித விமர்சனங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் Mr.Clean. அன்று யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்ட விதம் பற்றிக் கூறும் கதை.**

**அரசாங்கத்தாலும் அவனது பெறாமகனாலும் காசு சேர்க்க அறைக்கு வந்து போகும் இயக்கக்காரராலும்**

**எனத் தொடங்கி**

**அப்போதெல்லாம் ரணில் விக்கிரமசிங்கா பெரிய பிரபலமில்லை, சர்வதேசப் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் அவரைக் குறித்து நம்பிக்கை தெரிவிப்பது போன்ற அயிட்டங்களும் நிகழ்ந்திருக்கவில்லை.**

**என்று முடியும் இக்கதையை கறுப்பு தொகுப்பிலும், இக்கதையின் பெயரில் வெளிவந்த தேசத்துரோகி தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

ஷோபாசக்தியின் வாசகன் நான் என்ற போதிலும் தன்னை மார்க்சிய நேசராகக் கூறிக்கொள்ளும் அவருடன் ஒத்துப்போக என்னால் முடியாதுள்ளது.

காரணம்....?

அவர் ஒரு ட்ரொக்ஸிஸ்ட்.

நானொரு ஸ்டாலிஸ்னிஸ்ட்.

**12 June 2018**

இவர் எனது அயலூர்க்காரர். ஹாட்லிக் கல்லூரியில் படிப்பை முடித்துக்கொண்டு **K.G** யில் சேர்ந்து பின்னர் **வீரகேசரி**யில் இணைந்தவர். பத்திரிகையாளராக அல்ல விளம்பரப் பகுதி ஊழியராக. இவர் நினைத்திருந்தால் வருடத்தில் 25 கதைகளாவது எழுதியிருக்க முடியும். அப்படி எல்லாம் தயாரிப்பு உபாதை எதுவும் இவருக்கு இருக்கவில்லை.

தமது 41 வருட இலக்கிய அனுபவத்தில் 43 சிறுகதைகளையே இவர் எழுதியிருக்கிறார்.

## புலோலியூர்.ஆ.இரத்தினவேலோன்

இவர் 1958. நத்தார் தினத்தன்று பிறந்தவர். இயற் பெயர் ஆறுமுகம் இரத்தினவேலோன். தான் பிறந்த ஊரை, ஊருக்குப் பெருமைசேர்த்த மற்றைய படைப்பாளிகள் போல் தன் எழுத்துப் பெயராக ஆக்கிக் கொண்டவர்.

இவரது முதற் கதை **புரளும் அத்தியாயம்** 1977ல் தினகரனில் பிரசுரமானது.

தொடர்ந்து வீரகேசரி,தினக்குரல்,ஈழநாடு, மல்லிகை, ஞானம், ஜீவநதியில் எழுதினார். கவிதை, பத்தி எழுத்து, இவரது இயங்கு துறைகள் குறிப்பாக சிறுகதை இவரது பிரதான துறை. பிறருடன் இணைந்து சில படைப்புகளையும் இவர் தந்துள்ளார்.

இவரது மீரா பதிப்பகத்தினூடாக பிரபலமான ஆளுமைகளின் நூல்களுட்பட 104 நூல்களை வெளியிட்டுள்ளார். மிகக் குறுகிய காலத்தில் இத்தகைய ஒரு பெருமுயற்சியை செய்த இவரது இப்பணி பாராட்டுதலுக்குரியது. தனது பெயரோடு தனது மண்ணின் பெயரையும் இணைத்துக் கொண்டுள்ள இவருக்கு அந்த மண்ணின் இலக்கிய பேர்வழிகள் உரிய கௌரவத்தை வழங்காதிருப்பது விசனத்துக்குரியது.

கடைசியாக வந்த இவரது சிறுகதைத் தொகுப்பின் பின்னட்டையில் நான் எழுதிய வாசகத்தை மீள கீழே தருகிறேன்.

**"தயாரிப்பு அந்தரமெதுவும் இல்லாத இயற்பண்புவாத கதை சொல்லும் முறைமைக்கு உதாரணங் காட்டக்கூடிய அச்சொட்டான படைப்பாளியென இரத்தினவேலோனை நான் குறிப்பிட்டுக் கூறுவேன்."**

**இவரது நூல்கள்**

புதிய பயணம்.(2ம் பதிப்பு, 1996,2011),விடியட்டும் பார்ப்போம்(1997),நிலாக்காலம் (2002, வ.கி.மா பரிசு), நெஞ்சாங்கூட்டு நினைவுகள்(2006,வ.மா.பரிசு), காவியமாய் நெஞ்சின் ஓவியமாய் (2011),விடியலுக்கு முன்(2004, திக்கற்றவர்கள்(மணிமேகலை,2005).

இவரது பத்தியெழுத்து, பிறருடன் இணைந்து எழுதியவையைத் தவிர்த்துள்ளேன்.

தகவம் பரிசு,கனக செந்திநாதன் விருது. கவிஞர் செல்லையா பரிசு பெற்றவர். இவரது சிலகதைகள் மீள்பிரசுரம் பெற்றுள்ளன.

சில கதைகள் சிங்கள வடிவம் பெற்றுள்ளன. இவர் கதைகளை பல்கலைக்கழக மாணவர் சிலர் தம் பட்டப்படிப்புக்காக ஆய்வு

செய்துள்ளனர்.

லண்டன் பூபாளராகங்கள் விழாவுக்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டவர். மல்லிகை 2007 ல் இவரை அட்டைப் படமாக்கி கௌரவித்துள்ளது.

இறுதியாக தினக்குரலில் ஊடக முகாமையாளராகப் பணியாற்றிய இரத்தினவேலோன் சமீபத்தில் கடமையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**தாச்சிச் சட்டி**

> **மல்லிகை ஜுன் 2009ல் பிரசுரமான கதை இது. தகவம் 2009. இரண்டாம் காலாண்டு சிறப்புப் பரிசு பெற்றது. அவரது நெஞ்சாங்கூட்டு நினைவுகளில் இதுவும் ஒன்று.**
>
> **நடுவிலம்மான் எங்கள் வளவில் இருந்த காலகட்டங்களில்தான்...**
>
> **என ஆரம்பித்து**
>
> **பொங்கிவந்த அழுகை என் தொண்டைக் குழியில் வந்து தடுக்கிக் கொண்டு நின்றது.**
>
> **என்று முடியும் இக்கதையை இவரது காவியமாய் நெஞ்சின் ஓவியமாய் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

இத்தொகுதி பற்றிய **உங்களுக்கு ஒன்று சொல்வேன்** பத்தியில் முன்னாள் தினக்குரல் ஆசிரியர் நண்பர் தனபாலசிங்கம் எழுதியவற்றை கீழே தருகிறேன். அக்கருத்துக்கு நானும் உடன்படுகிறேன்.

**“இனிமேல் ஒரு சமூகப் பிராணி நிலை வயப்பட்ட கதை சொல்லியாக வேலோன் மாறுவதற்கு தன்னை இசைவாக்க முயற்சிப்பதே அவரின் எழுத்துக்களுக்கு இலக்கிய உலகில் கனதியான சுவட்டை ஏற்படுத்திக் கொடுக்கும்.”**

**12 June 2018**

திருகோணமலை மாவட்ட பிரதேச சாகித்திய விழா சம்பந்தமான இறுதிச் சுற்றுக்கு நடுவராக நான் இருந்த போது போட்டிக் கதைகளில் இவரது கதையை நான் தெரிவு செய்தேன். அப்போதே இவர் பெயர் பெற்ற எழுத்தாளர். ஏலவே பல போட்டிகளில் முதலிடம் பெற்றவர். அடுத்த வருட பிரதேச சாகித்திய போட்டியில் இவரது கதையும் வந்திருந்தது. இவரது கதையே சிறந்ததாகவும் இருந்து முதலிடம் பெற்றது. போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்ட சில நாட்களின் பின் தொலைபேசியில் இவருடன் தொடர்பு கொண்டு. பின்வருமாறு கூறினேன்.

**“வாழ்த்துகள். உங்களிடம் ஒரு சிறிய வேண்டுகோள். பரவலாக அறியப்பட்ட பல போட்டிகளில் பரிசு பெற்ற நீங்கள் இனி இப்படியான போட்டிகளில் பங்கு பற்றாதீர்கள். இளைய தலைமுறைக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். ”**

ஓய்வூதியரான அவர் எனது வாழ்த்துக்குப் பிறகு போட்டிகளுக்கு கதை எழுதுவதை நிறுத்திக்

கொண்டார்.

நானும் நடுவர் பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். அப்போது நடுவர் பதவிக்கு விண்ணப்பம் கோரும் நடைமுறை இருக்கவில்லை.

**எம்.எஸ்.அமானுல்லா**

1/7/1946 ல் மூதூரில் பிறந்தவர். முகமது சுலுத்தான் அமானுல்லா. மூதூர் மத்திய கல்லூரி பழைய மாணவர். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர். ஆசிரிய ஆலோசகராக, முதலாம்தர அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்.

இவரது முதல் கதை **இருதுளிக் கண்ணீர்.** இணுவிலில் இருந்து வெளிவந்த **உதயசூரியன்** பத்திரிகையில் பிரசுரமானது. அப்போது இவரது வயது 15. தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் **கவிஞர் யுவன்** அவர்களின் சிபார்சுடன் இரண்டு கதைகள் 1967 ல் பிரசுரமாகியது.

மிகக் குறைவாகவே இவர் எழுதினார். பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கென்றோ, போட்டிகளுக்கென்றோ இவர் எழுதுவதில்லை. நேரம் கிடைக்கும் போது எழுதியவற்றை தேவை ஏற்படும் போது அனுப்பி வைப்பார்.

அப்படி அனுப்பி கல்வி அமைச்சின் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதைதான் பிரசித்தி பெற்ற **வரால் மீன்கள்** சிறுகதை. இதுவரை 16 போட்டிகளில் இவரது கதைகள் பரிசு பெற்றிருக்கின்றன.

தினபதி, தினகரன், மல்லிகை, ஞானம், சாகரம், கூர்மதி, பூபாள ராகங்கள், ஜீவநதி ஆகியற்றில் இவர் கதைகள் பிரசுரமாகியுள்ளன.

சில மலர்களின் பொறுப்பாசிரியராகவும் இவர் இருந்துள்ளார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் **யாழ்பிறை** ஆசிரியராக இருந்த போது கவிஞர் அண்ணலின், மரகதத்தில் வெளிவந்த **மனிதம்** கதையை மறுபிரசுரம் செய்து அவரை சிறுகதை எழுத்தாளர் எனவும் அடையாளம் காட்டியவர்.

**இவரது நூல்கள்**

வரால்மீன்கள்(2007, பரிசு பெற்ற எட்டுக் கதைகள், இ.இ.பேரவை விருது, கி.மா.விருது, சாகித்திய விருது),ஒரு பெண்ணின் கதை (2017, எட்டுக் கதைகள்,இரண்டு கதைகள் தகவம் பரிசு பெற்றவை).

இவர் எழுதிய இருபது கதைகளில் பதினாறு கதைகளே நூலுருவாகியுள்ளன. இவரது பசி சிறுகதையை திறனாய்வு செய்த மாணவி ஒருவர் 2016 ம் ஆண்டு தமிழத் தினப்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

இவரது **வரால் மீன்கள்** மாத்திரமல்ல **சுங்கான் மீன்** கதையும் துரைவி தினகரன் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றுள்ளது.

1962 மூதூர் மண் வ.அ. வின் **தோணி** மூலம் சாகித்தியப் பரிசைப் பெற்றதினால் பெருமை கொண்டது. நீண்ட இடைவெளி. 45 வருடங்களின் பின் 2007ல் அமானுல்லாவின் **வரால் மீன்கள்** சாகித்தியப் பரிசைப் பெற்றதன் மூலம் மீண்டும் ஒருமுறை பெருமையைப் பெற்றுக்கொண்டது.

**ஒற்றை மாட்டு வண்டி**

**லண்டன் பூபாள ராகங்கள் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்று, அவர்கள் 2012ல் வெளியிட்ட பரிசுச் சிறுகதைகள் தொகுப்பில் இடம் பெற்ற கதை இது. யுத்த கால சூழ்நிலையில் மனிதம் என்ன என்பதைக் கூறிய கதை.**

**சுற்று மதிலோடு இணைந்த இரும்புக்கேட்,**

**என ஆரம்பித்து**

**ஒற்றை மாட்டுவண்டியில் மூவரும் புறப்பட்ட போது கிழக்கில் வெள்ளாப்புத் தோன்றத் தொடங்கி இருந்தது....**

**என்று முடியும் இக்கதையை பூபாளராகங்கள் பரிசுக்கதைத் தொகுப்பிலும், இவரது ஒரு பெண்ணின் கதை தொகுப்பிலும் வாசியுங்கள்**

நண்பர்களே.

இது 1/10/2017 ல் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதிக்கு **அமானுல்லா என்னும் படைப்பாளியைப் பற்றி** எனும் முன்னீட்டில் நான் எழுதிய ஒரு கூற்று.

**"ஓய்வு பெற்றபின் மனிதாபிமான விருப்புடைய இவர் உதவி நிறுவனமொன்றில் கடமையாற்றினார். தற்போது உடல் நலமின்மை காரணமாக அதிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளார். ஆனாலும் மனிதாபிமானத்திலிருந்து அவர் ஓய்வு பெறவில்லை ஓய்வு பெறவும் மாட்டார். மூதூரின் எழுத்துலக ஜாம்பவான்களாக வ.அ.வின் பின்னர் இன்றுவரை இலக்கிய உலகில் ஜொலித்துக் கொண்டிருப்பவர்களில் இவரும் ஒருவர்."**

**13 June 2018**

இலங்கையில் நீண்ட பெயரோடு எழுதியவர, எழுதிக் கொண்டிருப்பவர் இவராகத்தான் இருக்க வேண்டும். இவரது முதல் கதை வீரகேசரியில் தான் பிரசுரமானது. அதை நான் வாசித்திருந்தேன்.

தனக்கான அரசியலைத் தானே தேர்ந்து கொண்டு, அவ்வரசியலுடன் முழு விசுவாசத்தோடு பயணித்து பல இன்னல்களை முகம் கொண்டவர். மணிவிழாக் கண்டவர். இன்னும் இலக்கிய முயற்சிகளில் இயங்கிக் கொண்டிருப்பவர்.

**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

29/5/1954ல் இணுவிலில் பிறந்த இவர் அரச எழுதுவினைஞர். யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசக் காரியாலயங்களில் கடமையாற்றியவர். 2014 ல் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்றவர்.இலங்கையின் சகல பத்திரிகைகளிலும் இவரது சிறுகதைகள் பிரசுரமாகி இருக்கின்றன.

**இவரது நூல்கள்**

வெட்டுமுகம் (1993 .தே.க.பேரவை), என்னுடையதும் அம்மாவுடையதும்(1995,தே.க.பேரவை), மணல்வெளி அரங்கு(2002,தே.க.பேரவை),மருத்துவர்களின் மரணம்(2017). நாவல்கள்- என்றாவது ஒருநாள, இருள் இரவிலல்ல, முடிவல்ல ஆரம்பம், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், முள்முடி மன்னர்கள்.

170 சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ள இவரது சில கதைகள் மட்டுமே நூலாகி உள்ளன.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் பதிவும் பகிர்வும் என்றொரு இவரது அபிமானிகள் எழுதிய நூலும் வந்துள்ளது. இவரது மணிவிழாவை ஒட்டி சிறப்பான மலர் ஒன்றும் வெளிவந்திருக்கிறது.

**தம்பி நீ நல்லபிள்ளை**

**1987 மார்ச் உதயன் பத்திரிகையின் அர்ச்சுனா இதழில் சிறப்புச் சிறுகதையெனக் குறிப்பிட்டு பிரசுரமான கதை இது. கதையோடு இவரது புகைப்படமும் பிரசுரமாகி இருந்தது.**

**வானம் நன்றாக இருண்டு போய் இருந்தது...**

**எனத் தொடங்கி**

**நான் மெய்மறந்து நின்றேன்.**

**என்று முடியும் இக்கதையை நூலகம் இணையத்தில் அர்ச்சுனா மார்ச் 87 இதழைத் தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

இன்றும் சுறு சுறுப்போடு **சூரியகாந்தி** இதழை காத்திரமாக செய்துவரும் இவரைப் பார்த்து நான் ஆச்சரியப்படுவதுண்டு.

**தளவாசல்** சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியரும் இவரே. ஏன் இவர் நல்ல வாசகர்களால் கவனப்படுத்தப்படவில்லை என்ற ஆதங்கம் எனக்கு எழுகிறது.....உங்களுக்கு..?

**14 June 2018**

## பிடித்த சிறுகதை 154

இவர் 70ல் தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியவர். 70களில் நாங்கள் தீவிரமான வாசகர்கள். அப்பொழுது, நான் வெளிவரும் படைப்புகளை ஊன்றிப் படித்ததோடு நில்லாது அவற்றை எழுதியவர்கள் யாரென்ற தேடலில் ஈடுபட்ட காலம். **ஆசிரியன் இறந்து விட்டான்** என்ற சொல்லாடல் அறிமுகமில்லாக் காலம். எழுதியவன், வாசகனின் மனதில் சப்பாணமிட்டு அமர்ந்திருந்த காலம். அக்காலத்தில் பேசப்பட்ட பெயர்களில் இவரதும் ஒன்று.

**வடகோவை வரதராஜன்**

17/7/57ல் கோப்பாய் வடக்கில் பிறந்த தியாகராஜா வரதராஜன், யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவன். குண்டசாலை விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா பெற்றவர். சிறிது காலம் சௌதி அரேபியாவில் **Forman** ஆகக் கடமையாற்றியவர். சென்ற வருடம் இவர் ஓய்வு பெறும்போது சிறுப்பிட்டி கிரமசேவகராக இருந்தார்.

1970 ல் **ஒரு மலர் உரமாகிறது** என்னும் சுடர்

சஞ்சிகைக் கதையுடன் எழுத்துலகில் அறிமுகமானவர். ஈழநாடு, சிரித்திரன், மல்லிகை, வீரகேசரி, தீபம் , கணையாழி, ஆகியவற்றில் பேசத்தக்க கதைகளை எழுதியவர்.

விஞ்ஞானக் கட்டுரைகளை வீரகேசரியில் தொடராக எழுதியவர். யுத்தம் இவரது சேகரிப்பில் இருந்த இவரது படைப்புகளை இல்லாமல் செய்துவிட்டது (யுத்தம் படைப்பாளிகளை இல்லாமல் ஆக்கியது மாத்திரமல்ல, படைப்புகளையும் இல்லாமலாக்கி விட்டது.) எழுதுவதையே இவர் நிறுத்திவிட்டார்.

எனது இந்தப் பதிவு இவரை எழுத்துலகுக்கு மீள் பிரவேசம் செய்ய தூண்டவேண்டும் என விரும்புகிறேன்.

**இவரது நூல்**

மிகச் சிரமத்துடன் தேடியெடுத்த இவரது கதைகளில் சில 2015ல் **நிலவு குளிர்ச்சியாக இல்லை** எனும் பெயரில் **மகிழ்** பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இத் தலைப்பிலான கதை தகவம் காலாண்டுக் கதைகள் தெரிவில் பரிசு பெற்றது. இவரது சிரித்திரனில் வந்த **நாளை வரும் திருநாள், இயந்திரமயமாதல்** கதைகள் என் நினைவில் உள்ளது.

இவை இவரது தொகுப்பில் இடம் பெறவில்லை. தீபத்தில் வந்த **கோமோ செக்ஸ்** கதையும்,தொகுப்பில் இடம்பெற்ற **கணையாழி** க் கதையான **மலினப்பட்ட மானிடங்கள்** கதையும் நினைவிலுள்ளது.

கணையாழிக் கதை அச் சஞ்சிகையில் வந்த கதைகளை ஆய்வு செய்த ஒருவரின் நூலில் பிரசுரமான இலங்கைக் கதைகள் 13 ல் தேறிய 10 கதைகளில் ஒன்றாக **சமூக சிறுகதைகள்** என்ற உபதலைப்பில் சிலாகித்து எழுதப்பட்டுள்ளது.

**மழைப் பஞ்சா(ம்) ங்கம்**

**90 ல் மல்லிகையில் பிரசுரமான கதை இது. இந்தத் தலைப்பைச் சரியாகத் தர முடியவில்லை.**

**யுனிக்கோட் ஒத்துழைக்க மறுக்கிறது. மழைப் பஞ்சம் பற்றிக் கூறும் கதை இது.**

**வலிகாமம் கிழக்கின் மண்வாசனை வீசும் இவரது கதைகளில் இதுவுமொன்று.**

**சின்னண்ணை காலை பத்துமணிக்கே மாடுகளை அவிழ்க்கத் தொடங்கிவிடுவார்.**

**எனத் தொடங்கி**

**எனக்கென்னவோ சின்னண்ணை மழைப்பஞ்சாங்கம் என்றவார்த்தையைக்கூட கேள்விப்பட்டிருக்கமாட்டார் என்றே தோன்றியது.**

**என்று முடியும் இக்கதையை மல்லிகை சிறுகதைகள் 2 லும் இவரது சிறுகதைத் தொகுதியிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

ஒரு உண்மையைச் சொல்கிறேன்.

விற்று முடிந்ததாகக் கூறப்படும் இவரது சிறுகதைத் தொகுதியை இன்னும் நான் வாசிக்கவில்லை. எனக்கு அது கிடைக்கவில்லை. விரைவில் கிடைக்கும்.

**14 June 2018**

## பிடித்த சிறுகதை 155

இவரது பெயர் வீரகேசரி நான்காவது மலையக சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றதின் மூலம் எமக்கு அறிமுகமானது. பின்னரும் ஒரு தடவை இவர் பரிசு பெற்றார் என்பது எனது ஞாபகம்.

மாத்தளைக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் தங்கள் பெயரை இணைத்துக் கொண்டவர்களில் இவரும் ஒருவர். **மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை சோமு, மாத்தளை மலரன்பன், மாத்தளை செல்வா (விக்கிரமசிங்கா)** போல் இவரது பெயரும் எமக்குப் பாடம்.

**மாத்தளை பெ.வடிவேலன்**

நோர்த் மாத்தளையில் பிறந்த, பெருமாள் வடிவேலன் பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரி. ஆசிரியப் பணியிலிருந்த இவர் இந்துக் கலாசார அமைச்சில் கலாசார உத்தியோகத்தராய் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

**பிஞ்சு உலகம்** எனும் சிறுகதைக்காக வீரகேசரி மலையகச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர். **துரைவி** தினகரன் இணைந்து நடத்திய

சிறுகதைப் போட்டியிலும் இவருக்குப் பரிசு கிடைத்தது. துரைவி வெளியிட்ட**மலையகச் சிறுகதைகள்** தொகுப்பில் இவரது கதை சேர்க்கப்பட்டுள்ளது. ஏலவே நான் குறிப்பிட்ட **தோட்டக் காட்டினிலே** தொகுப்பில் எனக்குப் பிடித்த சிறுகதையும், மல்லிகையில் இவரெழுதிய **வதைப்படலம்** கதை மல்லிகை சிறுகதைகள் 2 லும் இடம் பெற்றிருக்கிறது.

இவரது **புத்தாண்டு புதிதல்ல** சிறுகதை பண்ணாமத்துக் கவிராயரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு இரு பத்திரிகைகளில் பிரசுரமாகி இருக்கிறது. **ஊமையன் கோவில்** இவரது சிறந்த சிறுகதைகளில் ஒன்று.

இந்து கலாசார அமைச்சின் அலுவலாக திருகோணமலைக்கு ஓரிரு தடவைகள் இவர் வந்திருக்கிறார். ஆயினும் நான் இவரை சந்திக்கவில்லை.

**இவர் எழுதிய சில நூல்கள்**

மலையகப் பாரம்பரிய கலைகள் (1992), மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும் (1997), இலங்கையில் எம்.ஜி.ஆர். (2017).

இவரது சிறுகதைத் தொகுப்பு : அட்சய வடம் (2013, பூபாலசிங்கம் வெளியீடு, தமிழியல் விருது, டென்மார்க் அனசன் விருது பெற்றது).

**வெட்டு மரங்கள்**

**யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த டானியல் அன்ரனியின் சமர் சஞ்சிகையில் 80ல் பிரசுரமான கதை இது. 80ல் மூவர் சேர்ந்து எழுதிய தோட்டக் காட்டினிலே தொகுதியில் வெளி வந்த கதைகளில் ஒன்று.**

**இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் காலநிலை மாற்றத்தால் தாங்கள் நாட்டிய மரங்களையே வெட்டவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியமையைக்**

**கூறும் கதை.**

**மாலையிலிருந்து தொடர்ந்து இரவு முழுவதும் பாட்டம் பாட்டமாய்....**

**எனத் தொடங்கி**

**அவர்கள் வேகமாக நடக்கின்றனர்.**

**என்று முடியும் இக்கதையை தோட்டக் காட்டினிலே தொகுப்பிலும் இவரது அட்சய வடம் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

இவர் **மாத்தளை மலரன்பன்** எனும் எழுத்தாளரின் தம்பி என்பது முக்கியமான ஒரு தகவல்.

பலருக்கு இது தெரிந்த தகவலும் கூட.

**15 June 2018**

## பிடித்த சிறுகதை 156

இவர் கவிஞர் என்றே அழைக்கப்பட்டார். தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் சிறுகதைகளைச் சிபார்சு செய்வோர் பட்டியலில் இவரது பெயரும் இடம்பெற்றிருந்தது. எனக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒருவரின் இரண்டு கதைகளை இவர் சிபார்சு செய்து பிரசுரிக்கச் செய்துள்ளார். இவரின் ஒரே ஒரு கதை மட்டுமே நான் வாசித்திருக்கிறேன். இவர் வேறு கதைகள் எழுதியிருக்கிறாரா? என்ற தகவல் எனக்குத் தெரியாது.

**யுவன்**

1935 ம் ஆண்டு பெத்துவிலில் பிறந்த இவரது இயற்பெயர். **எம்.ஏ.கபூர்.** மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் படிக்கும் போது அவர்கள் வெளியிட்ட **யுவன்** சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து அதனையே தன் புனைபெயராகக் கொண்டவர். இன்னும் பல புனைபெயர்களில் இவர் எழுதினார்.

200 கவிதைகள், 50 நாடகங்கள்(வானொலி உட்பட), 100.கட்டுரைகளின் சொந்தக்காரர்.

1957 ல் மட். தென்கிழக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்தவராக இருந்தார். அப்போது அவர்கள் வெளியிட்ட **அருட்கவி** கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியர் இவரே.இவர் அக்கரைப்பற்று அல் முனவ்வரா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றியவர். பதுளையிலும் கடமையாற்றி இருக்கிறார்.

1966 ல் **மூதூர் இக்பால் சனசமூக நிலையம்** 10 ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கவிதைப் பேட்டியில் இவரது கவிதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. முதற் பரிசு தங்கப் பதக்கம் பெற்றவர், மறைந்த **எம்.எச் எம். அஸ்ரப்.**

**தங்கச் சவடி**

**1964 ல் ஸபீனா பதிப்பகம் வெளியிட்ட யூ.எல்.தாவுத் தொகுத்த முஸ்லிம் கதைமலர் நூலில் வெளிவந்த 14 கதைகளில் இதுவும் ஒன்று.**

**ஏண்டி அழுகிறாய்...?....**

**என ஆரம்பித்து.**

**அவற்றிலே தங்கச் சவடியும் எனக்குத் தெரிந்தது.**

**என்று முடியும் இக்கதையை முஸ்லிம் கதை மலர்கள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

தனது 56 ஆவது வயதில் 05/04/91 ல் மௌத்தாகிப் போன இவர் வேறு கதைகள் எழுதவில்லையா? அவை எவை.?

இக்கேள்விகள் இன்னும் எனக்குள் எழுந்த வண்ணமே உள்ளது.

**15 June 2018**

திரிபுவாதிகள். இந்த வார்த்தையைக் கூற இவரைப் போன்றவர்களை சுட்டிக் காட்டி, என் போன்றவர்களை இவர்களின் பக்கம் சேராமல் செய்து, கடைசி காலங்களில் தாங்கள் அவர்களோடு கைகோர்த்து எம்மையெல்லாம் தனிமைப்படுத்திய முற்போக்கு அசல்கள் சிலர் மீது நான் மிகுந்த மனவருத்தமுடையவனாக இருக்கிறேன்.

இவருக்கு என்னைத் தெரியாது. எனக்கு இவரைத் தெரியாது. இவரும் மார்க்சியத்தை நேசிப்பவர். நானும் மார்க்சியத்தை நேசிப்பவன். பிறகேன் முரண்பாடு.....?

சோவியத் சார்பு....சீனச் சார்பு...?

**சிவா சுப்பிரமணியம்**

கே.வி.சிவா சிவசுப்பிரமணியம் 1942 ல் பிறந்தவர். அரச எழுதுவினைஞராக இலங்கையின் சகல பாகங்கைளிலும் கடமையாற்றி தனது 45 வயதில் ஓய்வு பெற்றவர். அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தில் அங்கம் வகித்தவர். இடதுசாரிச் செயற்பாட்டாளர்.

மும்மொழி அறிவு மிக்கவர்.

மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். கம்யூனிஸ்ட் பத்திரிகையான தேசாபிமானி ஆசிரியராக 60 களில் கடமையாற்றியவர். தினகரன் பத்திரிகையில் சிலகாலம் கடமையாற்றி அரசியல் மாற்றம் காரணமாக அதைவிட்டு விலகிக் கொண்டவர். தினக்குரலில் இறுதி காலத்தில் அரசியல் பத்திகளை எழுதி வந்தார்.

மல்லிகையில் பல கதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். குணசேன விதான, கே.ஜயத்திலக, ஏ.வி.சுரவீர போன்ற சிங்கள ஆளுமைகளின் பெயரை இவர் மூலமே பலர் அறிந்து கொண்டனர். நானும்தான்.

இவர் தமிழில் சில சிறுகதைகளே எழுதியிருக்கிறார். அவை நூலாக வெளிவரவில்லை.

கடைசி காலங்களில் நீர்வை பொன்னையனுடன் இணைந்து முற்போக்கு கலை இலக்கியப் பேரவை நடவடிக்கைகளை முன்னெடுத்தவர். இவரது அட்டைப்படம் ஏப்ரல் 2006. மல்லிகை இதழில் பதியப்பட்டுள்ளது.

2016 மே.29ம் திகதி இவர் கோண்டாவிலில் தனது 74 வயதில் காலமாகினார்.

**வெளிச்சத்துக்கு வருவோம்**

**மல்லிகை 1974 ஓகஸ்ட் இதழில் பிரசுரமான கதை இது.**

**தமிழ் முதலாளிகளும் சிங்கள முதலாளிகளும் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு சாதாரண மலையக தொழிலாளர்களை ஐக்கியப்பட விடாமல் இன ரீதியான தொழிற் சங்கங்களை உருவாக்கியமையை தொழிலாளர்கள் உணர்ந்து கொள்ளும் சம்பவத்தைக் கூறும் கதை.**

**மெல்ல மெல்ல ஒளி மங்குகிறது**

**என ஆரம்பித்து**

**அந்தத் திசையில் தான் சிறிசேனாவின் வீடு இருக்கிறது.**

**என்று முடியும் இக்கதையை மல்லிகைச் சிறுகதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

**புத்துலகம் படைப்பதில் புத்தூக்கம் கொண்டவர்.**

இது மல்லிகை அட்டைப்படத்தில் இவரைப்பற்றி ஜீவா எழுதியிருக்கும் கூற்று.

**16 June 2018**

இவர் பற்றி விலாவாரியான தகவல்கள் கீழே தரப்படுகின்றன. இவர் என்னை தன் சஞ்சிகையின் அட்டைப்பட அதிதியாக்கி இருப்பவர். **மனிதம்** கதை இருக்கும் வரை இலக்கிய உலகில் நீர் வாழ்வீர் என்று என்னைச் சிலாகித்தவர்.

**தி. ஞானசேகரன்**

ஈழத்து இலக்கிய உலகில் ஐம்பத்து நான்கு வருடங்களாக இயங்கி வருபவர். 1941ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி தியாகராசா ஐயர் பாலாம்பிகை தம்பதியினரின் புதல்வராக யாழ்ப்பாண மண்ணில் பிறந்தார். யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலை, உரும்பிராய் இந்துக் கல்லூரி, இலங்கை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணி (B.A.) பட்டம் பெற்றவர்.

வைத்தியராக நீண்டகாலம் மலையகத்தில் பணிபுரிந்தவர்.

இவர் சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், பயணஇலக்கியம், நூற்பதிப்பும் வெளியீடும், இதழியல், இலக்கியச் செயற்பாடுகள் ஆகிய துறைகளில் ஈடுபட்டு வருகிறார். இதுவரை இவரது பதினைந்து நூல்கள் வெளியாகி உள்ளன.

இவரது முதலாவது சிறுகதை 1964இல் **கலைச்செல்வி** என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. இதுவரை இவரது சிறுகதைத் தொகுதிகளாக **காலதரிசனம்**, **அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்**, **தி. ஞானசேகரன் சிறுகதைகள்** ஆகியவை வெளிவந்துள்ளன.

இவற்றுள் **அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்** என்ற சிறுகதைத் தொகுதி தற்போது சப்ரகமுவ பல்கலைக்கழத்தில் கலைமாணி (B.A.) பட்டப்படிப்புக்கு பாடநூலாக விளங்குகிறது.

இவர் எழுதிய தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துச் சிறுகதைகள் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, **பரதேசி** என்ற மகுடத்தில் கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. இவர் எழுதிய நாவல்களாக புதிய சுவடுகள், குருதிமலை, லயத்துச் சிறைகள், கவ்வாத்து ஆகியவை வெளிவந்துள்ளன.

இவற்றுள் **புதிய சுவடுகள்**, **குருதிமலை** ஆகிய இரண்டு நாவல்களும் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றவை. லயத்துச்சிறைகள், கவ்வாத்து ஆகிய நாவல்கள் மத்திய மாகாண சாகித்திய விருதினைப் பெற்றன.

**குருதிமலை** நாவல் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, **தலெனயகட** என்ற பெயரில் கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. **குருதிமலை** நாவல் 1992-1993 காலப்பகுதியில் தமிழக மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுமாணி (M.A.) பட்டப்படிப்புக்குப் பாடநூலாக அமைந்துள்ளது.

இவரது பயண நூல்களாக **அவுஸ்திரேலிய பயணக்கதை, வடஇந்திய பயண அனுபவங்கள்,லண்டன் பயண அனுபவங்கள் ஐரோப்பிய பயண இலக்கியம்** ஆகியவை வெளிவந்துள்ளன.

2000 ஆம் ஆண்டுமுதல், கடந்த பதினெட்டு ஆண்டுகளாக **ஞானம்** என்ற மாதாந்த கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார். இதுவரை 217 இதழ்கள்(ஜீன்-18) வெளிவந்துள்ளன.

இச்சஞ்சிகை மூலம் இவர் வெளிக்கொணர்ந்த 600 பக்கங்களில் வெளிவந்த **ஈழத்துப் போர் இலக்கியம்** மற்றும் 976 பக்கங்களில் வெளிவந்த **புலம்பெயர் இலக்கியம்** ஆகிய பாரிய தொகுப்புகள் தமிழிலக்கியத்திற்கு புதிய இலக்கிய வகைமைகளை அறிமுகப்படுத்தியதோடு, வரலாற்று ஆவணங்களாகவும் திகழ்கின்றன.

**ஞானம்** சஞ்சிகையின் 200ஆவது இதழ் **ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி** என்ற மகுடத்தில் 1000 பக்கங்களில் வெளிவந்துள்ளது. 60 ஈழத்து இலக்கிய ஆளுமைகளின் நேர் காணல் தொகுதியாக வெளிவந்த இத்தொகுப்பு ஈழத்து தமிழ் இலக்கியத்துடன் தொடர்பு, அதன் கருத்து நிலை, அழகியல் முதலியவை சார்ந்த உரையாடல் தளத்திற்கான இடமாக அமைந்துள்ளது. ஈழத்து இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனுள்ள தொகுதியாக இது அமைந்துள்ளது.

ஞானம் சஞ்சிகையை இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழக தஞ்சைப் பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரை 10 பேர் ஆய்வு செய்து B.A. M.A. Mfil. PhD ஆகிய பட்டப்படிப்புகளை நிறைவு செய்துள்ளனர்.

ஞானம் பதிப்பகம் என்ற வெளியீட்டகத்தின் மூலம் பலதரப்பட்ட இலக்கிய நூல்களை வெளியிட்டு வருகிறார். இதுவரை 51 நூல்கள் இவரது பதிப்பகத்தின் ஊடாக வெளிவந்துள்ளன.

**ஞானம் இலக்கியப் பண்ணை** என்ற அமைப்பினை உருவாக்கி அதன்மூலம் இலக்கிய விழாக்கள், சான்றோர் கௌரவம், நூல்வெளியீடுகள், **நினைவு அஞ்சலிகள், இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள்** போன்றவற்றை நிகழ்த்தி வருகிறார்.

சர்வதேச ரீதியிலான எழுத்தாளர்கள் விழாக்கள், மாநாடுகளில் பங்குபற்றி பத்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை

சமர்ப்பித்துள்ளார். இம்மாநாடுகள் சிலவற்றில் அரங்கத் தலைமை வகித்துள்ளார்.

இலங்கை அரசின் கலாபூஷணம் விருது உட்பட பல்வேறு இலக்கிய நிறுவனங்களின் பத்துக்கும் மேற்பட்ட விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

பிழைப்பு

**கலைச்செல்வி 1964 மாசி இதழில் பிரசுரமான கதை இது.**

**இவரது முதற்கதையும் இதுதான்.**

**நான் மருதானைச் சந்தியால் வந்து......**

**எனத் தொடங்கி**

**அவள் குடிசைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.**

**என்று முடியும்**

**இவரது முதற் கதையை காலதரிசனம் தொகுப்பிலும், தி.ஞானசேகரன் கதைகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

அதிக தகவல்கள். தவிர்க்க முடியவில்லை..

வேறு எதைக்கூற....

**16 June 2018**

**நா**ன் திருகோணமலை வந்து கிட்டத்தட்ட 30 வருடங்களாகிவிட்டது. இவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. மத்திய கிழக்கு நாடொன்றில் கடமையாற்றியதாக அறிந்தேன். இப்போது ஊரோடு வாழ்கிறார். ஆன்மீகப் பணிகளில் முழுமையாக ஈடுபடுவதாக அறிகிறேன்.

**க.அருள்சுப்பிரமணியம்**

திருகோணமலையில் பிறந்த இவர் ஆரம்பத்தில் எழுதுவினைஞராகி, பின்னர் நிர்வாக உத்தியோகத்தராகி ஓய்வு பெற்றவர். ஓய்வின் பின் மத்திய கிழக்கு நாடான ஓமானில் சென்று கடமையாற்றியவர்.

இவரது முதற் கதை பிரசுரமான போது இவர் மட்டக்களப்பில் கடமையாற்றினார். இவர் கதைகள் **வீரகேசரி, தினகரன்,ஈழநாடு, சிந்தாமணி, மல்லிகையில்** பிரசுரமானவை. சுமார் 40 கதைகள் மட்டில் எழுதியிருக்கிறார்.

1973 ல் இவர் எழுதிய **அவர்களுக்கு வயது வந்து விட்டது** நாவல் இவருக்கு பெரும் புகழைக் கொடுத்தது.அந் நாவல் சாகித்திய மண்டலப் பரிசு

பெற்றதோடு சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**இவரது ஏனைய நாவல்கள்:**

நான் கெடமாட்டேன் (1975,வீரகேசரி), அக்கரைகள் பச்சையில்லை (1977, வீரகேசரி), சூரசம்காரம்(1982), நான் நீதியின் பக்கம் (1993), விடியும் (2002, மணிமேகலை).

தனது நாவல் **அக்கரைகள் பச்சையில்லை** யை ஆனந்த விகடன் பொன்விழா மர்ம நாவல் போட்டிக்கு **தூரத்து ஓவியங்கள்** என்ற பெயரில் அனுப்பி பரிசு பெற்று, பின்னர் பிரசுரிப்பதை இடை நிறுத்தி, அவரின் நேர்மையை மதித்து 23 வாரங்கள் ஆனந்தவிகடனில் எழுத அனுமதித்த நாவல்தான் **சூரசம்காரம்.** **இந்தியா டுடே** ஆண்டு மலரில் இவர் எழுதிய கதையே **அம்மாச்சி** 2002 ல் **அம்மாச்சி** என்ற பெயரில் 39 கதைகளுடன் மணிமேகலை பிரசுரமாக இவரது சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. அதன் பிறகு இணைய இதழ்களில் இவர் இடை இடையே எழுதி வருகிறார்.

**தியாகங்கள் பாரமா?**

**1970 ஜனவரி மலர் பெப்ரவரி மலர் இரு இதழ்களில் பிரசுரமான கதை இது.**

**ஈழத்துப் புதிய இலக்கியப் பரம்பரையில் புதிய பார்வையுடைய எழுத்தாளர் இவர் எனும் ஆசிரியர் அன்புமணியின் அறிமுகக் குறிப்புடன் பிரசுரமானது இக்கதை.**

**சகோதரியின் வாழ்க்கையில் சூழ்ந்த துன்பங்களைத் துடைப்பதற்கு உறுதி பூண்ட ஒரு இளைஞனின் மன ஓட்டங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட கதை. என் இளமைக் கால சொந்தக் கதை என்பது இக்கதை பற்றிய இவரது கூற்று.**

**அதிகாலை எட்டுமணிக்கு படுக்கையை விட்டு எழுந்தேன்....**

**என ஆரம்பித்து**

**இப்படிக்கு**

**உனது அன்பு அக்கா அருள்மணி.**

**எனமுடியும் இக்கதையை அம்மாச்சி தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது நாவல் பரிசு பெற்றபோது விமர்சகர்களது பக்கச் சார்பென சிலர் வாதிட்டனர். அது ஒரு பொய்யான குற்றச்சாட்டு. அக்கால கட்டத்தில் அது உண்மையில் வித்தியாசமான ஒரு நாவல்தான்.

அக்கரைகள் பச்சையில்லை நாவலும் எனக்குப் பிடித்தமானதுதான். இவரது மற்றைய மூன்று நாவல்களும் எனக்கு அதிருப்தியைத் தந்தவையே.

**17 June 2018**

அந்தக் கலத்தில் **நீள்கரை** என்பது திக்குவல்லை என்று எனக்குத் தெரியாது.

திக்குவல்லை கமால், திக்குவல்லை ஹம்ஸா. யோனகபுர ஹம்ஸா, நீள்கரை நம்பி ஆகியோருடன் இவரது பெயரும் எமக்கு அறிமுகமாகி இருந்தது.

**எம்.எச்.எம்.ஷம்ஸ்**

**வெள்ளிச் சிறகடிக்கும் வெண்புறாவே... நிரோசா விராஞ்ஜினி** யின் குரலில் ஒலித்த இப் பாடலை கேட்காத வானொலி, தொலைக்காட்சி நேயர்கள் இருந்திருக்க மாட்டார்கள். அப்பாடல் வரிகளின் சொந்தக்காரர் இவரே.

17/3/1940 ல் தென்மாகாணம், மாத்தறை மாவட்டம் திக்குவல்லையில் பிறந்தவர் முஹம்மது ஹாமிம் முஹம்மது ஷம்ஸ். திக்குவல்லை முஸ்லிம் வித்தியாலயம், விஜித (சிங்கள) மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர். கொழும்பு பல்கலைக் கழகப் பட்டதாரி. 1957ல் ஆசிரியர் நியமனம் பெற்று, கடைசியாக 1992ல் கொட்டாஞ்சேனை முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றவர்.

கங்கிறீற் கவிதைகள் என்ற படத்திற்குக் கவிதை எழுதும் வடிவத்தை உருவாக்கியவர். குறும்பாக்களை எழுதியவர். வானொலி நிகழ்ச்சிகளை நடத்தியவர். புனைகதை, கவிதை, விமர்சனம், ஆய்வுக்கட்டுரை, சமயம், ஓவியம், இசை, புகைப்படக்கலை, ஊடகத்துறை, மொழி பெயர்ப்பு இவரது இயங்கு தளம். 300 கவிதைகள், 100க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர்.

இவரது புனைபெயர்கள்: நீள்கரை வெய்யோன், வல்லையூர் செல்வன், இஷ்திறாக்கி, அபூபாஹிம், ஷம்ஸ், பாஹறா, ஷனாஸ். தினகரனில் **சாளரம், புதுப்புனல்** களங்கள் மூலம் பல இளம் படைப்பாளிகளை உருவாக்கியவர்.

ஆசிரியர் குரல், நேர்வழி, அஷ்ஷீரா, பாமிஸ் மாசிகை, செய்திமடல்,பிரதிராவ ஆகியவற்றின் ஆசிரியர். இணை ஆசிரியராக இருந்தவர். தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் இணைப்புப் பாலமாக இருந்தவர். வீரகேசரி , தினகரன், இன்ஸான், அஷ்ஷீரா, மல்லிகை ஆகியவற்றில் இவரது எழுத்துகள் பிரசுரமாகி இருக்கின்றன. புனைவு சாரா 12 நூல்களை எழுதி இருக்கிறார்.

**உண்டா** விருது, அறிவுத்தாரகை விருது உட்பட பல விருதுகள் பெற்றவர்.

இவரது நாவல் கிராமத்துக் கனவுகள் (1999. சாகித்திய விருது பெற்றது) இந்நாவல் குறித்து கடுமையான விமர்சனங்களை இவர் எதிர் கொண்டார். 15/2/2002 இவர் மறைந்த பின்னர் விமர்சித்தவர்கள் இவர் புகழ் பாடியமையும் நிகழ்ந்துள்ளது.

இவரால் உருவாக்கப்பட்டவர்கள் **கவிஞர் எம்.எச்.எம். ஷம்ஸ் நினைவுக் கவிதைகள்** என்றொரு நூலை வெளியிட்டுள்ளனர்.

2014 ல் கொடகே நிறுவனம் இவரது 15 சிறுகதைகள் கொண்ட

**வளவையின் மடியில்** என்ற நூலை வெளியிட்டிருந்தது. அவ்வாண்டுக்கான **கொடகே** விருதை அந்நூல் பெற்றுக் கொண்டது.

**வளவையின் மடியில்**

**வீரகேசரியில் 1973 ல் பிரசுரமான கதை இது. வெள்ள அனர்த்தம் பற்றிய எத்தனையோ கதைகள் எழுதப்பட்டுவிட்டன. 40 ஆண்டுகளுக்குப்பின் வளவை நதியின் பெருக்கெடுப்பைப் பற்றிக் கூறும் ஒரு சோகக் கதை, இக்கதையின் தலைப்பே இவரது சிறுகதைத் தொகுதியின் தலைப்பாகவும் அமைந்துவிட்டது.**

**வளவை நதி அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.**

**என ஆரம்பித்து.**

**கரத்தை செல்கிறது.**

**என்று முடியும் இக்கதையை இதே தலைப்பிலான இவரது தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

நான் சிலரோடு முரண்படுவதற்குக் காரணம் அவர்களது அக்கறை இன்மை. மல்லிகை சிறுகதைகள் என்று இரு தொகுதிகள் வெளிவந்துள்ளன. தொகுப்பு செங்கை ஆழியான். இத்தொகுப்புகளில் ஷம்ஸ் எழுதிய கதை இடம் பெறவில்லை. (வளவையின் மடியில் தொகுப்பில் மல்லிகையில் இவரெழுதிய மூன்று கதைகள் இருக்கின்றன.)

ஜீவாவை விடுவோம். ஜீவாவின் நண்பர்களும்,ஷம்ஸின் நண்பர்களுமானவர்கள் என்ன செய்தார்கள்?

கடும் கோபத்தில் உள்ளேன்.

(எனது கதை சேர்க்கப்படவில்லை என்பதற்கான கோபமல்ல இது)

**17 June 2018**

இவரை நினைத்து நான் ஆச்சரியப் படுவதுண்டு. 56 வருட ஊடகத்துறை வாழ்க்கை. இன்னும் தொடரும் பணி. சாதனைதான் உண்மையில் சாதனைதான். சேவையின் தேவை.தேவையின் சேவை.

**யாழ்நங்கை**

அன்னலட்சுமி இராசையா. (இப்போது அன்னலட்சுமி இராசதுரை). இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்தவர். செங்குந்தா இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி. பத்திரிகைத்துறை ஆங்கிலம் டிப்ளோமா பெற்றவர். ஓவிய ஆசிரியர் தராதரம் பெற்றவர். இவரது முதற்கதை **இசை இணைத்தது** 1958ல் தினகரனில் பிரசுரமானது. சிறுகதை, கட்டுரை,கவிதை, நாவல், விமர்சனம், வானொலி நாடகம், என்பன இவரது விருப்பமான துறைகள்.

1962 ல் வீரகேசரி யில் இணைந்தார். ஜோதி, மித்திரன், கலைக்கேசரி, சோதிடகேசரி என ஆசிரியர் பணியில் 56 வருடங்களாக இன்று வரை சோர்வில்லாமல் பயணிக்கிறார். பல

ஊடகவியலாளர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். ஆக்க இலக்கியத் துறையை விட்டு பத்திரிகைத் துறையில் கவனம் செலுத்துவதால் இவரது படைப்புகள் இப்போது வெளிவருவதில்லை.

**தமிழ்மணி(92), பத்திரிகையாளருக்கான விருது(93)** பெற்றவர் மல்லிகை அட்டைப்படமாக கௌரவம் பெற்றவர்.

**இவரது நூல்கள்**

விழிச்சுடர் (குறுநாவல்), உள்ளத்தின் கதவுகள் (நாவல்), நெருப்பு வெளிச்சம் (சிறுகதைகள்), இருபக்கங்கள் (கவிதைகள்). நினைவுப் பெருவெளி.(அனுபவக் கட்டுரைகள்).

**பெரியவன்**

**1959 கலைச்செல்வி ஜனவரி இதழில் பிரசுரமான கதை இது. இக்கதை எழுதும்போது இவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி. அக்கால கட்டத்தில் இக்கதை சிற்பி அவர்களையும் கவர்ந்திருக்கிறது.**

**பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது.**

**என ஆரம்பித்து**

**கண்களில் நீர்க் குமிழிகள் கோவையிட்டன.**

**என்று முடியும் இக்கதையை இவரது நெருப்பு வெளிச்சம் தொகுப்பிலும், 59 ஜனவரி கலைச்செல்வி இதழிலும் (தரவிறக்கி ) வாசியுங்கள் நண்பர்களே.**

பெண் எழுத்தாளர்கள் குறைவாக இருக்கும் இலக்கிய உலகில் எழுத வந்தவர்களும் வேறு துறைகளைத் தேர்ந்தது மிக வருந்தத்தக்கது என்பது எனது ஆதங்கம். அது அவரவர் சுயவிருப்பம். அதையும் நான் உணர்கிறேன்.

**18 June 2018**

## பிடித்த சிறுகதை 162

இவர் எம் சம காலத்தவர். சம வயதுக்காரர்.

தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் அறிமுகமாகியவர். யாழ்ப்பாணத்தில் சிறிது காலம் தொழில் நிமித்தம் வாழ்ந்துள்ளார். தனது பெயரோடு மாத்தளையைச் சேர்க்காத போதும் மாத்தளைக்கு பெருமை சேர்த்தவர்.

**கங்குலன்**

21/11/49 ல் மாத்தளை அங்கும்புற தோட்டத்தில் பிறந்த க.கோவிந்தராஜ். என்சல்கொல்ல, றம்புக்எல முஸ்லிம் மகாவித்தியாலய மாணவன். இவரது முதற்கதை **திருந்திய உள்ளம்** தினபதியில் 1968 ல் சிபார்சுடன் வெளிவந்தது. சிறுகதை, குறுநாவல், கட்டுரை, தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் இவரது துறைகள்.

70களில் வீரகேசரியில் பணியாற்றும்போது யாழ் கிளையில் இருந்தார். (பின்னர் வீரகேசரியை விட்டு விலகினார்.) சிரித்திரனில் குன்றிலிருந்து என ஒரு பகுதியையும் கதம்பத்தில் மலைகளின் பின்னால் என ஒரு பகுதியையும் செய்தார். அப்போது

வைத்துக்கொண்ட பெயர்தான் **கங்குலன்.**

1980ல் நீர்ப்பாசனத் திணைக்களம் நடத்திய சிறுகதைப் போட்டியில் **மொய்க்காசு** எனும் இவரது கதை பாராட்டுப் பரிசு பெற்று சுடரில் பிரசுரமானது.

**கந்தசாமி ஊருக்குப் போகிறான்** எனும் குறுநாவலை தினகரனில் எழுதியுள்ளார். ரூபவாகினியில் ஒளிபரப்பாகிய மலையக நாடகங்களான **மாப்பிள்ளை வந்தார், அரும்பு** இவரது நாடகங்களே.

96 ல் அரச.நாடகப்போட்டியில் மேடையேறிய **தோட்டத்து ராஜாக்கள்** மூன்றாம் இடம் பெற்றது.

98 ல் இவரது **கவ்வாத்துக் கத்திகள்** முதலாம் இடம் பெற்றது. 2002ல் **வெளிச்சம் தெரிகிறது** மூன்றாம் இடம் பெற்றது.

**இவரது நூல்கள்**

> பசியாவரம் (1996, சிறுகதைகள, மத்.மாகா.சாகித்திய விருது, இலக் பேரவை சான்றிதழ் பெற்றது. தோட்டத்துக் கதாநாயகர்கள் ( 1998,மனித சித்திரம், துரைவி).

மலையக எழுத்தாளர் மன்றம், மற்றும் கவின்கலை மன்றச் செயலாளராகவும் இவர் இருந்துள்ளார்.

2008 ல் மீளவும் வீரகேசரியில் இணைந்தபோது, கடும் சுகவீனம் காரணமாக 02/02/2009 ல் இவர் மரணமானார்.

**குத்தகை**

> **1989 ஜன-பெப் கொழுந்து இதழில் பிரசுரமான கதை இது. மலையக எழுத்தாளர் மன்றம் நடத்திய 6வது சிறுகதைப் போட்டியில் 500/- பரிசு பெற்ற நான்கு கதைகளில் இதுவும் ஒன்று.**
>
> **மலையகத்திலிருந்து பிழைப்புக்காக வவுனியா வந்து அங்கு எதிர்கொள்ளும் பிரச்சனைகளால் இந்தியா செல்ல நினைக்கும் ஒரு தொழிலாளியின்**

**கதை தான் இது.**

**"என்ன இப்பிடித் தூங்குறீங்க."**

**என ஆரம்பித்து.**

**நிரந்தர நிம்மதியைத் தேடி இருப்பார்களோ.**

**என்று முடியும் இக்கதையை கொழுந்து இதழை தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

மனிதர் இறந்துவிட்டார். அவரின் **கங்குலன் பக்கங்கள்** நினைவைவிட்டு அகலவில்லை. உங்களுக்கும் அப்படியா...?

**19 June 2018**

## பிடித்த சிறுகதை 163

மரபு வழி கதை சொல்லும் முறையிலிருந்து விடுபட்ட எழுத்துக்களே எனது படைப்புகள். என்னுடைய கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமானவை. இது எனது வலிந்த முயற்சிகள் அல்ல. நல்ல கதை சொல்லிகளிடமிருந்து கற்றுக் கொண்டவை. நான் பின்நவீனத்துவகாரனல்ல. நீட்சே,பூக்கோ,தெரிதாவை வாசிக்காதவனுமல்ல. காம்யூவையும், கல்வினோவையும் தமிழில் கோணங்கியையும், தமிழவனையும், எம்.ஜி. சுரேசையும் இன்னும் பலரை வாசிக்கிறவன்.

நான் மார்க்சிய. உபாசகன். அதனால் மார்க்சிய விரோத கதையாடல்களை, இலக்கியங்களை வாசித்து விமர்சனத்தோடு நிராகரிக்கிறேன். இந்த மனநிலையில் இருக்கின்ற எனது கண்ணில் சிக்கியவர்தான் இவர். சரிநிகர் மூலம் இவர் போன்ற சிலரது அறிமுகம் எனக்குக் கிடைத்தது. இவரிடம் மற்றைய சிலர் போல் கதை பண்ணும் அந்தரமெதனையும் நான் காணவில்லை.

அம்ரிதா ஏயெம்

மருதமுனையில் பிறந்த ஏ.எம்.ரியாஸ் அஹ்மத். கிழக்குப் பல்கலைகக் கழக விலங்கியல் பட்டதாரி.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்த இவர் தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுகிறார்.

தனது தகப்பனாரிடமிருந்து தட்டச்சுக் கலையை அறிமுகம் பெற்று அதில் துறைபோந்து, பல்வகை கல்விசார் நூல்களை கட்டுரைகளை தட்டச்சாக்கி, நவீன சிறுகதை, கவிதைகளையும் தட்டச்சு செய்து வாசிப்பு அனுபவத்தையும், எழுதும் அனுபவத்தையும் பெற்றவர்.

உமாவின் **கள்ளிச்சொட்டு** கதையை தட்டச்சுச் செய்தவர் இவரே. கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்த காலத்தில் துறைபோந்த விரிவுரையாளர்களின் உறவு இவரை நெறிப் படுத்தியது. **சரிநிகர்** இவருக்குக் களம் கொடுத்தது.

**ஓணான், குளம்** போன்ற கதைகளை எழுதினார்.

**கிழக்கொளி** சிறுகதைப் போட்டியில் இவரது **தறு** சிறுகதை, முதல் பரிசு பெற்றது. அச்சஞ்சிகையிலும் இவர் எழுதினார்.

**" நல்ல இலக்கியப் படைப்புகள், ஒரு மனிதரை இன்னொரு மனிதருக்குள் பிரயாணம் செய்ய வைக்கும் "** என்பது இவரது கூற்று.

இதுவரை இவர் 10 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். அதில் 2002ல் மூன்றாவது மனிதன் வெளியீடாக வந்த 16 கதைகள் அடங்கிய **விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தை** நூலும் அடங்குகிறது.

**கிருஸ்ணபிள்ளை**

**2001 ல் கண்ணில் தெரியுது வானம் தொகுப்பில் பிரசுரமான கதை இது.**

**இக்கதை கிச்சான் எனும் பெயரில் விமல்ராஜ் அவர்களால் குறும் படமாக தயாரிக்கப்பட்டு பல**

**விருதுகளைப் பெற்றது. யுத்தம் பலிகொண்ட தகப்பன், மத்திய கிழக்குக்கு வேலைக்கு போய் தகவலெதுவும் இல்லாத தாய், படிக்க விருப்பிருந்தும் உதவியற்ற ஒரு அவல நிலையில் சிப்பந்தியாக அல்லாடும் ஒரு சிறுவனின் துயர வாழ்வை நெகிழ்ச்சி பொங்கக் கூறும் கதை.**

**“ டேய் அந்த டம்ளர் எல்லாத்தையும் கெதியாய் எடுத்து வாடா ”என ஆரம்பித்து**

**ஏனென்டா, நான் கிருஸ்ணபிள்ளை அடக்குப்படவும், அடிபடவும் பிறந்தவன்.**

**என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியிலும், கண்ணில் தெரியுது வானம் தொகுதியிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

**“இலக்கியத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு புதிய நாகரிகம் ஏற்படுத்துவது அவசியமாகும் ”** என்ற இவரது கருத்தோடு நான் உடன்படுகிறேன்.

மக்களுக்கு புரியும் வகையிலான வடிவங்களில் என்பதையும் சேர்த்துக்கொண்டு.

**19 June 2018**

இவரும் ஒரு புலோலிக்காரர்தான். அந்தக் காலம் மல்லிகை அலையில் எழுதியவர். இன்று பிரபலமாக இருக்கும் பல எழுத்தாளர்களோடு கடமையயாற்றியவர். மண் மணக்கும் கதை சொல்லி.

**ராஜாஜி ராஜகோபாலன்**

புலோலி கிழக்கில் பிறந்த இவர்.

புற்றளை இந்துக்கல்லூரி,நெல்லியடி மகா வித்தியாலயங்களின் பழைய மாணவர். கொழும்புப் பல்கலைக்கழக சட்டமாணி, இலங்கைச் சட்டக்கல்லூரி சட்டத்தரணி. எழுதுவினைஞராக இருந்தவர். இப்போது மூன்று தசாப்தங்களாக கனடிய வாழ்வு. 70 களில் இலக்கியத்தில் கால் பதித்து, சிலகாலம் இடை நிறுத்தி மீள் வருகை தந்திருப்பவர். அக்கால இவரது எழுத்துகளை வாசித்த போது இவரது பெயர் புனை பெயரோ என்ற ஐயம் எனக்கு எழுந்தது. இவரின் தந்தை ராஜாஜி அவர்களின் மீதிருந்த பிரியத்தினால் அவரது பெயரை இருக்கு வைத்துள்ளார். இவர் ஜெயகாந்தன் ஜானகிராமன் ஆகியோரில் பிரியம் கொண்டவர்.

**இவரது நூல்கள்:**

ஒரு வழிப்போக்கனின் வாக்கு மூலம் (2014, கவிதைகள்) குதிரை இல்லாத ராஜகுமாரன் (2015, சிறுகதைகள், இத்தொகுப்பில் 15 கதைகள் உள்ளன).

யாழ்ப்பாணப் பேச்சுவழக்கை அலாதியான முறையில் எடுத்தாள்வதில் இவர் வெற்றி பெற்றுள்ளார். மரபு வழிக் கதைசொல்லியாக இவர் இருந்த போதிலும்,சலிப்பூட்டாத எழுத்தாளர் இவர். கறுத்தக் கொழும்பான், தெற்காலை போற ஒழுங்கை, விழிப்புகள், அந்த ஒருவரைத்தேடி, ஆசை வெட்கம் அறியும் என்னும் கதைகள் இவரின் பெயர் சொல்லும்.

**பெளருஷம்**

**72ல் மல்லிகையில் பிரசுரமான கதை இது. இக்கதையையும், ஜெயகாந்தனின் இதே தலைப்பிலான கதையையும் ஒப்பிட்டு மல்லிகை 400 வது இதழில் மேமன்கவி சிறப்பான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். பாலியல் தொழில் புரிபவர்கள் பற்றிய இக்கதையில் ஜெயகாந்தனைவிட இவரது பார்வை காத்திரமாக வெளிப்பட்டிருப்பதை மேமன் அடையாளம் காணுகிறார்.**

**ஸ்டேசன் விளக்குகள் மின்ன ஆரம்பித்த மாலை நேரக் கருக்கலில்....**

**என ஆரம்பித்து**

**ஐயோ இவள் ஏன் இன்னைக்குச் சிரித்தபடி வர்றாள்?**

**என்று முடியும் இக்கதை சிங்களத்தில் இருவரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இக்கதையை இவரின் சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஆங்கில அறிவும் நவீன இலக்கிய பரிச்சயமுள்ள இவர் நம் இலக்கியப் பசிக்குப் போதுமான அளவு தீனி போடவேண்டும். அது எனது வாசக விருப்பு.

**20 June 2018**

## பிடித்த சிறுகதை 165

**சி**ல எழுத்துகளைப் பார்க்கும் போது எப்போதடா இவர்கள் எழுதுவதை நிறுத்தப் போகிறார்கள் என்று நான் ஆத்திரப்படுவதுண்டு. அட ஏன் இவர் எழுதுவதை நிறுத்திக் கொண்டார் என்று நான் ஆதங்கப்பட்ட எழுத்தாளர்களும் உண்டு. அந்த வரிசையில் இந்த பெண் எழுத்தாளுமையும் அடங்குகிறார். நாம் எழுதத் தொடாங்கிய காலத்தில் இவர் எழுதுவதை நிறுத்திக் கொண்டார்.

**கவிதா**

1944ல் நயினாதீவில் பிறந்த நாகேஸ்வரி கணபதப்பிள்ளை. (இப்போது வகிமா முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் வேதாந்தி ஷேகு இஸ்ஸத்தீனின் மனைவி ).

இவர் ஒரு கல்விமாணி பட்டதாரி. ஆசிரியையாக இருந்து ஓய்வு பெற்றவர். இவரது முதற்கதை **வாழ்க்கையின் ரகசியம்** கலைச்செல்வி 1963 ஜனவரி இதழில் பிரசுரமானது.

1969-73க்கு இடையில் வீரகேசரி, மலர், வானொலி, வானொலி மஞ்சரி, மல்லிகையில்

கதைகள் எழுதினார்.

கவிதை, நாடகம், கட்டுரை இவர் ஈடுபாடு கொண்ட பிற துறைகள்.

இவரது, நேர்கோடு,நகம்,ஒரே ஜன்னலூடு, பவளமல்லி கதைகளும் குறிப்பிடத்தக்கன.

1986 ல் தமிழியல் வெளியீடாக இவரது 13 கதைகைள் அடங்கிய **யுகங்கள் கணக்கல்ல** தொகுதி வந்துள்ளது.

**ஒரு தேவதைக் கதை**

**இது எங்கும் பிரசுரமாகாத கதை. இதுவே இவர் எழுதிய கடைசிக் கதையாக இருக்கக் கூடும். மன விசாரங்களைக் கொட்டும் கதைகள் தமிழில் எழுதப்பட ஆரம்பித்த காலகட்டத்தில் புதுவித எடுத்துரைப்பு முறையில் வெளிவந்த கதைகளில் இதுவும் ஒன்று. 70களின் நடுக்கூற்றில் இக்கதை எழுதப்பட்டிருக்கலாம. உணர்வூற்றுருவகம் என்று இதனைக் கொள்ள முடியும்.**

**நிஷ்டையில் ஆழ்ந்திருந்த ரோஜாவிடம்....**

**என ஆரம்பித்து**

**எனத் தெரிந்து கொள்வாயா?**

**என்று முடியும் இக்கதையை இவரது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

சூழலின் தாக்கம் சிலரை எழுதத் தூண்டுகிறது. அதே தாக்கம் சிலரை எழுதாமல் செய்கிறது.

இதைத்தான் என்னால் கூறமுடியும்.

**20 June 2018**

2006 ஆக இருக்கலாம். கல்வி அமைச்சின் பண்பாடலுவல்கள் திணைக்கள (வட மாகாண) ஊழியன் நான். பொருளாதார நிலை காரணமாக திருகோணமலை அஸ்ரா பதிப்பகத்தில் ஒப்பு நோக்குனராக சில நாட்கள் கடமையாற்றினேன். அப்போது ஒப்பு நோக்கிய நூல்களில் ஒன்று இவரின் சிறுகதைத் தொகுதி.

அதே போல் சென்ற ஆண்டு வெளிவந்த இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியின் முதல் வரைபை ஒப்பு நோக்கியவனும் நானே. கிட்டத் தட்ட 12 வருட இடை வெளி.

**ஏ.எஸ். உபைத்துல்லா**

1955 ல் மூதூரில் பிறந்த அப்துல் சமது உபைத்துல்லா ஆசிரியராக, பின்னர் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரி.

வ.அ. வினால் இலக்கியத் துறைக்கு அறிமுகப் படுத்தப்பட்டவர்.

சிறுகதை, நாடகம், விமர்சனம் இவரது ஈடுபாடுள்ள துறைகள். 78ல் **மாணிக்கம்** இதழில் **ஊர்வலங்கள்** எனும் கதையை எழுதியதன் மூலம் இவர் இலக்கியத்துறையில் நுழைந்தவர். தினகரன் பத்திரிகையின் மூதூர் நிருபராக 79-89 ஆண்டுகளில் கடமையாற்றியவர். **நவமணி** பத்திரிகை நடத்திய விமர்சனப் போட்டியிலும், துரைவியின் 85 பிறந்த நாளை முன்னிட்டு நடத்திய பிரதேச நாவல் என்கின்ற கட்டுரைப் போட்டியிலும் முதற் பரிசும் பெற்றவர். அரச ஊழியர்களுக்கான போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற கதையை எழுதியவர்.

இவரது முதலாவது சிறுகதை தொகுதியின் தலைப்புக் கதை கனகசெந்திநாதன் கதா விருது பெற்றது போல் இரண்டாவது தொகுப்பின் தலைப்புக் கதை **நிழலைத்தேடி** யும் **கனக செந்திநாதன் கதா விருது** பெற்றதே.

இவரது கதைகள் தினகரன், வீரகேசரி, தினக்குரல், வானொலி, மாணிக்கம், சிந்தாமணி, தாரகை,காலநதி, நேயம்,ஈழத்துச் சிறுகதை மஞ்சரி, ஜீவநதி ஆகியவற்றில் வெளிவந்தவை.

தேடலும் வாசிப்பும் எழுத்துமாக இன்னும் இயங்கிக் கொண்டிருப்பவர். மூதூர் மைந்தன் என்பது இவர் புனைபெயர்.

மூதூரில் வ.அ.வின் **கொட்டியாரக்கதைகள்** வெளியீட்டு நிகழ்வில் ஒரு விமர்சகனாக கலந்து கொண்டபோது முதன்முதல் இவரைக் கண்டேன். இன்றுவரை அந்த நட்பு தொடர்கிறது. வ.அ. விட்ட இடைவெளியை இட்டு நிரப்பிக் கொண்டிருக்கும் இருவரில் ஒருவர்.

**இவரது நூல்கள்:**

கங்கைக் காவியம் (1997, தொகுப்பாளர்,ஈ.ழ.இலக்கியச் சோலை), ஜலசமாதி (2008, பத்துச் சிறுகதைகள், வானவில்), நிழலைத் தேடி (2017, பத்துச் சிறுகதைகள, கி.மா.பண். திணைக்களம்).

**நிழலைத்தேடி** சிறுகதைத் தொகுதி பற்றிய வித்தியாசமான பார்வையிலமைந்த மேமன்கவியின் கட்டுரை ஒன்று சென்ற மாத

தினகரன் வாரமஞ்சரியில் (இருவாரங்கள்) பிரசுரமாகி இருக்கிறது.

**ஜலசமாதி**

> **2004இல் இலக்கியப் பேரவை கனக.செந்திநாதன் விருது பெற்ற கதை இது. தினகரனில் வெளிவந்தது. சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அவலம் நிறைந்த மூதூர் லோஞ்ச் விபத்துப் பற்றிய சோக சம்பவத்தைக் கூறும் கதை.**
>
> **மதியச் சாப்பாட்டின் பின் வழக்கம் போல் கண்ணயர்ந்தேன்...**
>
> **எனத் தொடங்கி**
>
> **அவனது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறேன்.**
>
> **என்று முடியும்**
>
> **சங்கமம் மற்றும் மூன்று சஞ்சிகைகளில் மறுபிரசுரம் செய்யப்பட்ட இக்கதையை இதே தலைப்பிலான இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஜல சமாதி என்றால் உபைத்துல்லா.

உபைத்துல்லா என்றால் ஜலசமாதி.

இது ஒரு பெருமைப் படவேண்டிய விடயமல்லவா?

**21 June 2018**

இவர் யார்? இவரது ஊர் என்ன? என்ற விபரங்கள் எனக்குத் தெரியாது. சரிநிகர் பத்திரிகையின் மூலம் இவரை அறிந்து கொண்டேன். மரபை மீறி புது மரபை உருவாக்கிய எழுத்தாளராக இவரை அடையாளம் கண்டேன். எழுதுவதை நிறுத்திக் கொண்ட எழுத்தாளர்.

**அருள் சின்னையா**

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஆரம்ப புலம் பெயர் ஈழத்தவர்களில் ஒருவர். சரிநிகர் பத்திரிகையில் இவர் இரண்டொரு கதைகள் எழுதியிருக்கிறார். அக்கதைகள் இப்போது நினைவிலில்லை. மரபை மீறும் கதை சொல்லிகளில் ஒருவரென நான் சில மேடைகளில் இவரைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனது **தாவீது கிறிஸ்ரோ** கட்டுரை ஒன்றில் இவரை 2006ல் குறிப்பிட்டு எழுதியுமிருந்தேன். இவர் வேறு பெயர்களில் கதை எழுதினாரோ நான் அறியேன். ஒரு தொகுதி போடும் அளவுக்கு இவர் கதைகள் எழுதவில்லை என நினைக்கிறேன்.

எனது இன்னொரு எழுத்தாள நண்பரின் சிறுகதை நூலொன்றை வெளியிடுவதற்கு பொருளுதவி செய்தார் என அந்த நண்பர் சொல்லி நானறிந்திருக்கிறேன்.

அவருடனான தொடர்பும் இப்போது இல்லை என நண்பர் வருத்தப்பட்டார். அவருடைய சகோதரன் ஒருவர் தொடர்போடு இருந்தாராம். அத்தொடர்பும் அறுந்துவிட்டதாம். அவர் எங்கே....? அறிந்தவர்கள் தகவல் தரவும்.

**சிலுவை வீடு**

> **சரிநிகர் பத்திரிகை வானமே எல்லை என்ற தலைப்பில் வைத்த சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்று 1994 செப்- 29 -ஒக் 12 இதழில் பிரசுரமான கதை இது. கதையின் தலைப்பும் கதை சொன்ன பாணியும் என்னை வியப்பில் ஆழச்செய்த கதை.**
>
> **என்னைப் பற்றிய அறிமுகம் உங்களுக்கு தேவைப்படும்**
>
> **என ஆரம்பித்து**
>
> **அதில் வெளவால் ஒன்று வரையப்பட்டிருந்தது.**
>
> **என்று முடியும் இக்கதையை நான் குறிப்பிட்ட சரிநிகர் இதழை தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

முன்னைய ஒரு பதிவில் நான் குறிப்பிட்டது போல்,

ஏன் எழுதுவதை நிறுத்தினார்? என்று வருத்தப்படும்படி என்னை ஆக்கியவர்களில் இவரும் ஒருவர்.

**21 June 2018**

இவரைச் சந்தித்தது இப்போதும் நினைவிலுள்ளது. நீர்பாசனத் திணைக்கள சுற்றுலா விடுதியில் யாரையோ சந்திக்கச் சென்ற இடத்தில் தான் இவரைச் சந்தித்தேன். அப்போது தினமுரசு பத்திரிகையில் இவரது ஒரு வித்தியாசமான கதை (நீ அழைத்ததாக ஒரு ஞாபகம்) பிரசுரமாகி கவனத்தை ஈர்த்திருந்தது. திருகோணமலைக்கு ஒரு நல்ல எழுத்தாளன் கிடைத்திருக்கிறான் என்ற மகிழ்வைத் தந்த படைப்பாளி. என் குடும்ப நண்பன். இலக்கிய சகா.

விடியல் பதிப்பகம் எனது முழுத் தொகுப்பான நந்தினி சேவியர் படைப்புகள் தொகுப்பை வெளியிட ஆக்கபூர்வமான பணியை பாண்டிச்சேரி கண்ணன் M முடன் இணைந்து முன்னெடுத்தவர்.

**வி.கௌரிபாலன்**

20/3/1970ல் திருகோணமலையில் பிறந்த விஸ்வலிங்கம் கௌரிபாலன் படவரைஞராக இருந்து, இப்போது முகாமை உதவியாளராக கடமையாற்றுகிறார். மட்.குருக்கள்மடம் இவர் வாழும் மனைவியின் ஊர்.

1994 ல் தினைமுரசு பத்திரிகையில் **தாயம்மா** என்ற கதையோடு இலக்கியப் பிரவேசம் செய்தார். எழுத்து வெறி என்பது இவரிடம் இல்லை. அவ்வப்போது எழுதுவார்.

சரிநிகர்,நிகரி,பெயர்,புதியதளம்,எக்ஸில், களம்,அம்மா, கலைமுகம், ஜீவநதி ஆகியவற்றில் எழுதியவர். தமிழக அடவி சஞ்சிகை இவரது மூன்று கதைகளை மறுபிரசுரம் செய்துள்ளது.

இவரது **நீ அழைத்ததாக ஒரு ஞாபகம்** எனும் கதை. ஆங்கிலத்தில் **The Flightless Butterflies** என **L.A.Leon** என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு இதே பெயரில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகமாக நடிக்கப்பட்டது.

இதே நாடகம் தமிழில் **பறப்பிழந்த வண்ணாத்திப் பூச்சிகள்** என்ற பெயரில் நாடகமாகி,(கௌரி எழுதி) தமிழ்,ஆங்கில நூலாகியும் உள்ளது.

இவரது மூன்று கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்கப்பட்டு பென்குயின்(India) வெளியிட்ட நூலில் பிரசுரமாகி இருக்கிறது.

காலம் உனக்கொரு பாட்டெழுதும்

**The time will write a song for you.**

**- Contemporary Tamil writing from SriLanka -**

**இவரது நூல்கள்**

ஒப்பனை நிழல் (10 கதைகள், 2003, கீ.க.மன்றம்.வ.கி. மா.சிறந்த நூல் பரிசு), ஒப்பனை நிழல் (2010, மீள் பதிப்பு, தமிழக பரிசல்), வானுறையும் தெய்வத்தினுள்(2003, நாடகம்), நதிப்பாதையின் மேலே(2010, கட்டுரை), பறப்பிழந்த வண்ணாத்திப்பூச்சிகள் (தகப்பனார் நினைவு மலர்,2012), காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்(27கதைகள், 2016,கோவை விடியல்).

வாசகனை முன் வைத்து தன் படைப்புகளை வெளியிடும் கௌரியிடம் பிரதி பற்றிய தெளிவான நிலைப்பாடு இருக்கிறது.

காரணம் அவர் தேர்ந்த வாசகனாக இருக்கிறார்.

இக்காரணமாகவே எங்களிருவரிடையேயும் பூரணத்துவமான உடன்பாடு நிலவுகிறது.

அப்பே றட்ட

> **இது எதிலுமே பிரசுரமாகாத கதை. இவரது தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. எத்தனை துன்பகரமான நிகழ்வுகளை நாம் எதிர் கொண்டோம்.**
>
> **பிரச்சனைகளுக்குள் வாழ்ந்து,அவற்றோடு உழன்று அதையே தன் கதைகைளின் அடிச்சரடாகக் கொண்டு உண்மையும் புனைவும் கொண்ட படைப்பைத் தரும் இவரின் மற்றொரு அனுபவ வெளிப்பாடே இக்கதை.**
>
> **வெற்றுக்கண்களால் காணமுடியாத மாயப் பிறவியாக அவன் இருக்கவில்லை.**
>
> **எனத் தொடங்கி**
>
> **வானில் ஓடும் இரத்த ஆற்றை வெறித்தபடி நின்றிருப்பான்.**
>
> **என்று முடியும் இக்கதையை அவரது சிறுகதைத் தொகுதிகளில் வாசியுங்கள் நண்பர்களே.**

கௌரி எழுதும் கதைகளின் முதல் வாசகன் நான் என்பதில் உண்மையில் பெருமைப்படுகிறேன்.

அவரின் சிறுகதைத் தொகுப்புக்கு முன்னீடு எழுதிய 2003 லும் இதையே குறிப்பிட்டேன். இப்போதும் தான்.

**22 June 2018**

**யு**த்தம் தந்த படைப்பாளிகளில் இவரும் ஒருவர்.யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேரின் சிறுகதைகள் அடங்கிய **மண்ணின் மலர்கள்** என்ற சிறுகதைத் தொகுதி ஒன்று மல்லிகைப் பந்தலால் 2001ல் வெளிவந்திருந்தது. அதில் எழுதியவர்கள் முன்னரே பல கதைகளை பத்திரிகைகளில் எழுதி பிரபலமானவர்கள். அவர்களில் பலர் இப்போது எழுதுவதில்லை. எழுதிக்கொண்டிருக்கும் சிலரில் இவர் முக்கியமானவர்.

மல்லிகை தொகுதியில் இவரைப் பற்றிய அறிமுகம் இவ்வாறு அமைந்திருந்தது.

**"இவர் முப்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சஞ்சீவி, தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தேசிய மட்டத்தில் பல பரிசுகளைப் பெற்றுள்ளார்."**

2001ல் வெளிவந்த இளம் எழுத்தாளர்கள் 12 பேரின் சிறுகதைகள் கொண்ட தொகுதியான **இங்கிருந்து** தொகுதியிலும் இவரது கதை **மழை** இடம் பெற்றுள்ளது.

**தாட்சாயணி**

75 ல் சாவகச்சேரி சங்கத்தானையில் பிறந்த. செல்வி.பிரேமினி சபாரத்தினம் (இப்போது திருமதி.பிரேமினி.) ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. நிர்வாக சேவை அதிகாரி. கோப்பாய் உதவி பிரதேசச் செயலாளராக இருந்து இப்போது சங்கானைப் பிரதேச செயலாளராகியுள்ளார்.

தனது 17 வயதில் எழுதத் தொடங்கிய இவர் **சஞ்சீவி, தினகரன், வீரகேசரி, தாயகம், மல்லிகை, ஏகலைவன்** ஆகியவற்றில் எழுதியவர்.

பல போட்டிகளில் முதல் பரிசு பெற்றவர். வட மாகாண சாகித்திய விருது பெற்றவர்.

**இவரது நூல்கள்**

ஒரு மரணமும் சில மனிதர்களும்( 2004, ஞானம் விருது தொகுப்பு, மணிமேகலை), இளவேனில் மீண்டும் வரும் (2007, சிறுகதை, மீரா. கொழும்பு, வ.ம.பரிசு),தூரப்போகும் நாரைகள் (2008, சிறுகதை, மீரா. கொழும்பு), கடவுளோடு பேசுதல் (2009, ஆன்மீக கட்டுரைகள், மீரா.கொழும்பு), அங்கையற் கண்ணியும் அவளது உலகமும்(2011, சிறுகதை, மீரா.கொழும்பு)

**சுழல்**

**அமரர் எஸ்.வி.தம்பையா சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்று மல்லிகை ஜனவரி 2006 இதழில் பிரசுரமான கதை இது.**

**ஒரு தந்தையின் இழப்பு ஏற்படுத்தும் தாக்கத்தை ஏக்கத்தோடு கூறும் கதை.**

**யாரும் எதையும் தெரிந்து கொள்வதில்லை.**

**என ஆரம்பித்து**

**இப்போது சுழல் நீங்கிய அமைதி மனதில்**

**என்று முடியும் இக்கதையை இவரது தூரப்போகும் நாரைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

சில காலமாக இவரது எழுத்துகளைக் காண முடியாதுள்ளது. மற்றைய **மண்ணின் மலர்கள்** எழுத்தாளர்கள் போல் இவரும் ஒதுங்கிக் கொள்கிறாரோ..? இருக்காது.

**23 June 2018**

ஒருகாலம் இவர்கள் சிலபேர் மாணவர்களாய் இருந்த போது எம்மோடு நெருக்கமாக இருந்தார்கள்.

புதுசுகள்- சபேசன், விஜயேந்திரன், பாலசூரியன், இவர். இவர்களின் உற்சாகம் எதிர்வினை தைரியம் எம்மை மிகவும் கவர்ந்தது. பின்னர் வந்த மாற்றங்கள் இவர்களை தனித்தனியே பிரித்தெடுத்தது.

புலம் பெயர்ந்து இருக்கும் இவர்கள் ஏதாவது விதத்தில் ஐக்கியப்பட அரசியல் இவர்களை விடுவதாக இல்லை.

அது அவர்களின் சுயவிருப்பு. அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் பிறருக்கு இல்லை.

என் மீது பிரியமானவர். என்னைப்பற்றி அவருக்குத் தெரியும். தூரவே நிற்கிறோம்.

**அ.இரவி**

1960ல் அளவெட்டியில் பிறந்த அருணாசலம் இரவி. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் இருந்து யாழ்பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர்.

புதுசு சஞ்சிகையை வெளியிட்ட எனக்குப்

பிரியமான நால்வரில் ஒருவர். 1986 ல் தமிழ்சிறப்பு கலைமாணி, 1992ல் நாடகத்துறை முதுமாணி பட்டம், கொழும்புப் பல்கலைக்கழக கல்வியல் டிப்ளோமா பட்டம் பெற்றவர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரத்மலானை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

இது வரை முப்பது கதைகள் மட்டில் எழுதியிருக்கிறார். அவற்றில் பல கதைகளை நான் வாசித்திருக்கிறேன். 20 நாடகங்களை இவர் ஆக்கி நடித்துள்ளார்.

இப்போது லண்டன் வாசி. **சரிநிகர்** ஆசிரியர் குழுவில் இருந்தவர். அப்போதைய இவரது அரசியல் வேறாக இருந்தது.ஒரு பேப்பர், புலம் ஆகியவற்றின் ஆசிரியராக இருந்தவர்.

லண்டன் IBC வானொலி, தொலைக்காட்சியில் கடமையாற்றுபவர். பிரான்சிய தமிழர் வானொலியிலும் கடமையாற்றியவர்.

**இவரது நூல்கள்**

காலமாகி வந்த கதை (2003, இரு பதிப்புகள், நினைவுத் தொடர்), பாலைகள் நூறு (2011, சிறுகதைகள், தமிழியல்-காலச்சுவடு), வீடு நெடுந்தூரம் (2012, நாவல, காலச்சுவடு), ஆயுதவரி (2013, குறுநாவல், காலச்சுவடு), 1958(2015, நாவல் காலச்சுவடு).

**ஜேர்மனியில் ஒரு நகரம் பிறகு பிரேமன் நகரத்துக்காகம்**

**இக்கதையை மூன்று நூல்களில் வாசித்தேன். முதலாவது தமிழர் நலன்புரிச் சங்கம் வெளியிட்ட இன்னுமொரு காலடி(1998) தொகுப்பில் (பத்மநாப ஐயரோடு ஆசிரியர் குழுவில் அப்போது இருந்தார்.) பின்னர் 2005 ல் தமிழர் தகவல் வெளியிட்ட பொங்கல் ஈழத்துச் சிறுகதைகள் சிறப்பு மலரில் மூன்றாவதாக 2011. முகங்கள் சர்வதேச தமிழ் எழுத்தாளர்களின் புலம்பெயர் சிறுகதைத் தொகுதியில். பிறகு பிரேமன்**

**நகரத்துக் காகம் இல்லாமலும்.**

**ஓடிக் கொண்டிருந்த போது பனி முகத்தில் அறைந்தது.**

**எனத் தொடங்கி**

**சரி, இனியாவது ஒருவாய் அழுவமோ என யோசித்தேன்.**

**என முடியும் இக்கதையை நான் குறிப்பிட்ட தொகுப்புகளில் வாசியுங்கள் நண்பர்களே.**

**பாலைகள் நூறு** தொகுப்பில் இக்கதை இருக்கிறதோ தெரியாது. ஏனெனில் அத்தொகுப்பை நான் வாசிக்கவில்லை. அத்தொகுப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

**23 June 2018**

சரிநிகர் மூலம் இவரை அறிந்து கொண்டேன். நிர்வாக சேவை பதவி பெற்றபோது. நாணயம் பற்றி இந்த சாரப்பட ஒரு கவிதை சரிநிகரில் எழுதியிருந்தார். நாணயமானவனாக இருந்தேன். ரையைக் கட்டி கதிரையில் இருந்த போது நாணயம் இல்லாது போய்விட்டது.

**நற்பிட்டிமுனை பளீல்**

1960 ல் பிறந்த ஆதாம்லெவ்வை முஹமது பளீல். கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் பயின்று கிழக்குப்பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியானவர். சிறந்த விஞ்ஞான ஆசிரியர். இலக்கியத்தோடு மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை நூல், நுண்ணறிவு, பொது உளச்சார்பு, தாவரவியல் போன்ற நூல்களை எழுதியவர்.

கவிதை, சிறுகதை இவரது விருப்பமான துறை. முனைப்பு, சிந்தாமணி, மல்லிகை, சரிநிகரில் எழுதியவர். நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்து கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றியவர்.

காத்தான்குடி பிரதேச செயலாளராக இருந்த போது 4/12/2005ல் இனம் தெரியாதோரால் சுடப்பட்டு மரணித்தவர்.

**இவரின் ஆக்க இலக்கிய நூல்கள்**

மடிக்குள் விழுந்த வெள்ளிகள் (கவிதை), மெல்லச் சாகும் வாலிபம் (சிறுகதை, 1997).

**"அரசியல் தலைவர்கள் என்று உதிக்கும் பெரியவர்களும், அவர்களின் தொண்டர்களும் கல்லெறியும் போதெல்லாம் பூச்செண்டை வழங்கவேண்டி இருக்கிறது."**

இது சிறுகதைத் தொகுதிக்கு அவர் எழுதிய முன்னீட்டில் ஒரு குறிப்பு. இவரது மரணத்தின் காரணத்தை எட்டு வருடங்களிற்கு முன் கட்டியம் கூறிய வார்த்தை.

மறுபடியும்...மறுபடியும்

**முனைப்பு ஆவணி 1989ல் பிரசுரமான கதை இது.**

**அமைதிப்படை காலத்து சுற்றிவளைப்பில் அகப்பட்ட ஒரு முஸ்லிம் கிராமத்துக் கதை.**

**கிழவியை வளைச்சு சனம் பள்ளிக்கூட மண்டபத்தாலை நிரம்பி வழியுது...**

**என ஆரம்பித்து**

**சனத்திட நெஞ்சுக்கை பயரேகை படருது...**

**என்று முடியும் இக்கதையை இவரது தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரை உத்தியோகபூர்வமான சந்திப்பொன்றில் கல்முனை பிரதேச செயலகத்தில் சந்தித்திருக்கிறேன்.

இலக்கியம் பேசவில்லை.

**24 June 2018**

**பூ**க்கடைக்கு விளம்பரம் தேவையில்லை. இவரைப்பற்றி நான் எழுதுவது விளம்பரம் செய்வதாகவே முடியும். இவரது புனைபெயர்கள் 20 பதுக்கு மேல். எண்சோதிடத்தில் அசையா நம்பிக்கையுள்ளவர். படிமக்கவிஞர் என்று கொண்டாடப்பட்டவர்.

மௌனியின் சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர். கவிஞர், விமர்சகர், சிறுகதை ஆசிரியர், ஓவியர், களிமண் சிற்பி.

**பிரமிள்**

20/4/39ல் திருகோணமலையில் பிறந்த சிவராமலிங்கத்தின் அன்னை வேலணையைச் சேர்ந்தவர். திருகோணமலை இந்துக் கல்லூரி மணவர். சக மாணவன் சித்தி அமரசிங்கத்தின் **யாழ்** கையெழுத்துச் சஞ்சிகையில் படங்களும் கீறி எழுதியும் இருக்கிறார்.

அக்காலம் **எழுத்து** சஞ்சிகையில் எழுதி, சி.சு.செல்லப்பாவின் அபிமானம் பெற்றவர்.

கொல்லிப்பாவை சஞ்சிகையிலும் எழுதி இருக்கிறார். 70களிலேயே இவர் இந்தியவாசி

ஆகிவிட்டார்.

இவரது அறியப்பட்ட புனைபெயர்களில் சில. பிரமிள், பிரமின், பிரமின் பானு ஜீவராம், அஜித் ராம் பிரமிள், பிரமிள் பானு சந்திரன், பானு அரூப் சிவராம், டி.சி.ராமலிங்கம், **தர்மு சிவராம்.**

இவர் இலங்கையாராக அறியப்பட்டது மிகக் குறைவு. தமிழின் மாமேதை என்று தி.ஜானகிராமனாலும், புதுக்கவிதை முன்னோடி என சி.சு.செல்லப்பாவினாலும் புகழப்பட்டவர்.

இவர் முரண்படாத ஆட்களே இல்லை. முன்னர் நண்பர்களாக இருந்த சுந்தரராமசாமி, வெங்கட்சாமிநாதன், ஞானக்கூத்தன், மௌனி ஆகியோருடனும். இலங்கையின் எஸ்.பொ. மு.தளையசிங்கம் போன்றோருடனும் முரண்பட்டார்.

இவரை இன்று வரை உபாசிப்பவர் **லயம் கால சுப்பிரமணியம்.**

**இவர் உயிருடன் இருந்த காலத்தில் வெளிவந்த நூல்கள்**

கண்ணாடியுள்ளிருந்து, கைபிடியளவு கடல், மேல் நோக்கிய பயணம், பிரமிள் கவிதைகள், லங்காபுரிராஜா (குறுநாவல்), பிரமிள் படைப்புகள், நட்சத்திரவாசி ( நாடகம, க.பாலேந்திரவின் அவைக் காற்றுக் கலைக்கழகம் மேடையேற்றியது), ஆயி (குறுநாவல்), பிரசன்னம் (ஜே.ஜே.சில குறிப்புகளின் எதிர்வினைக் குறுநாவல்), மார்க்சும் மார்க்சியமும் (பீட்டர் வோர்ஸ்லியின் மொழிபெயர்ப்பு), ஸ்ரீ லங்காவின் தேசிய தற்கொலை.

இவரின் குறிப்பிடத்தக்க சிறுகதைகள் : காடன் கண்டது, பாறை, நீலம், கோடரி, சந்திப்பு,அசரீரி, சாமுண்டி, அங்குலிமாலா, கிசு கிசு.

இவருக்கு விளக்கு வழங்கிய புதுமைப்பித்தன் விருது. கும்பகோணம் சிலிக்குயில் புதுமைப்பித்தன் வீறு விருது கிடைத்துள்ளது.

தமிழ் இந்து நாளிதழ் பிரமிள் விருது எனும் பெயரில் சென்ற வருடம் முதல் ஒரு பரிசை அறிவித்துள்ளது.

இவர் 6/1/97 ல் கரடிக்குடியில் காலமாகினார்.

சமீபத்தில் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும், மைக்கல் கொலினின் மகுடம் இதழ் இவரது அட்டைப்படத்துடன் சிறப்பு வெளியீடாக வந்துள்ளது. இச்சிறப்பிதழ் தமிழகத்தில் மீள்பதிப்புக் கண்டுள்ளமையும் பெருமைக்குரியது.

90 களில் இவரது சுயபிரதிமை ஓவியத்தை அட்டைப்படமாகக் கொண்டு இவர் பற்றிய ஒரு நூலை சித்தி அமரசிங்கம் ஈழத்து இலக்கியச் சோலை வெளியீடாகக் கொண்டுவந்தார் என்பதும் மேலதிக தகவல்.

S.V. சங்கரலிங்கம், Dr. S.P. ராமச்சந்திரன் என்பவர்கள் இவரின் உயிரோடு இருக்கும் சக மாணவர்கள் நண்பர்கள். இராஜ.தர்மராஜா இவரோடு பழகிய ஒரு அன்பர்.

கால சுப்பிரமணியமும் அடையாளமும் இவரது 20 க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு வைத்துள்ளதுடன் விரைவில் இவரது அனைத்துப் படைப்புகளையும் ஒரே தொகுப்பாக்கும் பணியை ஆரம்பித்திருக்கின்றனர்.

**காடன் கண்டது**

**இக்கதை 1982ல் ஒக்டோபரில் இவரால் எழுதப்பட்டதாக ஒரு குறிப்புக் கூறுகிறது.**

**ஒரு வித்தியாசமான கதை.**

**எதை எவன் கண்டதாச் சொல்ல?**

**என ஆரம்பித்து**

**கக்கான் எனது கையிலிருந்த சுருளை கபக்குனு புடுங்கிக்கிட்டான்.**

**என்று முடியும் இக்கதையை இவரது தொகுப்புகளில் அல்லது சிறுகதைகள் இணையத்தளத்தில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஒரு கவலை. கால சுப்பிரமணியத்திற்கு இருக்கும் இவர் பற்றிய அக்கறையில் ஒரு சிறிதளவாவது நமக்கு இருக்கிறதா?

நான் ஒரு நலிந்தவன். என் இயலாமை நீவிர் அறிவீர்.

நண்பர்களிடம் வேண்டுகிறேன். பிரமிளுக்காக அரை நாளை ஒதுக்க மாட்டீர்களா.?

**25 June 2018**

## பிடித்த சிறுகதை 173

தற்செயலாக பழைய பதிவுகளை மீள பார்வையிட்டேன் பி.சி173. பதியப்படவில்லை. இப்பதிவை இட்டு நிரப்புகிறேன். இவர் புலோலியின் மற்றோர் படைப்பாளி. நிலஅளவையாளராக இருந்து ஓய்வு பெற்றவர். புலோலியை தன்பெயரோடு இணைத்துக்கொண்டவர்.

### புலோலியூர் செ.கந்தசாமி

14/3/1937ல் தென் புலோலி புற்றளை பருத்தித்துறையில் பிறந்த செல்லையா கந்தசாமி. ஒரு ஓய்வு பெற்ற நில அளவையாளர். 1960ல் இலக்கிய உலகுக்கு வந்த இவர் இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் எழுதினார்.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றவர்.

### இவரது சிறுகதைத் தொகுதி

மெல்லத் தமிழினி 1999ல் கொழும்பு மீரா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

இவர் ஒரு கவிஞரும், விமர்சகருமாவார்.

**இப்படியும் சிலர்**

**வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை பருத்தித்துறை, 2012 ல் வெளியிட்ட தரிசனம் சிறுகதைத் தொகுதியில் பிரசுரமான கதை இது.**

**ஓய்வு பெற்ற அரச ஊழியர் தன் இறுதிக்காலத்தில் கொடுக்கும் மரணவாக்கு மூலமும், அதனைத் தொடர்ந்து நடக்கும் சம்பவத்தையும் இக்கதை கூறுகிறது.**

**தம்பி நான் இனி அதிக காலம் நின்று பிடிப்பன் என்ற நம்பிக்கை துளி கூடஇல்லை..**

**என ஆரம்பித்து.**

**செல்வரத்தினம் அவர்கள் இறுதிப் பயணத்தைத் தொடங்கி விட்டார்.**

**என்று முடியும் இக்கதையை தரிசனம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஆ.இரத்தினவேலோன் வெளியிட்ட **புலோலியூர் சொல்லும் கதைகள்** தொகுப்பில் இவரது சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறாத இரண்டு கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**8 August 2018**

இலங்கையிலிருந்துகொண்டு புலம் பெயர் சஞ்சிகைகளில் நிறைய எழுதியவர். இப்போது நிரந்தரமாகவே புலம்பெயர்வாசி. (லண்டன்). பற்குணத்தாரின் மனிதவள நூல் நிலையத்தில் இவரைக் கண்டிருக்கிறேன். அப்போது அவர் அக்குறணையில் இருந்தார்.

கவிதை இவரது முக்கிய இயங்கு தளமாக இருந்த காலமது. திருகோணமலை ஜமாலியாவில் திருமணம் செய்தவர். 2000த்தில் **லண்டன் தீபம்** தொலைக்காட்சியில் இணைந்தார்.

இப்போது **IBC** தொலைக்காட்சியின் சிரேஷ்ட ஒளிபரப்பாளர்.

**இளைய அப்துல்லாஹ்**

இவர் வன்னியின் மைந்தன். 21/5/1968ல் ஒட்டிசுட்டான் புளியங்குளத்தில் பிறந்தவர்.

இவரது பெயர் **M.N.M.**அனஸ். தீராநதி பேட்டியில் இவர் தன்வரலாற்றைக் கூறி உள்ளார். கேரளத்தின் வைக்கம் முகம்மது பஸீர். இலங்கையின் டானியல்

போல் பல் தொழில் பார்த்தவர்.

மாத்தளையில் கல்வி கற்றபோது உருது மொழியைக் கற்றுக்கொண்டவர்.

தே.இ. சே.மன்ற போட்டிகளில் பரிசுகள் பெற்றவர். 1986 ல் சிந்தாமணியில் கனக. ஸ்ரீகந்தராஜா என்ற புனைபெயரில் **பவளமலையில் ஒரு பசுந்தளிர்** சிறுகதை மூலம் எழுத்துலகில் அறிமுகமாகினார்.

100 கதைகள், 200க்கு மேற்பட்ட கவிதைகள் ஏராளம் பத்தி எழுத்துகளை தந்துள்ளார். புலம் பெயர் சஞ்சிகைகள், தீராநதி, விகடன், உயிர்மையில் இவர் எழுதுகிறார்.

96/97களில் இ.வானொலி தேசிய சேவையில் இவர் வழங்கிய **விடியலை நோக்கி** நிகழ்வு இன்றும் பேசப்படுகிறது. **IBC** யில் **அகக்கண்** நிகழ்வில் இவர் காணும் நேர்காணல்கள் மிக முக்கியமானவை. என்னையும் இவர் நேர்கண்டுள்ளார்.

**இவரது நூல்கள் :**

துப்பாக்கிகளின் காலம் (2004, சிறுகதைகள் 10), பிணம் செய்யும் தேசம் (2004, கவிதைகள், சாகித்திய பரிசு), அண்ணை நான் தற்கொலை செய்யப் போகிறேன் (கட்டுரை), கடவுளின் நிலம் (கட்டுரை), லண்டன் உங்களை வரவேற்பதில்லை (கட்டுரை), நீரில் விளக்கெரியும் நந்திக்கடல் (கட்டுரை).

**அஸ்மியாவின் பயணம்**

**2013 ஆகஸ்ட் விகடன் இதழில் நட்சத்திர எழுத்தாளர்களின் சிறுகதை அணிவகுப்பு எனும் தலைப்பின் கீழ் பிரசுரமான கதை.**

**பெல்ஜியம் சென்ட்ரல் மிகவும் கம்பீரமாக இருந்தது...**

**என ஆரம்பித்து**

**அவள் காத்திருந்த ரயிலுக்கான பச்சை விளக்கு எரிய அவள் புறப்படத் தயாரானாள்.**

**என்று முடியும் இக்கதையை சிறுகதைகள் இணையத்தளத்தில் வாசியுங்கள் நண்பர்களே.**

2006 ல் இவருக்கு சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ சிறிவர்த்தன விருது வழங்கப்பட்டது.

அதே ஆண்டு மல்லிகை ஆகஸ்ட் இதழ் இவரது அட்டைப் படத்தைப் பிரசுரித்திருந்தது.

**26 June 2018**

## பிடித்த சிறுகதை 175

அந்தக் காலத்தில் நாச மறுக்கப் புறப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

அடிக்கடி இல்லாவிட்டாலும் ஓரிரு தடவைகள் சந்தித்திருக்கிறோம். உதயன் குலசிங்கம் எம்மை அறிமுகப் படுத்தினார். சரிநிகர் ஆசிரியர் குழுவில் ஒருவர். தமிழகத்தில் தமிழ் இனி மாநாட்டில் கலந்து கொண்டபோது சரிநிகரில் நாங்கள் இருந்தோம் அதில் நீங்கள் எழுதவில்லை என என்னைக் கடிந்து கொண்டவர்.

சத்திர சிகிச்சை முடிந்து ஒரு சமயம் வத்தளையில் இவர் வீட்டிற்கு கேதாரநாதன் என்னை அழைத்துச் சென்றார். கனடா போவதற்கு முன் திருகோணமலையில் குடும்பத்தோடு வந்திருந்த போது சந்தித்தேன்.

**எஸ். கே.விக்கினேஸ்வரன்**

1958ல் வடமராட்சி அம்பனில் பிறந்தவர். வேலாயுதம் மகா வித்தியாலய மாணவர்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் கற்றவர். இடது சாரிச் சிந்தனையுடன் விசுவாநந்த தேவனோடு இயங்கியவர்.

இதுவரையில் 12 கதைகைள் மட்டில் எழுதி இருக்கிறார்.

மயூரன்,அரவிந்தன்,சஞ்ஜித்,ஈழமோகம், அருண் இவரது சில புனைபெயர்கள். சிரித்திரன், சரிநிகர், மூன்றாவது மனிதன், திசை, எதுவரை ஆகியவற்றில் இவரது கதைகள் பிரசுரமாகி இருக்கின்றன.

அரசியல் விமர்சன கட்டுரைகளில் கூடுதல் கவனம் செலுத்தியமையால் ஆக்க இலக்கிய பணிகளில் கவனத்தைக் குறைத்துக் கொண்டார். தீவிர வாசிப்பு மனநிலை கொண்டவர். காட்டமான இலக்கிய விமர்சகர். ஒரு இலக்கிய குடும்ப உறுப்பினர்.

இவரது கதைகள் : பாஸ்(1987, சிரித்திரன் சிறுகதைப்போட்டி முதற்பரிசு), விளைவுகள்,(திசை), பனி இளகிய பகல்(மயூரன், சரிநிகர்) மூன்று மழைக்கால இரவுகள், புரிதலும் புரிதல் புரிதலும், (மூன்றாவது மனிதன்), திரை விலகும் துயர், மௌனிக்கின்ற சுமைகள் எதுவரை, நீங்கள் என் செய்கின்றீர்கள்?.

இவர் சில பிறமொழிக் கதைகளை தமிழாக்கியுள்ளார். இவர் மொழிபெயர்த்த நூல்: **குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே**

**வேலிகள்**

**1983 புதுசு-7. ஏப்-மே இதழில் பிரசுரமான கதை இது. பின்னர் திசை இதழில் 89 ம் ஆண்டு மீள் பிரசுரம் செய்யப்பட்டது.**

**2005ல் தமிழர் தகவல் பொங்கல் ஈழத்துச் சிறுகதை சிறப்பு மலரிலும் இக்கதை பிரசுரிக்கப்பட்டது.**

**ஒரு சிகரட் பத்தினால் நல்லாயிருக்கும் போல இருந்தது.**

**என ஆரம்பித்து**

**எட்டி ஒரு உதை கொடுத்துவிட்டு அது வீல்...வீல் என்று ஓலமிடுவதைக் கவனியாமல் நடந்தான் இவன்.**

**என்று முடியும் இக்கதையை சமீபத்தில் வெளிவந்த புதுசு**

**முழுத்தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

எனது முதல் தொகுப்பே 8 கதைகளுடன்தான் வெளிவந்தது. இரண்டாவது தொகுப்பும் அது போலவே 12 கதைகள் புத்தகம் போடுவதற்கு போதுமானவை.

**26 June 2018**

7o களின் தொடக்கம் வடபுலத்துக்கு வெளியில் இருந்து ஆசிரிய மாணவர்கள் யாழ் வந்தார்கள். பலாலி ஆசிரியர் கலாசாலை இவர்களை அரவணைத்தது. யாழ் நூலக மேல்மாடி இலக்கிய கூட்டங்களில் இவர்களது பிரசன்னம் இருந்தது.

அக்காலத்தில்தான் **செம்மலர்கள் இலக்கிய வட்டமும், அணு** சஞ்சிகையின் வரவும் நிகழ்ந்தது.

திக்குவல்லை கமால், ஜவாத் மரைக்கார், அன்பு ஜவகர்ஷா, கலைவாதி கலீல், அமானுல்லா இவர்களில் சிலர். அப்படித் தெரிந்து கொண்ட, இப்போது பிரபலமாக இருப்பவர்களில் ஒருவர்தான் இவர். ஆச்சரியம் இவர்கள் விஞ்ஞான மாணவர்கள். கவிஞர்களாகவும், சிறுகதை ஆசிரியர்களாகவும் மிளிர்ந்தார்கள்.

இவர் கவிஞராகவே அறியப்பட்டார். ஆனாலும் சிறுகதையாளராக தினபதியில் அறிமுகமாகியவர்.

**மூதூர் முகைதீன்**

1951 ல் மூதூரில்பிறந்த. ஏ.எம். முகைதீன் (அபுசாலிக்கு மீரா முகைதீன்) 71 ல் ஆசிரியராகி,89

ல் அதிபராகி 2011 ல் ஓய்வு பெற்றவர். மீரான் மாஸ்ரர் என அன்போடு அழைக்கப் படுபவர்.முதன் முதலாக 1969ல் இவர் தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் அருள் செல்வநாயத்தின் சிபார்சுடன் இரண்டு கதைகளை எழுதினார்.

69ல் திட்டத்தின் கீழ் 70ல் **மறக்க முடியுமா?**, பின்னர் 73ல் கவிதைத் துறையில் தீவிரமாக இறங்கினார்.கவிதைப் போட்டிகளிலும் கலந்து பரிசு பெற்றுள்ளார். 2016 **வானமுதம் தமிழ் வானொலி** நடத்திய கவிதைப் போட்டியில் முதலாமிடமும், யாழ் முஸ்லிம்கள் புலம்பெயர்வின் 21 வருட நினைவு கவிதைப் போட்டியில் முதலாமிடமும் பெற்றுள்ளார்.

**இவரது வெளிவந்த நூல்கள்**

முத்து (1976, கவிதை), பிட்டும் தேங்காய்பூவும் (1991, கவிதை), இழந்துவிட்ட இன்பங்கள்(2003, கவிதை), ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம் (2005, கட்டுரை), ஒரு காலம் இருந்தது (2010, கவிதை), அபோதம் (2017, உருவகம்).

2008 ல் தினக்குரலில் இவர் எழுதிய **பிரதிபலன்** கதை தகவம் காலாண்டிற்கான மூன்றாம் பரிசைப் பெற்றுக்கொண்டது.

இவர் 2007ல் காலாபூஷணம் விருதையும், 2011 ல் கி.மா. முதலமைச்சர் விருதையும் பெற்றுள்ளார். 2008 ல் திருகோணமலை நூலக அபிவிருத்தி சபை, வாசிப்பு மாதத்தை ஒட்டி இவருக்கு எழுத்தாளர் கௌரவிப்பு விருது வழங்கியுள்ளது. நவ.2011 மல்லிகை இவரது அட்டைப்படத்தைத் தாங்கி வெளிவந்தது.

மூதூர் மண்ணில் இருந்து **ஓசை** எனும் கவிதைக்கான சிற்றிதழை வெளியிடுகிறார். இதுவரை 27 இதழ்கள் வந்துள்ளன.

**அமைச்சர் வருகிறார்**

**2008 ல் வீரகேசரியில் பிரசுரமான கதை இது.**

**அரசியல்வாதிகளின் பங்கலோட்டுத்தனத்தை அம்பலப்படுத்தும் துணிச்சலோடு எழுதப்பட்ட முற்போக்கு சிந்தனையுள்ள கதை.**

**வண்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட அந்த மைதானத்தில் வேகும் வெய்யிலில் அமைச்சரின் வருகையை எதிர்பார்த்து மாணவர்கள்.......**

**எனத் தொடங்கி**

**அதிபரால் வாசித்து அமைச்சருக்கு வழங்கப்பட்ட அக் கடிதம் குப்பைகளுடன் ஒரு குப்பையாக கிடந்தது.**

**என்று முடியும் இக் கதையை வீரகேசரியில் மட்டும் வாசிக்க முடியும் நண்பர்களே.**

தன் மண்ணின் பெயரை தன் பெயரோடு இணைத்துக் கொண்டவர் இவர். (வ.அ.கூடசெய்யவில்லை) தன் கதைகளை இவர் நூலாக்கும் வரை நாம் காத்திருப்போம்.

**27 June 2018**

## பிடித்த சிறுகதை 177

இவர் சரிநிகர் மூலம் அறிமுகமான ஒருவர். அப்போதைய எனது வாசிப்பு மனநிலையில் இவரது வரவை நான் உன்னிப்பாக அவதானித்தேன். போகப போக இவரது கதை பண்ணல் எனக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது என்பதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். வாசிப்பின் புதிய தேவைப்பாட்டை வேண்டுவோனாகவும், படைப்பின் சூக்குமத்தைத் தேடுவோனாகவும் நான் இல்லாமலிருப்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம். எனக்கான தேடல் சாமானியனுடையது. மேதாவிகளுக்கானது அல்ல.

**திசேரா**

20/3/71 ல் மட்டக்களப்பு ஆரையம்பதியில் பிறந்த சந்திரசேகரன் தியாகசேகரன் ஒரு ஆசிரியர். மலையகத்தில் கற்பித்த இவர் இப்போது மட்/ வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றலாகி வந்துள்ளார். சரிநிகரில் இவர் எழுத ஆரம்பித்தார். தினக்குரல்,மூன்றாவது மனிதன், ,மறுகா,புதிய சொல்,மந்திரச்சிமிழ்,கல்குதிரை, காலம், மகுடம் ஆகியவைற்றில் எழுதியவர்.

**இவரது நூல்கள்:**

கபாலபதி (2000, 12சிறுகதைகள், மூன்றாவது மனிதன்), வெள்ளைத்தோல் வீரர்கள் (2004, 13 சிறுகதைகள் மூ.ம), ஏவிவிடப்பட்ட கொலையாளி (2008, புதினம், சிறகு நுனி), யோவான் 14:2 (2016, 8 சிறுகதைகள்,சிறகு நுனி).

**வேட்டைப்பல்**

**சரிநிகரில் பிரசுரமான கதை இது. இவரது ஆரம்ப காலக் கதைகளில் இதுவும் ஒன்று.**

**என்னைக் கவர்ந்த சரிநிகர் கதைகளில் ஒன்றாக இக்கதையை நான் அடையாளம் காட்டுவேன்.**

**அந்த நாய் இன்னமும் பின்னேதான் வந்து கொண்டிருந்தது.**

**என ஆரம்பித்து.**

**நான் பயந்த அரக்கனாகவோ பேயாகவோ தோன்றாமல் நாயாகவே ஓடி மறைகிறது.**

**என்று முடியும் இக்கதையை இவரது கபாலபதி சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

அத்தொகுதி ஒன்றே திசேராவின் அடையாளம். என் வரையில் எதுவரையில்? என்வரையில் தான்.

**28 June 2018**

2004 ல் சுட்டும் விழி சஞ்சிகை நேர்காணலில் ஒரு கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்திருந்தேன்.

**“போர்க் கால இலக்கியங்களைப் பற்றிய விமர்சனங்களை மேலெழுந்த வாரியாக செய்பவர்கள் இங்கிருந்து நல்ல இலக்கியங்கள் வரவில்லையென காட்டமான விமர்சனங்களைச் செய்கிறார்கள். எனக்கு அவ்வித விமர்சனங்களோடு ஒத்துப்போக முடியவில்லை.”**

இக்கருத்துக்கு நான் வந்தது வன்னியிலிருந்து வந்த படைப்புகளை வாசித்ததாலேயே. அந்தப் படைப்பாளிகளில் முக்கியமானவர்களில் ஒருவராக இருந்தவர் இந்த பெண் ஆளுமை.

**“கலையும் இலக்கியமும் மக்களுக்கானது?”** என்று இவர் குறிப்பிடும் தலைவரின் கூற்றுக்கு முன்னரே மார்க்சிய உடன் பாட்டுக்காரர்களான நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டு விட்டோம்.

இவர் ஒரு தமிழத் தேசியவாதி. மிகுதியை நான் சொல்லத் தேவை இல்லை.

**ஆதிலட்சுமி சிவகுமார்.**

செல்வபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். யுத்த இடம் பெயர்வுகள் பல ஊர்கள். இப்போது சுவிஸ் வாழ்க்கை. பண்டிதர் இராசையாவின் புத்திரி. ஆதிலட்சுமி இராசையாவாக 20/5/83 ல் **உரிமையில்லா உறவுகள்** சிறுகதையின் மூலம் இலங்கை வானொலியில் அறிமுகமானவர். தொடர்ந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் ஏராளம் கவிதைகள், நாடகங்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் எழுதியவர். இவரது பாடல்கள் இறுவட்டுகளாகவும், இவரது சிறுகதைகள் குறும்படங்களாகவும் வன்னியில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வன்னி வானொலியில் கடமையாற்றிவர். தான் நேசித்த தலைவரின் கையால் 1998ல் தங்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். கொள்கை பிறளாதவர். மீனுக்கு வாலும் பாம்புக்கு தலையும் காட்டும் விலாங்குத்தனம் இல்லாதவர்.

கொள்கை உடன்பாடு இல்லாதபோதும் இவரை நான் மதிப்பது இதற்காகவே.

எரிமலை, வெளிச்சம், ஈழநாதம், சுட்டும் விழி, சரிநிகர்,ஞானம், சிரித்திரன், வைகறை, கவிதை, நாற்று, யாத்ரா, மற்றும் இணைய இதழ்களில் எழுதியவர். எழுதுகிறார்.

**இவரது நூல்கள்:**

புயலை எதிர்க்கும் பூக்கள் (1990, சிறுகதைகள்), என் கவிதை(2000), மனிதர்கள் (2006, 31 சிறுகதைகள்).

**அகதியின் பயணம்**

**31/6/2005 ல் வெள்ளி நாதம் இதழில் பிரசுரமான கதை இது.**

**வன்னித் துயர் வாழ்வு பற்றிக் கூறுவது இக்கதை. கதையின் தலைப்பே விசயத்தைக் கூறிவிடும்**

**கண்வெட்டாமல் அவன் இருட்டையே பார்த்தபடி படுத்துக் கிடந்தான்.**

**என ஆரம்பித்து.**

**மயங்கிக் கொண்டிருந்த பொழுதில் புரியாத மொழிப் பேச்சுக்கள் மிக அருகில் கேட்டன....**

**என்று முடியும் இக்கதையை இவரது மனிதர்கள் சிறுகதைத் தொகுப்பில் அல்லது சிறுகதைகள் இணையத்தில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரெழுதிய நாவல் **புள்ளிகள் கரைந்த பொழுது** 7/7/18 ல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது. உண்மை அனுபவத்தின் வெளிப்பாடாக அந்த நாவல் நிச்சயம் இருக்கும்.

**29 June 2018**

74ல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கற்ற பஞ்சபாண்டவர்களில் ஒருவர். தினபதி தினமொரு சிறுகதைத் திட்டத்தில் அறிமுகமாகியவர். வல்வை சிதம்பராக் கல்லூரியில் கற்றவர். பருத்தித்துறையில் வாசமாய் இருந்தவர்.

1974 ல் இவரது கவிதை ஒன்றை வாங்கி தாயகம் இதழில் பிரசுரித்தேன்.

**ஜவாத் மரைக்கார்**

ஜவாத் புத்தளம் நுரைச்சோலையில் பிறந்தார்.

**சோலைக்குமரன்** என்ற பெயரில் அ.ஸ.அப்துஸ் ஸமது அவர்களின் சிபார்சுடன் சிறுகதைத் துறைக்கு தினபதியின் மூலம் அறிமுகமாகியவர்.

இதுவரை இவர் பத்துச் சிறுகதைகள் மட்டில் எழுதியிருக்கிறார். அதில் 1977 மார்ச் **மல்லிகை** இதழில் பிரசுரமான **புதிய ஊற்றுக்கள்**, **புதுப்பாதைகள் சமைக்கின்றன** ஆகியவையும் அடங்கும்.

1971 ல் விஞ்ஞான ஆசிரியர் நியமனம் பெற்று. கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று,

பிரதிக் கல்விப் பணிப்பாளராகி 2009 ல் ஓய்வு பெற்றவர். கவிதை, சிறுகதை, ஆய்வு, நூல் சேகரிப்பு என்று தன் நாட்களைச் செலவிட்டவர்.

இலங்கை இந்திய எழுத்தாளர்களுடன் மிக நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவர். 1996 ல் **கலாபூஷணம்** விருதை விண்ணப்பிக்காது பெற்றுக் கொண்டவர். 50 வருடங்களுக்கு மேற்பட்ட இலக்கியத் தொடர்புள்ள இவர் ஒரு நூல் தானும் வெளியிடவில்லை என்கிற மனக்குறை இவரது நண்பர்களுக்கு இருக்கிறது.

எனக்குத் தேவைப்படும் இலக்கியவாதிகள் பற்றிய குறிப்புகளை இவரிடமிருந்து நான் பெற்றுக் கொள்ளுகிறேன். எழுத்தில் சத்தியம் பேணப்பட வேண்டும் என்பதில் நாம் உடன்படுகிறோம். கற்பிட்டி, புத்தளம், என்று முன்னர் பயணப்பட்ட போதும் இவரை நான் சந்திக்கக் கிடைக்கவில்லை.

**தூசுப்படலம் துப்பாக்கிகளாகின்றன....**

> **பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த வெளியீடான யாழ் பிறையில் 1974 ல் பிரசுரமான கதை இது.**
>
> **“இப்றாகீம் நானா.... இங்க வாங்க...”**
>
> **என ஆரம்பித்து.**
>
> **ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர் அனைவரும்**
>
> **என்று முடியும் இக்கதையை குறிப்பிட்ட யாழ்பிறையில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஜவாத்தின் கிடைக்கக் கூடிய எழுத்துக்களை ஒரு தொகுப்பாக நாங்கள் விரைவில் வாசிக்கக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். உதிரியாக இல்லாது அவை உறுதியான ஆவணமாக வேண்டும்.

**29 June 2018**

பிடித்த சிறுகதை 180

முகநூலில் பரவலாக அறியப்பட்ட ஒருவர். எனவே இவரைப் பற்றி அதிகம் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. 74 ல் இருந்து இவரைத் தெரியும். 2006 ல். வகிமா ஆளுனர் விருதை இவர் பெறுவதில் நானும் ஒரு பங்காளியாய் இருந்தேன்

**கலைவாதி கலீல்**

13/10/1943 ல் மன்னாரில் பிறந்த மதாறு முகையதீன் அப்துல் கலீல் ஒரு கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். முஸ்லிம் சமூகத்தின் முதல் வித்துவான் எம்.ஏ.ரஹ்மான், ஒளிப்பதிவு மேதை எம்.ஏ.கபூரின் சகோதரர். ஊடகவியலாளர் மக்கள் காதரோடு உடன் பிறந்தவர். (இரட்டையர்). பயிற்றப்பட்ட ஆசிரியர். (பலாலி பஞ்ச பாண்டவர்களில் ஒருவர்) கல்வியியல் கல்லூரி விரிவுரையாளராகி, தர்கா நகர் கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதியாகி ஓய்வு பெற்றவர்.

1956 ல் **லட்டு** இதழில் **மறைந்த இருள்** எனும் கதையுடன் இலக்கிய உலகில் நுழைந்தவர்.

**இன்ஸான்** பண்ணையில் வளர்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

கவிஞர், ஓவியர், சிறுகதை, தொடர், நாவல் ஆசிரியர், நாடக ஆசிரியர், நடிகர், கட்டட சிற்ப ஆராய்ச்சியாளர், கள ஆய்வாளர், சிறு சஞ்சிகை ஆசிரியர் என பல்துறைக் கலைஞன். இப்போது நவமணி பத்திரிகையில் ஜலதரங்கம் இவரது இலக்கியப்பத்தி.

கலைக்கடல்,குயிலோசை,வெற்றிமணி, வீரகேசரி,தினகரன், தீப்பொறி, தேசாபிமானி,தொழிலாளி இவரது ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள். இவரது தொடர்கதையின் பெயர் விபச்சார விடுதி இலங்கை வானொலியில் 12 வருடங்களுக்கு மேல் நிகழ்ச்சிகள் செய்தவர். எத்தனையோ நூல்கள் சஞ்சிகைகளின் அட்டைப்படங்கள் இவரது கைவண்ணம். என் வேண்டுகோளுக்கிணங்க தாயகம் இதழின் எழுத்தை இவர் வரைந்து தந்தார். ஆரியகுளம் சந்தியில் **பாரத்கபே** என்றொரு தேனீர்க்கடை. அங்குதான் நாம் சந்திப்போம். **புரட்சிக் கவிஞன் "கே "** யாக அறிமுகமாகினார். புதிய ஜனநாயகத்தை வலியுறுத்திய திருகோணமலை மாநாட்டில் கலைவாதி கலீலாக கலந்து கொண்டவர். டானியல், ரகுநாதனின் தோழர். மன்னிநகர் கலீல் இவரது சிறுகதைப் புனைபெயர். மன்னார் வாசகர் வட்ட ஸ்தாபக உறுப்பினர்.

இப்போது காவியாபிமானி,இலக்கிய வாரிதி. இது போன்று தீன் தமிழ் செல்வன், பல்கலை வேந்தன், பல்கலைக்குரிசில் போன்ற பல பட்டங்களும் விருதுகளும் பெற்றவர். தகுதியற்றவர்களுக்கு வழங்கப்படும் கலாபூஷணம் விருதை ஏற்கமாட்டேன் என்று மறுதலித்தவர்.

**இவரது நூல்கள்.:**

உலகை மாற்றிய உத்தமர்(இயல் இசைச் சித்திரம்), ஒரு வெள்ளிரூபாய் (சிறுகதை), கருவைறையிலிருந்து கல்லறைக்கு (புதுக்கவிதை), றோனியோக்கள் வாழுமா? ( ஆய்வு, கட்டுரை), ஓ.. பலஸ்தீனமே நஜு அல் அலியும் ஹன்ஸ்லாவும் (சித்திரங்களுக்கு எழுதப்பட்ட கவிதைகள்).

**மையித்து**

**இன்ஸான் இதழில் புனைபெயரில் எழுதி 68 ல் பிரசுரமான கதை இது. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மொழி மாற்றம் செய்யப்பட்ட இக்கதை பல தடவைகள் மீள் பிரசுரம் செய்யப்பட்டது.**

**சமீபத்தில் நவமணி ஜலதரங்கத்தில் பிரசுரமாகி இருக்கிறது.**

**அலியார் மௌத்தாகிவிட்டார்**

**என ஆரம்பித்து**

**முஸ்லிம்கள் நிறைந்த இந்த ஊரில் ஒரு ஐம்பது ரூபாய் செலவு செய்ய ஆளில்லையே...**

**என்று முடியும் இக்தையை இவரது ஒரு வெள்ளி ரூபாய் சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

கலைவாதி தனக்குக் கிடைத்த பத்திரிகைப் பணியை திறம்படச் செய்ய வேண்டும். இது கட்டாயமான எனது அபிப்பிராயம்.

**30 June 2018**

பிடித்த சிறுகதை 181

நான்கு தசாப்தங்களுக்கு மேல் தமிழ் இலக்கிய உலகில் எழுத்துத் துறையில் மிளிர்ந்த நில அளவைப் படவரைஞர். புலோலி ஊரைத் தன் பெயரோடு இணைத்துக் கொண்ட மற்றொருவர் இவர்

**புலோலியூர் க.தம்பையா**

இலங்கையின் மூத்த தமிழ் எழுத்தாளர். அரை நூற்றாண்டுக்கு மேலாக இலக்கியத் துறையில் ஈடுபட்டு வந்த இவர் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள், நகைச்சுவைக் கதைகள், நாடகங்கள், கவிதைகளைப் படைத்துள்ளார்.

க. தம்பையா யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி புலோலியில் 1937ல் பிறந்தவர். 1966 ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களத்தில் படவரைஞர் தொழில்நுட்ப அலுவலராகப் பதவியேற்றுப் பல உயர் பதவிகளை வகித்தபின்னர் 1984 ஆம் ஆண்டு சேவையிலிருந்து இளைப்பாறினார்.

அதன் பின்னர் 25 ஆண்டுகளாக யாழ்நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றியுள்ளார்.

இவரது சிறுகதைகள் வீரகேசரி ,தினக்குரல், தினகரன் பத்திரிகைகளில் அதிக அளவில் வெளிவந்துள்ளன.

பரிசுகளும் விருதுகளும்: கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதனின் மணிவிழாவினை ஒட்டி 1966 ஆம் ஆண்டு இலங்கை முழுவதுக்குமாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதல் பரிசாகத் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். சதாவதானி கதிரவேற்பிள்ளை நினைவாக 1976ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் **ஓர் ஆசிரியர் அநாதையாகிறார்** என்ற சிறுகதைக்கு முதல் பரிசு கிடைத்தது. நில அளவைத் திணைக்கள இந்து சங்கப் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி 1975 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் **ஒருதாய் ஒரு மகள் ஒரு தேவன்** என்னும் சிறுகதைக்கு முதல் பரிசு கிடைத்தது. 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் இவர் எழுதிய **பணக்கார அநாதைகள்** என்ற சிறுகதையை சிறந்த சிறுகதையாக தேர்ந்தெடுத்து இந்துசமய கலாசார இலக்கியக்குழு இவருக்குப் பணப் பரிசு கொடுத்துக் கௌரவித்தது.

இலக்கியத் துறைக்குப் பங்களிப்புச் செய்ததற்காக 2008 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருதை இந்துக்கலாசார அமைச்சு வழங்கியது.

**வெளிவந்த நூல்கள்:**

அழியும் கோலங்கள் (சிறுகதைத்தொகுதி), ஐம்பதிலும் ஆசைவரும் (சிறுகதைத்தொகுதி).

**சிநேகிதி**

**22/7/1965 சுதந்திரனில் பிரசுரமான கதை இது. இலங்கையின் தேசியப் பத்திரிகைகள் இவரது கதைகளை விரும்பிப் பிரசுரித்துள்ளன.**

**இது ஒரு கிராமமுமல்ல நகரமுமல்ல**

**என ஆரம்பித்து**

**தியாகராசனின் குரலிலே இருந்த உறுதியைக் கண்டு சபாரத்தினத்தார் மௌனியானார்.**

**என்று முடியும் சிநேகிதி எனும் இக்கதையை சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

12/1/2009.ல் காலமாகிய இவரின் ஊரோடு மாற்றம் ஓர் ஆசிரியர் அனாதையாகிறார். **பணக்கார அனாதைகள்** ஆகிய கதைகளும் சிறப்பான சிறுகதைகளே.

**27 July 2018**

இவர் மருதமுனையில் பிறந்தவர். யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டதாரி. தீவிர சிந்தனையாளன். இவரை நான் முதன்முதலாக மாகாணசபை ஆரம்ப காலங்களில் சந்தித்தேன். குடும்ப உறவாக பரிணமித்த அந்த உறவு பதிப்பகத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக அவர் இருந்தவரை தொடர்ந்தது.

செங்கை ஆழியான் தொகுத்த **மறுமலர்ச்சிக் கதைகள், ஈழகேசரி கதைகள்** நூல் தயாரிப்பில் இவரின் பங்கு மிகப் பெரியது.

பதிப்பகத் திணைக்களம் நவீனமயப்பட்டது இவர் காலத்திலேயே.

**M.I.A.ஜபார் (மு.இ.அ.ஜபார்)**

இக்கதை வந்த முனைப்பு இதழில் இவரைஉதவி ஆசிரியர்களில் ஒருவராக குறிப்பிட்டுள்ளார்கள். மற்றவர் எம்.ஐ.எம். றஊப். முனைப்பு எனும் மகுட எழுத்து இவருடையது.

இதுவரை இவர் இரண்டு கவிதை நூல்களை

வெளியிட்டுள்ளார். பல்கலைக்காலத்தில் பேரா.சிவத்தம்பியின் அணிந்துரையுடன் திறக்கப்படாத தீப்பெட்டிகள், வ.கி.மா. காலத்தில் மு.பொ.வின் அணிந்துரையுடன் தரப்பட்டுள்ள அவகாசம்.

சிறந்த வாசகனான ஜபார். நவீன இலக்கியப் பரிச்சயம் உள்ளவர். ஆகவே என்ற காத்திரமான சஞ்சிகையை வெளியிட்டவர். சு.வி யின் காற்று வழிக் கிராமம் ஆகவே வெளியீடாகவே வந்தது.

ஒவ்வொரு மனிதனுள்ளும் வெவ்வேறு விதமான பலவீனங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களை காட்டமான விமர்சனத்துக்கு உள்ளாக்கிய இவர், தானும் அந்த வகைப் பலவீனத்துக்கு ஆட்பட்டுப்போனமை மிக வருத்தம் தரும் விடயம். இதனால் பலரிடம் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டவர்.

சென்னையில் 2000 ஆண்டு நடந்த தமிழ் இனி மாநாட்டில் கலந்து கட்டுரை சமர்ப்பித்தவர். திருகோணமலையில் வகிமா. கல்வி அமைச்சு நடத்திய **அரச கரும மொழியாக தமிழ்** எனும் ஆய்வரங்கிலும் கட்டுரை சமர்ப்பித்தவர்.

பலவீனங்களை மீறி இவரிடம் இருக்கும் திறமையை நான் மெச்சுகிறேன். தனது முதற் கவிதைத் தொகுதி தோல்வி என சுயவிமர்சனம் செய்தவர். சில சிறுகதைகளே எழுதினாலும் காத்திரமான கதைகளின் சொந்தக்காரர்.

போர்க்கால இலக்கியம் பற்றிப் பேசுவோர் ஜபாரை வாகாக மறந்து விடுகின்றனர். எனக்குப் பிடித்த இந்தச் சிறுகதை போர்க்காலத்தைப் பிரதிபலிக்கும் ஆவணங்களில் ஒன்று.

**வேறு ஒருநாள் இரவு**

**மருதூர் பாரி ஆசிரியராக இருந்து வெளியிட்ட முனைப்பு- 2.சித்திரை 1989 இதழில் பிரசுரமான கதை இது. 21/5/ 89ல் இவ்விதழ் வெளிவந்தது.**

**நகைக்கடைகளை அடுத்து மிக நெருக்கமாக மூன்று சினிமா தியேட்டர்கள்**

**என ஆரம்பித்து**

**அந்த சிகப்பு மின் விளக்கு மெல்ல மறையத் தொடங்கியது.**

**என்று முடியும் வேறு ஒருநாள் இரவு சிறுகதையை முனைப்பு-2 இதழை தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

**"தன்னாலை தான் கெட்டதற்கு அண்ணாவி என்ன செய்ய முடியும்?"** என்ற ஒரு பழைய வாக்கியம் ஜபாரை நினைக்கும் தோறும் என்னுள் எழுவதுண்டு.

**28 July 2018**

## பிடித்த சிறுகதை 183

குரும்பசிட்டி என்னும் பெயர் கலை இலக்கிய துறையில் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றது. பட்டியல் இடத்தேவை இல்லாத அழுத்தமான பலரைத் தந்த ஊர். பத்திரிகைத் துறையில் ஈழகேசரி பொன்னையா, இலக்கிய விமர்சனத்தில் கனக செந்திநாதன். நாடகத்துறையில் ஏ.ரி. பொன்னுத்துரை, ஆவணமாக்கல் துறையில் கனகரத்தினம். இப்படியாக பலர்.

அவர்களில் ஒருவர்தான் இவர். 70களில் இவரது பெயரும் கதைகளும் அடிக்கடி பத்திரிகைகளில் இடம் பெறுவதுண்டு. இன்றைய இளைய தலைமுறை இவரை அறிந்திருக்க சாத்தியமில்லை.

நான் ஒரு தடவை தான் இவரைச் சந்தித்தேன். அப்போது அவர் குரும்பசிட்டியில் உள்ள ஒரு அடகு கடையில் வேலையாக இருந்தார்.

**குரும்பசிட்டி மு.திருநாவுக்கரசு.**

24/12/ 1943 ல் பிறந்த இவரின் ஆரம்பகாலம் நாடகத்துறையோடு சம்பந்தப்பட்டது. பின்னரே சிறுகதைத் துறைக்கு வந்தார். சுதந்திரன்

பண்ணையில் வளர்ந்தவர்.

ஐம்பது கதைகள் மட்டில் இவர் எழுதியிருக்கிறார். அவற்றில் அநேகமானவை சுதந்திரனில் வெளிவந்தவை. **வெளிப்பேணி** எனும் முற்போக்கான( 5/3/72 சுதந்திரனில் பிரசுரமான) கதை **சுதந்திரன் சிறுகதைகள்** தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

தினகரன், வானொலி, வானொலி மஞ்சரி, ஈழநாடு ஆகியவற்றில் இவரது கதைகள் பிரசுரமாகியிருக்கின்றன. ஈழநாடு 10 ம் ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் இவரது **ஏமாற்றம்** எனும் கதை பாரட்டுப் பரிசு பெற்றிருந்தது. அப்போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற 20 கதைகளில் **வேட்டை** எனும் எனது கதையும் அடங்கும்.

**இவரது சிறுகதைத் தொகுப்பு**

இவர்களும் மனிதர்கள் 1975 ஜுலையில் வெளிவந்து, அவ்வாண்டுக்கான சாகித்திய விருதைப் பெற்றது. 12 கதைகள் அடங்கிய அத்தொகுப்பு அவர் காலமாகிய 7/7/99 ன் பின் செப்.99 ல் இரண்டாம் பதிப்புக் கண்டது.

**வாழ்க்கை ஒப்பந்தம்**

**13/8/72 தினகரனில் பிரசுரமான கதை இது. மரபு வழி கதை சொல்லல்முறையில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட இவரின் சராசரிக் கதைகளில் இதுவும் ஒன்று.**

**சற்று முன் பலமாய் பெய்த மழை வெகுவாக அடங்கிவிட்டது'**

**என ஆரம்பித்து**

**தியாகு காலடி எடுத்து வைக்கிறான்.**

**என்று முடியும் இக்கதையை அவரது சிறுகதைத் தொகுப்பான இவர்களும் மனிதர்கள் தொகுப்பை தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது பெயரில் எத்தனையோ பேரை நான் அறிந்து வைத்துள்ளேன்.

முதலெழுத்துக் கூட அச்சொட்டாக அமைந்துவிட்ட இரண்டு அரசியல் ஆய்வாளர்களையும் நான் அறிவேன்.

சிறுகதைத்துறையில் மு.திருநாவுக்கரசு என்ற ஒருவரை மட்டுமே நான் அறிந்து வைத்துள்ளேன். த.திருநாவுக்கரசு கூட நாவேந்தன் என்றே அறியப்படுகிறார்.

**29 July 2018**

இவரை 70 களிலேயே நான் அறிவேன். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியலை சிறப்பு பாடமாக கற்றவர். எமது கட்சியின் ஆதரவாளர். தினகரன் பத்திரிகையிலும் பட்டதாரியானதும் கடமையாற்றினார்.

அக்காலத்தில் தினகரனில் பேட்டி காணும் ஒரு பக்கத்தை இவர் செய்தார். குறிப்பாக உழைப்பாளர்களின் பேட்டியாக அது அமைந்திருந்தது. ஏதோ ஒரு காரணத்திற்காக யாழ் வந்த இவரை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி விடுதியில் சந்தித்தேன். அவரது விருப்புக்கமைய ஒரு சீவல் தொழிலாளியின் நேர்காணலை தினகரனுக்கு அனுப்பி வைத்தேன். அந்த நேர்காணல் ஒரு வித்தியாசமான பாணியில் அமைந்திருந்ததாக பின்னாளில் நான் பாராட்டப்பட்டேன்.

**மு.நித்தியானந்தன்**

இவர் பதுளையைச் சேர்ந்தவர். **கலை ஒளி** சஞ்சிகையை வெளியிட்ட முத்தையாபிள்ளையின் மகன்.

தந்தையின் பெயரில் சிறுகதைப் போட்டி ஒன்றை வைத்தார். அப்போட்டியில் பரிசு பெற்றவர்கள் மல்லிகை சி.குமார், மு.சிவலிங்கம்.

பொருளியல் பட்டதாரியான இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். அக்காலத்தில் **வைகறை** எனும் வெளியீட்டகத்தின் மூலம் இரண்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டார். **1. நாமிருக்கும் நாடே.1979. தெளிவத்தை ஜோசப். 2. ஒரு கூடைக்கொழுந்து.1980. என்.எஸ்.எம். ராமையா.** இரண்டு தொகுதிகளுமே சாகித்தியப் பரிசைப் பெற்றுக்கொண்டவை. அரசியல் காரணமாக சிறையில் அடைக்கப்பட்ட இவர் தற்போது லண்டனில் வாழ்கிறார். அங்கும் தனது எழுத்துச் சேவையை அவர் தொடர்கிறார்.

சில காலத்திற்கு முன் **துங்கிந்தச் சாரலிலே** எனும் தொடரை ஒரு பதுளைக்காரனின் குறிப்பாக தினகரனில் எழுதினார். லண்டனிலிருந்து2001ல் பத்மநாபஐயர் வெளியிட்ட **கண்ணில் தெரியுது வானம்** தொகுப்புக்கு ஒரு காத்திரமானதும், விமர்சனத்துக்கு உரியதுமான **கண்ணில் தெரியவில்லை வானம்** என்னும் கட்டுரையை எழுதியிருந்தார். இவரது மலையகம் சம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய **கூலித் தமிழ்** எனும் நூல் **க்ரியா** வெளியீடாக 2015ல் வந்து கனடா இலக்கியத் தோட்ட விருதைப் பெற்றுள்ளது.

சமீபத்தில் இவரது நூல் விமர்சன உரைகள் லண்டனில் இடம்பெறுகின்றன. **1.பிரமீளா பிரதீபனின் கட்டு பொல் நாவல். 2. மு.தயாளனின் புளியமரம் சிறுகதைத் தொகுதி.**

தனது சிறுகதை எழுத்துப் பற்றிய இவரது கூற்று.

**“நான் ஐந்தாறு கதைகள் எழுதியிருப்பேன். முடிவு தெரிந்தது என்ற எனது முதற்கதை வீரகேசரியில் வெளியானது. தங்கவடிவேல் மாஸ்டரிடம் காட்டி, அவரது உற்சாகத்தில் நான் பிரசுரத்திற்கு அனுப்பினேன். வீரகேசரி நடத்திய மலையக சிறுகதைப் போட்டியில் ஒரு கதை**

ஆறுதல் பரிசும் பெற்றுள்ளது. வாழ்ந்த காலங்கள் போதும், ஒன்றும் ஒன்றும் இரண்டல்ல, அலைகள் ஓய்வதில்லை, துணை என்றொரு பொய், ரத்தங்கள் மண்ணில் கலப்பதில்லை ஆகியன நான் எழுதிய சிறுகதைகள். கீனாக் கொலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின்போது பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்த தொழிலாளர்களை மையமாக வைத்து , புரட்சிகர மார்க்சிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட கதை அது. பதுளையில் வெளியான பூங்குன்றம் என்ற சஞ்சிகையில் வெளியாகி, பலமுறை மறுபிரசுரம் பெற்ற கதை, மலையகச் சிறுகதைகள் என்ற துரைவி வெளியீட்டில் உள்ளது. அதற்குப்பின் நான் சிறுகதைகள் எழுதியதில்லை."

ரத்தங்கள் மண்ணில் கலப்பதில்லை

பதுளையில் வெளிவந்த பூங்குன்றம் சஞ்சிகையில் பிரசுரமான கீனாக்கொலை போராட்டம் பற்றிய இக்கதை பலமுறை மறுபிரசுரம் பெற்றது.

ஊதைக்காற்று ..கிழவனுக்குத் தூக்கம் வரவில்லை.

என ஆரம்பித்து

கிழவன் ஆத்திரத்தோடு நிமிர்ந்த போது மங்கிய நிலவொளியில் செங்கொடி பறப்பது தெரிகிறது.

என்று முடியும் இக்கதையை 2005 ல் துரைவி வெளியிட்ட மலையகச் சிறுகதைகள் தொகுப்பிலும். 2005ல் தமிழர் தகவல் வெளியிட்ட ஈழத்துச் சிறுகதைகள் பொங்கல் சிறப்பிதழிலும் வாசியுங்கள் நண்பர்களே.

சென்ற ஆண்டு இலங்கை வந்த நித்தி என்னைப் பார்க்க என் பர்ணசாலைக்கு வந்திருந்தார். பழைய நட்பு எம்மிடம் இன்னும் இருக்கிறது, கருத்து முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டு.

29 July 2018

இவரை நான் சந்தித்ததில்லை. ஒரு தகவலின்படி இவர் திருகோணமலை பரமேஸ்-கோணேஸ் மெல்லிசைக் குழுவில் கிற்றார் வாத்தியக் கலைஞராக இருந்திருக்கிறார் என அறிகிறேன்.அவர்களின் மேடை நிகழ்ச்சிகளில் இவரைக் கண்டிருக்கலாம்.

எஸ்.பொ.உபாசகர்கள் பலரில் இவரும் ஒருவர். லத்தீன் மொழியிலும் பரிச்சயம் உள்ளவர். விரும்புவது இசை. வெறுப்பது பொன் (புண்) ஆடை என்பது இவர் கூற்று.

**அ.ச. பாய்வா**

கொட்டியாரம் என்னும் மூதூர் இவர் பிறந்த ஊர். 1948 ல் பிறந்த இவர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலை, மாத்தளை புனித தோமையார் கல்லூரி, திருகோணமலை புனிதவளனார் கல்லூரி (St.Joseph College) ஆகியவற்றின் பழைய மாணவர். க.பொ.த பரீட்சையை ஆங்கிலத்தில் எழுதியவர்.

**மூதூர் ஜெயராஜ்** எனும் பெயரில் வானொலியில் மெல்லிசைப் பாடல்கள், நாடகங்கள் பலவற்றை எழுதியவர்.

இவரது மனைவியின் ஊர் கதிரவெளி. இவரின் பல கதைகள் கதிரவெளியைப் பிரதிபலிப்பன. கிராமசேவகராக கடமையாற்றிய இவர் ஓய்வு பெற்றுள்ளார். மட்டக்களப்பில் வாழ்கிறார். விளையாட்டு, இசை, இலக்கியம் இவரது விருப்பமான துறைகள். சுமார் 20 கதைகள், 50 கவிதைகள் எழுதியுள்ளார்.

இவரது முதல் கதை **புதிர்**, **மூதூர் ஜெயராஜ்** எனும் பெயரில் மூதூர் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய ஆண்டு மலரொன்றில் 1971ல் பிரசுரமாகியது.

தேனகம், மித்திரன், சிந்தாமணி, தொண்டன் ஆகியவற்றில் எழுதினார். சில போட்டிகளில், கவிதைக்காகவும், கதைக்காகவும் பரிசு பெற்றுள்ளார். வீரகேசரி பவள விழா சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை **இரண்டாவது அலை** இரண்டாம் பரிசு பெற்றுள்ளது.

**இவரது சிறுகதைத் தொகுதி**

ஆத்மவிசாரம் இத்தொகுப்பில் இரண்டாவது அலை சிறுகதையும் உள்ளது. 13 கதைகள் அடங்கிய இத்தொகுதி மறுகா வெளியீடாக 2008ல் வெளிவந்து அவ்வாண்டுக்கான சாகித்திய விருதைப் பெற்றுக் கொண்டது.

**ஒரு கிராமத்தின் கதை**

**2002ல் பிரசுரமான இக்கதை பேராசிரியர் ஒருவரால் சி.வைத்தியலிங்கம் அவர்களின் பாற் கஞ்சி எனது ஒரு நாள்பொழுது கதையுடன் ஒப்பிட்டு சிலாகிக்கப்பட்டுள்ளது. போர்ச் சூழலில் முன்னரை விட பல நெருக்கடிகளை அனுபவித்து வறுமையில் புரள்கின்ற குடும்பமொன்றின் தற்காலிக மகிழ்ச்சியையும் இனிமையான கனவையும் உணர்ச்சிப் பாங்குடன் வெளிப்படுத்துவதாக இக்கதைபற்றிக் பேராசிரியர் குறிப்பிடுகிறார்.**

**முதுவேனிற் காலத்து வெப்பத்தின் முழுப் பரிமாணத்தையும் எனத் தொடங்கி,**

**மல்லிகை மொட்டுச் சங்கிலியை ஆசைதீர ஒருதரம் தடவிப் பார்த்து கொண்டாள்.**

**என்று முடியும் இக்கதையை இவரின் ஆத்ம விசாரம் சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

பாய்வா என்னும் எழுத்தாளரின் சிறுகதைத் தொகுதியை மிகச் சமீபத்தில் தான் வாசித்தேன். அதில் வந்திருந்த கதைகள் ஏற்கனவே உதிரியாக நான் வாசித்தவையே.

**31 July 2018**

நாடக,சினிமா, தொலைக்காட்சி நாடக, நாவல் என பல்துறை ஆளுமை கொண்டவர் இவர். தான் பிறந்த ஊரை தன் பெயரோடு சேர்த்துக் கொண்டவர். கொழும்பை வாழ்விடமாகக் கொண்டவர். மாத்தளை என்றதும் நினைவில் வரும முக்கிய ஆளுமை. மிக குறைந்த சிறுகதைகளே எழுதியவர்.

**மாத்தளை கார்த்திகேசு**

மாத்தளையில் பிறந்த கார்த்திகேசு மலையக நாடகக் கலையுலகின் முன்னோடிகளில் ஒருவர். மாத்தளை விஜே கல்லூரியிலும், கிறிஸ்த்தவ தேவாலய கல்லூரியிலும் கல்வி கற்றவர். இருபத்தைந்துக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி நடித்து தேசிய அளவிலான விருதுகளைப் பெற்றவர். தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய திரைக்கதை வசனம் எழுதும் போட்டியில **சுட்டும் சுடர்கள்** என்னும் திரைக்கதைக்கு இரண்டாம் பரிசு பெற்றவர். 1974ல் **களங்கம்** 1975ல் **போராட்டம்** 1976 ல் **ஒரு சக்கரம் சுழல்கிறது** எனும் நாடகங்கள் தேசிய நாடகவிழா போட்டிகளில் பரிசையும்

பாராட்டையும் இவருக்குப் பெற்றுத் தந்திருக்கின்றன. **காலங்கள்** எனும் இவரது தொலைக்காட்சி நாடகம் முதல் மலையக நாடகம் எனும் பெருமையைப் பெற்றது. **குடும்பம் ஒரு கலைக்கதம்பம்** என்பது இவரது மற்றொரு தொலைக் காட்சி நாடகம். காமன் கூத்தையும் தொலைக்காட்சிக்காகத் தயாரித்தளித்துள்ளார். இவர் எழுதி தயாரித்து நடித்த ஈழத்துத் திரைப்படம் **அவள் ஒரு ஜீவநதி** (1980). இவர் எழுதிய நாவல் **வழி பிறந்தது** (1992). மலையக எழுத்தாளர் சங்க இணைச்செயலாளராக இருந்தவர். **தகவம்** தலைவராக பதவி வகிப்பவர். 1998 ல் இந்து கலாசார அமைச்சு நடத்திய சாகித்திய விழாவில் **கலாஜோதி** விருது பெற்றார். மல்லிகை 95 ஜூன் இதழ் இவரது அட்டைப்படத்தை வெளியிட்டு கௌரவப்படுத்தி உள்ளது. தனது குறிஞ்சி வெளியீட்டின் மூலம் 10 க்கு மேற்பட்ட நூல்களை வெளியிடுள்ளார். அதன் முதல் வெளியீடு **கதைக்கனிகள்** இரண்டாம் பதிப்பு. 1991.

**எளிய உள்ளங்களின் பேராசைகள்**

**1978ல் எழுதப்பட்ட இச்சிறுகதை எங்கு பிரசுரமாகியது என்ற தகவல் எனக்குக் கிட்டவில்லை. எழுதியவரிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.**

**மௌனத்தின் தவக்கோலத்தினைக் கலைத்தது யார்?**

**என ஆரம்பித்து**

**சாப்பாட்டின் முன்னால் முத்துசாமி தூயவனாக குந்தினான்.**

**என்று முடியும் இக்கதையை துரைவி வெளியிட்ட உழைக்கப் பிறந்தவர்கள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

பிந்தி வரும் இளம் கலைஞர்களுக்கு உந்து சக்தியாக விளங்கும் கார்த்திகேசு சோர்வே இல்லாத ஒரு கலைஞர். பண நஷ்டம், மனக் கஷ்டம் இவரைப் பாதித்த போதும் சமாளித்துக் கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவர்.

**1 August 2018**

இவர் மாத்தளையைப் பிறப்பிடமாக கொண்டவர். தான் இந்துவாக இருந்து முஸ்லிமாக மாறியவர் என்பதை ஒப்புக் கொள்பவர். கேரள வம்சாவழியினர். மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் என்றும் அறியப்படுபவர். தமிழுக்கு வளம் சேர்க்கும் மூத்த கலைஞர்.

**அல் அஸூமத்**

ஈழத்துக் கவிஞர் , ஈழத்து எழுத்தாளர், கலாபூஷணம், மலையகத்தைச் சேர்ந்தவர். இவர் இலங்கையின் மூத்த படைப்பாளிகளில் ஒருவரும் சிறந்த தமிழ் அறிஞரும் ஆவார்.

இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் நான்கு வருடங்களுக்கும் மேலாக **கவிதைச் சரம்** நிகழ்ச்சியை நடாத்தி வந்தவர். இவரது இந் நிகழ்ச்சி பல கவிஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. தொலைக் காட்சி, வானொலி, மேடைக் கவியரங்குகள் பலவற்றில் தலைமை வகித்த அனுபவமிக்கவர்.கலையுலக வாழ்வு:

இவர் தமிழ் நாடு , சென்னை , ரஹ்மத் அறக்கட்டளையினர் உலகளாவிய ரீதியில் நடத்திய முகம்மது நபிகள் (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்று நூலுக்கான கைப்பிரதிப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றவர். இவரது இக் கைப்பிரதி ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுக்கான பிரதியாக அறிஞர் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

இவர் முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களால் **கவித் தாரகை** விருது வழங்கியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணியினரால் 2008 இல் **இலக்கிய சாகரம்** பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டவர். காயல்பட்டினத்தில் தமிழ்நாடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் நடத்திய 13வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் **தமிழ் மாமணி** விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மூன்று இலங்கையருள் இவரும் ஒருவர்.

பரிசுகளும் விருதுகளும்: வீரகேசரி பவள விழா சிறுகதைப் போட்டியில் நிலத்தாய் பரிசு பெற்றது. யாழ். இலக்கிய வட்டத்தின் மிகச் சிறந்த கவிதை நூலுக்கான விருது (குரல் வழிக் கவிதைகள், கவிதைத் தொகுப்பு 2009), வெள்ளை மரம்( சிறுகதைத் தொகுப்பு, தேசிய அரச சாஹித்திய விருது, 2002, சிரித்திரன் சுந்தர் நினைவு விருது, முஸ்லிம் எழுத்தாளர் தேசியக் கவுன்சில் விருது புலராப் பொழுதுகள், (குறுங்காவியம், 1984). தமிழியல் விருது, இலக்கியப் பேரவை விருது (அறுவடைக் கனவுகள் நாவல் 2010). கொடகே சாகித்திய விருது (ஆய் அன்னை அம்மா தாய் சிறுகதைத் தொகுப்பு 2010).

பட்டங்கள்:இலக்கிய சாகரம் - பட்டம் (ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணியினரால் - 2008 ), கவித் தாரகை - (முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களால்)

**வெளிவந்த நூல்கள்:**

மலைக்குயில் (கவிதைகள்,கல்ஹின்னை தமிழ் மன்றம் 1987), குரல் வழிக் கவிதைகள் (கவிதைத்தொகுப்பு 2009), வெள்ளை மரம் (சிறுகதைகள், துரைவி, 2002),புலராப் பொழுதுகள் (குறுங்காவியம், 1984), அறுவடைக் கனவுகள் நாவல்(2010).

இதுவரையில் 56 கதைகள் மட்டில் எழுதியுள்ளார். இவரது முதற்கதை பூவின்காதல் 1964 ல் விரகேசரியில் பிரசுரமானது. வீரகேசரி ,தினகரன், சிந்தாமணி, தினக்குரல், மல்லிகை, திசை, அலை, ப்ரியநிலா, புதுச்சுவர், பார்வை, தாயகம், இது போல் பல இதழ்களில் கதைகள் எழுதியுள்ளார். இவரது இலக்கியப் பிரவேசம் 1958 ல் நிகழ்ந்தது. மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் இவர் ஈடுபாடு காட்டியவர்.

**விரக்தி**

**1993ல் கலை ஒளி முத்தையாப் பிள்ளை சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு 7500 /-பெற்ற கதை இது.**

**1999 ல் புதுடில்லி காதா விருது பெற்று பல மொழிகளில் வெளிவந்த கதை.**

**வீரகேசரி பரிசுக்கதைகளிலும், செ.யோகநாதன் வெளியிட்ட வெள்ளிப் பாதசரம் தொகுப்பிலும் இடம் பெற்ற கதை.**

**சொந்தமாக அந்தக் குத்தகைப் பூமிக்கு..**

**என ஆரம்பித்து**

**“இனி எப்ப வருவீங்க? ”**

**என்று முடியும் இக்கதையை சாகித்திய விருது பெற்ற இவரது வெள்ளை மரம் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

இவருக்கு இன்னொரு பெருமை, மகனைப் படைப்பாளியாகக் கண்டமை பெரிது உவக்கும் வாப்பாவும் மகனும்.

**1 August 2018**

இவரைப் பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏலவே இருந்தது. சமீபத்தில் இன்னொருவர் பற்றி எழுத முனைந்த போது அந்த எண்ணம் மேலும் வலுப்பட்டது.

89 காலகட்டத்தில் இவர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட ஒரு காத்திரமான சஞ்சிகை இவர் பெயரை இன்றுவரை (நின்று போனலும்) நிலை நிறுத்தி வருகிறது. ஏனைய பிரதேசத்தவரோடு அம்பாறை மாவட்டத்தின் முக்கிய ஆளுமைகளும் அந்தச் சஞ்சிகையில் எழுதியிருந்தார்கள். அவர்களில் சிலர் இவரையும், இவர் வெளியிட்ட சஞ்சிகையையும் மறக்கவே மாட்டார்கள்.

மருதூர் பாரி.

மருதமுனையில் பிறந்த S.H.V.M. பாரி மௌலானா. ஒரு கலைப் பட்டதாரி. ஆசிரியராகி, பிரதி அதிபராகி (மருதமுனை அல்மனார்) அதிபராகியவர மருதமுனை அல்ஹம்ரா). இலக்கியத் துறையில் மிகுந்த நாட்டமுள்ள மருதூர் பாரி மிக குறைவாகவே எழுதினார். தனது இலக்கிய நண்பர்களை உதவி

ஆசிரியர்களாக இணைத்து **முனைப்பு** எனும் சஞ்சிகையை 1989 ல் ஆரம்பித்தார். மிகச் சிரமத்துடன் 12 இதழ்களை அவரால் கொண்டுவர முடிந்தது.

**மறுகரையின் நிறம்** என்றொரு நாவலை முதலாவது இதழில் இருந்து எழுதத் தொடங்கினார். அவரது மறைவுடன் அந்நாவல் நிறைவு பெறாது நின்றுவிட்டது.

12 ஆவது இதழ் மருதூர்க்கொத்தனின் அட்டைப் படத்தைத் தாங்கி 2004 ல் வெளிவந்திருந்தது. ஆசிரியர்கள் மருதூர்பாரி, எம்.ஐ.எம்.றஊப் எனக் குறிப்பிட்டிருந்தாலும். நாவல் தொடர்ச்சி இடம்பெறவில்லை. முகவரியும் மாறி இருந்தது.

அக்காலத்தில் அவர் மௌத்தாகி இருக்கவேண்டும். அதன் பிறகு முனைப்பும் மரணித்து விட்டது.

பலி

**15/12/1963 சுதந்திரனில் பிரசுரமான கதை இது.**

**ஸ்திரி லோலனான போடியார் ஒருவரினால் பலி யாகிப்போன பாத்திமாவின் கதை.**

**"மாமா என்னைக் கூப்பிட்டு வரக்காட்டினீங்களாம்?"**

**என ஆரம்பித்து**

**ஆனால் போடியாருக்கு மட்டும் தெரியும் பாத்திமாவின் முடிவின் மர்மம்.**

**என்று முடியும் பலி கதையை, சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

மருதூர்பாரியின் எந்தப் படைப்புகளும் நூலுருவாகவில்லை. ஆனால் அவரது பெயர் **முனைப்பு** சஞ்சிகையால் எப்போதும் நினைவு கூரப்படும்.

**2 August 2018**

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடக்கும் அனேக நிகழ்ச்சிகளின் தொகுப்பாளர் இவர்தான். கணீரென்ற குரலில் தமிழ், ஆங்கிலத்தில் இவர் குரல் பெரிதாக ஒலிக்கும். இடையிடை நகைச்சுவை கலந்து மக்களை ஈர்க்கும் வகையில் ஒலிவாங்கியை பயன்படுத்திய ஒருவர். தினகரன் விளையாட்டு விழாவில் இவரது குரலால் கவரப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன்.

**தேவன் - யாழ்ப்பாணம்**

(பிறப்பு -செப்டம்பர் 27, 1924. இறப்பு -டிசம்பர் 25, 1982) மேற்படி பெயரில் எழுதி வந்த இளையப்பா மகாதேவா ஈழத்து எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியரான இவர் புதினங்கள், நாடகங்கள், சிறுகதைகள், அறிவியல் புதினங்கள், கட்டுரைகள் எனப் பலதும் எழுதி வந்தவர்.

இளமைக் காலமும், பணியும்: நாவலர் வீதியில் வாழ்ந்து வந்தவர். இலண்டன் மெட்ரிக்குலேசன்

சோதனையில் சித்தியடைந்து தனது 19வது அகவையில் உடுவில் மான்ஸ் பாடசாலையில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் மகரகமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சி பெற்று, உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார். தேவன் தனது 58வது அகவையில் ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இன்று பிரபலமாக இருக்கும் பலர் அவரது மாணவர்கள். பல எழுத்தாளர்களை உருவாக்கியவர்.

எழுத்துலகில்: தேவன் யாழ்ப்பாணம் 1944 ஆம் ஆண்டு முதல் எழுதி வந்தார். இவர் எழுதிய சிறுகதைகள் ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு, பிரசன்ட விகடன், கலைச்செல்வி முதலான இதழ்களில் வெளிவந்துள்ளன.

ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறைகளை வைத்து **கேட்டதும், நடந்ததும்** என்ற புதினத்தை எழுதினார். தமிழகத்தின் சுதர்சன் வெளியீட்டாளர்கள் இவரின் **வாடிய மலர்கள்** என்ற புதின நூலை வெளியிட்டார்கள்.**காந்தியக் கதைகள்** என்ற தொகுதியிலும் (1969) இவரின் சிறுகதைகள் இடம்பெற்றன. யாழ்ப்பாண எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவராகவும் செயற்பட்டிருக்கின்றார்.

அக்காலத்தில் ஆனந்த விகடன் இதழின் ஆசிரியராக இருந்த நகைச்சுவை எழுத்தாளர் தேவனிடம் இருந்து வேறுபடுத்துவதற்காக தேவன் - யாழ்ப்பாணம் என்ற பெயரைத் தன் புனைப்பெயராக வைத்துக் கொண்டார். **டிரசர் ஐலண்டு** என்னும் பிரபல ஆங்கிலப் புதினத்தை **மணிபல்லவம்** என்ற பெயரில் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். இந்நூல் அக்காலத்தில் உயர்தர வகுப்புப் பாடப் புத்தகமாகப் பயன்படுத்தப்பட்டது.

மொழிபெயர்ப்பாளர்: ஆங்கிலப் பேச்சாளர்களின் உரைகளை சமகாலத்தில் தமிழில் மொழிபெயர்ப்பதில் வல்லவராக இருந்தார் தேவன்.ஜெயபிரகாஷ் நாராயணன் யாழ்ப்பாணம் வந்தபோது அவரது பேச்சை தமிழில் மொழிபெயர்த்துப் பாராட்டைப்

பெற்றார்.பிரதமர் டட்லி சேனநாயக்காவின் யாழ்ப்பாணப் பயணங்களில் அவரின் பேச்சுக்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

**இவரது படைப்புகள்**

எழுதிய நாடகங்கள்: தென்னவன் பிரமராஜன்,விதி, இரு சகோதரர்கள், பத்தினியா பாவையா, வீரபத்தினி, நளதமயந்தி,

புதினங்கள்: வாடிய மலர்கள், மணிபல்லவம்(மொழிபெயர்ப்பு, கேட்டதும் நடந்ததும் (1956, 1965),அவன் சுற்றவாளி (குறும் புதினம், 1968),சிறுகதைத் தொகுதி:தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள் (2004.யா.இ.வட்டம்),

கட்டுரை நூல்: வானவெளியில் (அறிவியல் கட்டுரைகள் ).

**மனச்சாட்சியின் தண்டனை**

**1/2/1959 சுதந்திரனில் பிரசுரமனது இக்கதை. பின்னர் சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்புகளில் இடம் பெற்ற கதை.**

**வேலாயுதத்தின் தலமுறை தேய்ந்து வருகிறது.**

**என ஆரம்பித்து**

**அவன் மனச்சாட்சி அவனைக் கொன்றே விட்டதே**

**என்று முடியும் இக்கதையை 10 கதைகள் அடங்கிய சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியிலும், 109 கதைகள் அடங்கிய சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

இத் தொடரை எழுதுவதற்கு பலரது துணையை நான் பெற்றுக் கொள்ளுகிறேன். தேவன் அவர்களை நான் எழுத வ.ந.கிரிதரனின் கட்டுரையும் எனக்கு உதவியதை நான் சொல்லித் தானாக வேண்டும். உண்மையில் இவர் எனது வரிசையில் 50க்குள் ஒருவராக வந்திருக்க வேண்டும். ஒரு ஒழுங்கு முறையை நான் பின்பற்றவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

**3 August 2018**

இவர் ஒரு கத்தோலிக்கர். ஆனால் ஜோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர். புனை பெயரில் பல ஜோதிட சம்பந்தமான கட்டுரைகளை எழுதியவர், எழுதி வருபவர். இவரது பெயரை 70களிலிருந்து நான் அறிவேன்.

2011 கிழக்கு மாகாணா இலக்கிய விழாவில், ஊடகத் துறைக்கான முதலமைச்சர் விருது பெற வந்த சமயத்தில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் தங்கி இருந்தபோது இவரை முதன் முதலாகச் சந்தித்தேன். அவ்வருட ஆக்க இலக்கியத் துறைக்கான முதலமைச்சர் விருது எனக்குக் கிடைத்திருந்தது.

**எஸ். ஜோன்ராஜன்**

1941/12/29ல் பிறந்த சூசைப்பிள்ளை ஜோன்ராஜன், இப்போது அக்கரைப்பற்றில் வாழ்கிறார்.

1963ல் இருந்து பத்திரிகைத் துறையில் ஈடுபாடு காட்டிவரும் இவர், வீரகேசரி நிறுவனத்தின் உதவி ஆசிரியராகவும், தினகரன் ஆசிரிய பீடத்தின் செய்தி ஆசிரியராகவும், மட்டக்களப்பு **எஹெட் கரித்தாஸ்** நிறுவனத்தின் சமாதான இணைப்பாளராகவும்

இருந்தவர்.

வீரகேசரி, தினக்குரல், தினகரன். கனடா உதயன், லண்டன் தீபம் ஆகியவற்றில் எழுதி வருகிறார். 150 க்கு மேற்பட்ட சிறுகதைகள், 100 க்குமேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர். ஜோதிடக் கட்டுரைகளை **திருவோணம்** என்ற பெயரில் எழுதுகிறார். எஸ்.ஜோன்ராஜன் என்றும் அறியப்படுகிறார்.

**இவரது வெளிவந்த நூல்கள்.:**

போடியார் மாப்பிள்ளை(நாவல்,1976,வீரகேசரி, சாகித்திய மண்டல பரிசு), ஒரு கிராமத்து அத்தியாயம் (நாவல், 2017, அக்கரைப்பற்று, அணிந்துரை கலாநிதி ஜெய்சங்கர்).

தீட்டு

**இக்கதை, ஜுன் 1971. மல்லிகையில் பிரசுரமாகி இருந்தது. இக்கதைக்கு சில சிறப்புகள் உண்டு.**

**மல்லிகை நடத்திய சிறுகதைப்போட்டி 1971ல் முதற் பரிசு பெற்ற கதை இது. போட்டி நடுவர்கள் ஏ.ஜே, மு.தளயசிங்கம், டொமினிக் ஜீவா.**

**சாதித் திமிர்பிடித்து, ஒடுக்கப்பட்டவர்களை தேர் வடம் பிடிக்க மறுக்கும் யாழ் சாதி இந்துக்கள், (இப்போது இயந்திரத்தின் முலம் தேர் இழுக்கும் நிலை). 70பது களில் கத்தோலிக்கர்களிடமும் அது இருந்திருக்கிறது. அதிலும் கிழக்கு மாகாண தன்னாமுன்னைக் கிராமத்தின் சூசையப்பர் கோவிலில் நாவித சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூடு காவியதால் ஏற்பட்ட சாதி வெறிச் சம்பவங்களை விபரித்த முக்கிய கதை இது.**

**சுற்றுப் பிரகாரம் ஆரம்பமாகப் போகிறது**

**எனத் தொடங்கி**

**இதைக் கேட்டு நின்ற தேவசகாயமும் ஆரோக்கியமும் திகைப்போடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.**

**என்று முடியும் இக்கதையை மல்லிகை சிறுகதைகள் இரண்டாவது தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

பிரமிள் போல ஜோதிட நம்பிக்கையுள்ள இவரைப் போல் எத்தனை எழுத்தாளர்கள் நம்மிடையே உள்ளனரோ நான் அறியேன்.

**4 August 2018**

சமீபத்தில் எனது ஆரம்பகால நண்பர் கனடா வாசி தர்மகுலசிங்கத்துடன் எனைக் காண இவர்யாழ்ப்பாணத்திலிருந்து, திருகோணமலை வந்திருந்தார். இவரைப் பற்றி எழுத எனக்கு மிகுந்த விருப்பு இருந்தது. இவர் என் ஊரவர். இவரது ஆரம்பகால இலக்கிய பயணத்தில் நானும் கூட நடந்தவன். முற்போக்கு சிந்தனையாளன்.

**மு.அநாதரட்சகன்**

யாழ்ப்பாணம் அல்வாயில்17.7.55இல் பிறந்த மு.அநாதரட்சகன் முருகேசு இராஜநாயகம் எனும் இயற்பெயர் கொண்ட இவர், அநாதரட்சகன் பெயராலேயே இலக்கியவாதிகள் மத்தியில் அறியப்பட்டவர். யாழ். பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான இவர் ஆசிரியர் நியமனம் பெற்று கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர்.

சமீபத்தில் தனது உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.சிறுகதை, கட்டுரை இவரது இயங்கு தளம்.

இவரது இலக்கியப் பிரவேசம் 1980ல் சுடர் சஞ்சிகையில் எழுதிய **உணர்வுகள் உறங்குகின்றன** என்ற சிறுகதையுடன் ஆரம்பமாகிறது.

மல்லிகை,ஈழநாடு,சிந்தாமணி, தாயகம், ஜீவநதி ,யாதும், தினக்குரலில் இவரது எழுத்துகள் பிரசுரமாகி இருக்கின்றன. யாருடைய வழிகாட்டலுமின்றி தான் நேசிக்கும் மார்க்சிய சிந்தனை வழியில் தனது எழுத்துகளை முன்னெடுக்கும் ஒருவர்.

இதுவரை 30க்கு மேற்பட்ட கதைகளையும், பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தொடர்ந்து எழுதி வருகிறார்.

**இவரது வெளிவந்த நூல்கள்:**

நிமிர்வு (சிறுகதைகள், 2012. கொடகே), சமூகவெளி தரிசனங்களும் பதிவுகளும் (கட்டுரைகள் 2015, ஜீவநதி).

**பலியாடுகள்**

**தாயகம் ஒக்ரோபர் 2017 இதழ் 92ல் பிரசுரமான கதை இது. ஒரு பாடசாலையின் புதிய கட்டட திறப்பு விழா சம்பவங்களை அம்பலப்படுத்தும் கதை**

**இன்று அந்தப் பாடசாலையின் சூழல் என்றுமில்லாதபடி களை கட்டியிருந்தது.**

**என ஆரம்பித்து**

**பெயர்ப் பலகை தனது இருப்பின் அர்த்தத்தினை இழந்து போய் கவனிப்பாரற்று மூலையில் கிடந்தது.**

**என்று முடியும் இக்கதையை தாயகம் 92வது இதழில் (ஒக்ரோபர் 2017) வாசியுங்கள் நண்பர்களே.**

முற்போக்கு இலக்கியம் காணமற் போய்விட்டது என சிலர் குதூகலிக்கின்றனர். இல்லை. அது இன்னும் உயிரோடு இருக்கிறது என நிரூபிப்பவை இவரது சிறுகதைகளும், கட்டுரைகளும்.

**4 August 2018**

60களில் இவர் ஒரு தமிழ்ப் பெயருடன் எனது பேனா நண்பராக இருந்தவர். புதிய நகரம். அநுராதபுரம் எனும் முகவரியிலிருந்து ஒரு முறை ஒரு போஸ்காட் சைஸ் கறுப்பு வெள்ளை புகைப்படத்துடன் என்னோடு தொடர்பாக இருந்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பஞ்ச பாண்டவர்களில் ஒருவர். இப்போது எனது முகநூல் நண்பர்களில் ஒருவர்.

**அன்பு ஜவஹர்ஷா**

இவர் எங்கள் சம வயது உடையவர். அநுராதபுரவாசி. இவரது தந்தை **அன்புதாசன்** என இலக்கிய உலகில் அறியப்பட்டவர். ஆரம்ப காலத்தில் கையெழுத்துச் சஞ்சிகைகளில் துப்பறியும் கதைகள் எழுதி தன்னைக் வளர்த்துக் கொண்டவர். ராதா, மித்திரன், சுடர் சஞ்சிகைகளில் சிறுவர் கதைகளும் எழுதியுள்ளார். ஆனால் இலங்கையில் புதுக்கவிதை அறிமுகமான காலத்தில் இவரது பெயர் பிரபலமாக இருந்தது.

**வானம்பாடி** அமைப்பினருடன் நெருங்கிய தொடர்பாக இருந்ததோடு தமிழக இலங்கை நட்புறவை ஏற்படுத்தியவர்.

**பொறிகள்** எனும் பல கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பு இவருக்கு நல்ல பெயர் கொடுத்தது. **காவிகளும் ஒட்டுண்ணிகளும்** இவரை புதுக்கவிதைக்காரராகப் பிரகடனம் செய்தது. ஆசிரியராகி, அதிபராகி ஓய்வு பெற்றுள்ள இவரை முகநூல் நண்பர்கள் நன்றாக அறிவார்கள்.

இளம் எழுத்தாளர்களை, இலக்கிய சஞ்சிகைகளை அநுராதபுர மாவட்டத்தில் உருவாக்குவதில் முனைப்புடன் ஈடுபடுபவர். கல்வித்துறையில் இவர் ஆற்றிய பணிக்காக பல கௌரவங்களைப் பெற்றவர்.

மல்லிகை சஞ்சிகை இவரை அட்டைப்படமாக்கி கௌரவித்துள்ளது.

**நஸீமா ஒரு தனி மரம்**

**1973 பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மலரில் வெளியான கதை இது.**

**தனது ஆரம்பக் கதைகளில் ஒன்றான இக் கதை சிறுகதைதானா என்கிற ஐயம் கதை எழுதியவருக்கு இன்னும் இருக்கிறது.**

**தனது கடைசிக் கதை இது என இவர் இக் கதையைக் குறிப்பிடுகிறார்.**

**அந்த வீட்டுக்குள் இருந்து இப்படியான சத்தங்கள்தான் கேட்க முடியும்'**

**என ஆரம்பித்து**

**நஸீமா என்ன செய்ய முடியும்? அவள் ஒரு தனிமரம்.**

**என்று முடியும் இக் கதையை 1973 ஆசிரியர் கலாசாலை சஞ்சிகையில் வாசியுங்கள் நண்பர்களே.**

90 ம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் போது தனது சேகரத்திலிருந்த எழுத்துகள் அனைத்தையும் இழத்துபோய் இப்போது நண்பர்களிடமிருந்தே பெற்றுக் கொள்வதாகக்

கூறுகிறார்.

முகநூலில் ஏதோ சிலவற்றை நான் எழுதுகிறேன் அவ்வளவே.

ஆனால் அன்புஜஹர்ஷா முகநூல் மூலம் ஆற்றும் பணியின் முன் என் எழுத்தெல்லாம் மிக மிக சாதரணமானவை.

அவர் பணி தொய்வின்றித் தொடரட்டும்.

**6 August 2018**

70 களின் நடுக்கூற்று. இரண்டு இளம் நண்பர்கள் அளவெட்டியில் இருந்து என்னைப் பார்க்க சைக்கிளில் அல்வாய்க்கு வந்தார்கள். புதுசு கள். ஒருவர் பாலசூரியன். மற்றவர் இவர்.

சமகாலத்தில் இவரின் தகப்பனின் இளம் நண்பனாகவும், மகனின் தோழனாகவும் (இன்றுவரை) இருப்பவன் நான்.

**ஆதவன்**

1955ல் அளவெட்டியில் பிறந்த ஆதவன் மரபுக்கவிஞரும் நாடகவாளருமான கவிஞர் கதிரேசர்பிள்ளையின் மகன். பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் பட்டதாரி.

சில காலம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றியவர் இருந்தவர். இடதுசாரி சிந்தனையாளர்.

தனது சுயவிருப்பின் அடிப்படையில் தமிழ் இயக்கமொன்றில் இணைந்து கொண்டவர். இன்று அவ்வியக்கம் இல்லாது போய்விட்ட போதும் தான் கொண்ட விசுவாசத்துடன் பயணிப்பவர்.

மாற்றுக் கருத்துள்ளவர்களையும் அவர்களது நேர்மையான விசுவாசத்திற்காகப் போற்றுபவர். இவர் இந்தியாவில் இருந்த காலத்தில் தனது முக்கிய இயங்கு தளமான நாடகச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தியவர்.

சினிமா, நாடகத் துறைசார்ந்தவர்கள் இவரது நண்பர்கள். குறிப்பாக நடிகர் நாசர் இவரது நண்பர்.

இவர் எழுதி நடித்த, நெறியாள்கை செய்த பல நாடகங்களை நான் அறிவேன். அவற்றை நான் பார்த்ததில்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

கவிதைகள், கவிதை மொழிபெயர்ப்புகள் பலதை இவர் செய்துள்ளார். சிறுகதைத் துறையிலும் இவர் கவனம் கொண்டுள்ளார்.

இவர் கற்ற மகாஜனாக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்டார். அப்போட்டிக்கு நடுவராக ஒரு ஆண்டு, நா.சுப்பிரமணியம் (கலாநிதி இப்போது கனடாவாசி.) அவர்களின் விருப்புக்கமைய நான் கடமையாற்றினேன்.

ஆறு ஆண்டுகள் நடைபெற்ற போட்டிகளில் முதற் பரிசு பெற்ற ஆறு கதைகள் **இவர்கள்** என்ற பெயரில் நு:.மான் அவர்களின் அறிமுகத்துடன் நூலாகப் பிரசுரமாகி உள்ளது. பரிசு பெற்றவர்கள். க.ஆதவன், உ.சேரன், சொ.செந்தில்மோகன், தி.விஜயேந்திரன். அ.ரவி, பா.பாலசூரியன்.

ஆதவன் ஒரு நாவலாசிரியரும் கூட. இவர் எழுதிய **மண்மனம்** தொடர் நாவல் நோர்வே **சுவடுகள்** இதழில் 1- 39 அத்தியாயங்கள். வரை பிரசுரமாகியது.

இன்று இவர் டென்மார்க் வாசி. சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறர், குடியும் குடித்தனமுமாக.

**அது**

**புதுசு-4 ஆவணி ஐப்பசி 1981 இதழில் வெளிவந்த கதை இது.**

**இன்று பின்நவீனத்துவ பிதாமகர்களாக தம்மைக் கூறிக் கொள்ளும் எழுத்தாளர்களுக்கு "நாங்க அப்பவே அந்த மாதிரி " என கூறத்தக்க குறியீட்டுப் பாணியில் அமைந்த சிறுகதை இது.**

**தடித்த மீசையுடையவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.**

**என ஆரம்பித்து**

**"இப்ப நல்லாய் உடைஞ்சு போச்சு"**

**என்று முடியும் இக்கதையை புதுசு-4. இதழில் வாசியுங்கள் நண்பர்களே.**

ஆதவன் படைப்புகளை அவர் நூலாக்க வேண்டும். நாவல் உட்பட நாடகங்கள், கவிதைகள், மொழிபெயர்ப்புகள் என.

நான் சொல்லியா இவர் கேட்கப் போகிறார்?.

**6 August 2018**

இவரை மாணவப் பருவத்திலிருந்து நான் அறிவேன். ஒரே அணியிலிருந்து பிளவுபட்டவர்கள் நாம். ஆயினும் இவர் மீதான பிரியம் எனக்குண்டு. கருத்து முரண்பாடுகள் இருந்தபோதும் எனது **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** வெளியீட்டு நிகழ்வுக்கு முக்கிய உரையாளராக இவரை அழைத்தேன். முதல் பிரதியையும் இவருக்கே கையளித்தேன்.

**என்.எஸ்.வாகீசன்**

இந்தப் பெயருக்குரியவர் யார் என்பது பலருக்குத் தெரியாது. இவரது தொகுப்பு **ஏன்?** தே.க.இ. பேரவையால் 1992 ல் வெளியிடப்பட்டது. எனக்குப் பிடித்த சிறுகதைகள் அடங்கிய அத்தொகுப்பு பற்றி எழுதியவர் யாரென அறியாமல் இவரிடமே பாராட்டிப் பேசியிருக்கிறேன். ந.ரவீந்திரன் (கலாநிதி ரவீந்திரன் நடேசன்) தான் வாகீசன்.

20/4/1955 ல் பனிப்புலம் பண்டத்தரிப்பில் பிறந்த இவர் ஆசிரிய நியமனம் பெற்று பூண்டுலோயா மகாவித்தியாலயத்தில் கடமையாற்றியவர். பின்னர் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராகி பத்தனை ஸ்ரீபாதவியற் கல்லூரி, வவுனியா, தர்கா நகர்

கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்து சமீபத்தில் ஓய்வு பெற்றவர். சிறுகதைத் துறையிலிருந்து விடுபட்டு ஆய்வுத் துறையில் ஆர்வம் காட்டி வருபவர். கலாநிதிப் பட்டம் பெற்றவர். சத்தியமனை இவரது புகுந்த இடம். மல்லிகை இவரை அட்டைப் படமாக்கி கௌரவித்துள்ளது. சென்ற ஆண்டு தமிழக மு.போ.எ.சங்கம் இவரை கௌரவித்துள்ளது. இவரது குரலும் எழுத்தும் முற்போக்காளர் பக்கமே.

**பல நூல்களை இவர் எழுதியுள்ளார். அவை.:**

பாரதி மெய்ஞ்ஞானம்(இருபதிப்பு), ஏன்?(சிறுகதைத் தொகுப்பு), கலாசாரம், எதிர்க் கலாசாரம், புதிய கலாசாரம், பின்நவீனத்துவமும் அழகியலும், இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும், இந்துத்துவக் கலாச்சார சூழலில் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம், மதமும் மார்க்சியமும், சாதி ,தேசம், பண்பாடு, இரட்டைத் தேசியம், இலங்கையில் சாதி அமைப்பும் அதற்கெதிரான போராட்டங்களும் (இன்னொருவருடன் இணைந்து எழுதியது. இரு பதிப்புகள்), சாதியமும் சமூக மாற்றமும், முற்போக்கு இலக்கிய முன்னோடிகள், மேலும் தனிக் கட்டுரைகள் பல.

**ஒரு கோடையின் முடிவில்**

**செப்- 1998. தாயகம் 36 வது இதழில் பிரசுரமான கதை இது.**

**சீ.வி. வேலுப்பிள்ளையும், என்.எஸ்.எம். ராமையாவின் ஒரு கூடைக் கொழுந்தும் இக்கதையில் நினைவூட்டப் படுதல் முக்கிய செய்தி.**

**எதிர்பார்த்தது போல் இல்லை**

**என ஆரம்பித்து**

**குழந்தை குட்டிகளோடு நீயுந்தான் பொங்கிப் பிரவாகிக்கப் போகிறாய்.**

**என்று முடியும் இக்கதையை தாயகம் 36 வது இதழில் வாசியுங்கள் நண்பர்களே.**

என்னிடம் காய்தல் உவத்தல் இல்லை. என் கொள்கையுடன் உடன் படாதவர்கள் பலரை நான் எனது பதிவுகளுக்குள் கொண்டு வந்துள்ளேன்.

அதனால் அவர்கள் கருத்துகளுடன் நான் உடன்பாடானவன் அல்ல.

இது வாகீசன் என்னும் ரவீந்திரனுக்குத் தெரியும்.

**6 August 2018**

அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு இப்படி ஒரு சொல் வழக்கு உண்டு. இதற்கு உதாரணம் கூறத் தக்கவர் இவர். இவரது பெயரை உச்சரிக்கும் போது இவரது தந்தையாரையும், தந்தையின் பெயரைக் குறிப்பிடும் போது இவரும் ஞாபகத்திற்கு வருவதை யாரும் மறுதலிக்க மாட்டார்கள்.

**ஜின்னாஹ்**

01/9/1943 ல் மருதமுனையில் பிறந்த இவரது வாப்பா. புலவர்மணி. ஏ. பெரியதம்பிப்பிள்ளையினால் தனக்கு கிடைத்த புலவர்மணிப் பட்டத்தை வழங்கிக் கௌரவப்படுத்திய ஆ.மு.ஷரிபுத்தீன். அஹமத் ஜின்னா ஷரிபுத்தீன் என அறியப்படுபவர். ஒரு மருத்துவர். காவியம்,கவிதை, சிறுகதை, நாவல்,சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு ஆகிய பல்துறை எழுத்தாளர். சிந்தாமணியில் இவரது முதற் கதை பிரசுரமானது. தொடர்ந்து சூடாமணி, தினகரன், வீரகேசரி, நவமணி, இடி, மல்லிகை, ஓலை ஆகியவற்றில் எழுதினார். பல போட்டிகளில் இலக்கியத்திற்கான பரிசுகளை கவிதை, காவியங்களுக்குப் பெற்றவர். சர்வதேச நாடுகளில்

அறியப்பட்டவர். கலாபூஷணம்,முதலமைச்சர் விருது, தமிழியல் விருது, இலக்கியப்பேரவை விருது பெற்றவர். இன்னும் பெருமை தரும் விருதொன்றை பெற இருப்பவர். காப்பியக்கோ என அழைக்கப்படுபவர். தெகிவளை வாசி. கொழும்புத் தமிழ் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்.

**இவரது நூல்களின் பட்டியல் :**

காவியங்கள-11, கவிதைத் தொகுப்புகள்-05, சிறுகதைத் தொகுப்புகள். 02, சிறுவர் இலக்கியம். 05, நாவல்.02, மொழிபெயர்ப்பு. 02.

மனித வேட்டை

**தினகரன் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் 2000ம் ஆண்டில் இணைந்து நடத்திய அகஸ்தியர் நினைவு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை இது.**

**இயற்கை வளங் கொழிக்கும் கிழக்கிலங்கையின் கதைப்புலத்தில் குடமுருட்டி ஆறோடும் வயல் நிலத்தில் கடமை உணர்வுமிக்க காவல்படை வீரர் ஒருவரின் தற்கூற்றாக கூறப்படும் கதை.**

**காய்ந்து கணம் வெடித்து புற்பூண்டு இல்லாது வரண்டு கிடந்தது அந்த வயற்பரப்பு..**

**என ஆரம்பித்து**

**என் பழைய நினைவுகளால் நெஞ்சம் கனக்க நான் என் வாகனத்தில் ஏறிக்கொண்டேன்.**

**என்று முடியும் இக்கதையை பெற்றமனம் சிறுகதைத் தொகுதியில் வாசியுங்கள் நண்பர்களே.**

கருத்துகளை கருத்துகளால் மோதுவது என் சுபாவம். ஜின்னாஹ் அவர்களுடன் என் கருத்துகைளைக் கூறுவதற்கு நான் தயங்குவதில்லை. அது பற்றி அவர் என்னை விமர்சித்ததும் இல்லை.

இவர் ஓர் பெண் ஆளுமை. ஒரு ஆளுமையின் வாரிசு. சலசலப்பு இல்லாத மெதுவாக ஓடும் சிறுநதி. கவிஞர் நாவண்ணனின் மகள். நேரில் பழகியதில்லை அறிமுகமான பெயர்.

**நெலோமி**

இவரது அம்மா இளவாலை. அப்பா மன்னார். காங்கேசன்துறையில் பிறந்தவர். மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி பழைய மாணவி. யாழ் பல்கலைக்கழக கலைப் பட்டதாரி. புவியியல் பட்டதாரியான அன்ரனி குரூசின் மனைவி. ஆசிரியையாகி இப்போது வவுனியா கல்வி இயல் கல்லூரி விரிவுரையாளர்.

கவிதை,சிறுகதை, சிறுவர் இலக்கியம், வரலாற்றுக் குறிப்புகள், என பல்துறை சார்ந்தவர்.

87 ம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையில் **எறும்பூர..** எனும் சிறுகதையை எழுதியதன் மூலம் சிறுகதையாளியாக அறிமுமாகினார்.

பிரசுர அந்தரம் எதுவும் இவருக்கு இல்லை. பாதுகாவலன், தினமுரசில் சில கதைகள் எழுதினார்.

**இவரது நூல்கள் :**

ஆத்மாவின் ராகங்கள் (கவிதை), நினைவுத் தூறல் (கவிதை), தியாக பொம்மைகள் (சிறுகதை), பூமாலைகள் புனிதமடைகின்றன (சிறுகதை), வன்னியூர்க்கவிராயர் சிறுகதைகள்(தொகுப்பு), வன்னியூர்க்கவிராயர் கவிதைகள் (தொகுப்பு), இனி ஒருகாலம் இது போல் வருமா? (இலுப்பைக்குளம் நினைவுகள்), கூடிக் குதிப்போம் (சிறுவர் நாடகம், வ.மாகாண. பரிசு), பாட்டுப் பாடவா? (சிறுவர் பாடல்), வண்ணப்பூக்கள் (சிறுவர் பாடல்).

**சண்டை வரப்போகுது**

**யுத்தம் தந்த அவலத்தை கற்பனையில் அல்லாது நிஜ உணர்வுடன் கூறும் கதை. 2008 ல் எழுதப்பட்டது.**

**என் இனிய வானொலிப்பெட்டி நேற்றுத்தான் வாங்கியது'**

**என ஆரம்பித்து.**

**அவள் நிஜத்துக்குள் குதூகலிக்கிறாள். ஆனால் நான்**

**என்று முடியும் இக்கதையை இவரின் தியாக பொம்மைகள் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.**

வாசிப்பு எனக்கு திகட்டிப் போவதில்லை, என் வாசிப்பில் முதுமை, இளமை பார்ப்பதில்லை. 200 பி.சிறுகதைகளை பதிவிட நெருங்கி விட்டேன். தொடர்ந்து 200 ஐ தாண்டிப் போகவேண்டும். உண்மை தொடர்வேன்.

**7 August 2018**

இவரும் ஒரு மருதமுனைக்காரர். சிறுகதை, உருவகக் கதைக்காரராக அறியப்பட்டவர். 2000 க்கு முன்னரே எழுத்துத் துறையில் ஓய்வு பெற்று விட்டார். **தினகரன்** இவருக்கு நிறைய சந்தர்ப்பம் வழங்கியது.

**எம்.ஐ.எம்.முஸம்மில்**

மருதமுனையைச் சேர்ந்தவர். கல்முனை ஸாகிராக் கல்லூரியின் பழைய மாணவன். 1972 ல் இருந்து இலக்கிய ஈடுபாடு கொண்டவர். வருமானவரி அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். இவரது புனைபெயர் : மருதவூர் இப்னு

இரண்டு உருவகக் கதைத் தொகுதிகளுக்கும், இரண்டு சிறுகதைத் தொகுதிகளுக்கும் சொந்தக்காரர்.

**இவரது நூல்கள்**

தியாகம் (உருவகக் கதை, 1979), பிரார்த்தனை (சிறுகதைகள், 1988), ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும் (சிறுகதைகள்,1997), பிரதிபலன் (உருவகக் கதை. 1998 ).

வாப்பா வருவார்

26/9/1976 தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமான இவரின் முதற் கதை இது. குடும்ப உறவு சிக்கலின் ஒரு பரிமாணத்தைக் கூறும் கதை.

கோல்பேஸ் கடற்கரையிலே குளிர்ந்த காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது.

எனத் தொடங்கி

தனது கணவன் தேநீர் குடித்து முடித்த கோப்பையை வாங்கிக் கொண்டாள்.

என்று முடியும் இவரின் முதற் கதையை ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும் சிறுகதைத் தொகுப்பில் வாசியுங்கள் நண்பர்களே.

எழுத்தார்வம் உள்ள இவர் எழுத்துலகிலிருந்து விலகி இருப்பது விசனத்துக்குரியது.

யாரையும் எழுதுங்கள் என்று எம்மால் நிர்ப்பந்திக்க முடியாது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கக் கூடும்.

**9 August 2018**

இவர் எனது அயலூர்காரர். இவரோடு நான் நெருங்கியோ, நெருங்காமலோ பழகவில்லை. இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவராக இருந்தவர். ஒரேற்றர் சுப்பிரமணியம், வி.பி.என அழைக்கப்படும் பொன்னம்பலத்தின் மாணவர். சோவியத் சார்பானவர். சிறந்த ஆங்கிலப் புலமையாளர்.

ராஜஸ்ரீகாந்தன்.

(ஜூன் 30 1948- ஏப்ரல் 20, 2004)

வதிரி யாழ்ப்பாணம் எழுபதுகளின் ஆரம்பத்தில் விவேகி இதழில் வெளிவந்த முதலாவது கவிதை மூலம் ஆக்க இலக்கியப் படைப்பாளியாக அறிமுகமானார். இவருடைய சிறப்பான சிறுகதைகள் பல சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இன்னும் சில இவரைது கதைகள் ஆங்கிலம், உருசிய , உக்ரேனிய, சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

1987 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைப் பாடநெறியைக் கற்றுத் தேர்ந்த

இவர் சோவியத் நாடு , சோஷலிசம் - தத்துவமும் நடைமுறையும், புதிய உலகம், ஆகிய சஞ்சிகைகளிலும் சக்தி பத்திரிகையினதும் ஆசிரிய பீடங்களில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தினகரன் நாளிதழின் பிரதம ஆசிரியராக 1997-2002 காலப்பகுதியில் பணியாற்றினார்.

ராஜஸ்ரீகாந்தன் மொழிபெயர்ப்புத் துறையிலும் தனது ஆற்றல்களை சிறப்பாக வெளிப்படுத்தி வந்தார்.

சோவியத் இலக்கியகர்த்தாக்கள், கலீல் ஜிப்ரான் போன்றவர்களின் அற்புதமான ஆக்கங்கள் இவருடைய மொழிபெயர்ப்பில் தமிழுக்குக் கிடைத்துள்ளன. தனது சமகாலத்தில் வாழ்ந்த ஆங்கில இலக்கிய மேதை அழகு சுப்பிரமணியத்தின் இதுவரை வெளிவந்த அனைத்துச் சிறுகதைகளையும் (நீதிபதியின் மகன்), வெளிவராத மிஸ்ரர் மூன் நாவலையும் தமிழுக்குத் தந்துள்ளார்.

நீதிபதியின் மகன், மற்றும் இவரது காலச் சாளரம் ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதைப் பெற்றுக்கொண்டவை.

மல்லிகை 2002 ஜுலை இதழ் இவரின் அட்டைப்படத்தை தாங்கி வெளிவந்தது. அட்டைப்படக் கட்டுரை பேரா.சோ.சந்திரசேகரம்.

### வெளிவந்த நூல்கள்

நீதிபதியின் மகன், அழகு சுப்பிரமணியம் சிறுகதைகள், (மொழிபெயர்ப்பு, சாகித்திய விருது,) மிஸ்ரர் மூன் (அழகு.சுப்பிரமணியம், நாவல், மொழிபெயர்ப்பு. பிரசுரமாகாதிருந்த நாவலை கையெழுத்துப் பிரதியிலிருத்து மொழிபெயர்த்து மல்லிகை இதழில் பிரசுரித்தார்). காலச் சாளரம்(12 சிறுகதைகள்-1994. சாகித்திய விருது.) சூரன் சுயசரிதை (பதிப்பாசிரியர்).

### தத்து

**வடமராட்சி கட். பலநோக்கு கூட். சங்கம் 1986 ல் வெளியிட்ட உயிர்ப்பு தொகுதியில் இடம்பெற்ற**

**சிறுகதை இது.**

**இவர் எழுதிய கதைகளில் இவரது தாயாருக்குப் பிடித்த கதை இது.**

**சிறையிலிருந்து ஒரு கைதியால் சிலாகிக்கப்பட்ட கதை.**

**வீட்டில் விற்பனையாகி எஞ்சிய பிட்டுகளை பெரும் பனையோலைப் பெட்டியில் அடுக்கி வட்டச் சுழகால் மூடிவிட்டு நிமிர்ந்தாள்.**

**என ஆரம்பித்து**

**"ஓ தான தவசக் தியனவா." நம்பி விட்டார்கள். அன்றைய கண்டம் அகன்றது.**

**என்று முடியும் இக்கதையை உயிர்ப்பு தொகுப்பிலும், இவரது காலச் சாரளம் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

நெடுங்கால கொழும்பு வாசி இவர். மேமன்கவி, முருகபூபதி, கமால் ஆகியோரின் நெருங்கிய நண்பர் இவர்.

இவர் பெயரால் குறுந்திரைப்படப் போட்டி ஒன்றை இவரது நெருங்கிய உறவுகள் சமீபத்தில் நடத்தியிருந்தனர்.

இவர் எனக்கு அன்னியமானவராகவே இருந்தார். இதற்கு முக்கியகாரணம் எனது ஒதுங்கிப் போகும் சுபாவம்.

நான் ஒரு படைப்பாளி எனும் பந்தா எனக்கு இருக்கவில்லை. இனியும் இருக்காது.

நான் ஒரு வாசகன்.

**17 November 2018**

## பிடித்த சிறுகதை 199

**7**0களில் இலக்கிய உலகுக்கு வந்தவர்கள் நாங்கள். அப்போது அறியப்பட்ட பெயர்களில் இவரது பெயர் முக்கியமானது. அப்போது மட்டுமல்ல இப்போதும் தான்.

இவரது பெயரை நான் அறிந்திருந்தாலும் நெருக்கம் ஏற்பட்டது எனது இருதய சத்திர சிகிச்சை நேரம் 2006 ல்.

நண்பன் டானியல் அன்ரனி எம் இருவருக்கும் ஊடக துணையாக இருந்தான்.

மரபுக் கவிதையை விலக்கி புதுக்கவிதை எழுதத் தொடங்கிய இவர் பல்துறை ஆளுமை பொருந்தியவர். கிட்டத்தட்ட ஆறு கதைகள் மட்டில் இவர் எழுதியுள்ளார். அனைத்து திறமைகளையும் இவர் பெற்றிருப்பதற்கு காரணம். இவரது நிறைந்த, தேர்ந்த தீவிர வாசிப்பு.

**மேமன்கவி**

(Memon Kavi, அப்துல் கரீம் அப்துல் ரஸாக், ஏப்ரல் 29, 1957 ) வட இந்திய குஜராத் மாநிலத்தைச் சார்ந்த மேமன் சமூகத்தில் பிறந்து இலங்கைத்

தமிழ்க் கலை இலக்கிய உலகில் தன்னைப் படைப்பாளியாக அடையாளப்படுத்திக் கொண்டவர்.

வட இந்தியாவின் குஜராத் மாநிலத்திலிருந்து இலங்கையில் குடியேறிய மேமன் சமூகத்தின் மத்தியதரக் குடும்பம் ஒன்றில் இரண்டு பெண் பிள்ளைகளுக்கு அடுத்து மூத்த ஆண் மகனாகப் பிறந்தவர் அப்துல் ரசாக்.

மேமன் மொழி எழுத்து வடிவம் இல்லாது பேச்சு மொழியாக மட்டுமே இருந்தமையால், இவரது தந்தை இவரை தமிழ் மொழி மூலத்திலான பாடசாலையில் சேர்த்தார்.

எட்டாம் வகுப்புடன் இவர் தனது பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டார்.

மேமன் சமூகத்தினர் பொதுவாக வணிகத் துறையிலேயே ஆர்வம் காட்டுவர். ஆனாலும் இவரோ அன்றைய காலந் தொடக்கம் எழுத்தாளனாக ஆக வேண்டும் என்ற ஆர்வத்தில் பல்வகையான நூல்களைப் படித்துக் கொண்டிருந்த காரணத்தால் முறையான கல்வி மீது ஏற்பட்ட சலிப்பில் பாடசாலைக் கல்வியை இடை நடுவில் கைவிட்டார்.

பாடசாலை வாழ்வின் இறுதிப் பகுதியில் இவரது தமிழாசிரியர் இலங்கை வானொலி நாடக புகழ் எம். அஸ்ரப்கான் இவரது வாசிப்பு பழக்கத்திற்கு ஊக்கப்படுத்தினார்.

பிற்காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை பாடநெறியை முடித்தார்

இவரது முதலாவது கவிதை 1974 ஆம் ஆண்டு சுதந்திரன் இதழில் **தமிழே என் மூச்சு** எனும் தலைப்பில் வெளிவந்தது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் ஆரம்பத்திலிருந்து தொடர்புகளைப் பேணி வருகிறார்.

1990 ஆம் ஆண்டுக்கான இலங்கை சாகித்திய மண்டல பரிசை இவரது நாளைய நோக்கிய இன்றில் கவிதைத் தொகுதிக்காகப் பெற்றார்.

பல இதழ்களுக்கு ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றி இருக்கிறார்.

இவரது கவிதைகள் சில ஆங்கிலம், சிங்களம், உருசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கவிதை ஒன்று தேசிய கல்வி நிறுவனம் வெளியிட்டிருக்கும் ஆசிரியர் பயிற்சி பாட நூலில் இடம் பெற்று இருக்கிறது.

சப்பரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைமாணி பாட நெறி மேற்கொண்ட மாணவர் ஒருவர் இவரது கவிதைகளைப் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

**இவரது நூல்கள்.**

யுகராகங்கள்(1976, எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம்), ஹிரோசிமாவின் ஹீரோக்கள் (1982, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு), இயந்திர சூரியன் (1984, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு), நாளையை நோக்கிய இன்றில் (1990, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு), மீண்டும் வசிப்பதற்காக (1999, மல்லிகைப் பந்தல்), உனக்கு எதிரான வன்முறை (2005, துரைவி வெளியீடு), ஒரு வாசகனின் பிரதிகள் (கட்டுரைத் தொகுப்பு,2010, கொடகே வெளியீடு), மொழி வேலி கடந்து.. (கட்டுரைத் தொகுப்பு, 12 சிங்கள இலக்கிய நூல்கள் பற்றிய விமர்சனம் (2013, கொடகே வெளியீடு), ஆதிகளின் புதைக்குழிகளிலிருந்து (கவிதைத் தொகுப்பு-2017, கொடகே வெளியீடு), பின்காலனியம்- கலை இலக்கியமும், கோட்பாடும் (அச்சில்), பிரதிகள் பற்றிய பிரதிகள் (அச்சில்).

பெற்ற விருதுகள்:1990ல் நாளையை நோக்கிய இன்றில் , இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு, 2005ல் உனக்கு எதிரான வன்முறை , யாழ். இலக்கிய வட்டத்தின் இணைப்புச் சங்கமான இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த நூல் விருது.

சுமை

2006. ஜனவரி 15 தினகரனில் வெளியான சிறுகதை

**இது.**

**கொழும்பு நகர வியாபார தெருக்களில் நாட்டாமை தொழில் செய்யும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வனுபவங்களை அவர்களோடு நெருக்கமாக வாழ்ந்து கண்ட அநுபவத்தோடு கதையாக்கி இருக்கிறார் ஆசிரியர்.**

**" மன்சூர் வந்தானா? " முஹம்மது நாநா தன் மகள் பவுசியிடம் கேட்டார்.**

**என ஆரம்பித்து**

**ஒரு அதிர்ச்சியில் சிக்கியவராக மன்சூரை பார்த்துக்கொண்டிருந்தார் முஹம்மது நாநா..**

**என்று முடியும் சுமை கதையை மேற்குறிப்பிட்ட தினகரன் வாரமஞ்சரியில் தரவிறக்கி வாசியுங்கள் நண்பர்களே.**

மல்லிகை கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கிய போது அதற்கு உத்வேகம் கொடுத்தவர்களில் மேமன்கவி முக்கியமானவர். சிங்கள தமிழ் எழுத்தாளர்களின் ஐக்கியத்திற்காகவும், தமிழில் தரமான நூல்கள் வெளிவர ஆக்கபூர்வமான உதவிகள் புரிவதிலும் இவர் சளைக்காதவர்.

எனது **நெல்லிமரப்பள்ளிக்கூடம்** இவரது முயற்சியினாலேயே வெளிவந்தது.

சமீப காலமாக பின்காலனிய சிந்தனைகளில் தீவிரமாகக் கவனம் செலுத்துவதோடு, தீவிர விமர்சகராகவும் செயல்படுகிறார்.

இவரைப் பலர் கவிஞராகவே இனம் காணுவர். அப்படியல்ல அவரிடம் ஒரு சிறுகதையாளனும் ஒளிந்துள்ளான்.

**17 November 2018**

பிடித்த சிறுகதை 200

இவரும் நானும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் வணிகத் துறையில் வெவ்வேறு வகுப்பு மாணவர்கள். அப்போதெல்லாம் இவர் ஒரு இலக்கியகாரரென எனக்குத் தெரியாது. தொழில் நுட்பக் கல்லூரியில் நான் பிரபலமானவனாக இருந்தேன். நாவலாசிரியனாக மாத்திரமல்லாது. எழுதிய கதை ஒன்றுக்காக புலனாய்வுத் துறையினாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டவானாக அறியப்பட்டிருந்தேன்.

1973 ல் கவிஞனாக எழுத்துலகப் பிரவேசம் செய்த இவர், இப்போது நல்ல ஒரு சிறுகதை ஆசிரியராக பரிணமித்திருக்கிறார். தொழில் ரீதியாக அரச ஊழியரான இவர் பாராளுமன்ற ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். டானியலின் முக்கிய நாவல்களின் தட்டச்சுக்காரர் இவரே. சமூக ஒடுக்கு முறைக்கு ஆளாகிய பல எழுத்தாளர்களின் அனுபவங்களை விட இவரது அனுபவம் பிறிதொருவகையானது. அதுவே இவரது படைப்புகளின் பலம்.

**க.கோபாலபிள்ளை**

யாழ்ப்பாணம், ஆறுகால் மடத்தடி,ஆனைக்கோட்டை இவரது ஊர். **வித்தகன்** இவரது புனை பெயர். இவர் இலங்கையின் தேசிய பத்திரிகைகளிலும், சிறு சஞ்சிகைகளிலும் எழுதிய 10, சிறுகதைகள் **யாரிலிகள்** என்ற பெயரில் கொடகே வெளியீடாக 2014இல் வந்து, அவ்வாண்டு வெளிவந்த நூல்களில் முதல் தொகுதி வெளியிட்டவர்க்கான கொடகே விருதைப் அத்தொகுதிப் பெற்றுக் கொண்டது. இவரின் இன்னொரு தொகுதி வெளியீட்டுக்கான தயாரிப்பு செய்யப்படுவதாக அறிகிறேன்.

பலி

**இக்கதை மல்லிகை 2012. நவ.டிச இதழில் பிரசுரமானது.**

**யாழ்ப்பாண வாழ்வியலின் ஒரு அங்கமாக விளங்கிய வேள்வியையும், கிடாய் வெட்டையும் பற்றி எழுதப்பட்ட முக்கியமான கதை இது.**

**அன்று வெள்ளிக்கிழமை.**

**எனத் தொடங்கி**

**சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். யோகேந்திரன்.**

**என்று முடியும் பலி கதையை மல்லிகை இதழிலும், யாரிலிகள் தொகுப்பிலும் வாசியுங்கள் நண்பர்களே.**

இவரது தொகுப்புக்கு பின் உரையாக நான் குறிப்பிட்ட ஒரு விசயத்தை இப்போது ஞாபகம் கொள்கிறேன்.

**“டானியலின் கொடும்பாவிச் சின்னான், சாக்காட்டு வள்ளி, டொமினிக் ஜீவாவின் சோக்கல்லோ கந்தையா அண்ணன், படு முடிச்சுக் கிழவி போன்ற நினைவை விட்டகலா பாத்திரங்களை போன்றவை இவருடைய கோவிந்தன், மாணிக்கம், ஆறுகால்மடத்தடி செல்லையன். சூழ்க்கார நடேசர், மேச்சல்கார மிளகாய் செல்லையா, சிறுவன் செந்தூரன்..”**

இது போதும். இவர் பற்றிய எனது பார்வை.

**18 November 2018**

## ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளின் கூட்டுத் தொகுப்புகளின் பட்டியல்.

1. **ஈழத்து சிறுகதைகள்** , ஈழத்து கதைகள் ,சிற்பி. கந்தரோடை தமிழ் மன்றம், 1958.

2. **கதைப் பூங்கா,** பல்கலைக்கழக மாணவர்களின் கதைகள், க.குணராசா, க, நவசோதி,பல்கலை வெளியீடு, 1962.

3. **ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்,** தமிழ் எழுத்தாளர் மன்ற பரிசுக் கதைகள்,தமிழ் பேசும் மக்கள் பதிப்பகம், 1963.

4. **விண்ணும் மண்ணும்,** பல்கலைக்கழக மாணவர்களின் கதைகள்,செம்பியன் செல்வன், பல்கலை வெளியீடு, 1963.

5. **காலத்தின் குரல்கள்,** பல்கலைக்கழக மாணவர்களின் கதைகள்,கலா பரமேஸ்வரன், பல்கலை வெளியீடு, 1964.

6. **முஸ்லிம் கதை மலர்,** முஸ்லிம் எழுத்தாளர்களின் சிறுகதைகள், யூ. எல்.தாவூத், ஸபீனா பதிப்பகம், 1964.

7. **ரசிகர் குழு போட்டிக் கதைகள்,** இளம் பிறை சஞ்சிகை போட்டிக் கதைகள், எம். ஏ.ரஹ்மான், அரசு வெளியீடு, 1966.

8. **யுகம்,** பல்கலைக்கழக மாணவர்களின் கதைகள், இமையவன் பல்கலை வெளியீடு, 1968.

9. **மூவர் கதைகள்,** செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன், நீர்வை பொன்னையன் கதைகள், மூவர் கதைகள், நவயுக பதிப்பகம், 1971.

10. **கங்கு மட்டை,** ஈழநாடு போட்டிச் சிறுகதைகள், ஈழநாடு,1971.

11. **ஈழத்தமிழ்ச் சிறுகதை மணிகள்,** ஈழத்து சிறுகதையின் முன்னோடிகள் கதைகள், செம்பியன் செல்வன், முன்னோடிகள், 1973.

12. **கால நதி**, காவலூர் எஸ்.ஜெகநாதன், கணபதி கணேசன், ஏ.எஸ்.உபைத்துல்லா கதைகள், பா.தவபாலன், செவ்வந்தி பிரசுரம் 1978.

13. **ஒற்றைப் பனை**, ஈழத்து தமிழ்ச் சிறுகதைகள், சித்தி அமரசிங்கம், ஈழத்து இலக்கியச் சோலை, 1974.

14. **பிறைப்பூக்கள்**, முஸ்லிம் எழுத்தாளர்களின் சிறுகதைகள், அ.ஸ.அப்துஸ் ஸமது, இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வகம்,1979.

15. **தோட்டக்காட்டினிலே**, மலையக எழுத்தாளர் மூவரின் கதைகள், மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன்,மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 1980.

16.**காலத்தின் யுத்தங்கள்: சிறுகதை மஞ்சரி**, ஈழத்துப் படைப்பாளிகளின் பத்துச் சிறுகதைகள்,காவலூர் எஸ்.ஜெகநாதன், 1982.

17. **இவர்கள்**, மஹாஜனக் கல்லூரியின் ஆறு மாணவர்களின் போட்டிச் சிறுகதைகள், நா.சபேசன்,தெல்லிப்பளை மகாஜன கல்லூரி படைப்பிலக்கிய மன்றம், 1982.

18. **உயிர்ப்புகள்**, வடமாராட்சி எழுத்தாளர்களின் தொகுப்பு, கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கம், 1986.

19. **தகவம் பரிசுக் கதைகள்- 1**, தகவம் தேர்வுக் கதைகள், தமிழ் கதைஞர் வட்டம், 1987.

20.**தகவம் பரிசுக் கதைகள்- 2**, தகவம் தேர்வுக் கதைகள், தமிழ் கதைஞர் வட்டம், 1990.

21. **நிவேதனம்**, கோணைத் தென்றல் கதைகள், திருகோணமலை கலை இலக்கிய வட்டம், 1992.

22. **வெள்ளிப்பாதசரம்**,இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்-01 செ.யோகநாதன், 1993.

23. **ஒரு கூடைக்கொழுந்து**, இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துச்

சிறுகதைகள்-2. செ.யோகநாதன், 1994.

24. **மலையகப் பரிசுக் கதைகள்,** கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுப் போட்டியில் பரிசுப் பெற்ற கதைகள், நினைவுக்குழு, கமலகாந்தன், மணிமேகலை, 1994.

25. **பனியும் பனையும்,** புலம்பெயர் சிறுகதைகள், எஸ். பொ., இந்திரா பார்த்தசாரதி, மித்ர 1994.

26. **பரிசுக்கதைகள்,** போட்டிக்கதைகள்,எஸ். எதிர்மன்னசிங்கம், வட-கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1994.

27. **தீர்த்தக்கரைக் கதைகள்,** நந்தலாலா,தீர்த்தக்கரை சஞ்சிகையில் இடம் பெற்ற கதைகள், நந்தலாலா இலக்கிய வட்டம், 1995.

28 **மறுமலர்ச்சிக் கதைகள்,** மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களின் கதைகள், செங்கை ஆழியான், கல்வி, பண்பாட்டலுவல்கள், அமைச்சு-வடக்கு கிழக்கு மாகாணம், 1997.

29. **மலையகச் சிறுகதைகள்,** 33 மலையகப் படைப்பாளிகளின் கதைகளின் தொகுப்பு, தெளிவத்தை ஜோசப், துரைவி பதிப்பகம், 1997.

30. **உழைக்கப் பிறந்தவர்கள்**, 56 மலையக கதைகளின் தொகுப்பு, தெளிவத்தை ஜோசப், துரைவி பதிப்பகம், 1997.

31. **சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்,** 50வது சுந்திர தினத்தினை முன்னிட்டு தொகுக்கப்பட்ட ஈழத்து தமிழ்ச்சிறுகதைகள், டொமினிக் ஜீவா, தெளிவத்தை ஜோசப், திக்குவல்லை கமால், மேமன்கவி, இலங்கை கலைக்கழக வெளியீடு, 1998.

32. **ஈகைத்திருநாள் கதைகள்,** ஈழத்துத் தமிழச் சிறுகதைகள், மானா மக்கீன், மணிமேகலை பிரசுரம், 1998.

33. **தியாகத்திருநாள் கதைகள்,** ஈழத்து தமிழ் சிறுகதைகள்,

மானா மக்கீன், மணிமேகலை பிரசுரம், 1998.

34. **பரிசு பெற்ற சிறுகதைகள்**, துரைவி போட்டி கதைகள், தெளிவத்தை ஜோசப், துரைவி பதிப்பகம், 1998.

35. **குறிஞ்சி மலர்கள்** மலையக பெண் எழுத்தாளர்களின் தொகுப்பு,அந்தனி ஜீவா, மலையக வெளியிட்டகம், 2000.

36. **ஈழகேசரிச் சிறுகதைகள்**, ஈழகேசரிச் சிறுகதைகள். க.குணராசா, வ.கி.மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 2000.

37. **எழு**, 13 வன்னி சிறுகதைகள், எழுநா பதிப்பகம், 2001.

38. **வாசல் ஒவ்வொன்றும்**, புதுவை இரத்தினதுரை, கருணாகரன் வெளிச்சம் சிறுகதைகளின் முதல் தொகுப்பு,விடியல் பதிப்பகம், தமிழ்நாடு, 2001.

39. **மண்ணின் மலர்கள்**, யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் கதைகள், சி. சிவாணி, மல்லிகைப் பந்தல், 2001.

40. **முன்னோடிச் சிறுகதைகள்**, ஈழத்தின் முன்னோடிப் சிறுகதைப் படைப்பாளிகளில் 25 பேரின் சிறுகதைகள், செங்கை ஆழியான், பூபாலசிங்கம் பதிப்பகம், 2001.

41. **இங்கிருந்து**, 10 படைப்பாளிகளின் சிறுகதைகள், நண்பர்கள் வெளியீடு, 2001.

42. **சுதந்திரன் சிறுகதைகள்**, சுதந்திரன் சிறுகதைகள், செங்கை ஆழியான், யாழ் இலக்கிய வட்டம், 2002.

43. **மல்லிகைச் சிறுகதைகள்-01**, மல்லிகைச் சிறுகதைகள், செங்கை ஆழியான், மல்லிகைப் பந்தல், 2003.

42. **மல்லிகைச் சிறுகதைகள்-02**, மல்லிகைச் சிறுகதைகள், செங்கை ஆழியான், மல்லிகைப் பந்தல், 2004

43. **இலங்கையின் 28 சிறுகதைகள்**, சிறுகதைகள்,எஸ். செல்வகுமார், மணிமேகலைப் பிரசுரம், 2003.

44. **ஈழவர் இருபத்தியேழு சிறுகதைகள்**, ஈழத்துச் சிறுகதைகள், எஸ். செல்வகுமார், மணிமேகலைப் பிரசுரம், 2004.

45. **அம்மா**, ஈழத்து 25 பெண் எழுத்தாளர்களின் தொகுப்பு, அந்தனி ஜீவா. கலைஞன் பதிப்பகம், 2004.

46. **இலங்கை எழுத்தாளர்களின் 26 சிறுகதைகள்**, ஈழத்துச் சிறுகதைகள்,எஸ். செல்வகுமார், மணிமேகலைப் பிரசுரம், 2004.

47. **கொக்கிளாய் மாமி**, புலோலியூர் சதாசிவம் போட்டிக் கதைகள், தி.ஞானசேகரன், ஞானம் வெளியீடு, 2005.

48. **காலத்தால் மறையாத கற்பக இதழ் சிறுகதைகள்**, கற்பகம் சிறுகதைகள், த.சிவசுப்பிரமணியம், மணிமேகலைப் பிரசுரம், 2005.

49. **வழி**, பெண்களின் சிறுகதைகள்,ஆ.உலக மங்கை, வானதி வெளியீட்டகம், 2005.

50. **சிறைப்பட்டிருத்தல்**, புலோலியூர் சதாசிவம் போட்டிக் கதைகள், தி.ஞானசேகரன், ஞானம் வெளியீடு, 2006.

51. **பூபாள ராகங்கள் 2006**, லண்டன் பூபாள ராகங்கள் போட்டிச் சிறுகதைகள், கம்பர்மலை வித்தியாலம் கொம்மந்துறை, பழைய மாணவர் சங்கம் ஐக்கிய இராச்சியம், 2006.

52. **வீரகேசரி பவளவிழா சிறுகதை களஞ்சியம்**, வீரகேசரியின் பவளவிழா போட்டிச் சிறுகதைகள், வீ.தேவராஜா, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் (சிலோன்) பிரைவேட் லிமிடெட், 2006.

53. **ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள்**, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் தமிழ்ச் சிறுகதைகள், நீர்வை பொன்னையன், இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, 2007.

54. **தீண்டத்தகாதவன்**, ஈழத்து தலித் சிறுகதைகள், சுகன் கனசபை, நிச்சாமம் வெளியீடு, 2007.

55. **போர்க்கால கதைகள்**, ஞானம் இதழ் போர்க்கால கதைகள், தி.ஞானசேகரன், மித்ர வெளியீடு, 2007.

56. **பூபாள ராகங்கள் 2007**,லண்டன்பூபாள ராகங்கள் போட்டிச் சிறுகதைகள், 2007.

57. **கருமுகில் தாண்டும் நிலவு**, புலோலியூர் சதாசிவம் போட்டிச் கதைகள், தி. ஞானசேகரன், ஞானம் வெளியீடு, 2007.

58. **பூபாள ராகங்கள் 2008**,லண்டன், பூபாள ராகங்கள் போட்டிச் சிறுகதைகள், 2008.

59. **ஈழநாடுகள் சிறுகதைகள் -01**, ஈழநாடுகள் சிறுகதைகள் செங்கை ஆழியான், வ.மா.பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 2008.

60. **தரிசனம்**, வடமாராட்சி எழுத்தாளர்களின் சிறுகதைகள், வடமாராட்சி வட பிரதேச கலாசார பேரவை, 2012.

61. **காலநதியின் கற்குழிவு**, ஜீவநதி இதழில் வெளிவந்த சிறுகதைகள், த.கலாமணி, ஜீவநதி வெளியீடு, 2014.

62. **உப்புமால்**,யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலய போட்டிக் கதைகள், சு.குணேஸ்வரன்,யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலயம், 2014

63. **4**, நான்கு எழுத்தாளர்களின் கதைகள், மலர்ச்செல்வன், மறுகா், 2016.

64. **தகவம் பரிசுக் கதைகள் 3**, தகவம் தேர்வு கதைகள், தமிழ்க் கதைஞர் வட்டம், 2016.

65. **காப்பு** ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் தொகுப்பு, ஈழவாணி, பூவரசி வெளியீடு,2018



நந்தினி சேவியர் முகநூலின் இத்தொடர் மூலம்,

நூற்றுக்கணக்கான ஈழத்து மூத்த, இளைய

சிறுகதையாளர்களை ஆவணப்படுத்தி இருக்கிறார்.

-மேமன்கவி

Pididhtha Sirukadhal

1850/=

Essay

ISBN 978-624-00-0190-8

எஸ். கொடகே சகோதரர்கள்

675, பீ. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904

www.godage.com godageem@slt.lk